


பிளேட்டோவின்

குடியரசு

பிளேட்டோவின்

குடியரசு

பிளேட்டோவின்

குடியரசு

தமிழாக்கம் :

ஆர். ராமானுஜாசாரி

சாகித்திய அக்காதெமி

புது தில்லி

PLATOVIN KUDIYARASU: This translation into Tamil by R. Ramanujachari of Plato's *Republic* is published by Sahitya Akademi with the assistance of UNESCO as part of Unesco's Major Project for furthering mutual appreciation of Eastern and Western Cultural values.

Price Rs. 10

கிடைக்குமிடம் :

சாகித்திய அக்காதெமி

ரவீந்திரபவன், புது தில்லி–1

பிராந்தீய ஆபீஸ், சென்னை–6

பிராந்தீய ஆபீஸ், கல்கத்தா–29

அச்சிட்டோர் :

கபீர் பிரின்டிங் ஒர்க்ஸ், சென்னை–5

விலை ரூ. 10

கீழ் நாட்டு மேல் நாட்டுப் பண்பாடுகளைப் பரஸ்பரம் அறிமுகம் செய்வதற்காக யுனெஸ்கோ மேற்கொண்டுள்ள பெருந்திட்டத்தில் ஒரு பணியாக இந்நூல் யுனெஸ்கோ உதவியுடன் வெளியிடப்பெறுகிறது.

பிளேட்டோவின் குடியரசு

கருத்தடைவு

முதற் புத்தகம்

இரண்டாம் புத்தகம்

மூன்றும் புத்தகம்

நான்காம் புத்தகம்

ஐந்தாம் புத்தகம்

ஆரும் புத்தகம்

ஏழாம் புத்தகம்

எட்டாம் புத்தகம்

ஒன்பதாம் புத்தகம்

பத்தாம் புத்தகம்

பிளேட்டோவின் குடியரசு

உரையாடலில் கலந்துகொள்வோர்

சாக்ரடீஸ் (பேசுபவர்)	கிபாலஸ்
கிளாக்கன்	திராசிமாக்கஸ்
அதைமாந்தஸ்	கிளேடோபன்
பாலிமார்க்கஸ்	

மற்றும் மௌனமாக நிகழ்ச்சியைக் கேட்பவர்கள்

முதல் புத்தகம்

ஆதென்சு நகரத்தில் கடற்கரைப் பகுதியான பைரீயசு என்ற விடத்தில் கிபாலஸ் என்பவரது வீட்டில் உரையாடல் நடைபெறுகிறது. அது நடந்த மறுநாள் அவ்வுரையாடல் முழுவதையும் திமீயஸ், அர்மோகிராடீஸ், கிருடீயஸ், பெயர் குறிக்கப்படாத மற்ருெருவர் ஆகியோருக்குச் சாக்ரடீஸ் எடுத்துக் கூறுகிருர்.

பென்டிஸ் தேவியைத் துதித்து அத்தேவிக்குப் புதிதாக நடத்தும் விழாவை எவ்வாறு கொண்டாடுகிருர்கள் எனப் பார்ப்பதற்காக அரிஸ்டனுடைய புதல்வஞன கிளாக்கனுடன் பைரீயஸ் என்ற இடத்திற்கு நேற்றுச் சென்றேன். அவ்வூர் மக்கள் நடத்திய ஊர்வலத்தைக் கண்டு களித்தேன். ஆனல் திரேசு நாட்டவரது திருவிழா ஊர்வலம், இதைக் காட்டிலும் அழகு வாய்ந்தது என்று கூற முடியாதாயினும் இதற்கு நிகரானது என்பதில் ஐயமில்லை. வழிபாட்டை முடித்துக்கொண்டு உலாக் காட்சிகளைக் கண்டபின் நகரை நோக்கித் திரும்பினேம். நாங்கள் புறப்படும் அமயத்தில் கிபாலசின் மைந்தரான பாலிமார்க்கஸ் என்பவர் நெடுந்தொலைவிலிருந்து எங்களைக் கண்ணுற்று, அவர் வரும் வரை காத்திருக்கும்படி எங்களிடம் விரைந்து வந்து கூறுமாறு தம் பணியாளை ஏவினர். அப்பணியாளனும் என்பின் வந்து ஆடையைப் பற்றிக் கொண்டு தாம் வரும் வரை நீங்கள் காத்திருக்க

வேண்டும் எனப் பாலிமார்க்கஸ் விரும்புகிருர், என்ருன். அவனைத் திரும்பிப் பார்த்து உன் தலைவர் எங்கிருக்கிருர்? என வினவினேன்.

அதோ அவர் உங்களைத் தொடர்ந்து வருகிருர். தாங்கள் மட்டும் தயைசெய்து காத்திருந்தால் அணுகி விடுவார் என்று அப்பணியாளன் கூறினுன்.

உறுதியாக நாம் காத்திருப்போம் என்று கிளாக்கன் கூறினுன்.

சில நிமிடங்களுக்குள் கிளாக்கனது சகோதரனை அதைமாந்தசுடனும் நிகியசின் மகனை நிசிரேடசுடனும் ஊர்வலத்திலிருந்த வேறு பலருடனும் பாலிமார்க்கஸ் அங்குத் தோன்றினர்.

பாலிமார்க்கஸ் : சாக்ரடீஸ், நீங்களும் உங்களுடைய தோழரும் நகர்நோக்கி விரைவதாகத் தெரிகிறதே?

சாக்ரடீஸ் : நீங்கள் கூறுவது தவறில்லை.

பாலிமார்க்கஸ் : ஆனுல் நாங்கள் எத்தனைபேர் இருக்கின்ருேம் என்பதைப் பார்த்தீர்களா? (எங்களைக் கடந்து செல்ல இயலாது என்பது கருத்து).

சாக்ரடீஸ் : உண்மையே.

பாலிமார்க்கஸ் : என்னுடன் இருக்கும் இவர்கள் எல்லோரையும்விட நீங்கள் மிகுந்த வலிமையுடையவர்களா? இல்லையேல், நீங்கள் இருக்கும் இவ்விடத்திலேயே தங்க நேரிடும்.

சாக்ரடீஸ் : நாங்கள் போக அனுமதிக்குமாறு உங்களை இணங்கச் செய்ய இயலாதா?

பாலிமார்க்கஸ் : தாங்கள் கூறுவதை நாங்கள் கேட்க மறுத்தால் எங்களை நீங்கள் எப்படி இணங்கச் செய்ய முடியும்?

கிளாக்கன் : ஆம், முடியாதுதான்.

பாலிமார்க்கஸ் : தாங்கள் கூறுவதற்கு நாங்கள் செவிசாய்க்க மாட்டோம். அதை நீங்கள் உறுதியாகக் கொள்ளலாம்.

அதைமாந்தஸ் : தேவியைப் போற்றும் நோக்கத்துடன் குதிரை மீது ஏறிச் செல்லும் தீவர்த்திப்போட்டி ஒன்று இன்று மாலையில் நடக்கவிருப்பதை ஒருவரும் கூறவில்லையா?

சாக்ரடீஸ் : குதிரைமீதா! அது ஒரு புதுமை. போட்டியில் குதிரைக்காரர் தீவர்த்திகளைத் தாங்கி ஒருவரிடமிருந்து மற்ருெருவருக்குக் கொடுத்தனுப்புவார்களா?

பாலிமார்க்கஸ் : ஆம், அது மட்டுமன்று. நீங்கள் தவருமல் கண்டு இன்புறவேண்டிய விழா ஒன்று இன்று இரவில் சிறப்பாக நிகழவிருக்கிறது. நாம் இரவு உணவை விரைவில் முடித்துக்கொண்டு விழாவைக் காண்போம். அங்கு இளைஞர் பலர் கூடுவர். நாம் நன்கு அளவளாவலாம். தங்கிவிடுங்கள், பிடிவாதம் செய்யாதீர்கள்.

கிளாக்கன் : நீங்கள் வற்புறுத்துவதனுல் நாங்கள் தங்கத்தான் வேண்டும் எனக் கருதுகிறேன்.

சாக்ரடீஸ் : மிக நன்று என்றேன். இதற்கேற்ப நாங்கள் பாலிமார்க்கசுடன் அவர் வீடு சென்ருேம். அங்கு அவரது சகோதரர்களான லிசியஸ்[1], யுதிடீமஸ்[2], சால்சிடோனிய நாட்டினனுகிய திராசிமாக்கஸ்[3], பினீய நாட்டு சார் மாண்டிடிஸ்[4], அரிஸ்டோனிமசின்[5] மைந்தன் கிளைடோபன்[6], என்பவர்களைக் கண்டோம். அங்கு பாலிமார்க்கசின்[7] தந்தையாரான கிபாலசும்[8], இருந்தார். நான் அவரை நீண்ட காலமாகப் பார்க்கவில்லை, அவர் மிக வயது முதிர்ந்தவராகத் தோற்றம் அளித்தார். அவர் ஒரு மெத்தை நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவர் தேவியை வழிபட்டுக் காணிக்கை கொடுத்து வந்திருந்ததனுல் தலையில் ஒரு மலர் மாலை அணிந் திருந்தார். அவர் அருகே அந்த அறையின்கண் பிறைவடி வில் அமைத்திருந்த நாற்காலிகளில் நாங்கள் அமர்ந்திருந் தோம். ஆர்வத்துடன் அவர் எனக்கு வணக்கம் தெரிவித்துப் பின்வருமாறு கூறினுர்.

" சாக்ரடீஸ் ; நீர் அடிக்கடி என்னைப் பார்ப்பதில்லையே, நான் வந்து உம்மைப் பார்க்கக்கூடிய நிலையில் இருந்தால் நீர் வந்து என்னைக் காணவேண்டுமென்று எதிர்பார்க்க மாட்டேன். ஆனுல் வயது முதிர்ந்த இந்நிலையில் நான் நகரத்திற்கு வருவது கடினமான தல்லவா ? ஆகையால் நீர் அடிக்கடி பைரீயசுக்கு வரவேண்டும். ஏனெனில் நான் ஒன்று கூறுவேன் : புலனின்பம் குன்றக்குன்ற எனக்கு உரையாடலில் இன்பமும் அவாவும் மிகுகின்றன. எனவே நீர் எனது வேண்டுகோளை மறுக்காதீர். இவ்விளைஞருடன் தோழமை கொண்டு, நீர் அடிக்கடி வந்து கூடும் இடமாக

---

1. Lysias 2. Euthydemus 3. Thrasymachus 4. Charmantides 5. Aristonymus 6. Cleitophon 7. Polemarchus 8. Cephalus.

எங்கள் வீட்டைக் கருதுவீராக. நாம் பழைய நண்பர்கள், நீர் எங்களுடன் வேறுபாடின்றி உம் வீட்டிலிருப்பதுபோல் பழகலாம்.

சாக்ரடீஸ் : கிபாலஸ், என்னைப் பொறுத்த மட்டில் வயது முதிர்ந்தவர்களுடன் உரையாடுவதைவிட வேறொன்றையும் நான் அதிகமாக மதிப்பதில்லை. ஏனெனில் அவர்கள் நீண்ட யாத்திரை[9] செய்தவர்களாக நான் கருதுகிறேன். நானும் அந்த யாத்திரையை ஏற்கக் கூடும். ஆதலால் அவ்வழி, இடையூறின்றி எளிதாகச் செல்லத் தக்கதா, அல்லது கரடுமுரடாயும் துன்பந்தருவதாயும் இருக்குமா என்று அவர்களிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ளவேண்டும். "முதிய நிலைக்கு வாயிற்படி" என்று கவிகள் கூறும் காலத்தை அடைந்த உங்களை நான் ஒன்று வினவ விரும்புகிறேன். வாழ்வின் இறுதிப் பகுதி மிகக் கடினமானதா? அதைப் பற்றித் தங்கள் கருத்து யாது?

கிபாலஸ் : சாக்ரடீஸ், என் தனிக்கருத்து என்னவென்று கூறுகிறேன். என் போன்ற முதியோர்கள் திரளாகக் கூடுவோம். 'ஒரே தன்மையான இறகுபடைத்த பறவைகள் ஒன்று கூடும்' என்று தொன்றுதொட்டு வழங்கி வரும் முதுமொழிக்கொப்ப, நாங்கள் ஒரே இனத்தவர் அன்றோ? எங்கள் கூட்டங்களில் எனது நண்பர்கள் பொதுவாகப் பின் வரும் கதையையே மீண்டும் மீண்டும் கூறுவர். "என்னால் உண்ண முடியவில்லை; எனக்குக் குடிக்க இயலவில்லை; இளமையின் இன்பங்களும் காதலும் பறந்துவிட்டனவே; முன்பு ஒருகால் வாழ்க்கை இன்பமயமாக இருந்தது. ஆனால் நிலைமை இப்போது மாறிவிட்டது. வாழ்க்கை இப்போது வாழ்க்கையாகவே தோன்றவில்லை. சிலர், தங்கள் உறவினர் புறக்கணிப்பதைக் குறித்து முறையிடுவர். தங்களுடைய முதிய நிலை எத்துணை இன்னல்களுக்குக் காரணம் என வருத்தத்துடன் மொழிவர். ஆனால் சாக்ரடீஸ்! இங்ஙனம் குறை கூறுபவர், உண்மையில் குற்றமற்ற ஒன்றையே குறைகூறுவதாக எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில் முதிய நிலை இவற்றுக்கு ஏதுவாயின் வயது முதிர்ந்தவன் என்ற காரணத்தினால் நானும் அவர்களைப் போலவே துன்புற்றிருப்பேன். ஆனால் இது எனது

9. உலகில் அநுபவம் யாத்திரையாகக் கூறப்பட்டுள்ளது.

அநுபவம் அன்று, எனக்குத் தெரிந்த பிறரின் அநுபவமும் அன்று. முதிய கவியாகிய சோபக்ளீசை[1] நோக்கி "வயது முதிர்ந்த நிலையில் காதல் எவ்வாறு பொருந்தும்? நீங்கள் இன்னமும் முன்பு இருந்தவாறே இருக்கிறீர்களா?" என்று ஒருவன் கேட்டபோது, "அமைதியாய் இரு. நீ கூறுவன வற்றிலிருந்து நான் மிக்க மகிழ்ச்சியுடன் தப்பித்தேன். ஒரு பித்துப் பிடித்த கொடிய தலைவனிடமிருந்து தப்பிப் பிழைத் தது போல இதைக் கருதுகிறேன்" என்று சோபக்ளீஸ் கூறிய மொழிகள் அடிக்கடி என் நினைவிற்கு வருவது உண்டு. அம்மொழிகள் அவர் கூறிய காலத்தில் பொருத்த மாக இருந்ததுபோலவே இப்பொழுதும் பொருத்தமானவை யாக எனக்குக் காணப்படுகின்றன. ஏனெனில் முதிய நிலை அமைதியையும் விடுதலையையும் திண்ணமாக அளிக்கிறது. சோபக்ளீஸ் கூறுவதுபோல் பற்றுக்களின் பிடிப்பு நெகிழும் போது நாம் வெறிபிடித்த ஒரு தலைவனிடமிருந்து மட்டும் விடுபடவில்லை, ஆனால் உண்மையில் பல தலைவர்களின் பிடிகளிலிருந்து விடுதலை அடைகிறோம். சாக்ரடீஸ்! உண்மையென்னவென்றால் இக்குறைகளுக்கும், உறவினரது புறக்கணிப்புக்கும் முதிய நிலை காரணமில்லை. மக்களது ஒழுக்கங்களும் மன நிலைகளுமே காரணமாகும். ஏனெனில் எவனொருவன் அமைதியாகவும் மனநிறைவுடனும் இருக் கிறானே அவன் முதிய நிலையின் கொடுமைகளை அதிகமாக உணர்வதில்லை. இதற்கு மாறுபட்ட மனப்பான்மை உடைய வனுக்கு இளமையும் முதுமையும் ஒத்த சுமையாகவே இருக்கும்.

சாக்ரடீஸ்: நான் பெரு மதிப்புடன் இம்மொழிகளைக் கேட்டு, மேலும் அவருடைய எண்ணங்களை உரைக்கத் தூண்ட விரும்பிப் பின்வருமாறு கூறினேன்: உண்மை, கிபாலஸ்! ஆனால் நீங்கள் இவ்வாறு கூறும்போது பொதுவாக மக்களுக்கு உங்கள் மொழிகளில் நம்பிக்கை இராதோ என்று ஐயமுறுகிறேன். முதுமைப்பருவம் உங்களுக்கு எளிதாக இருப்பதற்குக் காரணம் உங்களது நல்ல மனப்பான்மை அன்று, நீங்கள் பெருஞ்செல்வராக இருப்பதேயாகும் என்று அவர்கள் எண்ணுவர். பொருட்செல்வம் பல வசதிகளை அளிக்கக்கூடியது என்பது யாவரும் அறிந்ததே.

---

1. Sophocles

கிபாலஸ் : நீ கூறுவது உண்மையே. பொதுமக்கள் நான் சொல்வதை ஒத்துக் கொள்வதில்லே. அவர்கள் கூறுவதில் உண்மையுண்டு. ஆனல் அவர்கள் கருதும் அளவிற்கு இல்லே. தெமிஸ்டாகிளீஸ் என்பவருக்குப் புகழ் வந்தது அவரது சொந்தச் சிறப்பு இயல்புகளினுல் அன்று; அவர் ஆதென்சு நகரிற் பிறந்தவர் என்பதனுலேயே என்று அவரை இகழ்ந்து கூறிய ஒரு செரீபிய நாட்டவனுக்கு "நீ என் நாட்டுக் குடிமகனுகவோ அல்லது நான் உன் நாட்டவனுகவோ இருந்தால் நம் இருவருள் ஒருவரும் புகழ் எய்தியிருக்க முடியாது" என்று தெமிஸ்டாகிளீஸ் கூறினுர். இம்மறுமொழியையே மேற்கூறிய என் கருத்தினே ஏற்காதவர்களுக்கு நான் கூறுவேன். செல்வர் அல்லாதவராய் முதுமை நிலேயை வெறுப்பவருக்கும் அதே பதிலேக் கூறிவிடலாம். ஏனெனில் நல்ல மனப்பான்மையுள்ள ஏழைகளுக்கு முதுமை சுமையில் குறைந்துவிடாது. தீயமனப்பான்மையுள்ள செல்வருக்கு ஒருபோதும் மன அமைதி ஏற்படாது.

சாக்ரடீஸ் : கிபாலஸ், நான் ஒன்று கேட்கலாமா? உங்களது செல்வத்தின் பெரும்பகுதி வழிவழியாக வந்ததா? அல்லது உங்களால் தேடப்பட்டதா?

கிபாலஸ் : என்னுல் தேடப்பட்டதே, சாக்ரடீஸ்; நான் எவ்வளவு தேடினேன் என்று அறிய விரும்புகிறீர்களா? பொருளீட்டும் திறமையில் நான் என் தந்தையாருக்கும் பாட்டனுருக்கும் நடுநிலேயில் உள்ளவன். ஏனெனில் எனது பாட்டனுர் - அவருடைய பெயரையே நான் கொண்டுள்ளேன் - தமக்கு வழிவழியாக வந்த செல்வத்தை இரண்டு மூன்று மடங்குகளாகப் பெருக்கினுர். நான் வைத்திருக்கும் செல்வத்தில் பெரும்பகுதி தம் பெற்ருேரிடமிருந்து அவர் அடைந்ததே. ஆனல் எனது தந்தையாரான லிசானியஸ் அச்சொத்தை இப்பொழுது என்னிடம் இருக்கும் அளவைவிடக் குறைத்துவிட்டார். நான் அடைந்ததைக் காட்டிலும் குறைவின்றி, சிறிது அளவு கூட்டியே என்னுடைய இப்புதல்வர்களுக்கு நான் கொடுத்தால், திருப்தியடைவேன்.

சாக்ரடீஸ் : அதனுல்தான் நான் உங்களே அங்ஙனம் வினவினேன். நீங்கள் பணத்தில் அதிக நாட்டம் கொள்ளவில்லே என்பதைப் பார்க்கிறேன். பொருளேத் தாமே ஈட்டியவர்

களைக் காட்டிலும் அவற்றை வழிவழியாகப் பெறுபவர்களிடமே இப்பண்பு காணப்படுகிறது. உபயோகம் இலாபம் இரண்டுக்கும் சாதனமான செல்வத்தில் எல்லோருக்கும் இயல்பாக ஏற்படும் பற்று அல்லாமல், அது தம் முயற்சியால் தேடப்பட்டது என்ற காரணத்தாலும் அச்செல்வத்தின்மீது மிகுந்த பற்றுக் கொள்வர். ஆசிரியர்கள் தாம் இயற்றிய இலக்கியத்தின் மீதும், பெற்றோர் தம் குழந்தைகள் மீதும் பற்றுக் கொள்வதுபோல் தாமே பெருஞ்செல்வம் ஈட்டுபவர்கள் அச்செல்வத்தின்மேல் மிகுந்த ஆசை கொள்வர். அவர்கள் நெருங்கிப் பழகுவதற்கு ஏற்றவர்கள் அல்லர். ஏனெனில், அவர்கள் செல்வத்தைப் பாராட்டுவதைத் தவிர வேறு எதைப் பற்றியும் பேசமாட்டார்கள்.

கிபாலஸ் : அது உண்மையே.

சாக்ரடீஸ் : ஆம், அது முற்றிலும் உண்மைதான். இனி நான் வேறு ஒன்று பற்றித் தங்களைக் கேட்கலாமா? உங்களுடைய செல்வத்திலிருந்து நீங்கள் அடைந்த பயன்களில் தலைசிறந்ததாகக் கருதுவது யாது?

கிபாலஸ் : ஒன்று உண்டு. அதைப் பிறர் எளிதில் ஒத்துக் கொள்ளுமாறு எனக்குச் சொல்லமுடியாமல் இருக்கலாம். சாக்ரடீஸ்! சொல்லுகிறேன் கேளுங்கள். ஒருவன் வாழ்க்கையின் இறுதியை அணுகியதாகக் கருதும்போது முன்பு இல்லாத அச்சங்களும் கவலைகளும் அவன் மனதில் புகுகின்றன. கீழ் உலகத்தைப் பற்றியும், இவ்வுலகில் செய்த தீவினைகளுக்குத் தக்க தண்டனைகளைப் பற்றிய கதைகளைப் பற்றியும் உள்ள விவரங்களை முன்பு கேட்டு விளையாட்டாக எண்ணியிருக்கலாம். ஆனால் இப்பொழுது அவை உண்மையாக இருக்கலாம், என்ற எண்ணம் அவனை வருத்துகிறது. வயதின் தளர்ச்சியினாலோ, அல்லது வேறு உலகத்தை நெருங்குவதனாலோ இச்செய்திகளைப் பற்றிய தெளிவு ஏற்படுகிறது. பல்வேறு அச்ச உணர்ச்சியும் ஐயப்பாடுகளும் நெருங்கி அவனைத் தாக்குகின்றன. நாம் பிறருக்கு என்ன தீமைகள் செய்தோம் என்று எண்ணித் தெரிந்து கொள்ளத் தொடங்குகிறான். தான் எல்லைமீறிச் செய்த அநீதியான செயல்களின் மிகுதியை அறிந்ததும் குழந்தைபோல் அஞ்சித் திடுக்கிட்டுத் தூக்கத்தில் பன்முறை எழுந்திருப்பான். நடக்கவிருக்கும் பெருந்துன்

பங்களின் அறிகுறிகள் அவன் மனத்தை நிரப்புகின்றன. எவனொருவன் தீமை ஒன்றும் செய்யவில்லை என்று துணிபாக இருக்கிருனே அவனுக்குப் பிண்டார்[1] என்ற கவி அழகாகக் கூறியபடி இனிய நம்பிக்கையானது முதுமைக் காலத்தில் தாதியாக இருந்து உறுதுணை புரிகிறது.

"நீதி நெறியுடன் தூய வாழ்வைக் கொண்டிருப்பவனுடைய ஆன்மாவை நம்பிக்கையென்னும் தாய் போற்றி வளர்த்து, முதுமை நிலையில் செவிலியாகவும் வழித்துணையாகவும் இருக்கிருள். அமைதியற்ற ஆன்மாவை ஆட்கொள்ள மிகத் திறமை வாய்ந்தது நம்பிக்கையே" என்று பிண்டார் கூறுகிருர்.

அவர் கூறிய மொழிகள் எவ்வளவு போற்றற்குரியன. நான் எல்லோருக்கும் என்று சொல்லவில்லை, ஆனல் நல்ல மனிதனுக்குச் செல்வத்தின் சிறந்த பயன் யாதெனில், தெரிந்தோ தெரியாமலோ அவன் மற்றவர்களை ஏமாற்றவும் வஞ்சிக்கவும் அவசியமில்லாமல் செய்கிறது. கீழ் உலகிற்கு அவன் செய்ய வேண்டிய கடமைகளைப் பற்றியும் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய கடன்களைப் பற்றியும் அச்சம் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது. இத்தகைய மன அமைதிக்குச் செல்வம் பெற்றிருப்பது மிகவும் உதவுகிறது. ஆகையினுல்தான் பயன்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்போது அறிவுள்ளவனுக்குச் செல்வம் அளிக்கும் பயன்களில் தலை சிறந்தது மன அமைதியே என்பது புலனுகும்.

சாக்ரடீஸ்: கிபாலஸ், நன்ருகக் கூறினீர்கள். ஆனல் இப்பொழுது பேசப்பட்ட நீதியைப் பொறுத்த வரையில் நீதி நெறியாவது உண்மை கூறுதலும் அவரவர் கடன்களைத் தீர்ப்பதும் தவிர வேருென்றும் இல்லையா? இவற்றிற்கும் விலக்குகள் இல்லையா? நண்பன் ஒருவன் நல்ல மனநிலையில் இருக்கும்பொழுது என்னிடம் ஆயுதங்களை ஒப்படைத்து வைத்திருந்து, மனநிலை பிறழ்ந்த காலத்தில் திரும்பக் கேட்பதாக வைத்துக் கொள்வோம். நான் அவற்றைத் திருப்பிக் கொடுக்கத்தான் வேண்டுமா? அந்நிலையில் இருப்பான் ஒருவனுக்கு நான் உண்மையே கூறவேண்டுமென்று எவ்வாறு ஒருவரும் சொல்லமாட்டார்களோ,

---

1. Pindar

அவ்வாறே நான் ஆயுதங்களைத் திருப்பிக் கொடுக்கவேண்டு மென்றோ, அவ்வாறு செய்தல் தகுதியென்றோ யாரும் சொல்ல மாட்டார்கள்.

கிபாலஸ்: நீ கூறுவது சரியே.

சாக்ரடீஸ்: அவ்வாறாயின் உண்மை கூறுவதும் கடனைத் திருப்பிக் கொடுப்பதுமே நீதிக்குத் தகுந்த இலக்கண மாகாது.

பாலிமார்க்கஸ்: (இடையில் குறுக்கிட்டு) சைமனிடிஸ்[1], கூறி யிருப்பதை உண்மையாக நாம் நம்ப வேண்டுமாயின் நீங்கள் சொல்வது சரிதான்.

கிபாலஸ்: பலி பூசைகளை மேற்பார்வையிட வேண்டியிருப்ப தால் நான் இப்பொழுது விடை பெற்றுச் செல்ல வேண்டி யிருக்கிறது. பாலிமார்க்கசிடம் உரையாடலை ஒப்படைத்துச் செல்கிறேன்.

சாக்ரடீஸ்: பாலிமார்க்கஸ் உங்களுடைய வழித்தோன்றல் அல்லவா?

கிபாலஸ்: "உண்மைதான்" என்று சொல்லிச் சிரித்துக் கொண்டே சென்றார்.

சாக்ரடீஸ்: (பாலிமார்க்கசை நோக்கி) உரையாடலின் உரிமை பெற்ற நீ சொல்லுவாய், சைமனிடிஸ் நீதியைப் பற்றி முடிவாகக் கூறிவிட்டாரென்று நினைக்கிறாயே, நீ நினைப்பது போல் அதிலுள்ள உண்மை என்ன?

பாலிமார்க்கஸ்: கடனைத் திருப்பிக் கொடுப்பது நீதி என்றார். அப்படி அவர் கூறியது சரியென்று எனக்குத் தோன்று கிறது.

சாக்ரடீஸ்: தெய்வத் தன்மையும் மதிநுட்பமும் வாய்ந்த பெரிய வரது மொழியில் நான் நம்பிக்கை கொள்ள இயலாமலிருப் பதற்கு வருந்துகிறேன். அவரது கருத்து உனக்குத் தெளிவாக இருப்பினும், எனக்குத் தெளிவற்றதாகத் தோன்றுகிறது. நான் இப்பொழுது சொன்னதுபோல் நம்மிடம் ஒப்படைத்திருந்த அஞ்சத்தக்க கருவிகளையோ அவைபோன்றவற்றையோ மனத் தடுமாற்றமுற்றவனிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்பது உறுதியாக அவர் கருத்தாக இராது. ஆயினும் ஒப்படைக்கப் பெற்ற பொருள் கடனேயாகும் என்பதை மறுக்க முடியாது.

---

1. Simonides.

பாலிமார்க்கஸ் : உண்மைதான்.

சாக்ரடீஸ் : அப்படியானால் நல்ல மனநிலை அற்றவன் கேட்டால் நான் திருப்பிக் கொடுக்க வேண்டாம் என்கிறாயா?

பாலிமார்க்கஸ் : ஆம், கொடுக்க வேண்டியதில்லை.

சாக்ரடீஸ் : கடனைத் திருப்பிக் கொடுத்தல் நீதியென்று வற்புறுத்திய அவர் இத்தகைய நிகழ்ச்சியை விதிவிலக் கென்று அதில் சேர்க்கவில்லையா?

பாலிமார்க்கஸ் : உறுதியாக இல்லை. ஏனெனில், நண்பன் தனது தோழனுக்கு எப்பொழுதும் நல்லதே செய்ய வேண்டும், தீமை செய்யக் கூடாது என்று அவர் கருதுகிறார்.

சாக்ரடீஸ் : கொடுத்து வைத்திருந்த பொன்னைத் திரும்பக் கொடுத்தல், அதனைப் பெறுவோனுக்குத் துன்பம் விளைவிக்குமாயின், அங்ஙனம் செய்தல் நண்பர்களாகிய அவ்விருவரைப் பொறுத்தவரையில் கடனைத் திருப்பிக் கொடுத்ததாகாது என்று நீ எண்ணுகிறாய் போலும். அது தான் அவர் கருத்து என உனக்குத் தோன்றுகிறதா?

பாலிமார்க்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : நாம் கொடுக்க வேண்டியதைப் பெறப் பகைவர் களும் உரிமையுடையவர்கள் தானா?

பாலிமார்க்கஸ் : உறுதியாக அவர்களும் கொடுக்கக் கடமைப் பட்டதை அடையத்தான் வேண்டும். எனக்குத் தெரிந்த அளவில் ஒருவன் தனது பகைவனுக்குச் சேரவேண்டியதை - அல்லது பொருத்தமானதை - அதாவது தீமையைக் கொடுக் கக் கடமைப்பட்டிருக்கிறான்.

சாக்ரடீஸ் : அப்படியாயின் கவிஞர்கள் போக்கில் நீதியின் இயல்பை மறைபொருளாக சைமனிடிஸ் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது. ஏனெனில் ஒவ்வொருவனுக்கும் அவனுக்கு ஏற்றதைக் கொடுப்பதையே நீதியென்று உண்மையில் கூற முன்வந்தார் எனலாம். அதைத்தான் அவர் கடனென்று அழைக்கிறார் போலும்.

பாலிமார்க்கஸ் : அவருடைய கருத்து அப்படித்தான் இருந் திருக்கும்.

சாக்ரடீஸ் : அட கடவுளே, மருத்துவமானது சேரவேண்டிய எதை அல்லது பொருத்தமான எதைக் கொடுக்கிறது?

யாருக்குக் கொடுக்கிறது? என்று நாம் சைமனிடைசைக் கேட்டால் அவர் நமக்கு என்ன பதில் அளிப்பார் என்று எண்ணுகிருய்.

பாலிமார்க்கஸ் : மருத்துவம் மக்களது உடலுக்குத் தேவையான மருந்துப் பொருள்களையும் உணவையும் பருகுதற்குரியவற்றையும் கொடுக்கின்றது என்று அவர் திண்ணமாகக் கூறுவார்.

சாக்ரடீஸ் : சமையல் தொழிலானது கடமைப்பட்டதான அல்லது பொருத்தமான எதை எதற்குக் கொடுக்கிறது?

பாலிமார்க்கஸ் : உணவுக்கு உண்ணத்தக்க பக்குவத்தை அளிக்கிறது.

சாக்ரடீஸ் : எனவே நீதி யாருக்கு எதைக் கொடுக்கிறது?

பாலிமார்க்கஸ் : சாக்ரடீஸ், முற்கூறிய உதாரணங்கள் நமக்கு வழிகாட்டியாய் இருந்து விளக்கந்தருமானல், நீதி என்பது நண்பர்களுக்கு நன்மையையும், பகைவர்களுக்குத் தீமையையும் அளிக்கும் கலை என்பது விளங்கும்.

சாக்ரடீஸ் : அப்படியானல் அதுதான் சைமனிடிசின் கருத்தா?

பாலிமார்க்கஸ் : அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : நோய்வாய்ப்பட்டிருக்கும்போது நண்பனுக்கு நன்மையையும் பகைவனுக்குத் தீமையையும் செய்வதில் மிகத் திறமை வாய்ந்தவர் யார்?

பாலிமார்க்கஸ் : மருத்துவன்.

சாக்ரடீஸ் : மேலும் அஞ்சத்தக்க ஆழ்கடலின் இடையே பிரயாணம் செய்யும்பொழுது, நண்பர்களுக்கு நன்மையும் பகைவர்களுக்குத் தீமையும் செய்வதில் மிகத் திறமை வாய்ந்தவர் யார்?

பாலிமார்க்கஸ் : கப்பலோட்டி.

சாக்ரடீஸ் : நீதியோடு நடப்பவன் எம்மாதிரியான செயல்களில் எந்த நோக்கங் கொண்டு, பகைவனுக்குத் தீமையும் நண்பனுக்கு நன்மையும் மிகத் திறமையுடன் செய்ய இயலும்?

பாலிமார்க்கஸ் : பகைவனுடன் போர்க்குச் செல்வதிலும் மற்றவர்களுடன் ஒப்பந்தஞ் செய்து கொள்வதிலும்.

சாக்ரடீஸ் : எனது அருமை பாலிமார்க்கசே, அப்படியாயின் ஒருவன் உடல் நலத்தோடு இருக்கும்பொழுது மருத்துவன் தேவையில்லையல்லவா?

பாலிமார்க்கஸ்: தேவையில்லைதான்.

சாக்ரடீஸ்: யார் கடற்பிரயாணம் செல்லவில்லையோ அவனுக்குக் கப்பலோட்டி அவசியமில்லையே?

பாலிமார்க்கஸ்: ஆம், இல்லை.

சாக்ரடீஸ்: அப்படியானால் அமைதி நிலவும்போது நீதி தேவையில்லையென்பது பொருளா?

பாலிமார்க்கஸ்: நான் அவ்வாறு கருதவில்லை.

சாக்ரடீஸ்: அப்படியானால் அமைதி நிலவும்பொழுதும் போர்க் காலத்திலும் நீதி பயன்படும் என்று நினைக்கிறாயா?

பாலிமார்க்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: தானியம் சேர்ப்பதற்கு உழவுத் தொழில் உதவுவது போல் நீதி உதவுகிறதா?

பாலிமார்க்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: மிதியடிகள் செய்யுந் தொழில் செருப்புக்கள் பெறுவதற்கு உதவுவதுபோல்!

பாலிமார்க்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அமைதி நிலவும் காலத்தில் நீதிக்கு இதுபோன்ற பயன் யாது? அதன்கண் காணப்படும் ஈட்டும் சக்தி யாது?

பாலிமார்க்கஸ்: சாக்ரடீஸ், ஒப்பந்தங்களில் நீதி பயன்படுகிறது.

சாக்ரடீஸ்: ஒப்பந்தம் என்பதனால் கூட்டாளியாயிருப்பது என்று நீ பொருள் கொள்கிறாயா?

பாலிமார்க்கஸ்: ஆம், அங்ஙனமே.

சாக்ரடீஸ்: அப்படியானால் சதுரங்க விளையாட்டில் மிக உதவியாகவும் சிறந்தவனாகவும் உள்ள கூட்டாளி யார்? நீதியுடையவனா? அல்லது திறமையான ஆட்டக்காரனா?

பாலிமார்க்கஸ்: திறமைவாய்ந்த ஆட்டக்காரன்தான்.

சாக்ரடீஸ்: கற்களையும் பாறைகளையுங்கொண்டு அமைக்கும் கட்டிடத் தொழிலில் கொத்தனைவிட நீதியுள்ளவன் மிகுந்த பயனைக் கொடுக்கும் சிறந்த கூட்டாளியாவானா?

பாலிமார்க்கஸ்: ஒருபொழுதும் இல்லை.

சாக்ரடீஸ்: [1]ஹார்ப் எனும் இசைக்கருவியை வாசிப்பதில் எப்படி ஹார்ப்பை மீட்டுபவன் நியாயவானைவிடச் சிறந்த கூட்டாளியாகிறானோ அதேபோல் எந்தக் கூட்டுத்துறையில்

1. Harp ஒருவகை வீணை.

ஹார்ப் மீட்டுபவனைவிட நீதியுள்ளவன் சிறந்த கூட்டாளி யாவான்?

பாலிமார்க்கஸ்: பணம் சம்பந்தமான கூட்டுறவில்.

சாக்ரடீஸ்: ஆம் பாலிமார்க்கஸ், ஆனால் பணத்தைப் பயன் படுத்துவதில் அன்று என்பது உறுதி. ஏனெனில் நீதியாள னைக் குதிரை வாங்குவதிலோ அல்லது விற்பதிலோ ஆலோ சகனாக நாடமாட்டாய். அதற்குக் குதிரையைப் பற்றிய அநுபவமுள்ளவனே மிகப் பொருத்தமானவன் அல்லவா?

பாலிமார்க்கஸ்: ஆம், உறுதியாக.

சாக்ரடீஸ்: நீ கப்பல் ஒன்று வாங்க விரும்புகையில் அதற்குத் துணைபுரிய மிகப் பொருத்தமானவன் கப்பல் கட்டுபவனா அல்லது கப்பல் ஓட்டுபவனா?

பாலிமார்க்கஸ்: உண்மையே.

சாக்ரடீஸ்: பிறகு, வெள்ளி, தங்கம் ஆகியவற்றை வைத்துச் செய்யும் எத்தொழிலில் கூட்டாளியாக நீதியுள்ளவனை ஏற்பாய்? ஏன்?

பாலிமார்க்கஸ்: சேமிப்பைப் பாதுகாக்க நீங்கள் விரும்பும் பொழுது.

சாக்ரடீஸ்: தேவையில்லாமல் பணம் முடக்கப்படுகிறபொழுது நியாயவான் தேவையெனக் கருதுகிறாயா?

பாலிமார்க்கஸ்: ஆம், திட்டமாக.

சாக்ரடீஸ்: அதாவது, பணம் பயனற்றதாகுங்கால் நீதி பயன் தரும் என்பதா?

பாலிமார்க்கஸ்: அதுவே அநுமானம்.

சாக்ரடீஸ்: ஓர் தழைவெட்டும் கருவியைப் பத்திரமாக வைத்துக்கொள்ள விரும்புகையில், நீதி தனி மனிதனுக்கும் அரசிற்கும் பயன் தருவதாகிறது. ஆனால் அக்கருவியைப் பயன்படுத்த விரும்பும்பொழுது, திராட்சைக்கொடிகளைச் சீர்ப்படுத்துவோனின் கலையைப் போற்றுகிறாய்.

பாலிமார்க்கஸ்: விளக்கமாகச் சொன்னீர்கள்.

சாக்ரடீஸ்: ஒரு கேடயத்தையோ, யாழையோ பயன்படுத் தாமல் வைத்திருக்க விரும்பும்பொழுது, நீதி பயன்தரும் என நீ சொல்லுகிறாய்; ஆனால் அவற்றைப் பயன்படுத்த விரும்புகிறபொழுது போர் வீரனின் கலையையோ இசை வாணனின் கலையையோ பாராட்டுகிறாய்.

பாலிமார்க்கஸ்: திண்ணமாக.

சாக்ரடீஸ் : ஆகவே மற்றெல்லாப் பொருள்கட்கும் அப்படித் தானே அப்பொருள்கள் பயனற்றதாகுங்காலை நீதி பயன் தருவதாகிறது. அவை பயனுடையதாகுங்காலை நீதி பயனற்றதாகிறது, அல்லவா?

பாலிமார்க்கஸ் : ஆம், அதுவே அநுமானம்.

சாக்ரடீஸ் : அப்படியானல் நீதி எல்லாவற்றுக்கும் பயன்படுவதில்லை. மேலும் இதனைத் தொடர்ந்து கவனிப்போம். மற்போர் அல்லது மற்ற போர்வகைகளில் திறமையுடன் எதிரியைக் குத்தவல்ல ஒருவனே தன்மீது விழும் அடியைத் திறமையாகத் தடுக்கக்கூடியவனல்லவா?

பாலிமார்க்கஸ் : அங்ஙனமே.

சாக்ரடீஸ் : ஒரு நோயைத் திறமையுடன் தடுக்க அல்லது, அதனின்றும் தப்பவல்ல ஒருவன் ஒரு நோயை உண்டாக்க முடியும் அல்லவா?

பாலிமார்க்கஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : எதிரியை நோக்கி முன்னேறவல்ல ஒருவன், தனது பாசறையை நன்கு காப்பான் எனலாம் அல்லவா?

பாலிமார்க்கஸ் : உறுதியாக.

சாக்ரடீஸ் : அப்படியானல் எதையும் நன்கு காப்பவனே சிறந்த திருடன் எனலாமா?

பாலிமார்க்கஸ் : அதுவே அநுமானிக்கப்பட வேண்டியது என எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ் : எனவே ஒரு நீதிமான் பணத்தைப் பாதுகாப்பதில் வல்லவனுயின், அதனைத் திருடவும் வல்லவன் அல்லவா?

பாலிமார்க்கஸ் : அது அவ்வாதத்தின் உட்கருத்து.

சாக்ரடீஸ் : அப்படியானல் நியாயவான் கள்வனுகி விட்டான். இப்பாடத்தினை நீ ஹோமரிடமிருந்து[1] கற்றிருக்க வேண்டும் என ஐயுறுகின்றேன். ஏனென்றால் தமக்கு மிகவும் இனியவனுனவனும், ஒடிஸியஸின்[2] தாய் வழிப் பாட்டனுமாகிய ஆட்டோலிகஸைப்[3] பற்றிக் கூறும்பொழுது, "அவன் களவிலும், பொய்ச்சான்று பகருவதிலும் அனைவரிலும் வல்லவன்" என ஹோமர் நிறுவுகின்றார். ஆகவே நீயும், ஹோமரும், சைமனிடிசும் நீதி ஒரு களவுக்கலை என்பதிலும், அது "நண்பர் நலத்திற்கும் பகைவர் தீங்கிற்கும்" பயன்படுத்தப்பட வேண்டியது என்பதிலும் ஒத்துப்

1. Homer 2. Odysseus 3. Autolycus

போகிறீர்கள் - அதைத்தானே நீ சொல்லிக் கொண்டிருந் தாய்?

பாலிமார்க்கஸ் : இல்லை, நான் எதைச் சொன்னேன் என்று எனக்கு இப்பொழுது தெரியாவிடினும் உறுதியாக நான் சொன்னது அது அல்ல; ஆனால் பிற்கூறிய கருத்தை மட்டும் நான் இன்னமும் ஆதரிக்கிறேன்.

சாக்ரடீஸ் : நன்று, மற்றொரு வினா : நண்பர், பகைவர் என்னும் போது அவ்வாறு உண்மையாகவே இருக்கின்றவரைக் கருது கின்றோமா அல்லது தோற்றத்தில் மட்டும் அப்படி இருக் கின்றவரைக் குறிப்பிடுகிறோமா?

பாலிமார்க்கஸ் : ஒருவன் யாரை நல்லவர் என்று கருது கின்றானோ அவரை நேசிப்பதும், தான் யாரைத் தீயவர் என்று எண்ணுகின்றானோ அவரை வெறுப்பதும் எதிர் பார்க்கக் கூடியதே. இது உறுதி.

சாக்ரடீஸ் : ஆம், ஆனால் மனிதர்கள் நன்மை தீமை இவற்றைப் பற்றி அடிக்கடி மாறாகக் கருதுவதில்லையா? நல்லவரல்லாத பலரும் நல்லவர் போலவும், நல்லவர் தீயவர் போலவும் தோன்றுகின்றார்கள் அல்லவா?

பாலிமார்க்கஸ் : அது உண்மையே.

சாக்ரடீஸ் : அப்படியானால் அவர்களுக்கு நல்லவர்கள் பகைவ ராகவும், தீயவர் நண்பர்களாகவும் இருப்பார்கள் அல்லவா?

பாலிமார்க்கஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அது அங்ஙனமாயின், தீயவருக்கு நன்மையும் நல்லவருக்குத் தீமையும் செய்வது முறையேயாகும் எனலாமா?

பாலிமார்க்கஸ் : அது தெளிவு.

சாக்ரடீஸ் : ஆனால் நல்லோர் நெறியாளர் என்பதும், அவர்கள் தீயவை செய்யார் என்பதும் உண்மையல்லவா?

பாலிமார்க்கஸ் : உண்மையே.

சாக்ரடீஸ் : பின், உனது வாதப்படி தீங்கே செய்யாதவரைத் துன்புறுத்துவது நீதியாகும் என்றாகிறது அல்லவா?

பாலிமார்க்கஸ் : இல்லை, சாக்ரடீஸ், அக்கோட்பாடு நெறி யற்றது.

சாக்ரடீஸ் : அப்படியானால் நாம் நீதிமான்களுக்கு நன்மையும், தீ நெறியாளருக்குத் தீமையும் செய்ய வேண்டும் எனக் கொள்ளலாமா?

பாலிமார்க்கஸ் : முன் கூறியதைவிட இதனையே ஏற்பேன்.

சாக்ரடீஸ் : ஆனால் அதன் விளைவைப் பார் : மனித இயற்கையை அறியாதவன் நட்புக்கொள்ளும்போது, தீயவரை நண்பராகக் கொள்ளுகிருன். அந்நிலையில் அவன் அவர்களுக்குத் தீங்கிழைக்க வேண்டும். நல்லோர் தனக்குப் பகைவராயின், அவர்க்கு நன்மை செய்ய வேண்டும். அது அவ்வாருயின் சைமனிடிசின் கருத்து எது என்று முன்பு வலியுறுத்தினேமோ அதற்கு நேர் மாருன ஒன்றைச் சொல்பவர்களாவோம்.

பாலிமார்க்கஸ் : சால உண்மை. நண்பன், பகைவன் என்ற சொற்களைப் பயன்படுத்துவதில் நாம் செய்த தவற்றினைச் சரி செய்து கொள்ளுவது நலம் என்று நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : பாலிமார்க்கஸ், அது என்ன தவறு?

பாலிமார்க்கஸ் : எவன் ஒருவன் நல்லவன்போல் காணப்படுகின்ருனே அல்லது நல்லவன் என்று நினைக்கப்படுகிருனே அவனை நண்பன் என்று நம்பிவிடுகிருேம்.

சாக்ரடீஸ் : அப்படியானல், அந்தப் பிழையை எப்படித் திருத்துவது?

பாலிமார்க்கஸ் : ஒருவன் தோற்றத்தில் மட்டுமல்லாமல், உண்மையிலேயே நல்லவனுக நிருப்பானுயின் அவனையே நண்பன் என்று நாம் சொல்ல வேண்டும். அன்றியும் ஒருவன் உண்மையில்லாமல் தோற்றத்தில் மட்டும் நல்லவனுக நடிப்பானுயின் அவன் உண்மையில் நண்பனல்லன். பகைவனைப் பற்றியும் இதனையே கூறலாம்.

சாக்ரடீஸ் : நல்லவர்கள் நம் நண்பர்கள் என்றும் தீயவர்கள் நம் பகைவர்கள் என்றும் வாதிடுவாயா?

பாலிமார்க்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : நம் நண்பர்களுக்கு நல்லது செய்வதும், பகைவர்களுக்குத் தீங்கு செய்வதும் நீதி என்று மட்டும் முன்னர் எளிதாகச் சொன்னது போலல்லாமல், நம் நண்பர்கள் நல்லவர்களாக இருக்கும்பொழுது அவர்களுக்கு நன்மை செய்வதும், நம் பகைவர்கள் தீயவர்களாக இருக்கும்பொழுது அவர்களுக்குத் தீங்கு செய்வதும் நீதியாகும் என்று மேலும் சொல்ல வேண்டும் அல்லவா?

பாலிமார்க்கஸ் : ஆம், அதுவே உண்மையாக எனக்குத் தோன்றுகிறது.

சாக்ரடீஸ் : ஆனல், நீதி நெறியாளர் யாரையேனும் துன் புறுத்தத்தான் வேண்டுமா ?

பாலிமார்க்கஸ் : ஐயமற, கொடியவராகவும், தம் பகைவராகவும் அவர் இருப்பின் அவரைத் துன்புறுத்தத்தான் வேண்டும்.

சாக்ரடீஸ் : குதிரைகள் துன்புறுத்தப்படும்பொழுது அவை மேலும் நன்கு செம்மையுறுகின்றனவா அல்லது குன்றி விடுகின்றனவா ?

பாலிமார்க்கஸ் : பிற் கூறியது.

சாக்ரடீஸ் : அதாவது குன்றிவிடுகின்றன என்ருல், குதிரை களின் இயல்புகளில் குன்றிவிடுகின்றனவேயல்லாது, நாய் களின் இயல்புகளில் தளர்ச்சியடைந்து விடவில்லையே ?

பாலிமார்க்கஸ் : ஆம், குதிரைகளின் இயல்புகளில்தான் குன்றி விடுகின்றன.

சாக்ரடீஸ் : அவ்வாறே நாய்கள் தங்கள் இயல்புகளில் தளர்ச்சி அடைகின்றனவே யல்லாது குதிரைகளின் இயல்புகளில் குன்றிவிடுவதில்லையே ?

பாலிமார்க்கஸ் : அங்ஙனமே.

சாக்ரடீஸ் : துன்புறுத்தப்பட்ட மனிதர், மனிதனின் முறை யான பண்பில் தளர்ந்து விடமாட்டார்களா ?

பாலிமார்க்கஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அந்த மனிதப் பண்பு நீதிதானே ?

பாலிமார்க்கஸ் : உறுதியாக அப்படித்தான்.

சாக்ரடீஸ் : அப்படியாயின் துன்புறுத்தப்பட்ட மனிதர் வேறு வழியின்றி நீதியற்றவராக, தீயவராக, ஆக்கப்படு கிருர்களா ?

பாலிமார்க்கஸ் : ஆம், அதுவே முடிவு.

சாக்ரடீஸ் : ஆனல் இசை வல்லுநன் தனது கலைத்திறனலேயே மனிதருக்கு இசையுணர்வின்றிச் செய்ய முடியுமா ?

பாலிமார்க்கஸ் : நிச்சயமாக முடியாது.

சாக்ரடீஸ் : அல்லது குதிரையோட்டுவோன் தன் திறனல் மக்களது குதிரை ஓட்டும் திறமையைக் கெடுக்க முடியுமா ?

பாலிமார்க்கஸ் : முடியாது.

சாக்ரடீஸ் : மேலும், ஒரு நெறியாளன் நீதியின் வாயிலாக மனிதரை நெறிபிறழ்ந்தவராகச் செய்துவிட முடியுமா ? அல்லது பொதுவாகப் பேசுமிடத்து நல்லவர்கள் நற்பண் பின் வாயிலாகப் பிறரைத் தீயவராக ஆக்க முடியுமா ?

பாலிமார்க்கஸ் : திண்ணமாக முடியாது.

சாக்ரடீஸ் : எப்படிச் சூடு குளிர்ச்சியை உண்டாக்க முடியாதோ அப்படியல்லவா ?

பாலிமார்க்கஸ் : அதனால் முடியாது.

சாக்ரடீஸ் : வறட்சி ஈரத்தை உண்டாக்க முடியுமா ?

பாலிமார்க்கஸ் : நிச்சயமாக முடியாது.

சாக்ரடீஸ் : நல்லவர் யாரையேனும் துன்புறுத்த முடியுமா ?

பாலிமார்க்கஸ் : முடியவே முடியாது.

சாக்ரடீஸ் : ஆகவே நெறியாளர் நல்லவர்கள் அல்லவா ?

பாலிமார்க்கஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : எனவே ஒரு நண்பனையோ அல்லது வேறொரு வனையோ துன்புறுத்துவது ஒரு நீதிமானின் செய்கையல்ல, ஆனால் அது அவனுக்கு நேர் எதிரிடையான நீதியற்றவனின் செயல் அல்லவா ?

பாலிமார்க்கஸ் : சாக்ரடீஸ், நீங்கள் சொல்லுவது முற்றிலும் உண்மை எனக் கருதுகிறேன்.

சாக்ரடீஸ் : பின், நீதி என்பது கடன்களைத் திருப்பிக் கொடுப்பது என்றும், நன்மை என்பது ஒருவன் தன் நண்பரிடம் பட்ட கடனே என்றும், தீமை என்பது தன் பகைவரிடம் பட்ட கடனே என்றும் ஒரு மனிதன் சொல்வா னால் அது அறிவுடைமையாகாது ; உண்மையும் அல்ல. ஏனெனில் மற்றொருவனுக்குத் தீங்கிழைப்பது எவ்வகையி லும் நீதியாகாது, என்பது முன்னர்த் தெளிவாக விளக்கப் பெற்றமையால்.

பாலிமார்க்கஸ் : நான் தங்கள் கருத்தை ஏற்கிறேன்.

சாக்ரடீஸ் : அப்படியானால் இக்கருத்தை சைமனிடிஸ், பயஸ், பிட்டாகஸ் வேறு எந்த அறிவாளி அல்லது தீர்க்க தரிசியி னுடையதென எவர் கூறினாலும் அவர்கள்மீது போர் தொடுக்க நீயும் நானும் தயாராக இருக்கிறோம் அல்லவா ?

பாலிமார்க்கஸ் : நான் உங்கள் சார்பில் போர் புரியத் தயாராக இருக்கிறேன்.

சாக்ரடீஸ் : பின் அக்கருத்து யாருடையதென நான் நம்பு கிறேன் என்பதை உனக்குச் சொல்லட்டுமா ?

பாலிமார்க்கஸ் : யாருடையது ?

சாக்ரடீஸ் : பெரியாண்டர் அல்லது பெர்டிக்கஸ் அல்லது சர்க்ஸிஸ் அல்லது தீப நாடு என்ற இசுமெனியாஸ்

நகரத்தவன் அல்லது தனது வலிமையைப் பெரிதாகக் கருதும் பேரெண்ணம் கொண்ட ஏதோ ஒரு வலிமை மிக்க செல்வன் ஒருவன் 'நீதியென்பது நண்பருக்கு நன்மை செய்வது, பகைவருக்குத் தீங்கு செய்வது' என்று முதன் முதலில் சொல்லியிருக்க வேண்டும் என்று நம்புகிறேன்.

பாலிமார்க்கஸ் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆம். ஆனால் நீதியின் இந்த வரைவிலக்கணம் பழுதென விட்டு விட்டால் வேறு எதைச் சொல்லலாம்?

இவ்விவாதத்தின் பொழுது திராசிமாக்கஸ் அதிற் கலந்து கொள்ளப் பல முறை முயன்றான். ஆனால் முடிவை அறிய வேண்டும் என்ற ஆவலுடன் இருந்த ஏனையோர் அவனை அமர்த்திவிட்டனர். ஆனால் நானும் பாலிமார்க்கசும் பேசி முடித்த பின்னர் ஏற்பட்ட சிறிது இடை நேரத்தில், மேலும் அமைதியுடனிருக்க முடியாமல் விழுங்கிவிட முனையும் கொடிய மிருகம் போல் வாதாட முற்பட்டான். அவன் தோற்றத்தைக் கண்டதும் நாங்கள் அஞ்சி நின்றோம்.

குழுவினர் அனைவரையும் நோக்கித் திராஸிமாக்கஸ் இரைந்து கூறியது:

திராஸிமாக்கஸ் : சாக்ரடீஸ்! எத்தகைய பிழை உங்கள் அனைவரையும் பீடித்துள்ளது! மேதைகளே! நீங்கள் ஒருவரையொருவர் ஏன் மோதிக் கொள்ளுகின்றீர்கள்? நீதி என்பதன் நிலையை உண்மையாக நீங்கள் அறிய விரும்பினால், கேட்பதோடு நில்லாமல் விடையையும் காணுதல் வேண்டும். எதிரியை மறுப்பதால் விளையும் புகழை நாடுவதோடு நில்லாமல், அக்கேள்விக்குரிய விடையையும் பெற்றிருத்தல் வேண்டும். நீதியைக் கடமை என்றோ பயன் என்றோ, விளைவு என்றோ, நலன் என்றோ நீங்கள் குறித்தால் நான் அதை ஏற்கமாட்டேன். இத்தகைய பொருளற்ற உரைகள் யான் ஏற்பன அல்ல. தெளிவும் நுட்பமும் விடையில் பொருந்தியிருத்தல் வேண்டும்.

திராஸிமாக்கஸ் சொற்களைக் கேட்டுப் பீதியடைந்த நிலையில், அவனை நோக்காது நடுங்கிச் சாக்ரடீஸ் பேசுவது:

சாக்ரடீஸ் : திராஸிமாக்கஸ் கண்களை உற்று நோக்காது இருந்திருந்தால் பேச்சற்று இருப்பேன். ஆனால் அவனது மூண்டெழும் சினத்தைப் பார்த்தபோது நேராக நோக்கி

னேன், ஆதலால் விடை தரவும் என்ஞல் இயன்றது. (தழுதழுத்த குரலில்) திராஸிமாக்கஸ்! எங்கள்மீது கடுமை யாக இருக்கவேண்டாம்: பாலிமார்க்கஸூம் நானும் வழக் குரையில் சிறுபிழையைச் செய்திருக்கலாம். ஆனுல் இப் பிழை தெரிந்து நேர்ந்தது அன்று; கருதியது அன்று. நாங்கள் பொன் காசு ஒன்றை நாடியிருந்தால் எங்களுக்குள் மோதிக் கொண்டதாக நீங்கள் கருதியிருக்க மாட்டீர்கள். பொன் காசைக் காணுகின்ற வாய்ப்பையும் எங்கள் மோதுத லால் இழந்திருப்போம். நீதியை நோக்கிய எங்கள் முயற்சி மிகவும் சிறப்புடையதாகும். பல பொன் காசுகளை விட, நீதி சிறப்புடையது; போற்றத்தக்கது. எங்களுக்குள் வலுவின்றி ஒருவருக்கொருவர் தோல்வியை ஏற்பதாக நீ கருதுகிருயா? உண்மையை அறிதலிலேயே எங்கள் முயற்சி முழுமையாக அமையவில்லையா?

எனது சிறந்த நண்பனே, நாங்கள் உண்மை காணு வதில் மிகுந்த வேட்கையும் ஆர்வமும் உடையவர்களே. ஆனுல் உண்மையில் வாய்ப்பு இல்லை. எல்லாம் தெரிந்த உங்களைப் போன்ருேர், எங்களிடத்து இரக்கம் காட்டுதல் வேண்டுமேயன்றிச் சினம் கொள்ளல் ஆகாது.

திராசிமாக்கஸ்: (ஏளனச் சிரிப்புடன்), சாக்ரடீசின் சொல் நடை (வஞ்சப் புகழ்ச்சி) வேறு எவராலும் காண இயலாத தாகும். இந்தநடை அவருக்கே உரியதாகும். அவரிடம் கேட்கப் பெற்ற எக்கேள்விக்கும் அவர் பதிலுரை தர மறுப்பார். வேறு எவ்வகையிலாவது கருத்துக்களை மாற்றி யும் குறைத்தும் விரித்தும் பதிலுரை தராது தவிர்ப்பார்.

சாக்ரடீஸ்: திராஸிமாக்கஸ், நீ ஒரு தத்துவ அறிஞன். ஒருவனைப் பார்த்து எவ்வெண்கள் கொண்டது பன்னிரண்டு எனக் கேட்டால், அவன் இருமுறை ஆறு எனவோ மூன்று முறை நான்கு எனவோ ஆறு முறை இரண்டு எனவோ நான்கு முறை மூன்று எனவோ கூறக் கூடும். விடைகளைக் குறித்து ‘ இத்தகைய அறிவீனம் எனக்குப் பிடிக்காது என ’ நீ தடுத்தால், நிச்சயமாக நீ கேள்வி கேட்கும் முறை அப்படியாயின் உன் கேள்விக்கு விடையளிக்க ஒருவராலும் நிச்சயமாக முடியாது. அவன் திருப்பி உன்னை ‘திராஸி மாக்கஸ், உன் கருத்துத்தான் என்ன? நீ தடை செய்து விடும் எண்களில் ஏதேனும் ஒன்றே சரியான விடையாக

இருக்குமாயின், சரியற்ற எண்ணைத்தான் நான் பொய்யாக உனக்கு விடையிறுக்க வேண்டுமோ? இதுதான் உன் கருத்தோ?" எனக் கேட்பானாயின் நீ அவனுக்கு எங்ஙனம் மறுமொழி தருவாய்?

திராசிமாக்கஸ்: இவ்விரண்டு விஷயங்களும் ஒரே தன்மையனவாய்க் கருதுகிறீர் போலும்!

சாக்ரடீஸ்: ஏன் இருக்கக் கூடாது? அப்படியே இல்லாவிட்டாலும், கேட்கப்பட்டவனுக்கு மட்டுமே அது அப்படித் தோன்றினால், நீயும் நானும் தடுத்தாலும் தடுக்காவிட்டாலும் அவன் தனக்குத் தோன்றியதைச் சொல்ல வேண்டாமா?

திராசிமாக்கஸ்: பின் நீ தடுக்கப்பட்ட விடைகளில் ஒன்றைச் சொல்லப் போகிறீர் என்று கருதுகிறேன்.

சாக்ரடீஸ்: சிந்தனையின் வாயிலாக அவற்றுள் எதைச் சரியென ஏற்றுக்கொள்ளுகிறேனோ அதன் விளைவு யாதாயிருப்பினும் அதைச் சொல்லுவேன்.

திராசிமாக்கஸ்: நீங்கள் நீதிக்கு இதுகாறும் தந்த விளக்கங்களைவிட மேலான ஒன்றை நான் தந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்களை என்னசெய்வது?

சாக்ரடீஸ்: செய்வது என்ன? அறியாதவனுக்கு ஏற்றபடி அறிஞர்களிடம் நான் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். அது எனக்குத் தகுதியாகும் என்று சொல்லுவேன்.

திராசிமாக்கஸ்: என்ன, இதற்குக் கட்டணம் இல்லையா? வேடிக்கையான கருத்துத்தான்!

சாக்ரடீஸ்: என்னிடம் பணம் இருக்கும்பொழுது உனக்குக் கொடுப்பேன்.

கிளாக்கன்: சாக்ரடீஸ், உன்னிடம் பணம் இருக்கிறது. திராசிமாக்கஸ்! நீ பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. சாக்ரடீஸுக்காக நாங்கள் அனைவரும் பணம் தருகிறோம்.

திராசிமாக்கஸ்: அப்படியானால் சாக்ரடீஸ் எந்தக் கேள்விக்கும் தான் விடையளிக்காது மற்றவர்களைப் பதில் சொல்லச் செய்து, பிறகு அதைச் சிதற அடிப்பது என்ற வழக்கத்தையே எப்பொழுதும்போல் கையாளுவார்.

சாக்ரடீஸ்: என் அருமை நண்பனே! ஒன்றையும் அறியாத ஒருவன், தனக்கு ஒன்றுமே தெரியாது என்று உணர்ந்து

தனக்கு ஒன்றுமே தெரியாது என்று ஒப்புக்கொள்கிறவன், கேள்விகட்கு எப்படி விடையிறுக்க முடியும்? மேலும், அவனுக்கே ஏதேனும் கருத்துக்கள் சிறிதளவு தோன்றினும் அதிகாரம் படைத்த ஒருவன் அவனை அதைச் சொல்லக் கூடாதென்று தடுத்தால் அவன் என்ன செய்வான்? எது பொருத்தம் என்றால், பேசுகிறவன் உன்னைப்போல் அறிந்தவனாகக் கருதித் தானறிந்ததைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல வல்லவனாக இருக்கவேண்டும். தயவுசெய்து எனக்கும் நம் குழுவினருக்கும் அறிவு வருமாறு உனது விடைகளைச் சொல்க.

என்னைப்போலவே கிளாக்கனும் குழுமியிருந்த பிறரும் திராசிமாக்கசை வேண்டினர். திராசிமாக்கசுக்கும் உண்மையில் தான் பேசவேண்டுமென்ற பேராவல் உண்டு என்பது தெளிவு. தன்னிடம் அருமையான பதில் இருக்கிறது, தான் அதனால் தனி மதிப்புப் பெறலாம் என்று அவன் கருதினான். ஆனால் முதலில் நான் விடையிறுக்க வேண்டுமென்று என்னை வெறுமனே உதட்டளவில் வற்புறுத்தினான். இறுதியில் தன் பேச்சைத் தொடங்க இசைந்தான்.

திராசிமாக்கஸ்: சாக்ரடீஸின் விவேகத்தைப் பாருங்கள். பிறருக்குக் கற்றுக் கொடுக்க மறுக்கிறார், பிறரிடம் கற்றுக் கொள்ள ஓடுகின்றார், அவர்களுக்கு நன்றிகூடத் தெரிவிப்பதில்லை.

சாக்ரடீஸ்: நான் பிறரிடமிருந்து கற்றுக் கொள்கிறேன் என்பது சாலவும் உண்மை. ஆனால் நான் நன்றியற்றவன் என்றாயே அதை முற்றிலும் மறுக்கிறேன். என்னிடம் பணமில்லை, ஆகவே என்னிடம் உள்ள ஒரே பொருளான புகழுரையைத் தருகிறேன். நன்றாகப் பேசுவதாக எனக்குத் தோன்றுகின்ற எவருக்கும் புகழ்மாலை சூட்ட நான் எவ்வளவு தயாராக இருக்கிறேன் என்பதை நீ விரைவில் விடையிறுக்குங்கால் அறிவாய். ஏனெனில் நீ மிக நன்றாகப் பேசுவாய் என எதிர்பார்க்கிறேன்.

திராசிமாக்கஸ்: அங்ஙனமாயின் கேளுங்கள், நீதியென்பது வலிமையுள்ளவனின் நாட்டமேயன்றி வேறில்லை என்று திட்டமாகக் கூறுகிறேன். இப்பொழுது ஏன் என்னை நீர் புகழக்கூடாது? உண்மையில் நீர்தான் புகழமாட்டீரே.

சாக்ரடீஸ்: முதலில் நீ சொன்னதை நான் நன்ருகப் புரிந்து கொள்ள வேண்டும்; வலிமை மிக்க ஒருவனுக்கு நன்மை பயப்பதாக இருப்பதே, அவன் நாட்டம் கொள்வதே, நீதி என்கிருய். சரி, திராசிமாக்கஸ்; இதன் பொருளென்ன? மல்லன்[1] பாலிதாமஸ் நம்மெல்லாரையும்விட வலிமைமிக்கவனுகையாலும் மாட்டிறைச்சி உண்பது தனது உடல் வலிமைக்கு ஏற்றதாக இருக்கிறது என அவன் காணுவதாலும், அவனைவிட வலிமையிற் குறைந்த நாமும் மாட்டிறைச்சி உண்பது நமக்கு நல்லது, முறையானது, நீதியானது என்றும் நீ சொல்ல முடியாது அல்லவா?

திராசிமாக்கஸ்: சாக்ரடீஸ்! நீங்கள் வெறுக்கத் தக்க முறையில் பேசுகிறீர்கள். வாதத்தை முற்றிலும் முறிக்கிற அளவுக்குச் சொற்களுக்குப் பொருள் காண்கிறீர்கள்.

சாக்ரடீஸ்: அப்படி ஒன்றும் இல்லை, ஐயனே, அவற்றைப் புரிந்து கொள்ளவே முனைகின்றேன். நீ சற்றுத் தெளிவாகச் சொல்லுமாறு வேண்டுகிறேன்.

திராசிமாக்கஸ்: நன்று, கொடுங்கோன்மை, மக்களாட்சி, செல்வர்களாட்சி என அரசு முறைகள், வேறுபடுவதைப் பற்றி நீங்கள் ஒருபொழுதும் கேள்விப்பட்டதில்லையா?

சாக்ரடீஸ்: கேள்விப்பட்டிருக்கிறேன்.

திராசிமாக்கஸ்: ஒவ்வொரு முறையிலும் அரசாங்கம்தான் நாட்டினை ஆளும் சக்தி என்பதும் தெரியுமா?

சாக்ரடீஸ்: தெரியும்.

திராசிமாக்கஸ்: அந்தந்த அரசு முறைகள் தத்தம் முறைகட்கேற்ற வகையிலும் தங்கள் நலத்திற்கெனச் சட்டங்கள் இயற்றுகின்றன. இவ்வாறு தங்கள் நலத்திற்குத் தங்களால் ஆக்கப்பட்ட சட்டங்களே குடிமக்களுக்கு அவர்கள் வழங்கும் நீதியெனப்படுகிறது. அச்சட்டங்களை மீறுகிறவனைச் சட்ட விரோதியெனவும் நீதியற்றவன் எனவும் அவர்கள் தண்டிக்கிருர்கள். அரசாங்கத்திற்கு நன்மை பயப்பது எதுவோ அதுவே நீதி; இது எல்லா அரசுகளுக்கும் பொருந்தும் என்று மேற்கூறியதைக் கருதியே சொல்கிறேன். மேலும் அரசு சக்தி வாய்ந்ததாதலால், வலிமையுள்ளவனுக்கு

1. Polydamas.

நன்மையமைப்பதே நீதி என்ற கருத்தே எங்கும் நிலவு கிறது என்பதே நியாயமான முடிவு.

சாக்ரடீஸ் : இப்பொழுது எனக்குப் புரிகிறது, உன் முடிவு சரிதானு இல்லையா என நான் கண்டறிய முயலவேண்டும். ஆனல் நீதிக்கு வரைவிலக்கணம் வழங்குகிறபொழுது நான் பயன்படுத்தக்கூடாது என்று நீ சொன்ன நலனுணர்வு (Interest), நாட்டம் என்னும் சொல்லை நீயே பயன்படுத்தி இருக்கிருய். ஆனல் உன்னுடைய வரைவிலக்கணத்தில் 'வலிமையுள்ளவனின்' என்ற சொல்லைச் சேர்த்திருக்கிருய் என்பது உண்மை.

திராசிமாக்கஸ் : ஒரு சிறு சேர்க்கைதானே, அதை அநுமதிக்க வேண்டும்.

சாக்ரடீஸ் : பெரியதோ சிறியதோ அதைப் பற்றிக் கவலை யில்லை. நீ சொல்வது உண்மைதானு என முதலில் ஆராய வேண்டும். நாமிருவரும் நீதியென்பது ஒருவகை நலனுணர்வு அல்லது நாட்டம் என்பதில் ஒத்துப் போகிருேம் ; ஆனல் நீ அதை வலிமை மிக்கவனுக்கு ஏற்றிச் சொல்கிருய். அதனை என்னல் திண்ணமாக ஏற்க முடிய வில்லை. ஆகவே மேலும் ஆராயவேண்டும்.

திராசிமாக்கஸ் : மேற் செல்க.

சாக்ரடீஸ் : ஆம், செல்கிறேன். முதலில் இக்கேள்விக்குப் பதில் சொல். குடிமக்கள் ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தலே நியாயம் என்பதை நீ ஒப்புக் கொள்கிருயல்லவா ?

திராசிமாக்கஸ் : ஒப்புக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : சரி, ஆள்வோர் முற்றிலும் தவறிழைக்காதவர்களா அல்லது சில சமயங்களில் தவறிழைக்கக் கூடியவர்களா ?

திராசிமாக்கஸ் : திண்ணமாகச் சொல்லப் போனல் அவர்கள் தவறிழைக்கக் கூடியவர்களே.

சாக்ரடீஸ் : அப்படியானல் சட்டங்களியற்றுகிற பொழுது சில சமயங்களில் சரியாகவும் சில சமயங்களில் தவருகவும் இயற்றக்கூடும் அல்லவா ?

திராசிமாக்கஸ் : உண்மையே.

சாக்ரடீஸ் : சரியாகச் சட்டங்கள் செய்யுங்கால் தங்கள் நலத் திற்கு உகந்ததாகச் செய்கிருர்கள். தவருகச் செய்யுங்கால் தங்கள் நலத்திற்கு மாருகச் செய்கிருர்கள் என்பதை நீ ஒப்புக் கொள்கிருயா ?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : அவர்கள் இயற்றுகின்ற சட்டங்களுக்கு மக்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்; அதுவே நீதி என்கிறாய் அல்லவா?

திராசிமாக்கஸ் : ஐயமற.

சாக்ரடீஸ் : அங்ஙனமாயின், உன்னுடைய வாதத்தின்படி நீதியென்பது வலிமை மிக்கவர்களின் நலனுக்குப் பணிந்து நடப்பது மட்டுமன்று அதற்கு மாறானதும் கூட அல்லவா?

திராசிமாக்கஸ் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

சாக்ரடீஸ் : நீ சொன்னதைத்தான் நான் திருப்பிச் சொல்லுகிறேன் என்று நினைக்கிறேன். இதனை இன்னும் நன்றாக ஆராய்வோம். ஆள்வோர் ஆள்வதில் தங்கள் நலனைத் தவறாகப் புரிந்துகொள்ளலாம் எனவும், அவர்களுக்குப் பணிந்து நடப்பதுதான் நீதியெனவும் நாம் ஒப்புக் கொள்ளவில்லையா?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆள்வோர் தங்களுக்குத் தெரியாமலே தங்களுக்குத் தீமை பயப்பதான சட்டங்களை நிறைவேற்றுகிறபொழுது நீதியென்பது வலிமைமிக்கவர்களின் நலனுக்குகந்ததன்று என்பதையும் ஒப்புக்கொண்டிருக்க வேண்டும். குடிமகன் ஆள்வோர்தம் ஆணைகளுக்குப் பணிவதுதான் நீதியென்று நீ சொன்னபடி பார்த்தால் எளியர் வலியோரின் நலனுக்கல்லாமல் அவர்களுடைய தீமைக்கே ஆணையிடப்படுகிறார்கள் என்ற முடிவு தவிர்க்க முடியாதல்லவா? அறிவிற் சிறந்தோனே! சொல்வாய்.

பாலிமார்க்கஸ் : வேறொன்றும் இவ்வளவு தெளிவாக இருக்க முடியாது, சாக்ரடீஸ்!

கிளைடோபன் : இடைமறித்து, ஆம், நீங்கள் அவருக்குச் சாட்சியாக இருந்தால்.

பாலிமார்க்கஸ் : சாட்சி தேவையில்லை. ஏனெனில் ஆள்வோர் தங்கள் நலனுக்கு மாறானதைச் செய்ய ஆணையிடலாம் என்பதையும் அவ்வாணைக்குப் பணிவதே குடிமக்களுக்கு நீதியென்பதையும் திராசிமாக்கஸே முன்பு ஒப்புக்கொண்டு விட்டார்.

கிளைடோபன் : ஆம், பாலிமார்க்கஸ்! ஆள்வோரிட்ட ஆணை

கள் வண்ணம் நடப்பதுதான் குடிமக்களுக்கு முறை என்று முன்னர்ச் சொன்னார் திராசிமாக்கஸ்.

சாக்ரடீஸ் : ஆம், கிளேடோபன்! ஆனால் நீதி என்பது வலிமை மிக்கவர்களின் நலன் என்றும் அவர் சொன்னார். இவ்விரண்டு கருத்துக்களையும் ஒப்புக்கொள்கிறபொழுது வலியவன் ஒருவன் தன் குடிகளாயிருக்கும் எளியவரைத் தன் நலனுக்கு மாறானதைச் செய்ய ஆணையிட முடியும் என்பதையும் ஒப்புக்கொண்டார் எனவே நீதியென்பது வலியோர்தம் நலன், தீங்கு இரண்டுமாகும் அல்லவா?

கிளேடோபன் : ஆனால் 'வலியோர் நலன்' என்று சொல்லும்போது அவர்கள் தங்களுக்கு உகந்தது எது என எண்ணினரோ அதையே திராசிமாக்கஸ் கருதினார். இதையே எளியர் செய்ய வேண்டியதாயிற்று. இதையே நீதியெனத் திராசிமாக்கஸ் வலியுறுத்தினார்.

பாலிமார்க்கஸ் : அவை அவருடைய சொற்களல்ல.

சாக்ரடீஸ் : பரவாயில்லை, இப்பொழுது அவன் அப்படிச் சொன்னால் ஏற்றுக் கொள்வோம். திராசிமாக்கஸ், நீ சொல். உண்மையில் தமக்கு உகந்ததாகவோ இல்லாமலோ இருப்பினும் வலியோர் தமக்குகந்ததெனக் கருதியதே நீதி என்கிறாய் அல்லவா?

திராசிமாக்கஸ் : நிச்சயமாக இல்லை. தவறிழைத்த ஒருவன் அவன் தவறிழைக்கும்போது வலியவன் என்று சொல்கிறேன் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

சாக்ரடீஸ் : ஆம், ஆள்வோன் சில சமயங்களில் தவறிழைக்கலாம், தவறக்கூடாதவர்கள் அல்ல என்று நீ ஒப்புக்கொண்டபொழுதே நீ அப்படிச் சொன்னதாகத்தான் நான் கருதினேன்.

திராசிமாக்கஸ் : சாக்ரடீஸ்! நீங்கள் எப்பொழுதும் பிறர்மீது குற்றம் சாட்டுவது போல் வாதம் செய்கிறீர். நோயாளிகளின் விஷயத்தில் தவறு சொல்கிற மருத்துவனை அவன் தவறும்போது மருத்துவன் என்று சொல்லலாமா? ஒருவன் கணக்கிலோ, இலக்கணத்திலோ பிழை செய்துவிட்டானென்றால் அத்தவறிழைக்கையில் அவனைக் கணக்கனென்றோ இலக்கண வல்லுநன் என்றோ அழைக்கலாமா? மருத்துவன் தவறிழைத்தான், கணக்கன் குறைபாடு செய்

தான், இலக்கணப் புலவன் சொற்றவறு செய்தான் என்றெல்லாம் நாம் கூறுவது உண்மை; ஆனால் இது ஒரு பேச்சு முறையே தவிர வேறல்ல.

ஒரு மருத்துவன் அல்லது வேறு ஆற்றல்கொண்ட பிறர் அவர்களது பெயர் குறிக்கும் தொழிலில் முழு ஆற்றல் உள்ளபோது தவறிழைக்க மாட்டார்; அவர்கள் ஆற்றலிழந்தால் தான் தவறு செய்கிறார்கள். அப்போது ஆற்றலற்ற கலைஞர்களாக ஆகிவிடுகிறார்கள். ஒரு கலைஞனோ முனிவரோ, அரசனோ அவர்கள் பெயர் விளங்கும் திறமை உள்ள போது தவறிழைக்க மாட்டார்கள். தவறிழைக்கும்போது அவர்கள் வல்லமையைக் கூறி, தொழிற் பெயரைக் கூறி, தவறு செய்துவிட்டனர் எனப் பேசுவது ஒரு பேச்சு முறை. இதைத்தான் பயன்படுத்தினேன். தீர்மானமாகச் சொல்லப் போனால் - நீங்கள் தான் தீர்மானமாகச் சொல்வதை விரும்புவீர்களே - அரசன் அரசனாக இருப்பதால் தவறிழைக்காதவன், தவறிழைக்காததால் தன்னலனுக்குகந்ததையே செய்யுமாறு ஆணையிடுகிறான்; குடிமகன் அவனுடைய ஆணைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது; ஆதலின் வலியோர்க்கு எது பயனளிக்கிறதோ அதுவே நீதி என்று நான் முன்னர்ச் சொன்னதை மீண்டும் கூறுகிறேன்.

சாக்ரடீஸ் : சரி, திராசிமாக்கஸ், நான் பிறரைக் குறை கூறுபவன் போல் வாதம் செய்வதாக உனக்குத் தோன்றுகிறதா?

திராசிமாக்கஸ் : திண்ணமாக.

சாக்ரடீஸ் : வாதத்தில் உன் கட்சியைத் தகர்க்கக் கருதி வேண்டுமென்றே நான் இக்கேள்விகளைக் கேட்கிறேன், என்று நம்புகிறாயா?

திராசிமாக்கஸ் : 'நம்புகிறேன்' என்று சொல்லக்கூடாது; அது நிச்சயம் என்று எனக்குத் தெரியும். வாதத்தின் வலுவிலே நீங்கள் நிலைத்து நிற்கமுடியாது. நீங்கள் நிச்சயமாக அகப்பட்டுக் கொள்வீர்கள்.

சாக்ரடீஸ் : நான் அப்படிச் செய்யமாட்டேன், அருமை நண்பனே! இனி நமக்குள்ளே தவறெண்ணங்களைத் தடுக்க ஒன்றைக் கேட்க ஆசைப்படுகிறேன். ஓர் அரசன் அல்லது வலியவன் ஒருவன் உகந்ததை நிறைவேற்றுவதே தாழ்ந்தவனுக்கு நியாயம் என்று எந்தப் பொருளில் சொல்கிறாய்?

அவ்வரசன் வழக்கிலிருக்கும் சொற்பொருளின்படியுள்ள அரசனா அல்லது சரியான பொருளின்படி இயங்குகின்றவனா?

திராசிமாக்கஸ் : எக்காலும் சிறப்பாக நிற்கக் கூடிய, சரியான பொருளின்படியே என்றான். எல்லோரையும் ஏமாற்றிக் குறை கூறுபவராகவே உங்கள் விளையாட்டை நடத்துக, பார்க்கலாம். நான் உம்மிடம் அடைக்கலம் புக வரவில்லை. உம்மால் ஒரு பொழுதும் ஏமாற்ற முடியாது, ஒருபொழுதும் அது இல்லை.

சாக்ரடீஸ் : ஏமாற்றுகின்ற அளவுக்கு நான் பைத்தியக்காரன் என்று நீ கருதுகிறாயா, திராசிமாக்கஸ்? அதைவிட ஒரு சிங்கத்தின் பிடரியைப் பிய்த்தெடுக்கத் துணியலாமே.

திராசிமாக்கஸ் : ஏன்! சற்று முன்னர் நீவிர் முயற்சி செய்தீரே, அதில் நீர் தோற்றுவிட்டீர்.

சாக்ரடீஸ் : சரி, இந்தப் பரிமாறல்கள் போதும். இப்பொழுது நான் ஒரு கேள்வி கேட்கப் போகின்றேன். நீ சொல்கிற திட்டமான பொருளில் எடுத்துக்கொண்டால் மருத்துவன் என்பவன் நோயாளிகளைக் குணப்படுத்துபவனா? அல்லது செல்வம் திரட்டுபவனா? நான் இப்பொழுது உண்மையான மருத்துவனைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறேன் என்பதை நினைவிற் கொள்.

திராசிமாக்கஸ் : நோயாளிகளைக் குணப்படுத்துகிறவன்.

சாக்ரடீஸ் : கப்பல் தலைவன் - உண்மையான கப்பல் தலைவன்- மாலுமிகளின் தலைவனா, அல்லது வெறும் மாலுமி தானா?

திராசிமாக்கஸ் : மாலுமிகளின் தலைவன்.

சாக்ரடீஸ் : அவன் கப்பலில் பிரயாணம் செய்கிறான் என்பதை விட்டு விட வேண்டும், அவனை மாலுமி என்றும் அழைக்கக் கூடாது. அவனைக் கப்பல் தலைவன் என்று அழைப்பது அவனுடைய ஆற்றலையும், மாலுமிகளின்மீது ஆணை செலுத்தும் தன்மையையும் பொறுத்ததேயன்றி, அவன் கப்பலில் பிரயாணஞ் செய்வதைப் பொறுத்ததன்று.

திராசிமாக்கஸ் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : எனவே ஒவ்வொரு கலையும் ஒரு பயன் நோக்குடையதுதானே?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ்: அப்பயனுக்காக அக்கலை தேவையானவற்றைத் தேடிக்கொடுக்கத்தானே வேண்டும்?

திராசிமாக்கஸ்: ஆம், அதுவே கலையின் நோக்கம்.

சாக்ரடீஸ்: ஆகவே, ஒரு கலையின் பயன் என்பது அதன் நிறைவு என்பதைத் தவிர வேறில்லையே?

திராசிமாக்கஸ்: உனது வினாவின் பொருளென்ன?

சாக்ரடீஸ்: உடலினை எடுத்துக் காட்டாகக் கொண்டு இதனை எதிர்மறையாக விளக்குவேன். உடல் தன்னிறைவு உடையதா அல்லது அதற்குத் தேவைகள் உண்டா? என நீ என்னைக் கேட்பதாக வைத்துக் கொண்டோமானால் நிச்சயமாக அதற்குத் தேவைகள் உண்டு என விடையிறுப்பேன். ஏனெனில் உடல் நோயுறலாம்; அதனால் அது தவிர்க்கும் வாய்நாடி வாய்ப்பச் செய்யும், அவசியம் நேரும். ஆகவே அதன்பால் பயன்நோக்குக் கொண்டே மருத்துவக்கலையின் துணையை நாடுகிறது. மேலும் நீ ஒப்புக் கொள்கிற மாதிரி இதுவே மருத்துவத்தின் தொடக்கமும், குறிக்கோளும் ஆகும். நான் சொல்வது சரியா?

திராசிமாக்கஸ்: முற்றிலும் சரியே.

சாக்ரடீஸ்: கட்புலனோ, செவிப்புலனோ தத்தம் பணியிற் குறையுடையன வாயிருப்பது போலவும், காணவும் கேட்கவும் பிற கலைகளை நாடுவது போலவும், மருத்துவக்கலை அல்லது வேறெந்தக்கலையேனும் தங்கள் இயல்பில் குற்றமோ குறையோ உடையனவாயிருக்கின்றனவா? அல்லது கலையே தன்னியல்பாக அங்ஙனம் குற்றமோ, குறையோ உடைத்தாயிருக்கும் தன்மை உள்ளதா? மேலும் ஒவ்வொரு கலையும் தன் நலனுக்காகத் தேவைகளைப் பெறத் துணைக் கலையை நாடுவதும், அது வேறொன்றைத் தேடுவதும் இங்ஙனமே முடிவில்லாது இச்செயல் நீண்டுகொண்டே போவதும் உண்டோ? அல்லது கலைகள் தத்தம் நலனைத் தாமே கவனித்துக் கொள்ள வேண்டுமோ? அல்லது தங்கள் துணையோ, பிறகலைகளின் துணையோ தேவையற்று விளங்குகின்றனவா? தம்மிடத்தே குற்றமோ, குறையோ இல்லாததாலும், அவற்றைச் சீர்ப்படுத்தும் அவசியம் இல்லாததாலும் தங்கள் கருப்பொருளின் நலனையே நாட வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு கலையும் உண்மையாக அதாவது பூரணமாகவும் கேடற்றும் விளங்குங்கால் அது தூய்மை

யாகவும், குறையற்றும் இருக்கும். நான் சொன்னவற்றை நீ சொல்கிற சரியான பொருளில் கண்டுகொள்; பிறகு நான் சரியாகச் சொன்னேனு என்று என்னிடம் சொல்லு.

திராசிமாக்கஸ்: ஆம் தெளிவாகச் சொன்னீர்.

சாக்ரடீஸ்: அப்படியானுல், மருத்துவம் தன் நலனைக் கருதாது உடலின் நலனைக் கருதுகின்றதா?

திராசிமாக்கஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: குதிரையோட்டும் கலை, அக்கலையின் நலனைக் கருதுவதில்லை. மாருக, குதிரையின் நலனைப் பேணுகிறது. பிற கலைகளும், தேவைகளில்லாததால், தங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. அவை தங்கள் கலைப்பொருளையே பெரிதும் கருத்திற் கொள்கின்றன. அப்படித்தானே?

திராசிமாக்கஸ்: உண்மையே.

சாக்ரடீஸ்: ஆனுல் திராசிமாக்கஸ், கலைகள் தங்கள் பொருள்களின் மீது தலைமை பூண்டு ஆட்சி செலுத்துபவை என்று திண்ணமாகச் சொல்லலாம், அல்லவா?

இதனைத் திராசிமாக்கஸ் மிகுந்த தயக்கத்துடன் ஏற்றுக் கொண்டான்.

சாக்ரடீஸ்: ஆதலின் எந்தவொரு அறிவியலும், கலையும் வலியோர் அல்லது உயர்ந்தோர் நலனை நாடுவதில்லை, ஆனுல் குறிப்பொருள் அல்லது தாழ்மையானதின் நலனையே நாடுகிறது. இக்கருத்தையும் மறுக்க முயன்ருன், திராசிமாக்கஸ். ஆனுல் இறுதியில் இதனை ஒப்புக்கொண்டான். மேலும் மருத்துவன் தான் கையாளும் வைத்தியமுறையின் வாயிலாகத் தன் நலனை நாடுவதில்லை, தன் நோயாளியின் நலனையே நாடுகின்ருன். ஏனெனில் உண்மையான மருத்துவன் மனித உடலைக் குடிமகனுகக் கொண்ட காவலனுக விளங்குகின்ருன், வெறும் செல்வம் திரட்டுபவனல்லன். இதனை நீ ஒப்புக் கொண்டிருக்கிருய் அல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அதேபோல் கப்பல் தலைவன், அச்சொல்லின் முறையான பொருளில், மாலுமிகளை ஆள்வோனேயன்றி, வெறும் மாலுமியல்ல, அல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம் அது ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

சாக்ரடீஸ் : அத்தகைய கப்பல் தலைவனும் ஆள்வோனும் தத்தம் கீழிருப்போரின் நலனை நாடுவார்களேயன்றித் தங்களுடைய சொந்த நன்மையை நாடமாட்டார்களல்லவா ?

திராசிமாக்கஸ் : [அவன் சிறிது தயங்கி,] ஆம்.

சாக்ரடீஸ் : திராசிமாக்கஸ் ! எந்த ஆட்சியிலும் ஆள்வோன் தன்னுடைய குடிகளின் நலனை அல்லது தன் ஆட்சிக் கலையின் நலனை நாடுவானேயன்றித் தன் சொந்த நலனை நாடமாட்டான் ; தான் சொல்லுவது, செய்வது அனைத்திலும் இதனையே அவன் எதிர்நோக்கிச் செயலாற்றுகின்றான்.

வாதத்தில் இவ்விடத்திற்கு வந்தவுடன் ஏனையோர் அனைவரும் நீதியின் வரைவிலக்கணம் தகர்க்கப்பட்டு விட்டதைக் காணவும் சாக்ரடீசுக்கு விடையிறுப்பதற்குப் பதிலாகத் திராசிமாக்கஸ் "சாக்ரடீஸ் ! உமக்கு, தாதி இருக்கிறாளா?" என்று வினவினான்.

சாக்ரடீஸ் : நீ விடையிறுக்க வேண்டிய நேரத்தில் ஏன் இத்தகைய கேள்வியைக் கேட்கிறாய் ?

திராசிமாக்கஸ் : ஏன் என்கிறீரா ? உன் மூக்கினின்று வழிந்தோடும் துர்நீரைக் கூட அவள் துடைக்கமாட்டாள் போலிருக்கிறதே. இடையனை ஆட்டினின்றும் வேறுபடுத்தி அறியக்கூட அவள் உமக்குக் கற்றுத்தரவில்லையே.

சாக்ரடீஸ் : நீ எதனால் அவ்வாறு கூறுகிறாய் ?

திராசிமாக்கஸ் : ஏனெனில், நீங்கள், இடையன் தன் ஆடுகளையோ மாடுகளையோ தன் நலத்திற்கல்லாமல் அவற்றின் நலம் கருதியே கொழுக்க வைக்கிறான் அல்லது நன்கு வளர்க்கிறான் என்று எண்ணுகிறீர்கள். மேலும் நாடாள்வோர் உண்மையான காவலாளர்களாக இருந்தால், தம் குடிகளை ஆடுகளெனக் கருதார் என்றும், இராப்பகலாகத் தம் நலத்தையே கருதி நினைத்துக் கொண்டிருப்பதில்லை என்றும் நினைக்கிறீர். ஆனால் அவ்வாறு இல்லை. ஆதலின் நீதி, அநீதி என்பவை ஆளப்படுவோர் நலத்தையன்றி மற்றவரின் நலத்தையே உண்மையில் குறிக்கின்றன என்பதைக் கூட அறியாதவகையில் உம்முடைய கருத்துக்கள் முற்றிலும் தவறாக உள்ளன ; அதாவது ஆள்பவன், வலியவன் ஆகியோருடைய நலனையும், குடிமகன் பணியாளன் ஆகியோருடைய நஷ்டத்தையுமே நீதி யென்பது குறிக்கும்.

அநீதி அதற்கு எதிர்மறையானது. ஏனெனில் நீதியற்றோன் உண்மையில் எளியவராகவும் நீதியாளராகவும் இருக்கிறவர்களை ஆளுகிருன். அவனே வலிமை மிக்கவன், அவனுடைய குடிமக்கள் தங்கள் நலனுக்கு அது முற்றிலும் ஒவ்வாதிருப்பினும் அதைப் பொருட்படுத்தாது, அவனுடைய நலனுக்காக அவன் இன்புற்றிருக்க, உழைக்கிருர்கள். அறிவறைபோகிய சாக்ரடீஸ்! மேலும் கவனிப்பீர்! நீதியற்ருேர் உடன் ஒப்பிடுகின்றபொழுது முறையானேரே எதிலும் இழந்தவராய் இருக்கின்றனர். முதற்கண் தனியார் ஒப்பந்தங்களில், முறையற்ருேர் முறையானேருடன் கூட்டாளிகளா யிருப்பின், ஒப்பந்தம் முறிக்கப்படும் பொழுது, கூட்டு சிதறும்பொழுது, முறையற்ருேரே அதிக இலாபம் பெறுகிருர்கள் என்பதை நீ காணலாம். இரண்டாவதாக அவர்கள் அரசாங்கத்துடன் கொண்ட தொடர்புகளில், வருமான வரி செலுத்த வேண்டிய நேரத்தில் இருவருக்கும் ஒரே அளவு வருமானமாயிருப்பினும் நீதி நெறியாளர் மிகுதியாகச் செலுத்துவர்; நீதியற்ருேர் குறைவாகச் செலுத்துவர்; மேலும் ஏதேனும் அரசினரிடமிருந்து அவர்கள் பெறவேண்டுமானுல், முன்னவர் எதுவுமே பெறமாட்டார், பின்னவர் மிகுதியாகப் பெறுவர். நீதியினின்று வழுவாத ஒருவன் அலுவலகத்தில் பொறுப்பு ஏற்கின்ருன். அவன் தனது சொந்த அலுவல்களைப் புறக்கணிக்கின்ருன். வேறு சில இழப்புக்களும் ஏற்படலாம். பொதுமக்களிடமிருந்து ஏதும் பெறுவதில்லை. நண்பர்களாலும், அறிந்தோர்களாலும் அவரவர் விரும்பியவாறு சட்டங்களுக்குப் புறம்பாக நடக்க மறுப்பதால் வெறுப்பிற்கு உள்ளாகின்ருன். அநீதியாக நடக்கின்ற ஒருவனது வாழ்வில் இவையனைத்தும் அப்படியே மாறுகின்றன. பெரிய அளவில் அநீதி நிகழ்வதையே நான் கருதுகிறேன். இவ்வாறு நிகழும்போது அநீதியினுல் ஏற்படும் நலன்கள் நன்ருக வெளிப்படுகின்றன. மனிதர்களுள் குற்றவாளி மிகுந்த மகிழ்ச்சியோடு விளங்குகின்ற நிலை அநீதியின் உயர் எல்லையாகும். இந்நிலையைக் கருதினுல் எனது கருத்து நன்ருகப் புலப்படும். அநீதியை இழைக்க மறுப்போர் அல்லது துன்புறுவோர் பெரிதும் துயரங்களுக்கு உள்ளாவர்; அதாவது கொடுங்கோன்மை, மற்றையோர் உடைமைகளை வலிந்து வஞ்சித்துப் பறித்துக் கொள்ளும். சிறிது சிறிதாக

அன்று, ஒரே முறையில் முழுமையும், புனிதமானதும், புனிதம் அல்லாததும், தனியுடைமையும், பொதுவுடைமையும் ஆகிய யாவும் ஒருங்கே வஞ்சிக்கப்பெறும். தனிமனிதன் இத்தகைய கொடுமைகளில் ஏதேனும் ஒன்றை விளைத்ததாக மற்றையோர் கண்டுவிட்டால் தண்டனைக்குள்ளாவான்; அவமானமுமடைவான். இங்ஙனம் தனித்த அநீதி விளைப்போர் ஆலயக் களவு செய்பவர் எனவும் மக்களைக் களவு செய்பவர் எனவும் திருடர் எனவும் அழைக்கப்பெறுவர். ஆனால் குடிமக்களின் பொருளை வலிந்து பற்றுவதோடல்லாது அவர்களை அடிமையாக்குபவன், இங்ஙனம் தூற்றப்பெறாது, குடிமக்களாலும் இவனது எல்லையற்ற கொடுமையைப்பற்றிக் கேட்போராலும், இன்புற்றவன் என்றும் பேறு பெற்றவன் என்றும் கருதப்படுகிறான். மக்கள் அநீதியைக் கடிந்து கூறுதல் தாம் அதனால் பாதிக்கப்படுவோமோ என்ற அச்சத்தாலேயே ஆகும்; அவர்கள் அநீதி இழைக்கத் தயங்குதலால் அன்று. ஆகவே சாக்ரடீஸ்; நான் காட்டியபடி போதிய அளவில் இருக்குங்கால் அநீதியே நீதியைவிட மிகுதியான வலிமையும், உரிமையும், தலைமையும் பெற்று விளங்குகின்றது. மேலும், நான் முதலிற்கூறியபடி, நீதியென்பது வலியோரின் நாட்டம் அல்லது நலன், அநீதியென்பது ஒரு மனிதனின் சொந்த இலாபமும் நலனுமாகும். (மடைதிறந்த வெள்ளமெனப் பேசி அனைவரின் செவிகளையும் நிரப்பிய திராசிமாக்கஸ் வெளியே சென்றுவிட வேண்டும் என்று எண்ணினான் போலும். ஆனால் குழுவினர் அவனை விடுவதாக இல்லை. அவர்கள், அவன் ஆங்கு இருக்க வேண்டும் என்றும் தன் கட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர். தங்களை விட்டுச் செல்லவேண்டாம் என்று சாக்ரடீசும் அவனைப் பணிவுடன் வேண்டினர்).

சாக்ரடீஸ் : திராசிமாக்கஸ், சிறப்புற்றோனே! எவ்வளவு கருத்துப் பொதிந்தவை உன் சொற்கள். அவற்றின் உண்மையை எங்கட்கு எடுத்துக் காட்டுவதற்கும் அல்லது அவை பொய்யென நீ அறிவதற்கும் முன்னரே நீ ஓடக் கருதுகிறாய். மனிதனின் வாழ்க்கைப் போக்கை உறுதிப்படுத்துவது எளிய செயலென உனக்குத் தென்படுகிறதா? நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையை எப்படி மிகுந்த நன்மை பயக்குமாறு கழிக்க வேண்டும் என்று உறுதிப்படுத்துவது ஒரு சிறிய விஷயமா?

திராசிமாக்கஸ் : இந்த விவாதம் மிக முக்கியமானது என்பதில் உமது கருத்தினின்று நான் வேறுபடுகின்றேனு ?

சாக்ரடீஸ் : திராசிமாக்கஸ்! எங்களைப் பற்றிய சிந்தனையோ கவலையோ உனக்கு இல்லைபோலும்—உனக்குத் தெரிந்ததாக எங்களுக்குச் சொல்வதை நாங்கள் சரியாகப் புரிந்து கொள்ளாததால் வாழ்க்கையைச் சிறந்த முறையில் நடத்துகிருேமா அல்லது கீழான முறையில் நடத்துகிருேமா என்பதில் நீ அக்கறை காட்டவில்லை. நண்பா ! தயவுசெய்து உன்னுடைய அறிவை உனக்குமட்டுமாக வைத்துக் கொள்ளாதே. நாங்கள் மிகப் பெரிய குழுவினர். நீ எங்களுக்கு எந்த நன்மை செய்தாலும் அதற்குப் பேரளவில் ஆன வெகுமானம் கிட்டும். என்னைப் பொறுத்த வரையில் நான் வெளிப்படையாகச் சொல்கிறேன் ; நான் திருப்தியடையவில்லை. அநீதி கட்டுப்படுத்தப்படாது ஆட்டிப்படைக்க முழு அதிகாரம் பெற்று இருந்தாலும் அது நீதியை விட ஆதாயம் தரக்கூடியது என்பதை நான் நம்பவில்லை. ஏனெனில் சூது அல்லது வலிமையைக் கொண்டு அநீதி இழைக்கும் அநீதியாளன் ஒருவன் இருப்பதாக ஒப்புக்கொண்டோமாஞலும் அநீதியே மேலான பயனை, நன்மையை அளிக்குமென்று என்ஞல் ஒப்புக் கொள்ள முடியாது. இக்கருத்தில் என்னைப் போலவே உணர்கின்ற பிறரும் இருப்பர் என்று எண்ணுகிறேன். ஒருகால் நாங்கள் தவருன கருத்தைக் கொண்டிருக்கலாம். அப்படி இருக்குமாஞல் நீ உனது விவேகத்திஞல் நாங்கள் அநீதியை விடுத்து நீதியை விரும்புவது தவறு என எங்களை நம்பச் செய்யவேண்டும்.

திராசிமாக்கஸ் : நான் சற்று முன்னர்ச் சொன்னதில் உங்களுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை என்ருல், இனி உங்களை எப்படி நம்பவைப்பது? இதற்குமேல் நான் உங்களுக்கு என்ன செய்யமுடியும் ? நிரூபணத்தை உங்கள் உள்ளத்தில் அப்படியே நான் புகுத்த வேண்டுமென்று விரும்புகிறீர்களா?

சாக்ரடீஸ் : ஐயோ அப்படி வேண்டாம், நீ சொல்வதை முன்பின் முரண்பாடு இல்லாமல் சரியாகச் சொல்ல வேண்டுமென்றுதான் கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை நீ கூறியதை மாற்றிக்கொள்ள நினைத்தால் வெளிப்படையாக மாற்று ; இதில் ஏமாற்று வேண்டாம். நீ முன்னர்ச்

சொன்னதை நினைவுகூர்வாயானால் உண்மையான மருத்துவனுக்குச் சரியான வரைவிலக்கணம் தந்து தொடங்கிய நீ, பின்னர் இடையனைப் பற்றிப் பேசுங்கால் அந்த அளவுக்குச் சரியான வரையறை காட்டவில்லை. இடையன், ஆடுகளை அவற்றின் நலத்திற்கல்லாமல் உணவின் இன்பத்திற்காக விருந்துண்போரைப் போல் உணர்கிறான், என்றோ அல்லது சந்தையில் அவன் வணிகனைப்போல் அவற்றை விலைகூற வளர்க்கிறான் ! என்றோ எண்ணினாய்.

ஆனால் இடையனின் கலை அவனுடைய ஆடுகளின் நலத்தைப் பற்றியதே என்பது உறுதி. கலையின் நிறைவு, பூரணத்துவம் என்பது அக்கலைக்குத் தேவையானவை அனைத்தும் இனிதே தரப்பட்டுவிடுதல் என்பது முன்னரே உறுதிப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆதலின் இடையன் ஆடுகளுக்கு உகந்த பொருள்களைத் தந்தால் போதும். ஆள்வோனைப் பற்றிச் சற்று முன்னர் நான் சொன்ன போதும், இதைத்தான் குறித்தேன். ஆள்வோனின் கலை அதாவது அவன் ஆளுவானாகக் கருதப்படுகிறபொழுது அவனது தனிவாழ்விலாகட்டும் அரச வாழ்விலாகட்டும், தனது குடிமக்களின் நலத்தையே நாடுவான் எனக் கருத்திற் கொண்டேன்; ஆனால் நீ உண்மையான நாடாள்வோர் அதிகாரத்திலிருக்கவே விரும்புகின்றனர் என எண்ணுவது போல் தோன்றுகிறது.

திராசிமாக்கஸ் : எண்ணுகிறேன் என்பது மட்டுமா? இல்லை. இதுவே என் உறுதி,

சாக்ரடீஸ் : அப்படியானால், மக்கள் சாதாரண அலுவல்களை ஊதியத்தோடு ஏற்கின்றனரேயல்லாமல், மனவிருப்பத்தின் காரணமாகவே ஏற்பது இல்லை. ஆனால் இங்குப் பிறிதொரு காரணம் இருக்கலாம். பிறர் பொருட்டுத் தாங்கள் பணி புரிவதால், தம் நலத்துக்காக அன்று, என்று பிறர் இணங்கினாலன்றி, ஒத்துக்கொள்வதில்லையே, ஏன்? பல்வேறு கலைகள் தனித்தனியே தமக்கெனப் பண்புடையனவாயிருப்பதால் அவை தம்முள் வேறுபட்டன அல்லவா? என் அருமைப் புகழ்சால் நண்பா! நாங்கள் சற்று முன்னேறுமாறு நீ நினைப்பதை அவசியம் கூறு.

திராசிமாக்கஸ் : ஆம், அதுவே அந்த வேறுபாடு.

சாக்ரடீஸ் : அப்படியானால் ஒவ்வொரு கலையும் ஒரு பொது

வான நன்மையை மட்டும் பயக்காமல், தனித்ததொரு நன்மையைத் தருகின்றதா? எடுத்துக்காட்டாக, மருந்து நமக்கு உடல் நலத்தைத் தருகிறது, கடற்பயணக்கலை கடலின்கண் அபாயமின்மையைத் தருகிறது, இன்ன பிற என்று சொல்லலாமா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: மேலும், ஊதியம் கொடுக்கும் கலை பணம் கொடுப்பதையே தனது சிறப்பான முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறது. ஆனால் நாம் இதை மற்றக் கலைகளோடு சேர்த்துக் குழப்பிக் கொள்ளலாகாது. கடற்பயணத்தால் மாலுமியின் உடல்நலம் சிறப்புறலாம் என்பதற்காக மாலுமியின் கலையை மருத்துவக் கலையோடு சேர்த்து மயங்க மாட்டோம். இம்மொழியினைச் சரியாகக் கையாளுவது பற்றிய உன் கருத்துவழிப் பார்த்தால் கடற்பயணக் கலை தான் மருத்துவக் கலை என்று சொல்ல நீ விரும்பமாட்டாய் என்று நினைக்கிறேன்; விரும்புவாயா?

திராசிமாக்கஸ்: நிச்சயமாக இல்லை.

சாக்கரடீஸ்: ஊதியம் பெறும்பொழுது உடல் நலமுடன் ஒருவன் இருக்கிறான் என்பதற்காக ஊதியம் அளிக்கும் கலை மருத்துவம்தான் என்று சொல்லமாட்டாயல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம், சொல்லமாட்டேன்.

சாக்ரடீஸ்: நோயைக் குணப்படுத்துவதில் ஈடுபடும்போது ஒருவன் பணம் பெறுவதனால் மருத்துவமே ஊதியம் பெறும் கலை என்றும் சொல்லமாட்டாயல்லவா?

திராசிமாக்கஸ்: உறுதியாக இல்லை.

சாக்ரடீஸ்: ஆகவே, ஒவ்வொரு கலையின் நன்மையும் அதனதனுக்குள்ளே அடங்கியிருப்பதாக நாம் ஒத்துக்கொண்டோம் அல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: எல்லாக் கலைஞர்களுக்கும் பொதுவான நலன் ஒன்று உண்டென்றால், அது அவர்கள் அனைவர்க்கும் ஒருங்கே பயன்படுவது ஆதல் வேண்டும் அல்லவா?

திராசிமாக்கஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: கலைஞன் ஊதியம் பெறுவதால் நன்மையடைகிற பொழுது அது, தான் தொழிலெனக் கொண்ட கலையை

மாருன பொருளீட்டுக் கலையோடு கூட்டிப் பயன்படுத்துவ தால் ஏற்படுவதுதானே?

அவன் சிறிது தயக்கத்துடன் இதனை ஒப்புக்கொண் டான்.

சாக்ரடீஸ்: அப்படியானுல் பலகலைஞர்களும் தத்தமது கலை களின் மூலம் ஊதியம் பெறவில்லை, ஆனுல் உண்மை என்ன வென்ருல் மருத்துவக்கலை உடல்நலத்தைப் பயக்கிற பொழுதும், கட்டிடக்கலை கட்டிடத்தை உருவாக்கித் தருகிற பொழுதும், தனியொன்ருகிய ஊதியக்கலை அவற்றை ஒட்டியே செல்கிறது. பல்வேறுபட்ட கலைஞர்களும் தத்தம் தொழிலைச் செவ்வனே செய்துவரலாம், தம் ஆட்சிக்குட் பட்டவற்றுக்கு நன்மை பயக்கலாம், ஆனுல் கலைஞன் ஊதியம் அளிக்கப்படாவிடில், தன்கலையினின்றும் நன்மை ஏதும் பெறமுடியுமா?

திராசிமாக்கஸ்: முடியாது என்று எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ்: ஆகவே அவன் வெறுமனே பணியாற்றுகிற பொழுது எந்த நன்மையும் பெறுவதில்லை என்னலாமா?

திராசிமாக்கஸ்: நிச்சயமாக ஒரு நன்மையைப் பெறுகிருன்.

சாக்ரடீஸ்: அப்படியானுல் திராசிமாக்கஸ், கலைகளோ அரசு களோ தங்கள் நலத்திற்கென எதையும் செய்வதில்லை என் பதைப் பற்றி ஐயமில்லை, ஆனுல் நாம் முன்னர் சொல்லிக் கொண்டிருந்தபடி, அவை வலியவர்களல்லாது எளியவர் களான குடிகளை ஆண்டு, அவர்களது நலனுக்கு ஆவன செய்கின்றன. அவ்வெளியவர்களின் நலனுக்காக அல்லாமல் வலியோர் நலத்திற்கு அப்படிச் செய்யவில்லை. அன்புமிக்க திராசிமாக்கஸ்! யாரும் ஆட்சி செலுத்த முன்வராததற்குக் காரணம் இதுவே. ஏனெனில் தக்க ஊதியம் பெருமல், தனக்குச் சம்பந்தமில்லாத தீமைகளைத் திருத்தும் பணியை யாரும் ஏற்றுக் கொள்ள விரும்புவதில்லை. மேலும், தன் னுடைய பணியைச் செய்வதிலும் அதற்காக வேருெருவ னுக்கு ஆணையிடுவதிலும் உண்மையான கலைஞன் தன் னுடைய நலனை நாடுவதில்லை, மாருகக் குடிமக்களின் நன்மையையே நாடுகிருன். ஆதலின் ஆள்வோருக்கு ஆட்சி யில் விருப்பம் இருக்க வேண்டும் என்பதற்காகச் செல்வம், மதிப்பு, ஆள மறுப்பதற்குத் தண்டனை என்ற மூன்றுவகை ஊதியங்களுள் ஒன்றை அவர்களுக்கு அளிக்க வேண்டும்.

கிளாக்கன் : நீவிர் என்ன சொல்கிறீர், சாக்ரடீஸ்? முதலிரண்டு ஊதியங்களும் அறிவுக்குப் பொருத்தமானவையாக இருக்கின்றன. ஆனால், நீங்கள் சொல்கிற தண்டனை என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லையே. தண்டனை என்பது எப்படி ஊதியமாகக் கூடும்?

சாக்ரடீஸ் : மேன்மக்களுக்கு ஆள்வதில் சிறப்பாக ஊக்கந் தரும் ஊதிய மென்பதின் தன்மையை உன்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை என்கிறாயா? உண்மையில் சுயநலமும் பேராசையும் கீழ்த்தரமானவையாகக் கருதப்படுகின்றன என்பதை நீ அறிவாய் அல்லவா?

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : அந்தக் காரணத்திற்காகவே பணமும் மதிப்பும் நல்லோர்களைக் கவரவில்லை என்றேன். நல்லவர்கள் ஆள்வதற்கு ஊதியம் வேண்டுமென்று வெளிப்படையாகக் கேட்டு, அதனால் கூலிக்காரர் என்ற கெட்ட பெயர் அடைய விரும்பவில்லை. மேலும் பொதுமக்களது செல்வத்தினைத் தங்கள் நலத்திற்கு இரகசியமாகப் பயன்படுத்தித் திருடர் என்ற பெயரை அடையவும் விரும்புவதில்லை. சுய முன்னேற்ற ஆசை இல்லாததால் மதிப்பைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆதலின் அவர்களைக் கட்டாயப்படுத்தித் தண்டனை என்னும் அச்சத்தின் வழியாக அவர்களைப் பணியாற்றுமாறு ஊக்குவிக்க வேண்டும். கட்டாயப்படுத்தப்படக் காத்திருப்பதற்குப் பதிலாகப் பொறுப்பை ஏற்கத்தாமே முன்வருவது பெருமைக் குறைவாகக் கருதப்படுவதற்கு இதுவே காரணம் என்று கருதுகிறேன். தண்டனையின் மிகக் கொடிய பகுதி என்னவென்றால் ஆள மறுப்பவன் தன்னைவிட மோசமான ஒருவனால் ஆளப்பட நேரலாம் என்பதே. இந்த அச்சமே நல்லவர்களை வேறு வழியின்றிப் பொறுப்பேற்கத் தூண்டுகிறது என்று எண்ணுகிறேன். அவர்கள் தமக்கு நன்மையோ மகிழ்ச்சியோ பயக்குமென எண்ணியல்ல, ஆனால் அவசியத்திற்காக ஆட்சிப்பொறுப்பை உரிமை செய்வதற்குத் தம்மைவிட மேம்பட்டவர்களோ அல்லது தமக்கு நிகரானவர்களோ இல்லை என்பதற்காகவே பொறுப்பேற்க அவர்கள் தூண்டப்படுகின்றனர். ஒருநகரம் முழுவதும் நல்லவர்களாகவே இருப்பின், ஆட்சிப்பொறுப்பைத் தட்டிக் கழிப்பதென்பது, இப்பொழுது ஆட்சிப் பீடத்தைப் பெறுவது போல,

விவாதத்துக்குரியதாகவே இருக்கும் என்று எண்ண இடம் இருக்கிறது. அப்பொழுதுதான் உண்மையான ஆட்சியாளன் இயற்கையாகவே தன்னுடைய நலத்தைக் கருதக் கூடியவனல்லன், தன்குடிகளின் நலத்தையே கருதக்கூடியவன்'என்று தெளிவாக நிரூபணமேற்படும். இதை அறிந்தவர் ஒவ்வொருவரும் மற்றவர்கட்குத் தாம் நன்மையளிக்கும் பொறுப்பேற்பதைக் காட்டிலும், மற்றவரிடமிருந்து நாம் நன்மை பெறுவதையே தேர்ந்தெடுப்பர். எனவே நீதியென்பது வலியோர் நலனெனும் திராசிமாக்கசின் கருத்தை நான் அறவே ஏற்றுக் கொள்ள முடியாது. கடைசியாகக் கூறிய விஷயத்தை இப்பொழுது மேலும் விவாதிக்க வேண்டாம். ஆனால் அநீதியாளனின் வாழ்க்கை நீதியாளனின் வாழ்க்கையைக் காட்டிலும் பயன்தரத்தக்கது என்ற திராசிமாக்கசின் புதிய கருத்து மிகவும் முக்கியமானதென்று கருதுகிறேன். நம்மில் யார் பேசியது உண்மை? கிளாக்கன்! நீ எப்படிப்பட்ட வாழ்க்கையை விரும்புகிறாய்?

கிளாக்கன்: என்னைப் பொறுத்த வரையில் ஒரு நீதியாளனுடைய வாழ்க்கைதான் பயனுடையது.

சாக்ரடீஸ்: அநீதியாளனடையும் பலன்களையெல்லாம் திராசிமாக்கசு தொகுத்துக்கூறும்பொழுது நீ கேட்டாயா?

கிளாக்கன்: ஆம், செவியுற்றேன்; ஆனால் அவன் என்னை நம்பும்படிச் செய்யவில்லை.

சாக்ரடீஸ்: அப்படியானால் அவன் உண்மைக்குப் புறம்பானதாகச் சொல்கிறான் என்று அவனை நம்பவைக்க நம்மால் இயலுமாயின் ஒருவழி காண்போமா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அவன் ஒருமுறை பேசிமுடிக்க, பின்னர் நாம் நீதியாளனுடைய பயன்களனைத்தையும் விரித்துப் பேச, அவன் விடையிறுக்க நாம் பேச என இங்ஙனம் நிகழுங்கால் இருசாரார் சொல்கின்ற நலன்களை - பலன்களை எண்ணவும் மதிப்பிடவும் வேண்டும். இறுதியில் முடிவுசொல்ல நடுநிலையாளர் வேண்டும். ஆனால் நாம் சற்று முன்னர் செய்தபடி ஒவ்வொருவரும் மற்றவரது வாதத்தில் காணும் உண்மைகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய விவாதத்தைத் தொடர்ந்து நடத்தினோமானால் நாமே வழக்குரைஞர், நடு

நிலையாளர் என இருவர் பணிகளையும் இணைத்துக்கொண்டு முன்செல்வோம்.

கிளாக்கன் : மிக நன்று.

சாக்ரடீஸ் : அப்படியானால் நீ எந்த முறையை விரும்புகிறாய் என்று நான் கொள்வது ?

கிளாக்கன் : நீங்கள் சொல்வதைத்தான்.

சாக்ரடீஸ் : நன்று, திராசிமாக்கஸ் நீ ஆரம்பத்திலிருந்து தொடங்கி எனக்கு விடையிறுப்பதாக வைத்துக்கொள்வோம். முழு அநீதி, நிறைநீதியைக் காட்டிலும் மிக்க பயன்தரும் என நீ சொல்கிறாயல்லவா ?

திராசிமாக்கஸ் : ஆம், அதுதான் என்கருத்து. என் காரணங்களையும் உங்களிடம் சொல்லிவிட்டேன்.

சாக்ரடீஸ் : சரி, அவற்றைப்பற்றி உன் கருத்து என்ன ? ஒன்றை நற்பண்பெனவும் மற்றொன்றை, தீயபண்பு எனவும் அழைப்பாயா ?

திராசிமாக்கஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : நீதியை நற்பண்பெனவும், அநீதியைத் தீயபண்பெனவும் அழைப்பாய் எனக் கருதுகிறேன்.

திராசிமாக்கஸ் : ஆ, எவ்வளவு அழகான கருத்து ! அநீதி பயன் தருவது, நீதி அப்படிப்பட்டதல்ல என்று நான் வலியுறுத்தியதைக் கண்ட பின்னரும் இது உண்மைபோல் அமைகிறதே.

சாக்ரடீஸ் : பின் வேறு எதைச் சொல்வாய் ?

திராசிமாக்கஸ் : அதற்கு எதிர்மறையைச் சொல்வேன்.

சாக்ரடீஸ் : அப்படியானால் நீதியைத் தீயபண்பு எனச் சொல்வாயா ?

திராசிமாக்கஸ் : இல்லை, மேதக்க எளிமை என்று சொல்வேன்.

சாக்ரடீஸ் : அப்படியானால், அநீதியைக் கொடுமையான வெறுப்புத் துவேஷம் என்று சொல்லுவாயா ?

திராசிமாக்கஸ் : இல்லை, வினைசெயல் உபாயம், முன் ஜாக்கிரதை (சமயோசித அறிவு) என்று சொல்வேன்.

சாக்ரடீஸ் : எனவே அநீதியாளர் அறிவுமிக்கவர்களாகவும் நல்லவர்களாகவும் உனக்குத் தோற்றுகின்றனரா ?

திராசிமாக்கஸ் : ஆம், முற்றிலும் அநீதியாளராக இருக்க எவர்களுக்கு இயலுகிறதோ, நாடுகளையும் அரசுகளையும்

தம்மடிக் கீழ்க் கொணரும் திறமை எவருக்கு உண்டோ அவர்களைப் பொறுத்தேனும் அப்படிச் சொல்லலாம். ஆனால், நான் பணப்பையை அறுத்துச் செல்லும் திருடர்களைப் பற்றிப் பேசுவதாக எண்ணுகிறீர் போலும். இந்தத் தொழில்கூட நான் சற்றுமுன் கூறியவற்றோடு ஒப்பிடக் கூடாததானாலும் கண்டுபிடிக்கப்படாத வரையில் பயன்களைப் பயக்கிறது ; இலாபகரமானதுதான்.

சாக்ரடீஸ் : நான் உன் கருத்தைத் தவறாகப் புரிந்து கொண்டேன் என்று கருதவில்லை, திராசிமாக்கஸ். ஆனால், அநீதியை விவேகத்துடனும் நற்பண்புடனும் சேர்த்து, நீதியை அவற்றுக்கு மாறுபட்டதோடு சேர்த்து நீ பேசுவதைக் கேட்க என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

திராசிமாக்கஸ் : ஆம், அவற்றை அப்படித்தான் பாகுபாடு செய்கிறேன்.

சாக்ரடீஸ் : இப்பொழுது பதிலளித்து அசைக்கவொண்ணாத உறுதியான நிலையில் நீ உன்னை நிலை நிறுத்திக்கொண்டாய். நன்மை பயப்பதென்று நீ கூறும் அநீதியைப் பிறரைப் போல நீயும் தீப்பண்பு, கீழ்த்தரமானது என்று ஒப்புக் கொண்டிருந்தால், இதுகாறும் ஒப்புக்கொள்ளப்பட்ட கொள்கையின் வழி உனக்கு ஒரு பதில் அளித்திருக்கலாம். ஆனால், அநீதியைப் பெருமைக்குகந்தது என்றும் வலிமை பெற்றது என்றும் கூறுகிறாய் ; அநீதியை அறிவுடைமையென்றும் உயர்நற்பண்பென்றும் நீ கூறத்தயங்காததைக் கண்டபின், எங்களால் நீதியாளருக்குச் சொல்லப்பட்ட நற்குணங்களையெல்லாம் அநீதியாளர்க்கே உரித்தென்பாய் எனத் தோன்றுகிறது.

திராசிமாக்கஸ் : நீர் மிகவும் தவறின்றியே ஊகித்திருக்கிறீர்.

சாக்ரடீஸ் : அப்படியானால், நீ உன்னுடைய உண்மையான மனத்தை வெளியிடுகிறாய் என்று கருத இடமிருக்கும் வரையில் நான் விவாதத்தினின்றும் பின்வாங்கக் கூடாது. ஏனெனில், நீ இப்பொழுது உண்மையில் உன் கருத்தைக் கூறுகிறாய், விளையாட்டுப் போக்கில் கொண்டு வேடிக்கை செய்து இன்புறவில்லை, தீவிரமாகவே இருக்கிறாய் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

திராசிமாக்கஸ் : நான் உண்மையில் ஊக்கங்கொண்டு இருக்கிறேன் அல்லது இல்லாமலிருக்கிறேன். அதைப்பற்றி

உமக்கென்ன? வாதத்தை மறுக்க வேண்டியதே உம்முடைய வேலை.

சாக்ரடீஸ்: மிகவும் உண்மை; ஆம், அதைத்தான் நான் செய்ய வேண்டும். ஆனால் இன்னும் ஒரே ஒரு கேள்விக்கு மட்டும் தயவுசெய்து விடை சொல்வாயா? ஒரு நீதியாளன் மற்றொரு நீதியாளனிடமிருந்து சுயநலமடைய முயற்சிக்கிறானா?

திராசிமாக்கஸ்: இல்லை, அறவே மாறானதே காணலாம். அப்படி முயற்சி செய்தால் அவன் இப்பொழுது இருக்கிறாற் போல் எளிய, வேடிக்கையான ஏளனஞ் செய்யக்கூடிய பிராணியாக இருக்க முடியாது.

சாக்ரடீஸ்: அவன் நெறி பிறழ்ந்து செல்ல முயற்சிப்பானா?

திராசிமாக்கஸ்: முயற்சி செய்யமாட்டான்.

சாக்ரடீஸ்: அநீதியாளரைவிடச் சில பயன்கள் பெற வேண்டும் என்ற முயற்சியைப் பற்றி அவன் என்ன நினைப்பான்? அதை நீதியானது என்று கருதுவானா, அநீதியானது என்று கருதுவானா.

திராசிமாக்கஸ்: அதை நீதியானது என்று கருதி, அந்த நன்மையை அடைய முயலுவான். ஆனால் அவனால் முடியாது.

சாக்ரடீஸ்: அவனால் இயலுமா, இயலாதா என்பதல்ல முக்கியம். என்னுடைய கேள்வி என்னவென்றால் மற்றொரு நீதியாளனை விட அதிக நன்மைகளை அடைய மறுக்கின்ற நீதியாளன், அநீதியாளனைவிடப் பயன்களை அதிகமாகப் பெற வேண்டும் என்று விரும்பவும், உரிமை கொண்டாடவும் முற்படுவானா?

திராசிமாக்கஸ்: ஆம், அப்படிச் செய்வான்.

சாக்ரடீஸ்: சரி, அநீதியாளனைப் பற்றி என்ன? நீதியைவிட உயர்ந்ததைச் செய்வதாகவும் நீதியாளனைவிட அதிக நலன்களை உடையவனாகவும் சொல்லிக் கொள்ளுகின்றானா?

திராசிமாக்கஸ்: ஆம், ஏனெனில் மனிதர்களனைவரைக் காட்டிலும் அதிக நன்மைகள் பெற்றிருப்பதாக அவன் சொல்கிறான்.

சாக்ரடீஸ்: ஆகவே, அனைவரைக் காட்டிலும் தான் அதிகம் பெற்றிருக்க வேண்டும் என்பதற்காக அநீதியாளன் 'அநீதியையும் மற்ற அநீதியாளனையும் வென்று அதிகம் பெறப் பாடுபடுவானா?

திராசிமாக்கஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : இதே பொருளை வேருகப் பின்வருமாறு சொல்லலாம் - நீதியாளன் தன்னொத்தாரைவிட அதிகம் பெற விரும்பவில்லை. ஆனால் தன்னினும் மாறுபட்டவரைவிட அதிகம் பெற விரும்புகிறான். அநீதியாளனோவென்றால் தன்னொத்தார், தன்னினும் மாறுபட்டார் ஆகிய இருவரையும் காட்டிலும் அதிகம் பெற விரும்புகிறான் அல்லவா ?

திராசிமாக்கஸ் : இதைவிட நன்றாகச் சொல்லமுடியாது.

சாக்ரடீஸ் : எனவே, அநீதியாளன் என்பவன் நல்லவன், அறிவுடையவன் ; நீதியாளன் இரண்டுமில்லை என்கிறாயா ?

திராசிமாக்கஸ் : மறுபடியும் நன்றாகச் சொன்னாய்.

சாக்ரடீஸ் : எனவே, அநீதியாளன் நல்லவர் போலவும், அறிவுடையோர் போலவும் இருக்கிறான் ; நீதியாளன் அவர்களினின்றும் மாறுபட்டு இருக்கிறான் அல்லவா ?

திராசிமாக்கஸ் : ஆம், ஒருவித இயல்புடையவன் ஒருவன் அத்தகைய இயல்பு உடையோரை ஒத்திருப்பான் ; அப்படியில்லாதவன் ஒத்திருக்கமாட்டான்.

சாக்ரடீஸ் : அவருள் ஒவ்வொருவரும் தன்னொத்தோரைப் போலவே இருக்கிறார் அல்லவா ?

திராசிமாக்கஸ் : உறுதியாக.

சாக்ரடீஸ் : நன்றி ! திராசிமாக்கஸ் ! இப்போது கலைகளை எடுத்துக்கொள்வோம். ஒருவன் பாடகன் என்றும் மற்றொருவன் பாடகனல்லன் எனவும் ஒப்புக்கொள்வாயல்லவா ?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : சரி, அவர்களுள் யார் அறிவுடையவன், யார் அறிவிலி ?

திராசிமாக்கஸ் : தெளிவாகத் தெரிகிறது, இசைவல்லுநன் தான் அறிவுடையோன் ; இசையறியாதான் அறிவிலியே.

சாக்ரடீஸ் : அறிவுடையவனாக இருப்பதைப் பொறுத்த மட்டில் அவன் நல்லவன் என்றும், அறிவிலியாக இருப்பதைப் பொறுத்தமட்டில் அவன் கெட்டவன் என்றும் சொல்கிறாயா ?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : இதேபோல மருத்துவனைப் பற்றியும் சொல்வாயா ?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ்: அரிய நண்ப! ஓர் இசைக்கலைஞன் வீணையைச் சரிசெய்கிறபொழுது வீணை நரம்புகளை இழுத்துக் கட்டுவதிலும், தளர்த்திக் கட்டுவதிலும் மற்றொரு இசைக்கலைஞனை மிஞ்சிவிட வேண்டும் என்று விரும்புவான் அல்லது சொல்வான் என்று எண்ணுகிறாயா?

திராசிமாக்கஸ்: அப்படிச் செய்வான் என்று நான் எண்ணவில்லை.

சாக்ரடீஸ்: ஆனால், அவன் இசைக்கலைஞனல்லாதானை மிஞ்ச முடியும் என்று சொல்வானல்லவா?

திராசிமாக்கஸ்: உண்மை.

சாக்கரடீஸ்: மருத்துவனைப் பற்றி என்ன சொல்வாய்? நோய்க்குத் தக்க உணவு, பானம் பற்றிச் சொல்கிறபொழுது மற்றொரு மருத்துவனைக் காட்டிலும் அல்லது மருத்துவத் தொழில் முறைக்கு மேற் சென்றுவிட வேண்டும் என்று விரும்புவானா?

திராசிமாக்கஸ்: அப்படிச் செய்யமாட்டான்.

சாக்ரடீஸ்: ஆனால், மருத்துவனல்லாதானை மிஞ்சிவிட விரும்புவானல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: பின்னர் அறிவு, அறியாமை இரண்டையும் பற்றிப் பொதுவாக எடுத்துக் கொள்வோம். அறிவுடைய எவனேனும் மற்றொரு அறிவாளியைவிட அதிகமாகப் பேசவோ, செயலாற்றவோ விரும்புவான் என்று எண்ணுகிறாயா, பார்; தன்னைத்தானைப் போலவே அவன் ஒரே விதமான விஷயத்தில் பேச அல்லது செயலாற்ற மாட்டானா?

திராசிமாக்கஸ்: இதனை மறுக்க முடியாது என்று எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ்: அறியாதவர்களைப் பற்றி என்ன சொல்ல? அறிந்தவனைவிடவோ அறியாதவனைவிடவோ அதிகமாகப் பெற அவன் விரும்பமாட்டானா?

திராசிமாக்கஸ்: அது சரியே.

சாக்ரடீஸ்: எனவே அறிந்தவன் அறிவாளியா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அறிவாளி நல்லவன்தானே?

திராசிமாக்கஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: அப்படியானால் அறிவுடையோனும் நல்லவனும் தம்மொத்தவரை விட மிகுதியாகப் பெற விரும்பமாட்டார்கள்; ஆனால் தம்மொத்தாரல்லாதாரையும், தம்மினின்றும் வேறுபட்டவரையும் விட அதிகமாகப் பெற விரும்புவார்கள், சரிதானா?

திராசிமாக்கஸ்: அப்படித்தான் நான் எண்ணுகின்றேன்.

சாக்ரடீஸ்: இதற்கு மாறாக, கெட்டவர்களும், அறியாதவர்களும் இருவகையினரையும் மிஞ்சுமாறு பயன்பெற விரும்புவர் அல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: சரி, திராசிமாக்கஸ், அநீதியாளன் தன்னொத்தார் தன்னிலும் வேறுபட்டார் ஆகிய இருவரையும்விட மேற்சென்று விடுகிறான் என்று நாம் சொல்லவில்லையா? இவைதானே நீ சொன்ன சொற்கள்?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: மேலும் நீதியாளன் தன்னிலும் வேறுபட்டாரை விஞ்சிச் செல்வானேயன்றித் தன்னொத்தாரை விஞ்சிச் செல்லமாட்டான் என்றும் சொன்னாயல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: எனவே நீதியாளன் அறிவுடையவனையும் நல்லவனையும் ஒத்தவன்; அநீதியாளன் தீயவனையும், அறியாதவனையும் ஒத்தவன் அல்லவா?

திராசிமாக்கஸ்: அதுதான் ஊகம்.

சாக்ரடீஸ்: அவருள் ஒவ்வொருவரும் தன்னொத்தாரைப் போல இருக்கிறார்கள் அல்லவா?

திராசிமாக்கஸ்: அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சாக்ரடீஸ்: எனவே, நீதியாளன் அறிவுடையவனாகவும், நல்லவனாகவும் ஆகிறான்; அநீதியாளன் தீயவனாகவும் அறியாதவனாகவும் ஆகிறான் என்று ஏற்படுகிறது அல்லவா?

இவற்றையெல்லாம் மிகுந்த தயக்கத்துடன், மெல்லத்தான் திராசிமாக்கஸ் ஒப்புக் கொண்டான்; அன்று கொடிய கோடை நாளாதலின் அவன்மீது வியர்வை ஆறாக ஓடியது. திராசிமாக்கசிடம் சாக்ரடீஸ் முன்னர்க்காணாத ஒன்றைக் கண்டார்; அவன் முகமெல்லாம் சிவந்து கிடந்தது. குழுவினர் இப்பொழுது நீதி என்பது பண்பும், ஞானமும் ஆகும்

என்றும், அநீதியென்பது தீயபண்பும் அறியாமையும் ஆகும் என்றும் ஒப்புக் கொண்டு விட்டதால், சாக்ரடீஸ் வேறு ஒரு பொருளைப் பற்றி விவாதிக்கத் தொடங்கினர்.

சாக்ரடீஸ் : நன்று, திராசிமாக்கஸ், அந்த விஷயம் முடிந்து விட்டது. ஆனல், அநீதி வலிமையுடையது என்று நாம் சொல்லிக்கொண்டு இருந்தோமே, நினைவிருக்கிறதா ?

திராசிமாக்கஸ் : ஆம், நினைவிருக்கிறது, ஆனல் நீர் சொல்வதை நான் ஒப்புக் கொள்கிறேன் என்ருே உனக்கு விடையிறுக்க என்ருல் முடியவில்லையென்ருே எண்ணுதீர். நான் விடையிறுக்க முன் வந்தால் நெடிய சொற்பொழிவு செய்கிறேன் என்று நிச்சயமாக நீர் என்னைக் குறை கூறுவீர். ஆதலின் நான் சொல்ல வேண்டியதை முழுதும் சொல்லிவிடுகிறேன். அல்லது அப்படி நீர் விரும்பினுல் நல்லது என்று இசைந்து கதை சொல்லும் கிழவியிடம் ஆம் என்றும் இல்லை என்றும் அவள் விரும்பியவாறு தலையாட்டு வதுபோல் சொல்லிவிடுவேன்.

சாக்ரடீஸ் : இல்லவே இல்லை, உன்னுடைய உண்மையான கருத்துக்கு மாருக இருந்தால் அப்படி ஒன்றும் வேண்டாம்.

திராசிமாக்கஸ் : ஆம், உம்மை மகிழ்விக்க அப்படித்தான் செய்வேன். ஏனெனில் நீர் என்னைப் பேசவிடமாட்டீர். நீர் வேறு எதனை விரும்புகின்றீர் ?

சாக்ரடீஸ் : இவ்வையகத்தில் எதையும் இல்லை ; உனக்கு விருப்பம் இருப்பின் நான் கேட்கிறேன், நீ விடை யளிப்பாய்.

திராசிமாக்கஸ் : மேற் செல்க.

சாக்ரடீஸ் : நீதி, அநீதி ஆகிய இரண்டினுடைய சிறப்பு இயல்பை முறையே அறியும் நம் முயற்சி ஒழுங்காக நடை பெற வேண்டும் என்பதற்காக, நான் முன்னர்க் கேட்ட கேள்வியைத் திரும்பவும் சொல்கிறேன். நீதியைவிட அநீதி வலிமைவாய்ந்ததெனவும் சக்தியுடையதெனவும் சொல்லப் பட்டது. ஆனல், இப்பொழுது அநீதி என்பது அறியாமை எனவும், நீதி என்பது விவேகம், பண்பு ஆகிய இரண்டு மாகும் எனவும் கண்டதால், நீதியே அநீதியைவிட வலிமை வாய்ந்தது என எளிதில் உணர்த்தப்பட்டது. இதை யாரா லும் இனி மறுக்கமுடியாது. ஆனல், திராசிமாக்கஸ் ! இவ் விஷயத்தை வேறு வழியில் அணுக விரும்புகிறேன். ஒரு

நாடு அநீதியே உருவாகவும் அநியாயமாகப் பிற நாடுகளை அடிமைகொள்ள முயலுவதாகவும், அல்லது அப்படி முன்னரே அடிமை கொண்டதாகவும் இருக்கலாம் என்பதை நீ மறுக்க மாட்டாயல்லவா?

திராசிமாக்கஸ்: உண்மை. மேலும் சொல்வேன், அநீதியின் நிறைவுபெற்ற அரசுதான் அப்படி அதிகமாக முற்படும்.

சாக்ரடீஸ்: ஆம், அதுதான் உனது கருத்து என்று எனக்குத் தெரியும். ஆனால், தொடர்ச்சியாக நான் எண்ணிப் பார்க்க நினைப்பது என்னவெனில், ஆதிக்கமுள்ள நாட்டின் கையில் உள்ள அதிகாரம் நீதியில்லாமல் இருக்க முடியுமா அல்லது பயன்படுத்த முடியுமா? அல்லது நீதியுடன்தான் அவ்வாறு செய்ய முடியுமா? என்பதே.

திராசிமாக்கஸ்: உமது கருத்து சரியானதாக இருந்தால், நீதியென்பது விவேகம் என்று பொருள் கொண்டால், நீதியின் துணையுடன்தான் அவ்வாறு செய்ய முடியும். ஆனால், என் கருத்து சரியாக இருந்தால், நீதியில்லாமல்தான் பயன்படுத்தப்பட முடியும்.

சாக்ரடீஸ்: சரியென்றோ இல்லையென்றோ தலையை ஆட்டுவதோடு மட்டுமல்லாமல் நீ அருமையான விடைகள் தருவதைக் காண எனக்கு மிக்க மகிழ்ச்சியாயிருக்கிறது, திராசிமாக்கஸ்!

திராசிமாக்கஸ்: உமக்கு மதிப்புக்கொடுத்தே அவ்வாறு செய்கிறேன்.

சாக்ரடீஸ்: நீ எனக்கு மிகவும் அன்பு காட்டுகிறாய். ஒரு நாடு, ஓர் இராணுவம், கொள்ளைக்காரரும் கள்ளரும் கொண்ட ஒரு கூட்டம், அல்லது தீவினையே புரியும் ஒரு குழுவினர் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டால் செயல்புரிய முடியுமா, என்பதை பற்றி உன் எண்ணம் யாது என்பதைத் தயவு செய்து எனக்குச் சொல்வாயா?

திராசிமாக்கஸ்: அவர்களால் செயலாற்ற முடியாது. இது உறுதி.

சாக்ரடீஸ்: ஆனால் தமக்குள்ளே தாக்கிக்கொண்டு நிற்றலை விடுத்தால், அவர்களால் ஒன்றுபட்டு முன்னிலும் நன்றாகச் செயல்பட முடியும் அல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ் : இதற்குக் காரணம் அநீதி வேற்றுமையையும் பிளவையும், சண்டையையும் உண்டாக்குகிறது. நீதி ஒற்றுமையையும், நட்பையும் உண்டாக்குகிறது. இது உண்மைதானே, திராசிமாக்கஸ்.

திராசிமாக்கஸ் : ஒப்புக்கொள்கிறேன். ஏனெனில் உம்மோடு சண்டையிட்டுநிற்க எனக்கு விருப்பமில்லே.

சாக்ரடீஸ் : உன்னுடைய பரிவுதான் என்ன ! ஆனால் ஒன்றை அறிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அநீதி பகைமையைக் கிளப்பும் தன்மையானதால், அடிமைகளிடமிருந்தாலும் சுதந்திர மாந்தரிடமிருந்தாலும், அவர்கள் ஒருவரையொருவர் வெறுக்குமாறு செய்து, வேற்றுமைப் படுத்தி, இணைந்து செயலாற்ற இயலாது ஆக்கிவிடுமா என அறிய ஆசைப்படுகிறேன்.

திராசிமாக்கஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : மேலும், இருவரிடையே மட்டும் அநீதி காணப்பட்டாலும், அவர்களும் முரண்பட்டுப் பொருதுநின்று, தமக்குள்ளும் நீதியாளருக்கும் பகைவராகி விடுவர் அல்லவா ?

திராசிமாக்கஸ் . ஆம் அப்படியே செய்வர்.

சாக்ரடீஸ் : அநீதி ஒரே மனிதன்பால் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அது தன் இயல்பாற்றலே இழந்துவிடுமா ? அதன் இயற்கை மாருமல் இருக்குமா ? உன் மதி நுட்பம் என்ன சொல்லுகிறது ?

திராசிமாக்கஸ் : அது அவ்வாற்றலே மாற்ருது இருத்திக் கொள்ளும் என வைத்துக் கொள்வோம்.

சாக்ரடீஸ் : இருப்பினும், அநீதியின் சக்தி, எங்கு இருந்தாலும் நகரில் இருந்தாலும் போர்ப்படையில் இருந்தாலும், ஒரு குடும்பத்தில் இருந்தாலும், அல்லது வேறு எந்த இயக்கத்தில் இருந்தாலும் அங்கெல்லாம் அவ்வியக்கம் அதன் ஆட்சிக் கெதிராக எழும் புரட்சியாலும் கலவரத்தாலும், இணைந் தாற்றும் செயல்வன்மையை இழந்து நிற்பதுதானே, அச் சத்தியின் தன்மை ? மேலும் அது தனக்கே பகையாகவும் தன்னே எதிர்த்தவற்றுக்கெல்லாம் எதிராகவும், நீதியால் வந்தவை அனைத்துக்கும் மாருகவும் ஆகிவிடும் அல்லவா ? இதுதானே நிலே ?

திராசிமாக்கஸ் : ஆம், இதுவே.

சாக்ரடீஸ்: தனியொரு மனிதனிடமிருந்தாலும் அதற்கிணையாக அழிவுச் சக்தியுடையதுதானே அ.நீதி? முதற்கண் அவன் தன் உள்ளத்தில் ஒற்றுமை இல்லாததால் அவனைச் செய லிழக்கச் செய்தும், இரண்டாமிடத்து - பின்னர் அவனை அவனுக்கே பகைவனுக்கி மற்றும் நீதியாளருக்கும் பகை வனுக்கி அழிக்கும் ஆற்றல் உடையதல்லவா அது? இது உண்மைதானே, திராசிமாக்கஸ்.

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: என் நண்ப, தேவர்கள் நிச்சயமாக நீதி வழிப் பட்டவர்தானே?

திராசிமாக்கஸ்: ஆம், அப்படித்தான்.

சாக்ரடீஸ்: அப்படியானுல், அநீதியாளன் தேவர்களின் பகை வனுகவும், நீதியாளன் நண்பனுகவும் இருப்பர் அல்லவா?

திராசிமாக்கஸ்: வெற்றிப் பெருமிதத்தில் நீர் மகிழ்க. நீர் வேண்டிய மட்டும் பேசிக்கொண்டு போவீராக. நான் உம்மை எதிர்த்துரைக்க மாட்டேன். காரணம், குழுவினர் உளம் வருந்தலாம்.

சாக்ரடீஸ்: சரி, நீ விடையிறுப்பதுடன் மேற் செல். நான் என் பெருமிதப் பேச்சில் எஞ்சியதைச் சொல்கிறேன்.

அநீதியாளரைவிட நிச்சயமாக நீதியாளர் அறிவுடைய வர்கள், நல்லவர்கள், தகுதியுடையவர்கள் எனவும், அநீதி யாளர் கூடிச் செயலாற்ற இயலாதவர்கள் எனவும் முன்பே கண்டோம். தீயவர்களைப் பற்றி நாம் பேசியதனைத்தும் முழுதும் உண்மையல்ல, ஏனெனில் அவர்கள் பரிபூரண மாகத் தீயவர்களாக இருந்திருந்தால் தமக்குள்ளே ஒருவரை யொருவர் பிணங்கி நின்றிருப்பர், ஆனுல் சிறிதளவு நீதி அவர்கள்பால் இருந்திருக்க வேண்டும் என்பது வெளிப் படை. அப்படி இல்லாமலிருந்தால் அவர்கள் தம்முள்ளே பொருது நின்று தம்மையும் தம் அநீதிக்கு ஆட்பட்டவர் களையும் கொடுமைப்படுத்தியிருப்பர். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பாதிதான் கொடுமனத்தர். ஏனெனில் முழுதும் கொடுமனத்தராயும் முழுதும் அநீதியாளராகவும் இருந்திருந்தால் முற்றிலும் வினைசெயல்வகையின்றி நின்றி ருப்பர். இதுதான் இந்த விஷயத்திலுள்ள உண்மை; நீ முதலிற் சொன்னதல்ல. ஆனுல், நீதியாளர் அநீதியாளரை விட நல்ல, இனிய வாழ்க்கை நடத்துகின்றனரா என்பது

நாம் கவனிக்கவேண்டும் என்று சொல்லிய மற்ருெரு கேள்வி. அவர்கள் நிச்சயமாக நான் சொல்லிய காரணங்களால் நல்ல, இனிய வாழ்வு வாழ்கிருர்கள் என எண்ணுகிறேன். எனினும் இதனை மேலும் ஆராய விரும்புகிறேன். ஏனெனில் இது சாதாரணமானதொன்றல்ல; மனித வாழ்க்கையின் விதியையே பணயமாக வைத்துப் பேசிக்கொண்டிருக்கிருேம்.

திராசிமாக்கஸ்: தொடர்ந்து செல்வீர்.

சாக்ரடீஸ்: நான் ஒரு கேள்வியுடன் தொடர்வேன். குதிரைக்கும் குறிக்கோள் உண்டு என்பதை ஒப்புக்கொள்வாயல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: ஆகவே, ஒரு குதிரையின் குறிக்கோள் அல்லது பயன் என்பது பிற எதுவாலும் பெற முடியாத அல்லது அவ்வளவு திறம்படப் பெறமுடியாத ஒன்று என்று சொல்லலாமா?

திராசிமாக்கஸ்: எனக்குப் புரியவில்லையே.

சாக்ரடீஸ்: விளக்குகிறேன். கட்புலனின்றி உன்னுல் காண முடியுமா?

திராசிமாக்கஸ்: நிச்சயமாக முடியாது.

சாக்ரடீஸ்: அல்லது செவிப்புலனின்றிக்கேட்க முடியுமா?

திராசிமாக்கஸ்: முடியாது.

சாக்ரடீஸ்: எனவே, இப்புலன்களின் நோக்கம் இவையே எனச் சொல்லலாமா?

திராசிமாக்கஸ்: சொல்லலாம்.

சாக்ரடீஸ்: ஆனுல், ஒரு திராட்சைக் கிளையை வாளின் துணையாலோ, உளியின் துணையாலோ பிற பல வகைகளாலோ வெட்டி எறிய முடியும் அல்லவா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: எனினும் இதற்கெனவே செய்யப்பட்ட செடிக் கத்தியினுல் செய்வதுபோல் மற்றவற்ருல் நன்ருகச் சீவ முடியாது அல்லவா?

திராசிமாக்கஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: எனவே, இதுதான் அக்கருவியின் குறிக்கோள் - பயன் - என்று சொல்லலாம் அல்லவா?

திராசிமாக்கஸ்: கூறலாம்.

சாக்ரடீஸ்: எனவே ஒன்றன் நோக்கம் (குறிக்கோள்) மற்றவை எதனுலும் அடைய முடியாது அல்லது அவ்வளவு திறம்படப்

பெறமுடியாது என இருக்கக் கூடுமா என்று நான் கேட்ட கேள்வியின் பொருளை உணர்ந்து கொள்வதில் உனக்குச் சிரமம் இருக்காது என்று எண்ணுகிறேன்.

திராசிமாக்கஸ்: நீங்கள் சொன்னதன் கருத்தைப் புரிந்து கொண்டேன். அதுசரி.

சாக்ரடீஸ்: எனவே அதற்கென ஏற்பட்ட குறிக்கோளோடு, பயனெடு, அதிலே தனிச் சிறப்பும் ஒவ்வொன்றுக்கும் உண்டல்லவா? கட்புலனுக்கு ஒரு குறிக்கோள் உண்டா என நான் மறுபடியும் கேட்க வேண்டுமா?

திராசிமாக்கஸ்: அதற்கு அத்தன்மை உண்டு.

சாக்ரடீஸ்: எனவே, கண் அத்தனிச் சிறப்பைப் பெற்றிருக்க வில்லையா?

திராசிமாக்கஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: செவியும் ஒரு குறிக்கோளும் தனிச்சிறப்பொன்றும் கொண்டிருக்கிறதல்லவா?

திராசிமாக்கஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: இதுவே பிற எல்லாப் பொருளுக்கும் உண்மை யாகும்; ஒவ்வொன்றும் ஒரு பயனும் தனிச் சிறப்பும் உடையது அல்லவா?

திராசிமாக்கஸ்: அப்படியே.

சாக்ரடீஸ்: சரி, தங்கள் தனிச்சிறப்பில் குறைவுபட்டதாயும் பழுதுடனும் இருப்பின் கண்கள் தம் நோக்கத்தினை நிறை வேற்றமுடியுமா?

திராசிமாக்கஸ்: எப்படி முடியும்? அவை குருடாய் இருந்தால் காணமுடியாது.

சாக்ரடீஸ்: தமது தனிச்சிறப்பான பார்வையை இழந்து நின்றால் என்று சொல்கிறாயா? ஆனல் அந்தப் பொருளுக்கு நான் இன்னும் வரவில்லை. எனது கேள்வியை இன்னும் பொதுப்படையாகக் கேட்கிறேன். தம் குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருள்கள் தங்கள் சொந்தச் சிறப்பினு லேயே அவற்றை நிறைவேற்றுகின்றனவா? தங்கள் குறையினுலேயே அவ்வாறு நிறைவேற்ற முடியாது, தோல்வி யடைகின்றனவா? என்று கேட்கிறேன்.

திராசிமாக்கஸ்: தீர்மானமாக.

சாக்ரடீஸ் : செவிகளைப் பற்றியும் இதையே சொல்லலாம். தம் சிறப்புப் பண்பை இழந்து நின்றபோது அவை தங்கள் குறிக்கோளை நிறைவேற்ற முடியாதல்லவா ?

திராசிமாக்கஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : இந்தக் குறிப்பு எல்லாவற்றுக்கும் பொருந்தும் அல்லவா ?

திராசிமாக்கஸ் : ஒப்புக்கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : நன்று, வேறு எதனாலும் நிறைவேற்ற முடியாத ஒரு குறிக்கோள் ஆன்மாவுக்கும் உண்டல்லவா ? எடுத்துக் காட்டாக, கண்காணிக்க, ஆணையிட, எண்ணிப்பார்க்க இன்ன பிற. இவையெல்லாம் ஆன்மாவின் தனித் தொழில்கள் அல்லவா ? இவற்றை முறையாகப் பிறிதொன்றுக்குத் தந்துவிட முடியுமா ?

திராசிமாக்கஸ் : முடியாது, மற்றொன்றுக்கும் தகாது.

சாக்ரடீஸ் : ஆன்மாவின் நோக்கங்களுள் ஒன்றாக வாழ்க்கையும் வைத்து எண்ணப்பட வேண்டும் அல்லவா ?

திராசிமாக்கஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : சரி, ஆன்மாவுக்கு ஒரு சிறப்புப் பண்பும் உண்டல்லவா ?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : அவ்வருமை இழந்தபோது ஆன்மாவால் தன் நோக்கங்களை நிறைவேற்ற முடியுமா, முடியாதா ?

திராசிமாக்கஸ் : முடியாது.

சாக்ரடீஸ் : எனவே, தீய ஆன்மா அவசியம் தீயதலைவனையும், கண்கானிப்பாளனையும், நல்லான்மா அவசியம் நல்ல தலைவனையும் இருக்க வேண்டும் அல்லவா ?

திராசிமாக்கஸ் : ஆம், அவசியம் அவ்வாறுதான் இருக்க வேண்டும்.

சாக்ரடீஸ் : நீதியென்பது ஆன்மாவின் சிறப்பேயென்றும், அநீதி ஆன்மாவின் குறை என்றும் முன் ஒப்புக்கொண்டோம் அல்லவா ?

திராசிமாக்கஸ் : ஆம், அது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சாக்ரடீஸ் : ஆதலின் அறமுடைய ஆன்மாவும் அறநெறியாளனும் நல்வாழ்வு நடாத்துவர் எனவும், அநீதியாளன் தீய வாழ்வு நடாத்துவர் எனவும் சொல்லலாமா ?

திராசிமாக்கஸ் : அதைத்தான் உமது வாதம் நிரூபிக்கிறது.

சாக்ரடீஸ் : ஆகவே, நல்வாழ்வு நடாத்துபவன் அருளும், இன்பமும் பெற்றவன், தீய வாழ்வு நடாத்துபவன் துன்புறுபவன் எனக் கூறலாமா?

திராசிமாக்கஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : எனவே நீதியாளர் இன்புற்றிருப்பவர்; அநீதியாளர் துன்புறுபவர் எனலாமா?

திராசிமாக்கஸ் : சொல்லலாம்.

சாக்ரடீஸ் : ஆகவே துன்பமல்ல, இன்பமே பயனுடையது அல்லவா?

திராசிமாக்கஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆதலின் என் அருமை திராசிமாக்கஸ்! நீதியை விட அநீதி என்றும் பயனுடையதாயிருக்க முடியாது.

திராசிமாக்கஸ் : சாக்ரடீஸ்! இது பெண்டிடியாவில்[1] உமது மகிழ்ச்சிக்கான பொழுதுபோக்காயிருக்கட்டும்.

சாக்ரடீஸ் : நான் சொன்னேன், நீ இப்பொது என்பால் அன்பு மீதூரப் பெற்றிருக்கிறாய். என்னை ஏசுவதையும் விடுத்திருக்கிறாய். உனக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனினும் எனக்குப் போதிய மகிழ்ச்சி கிடைக்கவில்லை. ஆனால் அது என் குறையேயன்றி உன் குறையல்ல. தன் முன்னர் தொடர்ந்து கொணரப்படும் உணவு வகைகள் அனைத்தையும் ஒன்றனையும் சரியாகச் சுவைக்காமல், விரைவாகச் சுவைக்கும் உணவுச் சுவையாளன் போல, நான் முதலில் தேடிப்போன நீதியின் தன்மையை விடுத்து ஒவ்வொரு பொருளாகத் தாவிக்கொண்டிருந்தேன். நான் அந்த ஆராய்ச்சியை விடுத்து நீதியென்பது பண்பும், விவேகமுமா அல்லது தீமையும் பொய்மையுமா என ஆராயலானேன். மேலும் நீதி, அநீதி ஆகியவற்றை ஒப்பு நோக்கினால் வரும் பயன்களைப் பற்றிப் பேச்செழுந்தக்கால், அதனைப்பற்றிப் பேசாது என்னால் இருக்க முடியவில்லை. ஆதலின் இவ் விவாதத்தின் முடிவு நான் ஒன்றும் அறியவில்லை என்பதே. ஏனெனில் நீதி யென்பது எது என்று நானறியேன். ஆதலின் அது நற்பண்பா இல்லையா என்று எனக்குத் தெரிய வாய்ப்பில்லை; நீதியாளன் இன்புற்றிருப்பவனா துன்பப்படுபவனா எனவும் நான் சொல்ல முடியவில்லை.

1. Bendidea

இரண்டாவது புத்தகம்

இப்படிக் கூறியதும் விவாதத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டதாக நான் கருதினேன். ஆனால் உண்மையில் அம்முடிவு ஒரு தொடக்கமாகத்தான் விளங்கியது. ஏனெனில் சண்டைக்காரனாகிய கிளாக்கன் திராசிமாக்கஸ் ஒதுங்கியது கண்டு மன நிறைவு நீத்தான். மீண்டும் அவன் விவாதத்தை மேற்கொள்ள விரும்பினான். ஆகவே என்னிடம் சொன்னான் :

கிளாக்கன் : சாக்ரடீஸ்; நீதியாளனாயிருப்பது அநீதியாளனாயிருப்பதிலும் மிக நன்று என்று எங்களை நம்பவைக்க விரும்புகிறீரா? அல்லது நம்பவைத்துவிட்டதாகத் தோன்றினாற் போதும் என எண்ணுகிறீரா?

சாக்ரடீஸ் : என்னால் இயலுமாயின் உங்களை நம்பச் செய்ய வேண்டுமென்றே நான் விரும்புகிறேன்.

கிளாக்கன் : அப்படியானால் நீர் நிச்சயமாக வெற்றி பெற வில்லை. ஒன்று கேட்கிறேன். நல்லவற்றை எப்படி வரிசைப் படுத்துவீர்? 'சிலவற்றை அவற்றுக்காகவே, அவற்றின் விளைவுகளைக் கருதாது, நாம் வரவேற்கவில்லையா? எடுத்துக் காட்டாக, தீங்கற்ற இன்பங்களும் கேளிக்கைகளும் எந்தப் பயனும் தரவில்லையாயினும் அனுபவிக்கும் காலத்தில் அவை வரவேற்கப்படவில்லையா?

சாக்ரடீஸ் : அப்படியொரு பிரிவு இருக்கிறது எனக் கருதுவதை ஏற்கிறேன்.

கிளாக்கன் : அவற்றுக்காகவேயன்றி, அவற்றின் விளைவுகளுக் காகவும், விரும்பத்தக்க அறிவு, பார்வை, உடல்நலம் என்ற

நல்லவற்றை உள்ளிட்ட இரண்டாவது பிரிவு ஒன்றும் உண்டல்லவா?

சாக்ரடீஸ் : ஆம்.

கிளாக்கன் : உடற்பயிற்சி, நோயுடையோரைப் பேணுதல், மருத்துவரின் கலை என்பவற்றை மூன்றும் பிரிவிற் சேர்க்கலாமல்லவா? மேலும், செல்வம் திரட்டும் பல வழிகள் இவை நமக்கு நல்லது செய்கின்றன, எனினும் இவற்றை உகந்தனவாகக் கருதவில்லை. அவற்றின் பலனைக் கருதியே அவைகளை ஒருவன் தேர்ந்தெடுப்பானேயன்றி அவற்றுக்காகவே ஒருவன் தேர்ந்தெடுக்கமாட்டான்.

சாக்ரடீஸ் : ஆம், இம்மூன்றும் பிரிவும் இருக்கிறது. ஆனால், நீர் ஏன் இதைக் கேட்கிறீர்?

கிளாக்கன் : ஏனெனில் இம்மூன்று பிரிவுகளுள் எதன்கண் நீதியை நீர் காண்பீர் என அறிய விரும்புகிறேன்.

சாக்ரடீஸ் : மிக உயர்ந்த பிரிவில் காண்பேன். அஃதாவது மகிழ்ச்சியுடன் வாழ விரும்புவோன் அவற்றுக்காகவும் அவற்றின் விளைவுகளுக்காகவும் எந்த நலங்களை விரும்புகிறானோ அந்நலங்களடங்கிய பிரிவில் நீதியைச் சேர்க்கலாம்.

கிளாக்கன் : அப்படியானால் பெரும்பாலோர் வேறு விதமாக எண்ணுகின்றனர். தம் நன்மைகளுக்காகவும், புகழுக்காகவும் விரும்ப வேண்டியதாயும், ஆனால், அவை சுபாவமாக விரும்பத்தகாததாயும், ஒதுக்கப்பட வேண்டியதாகவும், தொல்லைகளெனக் கருதப்படும் பொருள்களில் ஒன்றாகவுமே பெரும்பாலோர் நீதியைக் காண்கின்றனர்.

சாக்ரடீஸ் : இப்படித்தான் அவர்கள் எண்ணுகிறார்கள் என்று எனக்குத் தெரியும். இதைத்தான் நீதியைக் கண்டித்தும் அநீதியைப் புகழ்ந்தும் பேசிய திராசிமாக்கஸ் சற்று முன்னர் வலியுறுத்தினான். ஆனால், அதை ஒத்துக்கொள்ளக்கூடிய அறிவுத் திறமை எனக்கில்லை.

கிளாக்கன் : அவன் கூறுவதோடு நான் பேசுவதையும் நீர் கேட்க வேண்டுமென்று விரும்புகிறேன். பிறகு நானும் நீங்களும் ஒத்துப்போகிறோமா என்று காண்போம். ஏனெனில் திராசிமாக்கஸ் பாம்பைப்போல் உமது குரலைக் கேட்டுச் சற்று முன்கூட்டியே மயங்கிவிட்டான் என எனக்குத் தோன்றுகிறது. ஆனால், எனதறிவுக் கெட்டியவரையில்

நீதி, அநீதி ஆகியவற்றின் இயல்புகள் தெளிவாக்கப்பட வில்லை. அவற்றின் பயன்களும் விளைவுகளும் நீங்கலாக, அவை தம்மளவில் யாவை? எப்படிப்பட்டவை? நம்முள்ளே எங்ஙனம் இயங்குகின்றன என்பனவற்றை அறிய விரும்பு கிறேன். நீர் விரும்பினுல், திராசிமாக்கசின் வாதத்தை மீண்டும் நான் தொடர்கிறேன். முதற்கண் நீதியின் இயல்பு, தொடக்கம் ஆகியவற்றைப்பற்றிய மக்களின் பொதுக் கருத் தைச் சொல்வேன். இரண்டாவதாக நீதிவழி நடப்பவர்கள் அனைவரும் நிர்ப்பந்தம் காரணமாகத் தங்கள் விருப்பத் திற்கு மாருக அங்ஙனம் இருக்கிருர்களேயன்றி அதுவே நன்று என்பதற்காகவல்ல. மூன்ருவதாக, இந்தக் கொள்கை யில் நியாயமிருக்கிறது என வாதிப்பேன், காரணம் அவர் கள் சொல்வது உண்மையாக இருந்தால், சாக்ரடீஸ்! (அது என் சொந்தக் கொள்கை இல்லை) அநீதியாளருடைய வாழ்க்கை நீதியாளருடைய வாழ்க்கையைவிடச் சாலவும் நன்ருக இருக்கிறது. திராசிமாக்கஸ் தவிர மற்றும் திரளான பலரின் குரல்கள் எனது செவிகளில் தாக்குவதைக் கேட்கிற பொழுது வியப்பும் அதிர்ச்சியுமடைகிறேன் என்பதை ஒப்புக் கொள்கிறேன்; தவிர அநீதியைவிட நீதி உயர்ந்தது என யாரும் மன நிறைவுடன் ஒப்புக்கொள்ளக்கூடிய வகை யில் நிறுவியதை நான் இதுகாறும் செவியுறவில்லை. நீதிக்கு, அதனைப் பொறுத்த தனி அளவில், புகழ்மாலை சூட்டுவதைக் காண விரும்புகிறேன். பின்னரே நான் அமைதியுறுவேன். இப்புகழுரை உம்மிடமிருந்துதான் வரலாமென்று பெரும் பாலும் எதிர்பார்க்கிறேன். ஆதலின் எனது திறமையை முற்றும் பயன்படுத்தி அநீதியாளருடைய வாழ்க்கைக்குப் பாராட்டு வழங்குவேன். எனது பேச்சுமுறை, அநீதியைக் கண்டித்தும், நீதியைப் புகழ்ந்தும் நீங்கள் பேசவேண்டு மென்று நான் எதிர்பார்க்கும் முறையினைக் காட்டும். நீர் இதை ஏற்கிறீரா? எனச் சொல்க.

சாக்ரடீஸ்: நிச்சயமாக ஏற்கிறேன். பகுத்தறிவுள்ள மனிதன் விவாதிக்க வேண்டும் என்று அதிக அளவில் விரும்பக் கூடிய வேறொரு விஷயத்தை நான் நினைக்கக்கூட முடியாது.

கிளாக்கன்: நீர் இப்படிச் சொல்வதைக் கேட்க மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்; நான் முன்னர்ச் சொன்னபடி நீதியின் தன்மையைப் பற்றியும், தொடக்கத்தைப் பற்றியும் பேசத் தொடங்குகிறேன்.

அநீதியைச் செய்வது இயல்பாகவே நல்லது என்றும், அதனை அனுபவிப்பது அதனால் வருந்துவது தீயது என்றும், ஆனால், அத்தீங்கு முன் சொன்ன நலத்தினும் பெரிது என்றும் கூறுவர். எனவே, அநீதியிழைத்தும், அநீதியிழைக்கப்பட்டும் ஒன்றை விடுத்து மற்றொன்றைப் பெற முடியாமல், இரண்டையும் அநுபவித்து, மனிதர் பின்னர்த் தமக்குள் ஒன்றுபட்டு இரண்டையுமே விட்டுவிடும் முடிவுக்கு வரலாம் என எண்ணுகின்றனர். ஆகவேதான், சட்டங்களும் பரஸ்பர ஒப்பந்தங்களும் ஏற்படுகின்றன. சட்டத்தினால் வரையறுக்கப்பட்டவை, சட்டத்துக்குட் பட்டவை என்றும் நீதியானவை என்றும் அவர்களால் அழைக்கப்படுகின்றன. இதைத்தான் நீதியின் தன்மை, தொடக்கம் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர். இது - அநீதி இழைத்தும் தண்டிக்கப்படாமல் இருத்தல் என்ற மிக நல்ல நிலை, திருப்பிச் செய்ய முடியாது அநீதியிழைக்கப்படு தல் என்ற மிக இழிந்த நிலை - இவையிரண்டுக்கும் இடைத் தான ஒரு நடுநிலை. நீதி என்பது இப்படி இவையிரண்டுக் கும் இடையே ஒரு நடுநிலையாக இருப்பதால் தீங்கிலே குறைந்த அளவானதென்பதற்காகப் பொறுத்துக் கொள்ளப் படுகிறது அன்றி அது நலமிக்கது என்பதற்காக அல்ல. மக்கள் அநீதியிழைக்க இயலாதவர்களென்பதால், அவ்விய லாமை காரணமாகவே நீதி பாராட்டப்படுகிறது. மனிதன் என்று அழைக்கப்படக் கூடிய எவனும், எதிர்த்து நிற்கக் கூடிய சக்தி இருக்குமானால், இத்தகைய ஒப்பந்தத்திற்குப் பணியமாட்டான்; அப்படிச் செய்பவன் பைத்தியக்காரனா யிருப்பான். சாக்ரடீஸ்! இதுவே நீதியின் தன்மை, தொடக்கம் இவை பற்றிப் பெரும்பாலானோர் ஏற்கும் விளக்கம்.

எனவே நீதிவழி நடப்பவர் தம்மையறியாமலும்கூட அநீதி புரியச் சக்தியற்றவர் என்பதாலேயே அங்ஙனம் ஒழுகுவர் என்பது பின் வருமாறு எண்ணிக் கொண்டால் விளங்கும்: நீதியாளருக்கும் அநீதியாளருக்கும் அவர்கள் விரும்புமாறு எதனையும் செய்ய அதிகாரம் அளித்து அவர்கள் ஆசையினால் எவ்வழி கொண்டு சொல்லப் படுகின்றனர் எனக்காண்போம். நீதிமானும் அநீதியாளனும் தம் நலன்களைச் சார்ந்து, இயற்கையில் அவர்க்கு நல்லதென எண்ணப்படும் ஒரேவழியிலே செல்வதையும், நீதியின்

வழியில் சட்டத்தின் பலவந்தத்தினுல்தான், செலுத்தப்படு கிருர்கள் என்பதையுமே காண்போம். நாம் நினைக்கிற உரிமையை லிடியா[1] நாட்டு கிரீஸஸின்[2] முத்தோனை கைகஸ்[3] பெற்றிருந்ததாகச் சொல்லப்படும் சக்தியின் வடிவில் அவர்களுக்குத் தரலாம். லிடியா நாட்டு அரசனின் கீழ் கைகஸ் ஓர் இடையனுகப் பணியாற்றி ஞன் என்பது பரம்பரைச் செய்தி. ஒரு பெரும்புயல் அடித்து அவன் தனது ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்த இடத்தில் பூகம்பத்தினுல் பெரும்பிளவு ஏற்பட்டது. அதனைக் கண்ட தும் வியந்து அப்பிளவினுள் இறங்கினுன். அங்கிருந்த பிற அதிசயங்களைத் தவிர, வெறுங்கூடான, கதவுகளை உடைய ஒரு பித்தளைக் குதிரை உருவத்தைக் கண்டான். அதன் உள்ளே மனித உருவத்தை விடப் பெரிதான ஒரு பிணத்தைக் கண்டான்; கைவிரலில் இருந்த ஒரு தங்க மோதிரத்தைத் தவிர அதன்மேல் எதுவுமே இல்லை. அம்மோதிரத்தை எடுத்துக்கொண்டு மேலேறினுன். ஆட்டுமந்தையினைப் பற்றித் திங்கள்தோறும் அரசனுக்குச் செய்தி அனுப்பு வதற்காகக் கூடுகின்ற முறைக் கூட்டம் அப்பொழுது கூட்டப்பட்டது. அம்மோதிரத்தை விரலில் அணிந்து கொண்டு அவன் அக்கூட்டத்தினுள் வந்தான். பின்னர் அவர்களிடை அமர்ந்திருக்கையில் அவன் அதன் தலைப் பகுதியைக் கைக்குள் திருப்ப நேர்ந்தபொழுது, அக்குழுவி னர் கண்ணுக்குப் புலனுகாது மறைந்தான். உடனே அவர்கள், அவன் அங்கு இல்லையெனவே எண்ணி, அவனைப் பற்றிப் பேசத் தொடங்கினர். அவன் வியந்தான். மீண்டும் மோதிரத்தின் தலைப் பகுதியை மேற்புறம் திருப்பி யாவரும் காணத் தோன்றினுன். இங்ஙனமே பலமுறை செய்து, இதுவே நிகழக் கண்டான். அதனை உள்ளே திருப்பிய பொழுது அவன் அருவமானுன். வெளியே திருப்பிய பொழுது உருவம் பெற்ருன். இதற்குப் பின்னர் அரசவைக்குச் செல்லும் செய்தியாளருள் ஒருவனுய்த் தேர்ந் தெடுக்கும்படிச் செய்து கொண்டான். அங்குச் சென்றதும், அரசியை மயக்கி, அவள் உதவியுடன் அரசனுக்கெதிராகச் சதி செய்து, அவனைக் கொன்று அரசைக் கைப்பற்றிக் கொண்டான். அத்தகைய அதிசய மோதிரங்கள் இரண்டு

1. Lydia. 2. Croesus. 3. Gyges.

இருப்பதாகவும், நீதியாளன் ஒன்றையும், அநீதியாளன் மற்றொன்றையும் அணிவதாகவும் வைத்துக் கொள்வோம். நீதியைச் சற்றும் வழுவாது கடைப்பிடிப்பதிலே அவனைவிட இரும்புக் குணம் படைத்தவொருவன் இருப்பான் என்று கற்பனையிலும், எண்ணுவது அரிது. அங்காடியில் இருக்கிற பொருளில் தனக்கு அகப்பட்டதைக் கைப்பற்றவும், எந்த வீட்டிலும் புகுந்து யாருடனும் தன் மனப்படி இன்பம் துய்க்கவும், யாரையும் கொலை புரியவும், தனக்கு வேண்டியவன் எவனையும் சிறையிலிருந்து விடுவிக்கவும், எவ்வகையாலும் மனிதர் நடுவே கடவுளென இருக்கவும் – இத்தனையும் பயமின்றிச் செய்ய முடியுமானால் எந்த மனிதனும் பிறர் பொருளினை அவாவுதலினின்று விலகி நிற்க மாட்டான். அப்படியானால் நீதியாளருடைய செயல்கள் அநீதியாளருடைய செயல்களைப்போல் இருக்கும்; இறுதியில் இருதரத்தாரும் ஒரே நிலைக்கு வருவார்கள். ஆகவே மனிதன், மனமுவந்தோ, தனக்கு நீதி நன்மை பயக்குமென்று எண்ணியோ, நீதி வழி நடக்கவில்லை; ஆனால், நிர்ப்பந்தம் காரணமாக நீதிவழி நடக்கிறான் என்பதை இது நிரூபிக்கிறதெனலாம். ஏனெனில் எங்கு ஒரு மனிதன் தான் அச்சமின்றி அநீதி புரியலாமென்று எண்ணுகிறானோ அங்கு அநீதியாளனாகிறான். எல்லா மனிதரும் நீதியைவிட அநீதியே இலாபகரமானது என்று இதயபூர்வமாக நம்புகிறார்கள். விவாதம் செய்கிற எவனும் நான் கருதுவதுபோலவே அவர்கள் அப்படி நம்புவதில் தவறில்லை என்று சொல்வான். அருவமாகிற அபூர்வ சக்தி ஒருவன்பால் இருப்பதாகவும் அவன் யாதொரு தீங்கும் செய்யாமலும் பிறர் பொருளைத் தொடாமலும் இருப்பதாகவும் வைத்துக் கொண்டால் அவனைக் காண்கிறவர்கள் அறிவிலி என்றே எண்ணுவார்கள்; எனினும் நேரில் காணுங்கால் அவனைப் புகழ்ந்து பேசுவர்; தமக்கும் அநீதி இழைக்கப்படுமோ என்றஞ்சி ஒருவருக்கொருவர் வெளிப்படையாக நல்லபடி நடந்துகொள்வர். போதிய அளவு சொல்லியாயிற்று.

நீதியாளர் அநீதியாளர் ஆகியோருடைய வாழ்க்கையைப் பற்றிச் சரியாக மதிப்பிட வேண்டுமானால், அவர்களைத் தனியே பிரிக்க வேண்டும், வேறு வழியில்லை. அவர்களை எப்படிப் பிரிப்பது?

நானே சொல்கிறேன், அநீதியாளன் முழுவதும் அப்படியே இருக்கட்டும். நீதியாளனும் முழுநீதியாளனாகவே இருக்கட்டும். அவர்கள் இயல்பினின்றும் அவர்களை மாற்றாமல் அவர்களது தனித்தனி வாழ்க்கைக்குத் தேவையானவற்றைத் தரவேண்டும். முதற்கண் ஏனைய சிறந்த தொழில் வல்லுநர்களைப்போல் அநீதியாளர் இருக்கட்டும். அதாவது, தன் சக்தியை உள்ளொளியால் உணர்ந்து அதன் எல்லை மீறாது நடந்து, அப்படியே எங்கேனும் தவறினாலும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளக்கூடிய சக்தி படைத்த மாலுமி அல்லது மருத்துவன் போல் அநீதியாளன் இருக்கட்டும். ஆகவே அநீதியாளன் சரியான வழியில் தன் அநீதிச் செயல்களைச் செய்யட்டும், தன் துறையில் தலைவனாக இருக்க வேண்டுமென்று விரும்பினால் கண்டு பிடிக்கப்படாமல் இருக்கட்டும். கண்டுபிடிக்கப்பட்டவன் இதற்குத் தகுதியானவனில்லை. ஏனெனில் அநீதியின் உச்ச நிலை எதுவென்றால் நாம் நீதி வழி நடக்காதபொழுது, நீதியாளராகக் கருதப்படுவதுதான். ஆகவே நான் சொல்கிறேன் முழு அநீதியாளனிடம் பரிபூரண அநீதியிருப்பதாக நாம் எண்ணிக் கொள்ளவேண்டும். இதில் ஏதும் குறைவு கிடையாது. ஆனால், அவன் அப்படி அநீதி புரிகிறபொழுது நீதிமான் என்ற பெரும்புகழை அவன் பெற்றுவிட்டதாக நாம் ஒப்புக் கொள்ளவேண்டும். தவறி நடந்தாலும் அவன் மீண்டுவர ஆற்றல் பெற்றிருக்கவேண்டும். அவனது செயல்கள் ஏதாவது வெளிப்பட்டால் அவற்றை மறைக்கத் திறம்படப் பேசும் ஆற்றல் பெற்றிருக்கவேண்டும். தன்னுடைய துணிவு, வலிமை, செல்வத்தின் திறன், நண்பரின் பலம் ஆகியவை கொண்டு தன் காரியத்தைச் சாதிக்கும் சக்தி பெற்றிருக்கவேண்டும். எஸ்கைலஸ்[1] கூறுவதுபோல நல்லவனாக இருத்தல் வேண்டும், நல்லவனாகத் தோன்றுதல் மட்டும் போதாதெனக் கருதும் பெருமையும், எளிமையும் மிக்க நீதியாளனை அவன் பக்கலில் நிறுத்துவோம். நல்லவனாகத் தோற்ற மளிப்பது என்பது கூடாது; ஏனெனில் அவன் அப்படித் தோன்றினால் அவனைப் பெருமைப்படுத்தப் பரிசு பல தந்துவிடுவர். பிறகு, அவன் நீதிக்காகவே நீதியாளனாக இருக்கிறானா, அல்லது பெருமைக்

1. Aeschylus

கும், பரிசுக்கும் நீதிவழி நடக்கிருஞ என்பது தெரியாமற் போய்விடும். ஆகவே, அவன்பால் நீதிமட்டுமே இருக்கட்டும். வேருென்றும் இருக்கக் கூடாது. முன்னவனது வாழ்க்கைக்கு நேர் எதிரான வாழ்க்கை வாழ்பவஞக இவன் கருதப்பட வேண்டும். அவன் மனிதருள் மிகச் சிறந்த மனிதஞக இருக்கட்டும், மிக மோசமானவஞகக் கருதப் படட்டும்; அப்போது அவன் சோதனைக்குள்ளாக்கப் படுவான். அப்பொழுது அவன் இகழ்ச்சி அதன் விளைவுகள் உண்டாக்கும் அச்சத்திஞல் பாதிக்கப்படுகிருஞ என்பதைப் பார்க்க வேண்டும். நீதியாளஞக இருப்பது, ஆஞல், அநீதியாளஞகத் தோற்றமளிப்பது, அவ்வாறு அவன் சாகும் வரையில் இருக்கட்டும். இருவரும் இறுதி நிலையை அடைந்த பின்னர் இருவரில் யார் இன்புற்றிருக்கிருர் என்று நியாயம் வழங்கப்படட்டும்.

சாக்ரடீஸ்: நன்று, கிளாக்கன்! நீ எவ்வளவு அழகாக ஒவ்வொருவராக அவர்களைச் சிலைகளெனக் கருதி மெருகு கொடுத்துத் தீர்ப்புச் சொல்ல நிறுத்துகிருய்.

கிளாக்கன்: என்ஞல் இயன்றதைச் செய்கிறேன். இப்பொழுது அவர்கள் யார் என்று தெரிந்துவிட்டதால், அவர்களுக்குரிய வாழ்க்கையைக் கண்டு பிடிப்பதில் கடினமிருக்காது. இதை விரிக்கிறேன். ஆஞல் சாக்ரடீஸ்! இந்த விளக்கம் கரடு முரடாகவும் மென்மையில்லாதது போலவும் உனக்குத் தோன்றலாமாதலால் இனிவரும் சொற்கள் என்னுடையவை அல்ல என்று எண்ணுமாறு கேட்டுக் கொள்கிறேன். அநீதியின் புகழ் பாடுவோரின் சொற்கள் அவை. அவர்கள் சொல்வார்கள்: அநீதியாளஞகக் கருதப்படுகிற நீதியாளன் சவுக்கடிபட்டு, மிதிபட்டு, கட்டுப்பட்டு, எரிதழலிஞற் கண்ணிழந்து அனைத்துத் துன்பங்களையும் அநுபவித்த பிறகு, இறுதியில் கழுவேற்றப்படுவான். பிறகு அவன் நீதியாளஞகத் தோற்றமளிக்க வேண்டுமேயன்றி, நீதியாளஞக இருக்கக்கூடாது, என்று புரிந்துகொள்வான். எஸ்கைலஸ் சொன்னது நீதியாளனைவிட அநீதியாளனுக்கு மிகப் பொருந்தும். ஏனெனில் ஓர் உண்மைத் தத்துவத்தைப் பின்பற்றிச் செல்கிருன். வெறும் தோற்றங்களுக்காக அவன் வாழவில்லை; அவன் உண்மையாகவே அநீதியாளஞக இருக்க விரும்புகிருன், வெளித்தோற்றத்திலல்ல.

"ஆழமும் வளமுமிருந்த விளைநிலம் அவன் மனம். அதனினின்றும் எழுகின்றன சமயோசிதமான அறிவுரைகள்".

முதலில் அவன் நீதிவழி நடப்பதாகக் கருதப்படுகிருன்; ஆகவே அவன் வைத்தது சட்டமாகிறது. அவன் விரும்பியவர்களைத் திருமணம் புரிந்து கொள்ளலாம். திருமணம் செய்து கொடுக்கலாம். தன்னுடைய நலத்திற்காக மட்டும் விரும்பியபடி விரும்பிய இடத்திலே விரும்பியபோது வணிகம் செய்ய உரிமையுண்டு அவனுக்கு. காரணம், அநீதியைப் பற்றி அவனுக்குத் தவருன கருத்து, தயக்கம் ஏதும் கிடையாது. போட்டிகள் அனைத்திலும், அந்தரங்கமாக நடந்தாலும் சரி, பகிரங்கமாக நடந்தாலும் சரி, அவனே தன் எதிரிகளை வெற்றி கொள்கிருன். அவர்கள் தோற்க, அவனிடம் செல்வம் குவிகிறது. இச் செல்வத்தைக் கொண்டு அவன் தனது நண்பர்களுக்கு நன்மையையும், பகைவர்க்குத் தீமையையும் செய்கிருன். மேலும், அவனுல் தேவர்களுக்குப் பலியிடவும், பெரிய உயரிய காணிக்கைகளை வாரி வாரி வழங்கவும் முடியும்; தான் விரும்புகிற எந்த மனிதனையும், தெய்வத்தையும் நீதியாளரைவிட நன்ருக அவனுல் பாராட்ட முடியும். ஆகவே அவன் நீதியாளனைவிட, தேவர்க்கு மிக வேண்டியவனுக இருப்பது சாத்தியமே. எனவே சாக்ரடீஸ்! தேவரும் மனிதரும், அநீதியாளனுடைய வாழ்க்கையை நீதியாளனுடையதை விடச் சிறந்ததாக ஆக்குவதில் இணைந்து போவதாகச் சொல்லப்படுகிருர்கள்.

(சாக்ரடீஸ் கிளாக்கனுக்கு விடையிறுக்க முயலுங்கால், அவனுடைய சகோதரன், அதைமாந்தஸ் குறுக்கிட்டான்.)

அதைமாந்தஸ் : சாக்ரடீஸ்! இனி எதும் சொல்லப்படவேண்டியதில்லை என்று கருதுகிறீரா?

சாக்ரடீஸ் : ஏன்? வேறு என்ன இருக்கிறது?

அதைமாந்தஸ் : மிக முக்கியமான பொருள் குறிப்பிடக்கூடப் பெறவில்லை.

சாக்ரடீஸ் : சரி அப்படியானுல் 'சகோதரனுக்குச் சகோதரன் உதவிபுரியட்டும்' என்ற பழமொழிக்கிணங்க, கிளாக்கன், என்னைக் குழிவெட்டிப் புதைக்கவும் நீதிக்கு உதவி புரியும் திறனைப் பறிக்கவும் தேவையான அனைத்தையும் ஏற்கனவே

சொல்லி விட்டானுனாலும், அவன் தவறிய பகுதி ஏதேனு மிருப்பின் அவனுக்குத் துணை புரிகிருயா?

அதைமாந்தஸ்: அறிவீனம். ஆனுல் மேலும் ஒன்றைச் சேர்த்துச் சொல்கிறேன். நீதி, அநீதி ஆகியவற்றைப் புகழ்ந்தும் இகழ்ந்தும் பேசிய கிளாக்கனின் வாதத்திற்கு இன்னேர் அம்சமும் உண்டு. அவன் கருத்து என்று நான் நம்புவதை விளக்குவதற்கு அதுவும் வேண்டும்.

பெற்ருேர்களும் ஆசிரியர்களும் தங்கள் புதல்வர்களேயும் வகுப்பு மாணவர்களேயும் நீதிவழி நடக்க வேண்டும் என்று எப்பொழுதும் சொல்கிருர்கள். ஆனுல் ஏன்? நீதிக்காக அல்ல; ஆனுல், ஒழுக்கம் புகழ் இவற்றின் பொருட்டே. அநீதியாளனுக இருந்தும் நீதியாளன் என்று பெயர் பெற்ற வனுக்குக் கிடைப்பதாகக் கிளாக்கன் தொகுத்துக் கூறிய பதவி, திருமணம் போன்ற நன்மைகள் நீதியாளன் எனக் கொள்ளப்படுவோர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இவ்வாறு சொல்லுகின்றனர். இந்த வகுப் பார் மற்றெல்லாரையும்விட, வெறும் தோற்றங்களே மிகைப் படுத்துகிருர்கள். ஏனெனில் கடவுளின் நல்ல அபிப்பிராயத் தின் பேரில் தெய்வப் பற்று உடையவர் மீது வானகம் பல நலன்களேப் பொழிகிறது என நம்மிடம் சொல்வர். மேதக்க ஹெசியடும்[1] ஹோமரும்[2] சொன்னவற்றுக்கு இது நன்கு பொருந்துகிறது; ஹீசியடு சொல்கிருர்.

"நீதியாளருடைய ஓக் மரங்களின் உச்சியில் பயனு கிய விதைகளேயும், இடையில் வண்டு முரலத் தேனேயும் கடவுளர் தருவர். மேலும், ஆடுகள் தங்கள் உரோமத்தின் சுமை தாங்காது தாழ்ந்து தளர்நடை போடச் செய்வர்". இனேய பிற நலன்களும் நீதியாளருக்கு அளிக்கப்படு கின்றன. ஹோமரும் இதையொத்த வகையில் பேசுகிருர். ஏனெனில் ஒருவனேப் பற்றிச் சொல்லுகிறபொழுது அவனது புகழ் "நீதியை நிலேநாட்டும், இகழ்ச்சியற்ற மன்னனது புகழ் கடவுளேப் போன்றது. அவனுக்கு இக்கருநிலம் உணவு தானியங்களே வாரி வழங்குகிறது. அவன் நாட்டு மரங்கள் பழச்சுமை தாங்காது தாழ்ந்து நிற்கின்றன. அவனுடைய ஆடுகள் பயன்தரத் தவறுவதில்லே. கடல் மீனினத்தைத் தருகிறது" என்று சொல்கிருர்.

---

1. Hesiod. 2. Homer.

நீதியாளருக்குரியதென மூஸீயஸும்[1] அவன் மகனும் குறிப்பிடும் வானகப் பரிசுகள் இதைவிடச் சிறந்தவை. அவைகள் கீழுள்ள உலகிற்கு அழைத்துச் செல்கின்றன. அங்கு அறவோர் சாய்வு நாற்காலிகளில் விருந்துண்டு களைப்பாறுவதைக் காணலாம். குடிமயக்கம் தீராதவர்களாய், மாலை அணிந்தவர்களாய்க் காணப்பெற்றனர். அறத்தின் உயரிய பரிசு, இறவா மருந்தாகும் அமுதம் குடியே என எண்ணினர். இத்தகைய பரிசுகளைச் சிலர் மேலும் விரிவுடையதென எண்ணினர். நம்பிக்கையும் நீதியுமுடையோர்களின் வழித் தோன்றல்கள் மூன்று நான்கு தலைமுறைகள் நீடித்து வாழ்வர். இவ்வகையில் தான் அவர்கள் நீதியைப் போற்றுகின்றனர். அறநெறி பிறழ்ந்தோர் பற்றிய கூற்றோ வேறு வகையானது. நரகத்தில் இவர்கள் சேற்றில் புதைக்கப்படுகின்றனர். சல்லடையில் தண்ணீர் கொண்டு வருமாறு ஏவப்படுகின்றனர். அவர்கள் வாழுங்காலமெலாம் இகழ்ச்சிக்கு உள்ளாகின்றனர். அநீதியாளர் எனப் பெயர் பெற்ற நீதியாளரின் உரிய பகுதியெனக் கிளாக்கன் கூறிய தண்டனைகளும் இவர்களுக்கு விதிக்கப்படுகின்றன.

சாக்ரடீஸ்! மற்றும் நீதியையும் அநீதியையும் கருதுகிற ஒரு வழியை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறேன். கவிஞர்களிடத்து மட்டும் காணாது உரைநடை ஆசிரியர்களிடத்துக் காணக் கூடியதாய் விளங்கும் வழியைக் கருதுவீராக. மனித இனத்தின் பொதுமைக் குரல் நீதியும் அறமும் எந்நாளும் மதிப்பிற்கு உரியன எனச் சாற்றுகின்றது. ஆனால் அவற்றின் நெறி நிற்போர் துன்பத்திற்கும் உழைப்பிற்கும் உள்ளாகின்றனர். மறத்தாலும், அநீதியாலும் விளையும் இன்பங்களோ எளிதில் அடையத்தக்கன. ஆனால் பொது மக்களாலும் சட்டங்களாலும் மட்டும் கடியப் பெறுவன. நேர்மை, நேர்மையல்லாததை விடப் பயன் குறைந்தது. அறநெறி பிறழ்ந்தோர், பொருள் வளம் அல்லது வேறு வகையில் செல்வாக்கு உள்ளவராக இருப்பின், அவர்களை மக்கள் மகிழ்ச்சியுடையோரெனக் கருத முன்வருகின்றனர்; அவர்களைத் தனி நிலையிலும் பொது நிலையிலும் போற்றுவர். ஆனால், எளியோரும் வறியோருமாயின், ஏனையோரை விடச் சிறந்தவரென ஏற்கப் பெறினும், மக்களால் புறக்

1. Museus.

கணிக்கப் பெற்று, இகழப் பெறுவர். ஆனால் இவற்றை யெல்லாம் விட அறங் குறித்தும், தெய்வங் குறித்தும் இவர்கள் பேசிவந்த முறையே வியப்பளிக்கிறது. அறநெறி நிற்கும் நல்லோர் பலர்க்கு இன்னலையும் இடுக்கணையும் மகிழ்ச்சியையும் தெய்வங்கள் வழங்குகின்றன எனக் கூறுவர். தீயோர்க்கு நலனையும் வருமுன் உரைப்போராகிய துறவிகள், செல்வர்கள் வாயிலில் நின்று கொண்டு செல்வர்கள் செய்த மறச் செயல்கட்கும், அவர்களது முன்னோர்களின் பாவச் செயல்களுக்கும் பலிகள், மந்திரங்கள், விழாக்கள், விருந்துகள் மூலம் கழுவாய் தேடும் ஆற்றல் தெய்வங்களால் அளிக்கப்பட்டுள்ளனர் என்று நம்பச் செய்கின்றனர். சிறு செலவில் பகைவனை - நல்லவனாயினும் தீயவனாயினும் - துன்புறுத்துவதாக வாக்களிக்கின்றனர். மாயைகளாலும் மந்திரங்களாலும் தெய்வங்களைத் தமது மறச் செயல்களுக்கு இசையுமாறு செய்து, தம் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொள்ளலாமென்கின்றனர். கவிஞர்களே இங்கு இதற்குச் சான்றாகக் கூறுகின்றனர். ஹெஸியடு[1] என்பாரின் சொற்கள் கொண்டு மறநெறி முறை எளிமையுடையதாகக் காட்டப் படுகின்றது.

"மறச் செயல்களைத் துன்பமின்றிப் பெருக்கிக் கொள்ளலாம். வழி எளியதே. அவள் வாழும் இடம் அணித்தேயாகும். ஆனால் அறநெறி முறையைத் தெய்வங்கள் கடியதாக்குகின்றனர்". மேலும், வழியானது சோர்வை அளிக்கிறது, துன்பகரமானது. தெய்வங்களை மனிதர் இசைவித்தல் கூடும் என்பதற்கு ஹோமர், சான்றாகக் கூறப் பெறுகிறார். ஹோமர் கூறுவதாவது—

"தெய்வங்களையும் தம் குறிக்கோளிலிருந்து விலகவைத்தல் கூடும். பிழை செய்த காலத்தும் நெறி பிறழ்ந்த காலத்தும் மக்கள் தெய்வங்களை நோக்கி இறைஞ்சி, பலிகளாலும், கொழுத்த பூசைகளாலும், நறுமணம் வீசும் தேறல்களாலும் இரங்குவிக்கும் முறையீடுகளாலும், தெய்வங்களின் சினத்தைத் தவிர்க்க வைக்கலாம் என்றும் கூறுகிறார்.

[2] முஸீயஸ், [3] ஆர்பியூஸ் என்னும் இருவரும் நிலவு, கலைக்கடவுள் ஆகியோரின் புதல்வர்களாவர். இவ்விருவரும் எண்ணிறந்த நூல்களை எழுதியுள்ளனர். இந்நூல்களில்

1. Hesiod. 2. Musaeus. 3. Orpheus.

குறித்த வண்ணம் சடங்குகள் செய்யப்பெறுகின்றன. தனி நிலையில் விளங்குவோரன்றி முழு நகரங்களும் இத்தகைய சடங்குகளில் ஈடுபட்டு ஓய்வு நேரத்தில் மறச் செயல்களுக்குக் கழுவாய் பலிகள் மூலமாகவும், களியாட்டங்கள் மூலமாகவும் காணுதல் கூடும் என்று இணங்க வைக்கின்றனர். இத்தகைய நிலைகள் வாழ்வோர்க்கும் இறந்தோர்க்கும் ஒத்த வகையில் உரியனவே. இவைகளில் பின் அமைப்பவைகளைப் புதிரான செயல்நிலைகள் என அழைக்கின்றோம். இவை நரகத்தின் துன்ப நிலைகளினின்று மீட்கின்றன; ஆனால் இச் செயல்களை நாம் புறக்கணித்தால் என்ன விளையும் என்பது ஒருவருக்கும் தெரியாது.

மேலும் அவர் தொடர்ந்து கூறியது! இளைஞர்கள் அறமும் மறமும் குறித்த இவையனைத்தையும் கேட்கும் போதும், தெய்வங்களும் மனிதரும் எவ்வகையில் இவற்றைக் கருதுகின்றனர் என்பதை அறியும்போதும் அவர்கள் மனம் எவ்வகையில் மாற்றங் கொள்ளும்? அருமை சாக்ரடீஸ்! இளைஞர்களுள், அறிவு நலம் சான்றவர்கள், மிகவும் எளிதிலே மேற்கூறியவைகளைக் கேட்டு மாற்றமுறுவர். பறக்கும் தேனீக்கள் போன்று விரைவில் கருத்துக்களைப் பற்றுவர். பூக்கள்தோறும் சென்று நுகரும் தேனீக்களைப் போலக் கருத்துக்கள் பலவற்றை ஒன்று சேர்த்து முடிபு காண்பர். வாழ்விலிருந்து சிறந்த நலன்களைப் பெறுதற்குத் தாம் எத்தகையவர்களாக இருத்தல் வேண்டும் எவ்வாறு ஒழுகுதல் வேண்டும் என்றும், அறிய முற்படுவர். இளைஞன் ஒருவன் : தன்னுள்

"எனது வாழ்நாளில் எந்நாளும் அறனென விளங்கத் தக்க உயர்ந்த நிலை ஒன்றை நீதி முறையாலோ அல்லது பிறழ்ந்த வழிகளாலோ அடைதல் இயலுமோ" என்று பிண்டார் கூறியவண்ணம் நினைக்கக்கூடும்.

மக்கள் கூறுவது : நாம் நீதியாளனாக உண்மையிலேயே விளங்கி மற்றையோரால் நீதியாளன் எனக் கருதப் பெறுவிட்டால், விளையும் பயன் ஏதும் இல்லை; ஆனால் ஏற்படும் துன்பமும் இழப்பும் உறுதியாகும். நான் ஒழுகும் பொழுது நீதியின் புகழ்ச்சியைப் பெறுகின்றேன். விண்ணுலக வாழ்வு எனக்கு உறுதி கூறப் பெறுகின்றது. தோற்ற நிலை, உண்மையின்மீது ஆட்சி செலுத்துவதும், இன்பத்

தின் தலைமையை ஏற்பதும், தத்துவ அறிஞர்கள் நிறுவுவது போல உண்மையானால் நாம் தோற்ற நிலையிலேயே ஈடுபடுதல் வேண்டும். அறத்தையும் அதன் சாயலையும் என்னைச் சுற்றி எனது இல்லத்தின் முன் கூடமாகவும் வெளிப்புறமாகவும் உடைய படம் வரைவேன்; பின்புறத்தில் நுட்ப அறிவும் நரியின் தந்திரமுமுள்ள அறவோருள் தலைசிறந்த ஆர்கிலோகஸ்[1] என்பவர் கூறுகின்றவாறு வரைவேன். மறமான செயல்களை மறைத்தல் எளிதன்று என்று சிலர் கூறுவது என் காதுகளில் ஒலிக்கின்றது. இதற்கு நான் கூறும் மறுமொழி - பெருநெறி எதுவும் எளிதன்று; எனினும் இவ்வழக்குரை சுட்டுவது யாதெனில் மகிழ்ச்சியடைதற்குரிய நெறி இதுவேயாகும். மறைத்தல் குறித்து அரசியல் குழுக்களும் அந்தரங்கக் குழுக்களும், சகோதரப் பாங்குடையவர்களும் அமைக்கப் பெறல் வேண்டும். அரசவைகளிலும், நீதிமன்றங்களிலும் எவ்வாறு பிறர் தமது கருத்தை ஏற்குமாறு செய்தல் என்பது குறித்துத் திறம்படக் கருத்துக்களைக் கோவை செய்து கூறும் முறைகளில் வல்ல பேராசிரியர்கள் உளர். எடுத்துரைக்கும் முறைகளால் இசைவு பெறுதல் ஒருவகையாகும். மற்றொருவகை வன்மையினால் இசைய வைத்தல் ஆகும். இம்முறைகளால் உரியதல்லாத நலன்களை நான் பெறுவேன் ஆவேன்; தண்டனைக்கு உள்ளாகமாட்டேன். மற்றொரு புறம் என் செவியில் ஒலிப்பது, தெய்வங்களை ஏமாற்றவும் இயலாது; வற்புறுத்தி நம் கருத்திற்கு ஏற்ப இசைவித்தலும் இயலாது என்பது. ஆனால் தெய்வங்கள் இல்லாமல் இருந்தால் என்ன? அல்லது மனிதர்களைப் பற்றித் தெய்வங்கள் கவலை கொள்வதில்லை என்று கருதினால் என்ன? இவ்வாறு கருதுவதில் மறைத்தலைப் பற்றிக் கவலை கொள்ள வேண்டுவதில்லை. மரபு உரைகளினின்றும் கவிஞர்கள் தருகின்ற மரபுவழிப் பட்டியலினின்றும், தெய்வங்களைப் பற்றி அறிகிறோம். அவை மனிதர்களைப் பற்றிக் கவலை கொள்வதாக அறிவதும் கவிதைகள் மூலமாகவே ஆகும். இக்கவிஞர்களின் வாயிலாகவே தெய்வங்களை இசைவித்தல் கூடும் என்றும் அறிகிறோம். பலிகள், முறையீடுகள், மகிழ்ச்சியளிக்கும் பரிசுகள் ஆகியவற்றைக்

1. Archilochus.

கொண்டு தெய்வங்களை நம் கருத்திற்கேற்ப மாற்றுதல் இயலும் என்கின்ற செய்தியும் கவிஞர்களே உரைக்கின்றனர். ஆதலால் நாம் முரணுமல் இரண்டையும் நம்புவோம். அல்லது இரண்டையும் நம்பாமல் விடுவோம். கவிஞர்கள் உண்மையைப் பேசுவதானுல், நாம் மற வழியில் நிற்பதைச் சிறப்பாகக் கருதுவது ஏன்? அறநெறி நிற்பதனுல் விண்ணகத்தின் வஞ்சத்திலிருந்து தப்பலாம்; ஆனுல் அநீதியினுல் விளையத்தக்க நலன்களை இழக்க நேரும். ஆனுல் அநீதியாக நடந்தால் நலன்களைப் பெறுவோம்; பாவம் செய்தலாலும் பிரார்த்தித்தலாலும், பிரார்த்தித்தலாலும் பாவம் செய்தலாலும் தெய்வங்களைத் திருப்தி செய்யலாம்; நாமும் தண்டனையிலிருந்து மீளுவோம்.

"ஆனுல் வேருரு உலகுண்டு, நாமோ அல்லது அடுத்துவரும் சந்ததியினரோ அநீதியான பிழைகட்கு வருந்துவோம்."

எனது அருமை நண்ப! சிந்தனை இதனை ஒப்பும்; எனினும் புதிர்கள் உண்டு; கழுவாயேற்கும் தெய்வங்கள் உண்டு; இவர்கட்குப் பேராற்றல் உண்டு. இவ்வுண்மையைப் பெருநகரங்கள் சாற்றுகின்றன. கவிஞர்களும் வருமுன் உரைப்பவர்களும் ஆகிய தெய்வங்களின் குழந்தைகளும், ஒத்த நிலையில் இதற்குச் சான்று அளிக்கின்றனர்.

அப்படியானுல் மிகவும் தாழ்ந்த அநீதியைவிட நீதியைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு?

இந்நிலையில் அநீதியோடு தோற்ற நிலை பற்றிய ஏமாற்றும்மதிப்பை இணைப்போமேயானுல் மனிதர்களோடும் தெய்வங்களோடும் இம்மையிலும் மறுமையிலும் இயைய ஒழுகலாம். இவ்வாறே எண்ணிறந்த உயரிய செல்வாக்குடையோர் கூறுகின்றனர்.

சாக்ரடீஸ்! இதையெல்லாம் தெரிந்துகொண்டு மனத்தால், ஆளுமையால் பதவியால் அல்லது செல்வத்தால் உயர்வுடையவன் எப்படி நீதியைப் பாராட்ட முடியும்? அல்லது நீதி புகழப்படுகிறபொழுது எப்படி நகைக்காமல் இருக்க முடியும்? நீதிதான் மிகச் சிறந்தது என்று கருதும் ஒருவன் இருந்து என்னுடைய கூற்றைப் பொய்யென நிரூபிக்க வல்லவனுக இருப்பின், அவனும் அநீதியாளரைச் சினந்து கொள்ளாது, அவர்களை மன்னிக்க முற்படுவான். ஏனென்ருல் மனிதர்கள் சுயேச்சையாக நீதிவழி நடக்க

வில்லை என்று அவனுக்குத் தெரியும். ஒருவேளை தன்னுள் இருக்கும் தெய்வீகத்தால் அநீதியை வெறுக்கும்படி உந்தப்படுபவன் ஒருவன் இருக்கலாம்; அல்லது உண்மையைப் பற்றிய ஞானத்தை அவன் அடைந்தவனாக இருக்கலாம். அன்றி வேறு எவனும் நிச்சயமாக இருக்க முடியாது. கோழைத்தனம், மூப்பு அல்லது ஏதோ ஒரு வலிமைக் குறைவு இவற்றால் அநீதியாளனாக இருக்க முடியாதவன்தான் அநீதியைப் பழிக்கிறான். அவன் அதிகாரத்திற்கு வந்தவுடன் தன்னால் முடிந்த அளவுக்கு அநீதியிழைக்கிறான் என்பதனால் இது நிரூபிக்கப்படுகிறது.

சாக்ரடீஸ்! இதற்கெல்லாம் காரணத்தை எனது சகோதரனும், நானும் விவாதத்தின் தொடக்கத்திலேயே காட்டினோம். நீதியைப் புகழ்ந்து போற்றும் அனைவரிலும்—பெயர் பெற்ற பண்டைய வீரர்கள் தொடங்கி நம் காலத்து மனிதர்கள் முடிய—அவற்றால் வரும் சிறப்புக்கள், பெருமைகள், பயன்கள், ஆகியவற்றைக் கருதியன்றி யாரும் அநீதியைப் பழித்ததுமில்லை, நீதியைப் புகழ்ந்ததுமில்லை என்பதைக் காண நானும் என் சகோதரனும் எவ்வளவு வியந்தோம் என்பதை உனக்குச் சொன்னபோதே அதன் காரணத்தைத் தெரியப்படுத்தினோம். மனிதனுக்கோ தெய்வத்திற்கோ புலப்படாது ஆன்மாவின் உள்ளே நிலைத்திருக்கும் நீதி, அநீதி ஆகியவற்றின் உண்மைத் தன்மையைச் செய்யுளிலோ, உரைநடையிலோ எவரும் இன்னும் விளக்கவில்லை; அல்லது மனிதனது ஆன்மாவில் இருக்கும் அத்தனை பொருள்களிலும் நீதிதான் மிகப் பெரிய நலன் என்றோ, அநீதிதான் மிகப் பெரிய தீமை என்றோ எவரும் காட்டவில்லை. இதுவே உலக முழுவதற்கும் அவசியமான பண்பாக இருந்தால், நீங்கள் இதன் நன்மையைப் பற்றி விரிவாக எங்கள் இளமைப்பருவந்தொட்டே எடுத்துச் சொல்லி இணங்க வைத்திருந்தால், தவறிழைக்காது ஒருவரை ஒருவர் கண்காணிக்க அவசியம் இருந்திராது; மாறாக, ஒவ்வொருவனும் தன்னைத்தானே கவனித்துக்கொண்டிருப்பான். ஏனெனில், தான் தவறிழைத்தால் தீமைகளுக்குள் மிகப் பெரிய தீமையான அநீதிக்குத் தன்னுள்ளே இடங்கொடுக்கிறோமே என்ற அச்சத்தால். உறுதியாகச் சொல்கிறேன், திராசிமாக்கசும் மற்றவர்களும் நான் சொன்னதைவிடக் காரசாரமாக நீதி,

அநீதி இவற்றின் தன்மையையே மிகவும் புரட்டிக் கூறுவார்கள். ஆனால் நான் இப்படி ஆத்திரமாகப் பேசுவதன் காரணம் உங்களிடம் ஒளிமறைவின்றி சொல்கிறேன்—எதிர்த்தரப்பு வாதத்தை நீர் சொல்லிக் கேட்க ஆசைப்படுகிறேன். அநீதியைவிட நீதி எவ்வாறு உயர்ந்தது என்பதை மட்டுமல்ல, அவற்றைக் கடைப்பிடிப்பவனிடம், ஒன்றை அவனுக்கு நல்லதாகவும் மற்றதைத் தீயதாகவும் ஆக்கும் விளைவையும் பற்றி நீர் விளக்கம் தரவேண்டும். மேலும் கிளாக்கன் உங்களைக் கேட்டுக் கொண்டதைப்போல, புகழை நீக்கிவிடுக. ஏனென்றால் நீர் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் உண்மையான புகழை நீக்கி அதன் மாற்றைச் சேர்க்காவிடில், நீதியை அப்படியே புகழவில்லை, அதன் தோற்றத்தையே பாராட்டுகிறீர் என்று சொல்வோம். மேலும் அநீதியை இருட்டடிப்புச் செய்ய எங்களைத் தூண்டுகிறீர் என்றும், திராசிமாக்கசின் கருத்தான நீதியென்பது மற்றவனின் நலம் - வலியவனின் நலம் - அநீதியென்பது எளியவருக்குத் துன்பம் விளைவிப்பதானாலும் வலியவனின் சொந்த லாபமும், நலமும் என்பதை நீர் ஒப்புக்கொள்கிறீர் என்றும் நாங்கள் கருதுவோம். வழக்கமுறை நலன் மட்டுமல்லாமல் அவற்றின் விளைவுகளுக்காகவும், அதைவிடச் சிறப்பாக அவற்றின் பொருட்டே விரும்பப்படுகிற பார்வை, கேள்வி, அறிவு, உடல்நலம் போன்ற உண்மையானவையாயும் இயற்கையானவையாயும் இருக்கிற உயரிய நலன் வகைகளுள் நீதி ஒன்று என நீர் ஒப்புக்கொண்டு விட்டதால், நீதியைப் புகழ்வதில் ஓர் அம்சத்தை மட்டும் கருத வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் : அதாவது நீதியும் அநீதியும் அவற்றைக் கடைப்பிடிப்பவர்களிடம் ஏற்படுத்துகிற இன்றியமையாத நன்மையையும் தீமையையும் நீர் கவனிக்கவேண்டும். பிறர் நீதியையும் அதன் பயன்களையும், பெருமைகளையும் மிகைப்படுத்திப் புகழட்டும்; அநீதியைக் குறை சொல்லி இகழட்டும். அத்தகைய வாதத்தை அவர்கள் சொல்லக் கேட்கும்போது நான் சகித்துக்கொள்ளத் தயாராகயிருக்கிறேன். நேர்மாறாக நீர் உம் வாயால் சொன்னாலன்றி—இந்தப் பிரச்னையை அலசிப் பார்ப்பதில் வாழ்நாள் முழுவதையும் கழித்த உம்மிடமிருந்து—நான் இதனிலும் சிறந்த வாதத்தை எதிர்பார்க்கிறேன். ஆதலின் நீதி, அநீதியைவிடச் சிறந்தது என்பதை

நிரூபிப்பதோடு அவற்றுள் எது எது தங்களைத் தழுவியவர்களுக்கு என்னென்ன பயனை விளைவிக்கின்றது என்றும், எந்த ஒன்று நல்லதாகவும் மற்றது தீயதாகவும்–(கடவுளராலும் மக்களாலும் காணப் பெறினும், பெருவிடினும் சரி) செய்கின்றது என்பதையும் நீர் காட்டவேண்டும்.

[கிளாக்கன், அதைமாந்தஸ் ஆகியோருடைய அறிவுத் திறனைக் கண்டு எப்பொழுதுமே நான் பாராட்டி வந்திருக்கிறேன். இந்தச் சொற்களைக் கேட்டதும் என் மனம் உவகை பூத்தது. நான் சொன்னேன் :]

சாக்ரடீஸ் : புகழ்ச் செல்வரின் மைந்தர்களே, நீங்களிருவரும் மெகாராப் போரில் அருஞ்சமர் விளைத்த பின்னர், கிளாக்கனின் அன்பன் ஒருவன் உங்களைப்பற்றிப் பாடிய இரங்கற் பாடல்களுக்கு "அரிஸ்டஸின் புதல்வர்களே, புகழ் மிக்க ஒருவனின் தெய்வீகக் குழந்தைகளே" என்று அவன் தொடங்கிப் பாடியது தீங்கான, தவருன தொடக்கமாக இல்லை! இந்த அடைமொழி மிகப் பொருத்தமாயிருக்கிறது. ஏனெனில் நீங்கள் செய்ததுபோல் அநீதியே உயர்ந்தது என்று வாதம் செய்தும், உங்கள் வாதத்திஞல் நீங்களே அதில் போதிய நம்பிக்கை வைக்காமலிருத்தல் உண்மையில் தெய்வீகமே. உங்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்று நிச்சயமாக நம்புகிறேன். இதை உங்களுடைய பொதுக் குணவியல்பிலிருந்து ஊகிக்கிறேன்; ஏனெனில் உங்களுடைய பேச்சுக்களிலிருந்து உங்களைக் கணித்திருந்தால் உங்களை மாருக நம்பியிருப்பேன். ஆஞல் உங்கள்பால் எனக்கு நம்பிக்கை அதிகம் விழுந்திருப்பதாலேயே எதைச் சொல்வது என்று தெரிந்துகொள்வதே எனக்குப் பெரிதும் கடினமாயிருக்கிறது. ஏனெனில் நான் இருதலைக் கொள்ளியின் இடையேயிருக்கிறேன். ஒரு மருங்கில் நான் இந்தப் பணிக்குத் தகுதியற்றவன் என்று உணர்கிறேன். மேலும் என்னுடைய திறமையின்மை நான் திராசிமாக்கசுக்கு அநீதியைவிட நீதி உயர்ந்தது என்று நிரூபித்து விட்டதாக நான் நினைத்துத் தந்த விளக்கத்தால் நீங்கள் திருப்தியடையவில்லை என்பதிலிருந்து எனக்குத் தெரிகிறது. இருந்தாலும், எனக்குப் பேச்சும் மூச்சும் உள்ளவரையில் உதவி புரிய முடியாது என்று சொல்ல முடியாது. நீதி இகழப்படுகிறபோது அங்கே இருந்தும், நீதிக்குப் பரிந்துபேசக் கைதூக்கவில்லை

யென்றால் தெய்வத்தை அவமதிப்பதற்கொப்பாகும் என்று அஞ்சுகிறேன். ஆதலின் என்னால் இயன்ற அளவு உதவி செய்வதே நல்லது.

[கிளாக்கனும் மற்றவர்களும் பிரச்னையைக் கைவிட்டு விட வேண்டாமென்றும், ஆய்வைத் தொடருமாறும் பல் வகையானும் வேண்டினர். முதற்கண், நீதி, அநீதி ஆகிய வற்றின் தன்மையைப் பற்றியும், இரண்டாவதாக முறையே அவற்றின் நலன்களின் தரம் பற்றியும் உண்மையை அறிய வேண்டுமென்று விரும்பினர். இந்த ஆய்வு மிகக் கடினமானதாக இருக்குமென்றும், அதை நல்ல முறையில் அணுகவேண்டும் என்றும் நான் நினைத்ததை அவர்களுக் குச் சொன்னேன்.]

சாக்ரடீஸ்: நாம் பெரிய அறிவாளிகளில்லை என்று தெரிந்த பின்னர், ஒரு முறையைக் கடைப்பிடிப்பது நல்லது என்று எண்ணுகிறேன். அதைப் பின்வருமாறு விளக்குகிறேன். கிட்டப்பார்வையுள்ளவன் ஒருவன், யாரோ ஒருவனால் சிறிய எழுத்துக்களைச் சற்றுத் தொலைவிலிருந்து படிக்கச் சொல்லப் பட்டதாக வைத்துக்கொள்வோம். மற்றொருவனுக்கு இதை விடப் பெரிய இடத்தில் பெரிய எழுத்துக்கள் இருக்கக்கூடு மெனத் தோன்றி, அந்த எழுத்துக்கள் அதே எழுத்துக் களாகவும் இருந்தால், பெரிய எழுத்துக்களை முதலில் படிக்க முடிந்து, பின்னர் சிறிய எழுத்துக்களுக்குப் போகலாம் என் றால் இது ஓர் அரிய நற்பேறு எனக் கருதப்படும் அல்லவா?

அதைமாந்தஸ்: சாலவும் உண்மை. ஆனால் இந்த எடுத்துக் காட்டு எப்படி நம்முடைய ஆய்வுக்குப் பொருந்தும்?

சாக்ரடீஸ்: சொல்கிறேன்; நம்முடைய ஆய்வுப் பொருளான நீதி—உனக்குத்தான் தெரியுமே - சில சமயங்களில் தனி மனிதனின் நற்பண்பு என்றும் சில சமயங்களில் அரசின் நற்பண்பு என்றும் பேசப்படுகிறது.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: தனி மனிதனைவிட அரசு பெரியதல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: ஆகவே, பெரியதில் நீதி அளவில் அதிக மாக இருக்கக்கூடும்; அதனால் எளிதில் தெரியக்கூடும். முதலில், நீதியும் அநீதியும் அரசில் இருக்கிற மாதிரியும்,

பின்னர் தனி மனிதனிடத்தில் இருக்கிற மாதிரியும் - பெரிய திலிருந்து சிறியதுக்குச் சென்று, அவற்றை ஒப்புநோக்கி ஆய்வை நடாத்த வேண்டும் என்று நான் சொல்கிறேன்.

அதைமாந்தஸ்: அது மிக மிக அருமையான யோசனே.

சாக்ரடீஸ்: அரசு உருவாகும் தறுவாயில் இருப்பதாக எண்ணிக்கொண்டோமானுல், நீதியும், அநீதியும்கூட அவ்வாறு உருவாகும் வகையில் பார்ப்போம்.

அதைமாந்தஸ்: ஒப்புக்கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: அரசு நிறைவுற்றதும் நாம் தேடுகின்ற பொருளே மேலும் எளிதில் கண்டுபிடித்துவிடலாம் என்று நம்பிக்கை இருக்கும்.

அதைமாந்தஸ்: ஆம், மிக எளிதில் கண்டுபிடித்துவிடலாம்.

சாக்ரடீஸ்: ஆனுல் அப்படி ஓர் அரசை நிர்மாணிக்க முயல வேண்டுமா? ஏனெனில் அப்படிச் செய்வது மிகக் கடினமான வேலேயாயிருக்கும், என்று எனக்கு எண்ணத் தோன்றுகிறது; ஆகவே யோசித்துப்பார்.

அதைமாந்தஸ்: நான் யோசித்துப் பார்த்துவிட்டேன். நீ மேலே தொடரவேண்டும் என்றுதான் மிக்க அவாக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: மனித குலத்தின் தேவைகளினுல் அரசு உண்டாகிறது என்று நான் கருதுகிறேன். நம் அனேவருக்கும் பல தேவைகள் இருக்கின்றன. யாரும் தன்னிறைவு உடையவராக இல்லே. வேறு எவ்வகையிலேனும் அரசின் தோற்றத்தைக் கற்பனே செய்ய முடிகிறதா?

அதைமாந்தஸ்: இல்லே, வேறுவகையாயிருக்க வழியில்லே.

சாக்ரடீஸ்: ஆகவே நமக்குப் பல தேவைகளிருப்பதாலும், பலர் அந்தத் தேவைகளுக்கேற்ப பல பொருள்களே வழங்க வேண்டியிருப்பதாலும், ஒருவன் ஒரு நோக்கத்திற்காக இன்னெருவனது உதவியை நாடுகிருன். மற்றென்றுக்காக பிறிதொருவனது உதவியை நாடுகிருன். இந்தக் கூட்டாளிகளும் உதவி செய்பவர்களும் ஓர் இடத்தில் கூடியிருந்தால், அக்குழுவை அரசு என்று சொல்கிறேம்.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: மேலும், அவர்கள் தங்களுக்குள் கொடுப்பதும் கொள்வதுமாக இருக்கிருர்கள். ஒருவர் கொடுக்க மற்றெருவர்

வாங்குகிறுர் - இப்படிப் பரிமாறிக்கொள்வது தங்கள் நன்மைக்கே என்று அவர்கள் எண்ணுவதால்.

அதைமாந்தஸ் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே, கருத்தளவில் ஓர் அரசைத் தோற்றுவித்துத் தொடங்குவோம். ஆனுலும் புதிய புதிய விஷயங்களைக் கண்டு பிடிப்பதன் மூலகாரணமான தேவையே, இதை உண்மையில் உண்டாக்குபவன் ஆவன்.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : உயிருக்கும் வாழ்க்கைக்கும் மிக அவசியமான உணவுதான் இன்றியமையாத தேவைகளுள் முதன்மையாயும் மிகப் பெரிதாயுமுள்ளது.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இரண்டாவது, இருக்குமிடம் ; மூன்ருவது உடை, இன்ன பிற.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : நாம் இப்பொழுது நமது நகரம் எப்படி இப்பெரிய தேவைக்கு வேண்டியவைகளை வழங்கப்போகிறது என்பதைப் பார்ப்போம். ஒருவன் உழவன், மற்ருெருவன் கொத்தன், பிறிதொருவன் நெசவாளன் என்று பலரும் இருப்பதாகக் கொள்வோம். மேலும் ஒரு சக்கிலியன் அல்லது நம்முடைய உடல் தேவைகளை வழங்கும் பிறிதொருவனைச் சேர்த்துக்கொள்ளலாம் அல்லவா?

அதைமாந்தஸ் : மிக நன்று.

சாக்ரடீஸ் : அரசைப் பற்றி நினைக்குங்கால், அது மிகக் குறைந்த அளவில் நான்கு அல்லது ஐந்து மனிதரையாவது உள்ளிட்டதாக இருக்க வேண்டும்.

அதைமாந்தஸ் : தெளிவு.

சாக்ரடீஸ் : அவர்கள் எப்படித் தொடர்ந்து செயல் புரிவர்? ஒரு பொது இருப்பில் ஒவ்வொருவனும் தன்னுடைய உழைப்பின் பலனைச் சேர்ப்பானு? எடுத்துக்காட்டாக, தனி உழவன் ஒருவன் நான்கு பேருக்குப் பொருள் உற்பத்தி செய்ய, நான்கு மடங்கு உழைப்பு நேரமும், தனக்கும் பிறர்க்கும் போதுமான உணவுப் பொருள் பெற, நான்கு மடங்கு உழைக்க வேண்டுமா? அல்லது பிறரைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்களுக்குப் பொருள் வழங்க வேண்டுமே

யென்று கஷ்டமெடுத்துக்கொள்ளாமல் தனக்குமட்டும் நாலில் ஒருபங்கு உணவை நாலில் ஒருபங்கு நேரத்தில் உற்பத்தி செய்யவும், எஞ்சிய மூன்று பங்கு நேரத்தில் வீடு கட்டு வதில், மேலங்கி தைப்பதில், காலணிகள் தயார் செய்வதில் பிறருடன் கூடிச் செய்யாமல் தன் தேவைகளனைத்தையும் தானே பூர்த்தி செய்துகொண்டிருப்பானு?

அதைமாந்தஸ்: அவன் உணவை உற்பத்தி செய்வதைத்தான் குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமேயன்றி எல்லாவற்றை யும் உற்பத்தி செய்வதில் ஈடுபடக் கூடாது.

சாக்ரடீஸ்: ஒருகால் அது சிறந்த முறையாக இருக்கலாம். நீ இதைச் சொல்கிறபொழுது நாமெல்லாம் ஒத்த தன்மைய ரல்லர் என்று எனக்கே நினைவுக்கு வருகிறது. நம்மிடையே பல குணவேறுபாடுகள் இருக்கின்றன; அவை வேறுபட்ட தொழில்களுக்குச் சரிக்கட்டப்படுகின்றன.

அதைமாந்தஸ்: சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: ஒரு தொழிலாளி பல தொழில்களை உடையவனு யிருக்கும்பொழுதா அல்லது ஒரே ஒரு தொழிலையுடையவனு யிருக்கும் பொழுதா நமக்கு வேலை சிறப்பாக நடக்கும்?

அதைமாந்தஸ்: ஒரே ஒரு தொழிலை உடையவனுயிருக்குங் கால்தான்.

சாக்ரடீஸ்: மேலும், சரியான நேரத்தில் செய்யப்படாவிடில் ஒருவேலை சீர் கெட்டுவிடும் என்பதைப் பற்றி ஐயமிருக்க முடியாதல்லவா?

அதைமாந்தஸ்: இருக்க முடியாது.

சாக்ரடீஸ்: ஏனெனில் வணிகன் வேறு பணிகளை முடித்து ஓய்வுபெறும் வரையில் வியாபாரம் காத்திருக்காது. அவன் தான் செய்யும் தொழிலை இடையருது பயின்று, வியாபாரத்தையே தனது முதற் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: பிறவற்றையெல்லாம் விடுத்து, தனக்கியல்பான ஒன்றைச் சரியான நேரத்தில் ஒருவன் செய்தால் எல்லாப் பொருள்களும், சிறந்த முறையிலும், எளிதிலும் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று நாம் ஊகிக்க வேண்டும் அல்லவா?

அதைமாந்தஸ் : சந்தேகமில்லாமல்.

சாக்ரடீஸ் : அப்படியானால் நான்குபேருக்கு மேல் குடிகள் தேவைப்படுவர். ஏனெனில் உழவன் தனக்குத் தேவை யானவற்றை - அவை ஏதேனும் பயன்பட வேண்டுமென்றால்- ஏர், மண்வெட்டி அல்லது பிற உழவுக் கருவிகளைத் தானே செய்துகொள்ள மாட்டான். கொத்தனும் அப்படியே அவனுக்கும் நிறையக் கருவிகள் தேவைப்படுகின்றன. இவ் வாறே நெசவாளனும் சக்கிலியனும்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியே வளர்ந்துவரும் நமது அரசில் தச்சர் கள், கருமார்கள், மற்றும் வேறு பல தொழிலாளிகள் பங்கு கொள்வார்கள்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : மேலும் நமது உழவர்கள் உழுவதற்குக் காளைமாடு பெறவும், கொத்தர்களும் உழவர்களும் பொதி சுமக்க ஆடு மாடுகள் வைத்திருக்கவும், நெசவாளரும் தோல் பதனிடு வோரும் உரோமங்களும் தோலும் பெற்றிருக்கவும் இடையர் களைச் சேர்த்துக் கொண்டாலும் நமது அரசு மிகப் பெரிய தாக இராது.

அதைமாந்தஸ் : அது உண்மை. இருந்தாலும் இவற்றை யெல்லாம் கொண்ட அரசு மிகச் சிறியதாகவும் இராது.

சாக்ரடீஸ் : மேலும் நகரத்தின் நிலையை வேறு கவனிக்க வேண்டும். இறக்குமதி செய்யவேண்டிய அவசியமில்லாமல் எல்லாமிருக்கிற இடமொன்றைத் தேடுவது முடியாத செயல்.

அதைமாந்தஸ் : முடியவே முடியாது.

சாக்ரடீஸ் : அப்படியானால் வேறொரு நகரத்திலிருந்து தேவை யான அளவுக்குப் பொருள்களைக் கொணர ஒரு தனி வகுப்புக் குடிகள் வேண்டுமே.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : அப்படி அந்த வணிகன் தனது தேவைக்கேற்ப வழங்குவோர் விரும்பும் பொருள்கள் ஏதுமில்லாமல் வெறுங் கையுடன் சென்றால் வெறுங்கையுடன்தான் திரும்பி வரு வான்.

அதைமாந்தஸ் : அது உறுதி.

சாக்ரடீஸ்: ஆகவே அவர்கள் சொந்த நாட்டில் உற்பத்தி செய்வது அவர்களுக்குப் போதுமானதாக இருந்தால் மட்டும் போதாது; மேலும் அவர்களுடைய தேவைப் பொருள்களை ஆக்கித்தரும் பிறருடைய தேவைகளையும் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் அளவிலும் தரத்திலும் மிகுந்திருக்க வேண்டும்.

அதைமாந்தஸ்: சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: அப்படியானால் மேலும் உழவர்களும், தொழிற் கலைஞர்களும் தேவைப்படுவர் அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: வணிகர் எனக் கூறப்படுகின்ற ஏற்றுமதி இறக்குமதியாளரை நீக்கி அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அப்படியானால் நமக்கு வணிகர் வேண்டுமல்லவா?

அதைமாந்தஸ்: நமக்குத் தேவைதான்.

சாக்ரடீஸ்: கடல் கடந்தும் வாணிபம் மேற்கொள்வதனால், திறமைமிக்க மாலுமிகள் பெருமளவில் தேவைப்படுவரல்லவா?

அதைமாந்தஸ்: ஆம். பெருமளவில் தேவைப்படுவர்.

சாக்ரடீஸ்: அப்படியானால் தங்கள் நகரத்திற்குள் விளை பொருள்களை எப்படிப் பரிமாறிக் கொள்வர்? அப்படிப் பரிமாறிக்கொள்ள வசதி ஏற்படுத்துவதே நாம் அவர்களை ஒரு சமூகமாக ஆக்கி, அரசை நிர்மாணித்ததன் முக்கிய நோக்கங்களுள் ஒன்று என்பது உனக்கு நினைவிருக்கும்.

அதைமாந்தஸ்: ஆம், அவர்கள் கொடுப்பதும், கொள்வதுமாக இருப்பர்.

சாக்ரடீஸ்: பிறகு அவர்களுக்கு அங்காடி தேவைப்படும். மேலும் பொருள் மாற்றுக்குப் பணக்குறியீடு வேண்டுமே?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: தான் விளைத்த பொருளை ஓர் உழவன் அல்லது தொழிற் கலைஞன் அங்காடிக்குக் கொணர்கிறான். தன்னோடு பொருள் மாற்றிக் கொள்ள யாரும் இல்லாத நேரத்தில் வருகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் பொருள் விற்கும் தொழிலை விடுத்துக் கடைவீதியில் வெறுமனே உட்கார்ந்திருப்பதா?

அதைமாந்தஸ் : இல்லவே இல்லை. தேவையைக் கண்டு அவனுக்காக விற்பனைத் தொழிலை ஏற்கத் தயாராக இருக்கும் மனிதர்களை அவன் காண்பான். நன்கு அமைந்த அரசுகளில் அவர்கள் பொதுவாக உடல் வலிமையில் மிகமிக எளியவர்களாக இருப்பர்; வேறு வகையில் பயனற்றவராயுமிருப்பர். அவர்களுடைய கடமை அங்காடியில் இருந்து கொண்டு பொருளை விற்க விரும்புவோருக்குப் பணத்தைக் கொடுத்துப் பொருளைப் பெற்று, பொருளை வாங்க விரும்புவோருக்குப் பொருளைக் கொடுத்து அவர்களிடமிருந்து பணத்தைப் பெறுவதுதான்.

சாக்ரடீஸ் : இந்தத் தேவை சில்லறை வியாபாரிகள் என்ற ஒரு வகுப்பைத் தோற்றுவிக்கிறது. அங்காடியில் அமர்ந்து கொண்டு வாங்குவதும் விற்பதுமாக இருப்பவர்கள் சில்லறை வியாபாரிகள் என்றுதானே அழைக்கப்படுகின்றனர்? மாருக ஒரு நகரத்திலிருந்து மற்ருெரு நகரத்திற்குச் செல்வோருக்கு வணிகர் என்றுதானே பெயர்?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : மேலும் வேலையாட்கள் எனும் வேருெரு வகுப்பு உள்ளது; அவர்கள் துணைகோடற்கு அறிவில் சிறிதும் ஏற்றவரல்லர், எனினும் உழைப்பதற்கு வேண்டிய உடல் வலிமை அவர்களுக்கு இருக்கிறது; அதை விற்றுத் தங்கள் உழைப்புக்குப் பரிசாக ஊதியமெனும் கூலி பெறுகின்றனர். நான் எண்ணுவது தவறில்லையெனில், 'கூலியாட்கள்' எனப் பெயர் பெறுகின்றனர் என்பேன்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியாளுல் அக்கூலி ஆட்களும் நமது நாட்டின் மக்கள் தொகையில் பங்கு பெறுவர் அல்லவா?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : சரி அதைமாந்தஸ், நமது அரசு பக்குவமும் பரிபூரணமும் உடையதா?

அதைமாந்தஸ் : உடையது என்றுதான் எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ் : அப்படியாளுல், நீதி எங்கே இருக்கிறது? அநீதி எங்கே இருக்கிறது? அரசின் எப்பகுதியில் அவை தோன்றின?

அதைமாந்தஸ் : அநேகமாக மக்கள் தம்முட்கொண்ட தொடர்

பில் தோன்றின என்று எண்ணுகிறேன். வேறெங்கும் அவை காணக்கிடைக்கலாம் என்று எனக்குத் தோன்ற வில்லை.

சாக்ரடீஸ்: உனது யோசனை சரியென்று துணிந்து சொல் கிறேன். இவ்விஷயத்தை நன்கு எண்ணிப் பார்ப்பது நல்லது, இவ் ஆய்வை நடத்தாது விட்டுவிடக் கூடாது.

சரி, முதற்கண், இவர்களை இவ்வாறெல்லாம் அமைத்த பிறகு அவர்களுடைய வாழ்க்கைப் போக்கு எதுவாயிருக்கும் எனக் காண்போம். அவர்கள் தங்களுக்காக உணவு தானி யங்களையும், உடைகளையும், காலணிகளையும் தாங்களே உற்பத்தி செய்துகொள்ள மாட்டார்களா? தங்களுக்காக வீடுகள் கட்டிக்கொள்ள மாட்டார்களா? தங்களுக்கு இருக்க வீடு கிடைத்தவுடன், கோடைக்காலத்தில் அதிக ஆடைக ளின்றியும், காலிற் காலணியின்றியும் வேலை செய்வர். ஆனால் குளிர் காலத்தில் தேவையான அளவு உடை அணிந் தும் காலணி அணிந்தும், வேலை செய்வர். கோதுமை மாவையும் பார்லி உணவையும் பிசைந்து ரொட்டியும், பிறவும் ஆக்கி உண்பர். இவற்றைத் தூய இலைகளின் மீதோ, கோரைப்பாயின் மீதோ பரிமாறுவர். இயூ மரத் தாலோ, மிர்ட்டில் எனும் மணமலர்ச் செடியாலோ வேய்ந்த படுக்கையின் மீது படுத்திருப்பர். தாங்கள் தயாரித்த திராட்சை ரசத்தைப் பருகியும் தலைகளில் மலர்மாலைகள் பூண்டும், கடவுளர்தம் புகழ்பாடியும், ஒருவருக்கொருவர் இனிது உரையாடியும், அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் விருந்துண்பர். ஏழ்மை அல்லது போர் ஆகியவற்றைக் கருதித் தமது வருவாய்க்கும் மிஞ்சித் தங்கள் குடும்பங்கள் செலவு செய்யா வண்ணம் விழிப்புடனிருப்பர்.

கிளாக்கன்: (இடைமறித்து) அவர்கள் உணவைச் சுவை யுடனருந்த வழி சொல்லவில்லையே?

சாக்ரடீஸ்: உண்மையாகவே நான் மறந்திருந்தேன். ஆம், அவர்கள் உணவைச் சுவைக்க வேண்டும். உப்பு, ஆலிவ் எண்ணெ, முதலியனவும், பாலடைக் கட்டியும் உண்டு, நாட்டுப்புற மக்கள் செய்வதுபோலக் கிழங்குகளையும், மூலிகைகளையும் வேக வைப்பர். உணவுக்குப்பின் சாப்பிடும் பழவகைக்கு அத்திப்பழம், பட்டாணி, மொச்சை முதலிய வற்றைக் கொடுப்போம். ஓக் விதைகளையும், மிர்ட்டில்

விதைகளையும் வறுத்து உண்பர். இனிய கள்ளைப் பருகி இனித்திருப்பர். இத்தகைய உணவை உண்டு அவர்கள் நீண்டகாலம் அமைதியாகவும், நலனுடனும் வாழ்வார் எனவும், தம் குழந்தைகளுக்கும் அத்தகைய வாழ்வைத் தருவர் எனவும் எதிர்பார்க்கலாம்.

கிளாக்கன் : ஆம் சாக்ரடீஸ்! பன்றிகளைப்போன்ற மனிதரை கொண்ட நகரத்திற்குத் தக்க ஏற்பாடுகள் செய்வாயானல், வேறென்ன முறையில் அவ்விலங்குகளுக்குத் தீனி கொடுக்க முடியும்?

சாக்ரடீஸ் : ஆனல், கிளாக்கன்! என்ன செய்யவேண்டுமென்று நீ சொல்கிருய்? ஏன்?

கிளாக்கன் : ஏன்? வாழ்க்கையில் சாதாரணச் சௌகரியங்களை அளிக்கத்தானே வேண்டும். இனிது இருக்கவேண்டியவர்கள் பஞ்சு மெத்தையிட்ட நாற்காலிகள் மீது இருக்கவும், மேசைமீது உண்ணவும், பழக்கப்பட்டவர்கள் மேலும் புதிய பாணியில் சுவைச் சத்தும் இனிப்புக்களும் உண்ணவும் அவர்களுக்கு ஏற்பாடு வேண்டும்.

சாக்ரடீஸ் : ஆம் இப்பொழுது எனக்குப் புரிகிறது. ஓர் அரசு எப்படி என்பது மட்டுமல்ல, ஓர் ஆடம்பர அரசு எவ்வாறு தோற்றுவிக்கப்படுகிறது என்ற பிரச்சினையைத்தான் நான் கவனிக்க வேண்டுமென்று நீ சொல்கிருய். இதில் எந்தவிதத் தீங்கும் இருப்பதாகத் தெரியவில்லை; ஏனெனில் அத்தகைய அரசில் நீதியும், அநீதியும் எவ்வாறு பிறக்கின்றன என்பதை முன்னிலும் தெளிவாகக் காணலாம். நான் விவரித்ததே ஓர் அரசின் உண்மையான நல்ல அரசியலமைப்பு என்பது என் கருத்து. ஆனல் சுரவெம்மை வெறியில் ஓர் அரசிருப்பதையும் காண நீ விரும்பினல் எனக்குத் தடையில்லை. ஏனெனில் எளிய வாழ்க்கைப் போக்கைக் கொண்டு பலர் மனநிறைவடையமாட்டார்கள் என்று ஐயுறுகிறேன். மெத்தையிட்ட நாற்காலிகள் மேசைகள் ஏனைய பிறவும், சுவைப் பொருள்களும், மணங்கூட்டும் பொருள்களும், சாம்பிராணி அல்லது ஊதுவர்த்தியும், பரத்தைகளும் பணியாரங்களும் ஏதோ ஒரு வகையிலல்ல ஒவ்வொரு வகையிலும் அவர்கள் அதிகம் வேண்டுமென்பார்கள். நான் முதலில் சொன்னேனே, வீடுகள், உடைகள், காற்செருப்புகள் என்ற இன்றியமையாத் தேவைகளைக் கடந்து ஆடம்பரவாழ்க்கைக்கு நாம்

செல்லவேண்டும். ஓவியனுடைய கலைக்கும், பூவேலை செய்வோனின் கலைக்கும் வேலை இருக்க வேண்டும். தங்கம், தந்தம் மற்றும் பலவகையான பொருள்களை ஈட்ட வேண்டும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : பின்னர் எல்லைகளை விரிவுபடுத்த வேண்டும். ஏனெனில் முன்னைய நலமிக்க அரசு இனிப் போதாது. இயற்கையான தேவைகளினால் வேண்டப்படாத பல தொழில்களை நமது நகரம் ஏற்றுப் பெருக வேண்டியிருக்கும். அத் தொழிலர் வேடுவர் தொகுதி, நடிகர்கள் அனைவரையும் உள்ளிட்டதாகும்; அதனுள் ஒரு பெரிய பிரிவினர் உருவங்களையும் வண்ணங்களையும் ஒட்டிய வாழ்க்கையினர்; மற்றவர் இசைவாணர்களாய் இருப்பர். கவிஞர்கள் அவர்களைப் பின்பற்றி வருகின்ற பாடகர்கள், நடிகர்கள், ஆடவல்லார், குத்தகையாளர் என்போராவர். மேலும் மற்றும் பெண்டிர்தம் உடை உள்ளிட்ட பல்வேறு பொருள்களைத் தயாரிப்பவர்கள். மேலும், நமக்கு அதிகமாகப் பணியாளர் தேவைப்படுவர். ஆசிரியர்களும், பிறர் குழந்தைக்குப் பால் ஊட்டுகின்ற தாதிகள், பிறர் குழந்தையை எடுத்து வளர்க்கின்ற செவிலிகள் என்ற இருபான்மையரும், பெண்டிர்களுக்கு உடையுடுத்தி அழகு செய்யும் மகளிரும், நாவிதர்களும், தின்பண்டங்கள் செய்வோர், சமையற்காரர் மற்றும் பன்றிகளைக் காப்போர் முதலிய பலரும் நமது அரசின் முன்னைய விளக்கத்தில் தேவையில்லாததால் இடம் பெறாதவர்கள், இப்பொழுது நமக்குத் தேவைப்படுகின்றனர் அல்லவா? அவர்களை மறந்துவிடக்கூடாது. மேலும் மக்கள் புலால் உண்பார்களேயானால், பலதிறப்பட்ட பிராணிகளும் அங்கு இருக்கும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இப்படி வாழ்வதனால் முன்பைவிட இப்பொழுது மருத்துவர்கள் நமக்கு அதிகமாகத் தேவைப்படுவர் அல்லவா?

கிளாக்கன் : ஆம், அதிகமாகத்தான்.

சாக்ரடீஸ் : முதலிற் சொன்ன குடிகளுக்குப் போதுமானதாக இருந்த நாடு இப்பொழுது மிகவும் சிறியதாயும், போதுமானதாக இல்லாமலும் இருக்கும் அல்லவா?

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியாயின் புல் விளைக்கவும், உழுது பயிரிடவும்

அண்டை வீட்டாருடைய நிலத்தில் ஒரு பகுதியை நாம் விரும்புவோம். நம்மைப் போலவே அண்டை வீட்டாரும் தேவைகளின் எல்லையைத் தாண்டி வரம்பற்றசெல்வம் திரட்ட முனைவார்களேயானல் அவர்களும் நமது நிலத்தின் ஒரு பகுதியை விரும்புவர், அல்லவா ?

கிளாக்கன் : ஆம், சாக்ரடீஸ் ! அது தவிர்க்க முடியாததாகி விடும்.

சாக்ரடீஸ் : ஆகவே கிளாக்கன் ! நாம் போருக்குச் செல்வோம், அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக அப்படித்தான்.

சாக்ரடீஸ் : அப்படியானல், போர் நன்மை செய்கிறதா தீமை செய்கிறதா எனத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமலே அது தனிப்பட்ட வகையிலும் பொதுவாகவும் அரசில் இருக்கின்ற தீமைகளுக்கு எல்லாம் எவை காரணமோ அவற்றிலிருந்து தான் போரும் தோன்றுகிறது எனக் கண்டு பிடித்து விட்டோம் அல்லவா ?

கிளாக்கன் : ஐயமற.

சாக்ரடீஸ் : எனவே நமது அரசு மீண்டும் விரிவடைய வேண்டும். ஆனல் இம்முறை, அதன் மாபெரும் விரிவு நாம் மேலே விவரித்த மனிதர்கள், பொருள்கள் ஆகிய நம் முடைமைகளைக் காக்கவும் நம்மீது படையெடுத்து வருவோருடன் பொருது நிற்கவும் பெரும் படையொன்றையும் உள்ளிட்டதாக இருக்கும்.

கிளாக்கன் : ஏன், அவர்கள் தங்களைத் தாங்களே காத்துக் கொள்ள இயலாதா ?

சாக்ரடீஸ் : இல்லை, அரசை உருவாக்கும் பொழுது நாமெல்லாம் ஒத்துக்கொண்ட கொள்கை சரியானதாக இருந்தால் அவர்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஆற்றல் உடையவர்களாக இருக்க மாட்டார்கள். உனக்கு நினைவிருக்கும், ஒருமனிதன் பலகலைகளை வெற்றியுடன் பயிலுதல், கையாளுதல் இயலாது என்பதே அக்கொள்கை.

கிளாக்கன் : மிகமிக உண்மை.

சாக்ரடீஸ் : சரி, போர் ஒரு கலைதானே ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : செருப்புத்தைக்கும் கலையைப் போன்றே, இக் கலைக்கும் கவனம் செலுத்த வேண்டும் அல்லவா?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : சரி, நாம் நமது செருப்புக்கள் நன்ருகத் தைக் கப்பட வேண்டும் என்பதற்காகச் சக்கிலியனை ஓர் உழவ ஞகவோ, நெசவாளியாகவோ கொத்தஞகவோ இருக்க அனு மதிக்கவில்லை. ஆனல் அவனுக்கும், பிற தொழிலாளி ஒவ் வொருவனுக்கும் அவனது இயல்புக்கொத்த வேலைகளை ஒப் படைத்தோம், அவன் தன் ஆயுள் முழுவதும் அந்த வேலை யையே தொடர்ந்து செய்யவேண்டுமென்றும் பிற வேலை களைச் செய்யக் கூடாதென்றும் விதித்தோம். அவன் வாய்ப் புக்களை நழுவவிடக் கூடாதென்றும் அப்பொழுதுதான் அவன் நல்லதொரு தொழில் கலைஞனுவான் எனவும் சொன் ஞேம். இப்பொழுது போர் வீரன் ஒருவனின் வேலை செவ் வனே செய்யப்படவேண்டும் என்பதைவிட மிக இன்றிமை யாதது வேருென்று இருக்க முடியாது. தனது இளம் வயதி லிருந்து பகடை விளையாட்டில் கவனம் செலுத்தாது - ஈடுபாடு கொள்ளாமல், பொழுதுபோக்குக்காக மட்டும் அதை விளையாடத்தொடங்கிய எவனும் இவ்வுலகில் அவ்விளையாட் டில் தேர்ந்தவஞக ஆக முடியாது; அப்படியிருக்க உழவஞக இருப்பவனே சக்கிலியாக இருப்பவனே அல்லது பிற சிறு கருவித் தொழிலாளராக இருப்பவர்களோ போர் வீரஞகவும் இருக்க, போர்க்கலை அவ்வளவு எளிதாகக் கற்கக்கூடியதா என்ன? கருவிகளை எவ்வாறு கையாளுவது எனக் கல்லாம லும், அவற்றின்மேல் கவனம் செலுத்தாமலும் இருக்கின்ற ஒருவன் அக்கருவிகளால் திறன்வாய்ந்த தொழிலாளி யாகவோ, தற்காப்பில் தேர்ந்தவஞகவோ, ஆக முடியாது. படைக்கலன்கள் பல தாங்கிய படையினரோடோ அல்லது வேறுவகைப் படையினரோடோ கேடயமோ பிற படைக் கலனே ஏந்திய ஒருவன், ஒரே ஒரு நாளில் நல்ல சமர் வல்லவஞக எப்படி ஆக முடியும்?

கிளாக்கன் : பயிற்சி இன்றித் தம்மை உபயோகிக்க மனிதர்க்கு எடுத்துச் சொல்லும் கருவிகள் இருக்குமாயின் அவை விலை மதிக்கவொண்ணுததாய் இருக்கும்.

சாக்ரடீஸ் : காவலனுக்குக் கடமைகள் மிகுதியாக இருக்க இருக்க அதிகக் காலம் திறன், கலையறிவு, செயற்படுத்தும்

ஆற்றல் ஆகியவை அவனுக்கு மிகுதியாகத் தேவைப் படும்.

கிளாக்கன் : ஐயமற.

சாக்ரடீஸ் : தனது தொழிலுக்கு ஏற்ற மனப் பாங்கு அவனுக்கு இருக்க, வேண்டுமல்லவா ?

கிளாக்கன் : உறுதியாக.

சாக்ரடீஸ் : பின், நாட்டைக் காக்கும் பணிக்கு ஒத்த இயல் புகள் உள்ளவர்களை இயலுமானால் தேர்ந்தெடுப்பது நமது கடமையாயிருக்கும் அல்லவா ?

கிளாக்கன் : ஆம், இருக்கும்.

சாக்ரடீஸ் : அப்படித் தேர்ந்தெடுப்பது எளிதாக இருக்காது. ஆனால் நாம் துணிவுடன் இருக்க வேண்டும், நம்மால் இயன்றதை நன்கு செய்யவேண்டும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : காத்தலிலும், விழிப்புடனிருத்தலிலும், ஓர் உயர்தர இளைஞன் நன்கு வளர்க்கப்பட்ட நாயைப் பெரிதும் ஒத்திருப்பான் அல்லவா ?

கிளாக்கன் : நீர் எதைக் குறிப்பிடுகிறீர் ?

சாக்ரடீஸ் : இருவருமே ஒன்றைக் கடிதிற் காணவும், பகை வனைக் கண்டபோது அவனைப் பிடிக்க விரைந்தோடவும், வல்லவராக அவனைப் பிடித்தபோது அவனோடு பொருது நிற்க வலிமை உடையவராகவும், இருக்க வேண்டும் என்பதையே குறிப்பிடுகின்றேன்.

கிளாக்கன் : இந்த இயல்புகளெல்லாம் நிச்சயமாக அவர் களுக்குத் தேவைப்படும்.

சாக்ரடீஸ் : நன்று, உங்கள் காவலன் நன்றாகப் போரிட வேண்டுமானால் துணிவுடையவனாக இருக்க வேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : குதிரை, நாய் அல்லது பிற பிராணிகளோ, எதுவோ எழுச்சியில்லாதவை துணிவுடையவையாக இருக்க முடியுமா ? இவ் எழுச்சி வெல்லுதற்கு அரியது என்பதையும், அதைத் தன்னகத்தே கொண்ட எந்தப் பிராணியின் ஆன்மாவும் அச்சமின்றியும் வெல்ல வொண்ணாததாயும் இருப்பது என்பதையும் நீ என்றுமே கண்டதில்லையா ?

கிளாக்கன் : கண்டிருக்கிறேன்.

சாக்ரடீஸ் : அப்படியானால் காவலர்க்குத் தேவையான உடலியல்புகளைப் பற்றித் தெளிந்த கருத்து நமக்கிருக்கிறது எனலாம்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : மனவியல்புகளைப் பற்றியும் தெளிந்த கருத்து இருக்கிறது. அவனுடைய ஆன்மா எழுச்சி மிக்கதாக இருக்க வேண்டும் அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆனால், இத்தகைய எழுச்சியுடைவர்கள் தம்முள் ஒருவருக்கொருவருடனும் பிறருடனும் நாகரிகமற்ற முறையில் நடந்துகொள்ளக் கூடும் அல்லவா?

கிளாக்கன் : ஆம், இது எவ்வகையானும் எளிதில் தவிர்க்க முடியாத தொல்லை.

சாக்ரடீஸ் : ஆனால் அவர்கள் பகைவர்க்கு அரியராயும், நண்பர்க்கு எளியராயும் இருக்க வேண்டும். இல்லாவிடில் பகைவர்கள் அவர்களை அழிக்கும் வரையில் காத்திராமல் தம்மைத்தாமே அழித்துக் கொள்வர்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : பின் என்ன செய்ய வேண்டும்? தன்னுள் உயர்ந்த எழுச்சியொன்றைக் கொண்ட எளிய தன்மையினை எப்படிக் காண்பது? ஏனெனில் அவை ஒன்றுக்கொன்று பொருந்தாதவையாயிற்றே.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இவ்விரண்டியல்புகளில் ஒன்று குறைவு படினும் ஒருவன் சிறந்த காவலனாக இருக்க மாட்டான். ஆனாலும் அவையிரண்டும் ஒரு சேர இணைந்து இருப்பது முடியாது எனத் தோன்றுகிறது. எனவே நல்ல காவலனாக இருப்பது முடியாத செயல் என நாம் ஊகிக்க வேண்டும்.

கிளாக்கன் : நீங்கள் சொல்வது உண்மைதான் என எண்ண வேண்டியிருக்கிறது.

சாக்ரடீஸ் : இங்கே திகைப்பும் குழப்பமுமெய்தி முன்னே நடந்தவற்றை மீண்டும் சிந்திக்க முற்பட்டேன். நண்ப! நாம் குழப்பத்தில் இருக்கிறோம் என்பதில் வியப்பில்லை.

நாம் நம் உள்ளக் கிழியில் எழுதிவைத்திருந்த உருவத்தை நம் கட்புலனிலிருந்தும் தவறவிட்டு விட்டோம்.

கிளாக்கன்: எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

சாக்ரடீஸ்: அத்தகைய எதிர்மாறான இயல்புகளைக் கொண்ட உயிர்களும் இருக்கின்றன என்பதைக் குறிப்பிடுகிறேன்.

கிளாக்கன்: சரி, நீங்கள் அவற்றை எதனுள் காண்கிறீர்கள்?

சாக்ரடீஸ்: பல பிராணிகள் எடுத்துக்காட்டாக விளங்கு கின்றன. நமது நண்பனாகிய நாய் ஒரு நல்ல எடுத்துக் காட்டு. நன்கு பேணி வளர்க்கப்பட்ட நாய்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களிடமும், பழகியவர்களிடமும், தோழமை பாராட்டுவதும், மென்மையாக நடந்துகொள்வதும் புதிய வர்களிடம் மாறாக நடந்துகொள்வதும் உனக்குத்தான் தெரியுமே.

கிளாக்கன்; ஆம், நானறிவேன்.

சாக்ரடீஸ்: இவ்வாறே அவ்வியல்புகள் இணைந்து வாய்க்கப் பெற்ற காவலனொருவனைக் காண நாம் முயற்சி செய்வது இயலாததோ, இயற்கை நியதிக்குப் புறம்பான விஷயமோ இல்லை, அல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ்: அப்படிக் காவலனாக இருக்கத் தகுதியுள்ளவன் எழுச்சியோடு, தத்துவ ஞானியின் சிறப்பியல்புகளையும் பெற்றிருக்க வேண்டாமா?

கிளாக்கன்: நீங்கள் கூறுவதன் பொருள் எனக்கு விளங்க வில்லை.

சாக்ரடீஸ்: நான் இப்பொழுது சொல்கின்ற குணத்தை நாயினிடத்தில் கூடக் காணலாம், அதனிடம் அது சிறந்து விளங்குகிறது.

கிளாக்கன்: என்ன தனிக் குணம்?

சாக்ரடீஸ்: ஏன், புதியவர் ஒருவர் ஒரு நாய்க்குத் தீங்கு ஏதும் செய்திருக்காவிடினும் பழகியவரொருவர் நன்மை ஏதும் செய்திருக்காவிடினும், முன்னவரைக் காணுங்கால் சினந்து விரட்டுகிறது. பின்னவரைக் குழைந்து வரவேற்கிறதே, இது உனக்கு விந்தையாகத் தோன்றவில்லையா?

கிளாக்கன்: இவ்விஷயம் முன்பு என் கருத்தைத் தொடவில்லை. ஆனால் நீங்கள் சொன்னதன் உண்மையை உணர்கிறேன்.

சாக்ரடீஸ்: நாயின் இந்த இயல்பூக்கம் நிச்சயமாக நம்மைக் கவர்கிறது. உன் கருத்துப்படி நாய் ஓர் உண்மையான தத்துவ ஞானி.

கிளாக்கன்: ஏன்?

சாக்ரடீஸ்: ஏனெனில் தனக்குத் தெரிந்தவர், தெரியாதவர் என்ற அடிப்படையில் நண்பரின் முகத்தையும் பகைவரின் முகத்தையும் வேறுபடுத்தி அறிகிறது. அறிவு அறியாமை ஆகியவற்றைக் கொண்டு தனக்குப் பிடித்தது பிடிக்காதது என்பனவற்றைத் தெளிந்துகொள்ளும் ஒரு பிராணி கல்வியில் பெரு விருப்பம் உடையதாக இருக்க வேண்டாமா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: கற்கும் பெருவிருப்பம் என்பது தத்துவமெனும் ஞானக் காதல்தானே?

கிளாக்கன்: அவை ஒன்றே.

சாக்ரடீஸ்: தன் நண்பரிடத்திலும், தெரிந்தவரிடத்திலும் இனிது பழகக்கூடிய ஒருவன் அறிவு, விவேகம் ஆகியவற்றில் ஆராக்காதல் கொண்டவனுக இருக்க வேண்டும், என்று நம்பிக்கையோடு சொல்லலாம், அல்லவா?

கிளாக்கன்: அதை நம்பிக்கையோடு நாம் வலியுறுத்தலாம்.

சாக்ரடீஸ்: அரசின் நல்ல மேதக்க காவலனுக இருக்க வேண்டியவன் தன்னுள் தத்துவம், உணர்வு, விரைவு, வலிமை ஆகியவற்றை ஒருசேரக் கலந்து பெற்றிருக்க வேண்டியிருக்கும் அல்லவா?

கிளாக்கன்: ஐயமின்றி.

சாக்ரடீஸ்: அப்படியானுல் தேவையான தன்மை உடையவர்களை நாம் கண்டுவிட்டோம். அப்படிக் கண்டுவிட்ட பிறகு அவர்களை எப்படி வளர்ப்பது, கல்வி புகட்டுவது? அரசுகளில் எங்ஙனம் நீதியும் அநீதியும் வளர்கின்றன? என்ற நமது இறுதி நோக்கத்தை நன்கு விளக்கிக் காட்டலாம் என்ற இது எதிர்பார்க்கக் கூடிய ஆய்வுதானே? ஏனெனில் இன்றியமையாத விஷயத்தை விடவோ, வெறுக்கும் அளவுக்கு இவ் வாதத்தை நீட்டவோ நாம் விரும்பவில்லை. (இவ் ஆய்வு நமக்கு - எங்களுக்குப் பெரிதும் பயன்படும் என எண்ணினுன், அதைமாந்தஸ்).

சாக்ரடீஸ்: அருமை நண்ப! இது சற்று நீண்டதாக இருந்தாலும், விட்டுவிடக்கூடாது.

அதைமாந்தஸ்: நிச்சயமாக விடக்கூடாது.

சாக்ரடீஸ்: அப்படியாயின் வா, ஓய்வு நேரத்தைக் கதை சொல்வதில் கழிப்போம். நமது கதை நமது வீரர்களைப் பயிற்றுவிப்பதைப் பற்றியதாக இருக்கட்டுமே.

அதைமாந்தஸ்: இருக்கட்டும்.

சாக்ரடீஸ்: அப்படியானால், அவர்களுடைய கல்வி எது? உடலுக்குப் பயிற்சியும், உள்ளத்திற்கு இசையும் என இரு பிரிவுகளை உடைய, தொன்றுதொட்டு வந்த முறையைவிடச் சிறந்த ஒன்றை நாம் காணமுடியுமா?

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: கல்வியை இசையோடு தொடங்கி, பின்னர் உடற் பயிற்சிக்குச் செல்வோமா?

அதைமாந்தஸ்: அப்படியே.

சாக்ரடீஸ்: இசையென்றால் இலக்கியத்தை நீ உள்ளிட்டுச் சொல்கிறாயா, இல்லையா?

அதைமாந்தஸ்: சேர்த்துத்தான் சொல்கிறேன்.

சாக்ரடீஸ்: இலக்கியம் உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ இருக்கலாம் அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அப்படியானால் இளைஞர் இவ்விரண்டிலும் பயிற்சி பெறவேண்டும், என்று நாம் பொய்யிலிருந்து தொடங்குகிறோம் அல்லவா?

அதைமாந்தஸ்: நீங்கள் சொல்வதன் பொருள் எனக்கு விளங்கவில்லை.

சாக்ரடீஸ்: முற்றிலும் உண்மையின்றி இராவிடினும் பொதுவாகக் கற்பனையாக இருக்கும் கதைகளை முதன்முதலில் குழந்தைகளுக்குச் சொல்கிறோம் என்பது உனக்குத்தெரியும். மேலும் அவர்கள் உடற்பயிற்சியினைக் கற்கும் பருவம் வருவதற்குமுன்னர் அவர்களுக்கு இக்கதைகள் சொல்லப்படுகின்றன.

அதைமாந்தஸ்: சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: உடற்பயிற்சிக்கு முன்னர் இசையைக் கற்பிக்க வேண்டும் என்று இதைக் கருதித்தான் சொன்னேன்.

அதைமாந்தஸ்: மிகவும் சரி.

சாக்ரடீஸ்: தொடக்கம்தான் எந்த வேலைக்கும், அதுவும் தொடக்க நிலையில் இருக்கும் மென்மைமிக்க ஓர் உயிரைப் பற்றிய வேலைக்கு, மிக இன்றியமையாதது என்பதும் உனக்குத் தெரியும். ஏனெனில் அந்தப் பிஞ்சு நிலையில் தான் அதன் பண்பு மலர்கிறது. விரும்பிய கொள்கை விரைவில் ஏற்கப்படுகிறது.

அதைமாந்தஸ்: மிக்க உண்மை.

சாக்ரடீஸ்: சரி, யாரோ முக்கியத்துவமற்ற மனிதர்களால் புனையப்பட்ட தற்செயலான கதைகளைக் கேட்கவும், குழந்தைகள் வளர்ந்த பிறகு வளம் பெற வேண்டும் என்று நாம் எண்ண வேண்டிய கருத்துக்களுக் கெல்லாம் நேர்மாறான கருத்துக் களை மனத்திற் கொள்ளவும் குழந்தைகளை நாம் கவனமில்லாமல் அனுமதிக்கலாமா?

அதைமாந்தஸ்: அனுமதிக்க முடியாது.

சாக்ரடீஸ்: அப்படியானால் முதன்முதலில் கதை புனைவோரைத் தணிக்கை செய்ய வேண்டும்; அத்தணிக்கையாளர் நல்ல கதைகளை ஏற்றுத் தீய கதைகளைத் தள்ளட்டும். மேலும் நமது தாய்மார்களும், தாதிகளும், செவிலித் தாயும் தமது குழந்தைகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பெற்ற கதைகளையே சொல்ல வேண்டும் என்போம். அவர்கள் அத்தகைய கதைகளின் மூலம் தங்கள் கையதுகொண்டு மெய்யது உருவாக்குவதற்கும் மேலாக, சாலப் பரிந்து மனத்தை உருவாக்கட்டும்; ஆனால் வழக்கிலிருக்கின்ற பெரும்பான்மைக் கதைகள் தள்ளப்படவேண்டும்.

அதைமாந்தஸ்: நீங்கள் எக் கதைகளைப் பற்றிச் சொல்கிறீர்கள்?

சாக்ரடீஸ்: சின்னக் கதைகளின் மாதிரியைப் பெரிய கதைகளில் நீ காணலாம். ஏனெனில் அவையெல்லாம் ஒரே மாதிரியானவை, இரண்டிலும் ஒரே தன்மைத்தான மனப்போக்கு அமைந்து கிடக்கிறது.

அதைமாந்தஸ்: இருக்கலாம்; நீங்கள் எதைப் பெரியது எனச் சொல்கிறீர்கள் என்பது எனக்கு இன்னும் தெரியவில்லை.

சாக்ரடீஸ்: மனித குலத்தின் மிகச் சிறந்த எழுத்தாளர்களான ஹோமரும், ஹெசியடும்[1] ஏனைய கவிஞர்களும் சொன்ன கதைகளைத்தான் குறிப்பிடுகிறேன்.

---

1. Hesiod

அதைமாந்தஸ் : ஆனால் எக்கதைகளைக் குறிப்பிடுகிறீர்கள்? அவற்றில் நீங்கள் காணும் தவறென்ன?

சாக்ரடீஸ் : பொய்யொன்றை, அதுவும் தீய பொய்யொன்றைச் சொல்லும் கடுந்தவற்றைத்தான் குறிப்பிடுகிறேன்.

அதைமாந்தஸ் : ஆனால், எப்பொழுது இத்தவறு செய்யப் படுகிறது?

சாக்ரடீஸ் : சிறிதளவும் மூலப் பொருளுடன் ஒற்றுமை கொண்டிராத ஓர் ஓவியத்தை ஓவியன் வரையும்போது நிகழ்வதுபோல், தேவர், வீரர் ஆகியோரின் இயல்புபற்றித் தவறான முறையில் எழுதப்படுங்கால் இத்தவறு விளைகிறது.

அதைமாந்தஸ் : ஆம், இத்தகைய செயல் கண்டித்தற்குரியதே; ஆனால் நீங்கள் குறிப்பிடும் கதைகள் யாவை?

சாக்ரடீஸ் : முதற்கண், யூரேனசைப்[1] பற்றிக் கவிஞர் சொன்ன தீய பொய், பொய்கள் எல்லாவற்றுள்ளும் மிகப் பெரியது. யூரேனஸ் செய்ததையும், கிரானஸ் எப்படிப் பதிலுக்குத் தீங்கிழைத்தான் என்பதைப் பற்றியும் ஹெசியடு சொன்னதைத்தான் குறிப்பிடுகிறேன். கிரானசின் செயல்களும் அவனது மைந்தன் அவனுக்கிழைத்த துன்பங்களும் அவைகள் உண்மையே என்றாலுங்கூட இளைஞர்களுக்கும் சிந்தனைக்கு வேலை கொடுக்காதவர்களுக்கும், ஒன்றிலும் கருத்தில்லாதவர்களுக்கும், சொல்லத்தக்கவையல்ல; முடியுமானால் வாய்பேசாது, அவற்றைப் புதைத்துவிடுவது நல்லது. ஆனால் அவற்றைச் சொல்லித்தான் ஆகவேண்டுமென்று இருந்தால், தேர்ந்தெடுத்த சிலர் மறைவில், இரகசியமாக அவற்றைக் கேட்கலாம். அவர்கள் பலி கொடுக்க வேண்டும்—சாதாரண எலியூசீனியன்[2] பன்றியை அல்ல, கிடைத்தற்கரிய, பெரிய பிராணியைப் பலிகொடுக்க வேண்டும். அப்பொழுது, கேட்பவர்களின் தொகை மிகக் குறைவாக இருக்கும்.

அதைமாந்தஸ் : சரி, ஏன் அக்கதைகள் முற்றிலும் எதிர்க்கப் பட வேண்டியவை?

சாக்ரடீஸ் : ஆம், அதைமாந்தஸ்! அவை நமது அரசில் அடிக்கடி சொல்லக்கூடாத கதைகள். குற்றங்களுள் பெருங் குற்றத்தைச் செய்தும் தான் பெருங்கொடுமை செய்துவிட

1. Uranus 2. Eleusinian

வில்லை என்று ஓர் இளைஞன் எண்ணுமாறு செய்துவிடக் கூடாது. தனது தந்தை தவறு செய்தபொழுது, இளைஞன் அவரைத் தண்டித்தாலும் கடவுளரில் முதல்வனும், பெரியனுமாகிய தேவனைத்தான் சான்றாகக் கொண்டு நடக்கிறான் எனலாம்.

அதைமாந்தஸ்: நீங்கள் சொல்வதை முற்றிலும் ஒப்புக் கொள்கிறேன்; இந்தக் கதைகள் திருப்பிச் சொல்லத் தக்கவையல்ல என்பது எனது கருத்து.

சாக்ரடீஸ்: மேலும் நமது எதிர்காலக் காவலர்கள் தமக்குள் பொருது நிற்றலை மிக இழிவானதாகக் கருதவேண்டுமென்று நாம் விரும்பினோமானால், அவர்களுக்கு வானகத்தில் நிகழும் போர்களைப் பற்றியும் தேவரின் சதித் திட்டங்கள், சண்டைகள் ஆகியவை பற்றியும் ஒன்றும் சொல்லக் கூடாது. ஏனெனில் அவை உண்மையானவை அல்ல. அரக்கர்களின் போராட்டங்களைப் பற்றியும் ஒன்றும் சொல்லக் கூடாது. ஆடைகளின் மீது பூத்தையல் வேலையின் மூலம் அக்கதைகளைக் காட்டவும் அனுமதிக்கக் கூடாது. தேவரும் வீரரும் தமது சுற்றத்தினருடனும் நட்பினருடனும் இடும் எண்ணில்லாத பூசல்களைப் பற்றியும் பேசக்கூடாது. அவர்கள் மட்டும் நம்மை நம்புவார்களானால், முரண்பட்டு நிற்பது தூய்மையற்ற செயல் என்றும், இதுகாறும் குடிமக்களிடையே சண்டை இருந்ததில்லை என்றும், அவர்களுக்குச் சொல்வோம். இதைத்தான் நமது கிழவர்களும் கிழவிகளும் குழந்தைகளுக்கு முதன் முதலில் சொல்ல வேண்டும். அக்குழந்தை வளர்ந்தவுடன் அவர்களுக்கென இதேபோன்று கவிஞர்களைக் கவிபாடச் சொல்ல வேண்டும். ஹெபாஸ்டஸ்[1] தனது அன்னையான ஹியரைப் பிணைத்தது அல்லது அவள் அடிபடும்பொழுது அவளை ஆதரிக்க முற்பட்டதற்காக ஸீயஸால்[2] விரட்டப்பட்டது போன்றவை ஹோமரின் காவியத்தில் வரும். தேவரின் சண்டைகள் என்பதைப் போன்ற கதைகளை அவற்றுக்கு ஒட்டுவமைப் பொருள் இருப்பதாகக் கொண்டாலும், கொள்ளாவிட்டாலும், நாம் நமது அரசில் அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் ஒட்டுவமை உள்ளது எது? சொற்பொருள் சார்ந்தது எது?

---

1. Hephaestus 2. Zeus

என்பதை ஓர் இளைஞன் மதிப்பிட முடியாது. அந்தப் பருவத்தில் அவன் உளங்கொள்ளும் எந்தக் கருத்தும் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடக் கூடும். ஆகவே, இளம் பருவத்தினர் முதன்முதலில் கேட்கும் கதைகள் விழுமிய, சீரிய எண்ணங்களின் மாதிரிகளாக இருக்க வேண்டு மென்பது மிக மிக இன்றியமையாதது.

அதைமாந்தஸ்: நீங்கள் சொல்வது சரி, ஆனால் அத்தகைய மாதிரிகளை எங்கே காண்பது என்றும், எக்கதைகளைப் பற்றி நீங்கள் கூறுகிறீர்கள் என்றும் யாரேனும் ஒருவர் வினவினால் எப்படி அவருக்கு விடையிறுப்பது?

சாக்ரடீஸ்: அதைமாந்தஸ்! நீயும், நானும் இப்பொழுது கவிஞர்களல்ல; ஆனால் ஓர் அரசை உருவாக்குபவர்கள், அரசை நிறுவுகின்றவர்கள், எந்தப் பொது முறைகளில் கவிஞர்கள் தங்கள் கதைகளை எழுத வேண்டும் என்பதை யும் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வரன்முறைகளையும், நிச்சயமாக அறிந்துகொள்ள வேண்டும். ஆனால் கதை புனைவது அவர்களுடைய தொழிலல்ல.

அதைமாந்தஸ்: சாலவும் உண்மை; ஆனால் நீங்கள் குறிப்பிடு கின்ற சமயவியலின் கூறுகள் யாவை?

சாக்ரடீஸ்: இதைப்போலவே கடவுளைப் பற்றிச் சொல்லுகின்ற காப்பியம் உணர்ச்சிப்பாடல், துன்பியல் காவியம் என்ற எந்தக் கவிதை முறையானாலும், கடவுள் உண்மையில் இருக்கும் வண்ணமே காட்டப்பட வேண்டும் - இதைப் போன்றவை என்று வைத்துக் கொள்.

அதைமாந்தஸ்: சரி.

சாக்ரடீஸ்: கடவுள் உண்மையில் நல்லவர்தானே? அவரை அப்படியே காட்ட வேண்டாமா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: ஆகவே நல்லது எதுவும் புண்படுத்தக் கூடியது அல்லவே?

அதைமாந்தஸ்: ஆம், புண்படுத்தக் கூடியது அல்ல.

சாக்ரடீஸ்: மேலும் புண்படுத்தக் கூடாதது புண்படுத்துவது இல்லை அல்லவா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ்: புண்படுத்தாதது தீங்கு விளைப்பதில்லை அல்லவா?

அதைமாந்தஸ் : ஆம், விளைப்பதில்லை.

சாக்ரடீஸ் : அப்படியானால், தீங்கு விளைக்காத ஒன்று ஒரு தீங்கிற்குக் காரணமாக இருக்க முடியுமா ?

அதைமாந்தஸ் : முடியவே முடியாது.

சாக்ரடீஸ் : நல்லது பயன்தரக் கூடியது அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆகவே, அது ஒன்றின் நலத்திற்குக் காரணமாகிறது அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : எனவே நல்லதென்பது எல்லாவற்றுக்கும் காரணமில்லை; ஆனால் நல்லவைக்கு மட்டும்தான் காரணம் என்பது வெளிப்படுகிறது, அல்லவா ?

அதைமாந்தஸ் : உறுதியாக.

சாக்ரடீஸ் : அப்படியானால், கடவுள், நல்லவரானால் பலரும் சொல்வதுபோல, எல்லாவற்றுக்கும் கருத்தா அல்ல. ஆனால் ஒரு சில பொருள்களுக்கு மட்டுமே காரணமாவான், மனித வாழ்க்கையில் வந்துபோகும் பெரும்பான்மை நிகழ்ச்சிகளுக்கு அவன் காரணமல்ல. ஏனெனில் மனித வாழ்க்கையில் ஒரு சிலவே நன்மைகள், தீமைகள் பல. நன்மைக்குக் காரணம் கடவுள்தான். தீமைக்குக் காரணம் அவனல்ல, அதை வேறெங்கேனும் காண வேண்டும்.

அதைமாந்தஸ் : இது சாலவும் உண்மையென்று எனக்குத் தோன்றுகிறது.

சாக்ரடீஸ் : அப்படியானால், இரண்டு மரப்பெட்டிகள், ஸீயஸ் பெருமான் கோயிலின் முன் வாயிலில் ஒன்றில் முழுவதும் நன்மையும், மற்றொன்றில் தீமையுமாகக் கிடக்கின்றன, என்றும்; யாருக்கு ஸீயஸ் இவ்விரண்டையும் கலந்து கொடுக்கிறாரோ, அவன் சில சமயங்களில் பாக்கியமற்றவனாய் இருக்கிறான், பிற சமயங்களில் நற்பேற்றினைப் பெறுகிறான், என்றும் கலப்படமற்ற தீமையைப் பெற்றவனை "அழகு மிக்க நிலவுலகெங்கணும் கொடும்பசி விரட்டுகிறது" என்றும், மேலும் "நமக்கெல்லாம் நன்மையையும் தீமையையும் பகிர்ந்தளிக்கிற ஸீயஸ்" என்றும் தவறாக எழுதுகின்ற ஹோமர் அல்லது வேறு எந்தக் கவிஞனுக்கும்

நாம் செவி சாய்க்கக் கூடாது. மேலும், உண்மையில் பண்டாரஸ் சொன்ன உறுதிமொழிகளையும், ஒப்பந்தங் களையும் மீறுதலை அத்தீனும் ஸீயசும்தான் செய்தனர் என்றும், தேவர்களின் – கடவுளர்களின் சண்டைகளையும் சச்சரவுகளையும் தீஸியசும், ஸீயசும்தான் தூண்டினர் என்றும் யாரேனும் சொன்னால் நாம் அதை ஏற்கக் கூடாது.

"ஓர் இல்லத்தை அறவே அழிக்கக் கடவுள் விரும்பு கின்றபொழுது, மனிதரிடையே குற்றங்களை நாடுகிறார்", என்ற அஷ்குலஸின் சொற்களை நமதிளைஞர் கேட்க நாம் அனுமதிக்கலாகாது. அழுத்தமில்லா, அழுந்த அசை உடைய குறில் நெடில் என வரும் சீர்களையுடைய இச் செய்யுட்கள் காணப்படும் துன்பியல் நாடகத்தின் கருப் பொருளான நியோபேயின்[1] துன்பங்கள் அல்லது பெலோப் பியர்களின்[2] இல்லம் அல்லது டிராய் நகரத்துப் போர் அல்லது இதையொத்த கருப்பொருள் இவற்றைப் பற்றி ஒரு கவிஞன் எழுதுவானாயின் ஒன்று இவையெல்லாம் கடவுளின் செயல் என்று அவன் சொல்ல நாம் அனுமதிக்கக் கூடாது, அல்லது அவை கடவுளின் செயலானால் நாம் இப்பொழுது வேண்டித் தேடுகின்ற, அவற்றுக்கான விளக்கத்தை அவன் தர வேண்டும். நீதியானதும் சரியானதும் எதுவோ அதையே கடவுள் செய்தார் என்றும், முன்சொன்ன அந்தச் செயல்கள் தண்டனைக் குள்ளாகத் தக்கவையே என்றும் கவிஞன் சொல்ல வேண்டும். ஆனால் தண்டனைக்குள்ளானவர்கள் துன்புறுகின்றனர் என்றும் கடவுள்தான் அவர்களுடைய துன்பத்திற்குக் காரணம் என்றும் கவிஞன் சொல்ல நாம் அனுமதிக்கக் கூடாது. தீயவர்கள் தண்டிக்கப்பட வேண்டிய வர்கள் என்பதற்காக அவர்கள் துன்புறுகின்றனர் என்றும், அவர்கள் கடவுளிடம் தண்டனை பெறுவதனால் பயனடைகின் றனர் என்றும் அவன் சொன்னாலும், நல்லவரான கடவுளே எவருக்காயிருந்தாலும் அந்தத் தீங்கிற்குக் காரணம் என்பதை நாம் ஏற்றுக் கொள்ளக் கூடாது; நன்கமைந்த பொதுநல அரசில் வாழும் முதியவரானாலும் இளைஞரானாலும் இதைப் பாடவும் எழுதவும் நாம் அனுமதிக்கக் கூடாது; இத்தகைய கதை தற்கொலைக் கொப்பானது, அழிவைக் கொணரக் கூடியது, தெய்வ நெறிக்குப் புறம்பானது.

1. Niobe 2. Pelops

அதைமாந்தஸ்: நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தை ஏற்க நான் தயார்.

சாக்ரடீஸ்: "கடவுள் எல்லாவற்றையும் தோற்றுவித்தவன் அல்லன், நல்லவைக்கு மட்டுமே காரணமாவான்" என்ற இந்த விதி கடவுளைப் பற்றிய நமது சட்டங்களிலும் கொள்கை களிலும் ஒன்ருக இருக்கட்டும். நமது கவிஞர்களும் பாடகர் களும் இதை ஒத்து நடக்கட்டும்.

அதைமாந்தஸ்: அது போதும்.

சாக்ரடீஸ்: சரி, இரண்டாவதான ஒரு கொள்கையைப் பற்றி நீ என்ன நினைக்கிருய்? கடவுள் ஒரு மாயவித்தைக்காரனு, ஒருகால் ஒருருவத்திலும் மற்ருெருகால் வேறுருவத்திலும் சில சமயங்களில் தானே மாறியும், பல உருவங்கள் எடுத்தும் சில சமயங்களில் தனது உருமாற்றங்களின் போலித்தனத் தால் நம்மை ஏமாற்றியும் – வஞ்சகமாகத் தோன்றும் தன்மையனு? அல்லது தனது ஏற்ற உருவத்தில் மாற்றற் கரிய வகையில் ஒருருவினனுய்ச் சமைந்தவனு?

அதைமாந்தஸ்: மேலும் சிந்திக்காமல் இதற்கு என்னல் விடை யிறுக்க முடியாது.

சாக்ரடீஸ்: நன்று: ஏதேனும் ஒன்றில் மாற்றம் இருப்பதாக நாம் கருதினல், அம்மாற்றம் அந்த ஒன்ருலேயே ஏற்பட வேண்டும் அல்லது வேருென்ருல் ஏற்படவேண்டும், அல்லவா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: தம்முள் சிறந்து விளங்கும் பொருள்கள் மாற்று வதற்கும் திரிவதற்கும்கூட அரியது; சான்ருக நலமும் வலிமையும் மிக்கிருக்கும் நேரத்தில் மனித உடல் இறைச்சியி னுலும், குடிவகைகளினுலும் இன்னலுக்காளாகாது. வளர் வதற்குரிய முழு ஆற்றல் பெற்றுள்ள செடி காற்றினுலேயோ கதிரவன் சூட்டினுலேயோ அல்லது இதைப்போன்ற எந்தக் காரணங்களாலேயோ இடருருது.

அதைமாந்தஸ்: ஆம், உண்மை.

சாக்ரடீஸ்: துணிவும் அறிவும் மிக்க உள்ளம் வெளியுலகச் செல்வாக்கினுல் கலக்கமோ குழப்பமோ அடையாது அல்லவா?

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: இந்த விதியே பலவும் சேர்ந்தமைந்த, வீட்டுப் பொருள்கள், வீடுகள், உடைகள் என்ற பொருள்களுக்கும் அமையும், என்று எண்ணுகிறேன். உருவாக்கப்பட்டுச் சிறந்து விளங்குகின்றபொழுது, அந்தப்பொருள்கள் காலத்தாலும் இடத்தாலும் மாற்றத்திற்குள்ளாவதில்லை.

அதைமாந்தஸ்: சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: அப்படியானல், கலையினலோ இயற்கையினலோ அல்லது இரண்டாலுமோ செய்யப்பட்ட நல்ல பொருள்கள் அனைத்திலும் வெளியிலிருந்து ஏற்படும் மாற்றம் நிகழ்வதில்லை அல்லவா?

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: மேலும் கடவுளும் கடவுளால் தோன்றிய பொருள்களும் எல்லாவகையிலும் பழுதற்றவைதானே?

அதைமாந்தஸ்: ஆம், பழுதற்றவையே.

சாக்ரடீஸ்: அப்படியானல் வெளிச் செல்வாக்கினல் கடவுளைப் பல உருவங்கள் எடுக்குமாறு கட்டாயப்படுத்த முடியாது அல்லவா?

அதைமாந்தஸ்: முடியாது.

சாக்ரடீஸ்: ஆனல் தானே மாறுவதும், உருமாறுவதும் செய்யலாமா?

அதைமாந்தஸ்: மாறினல் அப்படித்தான் இருக்க வேண்டும்.

சாக்ரடீஸ்: அப்படியானல் மேலும் சிறந்ததாகவும் அழகியதாகவும் மாறுவாரா? அல்லது சிறப்பற்றதாகவும், விகாரமாகவும் மாறுவாரா?

அதைமாந்தஸ்: அப்படி மாறவேண்டுமானல், சிறப்பற்ற கீழ் நிலைக்குத்தான் மாற வேண்டும். ஏனெனில் நற் பண்பிலோ அழகிலோ குறைவுடையனய் இறைவனை நாம் கருத முடியாது.

சாக்ரடீஸ்: சாலவும் உண்மை, அதைமாந்தஸ்! ஆனல் கடவுளானலும் மனிதனனலும் எவரேனும் தன்னைக் குறைத்துக் கொள்ள விரும்புவரா?

அதைமாந்தஸ்: முடியவே முடியாது.

சாக்ரடீஸ்: அப்படியாயின் கடவுள் மாற விரும்புவார்' என்பது இயலாததாகும். கருத்திலடங்கும் எல்லைக்குள் மிக அழகியவனும் சிறந்தவனும் எண்ணப்படுகிறவனக இருக்கின்ற

ஒவ்வொரு கடவுளும் எப்பொழுதும் தமக்கு இயல்பான உருவத்திலேயே இருக்கிருர் எனலாம்.

அதைமாந்தஸ்: என்னுடைய மதிப்பில் அது அப்படித்தான் முடிகிறது.

சாக்ரடீஸ்: சரி, என்னருமை நண்ப! எந்தக் கவிஞரும்,

"தேவர்கள் பிறநாட்டுப்புதியவர்களின் உருவங்களில் ஒளிந்து கொண்டு நகரங்களில் அங்கும் இங்கும், மேலும் கீழும், எல்லா வகையிலும் உலவுகின்றனர்" என்று சொல்லக்கூடாது, பிரோடியஸையும்[1] தீடிஸையும்[2] பழிக்கக் கூடாது, துன்பியலிலோ அல்லது வேறு எந்தக் கவிதை வகையிலோ,

"ஆர்காசிலுள்ள ஆருன இனுக்கஸின் உயிர் கொடுக்கும் பெண்மக்களுக்காக" என்று பெண்பூசாரி வேடத்தில் மறைந்திருந்து பிச்சை கேட்பது போல ஹியர் என்பாளை அறிமுகப்படுத்தக்கூடாது – இதைப்போன்ற பொய்கள் நமக்கு வேண்டா. எப்படிச் சில தேவர்கள் பல வேற்று மனிதர்களைப்போலவும் பல உருவங்களிலும் இரவில் திரிகின்றனர் என்று இந்தப் புராணக்கதைகளைத் தீய முறையில் சொல்லித் தங்கள் குழந்தைகளை அச்சுறுத்துகின்ற - அந்தக் கவிஞர்களினுல் கவரப்பட்ட தாயாரும் நமக்கு வேண்டா. ஆனுல் தங்கள் குழந்தைகள் கோழையராய் மாறிவிடக் கூடாதென்பதற்கும், அதே நேரத்தில் கடவுளரைப் பழித்துரைக்கக் கூடாதென்பதற்கும் கவனமாய் இருக்கட்டும்.

அதைமாந்தஸ்: கடவுளே! இது வேண்டாம்.

சாக்ரடீஸ்: ஆனுல் கடவுளர் தாங்களாக மாருதவர்களாக இருப்பினும், சூனிய வித்தையினுலும் ஏமாற்று வேலைகளினுலும் பல்வேறு தோற்றங்களில் வருவதாக நாம் எண்ணுமாறு செய்யலாம் அல்லவா?

அதைமாந்தஸ்: இருக்கலாம்.

சாக்ரடீஸ்: சரி, கடவுள் பொய் சொல்லவோ, பொய்யான தொன்றைச் செய்யவோ, பொய்த் தோற்றமாக உருவெடுக்கவோ விரும்புவார் என்று நீ கருத முடியுமா?

அதைமாந்தஸ்: முடியாது.

---

1. Proteus
2. Thetis

சாக்ரடீஸ் : உண்மையான பொய் – அப்படிச் சொல்லலாமென்றால்—அது கடவுளராலும் மனிதராலும் வெறுக்கப்படுகின்றது என்பதை நீ அறிவாயா?

அதைமாந்தஸ் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

சாக்ரடீஸ் : தன்னுடைய மிக உண்மையான, மிகச் சிறந்த பகுதியிலோ மிக உண்மையான மிகச் சிறந்த விஷயங்களிலோ யாரும் மனமறிந்து ஏமாறுவதில்லை, என்பதைத்தான் குறிப்பிடுகிறேன். எல்லாவற்றைக் காட்டிலும் தன்பால் ஒரு பொய் குடிகொள்வதைக் கண்டஞ்சுகிறான்.

அதைமாந்தஸ் : இன்னமும் நீங்கள் கூறுவது எனக்கு விளங்கவில்லை.

சாக்ரடீஸ் : காரணம், நீ என்னுடைய சொற்களுக்கு ஏதோ ஆழ்ந்த பொருளிருப்பதாக நினைப்பதுதான். ஆனால் ஏமாற்று வேலையோ, ஏமாற்றப்படுபவரோ தங்களின் மிகச் சிறந்த பகுதியான ஆன்மாவில் உள்ள மிகச் சிறந்த உண்மைகளைத் தெரிந்துகொள்ளாமலிருப்பதோ அந்த ஆன்மாவில் அந்தப் பொய்யை இட்டு வைப்பதோ மனித குலம் அறவே விரும்பாத ஒன்று; அதாவது மிக வெறுக்கின்ற ஒன்று.

அதைமாந்தஸ் : இதைவிட, அவர்களுக்கு வெறுக்கத்தக்க ஒன்று இருக்காது.

சாக்ரடீஸ் : நான் இப்பொழுது சொல்லிக் கொண்டிருந்தாற் போல ஏமாற்றப்படுகின்றவனின் உள்ளத்தில் இருக்கின்ற அறியாமையே உண்மையான பொய் எனலாம், ஏனெனில் சொல்லில் பொய் என்பது உள்ளத்தின் முந்திய அவா நிலையின் நிழலும் பாவனையுந்தான். உண்மையான கலப்படமற்ற பொய் அல்ல. நான் சொல்வது சரிதானே?

அதைமாந்தஸ் : முற்றிலும் சரி.

சாக்ரடீஸ் : உண்மையான பொய் கடவுளரால் மட்டுமன்றி மனிதராலும் வெறுக்கப்படுகிறது, அல்லவா?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆனால், பொய்ச்சொல் சில சமயங்களில் பயனுடையதாக இருக்கின்றது; வெறுக்கத்தக்கதாக இல்லை—சான்றாக பகைவரோடு மேற்கொள்ளுகிற செயல்களில், அல்லது நாம் நமது நண்பர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் பித்துப்பிடித்தோ, மாறுபட எண்ணியோ நமக்குத் தீங்கு விளைக்க இருக்குங்கால், பொய், மருந்துபோல

அல்லது தடுப்பு முறைபோலப் பயன்படும். நாம் சற்று முன்னர்ப்பேசிக் கொண்டிருந்த புராணக் கதைகளில் கூடக் காணலாம். ஏனெனில் பண்டைக் காலத்தைப் பற்றிய உண்மை நமக்குத் தெரியாததலால், உண்மையைப் போலவே நம்மால் இயன்றவரை பொய்யைச் சொல்கிறோம். அவற்றைச் சேர்த்துப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

அதைமாந்தஸ்: முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ்: ஆனால், இந்தக் காரணங்களில் எதுவேனும் கடவுளுக்குப் பொருந்துமா? அவர் தொன்மைபற்றி ஒன்றும் அறியாதவர் என்றும், ஆகவே புதுவன புனைகின்றார் எனவும் நாம் கருதலாமா?

அதைமாந்தஸ்: அது நகைப்பிற் குரியதாக இருக்கும்.

சாக்ரடீஸ்: அப்படியானால் கடவுளைப் பற்றிய நமது கருத்தில் பொய் சொல்லுகின்ற புலவனுக்கு இடமில்லை அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம், இடமில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

சாக்ரடீஸ்: அல்லது பகைவர்க்கஞ்சி அவன் பொய் சொல்லலாம் அல்லவா?

அதைமாந்தஸ்: அப்படிக் கருத முடியாது.

சாக்ரடீஸ்: அறிவற்ற அல்லது பித்துப்பிடித்த நண்பர்கள் அவனுக்கு இருக்கலாம் அல்லவா?

அதைமாந்தஸ்: ஆனால் அறிவற்ற அல்லது பித்துப்பிடித்த ஒருவன் கடவுளுக்கு நண்பனாக இருக்க முடியாது.

சாக்ரடீஸ்: அப்படியானால் கடவுள் ஏன் பொய் சொல்ல வேண்டும் என்பதற்கு ஒரு நோக்கம் கற்பிக்க முடியாது அல்லவா?

அதைமாந்தஸ்: முடியாது.

சாக்ரடீஸ்: எனவே மனிதனிலும் மேம்பட்ட தெய்வீகச் சக்தி பொய் சொல்லச் சற்றும் இயலாததா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அப்படியாயின் கடவுள் முற்றிலும் எளியர்; சொல் செயல் இரண்டிலும் உண்மையின் உருவம், அவர் மாறுவதில்லை, குறையீட்டாலோ, அல்லது சொல்லினாலோ, கனவு அல்லது நனவுக் காட்சியினாலோ நம்மை ஏமாற்றுவதில்லை.

அதைமாந்தஸ்: உங்கள் கருத்து என் கருத்தைப் பிரதிபலிக்கிறது.

சாக்ரடீஸ் : அப்படியானால் இதுதான் தெய்வீகமானவற்றைப் பற்றி நாம் பேசவும் எழுதவும் வேண்டிய இரண்டாவது வகை அல்லது முறை என்பதை நீ ஒப்புக்கொள்கிறாய் போலும். தங்களைத்தாங்களே உருமாற்றிக் கொள்ளும் மாய வித்தைக்காரரல்லர் கடவுளர். மேலும் மனித குலத்தை எந்த வகையிலும் அவர் ஏமாற்றுவதுமில்லை.

அதைமாந்தஸ் : நான் அதை ஏற்கிறேன், ஆமோதிக்கிறேன்.

சாக்ரடீஸ் : சரி, ஹோமரை நாம் பாராட்டுகிறவர்களாய் இருந்தாலும், அகமெம்னனிடம் தோன்றுமாறு ஸீயஸ் அனுப்பிய பொய்க் கனவை நாம் பாராட்டுவதற்கில்லை. மேலும் தீடிசின்[1] முதலிரவின் பொழுது அப்பாலோ[2]

"அவளுடைய அழகிய மக்கள், குழந்தைகள் நீண்ட நாள் வாழும், நோயற்று இருக்கும் என்பதை எண்ணி மகிழ்ந்து இசைபாடிய வண்ணம் அதைக் கொண்டாடிக் கொண்டிருந்தார். எல்லாவற்றிலும் கடவுளின் ஆசி பெற்றவளென என்னைப் பற்றிப் பேசியபொழுது வெற்றிப் பாட்டிசைத்து என்னை மகிழ்வுறுத்தினர். பீபஸ்[3] சொன்ன அந்தச் சொல் தெய்வீகமானதாயும், வருவது உரைக்கும் திறத்தினதாயும் இருந்ததால் தவறாது என்று எண்ணினேன். இப்பொழுது, இப்படிப் பாட்டிசைத்து விருந்திற் கலந்துகொண்டு இவற்றையெல்லாம் சொன்ன அவரே "என்னுடைய குழந்தையைக் கொன்றவர்" என்று தீடிஸ் கூறுவதாக வரும் அஷ்குலசின் கவிதைகளை நாம் பாராட்ட முடியாது. கடவுளைப் பற்றிய இத்தகைய கருத்துக்களே நமக்கு சினமூட்டும், இவற்றைச் சொல்கிறவனைப் பாராட்டக் கூடாது. நமது காப்பாளர்கள் மனிதரால் இயன்ற அளவு கடவுளரை வணங்கி வழிபடுவோராகவும் அவர்களைப்போல வாழ்பவராகவும் இருக்க வேண்டும் என்பது நமது குறிக்கோளாக இருக்க இளைஞர்களுக்குக் கல்வி புகட்டும்போது இவற்றை நமது ஆசிரியப் பெருமக்கள் பயன்படுத்த அனுமதிக்கக் கூடாது.

அதைமாந்தஸ் : இந்தக் கொள்கைகளை நான் மனமார ஏற்கிறேன், இவற்றையே நான் எனது நெறியாகக் கொள்வேன், என உறுதி கூறுகிறேன்.

---

1. Thetis 2. Apollo 3. Phoebus

மூன்றும் புத்தகம்

சாக்ரடீஸ்: இவையே நமது சமயவியலின் கொள்கைகள். நமது சீடர்கள் தேவர்களிடமும் பெற்றோர்களிடமும் பணிவு காட்ட வேண்டுமெனவும், தம்முள் ஒருவரோடொருவர் கொண்டுள்ள நட்பை மதிக்க வேண்டுமெனவும், நாம் கருதினல் அவர்களது இளம் பருவத்திலிருந்தே அவர்களுக்குச் சில கதைகள் மட்டிலுமே சொல்லலாம்; சிலவற்றைச் சொல்லலாகாது.

அதைமாந்தஸ்: ஆம், நமது கொள்கைகள் சரியென்றே நான் எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ்: அவர்கள் மன உறுதி உடையவர்களாக இருக்க வேண்டுமாயின், இவற்றைத் தவிர வேறு படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டாமா? சாவுக்கு அஞ்சும் மனப்பான்மையை ஒழிக்கும் படிப்பினைகள் போன்றவற்றைப் பெறவேண்டாமா? சாவுக்கு அஞ்சும் மனப்பான்மையுடையவன் மன உறுதிகொண்டவன் ஆவானு?

அதைமாந்தஸ்: நிச்சயமாக ஆகமாட்டான்.

சாக்ரடீஸ்: கீழுலகம் என ஒன்றுண்டு, அது மிக அஞ்சத்தக்க நரகம் என்றெல்லாம் நம்பும் ஒருவன் சாவுக்கு அஞ்சாமலிருக்க முடியுமா? அல்லது தோல்வியையும் அடிமைத்தனத்தையும் விடப் போரில் உயிர் துறப்பதே மேல் எனத் துணிவு கொள்வானு?

அதைமாந்தஸ்: கொள்ளமுடியாதென்பது திண்ணம்.

சாக்ரடீஸ்: அப்படியாயின், இத்தகைய கதைகளைப் புனைந்துரைப்போரையும் அவர் போன்ற பிறரையும் கட்டுப்படுத்தி,

கீழுலகத்தைப் பற்றி அவர்கள் தரும் விளக்கவுரைகள் உண்மையல்ல என்றும், அவை நமது எதிர்காலப் போர் வீரர்களுக்குத் தீங்கிழைக்கும் என்றும், அவர்களுக்கு அறிவுறுத்தி அவ்வுலகத்தை அவர்கள் நிந்தியாதிருப்பதோடு பாராட்டுமாறும் நாம் வேண்டிக்கொள்ள வேண்டும்.

அதைமாந்தஸ் : அதுவே நமது கடமையாய் அமையும்.

சாக்ரடீஸ் : "செத்து மடிந்த சாரமில்லாத அனைவரையும் ஆளுவதைவிட, சொத்தில்லாத ஏழையிடத்து அடிமையாக இருப்பது மேல்." எனத் தொடங்கும் அருவருக்கத்தக்க பல பகுதிகளை நாம் நீக்கிவிட வேண்டும். புளூடோ என்ற நரகதேவன் எவ்வாறு அஞ்சினான் என்று கூறும் பின்வரும் பாட்டையும் நூலினின்று நீக்கவேண்டும்.

"தேவர்களால் வெறுக்கப்படுவதும் கொடூரமாயும் இழிவாயுமுள்ளதுமாகிய அம்மாளிகைகளை அழிவுள்ள மாந்தரும் அமரர்களும் கண்டு விடுவார்களே என்று அஞ்சி", மேலும் இவ்வாறே "ஆ தெய்வமே, மாண்டவர் உறையும் கீழுலகத்தில் ஆன்மாவும் பேய் வடிவமுமே உண்மையில் இருக்கின்றன ; ஆனால் அவற்றுக்கு மனமோ உயிரோ கிடையாது" என்ற பகுதியையும்,

"ஏனையோர் அலைந்து திரியும் நிழல்களாக இருக்க, திரீசியஸ் மட்டும் விவேகமுள்ளவனாக விளங்குமாறு பர்சிபோன் (Persephone) மாண்டபிறகும் அவனுக்கு மனத்தை அளித்தான்," எனத் திரீசியசைப் பற்றிக் கூறும் பகுதியையும் விலக்கவேண்டும். மேலும் "மனித வாழ்க்கையையும், இளமையையும் துறந்து தனது விதியை நொந்துகொண்டு பூத உடலினின்றும் உயிர் பிரிந்து கீழ் உலகத்துக்குப் பறந்து சென்றது," எனவும்

"ஆன்மா கீச்சுக்கீச்சென்று குரல் எழுப்பிய வண்ணம் புகைபோல் பாதாள உலகம் சென்றது" எனவும், "இருள் சூழ்ந்த ஒரு குகையிலுள்ள வௌவால்களுள் ஏதேனும் ஒன்று பிடி நழுவிப் பாறையிலிருந்து விழ நேரிட்டால் எப்படிக் கீச்சிட்டுப் பறந்து ஒன்றையொன்று கட்டிக் கொண்டு தொங்குமோ அவ்வாறே மாண்டவர்களது ஆன்மாக்கள் கிரீச்சிட்டுக்கொண்டு அலையும்போது ஒன்றையொன்று பற்றிக்கொள்ளும்" எனவும் வருவன அனைத்தையும் அறவே நீக்கவேண்டும். இப்பகுதிகளையும் இவை

போன்றவற்றையும் நாம் நீக்குவதற்குக் காரணம் இவை கவிநயம் அற்றவை என்பதோ, பொதுமக்களின் செவியைக் கவரவில்லை என்பதோ அல்ல ; ஆனால் இவற்றின் செய்யுட் சுவை மிகுதிப்பட மிகுதிப்பட, சிறுவர்கள் பெரியவர்கள் ஆகியோரின் செவிகளுக்குத் தீமை விளைவிக்கின்றன. எவ்வாறெனில், விடுதலை அடையவும் சாவைக் காட்டிலும் அடிமைத்தனம் கொடியது என்று அஞ்சவும் வேண்டியிருக்க அதற்கு மாறான உணர்வை இவை தூண்டுகின்றன என்பதே, என்று சொல்லி ஹோமரையும் மற்றுமுள்ள புலவர்களையும் சினம்கொள்ள வேண்டாம் என்று நாம் பணிவுடன் கேட்டுக்கொள்ள வேண்டும்.

அதைமாந்தஸ் : இதற்கு ஐயமில்லை.

சாக்ரடீஸ் : கீழுலகத்தைக் குறிக்கும் பயங்கரமாயும் கொடூரமாயுமுள்ள எல்லாப் பெயர்களையும் கூட நாம் நீக்க வேண்டும் ; உதாரணமாக [1]காகைடஸ், [2]ஸ்டிக்ஸ் நிலவுலகுக்குக் கீழ் உள்ள பேய்கள், உருவமற்ற நிழல்கள் என்ற பெயர்கள், சொன்ன அளவிலேயே கேட்பவரது உயிரிலே நடுக்கம் விளைக்கிற இவைபோன்ற ஏனைய பெயர்களும் தவிர்க்கப்பட வேண்டும். இக்கொடிய கதைகளால் பயனொன்றும் இல்லை என்று நான் சொல்லவில்லை ; ஆனால் இக்கதைகளால் நம்மை ஆள்வோர் மிக எளிதில் தளர்ச்சியுற்றுத் தமது ஆண்மையை இழக்கக்கூடும் என்ற தீங்கு உண்டு.

அதைமாந்தஸ் : ஆம், உண்மையில் அந்த அபாயம் இருக்கிறது.

சாக்ரடீஸ் : அப்படியானால் அவற்றை அறவே விலக்க வேண்டும்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : மிகச் சிறந்த வேறு கவிதை இயற்றப்படவேண்டும், அதை நாம் பாடலாம்.

அதைமாந்தஸ் : தெளிவு.

சாக்ரடீஸ் : மேலும் புகழ்பெற்ற கவிஞர்களின் நூலில் வரும் அழுகையையும் புலம்பலையும் நீக்குவதற்குப் போகலாமா ?

---

1. Cocytus, 2. Styx. இவை மாண்டவர் உலகத்தில் இருப்பதாகக் கூறும் அழுகை நதி, துன்ப நதிகளாகும்.

அதைமாந்தஸ்: இவையும் மற்றவைகளைப் போல் நீக்கப்பட வேண்டியவையே.

சாக்ரடீஸ்: இவற்றை நாம் நீக்குவது முறையாகுமா? சிந்தித்துப் பார். நல்லவன் ஒருவன் தனக்குத் தோழனை மற்றொரு நல்லவனுக்கு ஏற்படும் சாவைக்கூட, கொடுமையானதாகக் கருதி மனம் நெகிழக் கூடாது என்பதல்லவா நமது கொள்கையாகிறது?

அதைமாந்தஸ்: ஆம், அதுவே நமது கொள்கை.

சாக்ரடீஸ்: ஆகவே தனது தோழன் இறந்தால், மிகப் பெரிய துன்பம் நேர்ந்துவிட்டதாகக் கருதி அதற்காக வருந்த மாட்டானல்லவா?

அதைமாந்தஸ்: ஆம், அவன் வருத்தப்படமாட்டான்.

சாக்ரடீஸ்: நாம் மேலும் சொல்லவேண்டியது யாதெனில் அத்தகைய ஒருவன் தன்னிறைவு உள்ளவன், தனது இன்பம் தன்வசமே உள்ளவன், மற்றவரைச் சிறிதளவும் நாடான், என்பதே.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: எனவே அத்தகையவன் மற்றவர்களைப்போலின்றித் தன் மகனையோ, உடன்பிறந்தவனையோ இழந்தாலும் அல்லது பெருஞ் செல்வத்தை இழந்தாலும், அவ்விழப்பைப் பெரிதாகக் கருதமாட்டான் அல்லவா?

அதைமாந்தஸ்: நிச்சயம்.

சாக்ரடீஸ்: ஆதலால் தனக்கு நேரக்கூடிய இத்தகைய துன்பத்தைச் சமநிலை உள்ளத்துடன் பொறுத்துக்கொள்வான், பெரிதும் வருந்தமாட்டான் எனலாம்.

அதைமாந்தஸ்: ஆம், மற்றவர்களைவிட அத்தகைய துன்பங்களை மிக எளிதாகக் கருதுவான்.

சாக்ரடீஸ்: எனவே புகழ்ச் செல்வர்களின் புலம்பலுரைகளை நீக்கி, அவற்றைப் பெண்டிர்க்கே (இவை அவர்களிலும் தகுதியுள்ளவர்களுக்குப் பொருந்தாது.) உரிமையாக்கி விட்டுவிடுவது சரியாகும், அல்லது கீழ்மக்களுக்கு விட்டு விடலாம். ஏனெனில் தங்கள் நாட்டைக் காக்க நம்மால் பயிற்றுவிக்கப்படும் மக்கள் இத்தகைய புலம்பலை அப்போதுதான் வெறுப்பர்.

அதைமாந்தஸ்: அது மிக நல்லது.

சாக்ரடீஸ்: தேவதை ஒன்றின் மைந்தனுன அக்கில்லிஸ் (Achilles) முதலில் ஒரு பக்கமாகப் படுக்கிருன், பின்னர் முகம் கவிழ்கிருன், பின்னர் திடுக்கிட்டெழுந்து புல் பூண்டு கூட வளராத கடற்கரை வழியே திரிகிருன்; ஒரு சமயம் புகைக்கரி பிடித்த சாம்பலைத் தனது இரு கரங்களிலும் எடுத்துத் தலைமேல் போட்டுக்கொள்ளுகிருன், இன்னொரு சமயம் ஹோமர் வருணித்துள்ள அத்தனை வகைகளிலும் அழுது புலம்புகிருன். இவ்வாறெல்லாம் அக்கில்லிஸ்ஸைப் பற்றி வருணிக்க வேண்டாமென்று ஹோமரையும் பிற கவிஞர்களையும் நாம் மீண்டும் பணிந்து வேண்டிக்கொள் வோம்.

தேவர்களின் உறவினரான பிரியாம் (Priam) என்பார் புழுதியில் புரண்டு ஒவ்வொருவரையும் உரக்கப் பெயரிட் டழைத்து அவர்களது உதவியை வேண்டியதாகவும், கெஞ்சியதாகவும் அவரைப்பற்றி ஹோமர் சொல்லியிருப் பதும் கூடாது.

"அந்தோ என்னே என் அவலம், நான் பெருவீரக் குழந்தையைப் பெற்றெடுத்தது இத்தகைய துயரத்துக்கு ஆளாகவா;" என்றெல்லாம் தேவதைகள் புலம்பி மனம் வருந்திக் கூறுவதாக அவர்களைக் காட்டலாகாது, என்று மேலும் மிக உருக்கமாக வேண்டிக்கொள்வோம்.

தேவர்களைப்பற்றிக் கூறத்தான் வேண்டுமென்றிருந்தா லும்கூட "ஆ தெய்வமே, எனது ஆருயிர் நண்பன் நகரைச் சுற்றிச் சுற்றி விரட்டப்படுவதை என் கண்கொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்றேனே; எனது இதயம் பதைக் கிறதே" என்று தேவனே கூறுவதாகக் காட்டி மிகவும் இழிவு படுத்தத் துணிய வேண்டாம்.

"மக்களுள் எனக்கு மிக இனியனுன சர்பிடன் (Sarpedon) மெனிடியசின் (Menoetius) மகனுன பெட் ராக்லசின் (Patroclus) கைகளால் முறியடிக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்கும் அவலநிலை எனக்கு நேர்ந்தது என்ன கொடுமை," எனச் சொல்லுவிக்கும் இழிவும் கூடாது.

என் இனிய அதைமாந்தஸ்! தேவர்களைப் பற்றி இவ்வாறு இழிவாகக் கூறுவதைக் கேட்டு நகைக்கவேண்டிய இளைஞர்கள் இவற்றைக் கற்பனை எனக் கருதாது உண்மை யெனக் கொண்டுவிட்டால் அவர்களுள் எந்த இளைஞனும்

தேவரே இந்நிலையிலிருக்க மனிதனுகிய தான் இச்செயல்களில் ஈடுபடுதல் இழிவு எனக் கருதமாட்டான். ஒருவேளை இவ்வாறு சொல்லவும் செய்யவும் தனது மனம் முற்பட்டால் அது தகாது எனக் கண்டிக்கமாட்டான். சிறு துன்பம் நேர்ந்தாலும், நாணமும் தன்னடக்கமும் இன்றி, அதற்காக எப்போதும் வருந்திப் புலம்புவான்.

அதைமாந்தஸ்: ஆம், அது பெரிதும் உண்மையே.

சாக்ரடீஸ்: ஆம், நிச்சயமாக அப்படி இருக்கக்கூடாதுதான்; இதுவே நமது விவாதத்தின் முடிவு. இம்முடிவு தவறெனக் காட்டப்படும் வரையில் நாம் இதையே பின்பற்றவேண்டும்.

அதைமாந்தஸ்: ஆம், கூடாதுதான்.

சாக்ரடீஸ்: நமது காவலர்கள் சிரித்துக்கொண்டே இருக்கும் பழக்கத்தையும் விட்டுவிடவேண்டும், ஏனெனில் எல்லைமீறிய சிரிப்பு பெரும்பாலும் கடுமையான எதிர்வினையைத் தூண்டிவிடும்.

அதைமாந்தஸ்: அப்படித்தான் நானும் நம்புகிறேன்.

சாக்ரடீஸ்: இறக்கவேண்டிய மாந்தர்களாக இருப்பினும், தகுதியுள்ளவர்கள் பெருநகையினை அடக்கமாட்டாது, அதற்கு ஆட்பட்டார்கள் என்று கூறலாகாது. தேவர்கள் அதற்கு ஆட்பட்டார்கள் என்று கூறுவதற்கும் இடந்தரலாகாது.

அதைமாந்தஸ்: நீங்கள் கூறுவது போலத் தேவர்களை அவ்வாறு சொல்வது பெரும் தவறுதான்.

சாக்ரடீஸ்: ஹபீஸ்டஸ் தன் மாளிகையில் ஓடித்திரிவதைக் கண்டதும் அருள்பெற்ற தேவர்களிடையே அடக்கவொண்ணுத சிரிப்பு ஏற்பட்டது'' என்று ஹோமர் கூறியிருப்பதுபோல் தேவர்களைப்பற்றி இங்ஙனம் சொல்வதற்கு இடந்தரலாகாது.

அதைமாந்தஸ்: தங்கள் கொள்கைப்படி அதற்கு இடந்தரலாகாது.

சாக்ரடீஸ்: அதை என்மேல் நீ ஏற்றிவிட விரும்பினுல், அது என் கொள்கையாகவே இருக்கட்டும்; எப்படியிருப்பினும் தேவர்களைப் பற்றி இவ்வாறு கூறுவதை நாம் அனுமதிக்கக் கூடாது என்பது திண்ணம்.

மேலும் உண்மை நன்கு மதிக்கப்படவேண்டும், நாம் முன் பேசிக்கொண்டிருந்தது போல், பொய் தேவர்களுக்குப் பயனற்றது, மக்களுக்கு மருந்து போல மட்டும் பயன்தருவது எனச் சொன்னல், அத்தகைய மருந்தினை மருத்துவர் மட்டுமே கையாள வேண்டும்; ஏனைய தனி மனிதர்களுக்கு அதனுடன் ஒரு தொடர்பும் கூடாது.

அதைமாந்தஸ்: நிச்சயமாகக் கூடாது.

சாக்ரடீஸ்: எவருக்காவது பொய் சொல்லும் உரிமை இருக்க வேண்டுமாயின், அது நாட்டை ஆள்வோருக்கே உண்டு, ஆள்வோர்கூட தமது பகைவர்களிடத்தும் தம் குடிமக்களிடத்தும் பொது நலத்தைக் கருதிமட்டுமே, பொய் சொல்ல அனுமதிக்கப்படலாம். வேறு எவருக்கும் இவ்வுரிமை இல்லை.

ஆட்சியாளருக்கு இவ்வுரிமை இருக்கத் தனிமனிதன் பதிலுக்குப் பொய் சொல்வது, உடற்பயிற்சி பெறும் ஒரு மாணவனும், நோயாளியும் தமது உடல் நிலையைப்பற்றி உடற்பயிற்சி அளிப்பவனுக்கோ மருத்துவனுக்கோ சொல்லாததைக் காட்டிலும், அல்லது மாலுமி ஒருவன் கப்பலுக்கும் மாலுமியர் குழாத்திற்கும் என்ன ஆயிற்று என்பதையும், தானும் மற்ற பிரயாணிகளும் எந்த நிலையில் இருக்கிருர்கள் என்பதையும் கப்பல் தலைவனுக்குச் சொல்லாததைக் காட்டிலும் மிகப் பெரும் குற்றமாகும்.

அதைமாந்தஸ்: மிக்க உண்மை.

சாக்ரடீஸ்: எனவே, நாட்டில் ஆட்சியாளர் தன்னைத்தவிர வேறெருவன் பொய் சொல்லக் கண்டுவிட்டால், அவன் தொழிலாளிகளுள் பூசாரியாயினும், மருத்துவனுயினும், தச்சனுயினும், கப்பலுக்குப் போல் அரசுக்குத் தீங்கிழைக்கும் முறையைக் கையாண்டதாகக் கருதி, ஆட்சியாளன் அவனைத் தண்டிப்பான்.

அதைமாந்தஸ்: அரசைப்பற்றிய நமது எண்ணங்கள் நடைமுறைக்கு வருமாயின் இப்படி நிச்சயமாக நடக்கும்.

சாக்ரடீஸ்: அடுத்தபடியாக, நமது இளைஞர்கள் மிதவாழ்க்கை நடத்த வேண்டுமல்லவா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: பொதுவாகக் கூறுமிடத்து, தலைவர்களுக்குக் கீழ்ப்படிதலும் ஐம்புலனடக்கலும் மிதவாழ்க்கையின் சிறப்பான கூறுகள் அன்ருே?

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியானால் "நண்பனே சும்மா உட்கார்ந்திருந்து எனது சொல்லுக்குப் பணிந்து நட" என்றும் "வாய்பேசாது தங்களது தலைவர்களுக்கு அஞ்சிக் கிரேக்கர்கள் ஆற்றல் பொலியச் சென்றனர்" என்றும் ஹோமரது நூலில் டையோமீட் (Diomede) கூறிய வார்த்தைகளை ஆமோதிக்கவேண்டும் ; இத்தகைய மற்றைக் கருத்துக்களையும் நாம் ஏற்போம்.

அதைமாந்தஸ் : அப்படியே செய்வோம்.

சாக்ரடீஸ் : "ஆ, கள் மிகுதியால் போதை யேறிய நிலையில், நாயின் வெறிப்பார்வையையும் மானின் இதயத்தையும் கொண்டு" என்று வரும் அடிக்கும் அதனைத் தொடர்ந்து வரும் சொற்களுக்கும் என்ன சொல்கிறாய்? இவை அல்லது இவை போன்ற பணிவற்ற சொற்களை ஆட்சியினரிடம் தனி மக்கள் கூறுவதாகச் செய்யுளிலோ உரைநடையிலோ சொல்லப்படுவது முறையானதா, முறையற்றதா?

அதைமாந்தஸ் : ஆம், முறையற்றதே.

சாக்ரடீஸ் : அவை ஓர் அளவு வேடிக்கையாக இருக்க உதவக்கூடும், ஆனால் சீரான மனநிலைக்கு ஒவ்வாது. ஆகவே நமது இளைஞர்களுக்கு அவை தீங்கு பயக்கக்கூடும். இதை நீ ஒத்துக் கொள்ளுகிறாயல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : "உணவருந்துமிடத்தில் ரொட்டியும் இறைச்சியும் நிரம்ப இருக்க, பரிமாறுவோன் மதுவைக் கொணர்ந்து அதைக் குடுவையில் மொண்டு கோப்பைகளில் வார்க்க...." என்ற நிலையை விட மிகச் சிறந்ததொன்றில்லை என்று உலகமேதையொருவன் சொன்னதாக அமைத்த சொற்கள் சரியா ? இளைஞன் ஒருவன் கேட்டால் சீரான மன நிலை எய்த உதவுமா? "பசியினால் உயிர் துறந்து தன்முடிவை எய்துவது விதிகளுள் மிகமிகக் கொடியது" என்ற கவிதையும் பொருந்துமா? மற்றைத் தேவர்களும் மக்களும் உறங்கும் போது சீயஸ் (Zeus) மாத்திரம் விழித்திருந்து திட்டங்கள் அமைத்துக்கொண்டிருக்கையில் காம வெறியில் ஒரு நொடிப் பொழுதில் அவையனைத்தையும் மறந்து, ஹெரே (Here) என்பாளைக் கண்டதும் தன்னையிழந்து குடிசைக்குள் செல்ல மறுத்து, 'அவர்களது பெற்றோர்களுக்குத் தெரியாது'

முதன்முதலில் ஒருவரையொருவர் பார்த்தபோதும் கூட அத்தகைய இன்பத்தின் உச்ச நிலையில் ஒருபொழுதும் தான் இருந்ததில்லை என்ற வண்ணம் அவளுடன் கூடி இருக்க முற்பட்டாராம், என்ற சீயஸின் கதைக்கு என்ன சொல்வாய்? அல்லது, இத்தகைய செயல்களுக்காக ஏரிஸ்ஸையும் (Ares) அப்ரோடைட்டையும் (Aphrodite) ஹிபேஸ்டஸ் (Hephaestus) சங்கிலியாற் பிணைத்தாராம், என்ற தகுதியற்ற கதைக்கும் என்ன சொல்வாய்?

அதைமாந்தஸ்: உண்மையில் இளைஞர்கள் இவைபோன்றவற்றைக் கேட்கக் கூடாது, என்பது எனது திண்ணமான கருத்து.

சாக்ரடீஸ்: ஆனால் புகழ்பெற்ற மக்களால் செய்யப்பட்ட அல்லது அவர்களால் கூறப்பட்ட தீரச்செயல்களை அவர்கள் காணவேண்டும், கேட்கவும் வேண்டும். சான்ருக, " தன் மார்பை அறைந்த வண்ணம், மனமே இதைப் பொறுத்துக் கொள்; இதைக்காட்டிலும் கொடியவற்றை நீ சகித்திருக்கிருயே என மனத்தைக் கடிந்து கொண்டான் " என்ற கவிதையில் சொன்னவற்றைக் கண்டும் கேட்டும் பயனடைய வேண்டும்.

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: மேலும், அவர்கள் வெகுமதி வாங்குவோராகவோ பணத்தாசை கொண்டவராகவோ இருக்க நாம் அனுமதிக்கக் கூடாது.

அதைமாந்தஸ்: நிச்சயமாகக் கூடாது.

சாக்ரடீஸ்: " தேவர்களும் மதிப்பிற்குரிய அரசர்களும் வெகுமதிகளைக்கண்டு இசைந்ததாகவும் " இளைஞர்களிடம் நாம் சொல்லலாகாது. கிரேக்கரது வெகுமதிகளை ஏற்று அவர்களுக்கு உதவிபுரியவேண்டும் என்றும், வெகுமதி பெருது அவர்களுக்கு இரங்கலாகாது என்றும் பீனிக்ஸ் (Phoenix) தமது மாணவரான அக்கில்லிஸ் என்பாருக்குச் சொன்னதை ஒப்புக்கொள்ளத்தக்க தென்ரே, நல்ல அறிவுரை என்ரே கருத முடியாது. அகமெம்னன் (Agamemnon) அளித்த வெகுமதிகளை அக்கில்லிஸ் ஏற்ருர் என்றும் பணத்தைப் பெற்றுக்கொண்டு ஹெக்டாரின் (Hector) சவத்தைத் திருப்பிக்கொடுத்தார் என்றும் பணம் பெருதவரைத் திருப்பிக்கொடுக்க மறுத்தார் என்றும் சொல்லு

மளவிற்கு அக்கில்லிஸ் பணத்தாசை பிடித்தவர் என்பதை நாம் நம்புவதோ ஒத்துக்கொள்வதோ முடியாது.

அதைமாந்தஸ்: ஐயமின்றி இத்தகைய கருத்துக்கள் நாம் ஒப்புக்கொள்ளத் தக்கன அல்ல.

சாக்ரடீஸ்: ஹோமரிடம் எனக்கு மிக்க மதிப்பிருப்பதனுல் இத்தகைய குணங்களை ஹோமர் அக்கில்லிஸ் என்பார்மேல் ஏற்றிக் கூறினுர் என்பதிலோ, அவரிடம் இவை உண்மையில் பொருந்தியிருந்தன என்பதை நம்பினுர் என்பதிலோ, ஹோமர் அறவே தெய்வ நம்பிக்கையற்றவர் என்று சொல்வதிலோ எனக்கு மனமில்லை. "ஓ! நீண்டதூரம் விரைந்து செல்ல வல்லவரே! தேவர்களில் மிகமிகக் கொடியவரே! நீங்கள் எனக்குத் தீங்கு இழைத்துவிட்டீர்கள்; எனக்கு மட்டும் போதிய ஆற்றலிருப்பின் உண்மையில் பழிக்குப்பழி வாங்குவேன்," என்று இறுமாப்போடு அக்கில்லிஸ் அப்பாலோவிடம் கூறியதாகவும், நதி தேவதைக்குப் பணிய மறுத்ததாகவும், அவரது தெய்வத்தன்மையையே பறிக்கத் துணிந்ததாகவும் கூறப்படுவதை நான் ஒரு சிறிதும் நம்ப முடியவில்லை. அல்லது மற்ருெரு நதிதேவதையான ஸ்பர்கீயசுக்கு (Spercheius)த் தனது முடியை அர்ப்பணம் செய்யக் கருதியிருந்து, அவ்வாறே செய்வதாக உறுதிமொழி கூறி விரதம் ஏற்றிருந்தும், மாண்ட பெட்ராக்கிளசுக்கு (Patroclus) அவர் அம்முடியை கொடுத்தார் என்பதையும் பெட்ராகிளஸின் கல்லறையைச் சுற்றி ஹெக்டாரை இழுத்துச் சென்ருரென்றும், போர்க்கைதிகளைச் சிதையினருகே படுகொலை செய்தாரென்றும் சொல்வதையெல்லாம் நம்புவதற்கில்லை. மக்களுள் மென்மைமிக்கவரும், சீயஸிலிருந்து மூன்ருமராகத் தோன்றியவருமான பிலீயசுக்கும் (Peleus) ஒரு தேவ நங்கைக்கும் பிறந்தவனும் பேரறிஞன் கைரானின் (Cheiron) சீடனுமான அக்கில்லிஸ் ஒரேசமயத்தில் பேராசை கலந்த அற்ப உணர்ச்சி, கடவுளையும் மக்களையும் குறைவுபடுத்தும் அகந்தை, என்ற முரண்பாடான, இரண்டு தீவிர உணர்ச்சிகளுக்கு அடிமைப்படும் அளவிற்கு அறிவு மயங்கினுர் என்பதை நமது மக்கள் நம்ப எப்படி அனுமதிக்க மாட்டேனே அப்படி நானும் அவர் இத்தகைய குற்றங்கள் இழைத்தார் என்று நம்ப மாட்டேன்.

அதைமாந்தஸ் : நீங்கள் சொல்வது முற்றிலும் சரியே.

சாக்ரடீஸ் : இதே போன்று பாஸிடனின் (Poseidon) மைந்தனை தீசியசும் (Theseus) சீயஸின் புதல்வனை பைரிதசும் (Peirithous) கற்பழிக்கச் சென்றதாகக் கூறும் கதைகளும், வீரனொருவன் அல்லது தேவர் மைந்தனொருவன் தெய்வ நெறிக்குப் புறம்பாயும் கொடிதாயும் உள்ள இத்தகைய செயல்களைச் செய்யத் துணிந்தான் என்று அவன்மீது ஏற்றிக்கூறும் இக்காலத்துக் கதைகளையும் நம்ப மறுப்பதோடு, திருப்பிச் சொல்வதற்கும் நாம் இடம் அளிக்கக் கூடாது. மேலும் இச்செயல்கள் அவனால் செய்யப்படவில்லை என்றோ அவன் தேவர் மைந்தன் அல்லன் என்றோ கூறுமாறு நமது கவிஞர்களை நாம் வற்புறுத்த வேண்டும். ஒரே மூச்சில் இவ்விரண்டையும் சேர்த்துக்கூற அவர்களை அனுமதிக்கக்கூடாது. தேவர்கள் தீச்செயல்கள் செய்பவர் என்றும், வீரர்கள் நம்மைக் காட்டிலும் சிறந்தவர் அல்லர் என்றும், கூறி நமது இளைஞர்களை நம்பவைக்க நாம் இடம் கொடுக்கக்கூடாது. நாம் கூறிவருவது போல் இக்கருத்துக்கள் தெய்வ நெறிக்கும் ஒவ்வா, உண்மையுமல்ல; ஏனெனில் தேவர்களிடமிருந்து தீச்செயல்கள் பிறவா என்று முன்பே நாம் நிலைநாட்டி விட்டோம்.

அதைமாந்தஸ் : அதுவே உறுதி.

சாக்ரடீஸ் : மேலும் இவற்றைக் கேட்போருக்கு அவை தீய பயன் விளைவிக்கக் கூடும். "வானளாவி நிற்கும் இடா (Ida) மலைச் சிகரத்தை உறைவிடமாகக் கொண்ட கடவுளரின் சுற்றத்தினரும், சீயசின் உறவினரும் இன்னமும் தங்கள் உடலில் தெய்வ மரபின் குருதியைக் கொண்டவர்களும்" இத்தகைய இன்னாத - செயல்களை எப்பொழுதும் செய்து கொண்டுதான் வருகின்றனர் என்று உறுதியாக நம்பினால் ஒவ்வொருவரும் தமது தீயபண்புகளுக்குச் சமாதானம் கூற முற்படுவர்; எனவே இளைஞரிடையே நன்னெறிக் குழப்பம் ஏற்படாது இருக்க வேண்டுமாயின் அத்தகைய கதைகளை நாம் அறவே நீக்கிவிடவேண்டும்.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : எத்தகைய பொருள்களைப் பற்றிப் பேசவேண்டும், எவற்றைப் பற்றிப் பேசக்கூடாது என்று வரையறுக்கும்

இத்தருணத்தில், ஏதேனும் ஒன்றை விட்டுவிட்டோமா என்று பார்க்க வேண்டும். தேவர்கள், தேவர்களை யொத்தவர்கள், வீரர்கள், கீழுலகம் – இவற்றை எவ்வாறு வருணிக்க வேண்டும் என்பதை முன்னரே நிர்ணயித்து விட்டோம்.

அதைமாந்தஸ் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : மனிதர்களைப் பற்றி நாம் என்ன சொல்லலாம்? அதுதான் நம் விவாதத்தில் எஞ்சிய பகுதி என்பது தெளிவாகிறது.

அதைமாந்தஸ் : ஆம், அது தெளிவு.

சாக்ரடீஸ் : எனினும் நண்பா! அந்தக் கேள்விக்குப் பதிலளிக்கக் கூடிய நிலையில் நாம் இல்லை.

அதைமாந்தஸ் : ஏன் இல்லை?

சாக்ரடீஸ் : காரணம், நான் நினைப்பது சரியாயின், தீயமக்கள் பெரும்பாலும் இன்பமாக வாழ்கின்றனர்; நல்லோர் துன்புறுகின்றனர்; கண்டுபிடிக்கப்படாத வரையில் அநீதி இலாபகரமானது; ஆனால் நீதியோ நீதியாளனுக்கு இழப்பையும் பிறருக்கு ஊதியத்தையும் அளிக்கிறது; என்றெல்லாம் கவிஞர்களும் கதை கூறுவோரும் மனிதரைப் பற்றிக் கூறுபவை அனைத்தும் மிகமிகத் தவறானவை என்று நாம் சொல்ல வேண்டும். இத்தகைய உரைகளைச் சொல்லக் கூடாதென்று அவர்களைத் தடுத்து, இவற்றுக்கு மாறானவற்றையே சொல்லுமாறும் எழுதுமாறும் நாம் ஆணையிடுவோம்.

அதைமாந்தஸ் : நிச்சயமாக நாம் அப்படியே செய்ய வேண்டும்.

சாக்ரடீஸ் : நான் சொல்வது சரி என்று நீ ஒப்புக்கொண்டால், எந்த அடிப்படைக் கொள்கைக்காக நாம் இதுவரையில் வாதித்துக்கொண்டு வந்தோமோ அதையும் நீ ஒத்துக் கொண்டதாக நான் துணிவேன்.

அதைமாந்தஸ் : தங்கள் ஊகம் சரிதான்.

சாக்ரடீஸ் : நீதி என்பது என்ன என்பதையும், நீதியாளனுக்குக் காணப்பட்டாலும் சரி, காணப்படாவிட்டாலும் சரி, நீதியாளனுக்கு என்ன இயற்கையான பயன்கள் கிடைக்கும், என்பதையும் கண்டறியும் வரையில் மனிதர்களைப்பற்றி இவற்

றைக் கூறலாம், இவற்றைக் கூறலாகாது என்று நிர்ணயிக்க முடியாது.

அதைமாந்தஸ் : முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : செய்யுட் பொருளேப்பற்றிப் போதிய அளவு பேசி விட்டோம். இனி அதன் நடையைப்பற்றிக் கவனிப்போம். இதை ஆராய்ந்து விட்டால், பொருள், நடை இவ்விரண்டை யும் முழுதும் ஆய்ந்ததாகும்.

அதைமாந்தஸ் : நீங்கள் குறிப்பிடுவது எனக்கு விளங்கவில்லே.

சாக்ரடீஸ் : அப்படியாயின் நீ புரிந்துகொள்ளுமாறு சொல்லு கிறேன். என் கருத்தைப் பின் வருமாறு விளக்கினுல் ஒரு வேளே அது தெளிவாகும் என்று நினைக்கிறேன். எல்லாப் புராணங்களும் கவிதைகளும் இறந்தகால, நிகழ்கால, வருங் கால நிகழ்ச்சிகளின் வருணனே என்பது உனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்.

அதைமாந்தஸ் : ஆம், அப்படித்தான்.

சாக்ரடீஸ் : வருணனே என்பது உள்ளதை உள்ளபடி கூறுவ தாகவோ, புனைந்து கூறுவதாகவோ அல்லது இரண்டும் கலந்ததாகவோ இருக்கலாமல்லவா ?[1]

அதைமாந்தஸ் : இதுவும் எனக்கு நன்கு விளங்கவில்லே.

சாக்ரடீஸ் : என் கருத்துக்களே உணருமாறு எளிதில் விளக்க எனக்கு இயலவில்லே என்பதிலிருந்து நான் எவ்வளவு திறனில்லாத ஆசிரியன் என்பதை உணர்கிறேன். ஆகவே திறமையற்ற பேச்சாளனேப்போல் பொருள் முழுவதையும் பற்றிப் பேசாது, அதன் ஒரு பகுதியைப் பிரித்து எடுத்துக் கொண்டு என் கருத்தை விளக்க முற்படுகிறேன். இலியட் (Iliad) என்ற காவியத்தின் முதலடிகளில் தனது புதல்வியை விடுவிக்குமாறு அகமெம்னுனே கிரைசிஸ் (Chryses) வேண்டுகின்ருன் என்றும், ஆனுல் அகமெம்னுன் கிரைசி ஸைச் சினந்து கொள்ளுகிருன் என்றும், தனது விருப்பம் கைகூடாததனுல் அக்கீய மக்களின் (Achaeans) மீது சீற்றங்கொள்ளும்படிக் கிரைசிஸ் கடவுளே வேண்டிக் கொள் கிருன் என்றும் கவிஞர் கூறுவது உனக்குத் தெரிந்திருக்கும்.

---

1. இம்மூவகை அமைப்பினேயும் தொல்காப்பியர் குறிப்பிட்ட நாடக வழக்கு, உலகியல் வழக்கு இவ்விரண்டுங் கலந்த புலனெறி வழக்கு ஆகிய மூன்ருேடு ஒப்பிடலாம்.

"அவன் கிரேக்கர்களனைவர்களேயும் வேண்டிக்கொண்டான், ஆனல் சிறப்பாக, மக்களுக்குத் தலைவர்களான அட்ரியசின் (Atreus) இருபுதல்வர்களையும் வேண்டிக் கொண்டான்" என்ற அடிகளைப் பொறுத்த அளவில் கவிக் கூற்ருகப் பேசுகிருர்; கூறுபவர் வேறுபட்டவர் என்று எண்ணுவதற்குச் சற்றேனும் இடமளிக்கவில்லை, ஆனல் தொடர்ந்து வரும் அடிகளில் கிரைசிஸ் நிலையில் நின்று பேசுபவர் ஹோமர் அல்ல, வயது முதிர்ந்த புரோகிதனே, பூசாரியே, என்று நாம் நம்புவதற்கு ஆவன அனைத்தையும் செய்கிருர். டிராய் நகரத்திலும், இதாகாவிலும் நடந்த நிகழ்ச்சிகளையும்; பின்னர் ஆடிஸி (Odyssey) யில் கூறப்பட்ட நிகழ்ச்சிகளையும் பற்றிய வருணனை முழுவதையும் இவ்விருபோக்கில் அமைத்துள்ளார்.

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அவ்வப்போது கவிஞர் கூறும் உரையாடல்களிலும், இடையில் வரும் பகுதிகளிலும் இது தொடர்கதையாகவே விளங்குகிறதல்லவா?

அதைமாந்தஸ்: ஆம், முழுதும் உண்மை.

சாக்ரடீஸ்: ஆனல், வேருெருவன் நிலையில் கவிஞர் பேசும் போது, யார் பேசப்போவதாக நமக்குத் தெரிவிக்கிருரோ அவராகவே தன்னைக் கருதி அவருடைய போக்கைப் பின் பற்றிப் பேசுகிருர் என்று நாம் சொல்ல வேண்டாமா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: குரல் அல்லது சந்கேதச் செயல்களைக் கையாளுவதன் வாயிலாகப் பிறர் நிலையில் தன்னை அமைத்துக் கொள்ளுதல், தன்னை யாராகப் பாவிக்கிருரோ அவரைப் பின்பற்றுவதாகாதா?

அதைமாந்தஸ்: அது இயற்கை.

சாக்ரடீஸ்: இந்த விஷயத்தில் கவியின் வருணனை, வேஷ முறையைக் கையாண்டதாகச் சொல்லலாமல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அல்லது, கவிஞர் எங்கும் பாத்திரங்களாக மறைந்து பேசாது, தாமாகவே தோன்றினல் இந்த வேஷம் ஏற்படுவதில்லை; மேலும் அவரது செய்யுள் எளிய நேர் வருணனையாகிறது. என் கருத்தை நன்கு தெளிவுபடுத்து

வதற்கும், 'எனக்குப் புரியவில்லை' என்று நீ மீண்டும் கூறுமலிருப்பதற்கும், இம்மாறுதல் எவ்வாறு ஏற்படக்கூடு மென்று விளக்குகிறேன். "தமது புதல்வியை மீட்கப் பொருள் கொண்டு வந்து புரோகிதர் அக்கீயர்களைச், சிறப்பாக அவர்களது மன்னர்களைப் பணிவுடன் வேண்டிக் கொண்டார்" என்று சொல்லி, பின்னர் கிரைசிஸாகத் தம்மை எண்ணிப் பேசாமல் தாமே கூறுவதுபோல் தொடர்ந்து சொல்லிப் போயிருந்தால், அவர் மொழிகள் கற்பனையாகா, எளிய நேர் வருணனையாகும். அப்பகுதியின் போக்கு பின்வருமாறு இருக்கும்: (நான் கவிஞனல்ல, ஆகவே செய்யுள் நடையைவிட்டு, உரைநடையில் சொல்கிறேன்.) "புரோகிதர் வந்து, கிரேக்கர்கள் சார்பில் அவர்கள் டிராய் நகரத்தைக் கைப்பற்றித் தீங்கின்றி நாடு திரும்பவேண்டுமென்றும், தாம் கொணர்ந்த மீட்சித் தொகையை ஏற்றுக்கொண்டு தமது புதல்வியைத் தம்மிடம் திரும்பக் கொடுக்கவேண்டுமென்றும் தேவர்களை வேண்டிக் கொண்டார். அவர் அவ்வாறு பேச, மற்றைக் கிரேக்கர்கள் அவருக்கு மரியாதை காட்டி, அவர் கூறியதை ஏற்றனர். ஆனல், அகமெம்னன் கடுஞ்சினங்கொண்டு அவரை மீண்டும் அந்தப்பக்கம் வராது போய்விட வேண்டுமென்றும், இல்லையேல் அவரது பூசனைத் தொழிலின் சின்னமான கோலும் அணிகளும் அவரைப் பாதுகாக்கமாட்டா என்றும், கிரைசிஸின் புதல்வியை விடுவிக்க முடியா தென்றும், அவள் முதுமை நிலை எய்தும் வரை ஆர்காஸ் (Argos) என்ற ஊரில் தன்னேடு இருக்கவேண்டும் என்றும் கூறினன். பின்னர், அவர் அபாயமின்றி வீடு திரும்பக் கருதினல், தனக்குக் கோபமூட்டாது உடனே வெளியேற வேண்டும் எனவும் கூறினன். அம்முதியோன் அஞ்சி, வாய் பேசாது அவ்விடத்தை விட்டகன்று, அப்பாலோ (Apollo) வின் கோயிலை அடைந்து, அவரது நாமங்கள் பல சொல்லி வாழ்த்தி, கோயில் கட்டுதல், பலியிடுதல் போன்ற அவருக்கு உகப்பான எல்லாப் பணிகளையும் தானாற்றியதை நினை வூட்டித், தனது நற்செயல்களுக்குப் பதிலாக உதவி புரியு மாறு வேண்டி, தனது துக்கக் கண்ணீருக்காக அப்பாலோ வின் அம்புகளால் அக்கீயர்கள்மீது பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்றும் சொன்னன்." மேலும் வருணனை

இந்தப் போக்கிலே சென்ருல், கதை முழுதும் நேர் வருணனையாகும்.

அதைமாந்தஸ் : புரிகிறது.

சாக்ரடீஸ் : அல்லது, இதற்கு எதிரான நிலைமை, அதாவது இடையிடையே வரும் பகுதிகளை நீக்கி, உரையாடல்கள் மட்டும் இருப்பதாகக் கருதிப்பார்.

அதைமாந்தஸ் : அதுவும் எனக்குப் புரிகிறது. உதாரணமாகத் துன்பியல் நாடகத்தில் இருப்பதைக் கருதுகிறீர்கள் போலும்.

சாக்ரடீஸ் : நீ என் கருத்தை நன்கு உணர்ந்துகொண்டு இருக்கிருய். நான் நினைப்பது தவறில்லையாளுல், கவிதையும் புராணக்கதையும் சிலவிடங்களில் முற்றிலும் புனைந்து கூறுதலாகும் என்று முன்பு நீ புரிந்து கொள்ளாத கருத்தை இப்பொழுது தெரிந்து கொண்டாய்; இதற்குச் சான்றுகள் துன்பியல் நாடகங்களிலும் இன்பியல் நாடகங்களிலும் காணக்கிடக்கின்றன. இம்மாதிரியே இதற்கு எதிராக, கவி ஒருவரே வரலாற்றைக்கூறும் வகையுமுண்டு. அதற்குக் களியாட்டப்பாட்டு சிறந்த சான்ருகும். நேர் வருணனை, புனைவுரை இவையிரண்டும் கலந்து வருவதைப் பெருங் காவியங்களிலும், வேறுபல கவிதை வகைகளிலும் காணலாம். நான் சொல்வது விளங்குகிறதல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், உங்கள் கருத்து இப்பொழுது விளங்குகிறது.

சாக்ரடீஸ் : பொருளைப்பற்றிப் பேசி முடித்தோம்; இனி வரலாற்றின் நடையைப்பற்றிப் பேசவேண்டும் என்று நான் தொடங்கியதை உனக்கு நினைவுபடுத்துகிறேன்.

அதைமாந்தஸ் : ஆம், நினைவிருக்கிறது.

சாக்ரடீஸ் : ஒருவரைப்போல் பாவித்துப் பேசும் கலையின் தன்மையைப்பற்றி நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதற்காகவே இதைக் கூறினேன். தங்கள் கதைகளைக் கூறும்போது, ஒருவரைப்போல் பாவித்துப் பேசக் கவிஞர்களை நாம் அனுமதிக்கலாமா ? அப்படியாயின், கதை முழுதிலுமா அல்லது சில பகுதிகளில் மட்டுமா ? சிலபகுதிகளில் மட்டுமென்ருல், எந்தப் பகுதிகளில் ? அல்லது பாவித்துப் பேசுதலை அறவே தடுத்துவிடவேண்டுமா ?

அதைமாந்தஸ் : நமது அரசில் துன்பியல் நாடகத்திற்கும் இன்பியல் நாடகத்திற்கும் இடங்கொடுக்கலாமா என்று நீங்கள் கேட்பதாக ஐயுறுகின்றேன். அப்படித்தானே ?

சாக்ரடீஸ் : ஆம், இதைத்தவிர பல விஷயங்களையும் ஆராய வேண்டியிருக்கும். உண்மையாக அவை என்ன என்ன என்று இன்னமும் எனக்குத் தெரியாது; ஆனால், ஆய்வு எங்கெல்லாம் இழுத்துச் செல்லுமோ அங்கெல்லாம் நாம் செல்வோம்.

அதைமாந்தஸ் : ஆம், செல்வோம்.

சாக்ரடீஸ் : அப்படியானால் அதைமாந்தஸ்! நமது காப்பாளர்கள் பிறரைப்போல் பாவனை செய்பவர்களாக இருக்கத்தான் வேண்டுமா? என்று கேட்கிறேன். அல்லது ஒருவன் ஒரு வேலையைத்தான் நன்றாகச் செய்யமுடியும்; பல வேலைகளைச் செய்யமுடியாது; அப்படிச் செய்ய முயன்றாலும் எந்த வேலையிலும் புகழ் பெறுதுபோய்விடுவான், என்று முன்னரே நிறுவப்பட்ட விதியினால் இந்தப் பிரச்சினைக்கு முடிவுகட்டப் பட்டுவிட்டது அல்லவா ?

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இது பாவனைக்கும் பொருந்தும்; ஒன்றைப்போல் நடிக்க ஒருவனுக்கு இயலுமாம்போல, பலவற்றையும்போல நடிக்க முடியாது அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், நடிக்க முடியாது.

சாக்ரடீஸ் : எனவே, அதே மனிதனால் வாழ்க்கையில் ஒரு முக்கியமான பொறுப்பை ஏற்று நடத்துபவனாகவும், அதே நேரத்தில் பிறரைப்போல் பாவனை செய்பவனாகவும், பல விதங்களில் நடிப்பவனாகவும் இருக்கமுடியாது. நடிப்புக்குரிய இரண்டு பொருள்கள் மிக நெருங்கியிருந்தாலும் அதே மனிதர்கள் இரண்டிலும் வெற்றிபெற முடியாது; இன்பியலும் துன்பியலும் படைக்கின்ற எழுத்தாளர்கள் இதற்குச்சான்று. சற்று முன்னர் இவ்விரு பகுதியினரையும் பிறரைப்போல் பாவிப்பவர் என நீ சொல்லவில்லையா ?

அதைமாந்தஸ் : ஆம், சொன்னேன்; அதே மனிதர்கள் இரண்டிலும் வெற்றிபெற முடியாது என்று நீங்கள் கருதுவது சரியே.

சாக்ரடீஸ் : பாடகராகவும் நடிகராகவும் ஒரே சமயத்தில் இருக்க முடியாததுபோல் அல்லவா ?

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : துன்பியல் நாடக நடிகர்களும், இன்பியல் நாடக நடிகர்களும்கூட அப்படித்தான். இருந்தாலும் இவை எல்லாம் பாவனைகளே.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : சரி, அதைமாந்தஸ்! மனித இயற்கை பல சிறு பகுதிகளாகவும், பல பொருள்களைப்போல் நடிக்கும் திறனற்றதாயும், பாவனைகளெல்லாம் எந்தச் செயல்களுக்கு நகலோ அவற்றையெல்லாம் திறம்படச் செய்ய இயலாத தாயும் அமைக்கப்பட்டுள்ளதெனத் தோன்றுகிறது.

அதைமாந்தஸ் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : நமது காப்பாளர்கள் பிற தொழில்கள் அனைத்தை யும் விடுத்து அரசின் சுதந்திரத்தைக் காக்கத் தங்களையே அர்ப்பணம் செய்து இதையே தமது தொழிலாகக்கொண்டு, இதற்குத் தொடர்பில்லாத எந்தத் தொழிலிலும் ஈடுபடாது இருக்கவேண்டும் என்ற கருத்தை மனத்திற்கொண்டு, நமது முதற் கொள்கையினைக் கடைப்பிடித்தோமானால், பிற வற்றைச் செய்தல் அல்லது பாவனை செய்தல் போன்ற செயல்களைக் காப்பாளர்கள் செய்யக்கூடாது எனல் வேண் டும். அப்படியே பாவனை செய்தாலும், இளமையிலிருந்தே தமது தொழிலுக்கு ஏற்ற துணிவுடையோர், சீரான மனம் படைத்தோர், தூய்மைமிக்கார், சுதந்திர மனிதர்கள் இன்ன பிறரை மட்டுமே பாவனை செய்யவேண்டும். ஆனால் தாங் கள் பாவனை செய்கின்ற மனிதரைப்போலவே அவர்களும் ஆகிவிடக்கூடாது என்றால், கீழ்த்தரம் அல்லது கருமித் தனம் என்பதைப் பாவிப்பதில் திறமையுடனிருப்பதோ அவற்றை அப்படியே படம் பிடித்துக்காட்டுவதோ கூடாது. பாவிக்கும் செயல்கள், இளமையில் தொடங்கி, வாழ்க்கை யில் நெடுந்தொலைவு தொடர்ந்து, இறுதியில் பழக்கங் களாகப் பரிணமித்து உடல், குரல், உள்ளம் ஆகியவற்றைக் குலைத்து மனிதனின் இரண்டாவது இயல்பாக உருவெடுப் பதை நீ ஒருபொழுதும் கண்டதில்லையா?

அதைமாந்தஸ் : ஆம், நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அப்படியாயின் நாம் யாரிடம் அக்கறை காட்டி நல்லவர்களாக இருக்கவேண்டும் என்று சொல்கிறோமோ,

அவர்கள் தனது கணவனோடு முரண்பட்டு நிற்கும் அல்லது தனது இன்பத்தின் செருக்கினால் தேவர்களை எதிர்த்தும் இறுமாந்தும் திரியும் பெண்ணை அல்லது அவள் துன்புற்றிருக்கும் பொழுதோ அழுது புலம்பும்பொழுதோ அவள் இளம்பருவத்தினளானாலும், மூத்தவளானாலும், அவளைப் போல் வேஷம்போட அனுமதிக்கக் கூடாது. அதுவும் நோயுற்று அல்லது காதலில் ஈடுபட்டு அல்லது பணி செய்யும் பெண் ஒருத்தியைப்போல் நிச்சயமாக நடிக்கக் கூடாது.

அதைமாந்தஸ்: மிகச் சரியே.

சாக்ரடீஸ்: அடிமைகள், அடிமைகளின் தொழிலைச் செய்யும் ஆண் அல்லது பெண்போல அவர்கள் நடிக்கவும் கூடாது அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம், கூடாது.

சாக்ரடீஸ்: கோழைகளோ அல்லாதவர்களோ யாராயிருந்தாலும், நாம் சற்று முன்னர்க் குறிப்பிட்டுச் சொன்னவற்றுக்கு நேர்மாறானவற்றைச் செய்யும் – குடித்திருக்கும் பொழுதோ குடிக்காமலிருக்கும் பொழுதோ ஒருவருக்கொருவர் இழித்துரைத்தும், எள்ளி நகையாடியும், சுடு சொற்களைச் சொல்லிக்கொள்ளுவதாகவும், தமக்கெதிராகவும், நட்பினர் வீட்டாருக்கெதிராகவும், சொல்லிலும் செயலிலும் எவ்வகையாலோ பாவச் செயல்புரியும் தீயவர்களைப்போல், நிச்சயமாக நடிக்கக் கூடாது. மேலும், பித்துப்பிடித்த அல்லது தீய ஆடவர் அல்லது பெண்டிரின் பேச்சு அல்லது செயலை நடித்துக் காட்டவும் அவர்கள் பயிற்சி பெறக் கூடாது. ஏனெனில் தீயபண்பைப்போலப் பைத்தியமும் தெரிந்து கொள்ள வேண்டிய பொருளேயாகும், கையாள வேண்டிய அல்லது பின்பற்ற வேண்டிய ஒன்றல்ல.

அதைமாந்தஸ்: சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: மேலும், கொல்லர்கள் அல்லது மற்றைத் தொழிலாளர்கள் அல்லது படகோட்டிகள் அல்லது கப்பலின் மேல்தள ஊழியர்களின் தலைவர்கள், கப்பலின் தலைமை அலுவலர்கள் அல்லது இனைய பிறரையும் அவர்கள் நடித்துக்காட்டலாகாது அல்லவா?

அதைமாந்தஸ்: இவர்களின் எந்தத் தொழிலிலும் கவனம்

செலுத்த அனுமதிக்கப்படாதபொழுது, அவர்கள் எப்படி அவர்களைப்போல் நடிக்க முடியும்?

சாக்ரடீஸ்: குதிரைகளைப்போல் கனைத்தல், மாடுகளைப்போல் கத்துதல், ஆறுகளின் மெல்லிய அசைவு ஒலியை எழுப்புதல், கடலைப்போல் பெருத்த ஒலி செய்தல், இடியைப்போல் முழங்குதல் என்பனவற்றையும் இவைபோன்றவற்றையும் அவர்கள் செய்யக்கூடாது அல்லவா?

அதைமாந்தஸ்: பைத்தியக்காரத்தனமே கூடாதென்றால், பைத்தியக்காரர்களின் நடத்தையையும் அவர்கள் காட்டக் கூடாது.

சாக்ரடீஸ்: நீ சொல்வதை நான் சரியாகப் புரிந்து கொண்டேன் என்றால், உண்மையிலேயே நல்ல மனிதனொருவன் ஏதேனும் ஒன்றைச் சொல்ல இருக்கையில் ஒருவிதமான சொல் நடையைக் கையாளுவான் எனவும், அவனுக்கு மாறான குணமும் கல்வியும் பெற்ற ஒருவன் வேறொரு நடையைக் கையாளுவான் எனவும் நீ கருதுகிறாய் அல்லவா?

அதைமாந்தஸ்: இவ்விரண்டு வகைகள் யாவை?

சாக்ரடீஸ்: நல்ல நீதியாளன் ஒருவன் ஒன்றை விரித்துரைக்கும்போது மற்றொரு நல்ல மனிதனின் சொல்லையோ, செயலையோ கூற நேர்வதாக வைத்துக்கொள்வோம். அவனைப்போல் நடிக்க அவன் விரும்புவான்; இவ்வாறு பின்பற்றுவதற்குத் தயங்கமாட்டான். அந் நீதியாளன் உறுதியாகவும் திறமையாகவும் செயல்புரிகிற பொழுது அவனைப்போல் நடிப்பதற்கு மிகவும் தயாராக இருப்பான். ஆனால் அவன் நோய், காதல், கள் இவற்றால் பிணிக்கப்பட்டிருக்கும் பொழுதோ வேறு இன்னலுக்காளாகும் போதோ அவ்வளவு ஆர்வத்தோடு பின்பற்றத் தயாராக இருக்க மாட்டான் என்று கருதுகிறேன். ஆனால் அவனுக்குத் தகாத பாத்திரம் வருகிறபொழுது அதை விரும்பிக் கவனிக்க மாட்டான்; அதை வெறுத்தொதுக்குவான். அப்பாத்திரத்தை ஒருகால் நடிக்க நேரிட்டாலும் அவன் நல்ல செயல் செய்வதையே ஒரு கணம் நடிப்பான். மற்ற நேரங்களில் தனக்குப் பழக்கமேயில்லாத பண்புடையவனாக நடிக்க வெட்கப்படுவான்; மேலும், கீழ்த்தரமான வழிகாட்டிகளைப் பின்பற்றித் தன்னை உருவாக்கிக் கொள்ளவும் விரும்ப மாட்டான். பரிகாசத்திற்கு அல்லாது, அத்தகைய கலையினைக்

கையாளுவது தன் நிலைக்கு இழிந்ததாகக் கருதுவான்; அதை அவனது மனம் எதிர்க்கும்.

அதைமாந்தஸ்: நானும் அப்படித்தான் இருக்குமென்று எதிர் பார்க்கிறேன்.

சாக்ரடீஸ்: அப்படியாயின், நாம் ஹோமரிலிருந்து எடுத்துக் காட்டி விளக்கியது போன்றதொரு சொல் வகையை அவன் கையாளுவான்; அதாவது நடிப்பதாகவும் உள்ளதை உள்ள வாறு கூறுவதாகவும் அவனது நடை அமைந்திருக்கும். ஆனால் முன்னது மிகச் சிறிதளவும் பின்னது மிகப் பெரு மளவும் இருக்கும். இதை நீ ஒப்புக் கொள்ளுகிறாயா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக, அத்தகைய பேச்சாளன் அவ சியம் பின்பற்றவேண்டியது முன்வழிதான்.

சாக்ரடீஸ்: ஆனால் எதையும் வருணிக்கின்ற வேறொரு வித மான இயல்புடையவனும் உண்டு. அவன் எவ்வளவுக்கெவ் வளவு தீயவனாக இருக்கின்றானோ அவ்வளவுக்கவ்வளவு மனச் சாட்சி இல்லாமல் எதற்கும் துணிந்து இருப்பான். எதுவும் அவனுக்கு மிகவும் கெட்டதாகத் தோன்றாது. விளையாட்டுக் காக அல்ல, உண்மையிலேயே மனமொப்பிப் பெருத்த கூட்டத்திலும் எதையும் நடிக்கத் தயங்கமாட்டான். நான் சற்று முன்னர்ச் சொன்னது போல அவன் இடியின் முழக் கத்தையும், காற்று, புயல் இவற்றின் ஒலியையும், அல்லது உருளைகள் சக்கரங்கள் ஆகியவற்றின் கீச்சுக்கீச்சென்ற ஒலியையும், புல்லாங்குழலின் பல்வேறு ஒலிகளையும், குழற் கருவிகள், தோற்கருவிகள், மற்றும் பல்வேறு கருவிகள் ஆகியவற்றின் ஒலிகளையும்போல ஒலித்துக்காட்டுவான். நாயைப்போல் குரைப்பான்; ஆட்டைப்போல் கத்துவான் அல்லது சேவலைப்போல் கூவுவான், குரலையும் செயலையும் பாவனைசெய்து காட்டுவதிலேதான் அவனுடைய கலைத் திறன் முழுதும் அடங்கிவிடுகிறது; உள்ளவாறு கூறும் வருணனைக்கு அதில் அதிக இடம் இருப்பதில்லை.

அதைமாந்தஸ்: ஆம், அது அவனுடைய பேச்சுமுறை.

சாக்ரடீஸ்: சரி, இவைதான் இரண்டு வகையான நடைகள் அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: சரி, அவற்றுள் ஒன்று எளியதாயும், சிறிதளவே மாற்றம் உடையதாயும் இருக்கிறது. இயையும், ஒலியமைதி

யும், அவற்றின் எளிமைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் அதன் பயனுகப் பேச்சாளன், சரியாகப் பேசினுல், பெரும்பாலும் ஒரேமுறையில் பேசுவான். ஓர் இயைபின் எல்லைகளுக்குட்பட்டு இயங்குவான். ஏனெனில், ஏற்படக் கூடும் மாற்றங்கள் பெரியவை அல்ல – இவ்வண்ணமே பெரு மளவு அதேபோன்ற ஒலியமைதியையும் பயன்படுத்திக் கொள்வான். இவற்றை நீ ஒப்புக்கொள்வாய் அல்லவா?

அதைமாந்தஸ்: அது சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: ஆனுல் இசையும் நடையும் ஒத்துப்போக வேண்டு மானுல், மற்ற நடைக்கு எல்லாவகையான இயல்புகளும் ஒலி யமைதிகளும் தேவைப்படும். ஏனெனில் இந்நடை பல மாற்றங்களுக்குள்ளாகிறது.

அதைமாந்தஸ்: அதுவும் முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ்: இவ்விரு நடைவகைகளிலும் அல்லது இவ்விரண் டின் கலவையிலும், கவிதை முறை அனைத்தும், சொல்லின் வெளியீட்டு முறை எல்லாம், அடங்கி உள்ளன அல்லவா? எக்கருத்தையும் இவ்விரு வகைகளைத் தனித்தோ சேர்த்தோ கையாளாது வேறு எம்முறையிலும் எவராலும் சொல்லமுடி யாது.

அதைமாந்தஸ்: ஆம், அவற்றில் எல்லாம் அடங்கியுள்ளன.

சாக்ரடீஸ்: நாம் நமது அரசில் இம்மூன்றுவகை நடைகளையும் அனுமதிப்போமா அல்லது கலப்பற்ற இரண்டு வகைகளுள் ஒன்றை மட்டும் சேர்த்துக்கொள்வோமா? அல்லது கலப்பு வகையைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொல்கிருயா?

அதைமாந்தஸ்: சீலத்தைச் சிறந்த முறையில் பின்பற்றும் வகையையே நான் விரும்புவேன்.

சாக்ரடீஸ்: நன்று அதைமாந்தஸ்! ஆனுல் கலவை நடையும் அழகுமிக்கதுதான். நீ தேர்ந்தெடுத்ததற்கு நேர்மாருன சைகைகளால் கருத்தை வெளியிடும்[1] முறைதான் குழந்தை களிடையேயும் அவர்களைக் காக்கும் பணியாளரிடத்தேயும், பொதுவாக உலகத்தாரிடையேயும், நிலவுகின்ற நடைவகை.

அதைமாந்தஸ்: நான் அதை மறுக்கவில்லை.

சாக்ரடீஸ்: ஆனுல் ஒருவன் ஒரே தொழிலைத்தான் செய்யக் கூடுமாதலால், மனித சுபாவம் இருதன்மைத்தாகவோ பல

---

1. பொம்மலாட்டம்.

தன்மைத்தாகவோ இல்லாமல் ஒரே விதமான நமது அரசுக்கு, இத்தகைய நடை ஏற்றதல்ல என்று நீ கேட்பாயா?

அதைமாந்தஸ்: ஆம், அது சற்றும் பொருந்தாது.

சாக்ரடீஸ்: ஆதலால்தான் நமது அரசில், நமது அரசில் மட்டுமே, சக்கிலியன் ஒருவன் மாலுமியாக இல்லாமல் சக்கிலியனுகவே காணப்படுகிருன்; உழவன் ஒருவன் வேறு தொழிலாளியாக இல்லாமல் உழவனுகவே காணப்படுகிருன்; போர் வீரன் வணிகனுக இல்லாமல் போர் வீரனுக மட்டுமே காணப்படுகிருன். இவ்வாறே எல்லாத் துறை யிலும் காணலாம் அல்லவா?

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: ஆதலின், எதையும் பின்பற்றுகிற அளவுக்குக் கூர்த்த மதிபடைத்த – பேசாமல் நடித்துக்காட்டும் – பெரு மக்களில் யாரேனும் ஒருவர் நம்மிடம் வந்து தமது ஆற்றலை யும் தமது கவிதைத் திறனையும் காட்டப்போவதாக அறிவிக் குங்கால் அவரை இனிய, தூய, விந்தையான பிறவி என நிலனுற வீழ்ந்து வழிபடுவோம்; ஆனுல் அவரைப் போன்ற வர் நமது அரசில் வாழ அனுமதிக்கப்படவில்லை என்பதை அவரிடம் நாம் சொல்லிவிடவேண்டும். சட்டம் அவர்களுக்கு இடங்கொடுக்காது. சிறந்ததொரு வாசனைத் திரவியத்தைக்[1] கொண்டு அவரை நீராட்டி, அவரது தலையில் மாலை சூட்டிப் பின்னர் அவரை வேற்றூருக்கு அனுப்பிவிடுவோம். நமது போர்வீரர்க்குரிய கல்வியைப் பற்றிச் சொல்லத் தொடங்கிய பொழுதே, நாம் விதித்த குறிக்கோள்களின் வழிநடந்து நீதியாளரின் முறையை மட்டும் பின்பற்றுகின்ற கடுமைமிக்க கவிஞன் அல்லது ஆசிரியனையே நமது ஆன்மாவின் நலனைக் கருதிப் பயன்படுத்திக் கொள்வோம்.

அதைமாந்தஸ்: இயலுமாயின் அப்படியே செய்வோம்.

சாக்ரடீஸ்: நண்ப! இனி, கதை, புராணம் இவற்றைச் சார்ந்த இசை அல்லது இலக்கியப் பயிற்சியின் பகுதியைப்பற்றி முழுதும் ஆராய்ந்துவிட்டதாகக் கொள்ளலாம். ஏனெனில் பொருள், முறை இவையிரண்டும் விவாதிக்கப்பட்டுவிட்டன.

அதைமாந்தஸ்: நானும் அப்படியே கருதுகிறேன்.

---

1. மிர் எனும் பெயரிய இது ஒரு வகைச் செடியிலிருந்து கிடைக் கும் வாசனைப் பொருள்.

சாக்ரடீஸ் : அடுத்து, இசையினிமையும் பாடலும் வரும்.

அதைமாந்தஸ் : அது வெளிப்படை.

சாக்ரடீஸ் : நாம் முன்னுக்குப் பின் முரண்படாது இருக்க வேண்டுமாயின், இவற்றைப் பற்றி நாம் எதைக் கூற வேண்டும் என்பதை யாவரும் அறிவர்.

கிளாக்கன் : (சிரித்தவண்ணம்) 'யாவரும்' என்ற சொல் என்னையும் உள்ளிடவில்லையா என்று அஞ்சுகிறேன். ஏனெனில் அவை எப்படி இருக்கவேண்டும் என்பதை நான் ஓரளவு ஊகிக்கக்கூடுமே தவிர, இந்தக் கணத்தில் திட்டமாக என்னால் சொல்ல முடியாது.

சாக்ரடீஸ் : பாட்டு அல்லது இசைப்பாடல் என்பது சொற்கள், இசையினிமை, ஒலியமைதி ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டது என்பதையேனும் நீ சொல்லக்கூடும் அல்லவா? அந்த அளவு உனக்குத் தெரியுமென்று நான் எதிர்பார்க்க லாம் அல்லவா?

கிளாக்கன் : ஆம், அந்த அளவு நீங்கள் எதிர்பார்க்கலாம்.

சாக்ரடீஸ் : இனி, சொற்களைப் பொறுத்தமட்டில் பண்ணியற் றப்பட்ட சொற்களுக்கும் பண்ணியற்றப்படாத சொற்களுக் கும் உறுதியாக வேறுபாடு எதுவும் இராது. இரண்டுமே ஒரேவித விதிகளுக்குட்பட்டு இயங்கும்; மேலும் இவ் விதிகள் முன்னரே நம்மால் நிர்ணயிக்கப்பட்டுவிட்டன அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இசையினிமையும், ஒலியமைதியும் சொற்களைப் பொறுத்தவை அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இலக்கியப் பொருளைப்பற்றிப் பேசியபொழுது புலம்பல்களும் துன்பப் பாடல்களும் நமக்குத் தேவையில்லை என்று நாம் சொன்னோமல்லவா?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : துன்பத்தை வெளியிடும் இயல்புகள் யாவை? இசையறிவு உள்ளவனாதலால், நீ சொல்லக்கூடும்.

கிளாக்கன் : நீங்கள் குறிப்பிடுகிற இயைபுகள் கலவை நடை

அல்லது ஆண் குரலின் உச்சஸ்தாயி–(மேனிலை–லிடியன்[1]) மற்றும் முழுக்குரலொலிக்கும் கீழ்ஸ்தாயி–(கீழ்நிலை–லிடியன்) இனைய பிற ஆகும்.

சாக்ரடீஸ் : அப்படியாயின் இவற்றை நாம் விலக்கிவிட வேண்டும். தங்களது பண்புகளைக் காத்துக்கொள்ள வேண்டிய பெண்டிர்க்கே அவை பயன்படாத நிலையில், ஆடவர்க்கு முற்றிலும் பயன்படா.

கிளாக்கன் : அது உறுதி.

சாக்ரடீஸ் : அடுத்து, மதுமயக்கமும், சுகத்தில் நாட்டமும், சோம்பலும் நமது காப்பாளரின் இயல்புக்குச் சிறிதும் ஏற்றவையல்ல.

கிளாக்கன் : ஆம், சிறிதேனும் பொருந்தா.

சாக்ரடீஸ் : சுகத்திற்கும் போதைக்கும் உகந்த இயைபுகள் யாவை ?

கிளாக்கன் : [2]அயோனியனும் லிடியனுமாகும். அவை சுக மானவை என்று அழைக்கப்படுகின்றன.

சாக்ரடீஸ் : நன்று, இவை இராணுவத்திற்கு ஏதேனும் பயன் தருமா ?

கிளாக்கன் : இல்லை ; அதற்கு முற்றிலும் மாறானது. அப்படி யாயின் டோரியன்[3], பிரிஜியன்[4] என்ற முறைகள் மட்டுமே உங்களுக்கு எஞ்சியுள்ளன.

சாக்ரடீஸ் : இயைபுகளைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் போருக்குகந்த இயைபு ஒன்று வேண்டும் என்பேன். அது, துணிவுமிக்க ஒருவன் ஆபத்து நேரத்திலும், கடு முயற்சி ஏற்கும் தறுவாயிலும், அவனது தரப்பு, தோல்வி யுற்று அவன் புண்படவோ இறக்கவோ அல்லது வேறு தீங்குக்கு உள்ளாகவோ நேரும்பொழுதும் அத்தகைய ஒவ் வொரு நெருக்கடியிலும் அதைப் பொறுத்துக்கொள்ளும் துணிவுடன் விதியின் தாக்குதலை எதிர்த்து நிற்பவன் எழுப் பக்கூடிய ஒலியைப் போன்றது. மற்றொன்று அவன் அமைதி நிலவும் காலத்திலும், நிர்ப்பந்தமின்றி இஷ்டம் போல் செய்யக்கூடிய காலத்திலும், பயன்படுத்தக்கூடியது ; வழிபாட்டால் கடவுளை வயப்படுத்த முனையுங்காலும், மனி தனை அறிவுரைகளால் கடிந்துரைத்தலால் தன்வழிப்படுத்த

---

1. Lydian 2. Ionian 3. Dorian 4. Phrygian

விரும்புங்காலும் அல்லது தன்னை வழிமாற்ற வேண்டுதல் அல்லது கடிந்துரைத்தலுக்கு அடங்கி நடக்கத் தயாராக இருக்குங்காலும்; வெற்றியால் அறிவிழந்துவிடாது கூர்த்த மதியுடன் சந்தர்ப்பங்களுக்கேற்ப நடந்து அமைதியாகச் சம்பவங்களை ஒப்புக்கொண்டு முன்னெச்சரிக்கையாக இருந்து, கொண்ட குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளும் போதும், ஒருவன் பயன்படுத்த வேண்டியதைப் போன்றது. இவ்விரண்டு இயைபுகளும் வேண்டும் என்பேன். நிர்ப்பந்தத்தைக் குறிக்கும் பாடலையும், சுதந்திரத்தைக் குறிக்கும் பாடலையும், துரதிர்ஷ்டத்தைக் குறிக்கும் பாடலையும், அதிர்ஷ்டத்தைக் குறிக்கும் பாடலையும், துணிவைக் குறிக்கும் பாடலையும், சீரான மனநிலையைக் குறிக்கும் பாடலையும் வைத்திருக்க வேண்டுமென்று சொல்வேன்.

கிளாக்கன்: இதைத்தான் நான் டோரியன், பிரிஜியன் எனும் இயைபுகள் ஆகும் என்று சற்று முன்னர் சொன்னேன்.

சாக்ரடீஸ்: சரி, நமது பாடல்களிலும் இனிய கவிதைகளிலும் இவை மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டுமென்றால், பண்ணிற் பலவகையோ எல்லா இயைபுகளுக்கும் ஒத்த இசை முறையோ, நமக்குத் தேவையில்லை அல்லவா?

கிளாக்கன்: தேவையில்லை என்றுதான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ்: அப்படியாயின் மூன்று மூலைகளையும், பல வேறுபட்ட இசை முறைகளையும் கொண்ட யாழ்களை ஆக்கும் திறமையாளரையோ பல நரம்புகள் கொண்டு விந்தையாக இசையுறுத்தப்பட்ட வேறெந்த கருவிகளைச் செய்பவரையோ நாம் ஆதரிக்க வேண்டியதில்லை.

கிளாக்கன்: நிச்சயமாக வேண்டியதில்லை.

சாக்ரடீஸ்: வேய்ங்குழல் தயாரிப்போரையும் அதனை ஊதுவோரையும் பற்றி என்ன சொல்கிறாய்? இயைபுகளைக் கலந்து பயன்படுத்துவதில் மற்ற நரம்புக் கருவிகள் அனைத்தையும் விட புல்லாங்குழல் மிக மோசமானது என்பதை நன்கு உணர்ந்த பின்னரும் அவர்களுக்கு நமது அரசில் இடம் கொடுப்பாயா? இயைபனைத்தும் இலங்கும் இசைகூடப் புல்லாங்குழலைப் பின்பற்றியதல்லவா?

கிளாக்கன்: இடம் கொடுக்க மாட்டோம்.

சாக்ரடீஸ்: அப்படியாயின், லயர்[1], ஹார்ப்[2] என்ற இரு யாழ் வகைகள்தான் நமது நகர்ப்புறத்தில் பயன்படுத்துவதற்கு எஞ்சி நிற்கின்றன. அவ்வாறே நாட்டுப்புறத்தில் இடையர் ஊதுகுழல் வைத்திருக்கலாம்.

கிளாக்கன்: வாதத்தின் முடிவு நிச்சயமாக இதுதான் எனலாம்.

சாக்ரடீஸ்: மார்ஸ்யசையும்[3] அவனது இசைக்கருவிகளையும் விட அப்பாலோவையும் அவனது இசைக்கருவிகளையும் விரும்புவதில் வியப்பேதுமில்லையே.

கிளாக்கன்: வியப்பேது மில்லைதான்.

சாக்ரடீஸ்: ஆகவே, நாம் சற்று முன்னர் ஆடம்பரம் என்று அழைத்த அரசை, நாமறியாமலே, சுத்தப்படுத்தி வந்திருக்கிறோம்.

கிளாக்கன்: விவேகமாகத்தான் செய்கிறோம்.

சாக்ரடீஸ்: தூய்மைப்படுத்தும் வேலையை முடித்துக்கொள்வோம். இயைபுகளையடுத்து, இயற்கையாகவே ஒலியமைதிகளைப்பற்றி ஆராயவேண்டும். அவைகளும் இயைபுகளுக்குரிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு இருக்கவேண்டும். ஏனெனில் சிக்கலான யாப்பு விதிகளையோ எல்லாவித யாப்புகளையோ நாம் நாடவேண்டியதில்லை. ஆனால் அதற்கு மாறாக நன்கியைந்த துணிவுமிக்க வாழ்க்கையினை வெளிப்படுத்த உதவும் ஒலியமைதிகள் யாவை எனக் கண்டுபிடிக்க வேண்டும். அவற்றைக் கண்டுபிடித்த பின்னர், அடிக்கும் ஓசை நயத்திற்கும் ஏற்பச் சொற்களை மாற்றாது சொற்களின் இயற்கைக்கு இயைந்தவாறு அடியையும் ஓசை நயத்தையும் மாற்றியமைத்துக் கொள்வோம். இந்த ஒலியமைதிகள் யாவை என்பதைக் காட்டுவது உனது கடமையாகும். எனக்கு முன்னரே இசைகளைப்பற்றிக் கற்றுக்கொடுத்தது போல, இதையும் நீ விளக்கிக் கூறவேண்டும்.

கிளாக்கன்: ஆனால், உண்மையில் என்னால் சொல்ல முடியாது. ஒலியைப் பொறுத்த அளவில் நான்கு ஒலி நிலைகளிலிருந்து இசை இயைபுகளனைத்தும் தோன்றுவது போல், ஒலியமைதியைப் பற்றிய வரையில் ஒரு மூன்று கொள்கைகளிலிருந்துதான் எல்லா யாப்பு விதிகளும் உருவாகின்றன என்பது மட்டுமே எனக்குத் தெரியும். இது

1. Lyre 2. Hart 3. Marsyas

நான் அனுபவ வாயிலாகக் கண்டதொரு விஷயம். ஆனல் அவை எத்தகைய வாழ்க்கை வகைகளை தனித்தனியே பிரதிபலிக்கின்றன என்பதை என்ஞல் சொல்ல முடியவில்லை.

சாக்ரடீஸ் : அப்படியாயின், டாமனே நமக்கு அறிவுரை வழங்குமாறு நாம் கேட்டுக் கொள்ள வேண்டும். எந்த எந்த ஒலியமைதிகள் இழிந்த தன்மை, அகந்தை, சீற்றம், அல்லது பிற தகாத தன்மைகளைக் குறிக்கும் என்பதையும் எந்த ஒலியமைதிகள் இவற்றுக்கு மாருன மன எழுச்சிகளை வெளிப்படுத்தத் தேவை என்பதையும் அவர் நமக்கு எடுத்துக் கூறுவார். கிரீட் நாட்டைச் சார்ந்த சிக்கலான ஒலியமைதியைப் பற்றி முன்பொருகால் அவர் குறிப்பிட்ட தாக எனக்கு ஒரு சிறிது நினைவுக்கு வருகிறது. ஓர் அடியில் மூன்று சீர்கள் - ஒரு நெடிலைத் தொடர்ந்து இரண்டு குறில்கள் - வருகின்றன அல்லது வீரத்தைக் குறிக்கும் ஒலியமைதியைக்கூட அவர் குறிப்பிட்டதாக நினைக்கிறேன். மேலும் ஓர் அடியில் குறிலும் நெடிலும் மாறி மாறி, ஓங்கி யும் தாழ்ந்தும் செல்லுமாறு அவற்றை இணையாகப் போமாறு செய்து அவற்றை ஏதோ ஒரு வகையில் முறைப் படுத்தினர். அந்த முறை என்ன என்று எனக்கு நன்கு விளங்கவில்லை. குறில் முதலாகவும் நெடில் அடுத்தும் வருகிற அடியைக் கொண்ட ஒலியமைதியைப் பற்றியும், குறிலும் நெடிலும் கலந்துவரும் ஒலியமைதியைப் பற்றியும் அவர் கூறினர் என்று நான் கூறுவது ஓரளவு தவறில்லை என்றுதான் நினைக்கிறேன். அவற்றுக்கு நெடிய சிறிய அளவுகளை வகுத்துத் தந்தார். ஒலியமைதியை அனுசரித் துக் காலடி போடும் சிலவகைகளை அவர் பாராட்டுவதாகவும் சில சமயங்களில் இவற்றைப் பழித்ததாகவும் நான் கருது கிறேன். ஒரு வேளை இரண்டையும் சேர்த்தே அவ்வாறு கூறியிருக்கலாம். அவர் கருத்து என்ன என்பது எனக்குத் திட்டமாகத் தெரியாது. நான் முன்னர்ச் சொன்னதுபோல இந்த விஷயங்களை டாமனிடம் கேட்டறிதலே சாலச் சிறந்தது. ஏனெனில் இதை ஆய்ந்தறிதல் கடினமானது என்பது உனக்குத் தெரியுமல்லவா ?

கிளாக்கன் : கடினமானது என்றுதான் சொல்லவேண்டும்.

சாக்ரடீஸ் : ஆனல் நயமோ, நயமின்மையோ என்பதிலிருந்து நல்ல அல்லது கெட்ட ஒலியமைதியின் விளைவு, என்பதை உணர்வதில் சிரமமிருக்காது.

கிளாக்கன் : ஒரு சிரமமுமில்லை.

சாக்ரடீஸ் : மேலும், நல்ல ஒலியமைதியும் கெட்ட ஒலியமைதியும் முறையே நல்ல நடைக்கும் கெட்ட நடைக்கும் இயற்கையாகவே இணைந்து போகின்றன. இவ்வாறே இயைபும் வேற்றுமையும் நடைக்கேற்றவாறு அமைகின்றன எனலாம். ஏனெனில், இயைபும் ஒலியமைதியும் சொற்களால் கட்டுப் படுத்தப்படுகின்றனவேயன்றி, சொற்கள் அவற்ருல் கட்டுப் படுத்தப்படவில்லை என்பது நமது கொள்கை.

கிளாக்கன் : ஆம், அவை சொற்களைத் தழுவிவர வேண்டும்,

சாக்ரடீஸ் : சரி, நடையின் தன்மையும் சொற்களும் உள்ளத்தின் நிலையைப் பொறுத்து இருக்க வேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : மற்றவை அனைத்தும் நடையைப் பொறுத்தவை தானே ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அப்படியாயின், நடையழகும் இயைபும், நயமும், நல்ல ஒலியமைதியும் எளிமையைப் பொறுத்தவை. இவ்வாறு கூறும்போது முறையாகவும் மேதக்க முறையிலும் பண்படுத்தப்பட்ட உள்ளம், குணம் ஆகியவற்றின் எளிமையைத்தான் நான் குறிப்பிடுகிறேனே தவிர அறியாமை அல்லது மூடத்தனத்தைக் கூறும் எளிமையை நான் குறிப்பிடவில்லை.

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : நமது இளைஞர்கள் தமது வாழ்வில் கொண்ட பணியைச் செவ்வனே செய்ய வேண்டுமாஞல், இந்த நயங்களையும் இயைபுகளையும் நிலைத்த குறிக்கோளாகக் கொள்ள வேண்டாமா ?

கிளாக்கன் : ஆம், திண்ணமாக.

சாக்ரடீஸ் : அவை ஓவியக்கலையிலும் மற்ற ஆக்கக் கலைகளனைத்திலும் நிச்சயமாக நிரம்பிக் காணப்படுகின்றன; எடுத்துக்காட்டாக நெசவு, தையல், நுண்கலை, கட்டிடக்கலை மற்றும் ஆக்கக்கலை ஒவ்வொன்றிலும் இவற்றைக் காணலாம். இயற்கையிலும் - தாவர வர்க்கத்திலும் உயிரினத்திலும் - இவற்றைக் காணலாம். இவை அனைத்திலும் நயம் அல்லது நயமின்மையைக் காணலாம். நயமும் இயைபும் நல்ல

தன்மைக்கும் நற்பண்பிற்கும் உடன் பிறந்தவை போலிருந்து அவற்றையே மேலும் வளர்ப்பன. அவ்வாறே வனப்பின்மையும் முரண்பாடும் பெரும்பாலும் தீய சொற்க ளோடும் பொருந்துகின்றன எனலாம்.

கிளாக்கன் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : ஆனுல் நமது கண்காணிப்பு இதற்கு மேல் செல்ல வேண்டாமா? தாறுமாருகச் செய்தால் நாட்டிலிருந்து வெளியேற்றப்படுவர் என்று அச்சுறுத்தி, கவிஞர்களைமட்டும் தங்களது காவியங்களில் நன்மையை விளக்க வேண்டும் என வற்புறுத்திஞல் போதுமா? அல்லது மற்றக் கலைஞர் களையும் இதேபோன்ற கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தி, தீமை, அடக்கமின்மை, அற்பத்தனம், கண்ணியமின்மை போன்ற நன்மைக்கு மாருன குணங்களைச் சிற்பத்திலும் கட்டிடக் கலையிலும், வேறு ஆக்கக் கலைகளிலும் விளக்கக் கூடாதெனத் தடுக்க வேண்டாமா? நமது குடிகள் தீயவற்றில் நாட்டங் கொண்டு, பண்பு கெட்டுவிடுவார்கள் என்றஞ்சி நமது சட்டதிட்டங்களை மீறுகின்ற மனிதனைத் தடுத்துவிட வேண்டாமா? அவன் தீங்கு விளைக்கும் மேய்ச்சல் நிலத்தில் இலைகளையும், கொடிய மூலிகைகளையும் மலர்களையும் நாடோறும் சிறிது சிறிதாக மென்று தின்று கடும் நோய்வாய்ப்படுவது போல், நமது காப்பாளர்கள் நேர்மை யற்ற சூழ்நிலையில் உழன்று தமது மனத்தில் தீய எண்ணங் களைத் திரளாகத் தம்மையறியாமல் வளர்த்துக்கொள்ளும்படி நாம் விட்டுவிடக்கூடாது. அழகிய நவீனமான பொருள் களின் உண்மையான இயல்பைப் பகுத்துணரும் ஆற்ற லோடு விளங்குபவர்களாக நமது கலைஞர்கள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நலமிக்க நாட்டில் சீரிய காட்சிகள் ஒலிகள் ஆகியவற்றின் நடுவே நமதிளைஞர் வாழ்ந்து அனைத்திலும் உள்ள நலன்களைப் பெறுவர். தூய பிரதேசத்திலிருந்து வரும் நலந்தரு தென்றலைப் போல, சீரிய செயல்களின் பிரகாசமான எழில் அவர்தம் கண்ணி லும் செவியிலும் பாய்ந்து இளம்பருவத்திலிருந்து மனத் தைத் தம்மையறியாமலேயே இழுத்துப் பகுத்தறிவின் அழ கில் ஈடுபடுத்தி அதனேடு ஒன்றிப் போகச் செய்யும்.

கிளாக்கன் : இதைவிட மேன்மையான பயிற்சி வேருென்று இருக்க முடியாது.

சாக்ரடீஸ் : ஆதலின் கிளாக்கன்! இசைப்பயிற்சி மற்றைக் கருவிகளைக் காட்டிலும் ஆற்றல் மிக்கது; ஏனெனில், ஒலியமைதியும் இயைபும் உள்ளத்தின் உள்நிலைகளுக்கு ஊடுருவிச் சென்று, அவற்றினின்றும் அகலாது ஒன்றி நின்று சீரிய கல்வி பெற்றவனின் உள்ளத்தைப் பண்படுத்துகிறது. அவ்வாறே தகாத கல்வி பெற்றவனின் மனத்தை நயமற்றதாகச் செய்துவிடுகிறது. மேலும் உள்ளத்திற்கு உண்மையான இக்கல்விபெற்றவன் இயற்கையிலும் கலையிலும் இருக்கும் குறைபாடுகளையும், உண்மையான சுவையுடனும் மிக்க திறமையுடனும் உணர்வான். இளம் பருவத்திலேயே, காரணங்களை உணராத நிலையிலேயே தன் செயல்களுக்கேற்ற நல்லதைப் பெரிதும் மகிழ்ந்து பாராட்டுவதோடு நல்லவனுகவும் சிறந்தவனுகவும் ஆகிருன். தீயதை வெறுத்து அதனைக் குறை கூறுகிருன். பகுத்தறிவு அவன்பால் மலர்கின்றபொழுது தனது கல்வி எதனுடன் தோழமை செய்து கொள்ளும்படிச் செய்ததோ, அதை நீண்டகால நண்பனுக உணர்ந்து போற்றுவான்.

கிளாக்கன் : ஆம், நமது இளைஞர்களுக்கு இசையில் பயிற்சி தரப்படவேண்டும் என்று நீங்கள் கருதுவதையும், அதற்காக நீங்கள் எடுத்துரைத்த காரணங்களையும், நான் ஒப்புக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : எப்படிப்போல என்ருல் நாம் முதன் முதலில் படிக்கக் கற்கும் பொழுது, சிறிதளவேயுள்ள எழுத்துக்களை அகரவரிசையில் கற்று, அவை பல பரிமாணங்களிலும் தொகுதிகளிலும் தோன்றும் பொழுதெல்லாம் நாம் கண்டு மனமகிழ்ந்தோம். சிறிய அளவில் இருக்கின்றவை அல்லது பெரிய உருவமாக அமைந்துள்ளன என்று தள்ளிவிடாமல் தோன்றுமிடமெல்லாம் அவற்றைத் தெரிந்துகொள்வதிலேயே நாட்டஞ் செலுத்தினேம். காணுமிடந்தோறும் அவற்றைத் தெரிந்து கொள்ளாத வரையில், படிக்கும் கலையில் முழுமையெய்தியதாக நம்மை எண்ணிக்கொள்ள மாட்டோம்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : எழுத்துக்களின் உருவங்களைத் தெரிந்துகொண்டிருந்தால்தான் நீரிலோ கண்ணுடியிலோ காணும் மாற்று உருவங்களை நாம் கண்டு தெரிந்துகொள்ளமுடியும்; ஒரே

கலையும் பயிற்சியும் நமக்கு இரண்டையும் பற்றிய அறிவை வழங்குகிறது, என்பதைப் போல.

கிளாக்கன் : அது முற்றிலும் சரியே.

சாக்ரடீஸ் : அதேபோல, நற்பண்புகளின் இன்றியமையாத வகைகளையும், இவற்றுக்கு மாறானவற்றின் வகைகளையும் எந்தெந்தச் சேர்க்கையில் தோன்றினாலும் அறிந்துகொண்டு, அவற்றையும் அவற்றின் சாயல்களையும் காணுமிடமெல்லாம் சிறியதில் இருந்தாலும் பெரியதில் இருந்தாலும் அசட்டை செய்யாது கண்டறிந்து, அவை ஒரே கலை, ஒரே பயிற்சியின் எல்லைகளிலேயே இருப்பதாக நம்பவேண்டும்; இவ்வாறு இல்லாத வரையில் நாமோ நாம் பயிற்றுவிக்கும் காப்பாளர்களோ இசையறிவு கொண்டவராக ஆதல் இயலாது என்று வலியுறுத்துகிறேன்.

கிளாக்கன் : இது மிக உறுதி.

சாக்ரடீஸ் : இனி, எழில்மிக்கதோர் உள்ளம் அழகிய உருவத்துடன் இயைந்து, இரண்டும் ஒரே வார்ப்பில் அமையுமாயின் அதுவே காணும் கண் கொண்டவனுக்கு காட்சிகளனைத்திலும் மிகச் சிறந்ததாகும் அல்லவா ?

கிளாக்கன் : உண்மையில் மிகமிகச் சிறந்ததுதான்.

சாக்ரடீஸ் : மிகச் சிறந்தது எழில்மிக்கதாகவும் இருக்கும் அல்லவா ?

கிளாக்கன் : அவ்வாறு ஊகிக்கலாம்.

சாக்ரடீஸ் : மன ஒருமைப்பாடு உள்ளவன் எழில்மிக்கதைப் பெரிதும் காதலிப்பான்; ஆனால் மன ஒருமைப்பாடு இல்லாதவனை அவன் நேசிக்க மாட்டான் அல்லவா ?

கிளாக்கன் : ஒருமைப்பாட்டின் குறைவு அவனது ஆன்மாவைச் சார்ந்ததானால், அது உண்மைதான்; மற்றவனிடத்துள்ள குறை உடலை மட்டும் சார்ந்திருப்பின் அதைப் பொறுத்துக் கொண்டு அந்நிலையிலும் அவனை நேசிப்பான்.

சாக்ரடீஸ் : நீ சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். உனக்கு இத்தகைய அனுபவங்கள் இருக்கின்றன அல்லது இருந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். ஆனால் உன்னை ஒன்று கேட்க விரும்புவேன். சிற்றின்ப மிகுதிக்கும் அடக்கமுள்ள வாழ்க்கைக்கும் ஏதேனும் நெருங்கிய தொடர்பு உண்டா ?

கிளாக்கன்: அது எப்படி இருக்க முடியும்? துன்பத்தைப் போல் இன்பமும் தன் ஆற்றல்களைப் பயன்படுத்த முடியாமல் மனிதனைக் கெடுத்து விடுகிறது.

சாக்ரடீஸ்: அல்லது, சிற்றின்பத்திற்குப் பொதுவாகச் சீலத்துடன் ஏதேனும் நெருங்கிய தொடர்பு உண்டா?

கிளாக்கன்: எத்தொடர்பு மில்லை.

சாக்ரடீஸ்: வீம்புச் செயல், மிதமிஞ்சிய வாழ்க்கை இவற்ருேடு சிற்றின்பத்திற்கு நெருங்கிய தொடர்பு ஏதேனும் உண்டா?

கிளாக்கன்: ஆம், மிக நெருக்கம் உண்டு.

சாக்ரடீஸ்: காமத்தைக் காட்டிலும் மிகுதியான அல்லது தீவிரமான சிற்றின்பம் உண்டா?

கிளாக்கன்: இல்லை, இதைக்காட்டிலும் அதிக வெறிபிடித்ததும் இருக்க முடியாது.

சாக்ரடீஸ்: உண்மையான அன்போ என்ருல் எழிலையும் நெறியையும் பொறுத்தது, அது சீரும், ஒருமைப்பாடும் உள்ளதல்லவா?

கிளாக்கன்: முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ்: அப்படியாளுல், அளவு மீறிய போக்கும் வெறியும் உண்மையான அன்பை அணுகும்படி விடலாகாது.

கிளாக்கன்: நிச்சயமாகக் கூடாது.

சாக்ரடீஸ்: அப்படியாளுல் வெறிபிடித்த அல்லது அளவுக்கு மீறிய இன்பம், உண்மைக் காதலன் காதலி ஆகியோரை ஒருபொழுதும் அணுகும்படி விடலாகாது; அவர்களுடைய அன்பு முறையானதாயிருந்தால் அவர்களுள் எவரும் அத்தகைய அளவுக்கு மீறிய இன்பத்தை நுகரமுடியாது அல்லவா?

கிளாக்கன்: இல்லை சாக்ரடீஸ்! உண்மையில் அது அவர்களை ஒருபொழுதும் நெருங்கலாகாது.

சாக்ரடீஸ்: அப்படியாளுல், தந்தையொருவன் தனது மகனிடத்துப் பழகும் நெருக்கத்திற்கு மேலானதொரு தொடர்பொன்றையும் நண்பன் தான் நேசிப்பவருடன் கொள்ளலாகாது; அத்தொடர்பும் ஒரு சிறந்த பயனைக் குறித்தும், தான் நேசிப்போரது அனுமதியை முதலில் பெற்றுமே இருக்கவேண்டும், என்றும் விதிக்கும் ஒரு சட்டத்தை, நாம் நிறுவ இருக்கும் நகரில் நீ ஏற்படுத்துவாய் என்று எண்ணு

கிறேன். அவனுடைய விவகாரங்களனைத்தையும் இச்சட்டம் கட்டுப்படுத்த வேண்டும். ஒருபொழுதும் அவன் அந்த வரம்பை மீறிச் செல்லக் கூடாது. வரம்பு கடந்து சென்றல் நாகரிகமற்றவன்—பண்படாதவன், தீயதில் நாட்டங் கொள்ப வன் என்று கருதப்படவேண்டும்.

கிளாக்கன் : நான் முழுவதையும் ஒத்துக் கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ் : எனவே இசையைப் பற்றி இது நேர்த்தியான முடிவு; ஏனெனில் அழகின் நாட்டத்தைக் காட்டிலும் இசைக்கு வேறு என்ன இலட்சியம் இருக்கக்கூடும்?

கிளாக்கன் : நான் ஒத்துக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : இசைக்குப் பிறகு வருவது உடற்பயிற்சி; இதில் நமது இளைஞர்கள் அடுத்தபடியாகப் பயிற்சி பெறவேண்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இசைக்கல்வியும் உடற்பயிற்சியும் இளமையிலேயே தொடங்கவேண்டும். இப்பயிற்சி மிக்க கவனத்துடன் அளிக்கப்பட்டு வாழ்க்கை முழுதும் நீடிக்கவேண்டும். நல மிக்க உடல் தனது சிறப்பினுல் ஆன்மாவைச் செம்மைப் படுத்தவில்லை; ஆனல் இதற்கு மாருக, சிறந்த ஆன்மா தனது சீர்மையினுல் இயன்ற அளவு உடலைப் பண்படுத்து கிறது, என்பதே எனது சொந்த நம்பிக்கை. இதுபற்றி உனது கருத்து என்ன? இதை நீ ஒத்துக் கொள்ளுகிருயா என்று அறிய விரும்புகிறேன். நீ என்ன சொல்கிருய்?

கிளாக்கன் : ஆம், நான் ஒப்புக் கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ் : அப்படியானுல் போதிய அளவு பயிற்சி பெற்ற மனத்திற்கு உடலைக் கண்காணிக்கும் சிறப்பான பொறுப்பை நாம் அளித்துவிடுவது முறையாகும். வீணுக வளர்த்தாது, எடுத்துக்கொண்ட பொருளைச் சுருக்கிக் கூறுவோம்.

கிளாக்கன் : மிக நன்று.

சாக்ரடீஸ் : இளைஞர்கள் குடிக்கக் கூடாது என்பதை நாம் முன்னமே கூறிவிட்டோம். மற்ற மக்களைக் காட்டிலும் காவலஞக இருப்பாெரெருவன் குடித்து மதிமயங்கி நிற்பது அறவே கூடாது.

கிளாக்கன் : ஆம், காவலரைக் காக்க மற்றெரு காவலர் தேவை என்பது நகைப்பிற்கிடமாகும்.

சாக்ரடீஸ்: அடுத்து அவர்களது உணவைப்பற்றி என்ன கூற லாம்? இதை ஆராய்வோம்; ஏனெனில் காவலர்கள் எல்லா வற்றிலும் சிறந்த சோதனைக்குப் பயிற்சி பெறுகின்ருர்கள், இல்லையா?

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: சாதாரணத் தேகப்பயிற்சியாளர்களின் உடற்பழக் கம் காவலர்களுக்குப் பொருந்துமா?

கிளாக்கன்: ஏன் பொருந்தாது?

சாக்ரடீஸ்: அவர்களது உடற்பழக்கம் நீண்ட நேரம் உறக் கத்தை வளர்ப்பதாயும், உடல் நலத்திற்குத் தீங்கிழைப்பதா யும் இருக்குமோ என்று எண்ணுகிறேன். அவர்கள் தங்க ளது வாழ்நாட்களை உறக்கத்திலே கழிப்பதையும், பழக்க முறைகளினின்று சிறிதளவேனும் மாறினல்கூட மிகக் கொடிய நோய்களுக்கு இரையாவதையும் நீ கண்டதில்லையா?

கிளாக்கன்: ஆம், நான் கண்டிருக்கிறேன்.

சாக்ரடீஸ்: அப்படியாஞல், நமது போர் மல்லர்கள் மிக விழிப் பான நாய்களைப்போல் இருக்கவும், மிக நுட்பமான பார்வை யையும் செவித்திறனையும் பெறவும், போருக்குச் செல்லும் பொழுது ஏற்படக்கூடும் தண்ணீர் உணவுகளில் மாற்றமும், கொடிய வெயில், கடுங்குளிர் இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு உடல் நலங் குன்ருமலிருப்பதற்கும், அவர்களுக்கு மிக மேன்மையான பயிற்சி இன்றியமையாததாகும்.

கிளாக்கன்: இதுவே என்னுடைய கருத்தும்.

சாக்ரடீஸ்: உண்மையில் சிறந்த உடற்பயிற்சியும் சற்றுமுன் நாம் பேசிவந்த எளிய இசையும் இரட்டைப் பிள்ளைகள் எனலாம்.

கிளாக்கன்: அது எப்படி?

சாக்ரடீஸ்: ஏன், அந்த இசையைப்போல் எளிமையும் சிறப் பும் கொண்ட ஓர் உடற்பயிற்சி உண்டு, சிறப்பாக இராணுவ உடற்பயிற்சி அத்தகையது.

கிளாக்கன்: நீங்கள் கருதுவது என்ன?

சாக்ரடீஸ்: என் கருத்தை ஹோமர் வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்; வீரர்கள் போருக்குச் சென்றிருக்குங்கால் அவர்களுக்கெனத் தனித்த உணவு அளிக்கப்பட்டதாக நீ

அறியலாம், ஹெல்லஸ்பாண்ட்[1] கடற்கரையிலிருந்தும் அவர்களுக்கு மீன் கொடுக்கப்படவில்லை; அவித்த இறைச்சி மறுக்கப்பட்டது; சுட்ட இறைச்சியினை மட்டுமே வழங்கினர். இதுவே போர் வீரர்களுக்குச் சௌகரியமானது; ஏனெனில் இது தயாரிக்க நெருப்பு மூட்டப்பட்டால் போதும்; ஆனால் வேகவைக்க வேண்டுமாயின் பாண்டங்களையும் தட்டு முதலான கலங்களையும் அவர்கள் சுமந்து செல்லவேண்டியிருக்கும்.

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: இனிய குழம்புகளைப்பற்றி ஹோமர் ஓரிடத்திலும் பேசவில்லை என்று கூறினால் அது தவறாகாது. கூடாதென அவற்றை விலக்கியது அவர் மட்டுமல்ல, உடற்பயிற்சியையே தொழிலாகக் கொண்டவர் அனைவரும் ஒரு மனிதன் தான் நலமுற இருக்கவேண்டுமாயின் இத்தகைய தின்பண்டங்களை உட்கொள்ளலாகாது என்பதை நன்கு உணர்வர்.

கிளாக்கன்: ஆம், இதைத் தெரிந்துகொண்டு அவ்வீரர்கள் இவற்றை உட்கொள்ளாதது முற்றிலும் சரியே.

சாக்ரடீஸ்: அப்படியானால் ஸைரகியூஸ் (Syracuse) நாட்டு விருந்துகளையும் ஸிஸிலியிலுள்ள (Sicily) சமையற் கலைத் திறனையும் நீ ஏற்கமாட்டாய் என்று எண்ணுகிறேன்.

கிளாக்கன்: ஆம், ஏற்கமாட்டேன் என்று நினைக்கிறேன்.

சாக்ரடீஸ்: ஒருவன் நல்ல உடல் நிலையுடனிருக்க வேண்டுமாயின், கொரிந்திய நாட்டு (Corinthian) நங்கையைத் தோழமை கொள்ள உடன்படமாட்டாய் அல்லவா?

கிளாக்கன்: உறுதியாக மாட்டேன்.

சாக்ரடீஸ்: சுவையானவை என்று கருதப்படும் ஆதென்ஸ் நகர மிட்டாய் வகைகளையும் நீ ஒப்புக்கொள்ளமாட்டாய் அல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக மாட்டேன்.

சாக்ரடீஸ்: இவற்றையெல்லாம் உண்பதையும், ஆடம்பரமாக வாழ்வதையும், முறையே விரிந்த சீர்நடையிலும் எல்லாப் பண்களிலும் இயற்றப்பட்ட இசைக்கு நாம் ஒப்பிடலாம்.

கிளாக்கன்: அப்படியே.

---

1. Hellespont

சாக்ரடீஸ்: முறையே பிந்தியதில் உள்ள மிகுதி வரம்பற்ற நிலைக்கும், முந்தியதில் உள்ள மிகுதி நோய்க்கும் காரண மாகும். ஆனால் இசையின் எளிமை ஆன்மாவின் சீரான நிலைக்கும் உடற்பயிற்சியின் எளிமை உடல் நலத்திற்கும் காரணமாகிறது.

கிளாக்கன்: மிக்க உண்மை.

சாக்ரடீஸ்: ஒரு நாட்டில் வரம்பின்மையும் நோயும் பெருகும் போது நீதி நிலையங்களும் மருத்துவ சாலைகளும் திறக்கப் பட்ட வண்ணம் இருக்கும். ஒரு நகரத்து அடிமைகள் மட்டுமல்ல, தன்னுரிமை வாய்ந்த மக்களும் மருத்துவர் களையும் வழக்கறிஞர்களையும் அதிகம் நாடுவதைக் கண்டு வழக்கறிஞர்களும் மருத்துவர்களும் மிகுந்த செருக்கடை கின்றனர்.

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: தொழிலாளிகள் கீழ்த்தர மக்கள் மட்டுமல்ல, நற்பண்பை வளர்க்கும் கல்வி பெற்றதாகக் கருதிக்கொள் வோரும் முதல்தரமான மருத்துவர்கள் நீதிபதிகள் இவர் களின் திறமையை நாடி நிற்பது ஒரு நாட்டின் கல்வி எவ்வளவு இழிவான நிலையிலிருக்கிறது என்பதற்குச் சான்றாகும். இதைக்காட்டிலும் மேலான சான்று என்ன இருக்க முடியும்? நீதியை உணர்வதற்கும் உடல் நலம் பெறுவதற்குரிய வழிகள் தன் வீட்டில் இல்லாமையால் புறத்தே சென்று, பிறரிடம் சரண்புகுந்து, அவர்களைத் தனது எஜமானர்களாகவும் நீதிபதிகளாகவும் ஆக்கிக் கொள்வது மிக இழிந்த நிலையாயும், அவன் சிறந்த முறையில் வளர்க்கப்படவில்லை என்பதற்கு அறிகுறியாயும் இருக்கிற தல்லவா?

கிளாக்கன்: ஆம், எல்லாவற்றைக் காட்டிலும் மிக இழிவானது தான்.

சாக்ரடீஸ்: தீமையில் இதைக்காட்டிலும் கொடுமையான தீவிர மான நிலைமை ஒன்றிருப்பதை உணர்ந்தால் இது 'மிகமிக' இழிவானது என்று சொல்வாயா? வாதியாகவோ பிரதி வாதியாகவோ வாழ்நாட்களையெல்லாம் நீதிமன்றத்திலேயே கழித்து, வாழ்க்கை முழுதும் வழக்காளியாக இருப்பது மல்லாது, தனது கீழ்த்தர மனப்பான்மையினால் வழக்காடு வதையே பெருமையாகக் கருதுகிறான்; தான் நேர்மை

யின்மையில் நிகரற்றவன், அதிபன் என்று தன்னைக் கருதிக் கொள்கிறான். எதிலும் திருட்டு வழியையே நாடும் மனப் பான்மையும், எந்த இழிந்த நிலையிலும் நுழையவோ மீளவோ திறமையும், கொடிபோல் வளைந்து கொடுத்து நீதியின் கரங்களிலிருந்து தப்பும் இயற்கையும் உடையவன், நீதிபதி அயரமாட்டாரா என்று அஞ்சி நிற்பதைக் காட்டிலும் அவரிடமே செல்ல வேண்டாத வகையில் தனது வாழ்க் கையை அமைத்துக்கொள்வது இதைவிடச் சிறந்தது, மேன்மையானது என்று உணராது சொல்வதற்குத் தகுதி யற்ற மிக அற்பப் பயனுக்காக இவ்வாழ்க்கையில் ஈடுபடுகிறான். இது மேலும் மிக இழிவானதல்லவா?

கிளாக்கன் : ஆம், இது மேலும் மிக இழிவானது தான்.

சாக்ரடீஸ் : நல்லது; காயத்தை ஆற்றுவதற்கோ நோய் பெருவாரியாகப் பரவும் நிலையிலோ மருந்தின் உதவியை நாடாது, சோம்பலினாலும் இதுகாறும் நாம் சொல்லிவந்த பழக்கங்களாலும் தங்களது உடல்களைக் குட்டையை நிரப்பு வதுபோல் குடிவகைகளாலும் வாயுப் பொருள்களாலும் நிரப்பி, மேலும் பல நோய்களுக்கு வாதம், சளி போன்ற பெயர்களைக் கண்டுபிடிக்கும் வேலையை அஷ்குளிபியசின் திறமைமிக்க வழித்தோன்றல்களுக்கு இடுகிறார்கள். இதுவும் மிக இழிவானதல்லவா?

கிளாக்கன் : ஆம், அவர்கள் நோய்களுக்குப் பல விந்தையான, இதுவரையில் கேள்விப்படாத, புதிய பெயர்களைக் கொடுக் கிறார்கள்.

சாக்ரடீஸ் : ஆம், அஷ்குளிபியசின்[1] காலத்தில் அத்தகைய நோய்கள் இருந்திருக்கமாட்டா என்று எண்ணுகிறேன்? கதைத் தலைவன் யூரிபைலஸ் (Eurypylus) காயமடைந்த பின்னர் வயிற்றைப் புண்படுத்தக்கூடிய பார்லி உணவு, பால்கட்டி முதலியவை மிகுதியாகக் கலந்த பிராம்நியன் (Pramnian) என்ற மதுவுண்டான்; அப்பொழுது டிரோஜன் நகரத்துப் போரிலிருந்த அஷ்குளிபியசின் சீடர்கள் இக் கள்ளைக் கொடுத்த நங்கையைக் குறைகூறியதாகவோ இந்தச் சிகிச்சையை அளிக்கலாமென்று கூறிய பட்ரோ கிளசை[2] நிந்தித்ததாகவோ ஹோமர் கூறவில்லை ' என்பதி லிருந்து இதை ஊகிக்கிறேன்.

---

1. Asclepius   2. Patroclus

கிளாக்கன் : நல்லது. அந்நிலையிலுள்ள ஒருவனுக்குக் அந்தப் பானம் கொடுப்பது மிகமிக விந்தையே.

சாக்ரடீஸ் : பண்டைக் காலத்தில் நடந்ததாகக் கூறுவதைக் கருதும்போது, இது ஒரு விந்தையாகாது. ஹெரோடிகஸ் (Herodicus) என்பாரது காலத்திற்கு முன், அஷ்குளிபியசின் குழுவினர் நோய்களைப் பேணும் இக்காலத்திய மருத்துவ முறையைக் கையாளவில்லையாம். ஹெரோடிகஸ் தானே உடற்பயிற்சியாளராதலாலும் நோயினால் மெலிந்த உடல் பெற்றவராதலாலும் உடற்பயிற்சி, மருந்து இவையிரண்டையும் இணைத்து முதலில் முக்கியமாகத் தன்னையும் பின்னர் மற்றவர்களையும் சித்திரவதைக்காளாக்க வழிகண்டு பிடித்தாராம்.

கிளாக்கன் : அது எப்படி ?

சாக்ரடீஸ் : மெல்ல மெல்லக் கொல்வது என்ற முறையைக் கண்டுபிடித்ததின் வாயிலாக இன்னலுக்காளாகிறார். அவருக்கு ஒரு தீராத நோய்; அதனை அவர் இடையறாது கவனித்து வந்தார். அதினின்று தப்புவதற்கு வழியில்லாததால் தனது வாழ்க்கை முழுவதையும் அதைக் கவனிப்பதிலேயே கழித்தார். தன் உடல் நலத்தைத் தவிர வேறொன்றையும் கருத அவரால் இயலவில்லை; தனக்குப் பழக்கமான முறைகளில் ஏதேனுமொன்றில் சிறிதளவேனும் மாறுதல் ஏற்பட்டால் நீடித்த துன்பத்திற்கு ஆளாவார்; இத்துன்ப நிலைக்கு எளிதில் முடிவு வாராததால் மருத்துவக்கலையின் உதவியால் மூப்பு நிலை வரையில் போராடி வந்தார்.

கிளாக்கன் : அவரது திறமைக்கு அது அரிய வெகுமதியே !

சாக்ரடீஸ் : ஆம். வாழ்க்கை முழுதும் நோயுடன் போராடும் கலையை அஷ்குளிபியஸ் தனது சீடர்களுக்குக் கற்றுக் கொடுக்காததற்குக் காரணம், அக்கலையைப் பற்றிய அறியாமையோ அனுபவக் குறைவோ அல்ல, ஆனால் நன்கமைந்த அரசாங்கங்களிலெல்லாம் ஒவ்வொருவனுக்கும் அவன் கவனிக்க வேண்டிய தொழில் ஒன்றுண்டு; ஆகவே தொடர்ந்து நோய்வாய்ப் பட்டிருக்க அவனுக்கு ஓய்வில்லை என்பதை அவர் உணர்ந்ததனால்தான் கற்றுக்கொடுக்கவில்லை: இதைப் புரிந்துகொள்ளாத ஒருவனுக்கு இவ்வெகுமதி கிடைப்பது எதிர்பார்க்கக் கூடியதே. தொழிலாளியைப்

பொறுத்த அளவில் இதைக் கூறுகிறேம், விசேஷமாகப் பணக்காரர்களுக்கு இந்த விதி ஏனே பயன்படவில்லை.

கிளாக்கன் : உமது கருத்து யாது?

சாக்ரடீஸ் : நான் கருதுவதாவது : தச்சன் ஒருவன் நோய் வாய்ப்பட்டால் அதனை உடனடியாகத் தீர்த்துக்கொள்ள மருத்துவரிடம் ஏதோ ஒரு சிகிச்சையை நாடுகிறன். வாந்தி அல்லது பேதி மருந்து அல்லது சூட்டுக்கோல் அல்லது கத்தி - இவையே அவன் நாடும் சிகிச்சை முறைகள். அவன் நீண்ட காலம் உணவுக்கட்டுப்பாட்டை ஏற்க வேண்டுமென்றும், தலைக்குக் கட்டு கட்டிக்கொண்டு அசையாதிருக்க வேண்டுமென்றும், இம்மாதிரியான வேறு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் யாரேனும் ஒருவர் சொன்னல், நோய்வாய்ப்பட்டுக் கிடக்கத் தனக்குப் போதில்லை என்றும், தனது வழக்கமான தொழிலை விட்டு விட்டு நோயைக் கவனித்தால் வாழ்க்கையில் நலமேதும் இல்லை என்றும் கூறுவான். அத்தகைய மருத்துவரிடம் விடைபெற்றுச் சென்று தனது பழக்கமுறைகளை மீண்டும் கடைப்பிடித்து, குணம் அடைந்து, தன் அலுவல்களைக் கவனித்து வாழ்க்கை நடத்துவான்; அல்லது அவனது உடலமைப்பு அதற்கு இடங்கொடாவிட்டால் இறப்பான்; அத்துடன் அவன் துன்பம் நீங்கும்.

கிளாக்கன் : ஆம், இத்தகைய வாழ்க்கை நிலையில் இருப்பவன் ஒருவன் மருத்துவக் கலையை இந்த அளவுக்குத்தான் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

சாக்ரடீஸ் : அவனுக்கு ஒரு தொழில் உண்டல்லவா? அதை அவன் இழக்க நேரிட்டால், அவன் வாழ்க்கையில் என்ன பயன் உறுவான்?

கிளாக்கன் : முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆனல் பணக்காரனைப்பொறுத்த அளவில் நிலை வேறு; அவன் வாழக்கருதினல், அவனுக்கெனச் சிறப்பாக அமைந்ததொரு தொழிலைச் செய்தாகவேண்டுமென்று நாம் சொல்வதற்கில்லை.

கிளாக்கன் : அவன் ஒன்றும் செய்ய வேண்டிதில்லை என்று பொதுவாகக் கருதப்படுகிறன்.

சாக்ரடீஸ் : அப்படியானுல் ஒருவன் வாழ்வதற்கு வேண்டிய வசதி கிடைத்த உடன், நன்னெறியைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற போகிளிடிஸின் (Phocylides) வார்த்தையை நீ கேட்டதே இல்லையா ?

கிளாக்கன் : அப்படியல்ல ; அவன் ஓரளவு செல்வம் பெறு தற்கு முன்னரே அதை விரைவில் தொடங்குவது நலம் என்று எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ் : இதைப்பற்றி அவனிடம் நமக்கு விவாதம் வேண் டாம். பணக்காரன் நன்னெறி வழி ஒழுகக் கடமைப் பட்டி ருக்கிருனு ? அல்லது அதில்லாமல் வாழ்க்கை நடத்தலாமா ? அவனுக்கு அது கடமை என்ருல், ஒரு கேள்வி எழுகிறது. உணவுக் கட்டுப்பாட்டால் நோய்களைத் தீர்க்கும் இம்முறை தச்சுவேலை, இயந்திரத் தொழில்கள் போன்றவற்றில் மனத்தை ஈடுபடுத்த இடையூருக இருப்பது போல், போகி ளிடிஸ் கூறியவாறு நன்னெறியைக் கடைப்பிடிப்பதற்கும் இடையூருகாதா ?

கிளாக்கன் : அதில் ஐயமில்லை. உடற்பயிற்சி விதிகளை மிஞ்சி உடலின்கண் பெரிதும் நாட்டம் செலுத்துவது நன்னெறி பயிலுவதற்கு மிகவும் இடையூருகும்.

சாக்ரடீஸ் : ஆம், உண்மைதான். இது குடும்பத்தை, படையை அல்லது அரசாங்க அலுவலை நன்கு நடத்துவதற்கும் இவ் வாறே ஒவ்வாததாகும் ; எல்லாவற்றைக் காட்டிலும் மிக முக்கியமானது என்னவென்ருல் இது எத்தகைய படிப்பிற் கும், சிந்தனைக்கும், தன்னுள் சிந்தித்துத் தெளிதலுக்கும் ஒவ்வாது ; மெய்ப்பொருளாராய்ச்சியே தலைவலி, தலை சுற் றல் இவற்றுக்குக் காரணமாயிருக்கலாம் என்ற ஐயப்பாடு நீண்ட காலமாக உண்டு ; ஆகவே உயர்ந்த கருத்தில் நன்னெறி பயிலுவதும் கையாளுவதும் முற்றிலும் நிறுத்தப் படுகிறது. ஏனெனில் தான் நோய்க்கு ஆளாக்கப்படுவதாக எப்பொழுதும் நினைத்துக்கொண்டு தனது உடல் நிலையைக் குறித்துத் தொடர்ந்து கவலையடைகிருன்.

கிளாக்கன் : ஆம், அப்படி இருக்கக் கூடும்.

சாக்ரடீஸ் : ஆதலால், சாமர்த்தியமுள்ள அஷ்குளிபியஸ் தனது கலைத்திறனைப் பொதுவாக நல்ல உடல் அமைப்பும் அதற் கேற்ற பழக்க வழக்கங்களும் கூடிய, ஆனுல் ஒரு குறித்த

நோய், உள்ளவர்களிடத்து மட்டுமே காட்டினர் போலும்; அந்நிலையிலுள்ளவர்களை, பேதி, ரண சிகிச்சை முதலான வற்றின் வாயிலாகக் குணப்படுத்தி, நாட்டின் நலனைக் கருதி, அவர்களை வழக்கம்போல் வாழும்படி வற்புறுத்தினர்; ஆனால் எந்த உடல்களில் நோய் ஆழ்ந்து பரவியிருந்ததோ அவற்றில் கழிவுப் பொருள்களை வெளியேற்றுவது, மருந்து களைச் செலுத்துவது முதலிய தாமதமாகக் குணப்படுத்தும் முறைகளைக் கையாள முன்வரவில்லை; ஏனெனில் பயனற்ற வர்கள் நீடித்து வாழ்வதையோ, வலிமையற்ற தந்தையர் தங்களைக் காட்டிலும் வலிமை குறைந்த மக்களைப் பெறு வதையோ அவர் விரும்பவில்லை; சாதாரண முறையில் வாழ எவனுக்கு இயலவில்லையோ அவனுக்குச் சிகிச்சையளிப்பது தனது பொறுப்பல்ல என்று கருதினர், ஏனெனில் அத் தகைய சிகிச்சை அவனுக்கோ, அரசாங்கத்திற்கோ எவ் வகையிலும் பயனற்றது.

கிளாக்கன்: அப்படியானால், அஷ்குளிபியஸ் அரசநீதியில் வல்லவர் என்று நீங்கள் கருதுகிறீர்கள் போலும்.

சாக்ரடீஸ்: ஆம், இத்திறமை அவரது புதல்வர்களிடத்திலும் நன்கு வெளிப்படுகிறது. பண்டைக் காலத்தில் அவர்கள் சிறந்த வீரர்களாக விளங்கியதோடு, டிராய்[1] நகர முற்றுகை யில் நான் குறிப்பிட்ட மருத்துவ முறைகளை அவர்கள் கையாண்டார்கள் என்பது கருதத்தக்கது. பண்டாரஸ்[2] என்பவர் மெனிலாசைக்[3] காயப்படுத்திய பொழுது அவர்கள் "காயத்தினின்றும் குருதியை உறிஞ்சி அதை ஆற்றக் கூடிய மருந்துகளைத் தடவினர்" என்று கூறப்பட்டிருக் கிறது. யூரிபைலஸ்[4] விஷயத்தில் நடந்து கொண்டது போலவே, மெனிலாசைப் பொறுத்த அளவிலும் அவன் பின்னர் எதை உண்ணவேண்டும் அல்லது பருகவேண்டும் என்று ஒரு நியமமும் அவர்கள் விதிக்கவில்லை என்பது நினை விருக்கலாம். காயமடைவதற்குமுன் எவன் உடல் நலத் துடனும் சீரிய பழக்கங்களுடனும் இருந்தானோ அவனுக்கு அவர்கள் கையாண்ட முறைகள் பயன் அளிக்கப் போது மானவை என்று அவர்கள் கருதினர்; அவன் பின்னர் பிராம்னியன் கள்ளைப்[5] பருக நேர்ந்தாலும் அதையும்

1. Troy 2. Pandarus 3. Menelaus
4. Eurypylus 5. Pramnian wine

மிஞ்சிக் குணம் அடைவான். ஆனால் உடல் நலம் இல்லாத மிதமிஞ்சி நடக்கின்ற வாழக்கையினருடன் அவர்கள் எவ் விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லே. மருத்துவக் கலே அவர்களது நலத்திற்காக அமைக்கப் பெறவில்லே; அவர்கள் மைடாசை[1]ப்போல செல்வர்களாக இருந்திருப்பி னும் அஷ்குளிபியசின் புதல்வர்கள் அவர்களுக்குச் சிகிச்சை செய்ய மறுத்திருப்பர்.

கிளாக்கன் : அஷ்குளிபியசின் புதல்வர்கள் மிக்கக் கூர்மதி வாய்ந்தவர்கள் எனலாம்.

சாக்ரடீஸ் : ஆம், அது தெளிவு. அப்படி இருந்தும் துன் பியல் கதைகள் புனேவோரும், பிண்டாரும், நமது வேண்டு கோளேப் புறக்கணித்து அஷ்குளிபியஸ் அப்பாலோவின் மைந்தன் என்று தெரிந்திருந்தும், அவர் லஞ்சம் பெற்றுக் கொண்டு இறக்கும் தருவாயிலிருந்த ஒரு பணக்காரனுக்குச் சிகிச்சை செய்ய முற்பட்டார் என்றும், அதற்காக மின்ன லுக்கு இரையானர் என்றும் கூறியுள்ளனர். ஆனால், நம் மால் முன்னரே வற்புறுத்தப்பட்ட கொள்கைக்கு ஏற்ப நாம் அவர்கள் கூறும் இரு கூற்றுக்களேயும் ஒருமிக்க நம்பமாட் டோம். அவன் ஒரு தேவமைந்தனென்பது உண்மையா யின் பேராசை கொண்டவனுக இருந்திருக்க முடியாது; அல்லது அவன் பேராசை கொண்டிருந்தது உண்மை யாயின், தேவமைந்தனுக இருந்திருக்க முடியாது என்று நாம் வலியுறுத்துவோம்.

கிளாக்கன் : சாக்ரடீஸே!, நீங்கள் கூறுவது அனேத்தும் சால வும் நன்று; ஆனல் உங்களே ஒரு கேள்வி கேட்க விரும்பு கிறேன். ஒரு நாட்டில் நல்ல மருத்துவர்கள் இருக்க வேண்டாமா? உடலமைப்பு எவ்வாறிருப்பினும் எத்தகைய நிலேயிலும் ஏராளமான மக்களே யார் குணப்படுத்தியிருக் கிருர்களோ அவர்களன்றே நல்ல மருத்துவர்கள்? அதே போன்று பல்வேறு குணமுடையவர்களேயும் தெரிந்தவர்கள் தானே சிறந்த நீதிபதியாக விளங்க முடியும்?

சாக்ரடீஸ் : ஆம், நல்ல நீதிபதிகளும் நல்ல மருத்துவர்களும் தேவை என நானும் சொல்லுகிறேன். ஆனல் யாரை நல்ல வர் என்று நான் கருதுகிறேன் தெரியுமா?

---

1. Midas

கிளாக்கன் : நீங்கள் அதை எனக்குச் சொல்லுவீர்களா ?

சாக்ரடீஸ் : இயலுமாயின் சொல்லுகிறேன். ஆனால் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன் ; நீ ஒரே கேள்வியில் மாறுபட்ட இரு பொருள்களை இணைக்கிறாய்.

கிளாக்கன் : ஏன் அப்படிக் கருதுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : மருத்துவர்களையும் நீதிபதிகளையும் நீ சேர்த்துக் குழப்பி விட்டாயே. தங்களது இளமையிலிருந்தும் மருத்துவக்கலை அறிவுடன் நோயின் அனுபவத்தையும் சேர்த்து யார் பெற்றுள்ளார்களோ அவர்களே மிகச் சிறந்த மருத்துவர்கள். அவர்களுக்கு உடல் நலமின்றி இருப்பினும் நன்று ; மேலும் தம்மிடத்தே பலவிதமான நோய்களைக் கண்டிருக்க வேண்டும். என் கருத்துப்படி, அவர்கள் உடலைச் சீர்ப் படுத்த உடலையே கருவியாகப் பயன்படுத்தவில்லை. அப் படிப் பயன்படுத்தினால் அவர்கள் நோயால் வருந்தவோ அன்றி முன்னரே வருந்தியிருக்கவோ விடமுடியாது. அவர் கள் மனத்தின் உதவியாலேயே உடலைக் குணப்படுத்து கின்றனர். மனம் நோயுற்று வருந்துமாயின் அது வேறு ஒன்றையும் குணப்படுத்தாது.

கிளாக்கன் : அது முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆனால், நீதிபதிகளைப் பொறுத்தமட்டில் நிலைமை வேறு. அவர்கள் மனத்தை மனத்தால் கண்காணிக்கின்ற னர். ஆகவே அவர்கள் தீயோர்பால் பயிற்சியோ அன்றி அவர்களுடன் இளமையிலிருந்தே தொடர்போ கொண்டிருக் கக் கூடாது. எப்படிப் பிறரது நோய்களை அறியத் தானே நோய்களை அனுபவித்திருக்க வேண்டுமோ, அதுபோல் பிறரது குற்றங்களை உணர, குற்ற அட்டவணையில் கண்ட அனைத்தையும் தானே செய்து பார்த்திருக்க வேண்டும் என்பதில்லை. நன்முறையில் தீர்ப்பு வழங்கும் மென்மை யான உள்ளமானது இளமையில் தீயபழக்கத்தின் அனு பவமோ, அன்றித் தொடர்போ, பெற்றிருக்கலாகாது. இக் காரணம் பற்றியே சான்றோர் இளமையில் பெரும்பாலும் கள்ளம் கபடமற்ற எளியராகவே காணப்படுகின்றனர்; தமது வாழ்வில் தீமையே இடம் பெறுததால், அவர்கள் நேர்மை யற்றவர்களால் வெகு எளிதில் ஏமாற்றப்படுகின்றனர்.

கிளாக்கன் : ஆம், அவர்கள் மிக எளிதில் ஏமாறக்கூடிய வர்கள்.

சாக்ரடீஸ் : ஆதலால் நீதிபதிகள் இளைஞராக இருக்கக்கூடாது. மேலும் தீமையின் தன்மையைத் தன்னிடத்திலேயே தெரிந்துகொள்ளாது, நீண்ட அனுபவத்தின் வாயிலாகப் பிறரிடமிருந்தே தெரிந்துகொண்டிருக்க வேண்டும். அவனுக்கு வழிகாட்டியாக அறிவுதான் இருக்கவேண்டுமேயன்றி, சொந்த அனுபவம் வேண்டுவதன்று.

கிளாக்கன் : ஆம், அவர்களே சிறந்த நீதிபதிகள்.

சாக்ரடீஸ் : ஆம், அவரே நல்ல மனிதருங்கூட. ஏனெனில் எவன் நல்ல உள்ளம் பெற்றிருக்கிருனே, அவனே நல்லவன். ஆனல் நான் முன்பு சொன்ன கபடநெஞ்சும் பிறர்மீது ஐயமும் கொண்டவன் பல குற்றங்களையும் செய்தவன்—தீமையின் தலைவன் எனத் தன்னைக் கருதுபவன்; தன்னையொத்தவரிடையே இருக்கும்பொழுது, வியக்கத்தக்க விழிப்புடன் இருக்கிருன். ஏனெனில் பிறரைத் தன்னைக்கொண்டு மதிப்பிடுகிருன். ஆனல் அவன் மிக்க நற்பண்பாளரிடையே இருக்க நேர்ந்தால், அங்கு, காரணமில்லாத ஐயப்பாட்டினல், மீண்டும் அறிவற்றவனுவான். தன்பால் நேர்மையே இல்லாததால், அவன் நேர்மையாளரை உணரான். அதே நேரத்தில் நல்லோரது தொகையைக் காட்டிலும் தீயோரது தொகையே மிகுந்திருத்தலாலும் அவர்களையே அடிக்கடி சந்திப்பதாலும், தன்னை அறிவற்றவன் எனக் கருதாது அறிவாளி என்றே கருதிக்கொள்கிருன்; பிறராலும் அவ்வாறே கருதப்படுகிருன்.

கிளாக்கன் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : எனவே, நாம் விரும்பும் மதிமிக்க நீதியாளன் இவனன்று. தீய பண்பினல் நற்பண்பை அறிய முடியாது. ஆனல் நற்பண்பு வாய்ந்தவன் அனுபவ முதிர்ச்சியால் நன்மை, தீமை ஆகியவற்றைப்பற்றிய அறிவைப் பெறுவான். நற்பண்புள்ளவனே விவேக முடையவன் என்பது என் கருத்து.

கிளாக்கன் : என் கருத்தும் அதுவே.

சாக்ரடீஸ் : நான் கூறும் இத்தகைய மருத்துவர்களுக்கும் நீதிபதிகளுக்குமே நமது அரசியல் இடங்கொடுக்க வேண்டும். அவர்களே நல்ல உடலமைப்பும் மனநிலையும் கொடுத்து, சிறந்த மக்களுக்கு உதவுவர். அத்துடன் உடல் நோய் கொண்டவர்களை மடிய விடுவர். திருத்த முடியாத மிக

இழிந்த உள்ளமுடையோர் தம்மைத்தாமே முடித்துக் கொள்வர்.

கிளாக்கன் : நோயாளிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இதுவே சிறந்த நிலை என்பது தெளிவு.

சாக்ரடீஸ் : எனவே நான் கூறியதுபோல் வரம்புக்குட்பட்ட வாழ்வை ஏற்கத் தூண்டும் எளிய இசை ஒன்றிலேயே பயிற்றுவிக்கப்படும் நம் இளைஞர்கள், நீதிமன்றத்தை நாடத் தயங்குவர்.

கிளாக்கன் : ஆம், அது தெளிவு.

சாக்ரடீஸ் : அதே வழியில் ஒழுகி, எளிய உடற் பயிற்சியே போதுமென்று அதைப் பெறும் இளைஞன் மிகவும் இன்றியமையாத நிலையில்தான் மருத்துவரை நாடுவான்.

கிளாக்கன் : அதையே நானும் நம்புகிறேன்.

சாக்ரடீஸ் : பயிற்சிகளும் கடின உழைப்பும் அவனுடைய ஆன்மீகக் குணங்களை எழுப்புவதற்கு ஏற்பட்டனவேயன்றி, உடல் வலிமையை வளர்க்க அன்று. அவன் சாதாரண மல்லனைப் போன்று, உடற் பயிற்சியையும் கட்டுப்பாட்டையும் கேவலம் உடல் வலிமையை வளர்க்க உபயோகிக்க மாட்டான்.

கிளாக்கன் : மிகவும் சரியானது.

சாக்ரடீஸ் : பெரும்பாலான மக்கள் நினைப்பது போல இசை, உடற்பயிற்சி ஆகிய இரு கலைகளும் முறையே ஆன்மாவின் தேர்ச்சிக்காகவும் உடல் வளர்ச்சிக்காகவும் உண்மையில் அமைக்கப் பெற்றுள்ளன என்று கூறமுடியாது.

கிளாக்கன் : அப்படியானல் அவற்றின் உண்மையான நோக்கம் என்ன ?

சாக்ரடீஸ் : அவ்விரு கலைகளையும் பயிற்றுவிப்பவர் ஆன்மாவின் முன்னேற்றத்தையே தலையாய நோக்கமாகக் கொண்டுள்ளனர் என நினைக்கிறேன்.

கிளாக்கன் : அது எப்படி இருக்க முடியும் ?

சாக்ரடீஸ் : உடற்பயிற்சி ஒன்றில் மட்டுமே ஈடுபடுவதனல் மனத்திற்கு ஏற்படும் விளைவையும் அல்லது இசையில் மட்டுமே ஈடுபடுவதால் ஏற்படும் இதற்கு மாருன விளைவையும் நீ ஒரு போதும் கண்டதில்லையா ?

கிளாக்கன் : அது எப்படி வெளிப்படுகிறது ?

சாக்ரடீஸ் : ஒன்று இரக்கமின்மையையும் கொடுமையையும், மற்றொன்று உறுதியின்மையையும் பேடித்தனத்தையும் ஏற்படுத்துகின்றது.

கிளாக்கன் : ஆம், உடற்பயிற்சி மட்டுமே பெற்றவன் காட்டு மனிதன் ஆவதையும், இசை ஒன்றையே பயிலுபவன் எல்லை மீறி இளகித் தளர்வதையும், நான் நன்கு உணர்வேன்.

சாக்ரடீஸ் : ஆயினும், இக்கொடிய மனப்பான்மை உள்ளத்திலிருந்தே தோன்றுகிறது. மனத்திற்குச் சீரிய முறையில் பயிற்சி அளித்தால் அது ஆண்மையைப் பெறும். ஆனல் அதுவும் அளவுக்கு மீறிப் பயிற்றுவிக்கப்பட்டால் இரக்கமற்ற முரட்டுத்தன்மையடைவது திண்ணம்.

கிளாக்கன் : நானும் அப்படியே கருதுகிறேன்.

சாக்ரடீஸ் : மெய்ப்பொருள் அறிஞரோ, இதற்கு மாருக மென்மை உள்ளம் பெற்றவராக இருப்பர். அக்குணமும் அளவுக்கு மீறினுல் தளர்வுற்று உறுதியற்றதாகிவிடும். ஆனல் முறையான பயிற்சி இருந்தால் சாந்தமாயும் மிதமாயும் விளங்கும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : நமது கொள்கைப்படி காவலர்க்கு இவ்விரு பண்புகளும் இருக்கவேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : திண்ணமாக.

சாக்ரடீஸ் : இவ்விரண்டும் நன்கியைந்திருக்க வேண்டாமா ?

கிளாக்கன் : ஐயமின்றி.

சாக்ரடீஸ் : நன்கியைந்த மனம் கட்டுப்பாடு, ஆண்மை ஆகிய இரண்டுக்கும் உறைவிடம் அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஒருமைப்பாடில்லாத உள்ளம் கோழையாகவும் நாகரிகமற்றதாகவும் இருக்குமல்லவா ?

கிளாக்கன் : முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : நாம் சற்று முன்னர் பேசிவந்த இனிய மெல்லிய உருக்கமான குரல்களைச் செவிக்குழாய்கள் வாயிலாக உள்ளத்தில் செலுத்தும் பொழுதும் இசைக்குத் தன்னை அடிமையாக்கிக் கொள்ளும்பொழுதும், பறவைகளைப் போன்று பாடி, அப்பாட்டின் இன்பத்தை நுகர்வதிலேயே தன்வாழ்க்கை முழுவதையும் கழிக்கும் பொழுதும் அவனது

மனம் முடிவில் கோழையாகவும் நாகரிகமற்றதாகவும் மாறி விடும். இப்பயிற்சியின் முதல் நிலையில் அவனிடத்திலுள்ள உணர்ச்சி அல்லது ஆற்றல் எஃகு போன்று உறுதியடைந்து விடுகிறது, உடைந்து பயனற்றுப் போவதில்லை. மென்மை யாக்கி அமைதிப்படுத்தும் இப்போக்கில் அவன் தொடர்ந்து சென்றால் அடுத்த நிலையிலே அவன் நலிந்து தேயத் தொடங்கி, இறுதியில் தனது ஆற்றல் முழுவதையும் இழந்து, வலிமை குன்றிப்போகும் வரையிலும் இத்தேய்வு நீடிக்கிறது. மேலும் அவன் வீரனுக்குரிய வலிமையையும் இழக்கிறான்.

கிளாக்கன் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : இயற்கையாகவே அவனது மனவலிமை குறைவாக இருந்தால், மிகவிரைவில் இம்மாறுபாடு ஏற்பட்டுவிடும். அன்றி, அவனது ஆற்றல் மிகுந்திருந்தால் இசையின் வலிமை அவனது மன ஆற்றலைக் குறைத்து எளிதில் ஆத்திரப்படும்படிச் செய்துவிடுகிறது. மிக அற்பக் காரணத் திற்கும் திடீரெனச் சினந்தெழுகிறான். விரைவில் அச்சினம் தணிந்து விடுகின்றது. மனத்திண்மையுடன் இருப்பதற்குப் பதிலாக எளிதில் சினம் கொள்ளும் தன்மையனாகவும், உணர்ச்சி வயப்படுபவனாகவும், செயலாற்றும் தன்மையற்ற வனாகவும் ஆகிறான்.

கிளாக்கன் : அப்படியேதான்.

சாக்ரடீஸ் : அவ்வாறே உடற்பயிற்சியிலும், இசைபயிலும் மாணவனைப் போலல்லாது, கடுமையான உடற்பயிற்சியை ஏற்று ஏராளமான உணவை உண்டால், முதலில் அவனது உடல்நிலை சிறந்து, சுகத்தையும் துணிவையும் அளிக்கிறது. அவன் முன்னிலும் இரண்டுமடங்கு ஆண்மையுள்ளவனா கிறான்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : பின்னர் என்ன ஏற்படுகின்றது? அவன் வேறொன் றும் செய்யாது, கலையொன்றும் பயிலாது இருப்பின், கல்வி, கேள்வி, ஆராய்ச்சி, பண்பாடு, இவற்றில் எவ்வித நாட்டமும் இல்லாத காரணத்தால் அவனது இயல்பான நுண்ணறிவு மெலிந்து, மந்தமடைந்து குருடாகிவிடாதா? அவனது மனம் விழிப்பின்றித் தக்க உணர்வற்றுப் போகாதா? அவ

னுடைய புலன்கள் தங்களை மறைக்கும் திரைகளினின்றும் விடுபடாது போகுமல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : மேலும் பண்பாடின்றி, பகுத்தறிவு எனும் கருவியை ஒருபொழுதும் பயன்படுத்தாது, இறுதியில் அவன் மெய்ஞ்ஞானத்தையே வெறுக்கிறான் ; கொடுமையும் முரட்டுத்தனமும் அவனது சுபாவமாகின்றன. வேறொரு முறையை அறியாது, அறிவின்மையிலும் தீய சூழலிலுமே வாழ்கிறான் ; அவன் கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை உணர்வதில்லை.

கிளாக்கன் : அது முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : மனித இயற்கையில் இரு அடிப்படைத் தத்துவங்கள் அமைந்துள்ளன : ஒன்று உணர்ச்சியைச் சார்ந்ததாகவும், மற்றொன்று மெய்யறிவைச் சார்ந்ததாகவும் அமையும். அவற்றிற்கு ஒத்த இருகலைகளை ஏதோ ஒரு கடவுள் மனித குலத்திற்கு அளித்ததாக நான் கருதுகிறேன். அக்கலைகள் உடலுக்கும் ஆன்மாவிற்குமாக ஏற்பட்டன. அவை நேரிடையாக உடல் உள்ளங்களுக்குப் பொருந்தமாட்டா. எவ்வாறு ஓர் இசைக்கருவியின் நரம்புகளைத் தளர அல்லது இறுக இழுப்பதுபோலச், செவ்வனே இணையும் வரை இவ்விரு அடிப்படைத் தத்துவங்களையும் பொருந்தவைத்தபொழுதே பயன்படும்.

கிளாக்கன் : அதுதான் நோக்கமாக இருக்கவேண்டுமெனத் தோன்றுகின்றது.

சாக்ரடீஸ் : எவனொருவன் இசையையும் உடற்பயிற்சியையும் பொருத்தமான அளவில் கலந்து, ஆன்மா சிறப்புறும் வகையில் அவற்றை இணையவைக்கிறானோ, அவனே தந்தி மீட்டுவோனைக் காட்டினும் உண்மையான லயம்மிக்க இசையாளன் ஆவான்.

கிளாக்கன் : சாக்ரடீஸ்! நீங்கள் கூறுவது முற்றிலும் சரி.

சாக்ரடீஸ் : அரசாங்கம் நீடித்திருக்க வேண்டுமாயின், நமது அரசாங்கத்திற்கு அத்தகைய மேதாவி என்றும் தேவை.

கிளாக்கன் : ஆம், அத்தகைய பெரியோரே மிக இன்றியமையாதவர்.

சாக்ரடீஸ் : பயிற்சி, கல்வி இவற்றைப்பற்றிய நமது அடிப் படைக் கொள்கைகள் இவைதாம். இனி மக்களுடைய கூத்து, வேட்டையாடல், உணவு முறை, உடற்பயிற்சி, குதிரைப்பந்தயம் முதலியவற்றைப் பற்றி மேலும் நுணுக்க மாக ஆராய்வதில் பயனில்லை. ஏனெனில் இவையனைத்தும் பொதுக்கொள்கையினின்றே தொடர்கின்றன ; எனவே அக் கொள்கைகளை நாம் தெரிந்துகொண்டுவிட்டபின், இவற் றைக் கண்டுபிடிப்பதில் நமக்கு அதிகச் சிரமம் எதுவும் இராது.

கிளாக்கன் : கஷ்டம் எதுவும் இராது என்றுதான் நானும் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : மிகவும் நன்று. அடுத்த கேள்வி என்ன ? யார் ஆட்சியாளர்களாகவும், யார் குடிகளாகவும் இருக்க வேண்டும் என நாம் ஆராய வேண்டாமா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : முதியோர் இளையோரை ஆளவேண்டுமென்பதில் ஐயமிருக்க முடியாது.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : மேலும், அவர்களுள் மிகச் சிறந்தவரே ஆள வேண்டும்.

கிளாக்கன் : அதுவும் சரியே.

சாக்ரடீஸ் : யார் உழவுத் தொழிலில் மிகவும் ஈடுபாடு உள்ள வரோ அவர்களே மிகச் சிறந்த உழவர் அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : நமது நகரத்திற்கு மிகச் சிறந்த காவலர் வேண்டு மாதலால், அவர் காவலர்களது தன்மை மிகுந்தவராக இருக்கவேண்டாமா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இந்நோக்கம் நிறைவேற அவர்கள் மதிநுட்பமும் செயலாற்றும் திறமையும் உள்ளவராகவும், அரசில் கண்ணும் கருத்துமாக உள்ளவராகவும் இருக்க வேண்டுமல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : எதையொருவன் நேசிக்கிருனே அதில் அவன் கண்ணும் கருத்துமாயிருப்பது இயற்கை அல்லவா ?

கிளாக்கன் : ஐயமின்றி.

சாக்ரடீஸ் : எதில் ஒருவனுடைய அக்கறை மிகுந்துள்ளதோ அதில் அவனுடைய விருப்பம் பெருகுவதும், மேலும் எதனுடைய நன்மை தீமைகளைத் தன்னுடைய நன்மை தீமையுடன் பெரிதும் தொடர்புள்ளன என்று கருதுகின்றுனே அதில் அவன் மிக்க நாட்டம் கொள்வதும் இயற்கையல்லவா ?

கிளாக்கன் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : எனவே, அத்தகையவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். காவலர்களுள் யார் தமது வாழ்நாள் முழுவதையும் நாட்டிற்கு நன்மை செய்வதிலேயே கழிக்க விரும்புகின்றனர், யார் நாட்டின் நலனுக்கு எதிராக ஒன்றைச் செய்வதில் மிக்க வெறுப்புக் காட்டுகின்றனர், என்று கவனித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கிளாக்கன் : அவர்களே தக்க காவலராவர்.

சாக்ரடீஸ் : அவர்கள் தமது மன உறுதியைக் கைவிடாதிருக்கின்றனரா என்றும், பலாத்காரத்தாலோ மதிமயக்கத்தாலோ நாட்டிற்குச் செய்ய வேண்டிய கடமையை ஒரு பொழுதும் மறவாமல், புறக்கணிக்காமல் இருக்கின்றுர்களா என்றும் தெரிந்துகொள்ள அவர்களை எப்பொழுதும் விழிப்புடனே நாம் கவனித்து வரவேண்டும்.

கிளாக்கன் : புறக்கணிப்பதா ? அது எப்படி.

சாக்ரடீஸ் : அதை உனக்கு விளக்குகிறேன். ஒருவனுடைய தீர்மானத்தை அவன் மனம் ஒப்பியோ அன்றி அதற்கு மாருகவோ கைவிடலாம். பொய்யைத் தவிர்த்து மெய்யை ஏற்கும் பொழுது, அப்பொய் மனப்பூர்வமாக விடப்படுகிறது. உண்மையை இழக்க நேரிடும் போதெல்லாம் அவனது விருப்பத்திற்கு எதிராகவே அது மறைகிறது.

கிளாக்கன் : மனமொப்பித் தீர்மானம் கைவிடப்படுவது எப்படி என்பது எனக்கு விளங்குகின்றது ; ஆனுல் மனமின்றி அதை விடுவது என்பதன் பொருள் இன்னமும் எனக்கு விளங்கவில்லை.

சாக்ரடீஸ் : மக்கள் மனமின்றி நன்மையை இழப்பதும், மனமுவந்து தீமையைத் தவிர்ப்பதும் உனக்கு ஏன் புலப்படவில்லை ? உண்மையை இழத்தல் தீயது. ஆனுல் அதை

அடைவது நல்லது அல்லவா? பொருள்களை உள்ள வாறுணர்தல் உண்மையைப் பெறுவதாகும், என்பதை நீ ஒத்துக்கொள்வாயல்லவா?

கிளாக்கன்: ஆம். மனித இனம் தன் விருப்பத்திற்கு மாருகவே உண்மையை இழக்கிறது, என்ற தங்களது கருத்தை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ்: நமது விருப்பத்திற்கு மாருக ஏற்படும் இந்த இழப்பு, களவு, பலாத்காரம், மோகம் ஆகிய இவற்ருலேயே ஏற்படுகிறது அல்லவா?

கிளாக்கன்: இன்னமும் உங்கள் கருத்து எனக்கு விளங்க வில்லை.

சாக்ரடீஸ்: துன்பியல் நாடக ஆசிரியர்கள் போல நான் தெளிவின்றிக் குறிப்பாகப் பேசிவந்துள்ளேனே என்று ஐயுறுகிறேன். பிறரது அறிவுறுத்தலைக் கேட்டுச் சிலர் மாறுகின்றனர்; மற்றவர் அதை மறந்து விடுகின்றனர் என்பதே என் கருத்து. வாதத்திறமை ஒரு சாராரது உள்ளத்தையே கவருகிறது. ஆனல் மற்ருெரு சாராரது காலத்தை வீணுக்குகின்றது. இதையே நான் களவு என்கிறேன். இப்பொழுது நான் சொல்லுவது விளங்கு கின்றதா?

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: மேலும் எவர் பலாத்காரத்திற்கு உள்ளாகிறவர் என்ருல், ஏதோ ஒரு வேதனை அல்லது துயரத்தின் கொடுமை எவரைத் தமது கொள்கையை மாற்றிக்கொள்ளும் படி வலியுறுத்துகிறதோ அவர்களே யாவர்.

கிளாக்கன்: இப்பொழுது விளங்குகிறது. நீங்கள் கூறுவது முற்றிலும் சரி.

சாக்ரடீஸ்: மோகங்கொண்டவர்கள் இன்பத்தின் மென்மைக்கு வயப்பட்டோ அன்றி அச்சத்தின் கொடுமைக்கு வெருண்டோ தங்களது கொள்கையை மாற்றிக்கொள்ளு கிருர்கள் என்பதையும் நீ ஒத்துக்கொள்ளுவாய் அல்லவா?

கிளாக்கன்: ஆம். ஏமாற்றுவது எல்லாம் மோகத்திற்குக் காரணமாகும்.

சாக்ரடீஸ்: ஆகவே நான் சற்று முன்பு சொல்லிக்கொண் டிருந்ததுபோல, அரசின் நலமே தம் வாழ்வின் குறிக்

கோளாகக் கொண்டு செம்மையாகத் துணிவுடன் யார் நடக்கின்றனர் என்று இனி நாம் ஆராயவேண்டும். அவர்களை நாம் இளமை முதலே கவனித்து, எதில் அவர்கள் மறதியோ அன்றி ஏமாற்றமோ அடையக்கூடிய செயல்களைச் செய்வித்து அவற்றுள் எவர் மறவாமலும் ஏமாற்றமடையாமலும் இருக்கின்றனரோ அவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். இச்சோதனையில் எவர் தோல்வி அடைகின்றனரோ அவர்களை நீக்கிவிடவேண்டும். அதுவே தக்க முறை அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : காவலர்களுக்கான இத்தகைய குணங்கள் இவர்கள் பாலுள்ளன என்பதை மேலும் நிரூபிக்க, இவர்களுக்குக் கடினமான உழைப்பும் தொல்லைகளையும் வேதனைகளையும் உண்டாக்குமாறு விதிக்க வேண்டும்.

கிளாக்கன் : மிகவும் சரி.

சாக்ரடீஸ் : மூன்ருவது சோதனையாக, அவர்கள் மதிமயக்கும் நிகழ்ச்சிகளில் எவ்வாறு நடந்துகொள்ளுகிருர்கள் என்று நாம் பார்க்கவேண்டும். பேரொலி, பேரிரைச்சல் இவற்றினிடையே பழகாத ஆண் குதிரைக்குட்டிகளை நடத்திச் சென்று அவை அச்சுறுகின்றனவா என்று சோதிப்பவர்களைப்போல் நமது இளைஞர்களையும் அச்சுறுத்தும் சூழ்நிலைகளின் வழியே நடத்திப் பின்னர் இன்பச் சூழலில் வைத்து, தங்கத்தைப் புடம் போட்டு மதிப்பிடுவதைக்காட்டிலும் மிகத்திறம்பட, மதிப்பிடவேண்டும். எந்த நிலைகளிலும் மதிமயங்காது மன உறுதி பெற்றிருக்கிருர்களா என்றும், எப்பொழுதும் பெருந்தன்மையுடன் விளங்குகின்ருர்களா என்றும், தங்களது நற்பண்புகளையும் தங்களையும், தாம் கற்ற இசையையும் நன்கு பாதுகாத்துக்கொள்ளுகின்றனரா என்றும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தனிமனிதனுக்கும் அரசுக்கும் தேவையான மன ஒருமைப்பாடும் அமைதியும் கொண்டிருக்கிருர்களா என்றும் பார்க்கவேண்டும். ஒரே விதமாக எவனொருவன் இச்சோதனையில் வெற்றிபெற்றுத் தூய்மையுடன் இருக்கிருனே அவனையே நாட்டின் ஆட்சியாளனுகவும், நாட்டின் காவலனுகவும் நியமிக்க வேண்டும். வாழ்விலும் சாவிலும் அவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். மிகச் சிறந்த மரியாதையின் சின்னமான சமாதி

யும், ஏனைய நினைவுச் சின்னங்களும் அவனுக்கு ஏற்படுத்த வேண்டும். ஆனால், சோதனையில் தோல்வியடைபவனை நாம் விலக்கிவிட வேண்டும். இந்த முறையிலேயே நமது காவலர்களும் ஆட்சியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்படவேண்டும் என்பதே எனது கருத்து. இவற்றைப் பொதுவாகக் கூறுகின்றேனே அன்றித், திட்டமாகக் கூறவில்லை.

கிளாக்கன் : பொதுவாகக் கூறுமிடத்துத் தாங்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ் : அன்னியப் பகைவர்களிடமிருந்து நம்மைக் காத்து, அவர்களது நோக்கத்தைக் கைவிடுமாறு செய்து உள்நாட்டிலே அமைதியை நிலவச் செய்து, நமக்கிடையூறு செய்பவர்களது ஆற்றலை ஒழிக்கும் தரமிக்கவர்க்கே 'காவலர்' என்ற பெயர் முற்றிலும் பொருந்தும். முன்பு நாம் காவலர்களுக்குத் தக்கவர்களாகக் குறித்த இளைஞர்களை ஆட்சியாளர்களின் உதவியாளர்கள் என அழைப்பது சரியாகும்.

கிளாக்கன் : நீங்கள் கூறுவதை ஒத்துக்கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ் : ஆட்சியாளர்களையும் ஏனைய மக்களையும் ஏமாற்றக் கூடிய தலைசிறந்த கட்டுக்கதை - பொய்க்கூற்று - ஒன்றை நாம் எங்ஙனம் அமைக்கலாம் ?

கிளாக்கன் : எத்தகைய பொய்க் கூற்று ?

சாக்ரடீஸ் : புதியதொன்றுமில்லை. இது பழையதொரு பினீசிய[1] நாட்டுக்கதை தான். கவிஞர்கள் சொல்லும் வகையில் இது நமது காலத்தில் நடக்கவில்லையெனினும் முன்னர் பல்வேறிடங்களில் அடிக்கடி உண்மையாகவே நடந்ததாகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய நிகழ்ச்சி மீண்டும் நிகழுமா என எனக்குத் தெரியாது. அப்படி நேர்ந்தாலும் நடக்கக் கூடியதுதான் என்று நம்பலாமா என்றும் தெரியாது.

கிளாக்கன் : உங்கள் சொற்கள் வாயினின்றும் வெளிவர எத்துணைத் தயங்குகின்றன ?

சாக்ரடீஸ் : நான் சொல்லி முடித்ததும் என்னுடைய தயக்கத்தைக் கண்டு நீ ஆச்சரியப்பட மாட்டாய்.

கிளாக்கன் : சொல்லுங்கள், அஞ்ச வேண்டாம்.

---

1. Phoenician

சாக்ரடீஸ் : நன்று. அப்படியாயின் முதலில் ஆட்சியாளர்களுக்கும், பிறகு போர் வீரர்களுக்கும், இறுதியில் மக்களுக்கும் நான் மெல்ல மெல்லச் சொல்ல விரும்பும் துணிவுமிக்கப் புனை கதையை எந்தச் சொற்களையிட்டுச் சொல்லுவது, எவ்வாறு உன் முகத்தைப் பார்ப்பது, என்று எனக்குத் தெரியவில்லை. எனினும் கூறுகின்றேன். அவர்களது இளமை ஒரு கனவென்றும், நம்மிடமிருந்து அவர்கள் பெறும் கல்வியும் பயிற்சியும் ஒரு வெளித்தோற்றமே தவிர வேறில்லை என்றும், நாம் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். எங்கே அவர்களும் அவர்களது ஆயுதங்களும் தயாரிக்கப் படுகின்றனவோ அதே பூமிதேவியின் கருப்பையிலேயே அவர்கள் உருவாக்கப்பட்டு உணவு அளிக்கப் பெறுகின்றனர். மேலும் அவர்கள் நன்கு உரு எடுத்தவுடன் அவர்களது அன்னையான பூமி அவர்களை வெளியே அனுப்புகிறாள். எனவே அவர்களது தாய்நாடே அவர்களுக்கு அன்னையும், செவிலியுமாக விளங்குகின்றபடியால் அவர்கள் தம் நாட்டின் நலனுக்காக ஆவன செய்து, அன்னியரிடமிருந்து நாட்டைக் காக்கவும் கடமைப்பட்டுள்ளனர். அவர்கள் நாட்டுமக்களை நாட்டின் குழந்தைகளாகவும், தமது சோதரர்களாகவும் கருதவேண்டும்.

கிளாக்கன் : நீங்கள் சொல்ல இருந்த பொய்யைக்கூற வெட்கப் பட்டதற்குத் தக்க காரணம் உங்களுக்கு இருந்திருக்கிறது.

சாக்ரடீஸ் : உண்மை. ஆனால் இன்னமும் இருக்கின்றது. நான் கூறியது ஒரு பாதிதான். நமது கதையில் குடிமக்களுக்கு, ''குடிமக்களே'' நீங்கள் சகோதரர்கள் எனினும், கடவுள் உங்களைப் பலபடியாகப் படைத்திருக்கிறார்கள் என்று சொல்லுவோம். உங்களில் சிலர் ஆட்சி செலுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்கிறீர்கள். அந்தச் சிலரின் படைப்பில் கடவுள் தங்கத்தைக் கலந்திருக்கிறார். ஆகவே அவர்களுக்கு மிக்க கௌரவம் உண்டு. சிலரை வெள்ளியால் ஆக்கிப் படைஞர்களாக அமைத்துள்ளார் ; அவர்கள் உதவியாளர்கள். மற்றும் சிலரைப் பித்தளையாலும் இரும்பாலும் அமைத்து உழவர்களாகவும் தொழில் வல்லவர்களாகவும் செய்துள்ளார். பொதுவாக இப்பிரிவுகள் மரபு வாயிலாகவே தொடர்ந்து வரும். ஆனால் எல்லோரும் ஒரே இனத்தினின்றும் தோன்றியவர்களாதலால், தங்க இனத்தைச்

சார்ந்த பெற்றேருக்குச் சில சமயங்களில் ஒரு வெள்ளியான மகனும், அல்லது வெள்ளியினப் பெற்றேருக்குத் தங்க மகனும் தோன்றலாம். இனத்தூய்மையைப் பொறுப்புடன் காப்பதைக் காட்டிலும் சிறந்ததொரு கடமையேதும் அவர் களுக்கில்லை; அன்றி மிகவும் கருத்துடன் காப்பதற்கு வேறென்றுமில்லை என்று ஆட்சியாளர்களுக்குக் கடவுள் பணித்துள்ளார். தங்களது வழித்தோற்றங்களில் எவர் எந்தெந்த இனங்கள் கலப்புள்ளவர் என அவர்கள் கவனிக்க வேண்டும். ஒரு தங்க அல்லது வெள்ளியினப் பெற்றேரின் மகனிடத்தே பித்தளையும் இரும்பும் கலந்திருந்தால் உயர்வு தாழ்வு மதிப்பை மாற்ற வேண்டுமென இயற்கை வலியுறுத்து கின்றது. இதை ஆட்சியாளர்கள் அனுதாபக் கண் கொண்டு பார்க்கக் கூடாது. அக்குடிமகன் வாழ்வு வரிசை யில் உழவனுகவோ அன்றித் தொழிலாளியாகவோ கீழிறங்க வேண்டியிருக்குமென்று வருந்தக்கூடாது. இதேபோல் தங்கம் அல்லது வெள்ளி இனம் கலந்துள்ள குழந்தைகள் தொழிலாளிகள் மரபில் தோன்றியிருப்பினும் அவர்களை மேற்பதவிக்கு உயர்த்தி ஆட்சியாளர்களாகவோ படைஞர்க ளாகவோ ஆக்கவேண்டியிருக்கும். ஏனெனில் பித்தளை அல்லது இரும்பு இன மனிதன் ஒரு நாட்டை ஆண்டால் அந்நாடு ஒழிந்துவிடும் என அசரீரி கூறுகின்றது. இதுவே நான் கூறவந்த கதை. இதை நமது குடிமக்கள் நம்புமாறு செய்வதற்கு ஏதேனும் வழி உண்டா?

கிளாக்கன்: இந்தத் தலைமுறையில் இதைச் சாதிக்க வழி யொன்றுமில்லை. ஆனல் ஒருவேளை இத்தலைமுறையினது குழந்தைகளும் அவர்களது புதல்வர்களின் புதல்வர்களும் அவர்களின் சந்ததியாரும் இக்கதையை நம்புமாறு செய்யக் கூடும்.

சாக்ரடீஸ்: அதிலுள்ள துன்பத்தை நான் உணர்கிறேன். ஆயினும் அத்தகைய கொள்கையை ஆதரிப்பதால் அது நகரின் முன்னேற்றத்தையும் பாதுகாவலையும் கவனிப்ப துடன் பரஸ்பர நலத்தையும் அவர்கள் பேணும்படிச் செய் யும். இப்புனைகதை வதந்தியெனும் இறக்கையுடன் வெகு தூரம் பரவும். ஆகவே இதுபோதும். இப்புவியில் பிறந்த நம் வீரர்களைப் போர்க்கோலம் பூணச் செய்து ஆட்சியாளர் களின் தலைமையில் அழைத்துச் செல்வோம். உள்நாட்டில்

அவர்களுக்கு யாரேனும் கீழ்ப்படிய மறுத்தால் அக்கல கத்தை அறவே அடக்குவதற்கும், ஓநாய்கள் ஆட்டுக் கூட்டத்தைத் திடீரெனத் தாக்குவதுபோலத் தாக்கும் அன்னியப் பகைவரிடமிருந்து நாட்டைக் காப்பதற்கும் ஏற்ற இடத்தைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் அவ்விடத்தில் குடிபோகட்டும்; அதன்பின் உரிய தெய்வங்களுக்குப் பலி யிட்டுத் தமது குடியிருப்பை அமைக்கட்டும்.

கிளாக்கன்: அப்படியே செய்யட்டும்.

சாக்ரடீஸ்: அவர்களுடைய இல்லங்கள் கார்காலத்துக் குளிரி னின்றும், கோடையின் வெப்பத்தினின்றும் அவர்களைக் காக்கக்கூடியதாயிருக்க வேண்டும்.

கிளாக்கன்: நீங்கள் 'வீடுகளைப்' பற்றிக் கூறுகின்றீர்கள் என நினைக்கிறேன்.

சாக்ரடீஸ்: ஆம், ஆனால் அவை வீரர்களது வீடுகளாக இருக்க வேண்டுமேயன்றி அங்காடிக்காரர்களது வீடுகளாக இருக்கக் கூடாது.

கிளாக்கன்: ஆம். அவ்விரண்டுக்கும் என்ன வேறுபாடு?

சாக்ரடீஸ்: அதை விளக்க முயலுகிறேன். நன்கு பழக்கப் படாததனாலோ பசியினாலோ அல்லது ஏதேனுமொரு தீய பழக்கத்தினாலோ, காவல் புரியும் நாய்கள், ஆடுகளைத் தாக்கி, அவற்றைத் துன்புறுத்தி, நாய்களைப் போலின்றி ஓநாய் களைப் போன்று நடந்துகொண்டால், அத்தகைய நாய்களை வைத்திருப்பது ஆட்டிடையனுக்குத் துன்பமானதும் கொடியதுமாகுமல்லவா?

கிளாக்கன்: உண்மையில் பயங்கரமானதுதான்.

சாக்ரடீஸ்: ஆகவே, குடிமக்களைக் காட்டிலும் வலிமையுள்ள வர் என்ற காரணத்தினால் நமது படைவீரர்கள் அளவுக்கு மிஞ்சி வலிமை பெற்று மக்களின் நண்பர்களாகவும் கூட் டாளிகளாகவுமின்றிப், பயங்கரக் கொடுங்கோலர்களாக மாறிவிடாமல் இருக்கும்படி நாம் விழிப்புடன் கவனித்துவர வேண்டும்.

கிளாக்கன்: ஆம், மிக்க விழிப்புடன் இருக்கவேண்டும்.

சாக்ரடீஸ்: உண்மையிலேயே நல்ல கல்வி சிறந்த பாதுகாப்பை அளிக்காதா?

கிளாக்கன் : ஏன்? அவர்கள் முன்னரே நன்முறையில் கல்வி பயின்றுவிட்டார்களே.

சாக்ரடீஸ் : என் அருமைக் கிளாக்கனே! எனக்கு அதில் முழு நம்பிக்கையில்லை. ஆனால் அவர்கள் நன்கு கல்வி பெற வேண்டுமென்பதில் எனக்கு மிக நம்பிக்கை உண்டு. உண்மையான கல்வி, அது எத்தகையதாயிருப்பினும் அவர்கள் ஒருவரோடொருவர் கொள்ளும் உறவிலும், தங்கள் பாதுகாப்பிலுள்ளோர்களோடு கொள்ளும் தொடர்பிலும் அவர்களை அன்புடையராகவே இருக்கச் செய்யும் என்பதிலும் எனக்கு மிக்க நம்பிக்கையுண்டு.

கிளாக்கன் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : அவர்களுடைய கல்விமட்டுமல்லாது அவர்களது உறைவிடங்களும், உடைமைகளனைத்தும், காவலர்களாக இருக்க உதவும் பண்புகளை அழித்துவிடாமலும், மற்றைக் குடிமக்களைச் சூறையாடத் தூண்டிவிடாமலும் இருக்கத் தக்கனவாக அமையவேண்டும். அறிவுள்ள எவனும் இதை ஒத்துக்கொள்வான்.

கிளாக்கன் : ஆம், ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

சாக்ரடீஸ் : அவர்களைப் பற்றிய நமது குறிக்கோளை அவர்கள் அடைய வேண்டுமாயின், தங்கள் வாழ்க்கையை எவ்வாறு நடத்தவேண்டும்? என்பதை இனி ஆராய்வோம். முதற்கண் அவர்களில் எவனும், மிக இன்றியமையாததைத் தவிர, தனக்கெனச் சொத்து ஒன்றும் வைத்திருக்கக் கூடாது. உள்ளே வர விரும்பும் எவனுக்கும் இடமளிக்காது தனக்கே உரியதென்ற பண்டம் சேமித்து வைக்கப்பட்ட இடத்தையோ அன்றி வீட்டையோ வைத்திருப்பதும் தகாது. சீரான வாழ்வும் துணிவும் கொண்ட நல்ல பயிற்சி பெற்ற போர்வீரர்களுக்கு அவர்கள் பயிற்சி பெறுமளவிற்கே தேவையான உணவுப் பொருள்கள் வைத்திருக்கப்பட வேண்டும். ஆண்டுச் செலவுக்கு எவ்வளவு போதுமோ அந்தத் தொகையை மட்டில் நிரந்தரமான ஊதியமாக மக்களிடமிருந்து பெற இசையவேண்டும். பொது விடுதியில் உணவருந்திப் பாசறையில் படைவீரர் இருப்பதுபோல் கூடிவாழ்வர். தங்கம் வெள்ளி இனப் பண்புகளைக் கடவுளிடமிருந்து முன்பே அவர்கள் பெற்றுவிட்டனர் என நாம் அவரிடம் சொல்வோம். தெய்வீக உலோகங்கள் அவர்களிடம் உள்ளதால்,

மக்களிடையே நிலவும் புவி உலகக்கலப்பு உலோகங்கள் அவர் களுக்குத் தேவையில்லை. ஏனெனில் அவர்களுக்குரிய இயற்கை மாசின்றி உள்ளது, ஆனால் இவ்வுலகில் தங்கமும் வெள்ளியும் புனிதமற்ற பல செயல்களுக்குக் காரணமாயுள் ளன. குடிமக்கள் அனைவரிலும் அவர்கள் மட்டும் தங்கத் தையோ அன்றி வெள்ளியையோ கையாளக் கூடாது. அவை இருக்குமிடத்திலேயே இருக்கலாகாது. அவற்றாலான பொருள்களைக் கையாளக்கூடாது. இதுவே அவர்கள் உய் யும் வழி; அவர்களே நாட்டை நன்கு காப்பர். இவ்வழியை விட்டு அவர்கள் தமக்கென வீடு, நிலம் அல்லது பொருளை ஈட்டினால், காவலர்களின் தன்மையை இழந்து, குடிக்கூலிக்கு வீடு அளிப்பவராகவும், உழவர்களாகவும் மாறுவர். ஏனைய குடிகளுக்கு நண்பர்களாக இராது பகைவர்களாகவும், கொடுங்கோலர்களாகவும் ஆவர். அந்நிலையில் வெறுத்தும் வெறுக்கப்பட்டும், சதி செய்தும், சதிக்காளாகியும், அன்னி யப் பகைவர்களைக் காட்டிலும் உள்நாட்டுப் பகைவர்களுக் குப் பெரிதும் அஞ்சியும், தம் வாழ்வு முழுவதையும் கழிப் பர். அவர்களுக்கும் நாட்டிலுள்ள ஏனையோர்க்கும் அழிவுக் காலம் நெருங்கிவிடும். இக்காரணங்களையெல்லாம் கருதியே நாம் நமது அரசு இவ்வகையில் அமைக்கப்பட வேண்டும் என்றும், காவலர்களது வீடுகளையும் மற்ற விஷயங்களையும் பற்றி அவர்களுக்கு இவைதான் நாம் இடும் விதிகள் என் றும் சொல்ல வேண்டுமல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

நான்காம் புத்தகம்

அதைமாந்தஸ் இவ்விடத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார். "சாக்ரடீஸ்! இந்த மக்களின் துன்பத்திற்கு நீங்களே காரணம், மேலும் அவர்தம் மகிழ்ச்சியற்ற நிலைக்கு அவரே காரணம். உண்மையில் நகரானது அவர்களுக்கே உடைமையாயிருந்தும், அவர்கள் உயர்வு ஏதும் எய்தவில்லை, மற்றவர்களோ எனின், நிலங்களை வாங்கி, பெரிய அழகான வீடுகளைக் கட்டி, தமதுடைமை எல்லாவற்றிலும் பொலிவு நிறையப் பெற்றுள்ளனர், தெய்வங்களுக்குத் தாமே பலிகளை இடுகின்றனர்; விருந்தோம்பலைத் தமது வழக்கமாகக் கொண்டுள்ளனர், மேலும் இப்பொழுது நீங்கள் சொல்லியது போன்று அவர்களிடம் வெள்ளியும் பொன்னும் உள்ளன, அதிர்ஷ்டமுள்ளோரிடம் பொதுவாக உள்ள அனைத்தும் அவர்கள்பால் உள்ளன. ஆனால் நமது ஏழைக் குடி மக்களோ, நகரில் என்றும் காவல் செய்யும் கூலிப் படையினரைக் காட்டினும் உயர்வு ஏதும் பெறவில்லையே? என உம்மிடம் ஒருவன் சொன்னால் என்ன பதில் சொல்லுவீர்கள்?

சாக்ரடீஸ்: ஆம், இதுமட்டுமா, அவர்களுக்கு உணவு ஒன்றுதான் அளிக்கப்படுகிறது; மற்றவர்களைப் போன்று உணவுடன்கூட ஊதியம் அளிக்கப்படவில்லை. ஆதலால் அவர்கள் விரும்பினால்கூட ஓர் உல்லாசப் பயணமும் செய்ய முடியாது. உலகில் இன்ப வாழ்வென எண்ணக்கூடிய சிற்றின்பத்திலோ—வாழ்க்கையிலோ ஈடுபட்டுச் செலவு செய்யப் பணமில்லை; இன்னும் இத்தகைய வேறு பல குற்றச்சாட்டுக்களையும் சேர்த்துக் கொள்ளலாமே.

அதைமாந்தஸ்: ஆயின் இவை யாவுமே குற்றச்சாட்டில் சேர்ந்தவை எனவே கொள்வோம்.

சாக்ரடீஸ்: இதற்கு நமது பதில் என்ன என்று கேட்க நினைக்கிறீர்கள் அல்லவா ?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: நாம் நமது பழைய வழியிலேயே சென்றால், விடை காணலாம் என்பது என் நம்பிக்கை. நமது விடை யாதாக இருக்குமெனின், நமது பாதுகாவலர்கள் அவர்கள் இப்பொழுது உள்ள நிலையிலேயே மிகவும் இன்பமிக்கவர்களாக இருப்பார்கள் என்பதே; மேலும் நாம் ஓர் அரசினைத் தோற்றுவிப்பதன் நோக்கம் ஏதாவது ஒரு வகுப்பினரின் பெருத்த இன்பத்திற்கு என்பதல்ல; ஆனால் எல்லோரும் ஒருங்கே பெறத்தக்க பேரின்பமேயாம். எல்லோர்க்கும் நன்மையளிக்கும் நோக்குடன் வகுத்த ஓர் அரசிலேயே நாம் நீதியை நன்கு காணுதல் சாத்தியமென்றும், நன்கு வரையறுக்கப்படாத அரசியலில் அநீதியே காணக்கூடும் என்றும் நாம் நினைத்தோம். அப்படித் தோற்றுவித்த பின்னர், எது அதிக இன்பம் பயக்கக்கூடியது என்று நாம் தீர்மானிக்கலாம். இப்பொழுது இன்பமிக்க ஓர் அரசினையே சிறிது சிறிதாக அல்லாது, முழுமையாக உருவாக்கி வருகிறோம் என நினைக்கிறேன். மக்களில் ஒரு சிலரை மட்டும் இன்புறச் செய்யாமல், எல்லோர்க்கும் இன்பம் பயக்குமொன்றே உருவாக்கப்படுகிறது. சீக்கிரத்தில் நாம் இதற்கு நேர் எதிரான அரசினைக் காண முற்படுவோம். நாம் ஒரு சிலைக்கு வண்ணமிடுகிறோம் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஒருவர் நம்மிடம் வந்து மிகவும் அழகான வண்ணங்களை உடலின் அழகான பாகங்களுக்கேற்ப ஏன் தீட்டக்கூடாது என்றும், கண்கள் பழுப்பாக இருக்கவேண்டும், ஆனால் நீங்கள் அவற்றைக் கருமையாக்கிவிட்டீர்கள் என்றும் கேட்டால் நாம் அவருக்கு "ஐயா, கண்கள் கண்களாக அமையாதபடி நாம் அழகுபடுத்த நீங்கள் விரும்பமாட்டீர்கள் அல்லவா ? என்றும் இன்ன இன்ன அவயவங்கட்கு இன்ன இன்ன பொருத்தமான விகிதத்தை அமைப்பதின் மூலம் நாம் முழுச் சிலையையும் அழகுபடுத்துகிறோம் அல்லவா என்றும் நியாயமாகச் சொல்லக்கூடும். ஆகவேதான், பாதுகாவலர்கள் தம் நிலையினின்றும் மாறுமளவிற்கு அவர்

களுக்குப் பொருந்தாத இன்பத்தை அளிக்கும்படி எங்களை வற்புறுத்தாதீர்கள், என்று நான் சொல்லுகின்றேன். ஏனெனில் நாங்கள்கூட எங்கள் விவசாயிகளுக்கு அரசாங்க உடை உடுத்துப், பொன்முடிகளைச் சூட்டி, அவர்கள் எவ்வளவு நிலத்தைப் பண்படுத்த விழைவரோ அவ்வளவே உழும்படிக் கூறக்கூடும்; மேலும் நமது குலாலர்களை மஞ்சங்களில் இளைப்பாறச் செய்து, கணப்பின் அருகே இருந்து உண்டு, மதுக்கோப்பையையும் தங்களிடையே பரிமாறிக் கொண்டு தம் கைக்கெட்டும்படி அமைந்த சக்கரங்களைச் சுற்றி அவர் தாம் விரும்பும் விருப்பப்படியே மண்பாண்டங்கள் செய்யச் சொல்லிவிடலாம். இங்ஙனமே ஒவ்வொரு வகுப்பினரையும் இன்புறச் செய்துவிடலாம். அதன் பிறகு நாடு முழுதும் நீர் நினைப்பது போன்று இன்பம் நிலவும். ஆனல் இந்த எண்ணத்தை எனது மனத்தில் போடவேண்டாம். ஏனெனில் உமது சொல்லைக் கேட்டால் விவசாயி ஒரு போதும் விவசாயியாக இருக்கமாட்டான். குயவன் குயவனுக விளங்கமாட்டான். நாட்டில் ஒருவரும் குறிப்பிட்ட ஒரு வகுப்பினரின் குணங்களும் கொண்டிருக்கமாட்டார்கள். சக்கிலியர் சமூகத்தில் மட்டும் சமூக ஊழலும், தமக்கு இல்லாத நிலையை இருப்பது போன்று பாசாங்கு செய்தலும் அதிகமாக இருப்பின், இந்நிலை பெரிதும் பாதிக்காது. ஆனல் நீதியையும், அரசையும் பாதுகாப்பவர்கள் உண்மையில் பாதுகாவலராக இராமல், பார்வைக்குமட்டுமே அவ்வாறு இருப்பார்களானல், அப்போது அவர்கள் எவ்வாறு ஆட்சியைத் தலைகீழாக மாற்றிவிடுகின்றனர் என்பதைக் காண்பாய். நாட்டிற்கு ஒழுங்கையும் இன்பத்தையும் கொடுக்கக்கூடிய திறமை அவர்களிடம் மட்டுமே—உண்மையான காவலர்களிடமே உள்ளது. ஆகவே நமது காவலர்கள் நாட்டினை அழிப்பவர்களாக இராமல், உண்மையைக் காப்பவர்களாக இருக்கவேண்டும், என நாம் விரும்புகிறேம். நம்மை எதிர்ப்பவர்களோ நாட்டிற்குத் தத்தம் கடமைகளைச் செய்யும் குடிகளை எண்ணுமல், விழாக்களில் ஈடுபட்டு, கும்மாளம் போடும் குடியானவர்களையே காவலர்கள் என எண்ணுகின்றனர். அப்படியானல், இந்நிலையிலே நாம் வெவ்வேறு பொருள்களை நினைத்துப் பேச வேண்டியுள்ளது. அவர்கள் அரசைப் பற்றிப் பேசாது வேறு ஏதோ ஒன்றைப் பற்றிப் பேசுகிருர்கள். ஆகவே, நாம் பாதுகாவலர்களை நிய

மிக்குங்கால், அவர்களது தனிப்பட்ட சிறந்த இன்பத்தைக் கருதவேண்டுமா அன்றி இன்பத்தின் தத்துவம் அரசு முழுதும் இணைந்திருக்க வேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டும். பின் கூறப்பட்டது உண்மையானுல், பாதுகாவலரும், உதவியாளரும் இன்னும் அவர்களையொத்த அனைவரும் தத்தம் அலுவல்களைச் சிறந்த முறையில் செய்யும்படிக் கட்டாயப்படுத்தவோ அன்றித் தூண்டப்படவோ வேண்டும். இவ்வாறு நாடு முழுவதும் உயர்ந்த முறையில் வளர்ந்து, வெவ்வேறு இனங்களும் தமக்கு இயற்கையான அடிப்படையில் தத்தமக்குரிய இன்பத்தைப் பெறும்.

அதைமாந்தஸ் : நீர் கூறுவது முற்றிலும் சரியென்றே எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ் : மற்ருேர் எண்ணம் எனக்குத் தோன்றுகிறது. அதை ஒத்துக்கொள்வீர்களா ?

அதைமாந்தஸ் : அது என்னவோ ?

சாக்ரடீஸ் : அதாவது, கலைகள் கேடுற இரு காரணங்கள் இருப்பனபோன்று தோன்றுகின்றது.

அதைமாந்தஸ் : அவை எவை ?

சாக்ரடீஸ் : செல்வமும், வறுமையும்தான்.

அதைமாந்தஸ் : அவை எப்படிக் காரணமாகின்றன ?

சாக்ரடீஸ் : நிலைமை கெடுவது பின்வருமாறு : ஒரு குயவன் பணக்காரன் ஆனபிறகு, அவன் முன்போலவே தனது கலையில் ஈடுபட்டு உழைப்பான் என நீ நினைக்கிருயா ?

அதைமாந்தஸ் : ஒருபோதும் மாட்டான்.

சாக்ரடீஸ் : அவன் மேன்மேலும் சோம்பேறியாகவும், கவனமற்றவனுகவும் மாறிவிடுகிருன்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அதன் பயன், அவன் மட்டமான குயவனுகிருன்.

அதைமாந்தஸ் : ஆம், அவன், தரத்தில் குறைந்து விடுகிருன்.

சாக்ரடீஸ் : ஆனுல், மறுபுறத்தில், அவனிடம் பணமில்லாவிடின் தனக்குத் தேவையான கருவிகளை வாங்கமுடியாமற் போகும், அவன் உழைக்க முடியாதவனுகிருன். அத்துடன் தன் மக்களுக்கோ, அல்லது தன்னிடம் தொழில் பயில்வோருக்கோ, நன்ருகத் தொழில் கற்பிக்கவும் முடியாது.

அதைமாந்தஸ் : ஆம், உறுதியாக முடியாது.

சாக்ரடீஸ் : எனவே, ஏழ்மையிலும் செல்வநிலையிலும் தொழிலாளரும் அவரது தொழிலும் நலிவடையக்கூடும் அல்லவா?

அதைமாந்தஸ் : இது கண்கூடு.

சாக்ரடீஸ் : ஆகவே, இதோ இப்பொழுது நாம் கண்ட இப் புதிய கேடுகளைப் பாதுகாவலர்கள் கவனித்து எதிர்க்க வேண்டும், இல்லாவிடில் அவை நாமறியாதபடி நகருக்குள் மெதுவாக நுழைந்துவிடும்.

அதைமாந்தஸ் : எந்தக் கேடுகள்?

சாக்ரடீஸ் : அவைதாம், செல்வமும் வறுமையும். ஒன்று ஆடம்பரத்திற்கும் சோம்பலுக்கும் பிறப்பிடம்; மற்றொன்று அற்பத்தனத்திற்கும் தீயகுணங்கட்கும் ஆதாரம்; இரண்டும் அதிருப்திக்குக் காரணங்கள்.

அதைமாந்தஸ் : அது மிகவும் சரியே, ஆனால் நான் ஒன்று அறிய விரும்புகிறேன், சாக்ரடீஸ்! போர் புரிய வசதிகளை—பொருள், தளவாடம், படைகளை—இழந்த நம் நகரமானது, செல்வமும் திறனுமிக்க விரோதியை எங்ஙனம் எதிர்த்துப் போரிட இயலும்?

சாக்ரடீஸ் : அப்படிப்பட்ட பகைவனிடத்தே ஒருவன் போர் புரிதல் சிரமம்தான். ஆனால் எதிரிகள் இருவராக இருப்பின், அந்த இன்னல் இராது.

அதைமாந்தஸ் : அது எங்ஙனம்?

சாக்ரடீஸ் : முதலாவது நாம் சண்டை செய்யுங்காலை, நமது பக்கத்தில் பழக்கப்பட்ட வீரர்கள், செல்வந்தர்களாலான படை ஒன்றுக்கு எதிராகப் போரிடுவர்.

அதைமாந்தஸ் : ஆம், உண்மை.

சாக்ரடீஸ் : தன்தொழிலில் தேர்ந்து சிறந்த ஒரு மல்லன், மற்போர் வீரர் அல்லாத இரு பருத்த பணக்காரச் சீமான்களுக்கு ஈடுகொடுக்க முடியும் என நீ எண்ணவில்லையா, அதைமாந்தஸ்?

அதைமாந்தஸ் : அவனுக்கு எதிராக இருவரும் ஒரே சமயத்தில் பாய்ந்து வந்தால், அவர்கட்கு இணையாவது கடினம் அன்றோ?

சாக்ரடீஸ் : இல்லை. ஏன் முடியாது? முதலில் அவன் ஓடி விட்டுப் பிறகு திரும்பிவந்து முதலில் தன்னை எதிர்த்தவனை

அடிக்கமுடியுமல்லவா ? இப்படியே அவன் நல்ல வெயிலில் பலமுறையும் செய்தால் அவன் மற்போரில் தேர்ந்தவனுகை யால் ஒன்றுக்கு மேற்பட்ட பல பருத்த மனிதர்களைக் கவிழ்க்க (முறியடிக்க) முடியுமல்லவா ?

அதைமாந்தஸ் : உண்மையே, இதில் வியக்கத்தக்கது ஒன்று மில்லையே.

சாக்ரடீஸ் : ஆனல், போர் வீரனுக்குரிய திறமைகளைவிட மற்போர் பற்றிய அறிவிலும் பயிற்சியிலும் ஒருவேளை பணக்காரர்கள் தேர்ந்தவர்களாக இருக்கலாம்.

அதைமாந்தஸ் : ஓரளவு சாத்தியமே.

சாக்ரடீஸ் : ஆகவே, நமது வீரர்கள் தங்களைப்போல் இரண்டு அல்லது மூன்றுமடங்கு அதிக எண்ணிக்கை உள்ளவர்களுடன் போரிட முடியும், அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், அதை ஒத்துக்கொள்கிறேன் ; நீர் நினைப்பது சரியே.

சாக்ரடீஸ் : போரில் இறங்குவதற்கு முன்பு நமது நகரமக்கள் தமது இரு எதிரிகளில் ஒருவருக்குத் தூதுவரை அனுப்பி எங்களிடம் பொன்னும் வெள்ளியும் இல்லை ; அவற்றை வைத்துக்கொள்ள எங்கட்கு அனுமதியும் இல்லை. ஆனல் உங்கட்கு உரிமையுண்டு. ஆகவே நீங்கள் வந்து எங்களுக்குப் போரில் உதவி, அந்த எதிரியின் நகரிலிருந்து கிடைக்கும் பொருள்களைக் கொள்ளுங்கள், என்று சொன்னல் இதைக்கேட்ட யார்தான் குச்சியென மெலிந்த நாய்களைத் தம்பக்கம் கொண்டு, எதிர்ப்புறம் பருத்துக் கொழுத்த இளம் ஆடுகளோடு சண்டையிடுவதை விடுத்து, அம்மெலிந்த நாய்களை எதிர்க்க முற்படுவர் ?

அதைமாந்தஸ் : அது அவ்வாறு நேராது. ஆயினும் பல அரசுகளின் செல்வம் ஒரு நாட்டிற்குள் சேர்க்கப்பட்டால் ஏழை நாட்டிற்கு அதனல் அபாயம் வரலாம் அல்லவா ?

சாக்ரடீஸ் : அரசு எனும்சொல்லை நமது அரசினைத்தவிர ஏனைய பலவற்றிற்கும் பயன்படுத்தியதைக் காண நான் வியப்படைகிறேன்.

அதைமாந்தஸ் : ஏன் அப்படி ?

சாக்ரடீஸ் : மற்ற அரசுகளைக் குறிப்பிடும்போது அவற்றைப் பன்மையில் குறிக்கவேண்டும் ; அவற்றில் ஒன்றுகூடத்

தனி நகரமல்ல; ஆனால் பலநகரங்கள் (விளையாட்டில் சொல்வதுபோல்). ஏனெனில் உண்மையாகவே எந்த ஒரு நகரமும் எவ்வளவு சிறியதாயிருந்தாலும், இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஒன்று ஏழைகள் நகரம்; மற்றொன்று பணக்காரரின் நகரம். இவை ஒன்றோடொன்று போரிடுகின்றன. இன்னும் அவை ஒவ்வொன்றிலும் பல சிறிய பகுதிகள் உள்ளன. ஆகவே அவற்றை அரசு என்று குறிப்பது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது. ஆனால் நீ அவற்றைப் பலவாகக் கொண்டு, அவற்றில் ஒன்றனது செல்வம், திறமை, ஆட்கள் ஆகியவற்றை மற்றதற்குக் கொடுப்பாயானால், உனக்குப் பல நண்பர்கள் ஏற்படு வார்கள்; விரோதிகள் அத்துணை இருக்கமாட்டார்கள். உனது நாடு, தற்பொழுது விதித்துள்ள அறிவுமிக்க பல விதிகளைத் தொடர்ந்து பின்பற்றினால், எல்லா நாடுகளிலும் மிகச் சிறந்து விளங்கும் - புகழிலோ அல்லது தோற்றத் திலோ அல்ல; ஓர் ஆயிரம் நாடுகாப்போருக்கு மேல் இல்லாவிடினும், அது செயலிலும் உண்மையிலும் சிறந்து விளங்கும். மேலும் ஹெல்லனீசு மக்களிடையோ அல்லது நாகரிகமற்றவர்களிடையோ, அதனளவுக்குப் பெரிதாகவோ அன்றிப் பலமடங்கு பெரிதாகவோ பல இருப்பினும், இவ் வரசுக்கொப்பானதொன்றைக் காணல் அரிது.

அதைமாந்தஸ் : இது மிகமிக உண்மை.

சாக்ரடீஸ் : நம்மை ஆளுபவர் அரசின் பரிமாணத்தையும், நாட்டின் பரப்பையும் பற்றிச் சிந்திக்கும்போது, அவர் களுக்கு எவ்வளவு வரை இருக்கலாம், அதற்கு மீறக்கூடாது, என்று சொல்லலாம்?

அதைமாந்தஸ் : எந்த வரையறையைத் தாங்கள் கூறுவீர்கள்?

சாக்ரடீஸ் : துண்டுபடாது ஒன்றாய் இருக்கக் கூடிய அளவிற்கு நாடு விரிவதை நான் அனுமதிப்பேன். அதுவே சரியான வரையறை என நான் கருதுகிறேன்.

அதைமாந்தஸ் : மிக நன்று.

சாக்ரடீஸ் : எனவே, இது நமது காவலர்க்கு அறிவிக்க வேண்டிய மற்றொரு வரையறை ஆகும் : நமது நகரானது பெரியதென்றோ அன்றிச் சிறியதென்றோ ஆகாது தன்னிறைவு பெற்று இயங்கக்கூடிய ஒன்றென இருத்தல் வேண்டும்.

அதைமாந்தஸ் : இது உண்மையில் அவர்கட்கு விதிக்கப்படும் கடுமையான கட்டளையாகாது.

சாக்ரடீஸ் : நாம் முன்பு பேசிய ஒன்று இதைவிட எளிதானது. அதாவது பாதுகாவலரின் சந்ததியினர் தரக்குறைவாக இருப்பின் மட்டரகம் என ஒதுக்கிவிடுவதும், கீழ்த்தர வகுப்பினரின் பிள்ளைகள் இயற்கையாகவே தரமுயர்ந்து இருப்பின் அவர்களை உயர்த்துவதும் தான். இதன்கருத்து யாதெனின், ஒவ்வொரு குடிமகனும் இயற்கை எதற்கெனக் கருதி அமைத்துள்ளதோ அதற்கே பயன்படுத்தப்படல் வேண்டும். ஒவ்வொருவரும் தனக்குரிய ஒரு வேலையைச் செய்வான். அவனவன் தன் வேலையைக் கவனிக்குங்கால், ஒரு தனி மனிதனுகவே திகழ்வானேயன்றிப் பலர் என்று இருக்கமாட்டான். ஆகவே முழு நகரமும் பற்பலவாக இல்லாது ஒற்றுமை பெற்று, ஒருமைபெற்று விளங்க வேண்டும்.

அதைமாந்தஸ் : ஆம், அது அவ்வளவு கடினமில்லை.

சாக்ரடீஸ் : எனதருமை அதைமாந்தஸ், நாம் கொடுக்கும் சட்டதிட்டங்கள் அனைத்தும் அற்பமானவையே. பல, மிக உயர்ந்த கருத்துக்கள்போலத் தோன்றினும், உலக வசனப் படியான, ஒரு பெரிய செயலைக்குறித்துமட்டும் கவனம் செலுத்தப்படின், அவை அவ்வாறு தோன்ரு. இதைப் பெரிய காரியமென்று நான் குறிப்பிடமாட்டேன்; நமது நோக்கத்திற்குப் போதுமானது என்று வேண்டுமாளுல் கூறலாம்.

அதைமாந்தஸ் : அதுதான் என்ன?

சாக்ரடீஸ் : கல்வியும் வளர்ப்பும்தான். நமது குடிகள் நன்கு பயிற்றுவிக்கப்பட்டு, அறிவுள்ளவர்களாக வளர்ந்தால் இவை யாவற்றையும், நான் சொல்லாமல் விட்ட மற்றைக் காரியங் களையும் குறித்து, தங்கள் வழியைத் தாங்களே அறிந்து கொள்வார்கள். உதாரணமாக, திருமணம், பெண்களைக் கொள்ளுதல், பிள்ளைப்பேறு முதலிய யாவும் "நண்பர்கள் எல்லாவற்றையும் பொதுவாக வைத்துக்கொள்வர்" என்ற பழமொழி கூறுவதுபோல், ஒரு பொதுவான தத்துவ அடிப் படையினின்றும் தொடர்வதாகத் தெரிந்து கொள்வர்.

அதைமாந்தஸ் : அதுவே அவர்களைத் தக்க பாதையில் அமைப்பதாகும்.

சாக்ரடீஸ் : அரசாங்கம் நன்முறையில் தொடங்கிறைல், ஒரு சக்கரம்போன்று தன் விசையைப் பெருக்கிக் கொண்டு இயங்கும். ஏனெனில் நல்ல வளர்ப்பும், படிப்பும் நல்ல திட்டங்களை வேரூன்றிச் செய்கின்றன. இந்த நல்ல திட்டங்கள் நல்ல கல்வியில் வேரூன்றியுள்ள காரணத்தால், மேன் மேலும் உயர்வடைகின்றன. இந்த உயர்வே மற்ற விலங்குகளில் அவற்றின் தரம் உயர்வதுபோன்று, மனிதனின் தரத்தை உயர்த்தும் வகையில் செயல்படுகிறது.

அதைமாந்தஸ் : ஆம், அதுவும் சாத்தியமே.

சாக்ரடீஸ் : பிறகு எல்லாவற்றையும் தொகுத்துக் கூறுமிடத்து மற்றவற்றைவிடக் காவலரின் கவனம் முழுதும் இந்த விஷயத்தைக் குறித்தே ஈர்க்கப்படவேண்டும் ; அதாவது இன்னிசையும் உடற்பயிற்சியும் அவற்றின் சுயநிலை மாருமல் பாதுகாக்கப்பட வேண்டும் ; அவற்றில் புதிய முறைகளைப் புகுத்தலாகாது. தங்களாலியன்ற மட்டும் அவற்றை நிலை நிறுத்தப் பாதுகாவலர்கள் செயலாற்ற வேண்டும். மனித இனம் பாடகர் வைத்துள்ள புத்தம் புதிய பாட்டையே மதிக்கின்றது, என்று யாரேனும் கூறிஞல் அவர்கள் அவரது புதிய பாட்டை அல்ல, புதுரகப் பாட்டையே புகழுகிருர் போலும் என அஞ்சுவர். புதுமுறையைப் புகழுதல் கூடாது. அது கவிஞரின் கருத்தல்ல. ஏனெனில் இசையின் எந்தப் புதிய படைப்பும் நாடு முழுமைக்கும் அபாயத்தை அளிக்கும். ஆகவே அது தடுக்கப்படல் வேண்டும். சங்கீதத்தின் முறை மாறிஞல் அதோடு நாட்டின் அடிப்படைச் சட்டங்களும் எப்போதும் மாறிவிடுகின்றன என்று டாமன் சொன்ஞர். அதை முற்றிலும் நான் நம்புகிறேன்.

அதைமாந்தஸ் : ஆம், இக்கருத்துக்கு டாமனுடையவும் தங்களுடையவும் ஆதரவுடன் எனது ஆதரவையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

சாக்ரடீஸ் : ஆகவே, நமது பாதுகாவலர் தமது கோட்டையின் அஸ்திவாரத்தைச் சங்கீதத்திற் போடவேண்டும், அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், தாங்கள் குறித்த ஒழுங்கீனம் வெகு எளிதில் நாமறியாதபடி குடிபுகும் தன்மையதுதான்.

சாக்ரடீஸ் : ஆம், இனிய பொழுதுபோக்கு எனும் பெயரில் அது புகுந்துவிடுகிறது. முதற்பார்வையில் அது கேடற்றதாகக் காணப்படுகிறது.

அதைமாந்தஸ்: ஓரிடத்தில் புகும் இந்த நீதியின்மை, சிறிது சிறிதாக நாமறியாமல் நமது பழக்க வழக்கங்களிலெல்லாம் புகுந்து கொள்ளாதிருக்குமாயின் அதில் குற்றமில்லை. ஆனால், அப்படி ஆகிவிடுமானால், சாக்ரடீஸ்! அதுபெரும் திறங்கொண்டு வெளியாகி மனிதனுக்கும் அவனுக்கும் இடையேயுள்ள ஒப்பந்தங்களில் படையெடுத்துப் பிறகு சட்டங்கள், அரசியலமைப்புக்கள் ஆகியவற்றுள் தாறுமாறாகப் புகுந்து கடைசியில் தனியார் உரிமைகளையும் பொதுமக்களது உரிமைகளையும் ஒருங்கே தகர்த்தெறிந்து விடுகிறது.

சாக்ரடீஸ்: இது உண்மைதானே?

அதைமாந்தஸ்: அதுதான் எனது நம்பிக்கை.

சாக்ரடீஸ்: ஆகவே, நமது இளைஞர்கள் நான் கூறியபடி ஆரம்பமுதலே, ஒரு கட்டுப்பாடுள்ள முறையில் பயிற்றப் படல் வேண்டும். ஏனெனில் இனிய பொழுதுபோக்கானது சட்டவரம்பைக் கடந்துவிடின், வாலிபரும் சட்டத்தை மீறுவர். மேலும் அவர்கள் நன்கு நடத்தப்பட்டு நல்லொழுக்க முடைய குடிமக்களாக வளரமுடியாது.

அதைமாந்தஸ்: மிகவும் உண்மையான பேச்சு.

சாக்ரடீஸ்: நல்ல முறையில் விளையாட்டிலே தொடங்கி, இன்னிசையின் மூலம் நல்லொழுக்கமுறையில் பழக்கமாகக் கொள்வார்களானால், பிறகு அவர்களுடைய செம்மை நிறைந்த பழக்கம்—பிறரது சீர்கேடான விளையாட்டைப் போலன்றி—அவர்களது எல்லாச் செயல்களிலும் தொடர்ந்து வரும். அதுவே அவர்கள் வளர்ச்சியடைய உதவும் ஒரு தத்துவமாக இருக்கும். நாட்டில் எங்காவது வீழ்ச்சியிருப்பினும், அதுவே அவற்றைப் பழையபடி உயர்த்திவிடும்.

அதைமாந்தஸ்: முற்றிலும் உண்மையே.

சாக்ரடீஸ்: இவ்வாறு அவர்கள் கல்வி பயிற்றப்பட்டால், தங்களது முன்னோர்கள் அடியோடு விட்டுவிட்ட முக்கியமில்லாத நியமங்களை அவர்கள் தாங்களாகவே அமைத்துக் கொள்வர்.

அதைமாந்தஸ்: நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

சாக்ரடீஸ்: எங்ஙனம் இளைஞர்கள் முதியோர் முன் மௌனமாக இருக்கவேண்டுமென்பதையும், அவர்களுக்கு மரி

யாதை செலுத்தும் முறையையும், பெற்ரேருக்கு முன் நின்று, அமரவைத்து எப்படி அவர்களுக்குக் கௌரவம் அளிக்க வேண்டுமென்பதையும், என்ன உடுப்புக்கள், காலணிகள் அணிய வேண்டுமென்பதையும், தலை முடியை எவ்வாறு அணி செய்துகொள்ள வேண்டுமென்பதையும், இன்னும் பொதுவாக எவ்வாறு நடந்துகொண்டு பழகவேண்டும் என்பன போன்றவற்றையும் பற்றிக் குறிப்பிடுகிறேன். இதை நீ ஒப்புக்கொள்கிருய் அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : இவற்றைக் குறித்துச் சட்டமியற்றுவது அறிவுடைமையாகாது என நான் கருதுகிறேன். அவ்வாறு எப்போதாகிலும் செய்யப்பட்டதா என்பதே சந்தேகம். மேலும் அவற்றைக் குறித்துச் சட்டதிட்டங்கள் செய்யப்படினும், அவை நிரந்தரமாக நில்லா.

அதைமாந்தஸ் : ஒருபோதும் நில்லா.

சாக்ரடீஸ் : அதைமாந்தஸ் ! கல்வி ஒருவனை எவ்வாறு துலக்கி வைக்கிறதோ அதன்படியே அவனது எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என்று தோன்றுகின்றது. இனம் இனத்தைக் கவருகிறதில்லையா ?

அதைமாந்தஸ் : உண்மையிலேயே.

சாக்ரடீஸ் : நன்மையானதோ தீமையானதோ, அபூர்வமாயும் மிகச் சிறந்ததாயும் உள்ள ஒரு பயன் விளையும் வரையில் அல்லவா ?

அதைமாந்தஸ் : அது மறுக்கப் பெருதது.

சாக்ரடீஸ் : இக்காரணத்தால்தான் நான் அவற்றைப் பற்றிய கொள்கைகளையும் திட்டங்களையும் மேற்கொண்டு வகுக்க விழையவில்லை.

அதைமாந்தஸ் : அது இயற்கையே.

சாக்ரடீஸ் : இனி, பொதுச் சபைகளைப் பற்றியும், மக்களிடையே சாதாரணமாகத் தோன்றும் செயல் தொடர்புகள் பற்றியும், தொழிலாளர்பால் செய்யப்படும் ஒப்பந்தங்கள் பற்றியும், அவமதித்தல், கேடு விளைத்தலைப் பற்றியும், நீதி நிலையத்தில் விவகாரம் தொடங்குவது பற்றியும், நீதி வழங்கும் பஞ்சாயத்தாரை நியமிப்பது பற்றியும் நீ என்ன நினைக்கிருய் ? மற்றும் சந்தை, துறைமுகம் சம்பந்தப்பட்ட வரிகளை

நிர்ணயித்தல், வசூலித்தல் பற்றியும், விற்பனைத்தலங்கள் தாணுக்கள் துறைமுகங்கள் போன்றவற்றுக்கான வரையறைகளைப் பற்றிய பிரச்சினைகளும் எழக்கூடும். ஆனால், கடவுளே! இவை சம்பந்தமான சட்டமியற்றும் அளவுக்கு நாம் தாழ்ந்துபோக வேண்டுமா?

அதைமாந்தஸ்: அவற்றின் சம்பந்தமாகச் சட்டங்களை நல்ல மனிதர்கள்மீது சுமத்த வேண்டியதில்லை, என நான் நினைக்கிறேன். என்ன விதிகள் தேவை என்பதை விரைவில் அவர்களே கண்டுகொள்வர்.

சாக்ரடீஸ்: ஆம், நண்பனே, கடவுள் மட்டும் நாம் கொடுத்துள்ள சட்டங்களை அவர்களுக்குக் காப்பாற்றிக் கொடுப்பாரானால்.

அதைமாந்தஸ்: கடவுளின் கருணை இல்லாது முழு நிறைவினை அடையும் நம்பிக்கையில் அவர்கள் தம் சட்டங்களையும், வாழ்க்கையையும் தொடர்ந்து அமைத்துக்கொண்டும் மாற்றிக்கொண்டும் இருப்பர்.

சாக்ரடீஸ்: அவர்களைத் தன்னடக்கமற்று தமது மிஞ்சிய பழக்கங்களையே பற்றி நிற்கும் தீனருக்கு நீ ஒப்பிடுகிருயா?

அதைமாந்தஸ்: அப்படியே.

சாக்ரடீஸ்: ஆம், என்ன இன்பமான வாழ்வை அவர்கள் நடத்துகிருர்கள்! தமது சீர்கேடுகளுக்கு எப்பொழுதும் மருத்துவம் பார்த்துக்கொண்டும், அதனாலேயே தமது சிக்கல்களை அதிகமாகவும் மோசமாகவும் செய்துகொண்டும், எவரேனும் கூறும் ஆலோசனைப்படி ஏதாவது ஒரு கை மருந்தே தமது கோளாறுகளை எல்லாம் குணமாக்கும் எனக் கனாக்கண்டு கொண்டும் இருக்கிருர்கள்.

அதைமாந்தஸ்: அப்படிப்பட்ட நோயாளிகளுக்குள் இங்ஙன முள்ளோர் மிகவும் அதிகமாகக் காணப்படுவர்.

சாக்ரடீஸ்: ஆம், இதில் மற்ருேர் அழகான உண்மை யாதெனில், நினைத்தபடி உண்பதையும், குடிப்பதையும், கேலி செய்வதையும், சோம்பேறித்தனத்தையும் விடாவிட்டால் மருந்தோ, சூடுபோடுதலோ, மந்திரமோ, தாயித்தோ மற்ற எதுவுமோ பயனளிக்காது எனும் உண்மையைக் கூறுபவரை அவர் தமது கடும் விரோதியாகக் கருதுகின்றனர்.

அதைமாந்தஸ்: அழகு! சரியென்பதைக் கூறும் மனிதனுடன்

உணர்ச்சி வசப்பட்டுக் கோபிப்பதில் அழகொன்றும் நான் காணவில்லை.

சாக்ரடீஸ்: இந்தக் கனவான்கள் உனது அருள் நோக்கிற்குப் பாத்திரர் அல்லர் போலும்.

அதைமாந்தஸ்: நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ்: நான் இதுகாறும் விவரித்த மனிதரைப் போன்றுள்ள நாடுகளின் நடத்தையையும் புகழமாட்டாய். காரணம், அரசியல் சட்டத்தை மாற்ற முற்படும் குடிகளைக்கொன்று போடுவோம் என்று அச்சுறுத்தும் ஒழுங்கற்ற நாடுகள் இல்லையா? இப்படிப்பட்ட அரசை வசப்படுத்திக்கொண்டு அதன் போக்கிற்கு உடன்பட்டு அதை இனிமையுடன் நேசித்துத் தந்திரமாக அதன் எண்ணத்தை முன் கூட்டியே அறிந்து அதன்படி நடந்துவரும் ஒருவன் பெரிய மனிதன் என்றும், அரசியல் வாதி என்றும், கொள்ளப்படுவதில்லையா—இப்படிப்பட்ட நாடுகள் நான் கூறிய மனிதரை ஒத்திருக்கவில்லையா?

அதைமாந்தஸ்: ஆம், நாடுகளும் மனிதரைப்போன்றே கெட்டவைகளாக உள்ளன. நான் அவற்றைப் புகழமாட்டேன்.

சாக்ரடீஸ்: அரசியல் ஊழல்களுக்கு இவ்வாறு பேணுபவர்களின் திறமையையும் அறிவையும் நீ பாராட்டிப் பேசுவதில்லையா?

அதைமாந்தஸ்: ஆம், செய்கிறேன், ஆனால் நான் அவர்கள் எல்லோரையும் பாராட்டுவதில்லை. ஏனெனில் அவர்களில் சிலரை, மக்களின் பாராட்டுக்கள், தாங்கள் உண்மையாகவே அரசியல் தலைவர்கள் என்று எண்ணிக்கொள்ளும்படி ஏமாற்றிவிட்டிருக்கிறது. இவர்களை நாம் அதிகமாகப் பாராட்ட வேண்டுவதில்லை.

சாக்ரடீஸ்: நீ கூறுவதன் பொருள்தான் என்ன? அவர்கள் சம்பந்தமாக நீ அதிக இரக்கம் உள்ளவனாக இருக்க வேண்டும். ஒருவன் தன்னை அளக்க இயலாத நிலையில், பலரும் தாங்களும் அளக்க முடியாதபோது, அவர்கள் அவன் நாலு அடி உயரமானவன் என்று உறுதி கூறினால், அவர்கள் கூறுவதை அவன் நம்பாமல் இருக்க முடியுமா?

அதைமாந்தஸ்: முடியாது, உண்மையிலேயே அந்த நிலையில் முடியாதுதான்.

சாக்ரடீஸ் : சரி, அப்பொழுது, அவர்கள்மீது கோபம் கொள்ளாதே. ஏனெனில் நான் விளக்கியதுபோல் விளையாடுவது போன்ற அற்பச் சீர்திருத்தங்கள் சம்பந்தமாகத் தம் கவனத்தைச் செலுத்துகின்றனர். மேலும் நான் கூறிய ஒப்பந்தங்கள் சம்பந்தமான ஒழுங்கீனம் மற்றும் பல சூதுகள் ஆகியவற்றைச் சட்டமியற்றுவதன் மூலம் ஒழித்து விடலாம் என்று கனுக் காண்கின்றனர். உண்மையில் அவர்கள் அப்படிச் செய்வதன் மூலம் (ஓயாமல் முளைக்கும்) ஹைத்ரா[1] என்ற பாம்பின் தலைகளைத்தான் வெட்டுகிறார்கள் என்பதை அவர்கள் அறிவதில்லை.

அதைமாந்தஸ் : ஆம், இதைத்தான் அவர்கள் செய்கிறார்கள்.

சாக்ரடீஸ் : உண்மையான சட்டமியற்றுபவர் ஒழுங்குள்ள அல்லது ஒழுங்கற்ற நாடுகளின் இத்தகைய அரசியல் சட்டங்கள் சம்பந்தமானவற்றைப் பற்றி அக்கறை கொள்வதில்லை, என நான் எண்ணுகிறேன். ஏனெனில் முன்கூறிய அரசு சம்பந்தப்பட்டவரை அவை முற்றிலும் உபயோகமற்றவையாகவும், பின்னது சம்பந்தப்பட்டவரை அவற்றை வகுப்பது பற்றிய இன்னல்கள் இல்லாதவையாகவும் இருக்கும். மேலும் அவற்றுள் பல நமது பழைய விதிகளிலிருந்து சுலபமாகத் தோன்றக்கூடியவை.

அதைமாந்தஸ் : அப்போது சட்டமியற்றல் சம்பந்தமாக நமக்கு என்னதான் மிஞ்சி உள்ளது?

சாக்ரடீஸ் : ஒன்றுமே நமக்கு மீதி வைக்கப்படவில்லை. ஆனால் டெல்பியின் தெய்வமான அப்பாலோவிற்குப் பெரிய, சிறந்த, முக்கியமான காரியங்கள் உள்ளன.

அதைமாந்தஸ் : அவை எவை? என்று கேட்டான்.

சாக்ரடீஸ் : கோயில்கள், பலிகள், தெய்வங்கள், சிறு தேவதைகள், வீரர்கள் ஆகியவர்களின் சேவை, இறந்தவர்களின் சமாதிகளைக் காக்கும் சாதனங்கள், கீழ் உலகின் தயவை நாடுபவர் செய்யும் சடங்குகள் ஆகியவையே அவை. இவற்றைப்பற்றி நாம் அறியோம். ஆனால், ஒரு பெரிய நகரை நிர்மாணிக்கும் நாம், அவற்றின் பொறுப்பை நமது

1. Hydra—கிரேக்கப் புராணக் கதையில் ஹைத்ரா (Hydra) என்பது வெட்ட வெட்ட முளைக்கும் தலைகளைக்கொண்ட ஒரு பாம்பின் பெயர். விலக்க விலக்க ஒழியாது, மீண்டும் மீண்டும் தோன்றுவனவற்றை ஹைத்ரா எனக் கிரேக்கர் கூறுவதுண்டு.

பண்டைய தெய்வத்திற்கன்றி, மற்றவர்களுக்கு நம்பிக்கை யுடன் உரிமைப்படுத்துதல் ஆகாது. அக்கடவுளே நடுவில் வீற்றிருப்பார்; அவரே பூமியின் தொப்புளில் இருப்பவர்; முழு மனித சமுதாயத்திற்கும் சமயத்தின் பொருளைத் தருபவர்.

அதைமாந்தஸ்: நீங்கள் கூறுவது சரியே. நீங்கள் குறிப்பிடு வது போன்றே செய்வோம்.

சாக்ரடீஸ்: ஆனால் இவை அனைத்துக்கும் இடையே நீதி எங்கு உள்ளது? அரிஸ்டனின் புதல்வனே! அது எங்கே உள்ளது என்று எனக்குச் சொல், இப்பொழுது நமது நகரம் வாசம் செய்ய ஏற்றதாக உள்ளதால், ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றிக்கொண்டு அதைத் தேடு. உனது சோதரன் பாலி மார்க்கஸ், மற்ற நமது நண்பர்கள் ஆகியோரின் உதவியை நாடு. அதில், எங்கே அநீதியும், எங்கே நீதியும் உள்ளன என்று நாம் கண்டுபிடிப்போம். இவை இரண்டும் எங்கே மாறுபடுகின்றன? மனிதனோ கடவுளோ பார்த்தாலும் பாராவிட்டாலும், சுகமாகவே வாழ விரும்பும் மனிதன் இவற்றில் எதைத் தன்னுடைய பொறுப்பாக—தனது பங்கா கக் கொள்கிறான்?

கிளாக்கன்: இது அர்த்தமற்றது. தேவைப்படும்போது நீதிக்கு உதவி செய்யாவிடின் அது தூய்மைக்குலைவு ஆகு மென்றும், அதைத் தேடுவேன் என்றும் நீர் வாக்குக் கொடுத்துள்ளீர்கள் அல்லவா?

சாக்ரடீஸ்: அப்படிச் சொன்னேன் என்பதை நான் மறுக்க வில்லை. மேலும் நீ ஞாபகப்படுத்தியதாலும், நான் சொன்னபடியே செய்வேன். நீ என்னோடு சேர்ந்து கொள்ளவேண்டும்.

கிளாக்கன்: அப்படியே செய்வோம்.

சாக்ரடீஸ்: சரி, இவ்வாறு கண்டுபிடிக்கலாம் என்று நான் நம்புகிறேன். நமது அரசு சரியானபடி ஆளப்பட்டால், பூரணமாக விளங்கும் என்று வைத்துக்கொண்டு தொடங்கு வோம்.

கிளாக்கன்: அது முற்றிலும் சரி.

சாக்ரடீஸ்: ஆகவே, பூரணமாக இருத்தல் என்பது விவேகத்து டனும், தைரியத்துடனும், நியாயத்துடனும் இருப்பதாகும்.

கிளாக்கன் : அதுவும் அப்படியே தெளிவாகப் புரிகிறது.

சாக்ரடீஸ் : இந்தப் பண்புகளில் எதை நம் நாட்டில் பார்க்கிறோமோ, அதைத் தவிர மற்றவை எஞ்சி நிற்கும் அல்லவா?

கிளாக்கன் : மிகவும் சரி.

சாக்ரடீஸ் : நான்கு பொருள்கள் இருந்தால், அவற்றுள் ஒன்றை நாம் தேடும்போது—அது எதுவாயிருந்தாலும் சரி அது முதலிலிருந்தே நமக்குத் தெரிந்துவிடலாம். அப்பொழுது மேற்கொண்டு இடர்ப்பாடு இராது. அல்லது, ஏனைய மூன்றையும் முதலிலிருந்தே அறியலாம். அப்பொழுது மிஞ்சியது நான்காவது பொருளே என்பது தெளிவாகத் தெரியும்.

கிளாக்கன் : மிகவும் நல்லது.

சாக்ரடீஸ் : இந்த முறையே நற்பண்புகள் சம்பந்தமாகவும் பின்பற்றப்படலாம் அல்லவா? அவைகளும் எண்ணிக்கையில் நான்குதானே.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : நாட்டில் காணப்படும் நற்பண்புகளில், முதலில் விவேகம் என்பது வெளியில் தெரிகிறது. இதில் நான் ஒரு சிறப்பையும் காண்கிறேன்.

கிளாக்கன் : அது என்ன?

சாக்ரடீஸ் : நாம் இதுகாறும் விவரித்து வந்துள்ள அரசானது விவேகமுள்ளது என்று சொல்லப்படுகிறது. காரணம் அறிவுரை கொடுப்பதில் சிறந்து விளங்குவதால்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : நல்ல புத்திமதி சொல்வதே ஒருவகையான அறிவு என்பது தெளிவு. ஏனெனில் அறிவினாலேயே மனிதர் நன்கு ஆலோசனை கூறுகிறார்கள், அறியாமையால் அல்ல.

கிளாக்கன் : தெளிவாக.

சாக்ரடீஸ் : ஓர் அரசில் அறிவின் வகைகள் பலவாகவும் வேறுபட்டனவாகவும் உள்ளன அல்லவா?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அங்கே தச்சனின் அறிவும் உண்டு. ஆனால் அந்த அறிவா ஒரு நகரம் விவேகமுள்ளது, நல்லறிவைப் புகட்டவல்லது என்ற சிறப்பினைப் பெறுவதற்குக் காரணமாகிறது?

கிளாக்கன்: நிச்சயமாக இல்லை. அது அந்நகரம் தச்சு வேலையில் சிறந்தது என்ற புகழ் ஒன்றுக்கு மட்டுமே காரணமாகும்.

சாக்ரடீஸ்: சரி, மரக்கருவிகள்பற்றிச் சிறந்த ஆலோசனை கூறும் அறிவைப் பெற்றிருப்பதால் மட்டும் ஒரு நகரம் விவேகமிக்கது என்று அழைக்கப்படக்கூடாது அல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாகக் கூடாது.

சாக்ரடீஸ்: மேலும் பித்தளைப் பாண்டங்கள் பற்றி ஆலோசனை கூறக் கூடிய அறிவு இருப்பதாலோ அல்லது அதுபோன்ற மற்ற அறிவு இருப்பதாலோ அப்படிக் கூறமுடியாது அல்லவா?

கிளாக்கன்: அப்படிப்பட்ட எந்த ஓர் அறிவின் காரணத்தினுலும் அல்ல.

சாக்ரடீஸ்: நிலத்தைப் பண்படுத்தும் அறிவினுலுமல்ல. ஏனெனில் அது அந்நகருக்கு விவசாய நகரம் என்ற பெயரைத்தானே அளிக்கும்?

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: இனி, அண்மையில் தோற்றுவிக்கப்பட்ட நமது நாட்டிலுள்ள மக்களுள் ஏதாவது ஒரு குடிமகனுக்கு ஒரு குறிப்பிட்ட அரசு சம்பந்தமாக இல்லாது முழு ஆட்சிக்கும் தொடர்புள்ளதாக, எங்ஙனம் அந்த அரசானது அதற்கும் மற்ற அரசுகளுக்கும் சிறந்த முறையில் செயலாற்ற வேண்டும் என்ற அறிவு இருக்கிறதா?

கிளாக்கன்: நிச்சயமாக இருக்கிறது.

சாக்ரடீஸ்: இந்த அறிவு எது? அது யாரிடம் காணப்படுகிறது?

கிளாக்கன்: அதுவே பாதுகாவலரின் அறிவு, பூரணப் பாதுகாவலர் எனச் சற்று முன் விவரித்தோமே அவர்களிடத்தே அது காணப்படுகிறது.

சாக்ரடீஸ்: இப்படிப்பட்ட அறிவு படைத்து இருப்பதால் அந்நகருக்கு என்ன பெயர்?

கிளாக்கன்: அதனுல், ஆலோசனை கூறுவதில் சிறந்தது என்றும், உண்மையிலேயே விவேகமுடையது என்றும் பெயர் பெறுகிறது.

சாக்ரடீஸ் : நமது நகரில் இவ்வகை உண்மையான பாதுகாவலர் அதிகமா அல்லது கொல்லுவேலை செய்பவர் அதிகமா ?

கிளாக்கன் : கொல்லர்களே அதிகம்.

சாக்ரடீஸ் : ஒருவகை அறிவுபடைத்திருப்பதால் அதற்கேற்ற பெயரைப் பெறும் வகுப்புக்களுள் பாதுகாவலர் மிகச் சிறிய வகுப்பினராக இருப்பார்களன்றோ ?

கிளாக்கன் : ஆம், மிகச் சிறிய வகுப்புத்தான்.

சாக்ரடீஸ் : ஆக, சிறிய வகுப்பினராக உள்ள காரணத்தாலும், தலைமைதாங்கித் தன்னை ஆளும் வகுப்பினரது அறிவு என்ற காரணத்தாலும் இயற்கையிலேயே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதாலும் முழு அரசும் விவேகமிக்கதாகவே இருக்கும். விவேகம் என்ற பெயருக்கு எது ஒன்றே பொருத்தமோ அந்த அறிவுள்ள இனம் இயற்கையில் மற்ற வகுப்புக்களைக் காட்டிலும் மிகவும் சிறியதாகச் செய்யப்பட்டுள்ளது, அல்லவா ?

கிளாக்கன் : மிகச் சிறந்த உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே, நம் அரசின் நான்கு சிறந்த பண்புகளில் ஒன்றின் தன்மையையும், இடத்தையும் ஒருவாறு கண்டோம்.

கிளாக்கன் : மிகவும் திருப்திகரமாகவே கண்டுவிட்டோம், என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

சாக்ரடீஸ் : மேலும் வீரத்தின் தன்மையையும், அது எப்பகுதியில் உறைகிறது என்பதையும், அது ஓர் அரசிற்கு வீரமிக்கது எனும் பெயரை எப்படி அளிக்கிறது என்பதையும் பார்ப்பதில் இன்னல் ஏதும் இல்லை என நினைக்கிறேன்.

கிளாக்கன் : நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : ஏன் ? எந்த ஒரு நாட்டையும் வீரமிக்கது அல்லது கோழை எனக்கூறும் ஒவ்வொருவரும், சண்டையிடுதலையும் நாட்டிற்கெனப் போருக்குப் போகும் வகுப்பையும் நினைவில் கொண்டிருப்பர்.

கிளாக்கன் : மற்ற எந்தப் பகுதியையும் ஒருவரும் ஒருபோதும் நினைக்கமாட்டார்.

சாக்ரடீஸ் : நாட்டின் மற்றைக் குடிமக்கள் வீரர்களாகவோ அன்றிக் கோழைகளாகவோ இருக்கலாம் ; ஆனால், என் எண்ணப்படி, அவர்களது தைரியமோ, கோழைத்தனமோ அந்நகர் அப்பெயர் பெறக் காரணமாகாது.

கிளாக்கன் : நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : இதற்கு அஞ்ச வேண்டும்; இதற்கு அஞ்சக் கூடாது என்ற உறுதியுடன் தமது எண்ணத்தை மாற்ருது இருத்தல் வேண்டும் என்றும், சூழலுக்கேற்ப மாறக்கூடாது என்றும் ஆட்சியாளர் பயிற்றுவித்து இருப்பவர்களது வகுப்புக்கு (பிரிவுக்கு)த் தக்கபடி நகரமானது தைரியமாக இருக்கும். இதைத்தான் நீங்கள் தைரியம் என்று கூறு கின்றீர்கள்.

கிளாக்கன் : நீங்கள் சொல்வதை மறுமுறை கேட்க விரும்பு கிறேன்; ஏனெனில் உமது சொற்களை நான் முழுவதும் புரிந்துகொண்டேன் என்று எண்ணுவதற்கு இல்லை.

சாக்ரடீஸ் : நான் கூறுவது யாதெனின், தைரியம் ஒருவகை யான மீட்பு.

கிளாக்கன் : எதனுடைய மீட்பு.

சாக்ரடீஸ் : பயப்படத்தக்கனவற்றின் கருத்துக்கள், பயப்படத் தக்க காரியங்கள் எவை? அவற்றின் தன்மை என்ன? கல்வியின் மூலம் அவற்றைச் சட்டம் மனத்தில் தோற்று விக்கிறது – என்பனபோன்றவற்றிலிருந்து மீட்பு. ‘ எல்லாச் சூழல்களிலும் நான் தெரிவிக்கப்போவது என்னவென்ருல் இன்பம் அல்லது துன்பம், விருப்பம் அல்லது வெறுப்பு ஆகியவற்ருல் மனிதன் தனது இத்தகைய எண்ணத்தை இழந்து போவதில்லை. இதற்கு நான் ஓர் உதாரணம் தரட்டுமா?

கிளாக்கன் : நீங்கள் பிரியப்பட்டால்.

சாக்ரடீஸ் : நான் முன்னமேயே சொல்லியுள்ளபடி கடல் நிறமுடையதாக ஆட்டு உரோமத்தை நிறமேற்ற விரும்பி ஞல் சாயம் ஏற்றுபவர்கள் முதலில் வெண்மை நிறத்தை எடுத்துக்கொள்கிருர்கள். அதை அவர்கள் மிகுந்த கவனத் துடனும் உழைப்புடனும் தயாரிக்கின்றனர் – அப்பொழுது தான் அந்த உண்மையான அடிப்படையானது, நீல நிறத்தை ஏற்கும். இதற்குப் பிறகு சாயமேற்றுவது தொடர்ந்து நடைபெறுகிறது. எது இம்முறையில் சாய மேற்றப்படுகிறதோ அது நிரந்தரமான கெட்டிச் சாயமாகி விடுகிறது. இப்படிச் சாயமேற்றப்பட்டதைச் சாதாரண மாகவோ அல்லது சாயம் போகும் மருந்தாலோ சாயம்

போகும்படிச் செய்யமுடியாது. ஆனால் சரியான அடிப் படையில் தயாராக்கப்படாவிடின், நீலமோ மற்றவண்ணமோ பார்வைக்கு மோசமாகவே தோன்றும் என்பதை நீ அறிவாய்.

கிளாக்கன் : ஆம், அவை சாயம் வெளுத்த நகைப்புக்கிடமான தோற்றத்தையே தரும்.

சாக்ரடீஸ் : இப்பொழுது நமது வீரர்களைத் தேர்ந்தெடுப்பதின் நோக்கம் என்னவென்பதைப் புரிந்து கொள்வீர். அவர்களை இன்னிசையாலும் உடற்பயிற்சியாலும் ஏன் பயிற்றுவிக்க வேண்டும் என்றும் தெரியும். சட்டங்களின் நிறம் அவர்கள் பால் நிரந்தரமாகப் படியும்படி நாம் இச்சூழல்களை உரு வாக்கினோம். அவ்வாறே இன்னல்களைப் பற்றிய கொள்கை களையும் அவர்களது ஏனைய எண்ணங்களையும் அவர் களுடைய வளர்ப்பாலும் பயிற்சியாலும் அழிக்கமுடியாதபடி உறுதிப்படுத்தப்படவும் செய்தோம். ஆன்மாவை வெளுக்கும் பலம் பொருந்திய சாதாரண இன்பம்கூட அவற்றை நீக்கமுடியாது. துக்கமோ பயமோ எல்லாவற்றையும் மாற்றும் இச்சையோ அவற்றை அசைக்க முடியாது. நீ மாற்று அபிப்பிராயம் தெரிவிக்காத வரையில், இப்படிப்பட்ட உண்மையான எண்ணத்தைக் காக்கும் சக்தியையே வீரம் என்பேன். அது உண்மையான இன்னல்களைப்பற்றியும் பொய்யான இன்னல்களைப்பற்றியும் சட்டம் என்ன கூறுமோ அதை ஏற்கும்.

கிளாக்கன் : நான் இதை ஏற்றுக்கொள்கிறேன். ஏனெனில் கொடிய விலங்கு அல்லது அடிமையிடத்துக் காணப்படும் பயிற்சி அளிக்கப்படாத இயற்கையான தைரியத்தை நீங்கள் ஒதுக்கிவிட்டீர்கள் என நினைக்கிறேன்; இது, உமது எண் ணப்படி, சட்டம் விதிக்கும் வீரமல்ல. அதற்கு வேறுபெயர் இடவேண்டும்.

சாக்ரடீஸ் : உண்மையாகவே.

கிளாக்கன் : எனவே நீங்கள் விவரிக்கும் வீரத்தை நான் ஓரளவு ஊகிக்கலாம் அல்லவா?

சாக்ரடீஸ் : ஆம், செய்யலாம்; ‘குடிமகனது’ எனும் சொல்லையும்கூடச் சேர்த்துக்கொள்வீரானால், நீ அதிகத் தவறு செய்தவனாக மாட்டாய். இனி நீ விரும்பினால், இந்த ஆராய்ச்சியை மேலும் தொடரலாம்; ஆனால் இதுபற்றிப் போதுமான அளவு கூறிவிட்டோம். தற்சமயம் வீரத்தை விட நீதியை அறிய முற்படுகிறோம்.

கிளாக்கன் : நீங்கள் கூறுவது சரியே.

சாக்ரடீஸ் : நாட்டின் மற்ற இரு நற்பண்புகள் என்ன என்பதை இனிக் கண்டு பிடிக்கவேண்டும். முதலாவது தன்னடக்கம், பிறகு நீதி. அந்த நீதியாது? என்பதுதான் நமது ஆராய்ச்சியின் குறிக்கோள்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இப்பொழுது தன்னடக்கத்தைப்பற்றித் தெரிந்து கொள்ளக் கஷ்டப்படாது, நீதியை நாம் கண்டு பிடித்து விடலாமா?

கிளாக்கன் : அது எங்ஙனம் சாத்தியம் என்று எனக்குத் தெரியாது. நீதியை வெளிப்படுத்தித் தன்னடக்கத்தை மறந்து விட நான் விரும்பவில்லை. எனவே, நீர் தன்னடக்கத்தைப் பற்றிய ஆராய்ச்சியை முதலில் தொடங்கி எனக்கு உதவ வேண்டுமென்பதே என் அவா.

சாக்ரடீஸ் : அப்படியே செய்கிறேன்; உமது வேண்டுகோளை நிராகரிப்பது நியாயமல்ல.

கிளாக்கன் : அப்படியெனின், சிந்திக்கலாம்.

சாக்ரடீஸ் : சரி, அப்படியே செய்வோம். இப்பொழுது நாம் அறிந்தவரையில், தன்னடக்கம் என்பது முந்திய தன்மையைவிட அதிகமான ஒற்றுமையையும் இன்பமான பிணைப்பையும் உடையதாய் இருக்கிறது.

கிளாக்கன் : அது எங்ஙனம்?

சாக்ரடீஸ் : தன்னடக்கம் என்பது சில இன்பங்களையும் விருப்பங்களையும் ஒழுங்குபடுத்துவதும் அல்லது அடக்குவதும் ஆகும். "ஒரு மனிதன் தனக்குத்தானே தலைவன்" எனும் குறிப்பில் இவ்வுண்மை வியக்கத்தக்க வகையில் தொக்கி நிற்கிறது. இந்த எண்ணம் சம்பந்தமான மற்றவைகளையும் குறிப்பாக மொழியில் காணலாம்.

கிளாக்கன் : ஐயமின்றி.

சாக்ரடீஸ் : 'தனக்குத்தானே தலைவன்' என்பதில் நகைப்புக்கிடமான தொன்று இருக்கிறது. ஏனெனில், தலைவனே ஊழியனாகவும், ஊழியனே தலைவனாகவும் இருக்கிறான். இம் மாதிரியான பேச்சுக்களில் எல்லாம் அதே மனிதனே குறிக்கப்படுகிறான்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இதற்கு நான் கூறும் பொருள் யாதெனின் மனிதனுடைய ஆன்மாவில் சிறந்ததும் கீழ்த்தரமானதும் ஆகிய பகுதிகள் உள்ளன. சிறந்த எண்ணமானது கீழான எண்ணத்தை அடக்கும்போது மனிதன் தனக்குத்தானே தலைவனாகின்றான் ; இது புகழும் முறையில் ஒன்று. ஆனால் தீய கல்வியினால் அல்லது பழக்கத்தினால் சிறந்த கீழ்த்தரமான பெரிய பகுதியால் அடக்கப்படும்போது, மனிதன் குற்றத்திற்குள்ளாகித் தனக்கே அவன் அடிமையாகிக் கொள்கையற்றவனெனக் கருதப்படுகிறான்.

கிளாக்கன் : ஆம், அதில் நியாயமுள்ளது.

சாக்ரடீஸ் : இப்பொழுது நமது புதிய நாட்டைப் பாருங்கள். அதில் இந்த இரு நிலைகளில் ஒன்று செயல்படுவதைக் காணலாம். ஏனெனில், நீ சொல்லுவதுபோன்று, நாடு சிறந்த நோக்கங்கொண்டு ஒழுகியும், தீய எண்ணங்களை அடக்கியும் வந்தால், ‘ தன்னடக்கம், ’ ‘ தனக்கே தலைவன் ’ என்ற சொற்களின் பொருள்கொண்ட சுய தலைமை பூண்டதாக விளங்குமன்றோ.

கிளாக்கன் : ஆம் நீங்கள் கூறுவது உண்மையெனக் காண்கிறேன்.

சாக்ரடீஸ் : அனேக சிக்கலான இன்பங்கள், விருப்பங்கள், வருத்தங்கள் ஆகியவை குழந்தைகள், பெண்கள் வேலையாட்கள், கீழ்த்தரமானவர்களும் எண்ணிக்கையில் மிகுந்தவர்களுமான சுதந்திரமான ஆடவர்கள், என வழங்கப்படுவோரிடமும் பொதுவாகக் காணப்படுகின்றன என்பதையும் காண்கிறேன்.

கிளாக்கன் : உண்மைதான்.

சாக்ரடீஸ் : சிந்தனையைப் பின்பற்றி மனத்தினாலும் உண்மை அறிவாலும் கண்காணிக்கப்படும் எளிய விருப்பங்கள் நற்குடியில் பிறந்தவர்களிடத்தும் சிறந்த கல்வி உள்ளவர்களிடத்துமே காணப்படுகின்றன.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : நீ காண்பதுபோல், இந்த இரண்டிற்கும் நம் நாட்டில் இடமுண்டு. பல மக்களின் கீழ்த்தரமான விருப்பங்கள் ஒருசிலரின் நல்லொழுக்க எண்ணத்தாலும், ஞானத்தாலும் அடக்கப்படுகின்றன.

கிளாக்கன் : அதையே நானும் காண்கிறேன்.

சாக்ரடீஸ் : எனவே, ஏதாவது ஒரு நகரம் தனக்குத்தானே தலைமை பூண்டு, தனது இன்பங்களையும் விருப்பங்களையும் அடக்கி ஆளுகின்றது என்றால், அது நமது நகரமேதான் என வாதிடலாம் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அக்காரணங்களுக்காகவே, அதனைத் தன்னடக்க முடையது என்றும் கூறலாம், அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஏதாவது ஒரு நாட்டில் ஆட்சியாளர்களும் மக்களும் தம்மிடையே இன்னார்தான் ஆளவேண்டும் என்று ஒத்துக்கொள்வார்களானால், அப்படிப்பட்ட நாடு நமது நாடுதானே ?

கிளாக்கன் : சந்தேகமில்லாமல்.

சாக்ரடீஸ் : இவ்வாறு நகரமக்கள் தம்முள்ளே ஒத்துப்போனார் களேயாயின் ஆட்சியாளர்கள் மக்கள் ஆகியோரிடையில் எவ்வகுப்பினரிடம் தன்னடக்கம் விளங்கும் ?

கிளாக்கன் : இரு வகுப்பினரிடையேயும் விளங்கும் என்று நான் கருதுகிறேன்.

சாக்ரடீஸ் : தன்னடக்கமும் ஒருவகையான ஒற்றுமை என்று நாம் முன்னர்க் கருதியதில் தவறில்லையல்லவா ?

கிளாக்கன் : ஏன் அப்படி ?

சாக்ரடீஸ் : ஏனெனில், தன்னடக்கம் இவற்றைப் போலில்லை. வீரம், ஞானம் இவை ஒவ்வொன்றும் தனியே அரசின் ஒரு பகுதியில் தங்கி, ஒன்று நாட்டைத் திறமிக்கதாகவும் மற்றொன்று வீரமிக்கதாகவும் செய்யும்.

தன்னடக்கமோ அவ்வாறின்றி, எல்லாவிடங்களிலும், ராகஸ்தானங்களிலும், பரவி அவற்றை நாம் ஞானத்திலும் ஆற்றலிலும், எண்ணிக்கையிலும் அல்லது செல்வத்திலும் அல்லது வேறு எதிலும் பலமிக்கதென்றோ குறைந்ததென்றோ எவ்வாறு கருதினாலும் அவற்றைப் பலமற்ற, பலமிக்க, நடுத் தரமான ஆகிய பலவகுப்புக்களையும் நன்கு இணைந்ததொரு முழுமையாக்கும். எனவே, தன்னடக்கம் என்பது உண்மை யில் தனிப்பட்டவர்களிலும், அரசுகளிலும் எவருக்கு ஆளும் உரிமை உண்டு என்ற விஷயத்தைப்பற்றி இயற்கையால்

சிறந்தோ தாழ்ந்தோ உள்ள இடத்து அமைந்த இசைதல் என்று சொல்லலாம் அல்லவா?

கிளாக்கன் நீங்கள் கூறுவதை முற்றிலும் ஒத்துக்கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: ஆகவே, நான்கு நற்பண்புகளில் மூன்று பண்புகள் நமது நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. ஒரு நாட்டை ஒழுக்கமுடையதாகச் செய்யும் பண்புகளில் கடைசியானது நீதியாகத்தானிருக்கும். அது என்ன என்பது நமக்குத் தெரியவேண்டும்.

கிளாக்கன்: இந்த ஊகம் தெளிவு.

சாக்ரடீஸ்: கிளாக்கனே! தக்க தருணம் வந்துவிட்டது. நாம் வேட்டையாடுவோரைப் போலப் புதரைச் சூழ்ந்துகொண்டு நம் கண்ணுக்குத் தெரியாமல் நீதி பதுங்கிச் செல்லாமல் மிக ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும். ஏனெனில் சிறிதும் சந்தேகமில்லாமல் நீதி இந்த நாட்டில் தான் ஓர் இடத்தில் இருக்கிருள். எனவே நன்கு கவனித்துக் காண முற்படுங்கள்; அவள் உமது கண்ணுக்கு முதலில் புலப்பட்டால், எனக்குத் தெரிவிக்கவேண்டும்.

கிளாக்கன்: முடிந்தால் அப்படிச்செய்ய விருப்பம் உண்டு. ஆனல் நான், நீங்கள் காண்பித்தால் பார்க்கும் அளவிற்கே வல்லவன். ஆகவே உங்களைப் பின்பற்றுபவனுகவே என்னை நீங்கள் கருதவேண்டும்.

சக்ரடீஸ்: என்னுடன் இறைவனை வாழ்த்தி, என்னைப் பின்பற்று.

கிளாக்கன்: நிச்சயமாக அப்படியே செய்கிறேன். ஆனல் நீங்கள் எனக்கு வழி காட்டியாக இருத்தல் வேண்டும்.

சாக்ரடீஸ்: இங்கே வழி புலப்படவில்லை. இருண்ட காடாக உள்ளது; மனத்தைக் குழப்புகின்றது. எனினும் நாம் முன்னேற வேண்டும்.

கிளாக்கன்: சரி, முன்னே செல்வோம்.

சாக்ரடீஸ்: இதோ இங்கு ஒன்றைக் கண்டேன், இதோ பார், இங்கு ஒரு சுவட்டைக் காண்கிறேன்; எனவே நாம் தேடுவது நம்மைத் தப்பிவிடாது.

கிளாக்கன்: மிகவும் நல்ல செய்தி.

சாக்ரடீஸ்: உண்மையிலேயே, நாம் முட்டாள்கள்தான்.

கிளாக்கன் : ஏன் அப்படி ?

சாக்ரடீஸ் : ஏன், என்கிருயா? நல்ல ஆள் ஐயா நீ! வெகு காலத்திற்கு முன்பே இந்த விசாரணையை நாம் நடத்திய போது நமது காலடியில் நீதி தடுமாறிக்கொண்டிருந்தாள். ஆனால் நாம் ஒரு போதும் அவளைக் கவனிக்கவில்லை. இதைவிட வேறென்றும் அதிக நகைப்பிற்கிடமாகாது, கையிலுள்ள பொருளை மறந்து அதனையே தேடுவதுபோல், நாம் தேடத்கருதியதில் நாட்டம், தூரத்திலுள்ளதொன்றில் கவனம் செலுத்தாது, செலுத்தினோம். ஆகவேதான், நாம் நீதியைக் காணவில்லை என நினைக்கிறேன்.

கிளாக்கன் : நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : நான் கருதுவதாவது கடந்த வெகுகாலமாகப் பலமுறை நீதியைப்பற்றியே நாம் பேசி வந்துள்ளோம் ; ஆனால் நீதியை அறியாமலேயே இருந்திருக்கிறோம்.

கிளாக்கன் : உங்களது நீண்ட விவரணத்தில் பொறுமை யிழக்கும்படி ஆகிவிடுகிறது.

சாக்ரடீஸ் : சரி, இப்பொழுது நான் கூறுவது சரியா, அல்லது தவறு என்று கூறு. தொடக்கத்தில், நாட்டின் அடிப் படைத் தத்துவம் என்று நான் சொன்ன ஒன்று உனக்கு நினைவு இருக்கும், என நினைக்கிறேன். அதாவது மனிதன் தன் இயற்கைக்கு ஒத்த ஒரே ஒரு செயலைமட்டும் நடை முறையில் பயில வேண்டும். நீதி என்பது இத்தத்துவம் அல்லது இதன் ஒரு பகுதியேயாகும்.

கிளாக்கன் : ஆம், ஒரு மனிதன் ஒரே காரியத்தை, தொழிலைத் தான் செய்யவேண்டுமென்று நாம் அடிக்கடி கூறிவந்துள் ளோம்.

சாக்ரடீஸ் : மேலும், நீதி என்பது ஒருவன் தனது அலுவலைக் கவனிப்பதேயாகும் என்றும் பிறரது செயல்களில் தலையிடாமலிருப்பது என்றும் திரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளோம். வேறு பலரும் அப்படியே நம்மிடம் கூறி யுள்ளனர்.

கிளாக்கன் : ஆம், அப்படித்தான் கூறினோம்.

சாக்ரடீஸ் : எனவே, நீதி என்பது ஒருவன் தனது அலுவலை ஒரு குறிப்பிட்ட முறையில் செய்வது என்று கொள்ளலாம். இந்த முடிவை நான் எங்ஙனம் பெறமுடிந்தது என்று நீ கூற முடியுமா ?

கிளாக்கன் : என்னுல் கூறமுடியவில்லை. தாங்கள் சொன்னுல் கேட்க விரும்புகிறேன்.

சாக்ரடீஸ் : மற்றைப் பண்புகளான தன்னடக்கம், வீரம், ஞானம் என்றவற்றை நீக்கிப்பார்த்தால், அரசில், நீதி என்பது மட்டும் காணப்படும். மற்றவற்றிற்குக் காரணமாயும், அவை நிலைபெறுவதற்கு ஒரு நிலையாயும் உள்ளது. மேலும் அது அவற்றைப் பாதுகாக்கிறது. இந்த மூன்று குணங்களையும் கண்டுபிடித்துவிட்டால், நீதி எஞ்சிய குணமாக இருக்கும் என்று நாம் சொல்லிவந்தோம்.

கிளாக்கன் : ஆம், அதுவும் நிச்சயமாகத் தொடர்கிறது.

சாக்ரடீஸ் : இந்நான்கு குணங்களில் எது தனது தோற்றத்தால் நாட்டின் சிறப்பிற்குக் காரணமாக விளங்கும் என்று நம்மைக் கேட்டால் அதற்கு நாம் பதிலளிப்பது எளிதன்று, ஆட்சியாளர்க்கும் குடிமக்களுக்கும் உள்ள ஒற்றுமையா? அன்றித் தீமைகளின் உண்மைத் தன்மையைச் சட்டபூர்வமாக வீரர் மனத்தில் நிலைபெற்றிருக்கச் செய்வதையா? அன்றி ஆட்சியாளர்களின் விவேகமும் விழிப்புத் தன்மையுமா? அல்லது ஒவ்வொருவரும் தன் சொந்த வேலையைக் கவனித்தல் வேண்டுமேயன்றிப் பிறர் விவகாரங்களில் தலையிடலாகாது என்று நான் இப்போது கூறிவந்ததா? இக்குணங்கள் பிள்ளைகள், பெண்கள், அடிமைகள், சுதந்திர மக்கள், கலைஞர், ஆட்சியாளர், குடிமக்கள் ஆகியவர்களிடத்தில் காணப்படுகின்றன. இவற்றுள் எந்தக் குணம் மிகச் சிறந்த காரணமாகிறது என்று நிச்சயிப்பது மிகக் கடினம்.

கிளாக்கன் : எது என்று கூறுவது கடினம்தான்.

சாக்ரடீஸ் : ஆகவே, நாட்டிலுள்ள ஒவ்வொருவனிடத்தும் அவன் தனக்கு உரிய வேலையைச் செய்யும் சக்தி மற்ற அரசியல் பண்புகளான விவேகம், தன்னடக்கம், வீரம் ஆகியவற்றுடன் போட்டியிடும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இந்தப் போட்டியில் நீதியும் சேருகின்றதல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : மற்றொரு புறத்திலிருந்து இப்பிரச்சினையை அணுகுவோம். நாட்டை ஆள்பவர்களிடம் வழக்குக்களைத் தீர்மானிக்கும் பொறுப்பை விட்டுவிடுவாய் அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : பிறரது பொருளை எடுத்துக்கொள்ளாமலும், தனது பொருளை இழக்காமலும் இருப்பதை அன்றி வேறு எந்த அடிப்படையிலும் வழக்குக்கள் தீர்மானிக்கப்படுவதில்லையே?

கிளாக்கன் : ஆம், அதுவே அவர்களது கொள்கை.

சாக்ரடீஸ் : அது நிச்சயமானது, அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : எனவே, இந்த நோக்கத்தின்படி நீதி என்பது ஒருவனுக்கு உள்ளதை வைத்திருத்தலும், உரியதைச் செய்தலுமே யாகுமன்றோ ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இப்பொழுது நீ என்னுடன் ஒத்துப் போவாயா மாட்டாயா என்று யோசித்துச் சொல். ஒரு தச்சன் ஒரு சக்கிலியனின் வேலையையும் அல்லது ஒரு சக்கிலியன் தச்சனின் வேலையையும் செய்வதாக வைத்துக்கொள்வோம். அவர்கள் தமது கருவிகளையோ அல்லது கடமைகளையோ மாற்றிக் கொள்வதாகவும் வைத்துக்கொள்வோம். அல்லது ஒருவனே இருவருடைய அலுவல்களையும் செய்வதாக வைத்துக்கொள்வோம். இம்மாறுதல் எதுவாயினும், நாட்டிற்கு ஏதேனும் பெரியதொரு இடையூறு ஏற்பட்டுவிடுமென்று நினைக்கிறாயா ?

கிளாக்கன் : அதிகம் ஏற்படாது.

சாக்ரடீஸ் : ஆனால், இந்தச் சக்கிலியன், அல்லது இயற்கையினால் வாணிபத்திற்கென ஏற்பட்ட வேறு ஒரு மனிதன் செல்வத்தாலோ, பலத்தாலோ தன்னைப் பின்பற்றும் மக்களின் தொகையாலோ அல்லது இன்னோரன்ன சிறப்பாலோ வீரர் குழுவில் வலுவில் புக முற்பட்டாலும், அல்லது உரிய கருவிகளை எடுக்கவோ, கடமைகளைச் செய்யவோ முடியாதிருந்தும் ஒரு வீரன் ஆட்சியாளரின் கூட்டத்தில் அல்லது சட்டமியற்றுவோரின் குழுவிலே புகமுற்பட்டாலும் அல்லது ஒருவனே வியாபாரியானாலும், சட்டம் இயற்றுபவனாகவும், வீரனாகவும் இருக்க முற்பட்டாலும், இவ்வாறு ஒருவர் செயலில் மற்றவர் தலையிடுவது நாட்டிற்கு அழிவை உண்டாக்கும். இது என் கருத்து. இதை நீ ஒத்துக் கொள்வாய் என நினைக்கிறேன்.

கிளாக்கன் : இது மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே, மூன்று வகுப்பார் உள்ளனர் என்று காணும்போது, ஒருவர் மற்றொருவரது அலுவலில் குறுக்கிடல், அல்லது ஒரு தொழிலாளி மற்றொரு தொழிலாளியாக மாறுவது என்பது நாட்டிற்குப் பெருங்கேட்டை விளைவிக்கும் என்று காணலாம்; இதையே கெடுதல் செய்தல் என்று பொருத்தமாகச் சொல்லலாம், அல்லவா?

கிளாக்கன் : மிகப் பொருத்தமாகச் சொல்லலாம்.

சாக்ரடீஸ் : ஒருவன் தன் நாட்டிற்குச் செய்யும் மிகப் பெருங்கேடு அநீதியே என்று கூறலாம், அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இதுவே அநீதி, ஆனால் இதற்கு மாறாக வியாபாரியும் துணையாட்களும், காவலனும் தத்தம் வேலையைக் கவனிக்கும்போது அதுவே நீதியாகும்; மேலும் அந் நகரத்தை நீதியுள்ளதாக ஆக்கும்.

கிளாக்கன் : நீங்கள் கூறுவதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : அவசரப்பட்டுத் தக்க காரணம் இன்றி நாம் இதை ஒத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஆனால் சோதித்துப் பார்க்கும்போது நீதிபற்றி நாம் கொண்ட கருத்து தனி மனிதனிடத்திலும் நாட்டிலும் பொருத்தமாயுள்ளது என நிரூபித்துவிட்டால் சந்தேகத்திற்கு இடம் இராது. அப்படிச் சரியெனக் காணவிட்டால் நாம் மீண்டும் புது ஆராய்ச்சியை மேற்கொள்ள வேண்டிவரும். முதலில் நாம் தொடக்கத்தில் எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியைப் பூர்த்தி செய்வோம். நாம் அதைத் தொடங்கும்போது நீதியைப் பற்றிய ஆராய்வைப் பெரும் அளவில் செய்தால் பிறகு தனி நபரின் நிலைக்கு அந்த ஆராய்வு எளிதாகும் என்று நினைத்தோம் என்பது உனக்கு நினைவு இருக்கும். அந்தப் பெரும் அளவு நாட்டைக் குறித்தது. ஆகவே எவ்வளவு சிறப்பாக இருக்க முடியுமோ அவ்வளவு சிறந்த ஒரு நாட்டினை உருவாக்குகிறோம். அப்படி அதை உருவாக்குங்கால் ஒரு நல்ல நாட்டில் நீதி காணப்படும் என்னும் எண்ணம் ஏற்பட்டது. நாம் கண்ட இவ்வுண்மை தனி மனிதனுக்கும் செயல்பட வேண்டும். இவை இரண்டும் ஒத்துப்போனால் நாம் திருப்தி அடைவோம். அன்றித் தனி நபரிடத்து இது மாறாக

இருக்கிறது என்ருல், மீண்டும் நாட்டிற்கே திரும்பிவந்து, நீதியைப்பற்றி நமது எண்ணங்களை மீண்டும் பரிசோதிப்போம். இந்த இரண்டும் உராயும்போது வெளிச்சமும் ஏற்படலாம்; அப்பொழுது நாம் பெறும் காட்சியின் விளக்கத்தை நம் ஆன்மாவில் உறுதிப் படுத்தலாம்.

கிளாக்கன் : அது மிகவும் ஒழுங்கான முறைதான். நீங்கள் கூறுவது போலவே செய்வோம்.

சாக்ரடீஸ் : பெரியதும் சிறியதுமான இரு பொருள்கள் ஒரே பெயரால் அழைக்கப்படும்போது, அவை ஒன்றுபோல் தோன்றுகின்றனவா? அன்றி மாறுபடுகின்றனவா?

கிளாக்கன் : ஒன்றுபோலவே தோன்றுகின்றன.

சாக்ரடீஸ் : நீதி என்ற கருத்தைமட்டில் எடுத்துக்கொண்டால், நீதியுள்ளவன் நீதியுள்ள நாட்டைப் போன்றிருப்பான் அல்லவா?

கிளாக்கன் : ஆம், இருப்பான்.

சாக்ரடீஸ் : மேலும், நாட்டிலுள்ள மூன்று வகுப்பினரும், தத்தம் அலுவல்களை முறையே கவனித்தால் நாடு நீதியுடன் விளங்கும் என நாம் கருதினேம். இதே வகுப்பினர்கள் மற்ற உணர்ச்சிகளாலும் தன்னடக்கம் வீரம் விவேகம் ஆகியவை பொருந்தியவர் என்று கருதப்படுவதாலும் நாடு நீதியுடையதாகும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அதன்படியே, தனிமனிதனுக்கும் கொள்ள வேண்டும். நாட்டில் காணப்படுவது போன்று, அவனுடைய ஆன்மாவிலும் அம்மூன்று தத்துவங்கள் இருப்பதாகக் கொள்ளலாம். மேலும் மனிதனையும் நாட்டைப் போன்றே விவரிக்கலாம், ஏனெனில் அவனும் நாட்டைப் போலவே பாதிக்கப்படுகிருன் அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : நண்பரே! மீண்டும் ஓர் எளிய கேள்வியில் இறங்கிவிட்டோமே – ஆன்மாவிற்கு இந்த மூன்று தத்துவங்களும் உண்டா இல்லையா?

கிளாக்கன் : எளிய கேள்வியா? இல்லை சாக்ரடீஸ் ‘கடினமே நலம்’ என்று முதுமொழி கூறுகிறதல்லவா?

சாக்ரடீஸ் : மிகவும் உண்மை. நாம் மேற்கொள்ளும் முறை இப் பிரச்சினைக்குத் திட்டமான விடையை அளிக்கப் போதியது என நான் கருதவில்லை. உண்மையான முறை வேறொன்று ஆகும். அது நீளமானதும்கூட; இருந்தும் நம்முடைய முந்திய ஆராய்ச்சிக்குக் குறையாத ஒரு முடிவிற்கு நாம் வரக்கூடும்.

கிளாக்கன் : அத்துடன் நாம் மனநிறைவு அடையலாம் அல்லவா? இச்சூழலில், நான் மிகவும் மனநிறைவு அடைகிறேன்.

சாக்ரடீஸ் : நானும் அப்படியே மிக்க திருப்தி அடைவேன்.

கிளாக்கன் : பின் ஏன் சிந்தனையில் தொடர்ந்து செல்ல மயக்கமுற வேண்டும்?

சாக்ரடீஸ் : நம்மில் ஒவ்வொருவரிடத்தும் நாட்டில் காணப் படும் அதே தத்துவங்களும் பழக்கங்களும் காணப்படு கின்றன என்றும், தனி மனிதனிடமிருந்தே அவை அரசுக்கு வருகின்றன என்றும் அங்கீகரிக்கலாமல்லவா? மற்றைப்படி அவை எவ்விதம் அங்கு வரமுடியும்? உதாரணமாக உள்ளக்கிளர்ச்சியை எடுத்துக்கொள்வோம். இது நாட்டில் காணப்பட்டால், மக்களிடமிருந்து அது வரவில்லை எனக் கூறுதல் நகைப்பிற்கு இடம் தரும். எடுத்துக்காட்டாக இவ்வுணர்ச்சி திரேசியர்களிடமும், சைத்தியர்களிடமும், பொதுவாக வடபகுதி மக்களிடமும் உண்டு. இதேபோன்று அறிவைப் பற்றிய ஆர்வத்தையும் கூறலாம். இது நம் முடைய பகுதியில் சிறந்த குணமாகும். அல்லது பண ஆசையை எடுத்துக் கொண்டால், அது பினீசியர்க்கும் எகிப்தியருக்கும் உண்டு.

கிளாக்கன் : ஆம், நிச்சயமாக அப்படித்தான்.

சாக்ரடீஸ் : இதைப் புரிந்துகொள்வது கஷ்டமில்லை.

கிளாக்கன் : ஆம், எவ்விதக் கஷ்டமும் இல்லை.

சாக்ரடீஸ் : ஆனால் இந்தத் தத்துவங்கள் மூன்று அல்லது ஒன்று என்று நாம் கேட்க முற்படும்போதுதான், இந்தப் பிரச்சினை அவ்வளவு எளிதல்ல என்பது புரிகிறது. நாம் இயற்கையில் ஒரு பகுதியால் கற்று, மற்றொரு பகுதியால் வெருட்டப்பட்டு மூன்றாவது பகுதியால் உணர்ச்சிகளை நிறைவு செய்து வருகிறோமா, அல்லது ஒவ்வொரு

வகையான செயலிலும் ஆன்மா முழுதும் செயல்படுகிறதா, என்பதை முடிவு செய்வது கடினமாகவே உள்ளது.

கிளாக்கன் : ஆம், அங்குத்தான் சிரமம் அதிகம்.

சாக்ரடீஸ் : ஆகவே, இப்பொழுது அவை ஒன்ரு அல்லது வெவ்வேரு என்பதைத் தீர்மானிப்போம்.

கிளாக்கன் : நாம் எவ்வாறு செய்ய முடியும் ?

சாக்ரடீஸ் : ஒரே பொருள் ஒரே பகுதியைப் பொறுத்துத் தாக்கவும் தாக்கப்படவும் இயலாது. ஒரு காரியமானது ஒரே இடத்தில், ஒரே நேரத்தில் மாறுபட்டு நடக்காது; நடத்தப்படவும்மாட்டாது. ஆகையால் இப்படிப்பட்ட நேர்மாருன காரியங்கள் ஒரேமாதிரியாகக் காண்பவற்றில் இருந்தால் அவை உண்மையில் ஒன்றல்ல, வெவ்வேறு என்றே அறிகிரேம்.

கிளாக்கன் : மிகவும் நல்லது.

சாக்ரடீஸ் : ஒரு பொருள் ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் ஒரே பகுதியில் அசைந்தும் அசையாமலும் இருக்க முடியுமா ?

கிளாக்கன் : முற்றிலும் முடியாது.

சாக்ரடீஸ் : வழி தப்பாமலிருப்பதற்கு, விவாத விஷயத்தைத் திட்டமாகக் கூறுவோம். ஒரு மனிதன் நின்று கொண்டும், தலையையும் கைகளையும் அசைத்துக் கொண்டும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதைப் பார்த்த மற்றெருவன் ஒரு மனிதன் ஒரே நேரத்தில் அசைந்து கொண்டும் அசையா மலும் இருக்கிருன் என்று குறிப்பிட்டால், நாம் அதை மறுத்து அம்மனிதனின் ஒரு பாகம் அசைகிறது, மற்றெரு பாகம் அசையாமலிருக்கிறது என்று கூறுவோம்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இன்னும் நுட்பமாக வேற்றுமையை விளக்கும் பொருட்டு, பம்பரங்களின் பகுதிகள் மட்டுமல்ல முழுப் பம்பரங்களும் சுற்றும்போது ஒரே சமயத்தில் அசையாமலும் அசைந்தும் காண்கின்றன. (இதே போன்று ஒரே இடத்தில் சுழலும் எதைப்பற்றியும் இவ்வாறு கூறலாம்) என்று வாதி ஒருவன் மறுப்புக் கூறிஞல் நாம் அதை ஏற்கமாட்டோம்; ஏனெனில், இப்பொருள்களில் அசைவும் அசையாமையும் ஒரே பகுதியில் இல்லை. நாம் என்ன கூறவோமென்ருல், இவற்றிற்கு ஓர் அச்சும், சுற்று வட்டமும் உள்ளன. அச்சு

அசையாமல் இருக்கிறது; ஏனென்றால் நேர்ப் புறத்தில் மாறுதல் இல்லை; சுற்று வட்டமே சுழல்கிறது. ஆனால் சுழலும் போது அச்சானது வலப்புறமோ அல்லது இடப்புறமோ சாய்ந்தால் அன்றி முன்புறம் அல்லது பின்புறம் சாய்ந்தால், அது எவ்வகையில் அசைவற்றிருக்கிறது என்று கூறுவதற்கில்லை.

கிளாக்கன்: இதுவே சரியான விவரிப்பு ஆகும்.

சாக்ரடீஸ்: இனி இவ்விதமான எந்த மறுப்பும் நம்மைக் குழப்பாது. ஒரே பொருள் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் எதிர்மாறான வழிகளில் இயங்கவோ இயக்கவோ இயலும் என்று நம்மை எண்ணவைக்க முடியாது.

கிளாக்கன்: என் சிந்தனைப்படியும் ஒருபோதும் அவ்வாறு செய்ய முடியாது.

சாக்ரடீஸ்: இனியும் அவ்வாறான மறுப்புக்கள் எல்லாவற்றையும் ஆராயும்படி நாம் கட்டாயப் படுத்தப்படமாட்டோம். அப்படி ஆராய்ந்தாலும் அவை உண்மையல்ல என்று கூறத் தேவையில்லை. அவை பொருந்தாதவைகளே என்று எண்ணிவிடலாம். இந்த அடிப்படையிலேயே, நாம் முன்னேறுவோம். இந்த முடிவு தவறினால் இதிலிருந்து விளையும் எல்லா முடிவுகளையும் திரும்பப் பெறுவோம்.

கிளாக்கன்: ஆம், அதுவே சிறந்த முறையாகும்.

சாக்ரடீஸ்: இனி, ஒத்துக்கொள்ளுதலும் மாறுதலும், விருப்பமும் வெறுப்பும், வசீகரமும் மாறுபாடும் ஆகிய இவை எதிர்மாறானவை என்பதை ஒத்துக்கொள்கிறாய் அல்லவா? இவை செயல்படுவனவாகவோ அன்றிச் செயலற்றனவாகவோ இருக்கலாம். அவை எப்படியிருப்பினும் எதிர்மாறான குணங்கள் என்பதில் வித்தியாசமில்லை.

கிளாக்கன்: ஆம், தாங்கள் சொன்னது, போன்று அவை எதிர்மாறானவைகளே.

சாக்ரடீஸ்: நல்லது. பசி, தாகம், எண்ணம், விருப்பம், ஏன்? பொதுவாக எல்லாவிருப்பங்களுமே மேற்கூறிய இனத்தையே சார்ந்தவை என்று கூறுவாய் அல்லவா? மேலும் விரும்புவோனின் ஆன்மா தான் விரும்பும் பொருளையே தேடிக்கொண்டிருக்கும் அல்லது தான் பெற விழையும் பொருளைத் தன்னிடமே ஒருவன் இழுத்துக்கொள்வான்,

என்றும் கூறுவாய் அல்லவா? இல்லாவிடில் ஒருவன் தான் பெற விழையும் எதையும் தனக்கே கொடுக்கப்பட விரும்பினுல் அவனது மனம் அவ்விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் ஆர்வம் மிக்கு, யாரோ கேட்பதற்குத் தன் விருப்பத்தைத் தெரிவிப்பதுபோல் தன் தலையை ஆட்டி வெளிப்படுத்துவான் அல்லவா?

கிளாக்கன் : ஆம், மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : விருப்பமின்மை, வெறுப்பு ஆகியவை பற்றி உனது கருத்தென்ன? அவற்றை முன்பு கூறியவற்றேடு மாறுபாடுள்ள ஒதுக்குதல், வெறுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புறுத்த வேண்டாமா?

கிளாக்கன் : உண்மையாக அப்படித்தான்.

சாக்ரடீஸ் : விருப்பத்தைப்பற்றி இது ஒரு பொதுவான உண்மை என்று வைத்துக்கொண்டு, ஒரு வித விருப்பங்களை எடுத்துக் கொள்வோம். அதிலும் பசியையும் தாகத்தையும் முதலில் ஆராய்வோம். ஏனெனில் அவ்விரண்டும் எளிதில் அறியக் கூடியவை.

கிளாக்கன் : அவற்றையே எடுத்துக்கொள்வோம்.

சாக்ரடீஸ் : அவற்றில் ஒன்றின் நோக்கம் உணவு, மற்றென்றின் நோக்கம் பானம் அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆம் இங்கேதான் குறிப்பு வெளிப்படுகிறது. தாகம் என்பது ஆன்மாவின் பானம் சம்பந்தமான விருப்பம் அன்றே? பானத்தை மட்டில் சார்ந்தது அல்லவா? குளிர் அல்லது சூடு, சிறிது அல்லது மிகுதி, குறிப்பிட்ட பானத்தோடு தொடர்பு ஆகியவை இல்லை! உதாரணம். நீர் வேட்கை உஷ்ணத்தை ஒட்டி வருமாயின் குளிர்ந்த பானமே விரும்பப்படும்; குளிரை ஒட்டி வருமாயின் சூடான பானமே விரும்பப்படும். வேட்கை அதிகமாளுல் அதிகமாகவும், மிதமாக இருந்தால் மிதமாகவும் நீர் விரும்பப்படும். சாதாரண தாகம் சாதாரண பானத்தையே விரும்பும். உணவு பசியை ஆற்றுவது போன்று, பொதுவாக, பானம் தாக வேட்கையைத் திருப்தி செய்யும்.

கிளாக்கன் : ஆம், தாங்கள் கூறுவது போன்று எளிய விருப்

பங்கள் எளிய பொருள்களையும், விரிவடைந்த விருப்பங்கள் விரிவடைந்த உயர்ந்த பொருள்களையுமே சாரும்.

சாக்ரடீஸ் : ஆனால், இங்கு ஒரு குழப்பம் ஏற்படலாம். எந்த ஒரு மனிதனும் பானத்தைமட்டும் விரும்புவதில்லை, அவன் நல்ல பானத்தையே விரும்புகின்றான், உணவை மட்டும் விரும்புவதில்லை நல்ல உணவையே விரும்புகிறான் என்று என்னை எதிர்க்கும் மறுப்பாளர்களிடமிருந்து என்னைக் காத்துக்கொள்ள விழைகிறேன். நன்மையே பொதுவாக எல்லோராலும் விரும்பப்படுவது. நீர் வேட்கை என்பது ஒரு விருப்பம் ; எனவே அது நல்ல பானத்தையே விரும்பச் சொல்லும் ; இது போன்றே ஏனைய விருப்பங்களும் அமைந்துள்ளன.

கிளாக்கன் : சரி, எதிர்ப்பவரும் ஏதேனும் சொல்வதற்கு வைத்திருப்பார்களன்றோ ?

சாக்ரடீஸ் : இருந்தபோதிலும் தொடர்புள்ளவற்றுள் இருமருங்கிலும் ஒரு பண்பு சேர்ந்திருக்கும். மற்றவை எளியன ; அவற்றோடு தொடர்புள்ளவையும் எளியனவாயிருக்கும்.

கிளாக்கன் : தாங்கள் கூறுவது என்ன என்றே எனக்குப் புரியவில்லை.

சாக்ரடீஸ் : நல்லது ; சிறியது என்பதுடன் பெரியது என்பது தொடர்புடையதென்று உமக்குத் தெரியுமல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : மிக உயர்ந்ததும் அப்படித்தானே மிகத் தாழ்ந்ததற்கும் ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : சிலவேளை அதிகம் என்பது சிலவேளை குறைவு என்பதோடும், இனி வரும் அதிகம் என்பது இனிவரும் குறைவு என்பதோடும் தொடர்புள்ளன அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆகவே அதிகம், குறைவு என்பதும், இவ்வாறே இரட்டையும் பாதியும், கனமும் கனமின்மையும், வேகமும் வேகமின்மையும், சூடும் குளிரும் போன்ற பிறவும் தொடர்புள்ளன என்பது உண்மையல்லவா ? இது அவற்றுக்கெல்லாம் பொருந்தும், அல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இதே தத்துவம் அறிவியல் சாத்திரங்கள் சம்பந்தமாகவும் உண்மையல்லவா ? அறிவியலின் நோக்கம் அறிவு பெறுவதுதான். இதுவே அறிவியலின் உண்மையான வரையறை என்று வைத்துக்கொள்வோம். ஒரு குறிப்பிட்ட அறிவியல் நூலின் நோக்கம் ஒரு குறிப்பிட்ட வகையான அறிவைப் பெறுவதுதான். எடுத்துக்காட்டாக, வீடுகட்டுதல் சம்பந்தமான அறிவியல் சாத்திரம் ஒரு வகையான அறிவு. மேலும் அது மற்ற வகையினின்றும் மாறுபட்டது எனவே தான் அதைக் கட்டிடக் கலை என்கிறோம்.

கிளாக்கன் : உண்மையாகவே.

சாக்ரடீஸ் : மற்ற எதற்கும் இல்லாத ஒரு சிறந்த தன்மை இதற்கு உண்டு என்பதற்காக அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அதற்குக் குறிப்பிட்ட ஒருவிதப் பொருளுடன் தொடர்பு இருப்பதனால் அந்த சிறந்த தன்மை அதற்கு உண்டு. இவ்வுண்மை ஏனைய அறிவியல் சாத்திரங்களுக்கும் கலைகளுக்கும் பொருந்தும் அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : நான் தெளிவுபடப் பேசி இருந்தால் தொடர்புள்ளனபற்றி நான் கூறியவற்றிலிருந்து எனது பழைய கருத்தைப் புரிந்துகொண்டிருப்பாய். எனது தெளிவான எண்ணம் யாதெனில் தொடர்புள்ள இரண்டினுள் ஒரு சொல்லை மட்டும் எடுத்துக்கொண்டால் மற்றதும் அவ்வாறே தனியே எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஒன்று வரையறுக்கப் பட்டால் மற்றதொன்றும் வரையறுக்கப்படுகிறது. ஆனால் தொடர்புள்ளவை மாறுனவை அல்ல என்றோ, உடல்நல நூல் உடல் நலமுற்றதென்றோ, வியாதி நூல் வியாதியால் பீடிக்கப்-பட்டதென்றோ, நன்மை தீமையைப்பற்றிய அறிவியல் நல்லதும் கெட்டதுமாக இருக்குமென்றோ நான் கூறவில்லை. அறிவியல் என்ற பெயர் பொது முறையில் உபயோகிக்கப் படாமல் ஒரு குறிப்பிட்ட துறைசம்பந்தமாக உபயோகப் படுவதால், பிரஸ்தாப விஷயத்தில், அது உடல் நலம் நோய் இவற்றின் இயற்கையை வரையறை செய்கிறது. அதனால் அது அறிவியல் என்று பொதுவாக அழைக்கப் பெறுமல், மருத்துவம் எனப்பெறுகிறது.

கிளாக்கன் : இப்பொழுது எனக்கு நன்ருகப் புரிகிறது, தாங்கள் நினைப்பது போன்றே நானும் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : நீர் வேட்கை என்பதும் முக்கியமான தொடர்புடைய சொற்களில் ஒன்று என்பதை உணர்வாய் அல்லவா? ஏனெனில் அதன் தொடர்பு வெளிப்படையாகவே தெரிகின்றது.

கிளாக்கன் : ஆம், தாகம் என்பது பானத்துடன் தொடர்புடையதுதான்.

சாக்ரடீஸ் : ஒவ்வொரு வகையான நீர்வேட்கையும் ஒவ்வொரு வகையான பானத்துடன் தொடர்புடையது. ஆனல் நீர் வேட்கை என்பதைமட்டும் தனியே எடுத்துக்கொண்டால், அது மிகுதியையோ, குறைவையோ, நல்லதையோ, கெட்டதையோ மற்ற எதையுமே காட்டும் சிறப்பானதொரு பானத்தைக் குறிக்காமல் 'பானம்' என்பதையே பொதுவாகக் குறிப்பிடும் அல்லவா?

கிளாக்கன் : உண்மையாகவே.

சாக்ரடீஸ் : எனவே தாகமிக்க ஓர் ஆன்மா, அவனது தாகம் சம்பந்தப்பட்டவரை, பொதுவாக அதற்கான பானத்தையே விரும்புகிறது. மனிதனும் அதற்கே வேட்கையுற்று அதனையே அடைய முயலுகிருன் அல்லவா?

கிளாக்கன் : ஆம், அது வெளிப்படை.

சாக்ரடீஸ் : நீர் வேட்கை மிக்க ஓர் ஆன்மாவை, அதைப் பருகுவதினின்றும் ஒன்று அப்பால் இழுக்குமாஞல், அது நீர் பருக இருக்கும் ஒரு விலங்கு நீர் பருகவிழையும் தன்மையிலிருந்து மாறுபடுவதைப் போன்றது. ஏனெனில் நான் முன்னர்க் கூறியது போன்று ஒரே சமயத்தில் மாறுபட்ட செயல்களை ஒருவன் செய்ய முடியாதல்லவா?

கிளாக்கன் : ஆம், முடியாதுதான்.

சாக்ரடீஸ் : அது எப்படியெனில் ஒரு வில்லாளியின் கை ஒரே தருணத்தில் வில்லைத்தள்ளவும் இழுக்கவும் இயலாதோ, அப்படியே. ஆனல் ஒரு கைதள்ளும் மற்றொருகை அதனை இழுக்கும்.

கிளாக்கன் : மிகவும் பொருத்தமான குறிப்பு, இது.

சாக்ரடீஸ் : ஒருவன் தாக வேட்கை மிகுந்தும், குடிக்க மனமின்றி இருக்கமுடியுமல்லவா?

கிளாக்கன் : ஆம், அது அடிக்கடி நிகழ்கிறது.

சாக்ரடீஸ் : அப்படிப்பட்ட நிலையில் ஒருவர் என்ன சொல்லக் கூடும்? மனிதனைக் குடிக்கும்படித் தூண்டும் ஏதோ ஒன்றும், அதனைத் தடுக்கும் வேறொன்றும் அவனுடைய ஆன்மாவில் உள்ளன எனச் சொல்லமாட்டாயா? பின்னது முன்னதை விட வலுமிக்கதாக இருக்கலாம் அல்லவா?

கிளாக்கன் : அப்படித்தான் நான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : தடுக்கும் சக்தி, அறிவாற்றலிலிருந்தே பிறக்கின்றது; ஆனால் தூண்டும் சக்தி உணர்ச்சியிலிருந்தும் வியாதியிலிருந்துமே பிறக்கிறது.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆகவே, ஒன்றோடொன்று மாறுபட்ட இரண்டு தன்மைகள் உள்ளன என்று வைத்துக்கொள்வோம். எதனுதவியால் சிந்தனை செய்கிறானோ, அதனை ஆன்மாவின் அறிவுத்தத்துவம் என்போம். எதனுதவியால் நேசிக்கிறானோ, வேட்கையுறுகிறானோ அன்றி மற்ற விருப்பத்தால் அசைவுறுகின்றானோ அதனை அறிவற்ற பசித்தத்துவம் என்போம். அதுவே பலவித இன்பங்களுக்கும் திருப்தியளிக்கும் உணர்வாகும்.

கிளாக்கன் : ஆம், அவற்றைப் பொதுவாக வெவ்வேறானவை, என்றே கொள்வோம்.

சாக்ரடீஸ் : முடிவாகக் கூறுமிடத்து, ஆன்மாவில் இரு தத்துவங்கள் உள்ளன என்று கொள்வோம். இனி காமம் அல்லது ஆவியைப்பற்றி என்ன சொல்லலாம்? அது மூன்றாவது தத்துவமா, அன்றி முற்கூறியவற்றில் ஒன்றைப்போன்றதா?

கிளாக்கன் : விருப்பத்தைப் போன்றது, என்றுதான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : நான் கேட்ட கதையொன்று நினைவுக்கு வருகிறது. அக்கதையில் எனக்கு நம்பிக்கையுண்டு. அக்லேயன்[1] மகனாகிய லியோண்டியஸ்[2] ப்ரேயஸிலிருந்து வந்துகொண்டிருந்தான். வடக்குச் சுவரின் வெளிப்புறத்தில் தூக்கிலிடும் இடத்திற்கருகில் தரையில் சில சவங்கள் கிடப்பதைக் கண்டான். அவற்றைப்பார்க்க ஆர்வம் கொண்டான்; அதே சமயத்தில் ஒரு பயமும் அவற்றின் மேல் வெறுப்பும் அவனைப்

---

1. Aglaion 2. Leontius

பற்றிக்கொண்டன. சிறிது நேரம் மனப்போராட்டம் நடக்கவே, கண்களை மூடிக்கொண்டான். இறுதியில் விருப்பமே வென்றது. தன் கண்களை வலுவில் திறந்து கொண்டு, தீய ஆன்மாக்களே அழகான காட்சிகளை முழுவதும் காணுங்கள் '' என்று கூறிக்கொண்டு, அச்சவங்களிடையே ஓடினான்.

கிளாக்கன் : இக்கதையை நானும் கேட்டிருக்கிறேன்.

சாக்ரடீஸ் : இக்கதையினின்றும் பெறும் நீதியாதெனில் சில சமயங்களில் கோபமும் விருப்பமும், ஒன்றோடொன்று (இவை இரண்டும் வெவ்வேறனவை போன்று காணப்பட்டாலும்) போரிடுகின்றன.

கிளாக்கன் : ஆம், அதுவே கருத்து.

சாக்ரடீஸ் : ஒரு மனிதன் விருப்பங்கள் அவனது அறிவைப் பலாத்கார முறையில் அடக்கியாளும்பொழுது அவன் தன்னைத்தானே நிந்தித்துக் கொள்கிறான். இப்படிப் பல நிகழ்ச்சிகள் உள்ளன அல்லவா? அப்பொழுது தன்னிடத்தே உள்ள அந்த பலாத்காரம் குறித்து அவன் சினமடைகிறான். அவனுடைய ஆவி அறிவின் பக்கமே சாருகின்றது. அவனது நிலை ஒரு நாட்டினுள் ஏற்படும் கலவரங்கள் போன்று உள்ளது. விருப்பங்களை எதிர்க்கக்கூடாதென அறிவு தீர்மானிப்பது உனக்கோ மற்ற எவருக்கோ இயலாது என நான் நினைக்கிறேன்.

கிளாக்கன் : உண்மையில் இயலாதுதான்.

சாக்ரடீஸ் : ஒருவன் மற்றொருவனுக்குத்தான் தீங்கு விளைவித்து விட்டதாகக் கருதினால் அவன் எவ்வளவு சிறந்த கண்ணியம் மிக்கவனாக உள்ளானோ, அவ்வளவிற்கு அவன் துன்பத்தைக் குறித்துக் குறைவாகச் சினமடைவான். இத்துன்பம் பாதிக்கப்பட்டவன் மற்றவன்மேல் உண்டாக்கப்பட்ட பசி, குளிர் அல்லது மற்றைத் துன்பமாக இருக்கக் கூடும். இவற்றை அவன் நியாயம் எனக் கருதுகிறான். நான் கூறியதுபோல் அவற்றால் அவன் சினம் கொள்வதில்லை.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆனால் அநியாயமாகத் துன்பத்தை அனுபவிக்கிறான் என்று எண்ணும்போது உள்ளம் கொதிக்கிறான்.

அவன் நீதியின் பக்கத்திலே நிற்கிறதாகக் கருதுகிறுன். பசி, குளிர், வலி ஆகியவற்றை அனுபவிப்பதால் அதிக விடா முயற்சி செய்யவும் வெல்லவும் உறுதி கொள்கிறுன். அவனது நேர்மையான ஆவியானது பிறரைக் கொல்ல, அன்றிக் கொல்லப்படும் வரை அடங்குவதில்லே. அல்லது மேய்ப்பவனின் ஒலி கேட்கும்வரை அதாவது அவனது அறிவாற்றல் ‘இனி குரைக்காதே’ என்று சொல்லும் வரை அடங்காது.

கிளாக்கன் : இந்த எடுத்துக் காட்டு மிகமிகச் சிறந்தது. நம் நாட்டில் நாம் கூறியது போல் ஆட்சியாளர்களாகிய மேய்ப்பவர்களின் நாய்கள் போல உதவியாளர்கள் இருக்க வேண்டும்.

சாக்ரடீஸ் : நீ என்னே நன்கு புரிந்து கொண்டுவிட்டாய்; எனினும் இன்னும் ஒரு விஷயத்தை நீ கவனிக்க வேண்டும்.

கிளாக்கன் : எந்த விஷயத்தை?

சாக்ரடீஸ் : ஆவல் அல்லது ஆவி முதலில் ஒருவகையான விருப்பம்போல் காணப்பட்டது என்பது உமக்கு நினைவிருக்கும்; ஆனுல் இப்பொழுது இதற்கு நேர்மாருகக் கூற வேண்டி இருக்கிறது. ஆன்ம முரண்பாட்டில், ஆவியானது அறிவாற்றலின் பக்கமே சார்கின்றது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆனுல் மற்ருெரு வினு எழுகின்றது. ஆர்வம் என்பது அறிவாற்றலிலிருந்தும் வேறுபட்டதா அன்றி ஒரு வகையான அறிவாற்றலா என்பதுதான் அவ்வினு. பின் கூறியது உண்மையாயின், ஆன்மாவில் மூன்று தத்துவங்களுக்குப் பதிலாக அறிவு, இச்சை எனும் இரண்டுதான் இருக்கும். இல்லாவிடில் வியாபாரிகள், உதவியாளர், ஆலோசகர் என்ற மூன்று வகுப்பினரை நாடு பெற்றது போல ஆன்மாவிலும் மூன்ருவது ஒன்று இருக்கலாம். அது தீய கல்வியால் பாதிக்கப்படாத வரையிலும் அறிவாற்றலின் துணேயாக இருக்கலாம் அல்லவா?

கிளாக்கன் : ஆம், மூன்ருவதொன்று இருக்கத்தான் வேண்டும்.

சாக்ரடீஸ் : ஆம், ஏற்கனவே காட்டியபடி? விருப்பத்தினின்றும் வேருக இருக்கின்ற ஆவலானது, அறிவாற்றலிலிருந்தும் வேருக இருந்தால், மூன்று தத்துவங்கள் இருக்கும்.

கிளாக்கன் : அதை எளிதாக நிரூபிக்கலாம். குழந்தைகள் பிறந்தவுடனே அவர்களிடம் ஆவி இருப்பதைக் காணலாம். ஆனல் அவர்களில் சிலர் தம் அறிவைப் பயன்படுத்தும் நிலேக்கு வருவதில்லே. பெரும்பாலான குழந்தைகள் காலம் தாழ்த்தே அறிவுடையவர்களாகின்றுர்கள்.

சாக்ரடீஸ் : மிகவும் சிறந்த பேச்சு. காட்டு விலங்குகளிடமும் ஆர்வத்தைக் காணலாம். இது நீங்கள் கூறியதற்கு மற்ருெரு நிரூபணம். ஹோமரின் சொற்கள் மீண்டும் நினேவுக்கு வருகின்றன ; அவற்றை நாம் முன்னரே எடுத்துக்காட்டி விட்டோம் : " அவன் தன் மார்பை அடித்து, அதன் மூலம் தன் ஆன்மாவைக் கடிந்துகொண்டான்." இக்குறிப்பில் நன்மையையும் தீமையையும் ஆராயும் அறிவு வெறுக்கப் படும் அறிவற்ற சினத்தினின்றும் வேருனது என ஹோமர் வெகு தெளிவாகக் கூறியுள்ளார் அல்லவா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே மிகுந்த தடுமாற்றத்திற்குப்பின் கரையை அடைந்துவிட்டோம். ஆக, நாட்டிலுள்ள தத்துவங்கள் தனி மனிதன் மாட்டும் உள்ளன என்றும், அவை மூன்று என்றும் நாம் கண்டுவிட்டோம்.

கிளாக்கன் : மிகவும் நல்லது.

சாக்ரடீஸ் : ஆகவே நாட்டை எது அறிவுள்ளதாகச் செய் கின்றதோ அதுவே தனி மனிதனேயும் அறிவுள்ளவனுக்கு கின்றது என்று சொல்ல வேண்டாமா ?

கிளாக்கன் : நிச்சயமாக அப்படியே.

சாக்ரடீஸ் : எந்த ஒரு பண்பு நாட்டை வீரமிக்கதாக்கு கின்றதோ அதுவே தனி மனிதனேயும் வீரனுக்குகின்றது. மற்ற எல்லா நற்குணங்கள் சம்பந்தப்பட்ட வரையிலும், தனி மனிதனுக்கும் நாட்டிற்கும் இதே போன்று தொடர்பு கள்' உள்ளன.

கிளாக்கன் : உறுதியாக அப்படித்தான்.

சாக்ரடீஸ் : ஆகவே, எவ்வாறு நாடு நீதியுள்ளதாக உள்ளதோ

அவ்வாறே தனி மனிதனும் நீதியுள்ளவனுக இருப்பான் என்பதை நாம் ஒத்துக்கொள்கிறோமல்லவா?

கிளாக்கன் : இது முன்கூறியதிலிருந்து வரும் தொடர் ஆகும்.

சாக்ரடீஸ் : மூன்று வகுப்பினரும் தம்தம் அலுவல்களைக் கவனிப்பதன் மூலம் நீதியை நிலைநாட்டலாம் என்பதை மறக்க முடியாது அல்லவா?

கிளாக்கன் : நாம் இதை மறக்க முடியாது.

சாக்ரடீஸ் : பல்வேறு குணங்களும் தமது வேலையைச் செய்வதன் மூலமே ஒருவன் தன் வேலையைச் செய்பவனுவான். நீதியுள்ளவனுக இருப்பவன், தனக்கு உரிய தொழிலைச் செய்வான் என்பதையும் நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

கிளாக்கன் : ஆம், அதையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

சாக்ரடீஸ் : ஞானமாக இருக்கும் அறிவாற்றலே ஆன்மா முழுவதையும் கண்காணித்து, ஆட்சியாளராகவும் இருக்க வேண்டுமல்லவா? ஆவி அல்லது ஆர்வம் அதன் கீழடங்கிய உதவியாளராக இருக்கவேண்டும் அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக அப்படித்தான்.

சாக்ரடீஸ் : இன்னிசை, உடற்பயிற்சி இவை இரண்டும் சேர்ந்து செயல் புரிந்து அறிவாற்றலையும், ஆர்வத்தையும் இணைத்து வைக்கும் என நாம் முன்னர்க் கூறினேம். நல்ல சொற்களாலும், போதனைகளாலும் அறிவு திடப்படுத்தப் படுகின்றது. மேலும் ஒற்றுமை உணர்வும் அலைஅலையான அசைவுமே ஒருவனின் கட்டுப்பாடற்ற உணர்ச்சியின் தன்மையை அடக்கி, சாந்தப்படுத்தி நாகரிகமடையச் செய்கின்றன.

கிளாக்கன் : முற்றிலும் சரி.

சாக்ரடீஸ் : இவ்வாறு வளர்க்கப்பட்டு, போதிக்கப்பட்ட அறிவாற்றலும், ஆவியும் தத்தம் அலுவல்கள் என்ன என்பதை அறிந்துகொண்டு, இச்சையின் மேல் ஆட்சி செலுத்தும். இந்த இச்சையே நமது ஆன்மாவின் பெரும் பகுதியாகவும் எளிதில் திருப்தி செய்யாத இயல்புடையதாகவும் இருக்கிறது. இதன்மேல் அவை காவல் செய்யும். இல்லாவிடில் உடலின் பங்குகளால் அது பலமிக்கதாகவும்

பெரியதாகவும் மாறிவிடும். அப்பொழுது அது தன் சொந்த எல்லையைக் கடந்து, தன் இயற்கையான ஆட்சிக்கப்பாற் பட்டவைகளையும் அடிமைப்படுத்தி ஆள முயன்று, மனிதன் வாழ்வு முழுவதையும் கவிழ்த்துவிடுமல்லவா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஒன்று ஆலோசனை கூற, மற்றொன்று தனது தலைவன் கீழ்நின்று துணிவுடன் போரிட்டுத் திறமையுடன் அவன் ஆணைகளையும் ஆலோசனைகளையும் நிறைவேற்ற, இவ்விரண்டும்'ஒன்று கூடினால் முழுஆன்மா, உடல் முழுமை யையும் வெளியிலிருந்து வரும் தாக்குதல்களினின்றும் காப்பாற்றும், அல்லவா !

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : எவன் ஒருவன் தன்னுடைய ஆவியானது இன்பத் திலும் துன்பத்திலும் அறிவின் வழிநின்று எதைக்கண்டு அஞ்சவேண்டும் எதற்கு அஞ்சக்கூடாது என்பதை உறுதி யாகத் துணியும் வண்ணம் அதனை நிலைநிறுத்திக் கொள்ளு கிறானோ அவனே தைரியசாலியாகிறான்.

கிளாக்கன் : மிகவும் சரி.

சாக்ரடீஸ் : எவனிடம் அந்தச்சிறு பாகமாகிய அறிவு ஆட்சி செலுத்துகின்றதோ, ஆணைகளைப் பிரகடனப்படுத்து கின்றதோ அவனே ஞானி எனப்படுகிறான். அந்த அறி விற்கு இந்த மூன்றில் ஒவ்வொன்றிற்கும் எது நல்லது என் றும், மொத்தத்தில் எது நல்லது என்றும், தெரியுமல்லவா ?

கிளாக்கன் : உறுதியாக.

சாக்ரடீஸ் : இப்பண்புகள் நன்கிணைந்த ஒருவனையே நடுநிலை யாளன் என்றாய் அல்லவா ? தம்மீது அறிவே ஆட்சி செலுத்த அவனது ஆவியும் விருப்பமும் தீர்மானிக்கும். மேலும் அவை கலகம் செய்யமாட்டா.

கிளாக்கன் : உண்மையாகவே தனி மனிதனிடத்தும் நாட்டி லும் நடுவுநிலையைப்பற்றிய நிலை இதுதான்.

சாக்ரடீஸ் : எப்படி, எந்தப் பண்பின் அடிப்படையில் ஒரு மனிதன் நீதிமானாகிறான் என்பதை நாம் திரும்பத் திரும்ப விவரித்துள்ளோம்.

கிளாக்கன் : ஆம், திண்ணமாக.

சாக்ரடீஸ் : நீதியானது தனி மனிதனிடம் ஒளிமங்கியுள்ளதா? அதனுருவம் மாறியுள்ளதா? அல்லது நாட்டில் காணப் படுவதுபோலவே ;தனி மனிதனிடத்தும் அது அவ்வாறே விளங்குகின்றதா?

கிளாக்கன் : என்னுடைய எண்ணப்படி இரண்டிற்கும் எவ்வித வேறுபாடும் இல்லை.

சாக்ரடீஸ் : இதுபற்றி ஏதேனும் ஐயப்பாடு நமது மனத்தில் இருப்பின் யாவரும் அறிந்த ஒரு சில உவமைகள் மூலம் நாம் விளக்கித் தீர்த்து விடலாம்.

கிளாக்கன் : எந்த உவமைகளைக் குறிக்கிறீர்கள்?

சாக்ரடீஸ் : ஒரு நீதி மிக்க நாடு. அல்லது நீதியின் தத்துவங் களை நன்கு பயின்ற ஒருவன் தன்னிடம் பாதுகாப்புக் கென்று வைக்கப்பட்ட பொன்னையும் வெள்ளியையும் நீதி யற்றவனைப்போல எளிதில் எடுத்துக்கொள்ளமாட்டான் அல்லவா? என்று கேட்டால் இதை எவரேனும் மறுக்க முடியுமா?

கிளாக்கன் : ஒருவரும் மறுக்க முடியாது.

சாக்ரடீஸ் : நீதிமிக்க ஒருவன் கடவுளுக்குத் துரோகமாக, நண்பர்கட்கு அன்றி நாட்டிற்கு விரோதமாகத் திருடவோ, கண்ணிவைக்கவோ செய்து குற்றவாளியாகக் கூடுமோ?

கிளாக்கன் : ஒருபோதும் செய்யமாட்டான்.

சாக்ரடீஸ் : பிரமாணம் எடுத்தவை, ஒத்துக்கொண்டவைகளை மீறி நடந்து நம்பிக்கையிழக்கும்படி அவன் நடப்பானு?

கிளாக்கன் : மாட்டான்.

சாக்ரடீஸ் : விபசாரம் செய்வதோ, பெற்றோர்களிடம் மரியா தைக் குறைவாய் நடப்பதோ, சமயம் பற்றிய சடங்குகளை நிறைவேற்ருது விட்டுவிடுவதோ முடியாதல்லவா?

கிளாக்கன் : முடியாது.

சாக்ரடீஸ் : இதற்கெல்லாம் காரணம் அவனுடைய ஒவ்வொரு பகுதியும் அதனதன் வேலையைச் செவ்வனே செய்கின்றது. அந்த வேலை ஆட்சி செய்வதாகவோ அன்றி ஆளப்படுவ தாகவோ இருக்கலாம், அல்லவா?

கிளாக்கன் : அப்படித்தான்.

சாக்ரடீஸ் : ஆகவே மனிதனையும் நாட்டையும் நீதியுள்ளவர்களாக ஆக்கும் பண்பு நீதி என்று உணர்ந்து திருப்தி அடைந்துவிட்டாயா? அன்றி அது வேறு என்று அதைக் காண விழைகின்றாயா?

கிளாக்கன் : உண்மையில் நான் அப்படி நினைக்கவில்லை.

சாக்ரடீஸ் : நமது கனவு நனவாகி விட்டது. ஒரு தெய்வீக சக்தி நம்மை நீதியின் அடிப்படையான உருவத்தை அறியச் செய்கின்றது என்று நாம் தொடக்கத்திலேயே எண்ணியது நிரூபிக்கப்பட்டு விட்டதல்லவா?

கிளாக்கன் : ஆம், நிச்சயமாக.

சாக்ரடீஸ் : தொழிலின் பிரிவுகள்படி தச்சன், தோல் வேலை செய்பவன் போன்றோர் தத்தம் வேலையைச் செய்வதும், பிறர் அலுவல்களில் தலையிடாமல் இருப்பதும் நீதியின் நிழலே ஆகும். இக்காரணம் பற்றியே தொழில் பிரிவு பயனுள்ளதல்லவா?

கிளாக்கன் : இது தெளிவு.

சாக்ரடீஸ் : உண்மையில் நீதியானது மனிதனின் வெளிப்புற நிலையன்று, ஆனால் அது அவனது உள்ளம் சம்பந்தப்பட்டது ஆகும். உள்ளத்துத் தன்மையே உண்மையான மனிதத் தன்மையாகும். நீதியுள்ளோன் தன் மனதில் பல செயல்கள் ஒன்றோடொன்று குறுக்கிடாமல் பார்த்துக்கொள்கிறான். மேலும் ஒன்று மற்றொன்றின் வேலையைச் செய்வதைத் தடுக்கிறான். 'தனது அக வாழ்வைச் செப்பனிடுகிறான். ஒழுங்கு படுத்துகிறான். அவன் தனக்குத்தானே தலைவனாகிறான். அவனே அவனுக்குச் சட்டமாக அமைகிறான். அவன்பால் அமைதி நிலைத்திருக்கிறது. மூன்று தத்துவங்களையும் தன்னுள்ளத்திலேயே இணைத்து விடுகிறான். இவை மூன்றும் நல்லிசையின், மேல், கீழ், நடு, ஒலிகளுக்கு ஒப்பிடலாம். இவ்வாறு பலவாறாக இன்றி ஒன்றாக இணைந்த நிலையை— மிதமானதும், ஒத்துப்போகக் கூடியதுமான நிலையை— அடைந்ததும் அவன் இயங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் செயல்படுகிறான். அச்செயல், பொருள்பற்றியோ, உடல் பற்றியோ, அரசியல் பற்றியோ அன்றித் தனது சொந்த வாழ்வு பற்றியோ இருக்கும். அவன் எப்பொழுதும் சிந்தித்துக்கொண்டும்,'தனது உள்ளத்து ஒற்றுமையை நிலை நிறுத்திக்கொண்டும், நீதியும் நன்மையும் அளிக்கும் செயல்

களைச் செய்துகொண்டும் இருப்பான். இவற்றிற்கெல்லாம் தலைமைதாங்கும் அறிவை ஞானம் என்பான். இந்நிலையைக் குலைக்கும் செய்கையை அநியாயம் என்பான்; மேலும் அது பற்றிய அறிவை அறியாமை என்பான்.

கிளாக்கன் : சாக்ரடீஸ் அவர்களே! உண்மையை உள்ளவாறு உரைத்துவிட்டீர்களே.

சாக்ரடீஸ் : மிகவும் நல்லது. நீதியுள்ளோனையும் நேர்மையான நாட்டையும் நாம் உறுதிப்படுத்தி, அவற்றில் காணப்படும் நீதியை உறுதிப்படுத்திவிட்டோம் என்ருல் நாம் பொய்யர்களாக ஆக மாட்டோம் அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : அப்படி நாம் கூறமுடியுமா?

கிளாக்கன் : அப்படியே நாம் கூறலாம்.

சாக்ரடீஸ் : இனி நாம் அநீதியைப்பற்றிக் கவனிப்போம்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அநீதி என்பது மூன்று தத்துவங்களிடையே எழும்பும் பூசல் அல்லவா? அது அவசியமின்றிக் குறுக்கிடும் செயலைக் குறிக்கும். ஆன்மாவின் ஒரு பகுதியானது முழு ஆன்மாவிற்கும் விரோதமாகக் கிளம்பிச் சட்ட பூர்வ மற்ற அதிகாரத்தை வற்புறுத்தலாகும். இது அரசிளங் குமரனுக்கு எதிராகச் சாதாரணக் குடிமகன் புரட்சி செய்தலையொக்கும். இக்குழப்பமும், ஏமாற்றமும், அமைதியற்ற தன்மையும், கோழைத்தனமும், அறிவின்மையும் மற்ற ஒழுக்கக் கேடுகளும் நியாயமற்ற செயல்கள் அல்லவா?

கிளாக்கன் : ஆம், அப்படித்தான்.

சாக்ரடீஸ் : நீதி, அநீதி ஆகியவற்றின் தன்மைகளை அறிந்துவிட்டால், அநீதியாக நடத்தல் நீதியாக நடத்தல் என்பன தெளிவாக விளங்குமன்ருே?

கிளாக்கன் : தாங்கள் என்ன சொல்கின்றீர்கள்?

சாக்ரடீஸ் : ஏன்? அவை நலமின்மை, நற்சுகம் போன்றவை. உடம்பில் இக்குணங்கள் போன்றே அநீதியும் நீதியும் ஆன்மாவில் உள்ளன.

கிளாக்கன் : அதெப்படி?

சாக்ரடீஸ்: ஏன்? எது நன்மையோ அது நற்சுகத்தையும், எது தீமையோ அது நோயையும் உண்டாக்கும்.

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: நியாயமான செயல்கள் நீதியையும், அநியாயமான செயல்கள் அநீதியையுமே தோற்றுவிக்கும்.

கிளாக்கன்: அது நிச்சயம்.

சாக்ரடீஸ்: இயற்கை ஒழுங்கையும், அரசையும் உடலில் ஒரு பகுதியில் தோன்றச் செய்து, மற்றப் பாகங்களிலும் தோற்றுவிப்பதே நற்சுகமாகும். மேலும் இயற்கைக்கு முரணான நிலையை உண்டாக்குவதே நோயை உண்டாக்கும்.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: அதுபோலவே நீதியை, இயற்கையான ஒழுங்கையும் அரசையும் ஆன்மாவின் ஒரு பகுதியைக்கொண்டு மற்ற பகுதிகளில் தோன்றச் செய்யலாம் அல்லவா? மேலும் அநீதியைத் தோற்றுவிப்பது இயற்கைக்கு முரணான தன்மையை உண்டாக்கும் அல்லவா?

கிளாக்கன்: அப்படித்தான்.

சாக்ரடீஸ்: நல்லொழுக்கம் என்பது ஆன்மாவின் நன்னிலையைக் குறிக்கும். தீய ஒழுக்கம் என்பது ஆன்மாவின் நலக் குறைவு, வலுக்குறைவு, அங்கக் குறைவு ஆகும் அல்லவா?

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: நற் பழக்கங்கள் நல்லொழுக்கத்திற்கும், தீய பழக்கங்கள் தீய ஒழுக்கத்திற்கும் வழி நிற்கும் அல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: ஆயினும் நியாய, அநியாயத்தின் தன்மைபற்றிய நமது பழைய வினாவிற்கு நாம் இன்னும் விடைகாணவில்லை. இவற்றில் எது இலாபகரம் ஆனது? கடவுளோ மனிதனோ பார்த்தாலும் பாராவிடினும் நேர்மையாக நடத்தல், அநியாயமாக நடத்தல் இவற்றில் எது நல்லது? நியாயமற்ற தன்மை தண்டிக்கப்படாமலும் சீர்திருத்தப்படாமலும் இருந்தால் நன்மையா?

கிளாக்கன்: சாக்ரடீஸ் அவர்களே! இந்த வினா இப்பொழுது நகைப்பிற்கிடமாகும் என்பது எனது எண்ணம். உடலின் அமைப்பானது போனபிறகு எந்தவித உயர்ந்த புலாலுண

வும், பான வகைகளும், பொருளும், சக்தியும் அதை என்ன தான் தேற்ற முடிந்தாலும் அது நிலைத்து நிற்காது. உயிர்த் தத்துவத்தின் அடிப்படையே பறிக்கப்பட்டுக் கெடுக்கப் பட்டால், நீதியும் ஒழுக்கமும் அவன் தேடவில்லை என்றால்— நீதியற்ற நிலை ஒழுக்கக் கேட்டை தவிர்க்கவில்லை என்றால்— அவன் வாழ்க்கை வாழ உகந்ததா?

சாக்ரடீஸ் : ஆம், நீ கூறுகின்றவண்ணம் இவ்வினா நகைப்பிற் கிடமானது. இருந்தும் நாம் உண்மையைப் பார்க்கக் கூடிய அளவிற்கு நெருங்கிவிட்டோம். இங்ஙனம் மிகத் தெளிவாக நம்முடைய கண்களாலேயே உண்மையைப் பார்க்க முடிவதால் வழியில் மயங்கிவிழாமல் இருக்க முயற்சிப்போம்.

கிளாக்கன் : நிச்சயமாக மயங்கமாட்டோம்.

சாக்ரடீஸ் : இங்கேயுள்ள பல தீய ஒழுக்கங்களைப் பார். அவற்றில் எவை பார்க்கத்தக்கனவோ அவற்றை நன்கு கவனி.

கிளாக்கன் : நான் தங்கள் சொற்களைப் புரிந்துகொண்டேன். மேலே சொல்லுங்கள்.

சாக்ரடீஸ் : நமது விவாதம் ஒரு நிலைக்கு வந்துவிட்டதாக எனக்குத் தோன்றுகின்றது. அந்த உயர்ந்த கோபுரத்தி லிருந்து ஒருவன் பார்த்தால் நல்லொழுக்கம் ஒன்றாகவும், தீயொழுக்கம் பலவாகவும் தோன்றும். அவற்றுள் நான்கு குறிப்பிடத்தக்கவை. அவற்றைக் கவனிக்க வேண்டும்.

கிளாக்கன் : தாங்கள் கூறுவது விளங்கவில்லையே.

சாக்ரடீஸ் : நான் கூறுவது யாதெனில் நாடுகளில் எத்துணை வகைகளுண்டோ அத்துணை வகை ஆன்மாக்களிலும் உண்டு.

கிளாக்கன் : எத்தனை வகைகள்?

சாக்ரடீஸ் : ஐவகை நாடுகளும் ஐவகை ஆன்மாக்களும் உள்ளன.

கிளாக்கன் : அவை யாவை?

சாக்ரடீஸ் : முதலாவது நாம் முன்னரே விவரித்தது. அதற்கு இரு பெயர்கள் கூறலாம். அதாவது அரசனது ஆட்சி

அல்லது பிரபுக்களின் ஆட்சி. இப்பெயர் ஆட்சியாளரின் எண்ணிக்கையைப் பொறுத்தது.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: ஆனால், எனது கருத்துப்படி இவ்விரு பெயர்களும் ஒன்றையே குறிப்பிடுகின்றன. ஏனெனில் அரசானது ஒருவனிடமோ அன்றிப் பலரிடமோ இருந்தாலும், ஆட்சியாளருக்கு நாம் திட்டமிட்டபடிப் பயிற்சி அளிக்கப்பட்டிருப்பின் நாட்டின் அடிப்படைச் சட்டங்கள் நன்கு நிலைக்கும்.

கிளாக்கன்: இது மிகவும் உண்மை.

ஐந்தாம் புத்தகம்

சாக்ரடீஸ் : உண்மையான நல்ல நகரம் அல்லது அரசு இத்தகையதாகும். நல்ல உண்மையான மனிதனும் இவ்வாறே இருப்பான். இது சரியானால் பிற அனைத்தும் தவறாகும். தீமை என்பது அரசின் கட்டுக்கோப்பை மட்டுமல்ல, தனி மனிதனது மனத்தின் கட்டுப்பாட்டையும் குலைப்பது. அது நான்கு வகைகளில் வெளிப்படும்.

கிளாக்கன் : அவை யாவை?

சாக்ரடீஸ் : இந்தத் தீமையில் நான்கு வகைகளும் எவ்வாறு ஒன்றையொன்று தொடர்ந்து வந்ததாக எனக்குத் தோன்றியதோ அந்த நிரலை நான் சொல்ல முனைந்தபொழுது அதைமாந்தசுக்குச் சற்று அப்பால் அமர்ந்திருந்த பாலிமார்க்கசு ஏதோ அவனிடம் மெல்லப் பேசலானான். தனது கையை நீட்டி அவனது மேலங்கியினைப் பிடித்து அவனைத் தன்பால் இழுத்து, அவனிடம் மிகநெருக்கமாக இருக்கும் வகையில் நன்கு குனிந்து அவன் காதில் எதையோ சொன்னான். அதில் "அவரை விட்டுவிடுவோமா; இல்லாவிடில் நாம் என் செய்வோம்?" என்ற சொற்கள் மட்டுமே என் காதில் விழுந்தன.

அதைமாந்தஸ் : (சற்று உரத்த குரலில்) நிச்சயமாக விட்டுவிடக் கூடாது.

சாக்ரடீஸ் : நீங்கள் விடமறுப்பது யாரை?

அதைமாந்தஸ் : உங்களைத்தான்.

சாக்ரடீஸ் : சிறப்பாக என்னைமட்டும் விட்டுவிட மறுப்பது ஏன்?

அதைமாந்தஸ்: காரணம், நீங்கள் சோம்பல் மிகுந்தவராய், விவாதத்தில் கதையின் முக்கியப் பகுதியான ஓர் அத்தியாய முழுவதையுமே விட்டுவிட்டு, எங்களை ஏமாற்றப் பார்க்கிறீர்கள் என நாங்கள் கருதுகிறோம். மேற்போக்காக நீங்கள் விவாதிப்பதை நாங்கள் கவனிக்கமாட்டோம் என்று கருதுகிறீர்கள் போலும். பெண்டிர், குழந்தைகள் இவர்களைப் பொறுத்த அளவில், ''நண்பர்கள் எல்லாவற்றையும் பொதுவுடைமையாகக் கொள்வர்'' என்ற பழமொழி பொருந்தும் என்பது சொல்லாமலே யாவருக்கும் விளங்கிக் கொள்ளக் கூடிய உண்மை எனக் கருதுகிறீர்கள் போலும்.

சாக்ரடீஸ்: அப்படியாயின் என் கருத்து சரியில்லையோ, அதைமாந்தஸ்?

அதைமாந்தஸ்: ஆம், ஆனல் குறிப்பிட்ட இந்த விஷயத்தில் எது சரியானதோ அதை மற்றவற்றைப்போலவே விளக்க வேண்டும்; ஏனெனில் சமுதாயம் பலவகைப்பட்டிருக்கலாம். ஆதலின் எவ்வகையான சமுதாயத்தை நீங்கள் கருதுகிறீர்கள் என்பதை அருள்கூர்ந்து சொல்லுங்கள். உங்களது குடிமக்களின் இல்வாழ்க்கையைப் பற்றிச் சில விஷயங்களும், அவர்கள் எவ்வாறு மக்களைப் பெறுவர், பெற்றபின் எப்படி அவர்களை வளர்ப்பர், பொதுவாகப் பெண்டிரும் குழந்தைகளும் அடங்கிய சமுதாயத்தின் இயல்பு என்ன என்பவை பற்றிச் சொல்வீர்கள் என்று நெடுநேரமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஏனெனில் இவற்றைச் சரியாகவோ தவருகவோ கண்காணிப்பது அரசின் நன்மையையோ தீமையையோ பெரிதும் பாதிக்கும் என நாங்கள் கருதுகிறோம். இனி அந்தப் பிரச்சினை இன்னும் முடிவடையாதிருக்கையில் நீங்கள் வேறொரு அரசைப்பற்றிப் பேசத் தொடங்கியதால், நீங்கள் செவிமடுத்ததுபோல, இவற்றையெல்லாம் தெளிவுபடக் கூறும்வரையில் உங்களைப் போக விடப் போவதில்லை என நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

கிளாக்கன்: இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிப்பதாக நீங்கள் கருதலாம்.

திராசிமாக்கஸ்: ஏன் காலத்தை வீணகக் கழிக்கவேண்டும்? நாங்களனைவரும் இதையே ஒருமனதாக ஒத்துக் கொண்டோம் என நீங்கள் கொள்ளலாம்.

சாக்ரடீஸ்: இவ்வாறு என்னைத் தாக்குவதின் விளைவு என்ன

என்பதை நீங்கள் உணரவில்லே. அரசைப் பற்றி நீங்கள் எழுப்பும் வாதம் மிக விந்தையானது. நான் இதை முடித்து விட்டேன் என்று எண்ணி, இந்தப் பிரச்சினைக்கு ஓய்வு கொடுத்துவிட்டோம் என்று கருதி, நான் சொன்னதை நீங்கள் ஒப்புக்கொண்டது என்பேறு என்று அகமகிழ்ந்த நேரத்தில், அடிப்படையிலிருந்தே மீண்டும் தொடங்குமாறு என்னைக் கேட்கிறீர்கள். தேன்வண்டின் கூட்டைக் கிளறு வதைப்போல் சொற்போரைக் கிளறிவிடுகிறீர்கள் என்பதை நீங்கள் உணரவில்லே. சூழ்ந்துவரும் இவ்விடுக்கணை முன்னரே ஓர்ந்துணர்ந்து விளக்க முயன்றேன்,

திராசிமாக்கஸ் : நாம் எந்த நோக்கத்திற்காக இங்கு வந்திருக் கிறேம் என்று நீங்கள் எண்ணுகிறீர்கள் ? பொன்னே நாடியா அல்லது விவாதத்தைக் கேட்கவா ?

சாக்ரடீஸ் : ஆம், ஆனல் விவாதத்திற்கு ஓர் எல்லே வேண்டும்.

கிளாக்கன் : ஆம், சாக்ரடீஸ் ! இத்தகைய விவாதங்களேக் கேட் பதற்கு வாழ்க்கை முழுவதையுமே எல்லேயாக அறிஞர் பெரு மக்கள் வகுத்திருக்கின்றனர். எங்களேப்பற்றிக் கவலேப்பட வேண்டாம். மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு இந்தக் கேள்விக்கு உங்களுக்குகந்த வழியிலேயே விடை கூறுங்கள். பெண்டிரும் குழந்தைகளும் அடங்கிய எத்தகைய சமுதாயம் நமது காப்பாளரிடையே நிலவவேண்டும் ? பிறப்புக்கும் கல்விக்கும் இடைப்பட்ட காலப்பகுதி மிகமிக விழிப்புடன் கவனிக்க வேண்டிய பருவம் ; இதை நாம் எவ்வாறு கண் காணிப்பது ? இப்பொருள்களேப்பற்றி எங்களுக்குச் சொல்லுங்கள்.

சாக்ரடீஸ் : ஆம், என் எளிய நண்ப ! சொல்கிறேன். ஆனல் எனது விடை எளிதல்ல. முன்னர் நாம் அடைந்த முடிவு களேவிட, இதைப்பற்றி மேலும் அதிகமான ஐயங்கள் எழு கின்றன. ஏனெனில் நாம் சொன்னது நடைமுறைக்கு இயலுமா என்பது ஐயத்திற்குரியது. வேறு கோணத்தி லிருந்து பார்க்குங்கால், அது இயலுமாயினும் மிகச்சிறந்த பயன் தரும் என்பதும் விவாதத்திற்குரியதே. ஆகவே, என்னருமை நண்ப ! நமது வீணவா வெறுங்கனவாகப் போய்விடுமே என்றஞ்சித்தான், இவ்விஷயத்தை அணுகிப் பேசத் தயங்குகிறேன்.

கிளாக்கன் : அஞ்சவேண்டாம் ; ஏனெனில் உம்முடன் உரை

யாடுவோர் உமக்குத் தொல்லைதரார். அவர்களுக்கு எதை யும் ஐயுறும் மனப்பான்மையோ, எதிர்க்கும் மனப் பான்மையோ கிடையாது.

சாக்ரடீஸ் : என் அருமை நண்ப ! இவ்வாறு கூறி என்னை ஊக்குவிக்கப் பார்க்கிருய் என்று கருதுகிறேன்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அப்படியாயின் நீ அதற்கு நேர்மாருனதைச் செய்கிருய் என்றே உனக்குச் சொல்வேன். நான் என்ன பேசினேன் என்பது எனக்குத் தெரிந்திருந்ததாக ஒருவேளை நானே நம்பியிருந்தால், நீ தரும் ஊக்கமெல்லாம் மிகப்பயன் தரும். ஒருவன் பெரிதும் மதித்து விரும்பும் அரிய பெரிய விஷயங்களைப் பற்றிய உண்மையைத் தன்பால் அன்பு கொண்ட அறிஞர் பெருமக்களிடையே வெளியிடுதற்கு அஞ்சவோ மனத்தயக்கம் கொள்ளவோ வேண்டியதில்லை. ஆனல் தானே விஷயத்தை உணராது தட்டுத் தடுமாறித் தேடும் நிலையில் வாதிப்பது, திடமற்ற, அபாயமான நிலை. சறுக்கி விழவேண்டிய அந்நிலையில்தான் நான் இருக் கிறேன். பிறர் நகைப்பர் என்பதை நான் அபாயமாகக் கருத வில்லை ; ஏனெனில் அது குழந்தைத் தனமாகும். எதைப் பற்றிய உண்மையைத் திண்ணமாகத் தெரிந்து கொண் டிருக்க வேண்டுமோ, அதை அறியா தொழிவதைக் கண்டும், நான் அறியாது கீழ் நழுவும்போது என் நண்பரையும் சேர்த்துக் கீழ் இழுத்துச் செல்வேனே என்றும் அஞ்சு கிறேன். இப்பொழுது நான் நன்கு அறியாத நிலையில் கூறப்போவதை மீண்டும் என்பால் திருப்பித் துன்புறுத்தா திருக்குமாறு [1] நெமிசிசை இறைஞ்சிக் கேட்டுக்கொள்ளு கிறேன், ஏனெனில் எழில், நல்லதன்மை, சட்டசம்பந்தமான நீதி இவற்றைப் பற்றித் தவருன கொள்கையைப் பரப்பி ஏமாற்றுவதைவிடத் தன்னை அறியாமலேயே ஒருவனைக் கொல்வது குறைந்த குற்றம்தான் என்று நான் உண்மையில் உறுதியாக நம்புகிறேன். அத்தகைய கொடிய அபாயச் செயலை நான் என் பகைவரிடையே செய்வேனே யன்றி,

1. Nemesis. பழிக்குப் பழி வாங்கும் தெய்வம். பிறரைக் கெடுக்க முயல்வோன் தானே அக்கேட்டுக்கு உள்ளாகுமாறு செய்யும் தெய்வமாகப் பண்டைய கிரேக்கர் கொண்டனர்.

நண்பரிடையே செய்யத் துணியேன். ஆகவே நீங்கள் என்னை ஊக்குவிப்பது மிக அவசியமே.

கிளாக்கன் : [சிரித்தவாறே] நன்று, சாக்ரடீஸ்! நீங்களும் உங்களது வாதமும் எங்களுக்குப் பெரிய துன்பம் எதுவும் விளைத்தால், நீங்கள் கொலைக் குற்றமற்றவர் எனவும் ஏமாற்றுபவரல்லர் எனவும் முன்னதாகவே சொல்லுகிறோம். துணிவுகொண்டு பேச்சைத் தொடங்குக.

சாக்ரடீஸ் : நன்று. ஒருவன் குற்றச் சாட்டினின்றும் விடுவிக்கப்பட்டால், அவன்பால் குற்றம் இல்லை என்று சட்டம் சொல்லுகிறது. சட்டத்திற்குப் பொருந்துவது வாதத்திற்கும் பொருந்தும்.

கிளாக்கன் : அப்படியானால் நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்?

சாக்ரடீஸ் : நன்று நான் எடுத்தவழியே மீண்டும் சென்று முன்னே தக்க இடத்தில் சொல்லியிருக்க வேண்டியதை இப்பொழுது சொல்லவேண்டும் என்று எண்ணுகிறேன். ஆடவரைப்பற்றிப் பேசி முடித்தாகிவிட்டது. இனி, பெண்டிரைப்பற்றிப் பேசுவது பொருத்தமாகும். அவர்களைப்பற்றிப் பேசத் தொடங்குவேன்; அதுவும் பெரு விருப்புடன், என்னை வேண்டிக் கொண்டமையால் பேசுவேன். நமது குடிமக்களைப்போல் பிறந்து கல்வி பயின்ற அவர்கள் பெண்டிரையும் குழந்தைகளையும் அடைந்து வாழ்வதெப்படி என்பதைப்பற்றிச் சரியான முடிவுக்கு வர ஆடவர்கள் மனித இனத்திற்குக் காப்பாளர்களாகவும் காவற்காரர்களாகவும் இருக்கவேண்டும் என்று நாம் சொல்லியபொழுது தொடக்கத்திலேயே கடைப்பிடித்த வழியே செல்வதுதான், ஒரே வழியாகும் என்று எண்ணுகிறேன்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : பெண்டிரின் பிறப்பும் கல்வியும் இதையொத்த, அல்லது ஏறக்குறைய இதையொத்த, சட்டதிட்டங்களுக்கு உட்பட்டவை என்றும் நாம் கொள்வோம். அப்படியாயின் அதன் விளைவு இலட்சியத்திற்கு ஒத்து வருகிறதா என்று பார்ப்போம்.

கிளாக்கன் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

சாக்ரடீஸ் : என் கருத்தைப் பின்வரும் வினா வடிவில் வெளியிட

லாம். நாய்கள் ஆண் பெண் என்று பிரிக்கப்படுகின்றனவா? அல்லது வேட்டையாடுதல், காவல்காத்தல் மற்றும் நாய்களின் பிற கடமைகளில் இரண்டும் ஒத்த பங்கு கொள்கின்றனவா? குட்டிகளிட்டுப் பாலூட்டுவதே அவற்றுக்குப் போதிய உழைப்பு எனக்கருதி, பெண் நாய்களை வீட்டிலேயே விடுத்து, ஆட்டு மந்தைகளை முழுவதும் தனிநின்று காத்தல் ஆண் நாய்களின் பொறுப்பு என்று கருதுகிறோமா?

கிளாக்கன் : இல்லை, இரண்டும் எல்லாப் பொறுப்புக்களையும் ஒத்த முறையில் பகிர்ந்து கொள்கின்றன. ஆண் நாய்கள் மிக்க வலிமையுடையன, பெண் நாய்கள் வலிமை குறைந்தவை என்பதொன்றே அவற்றிடையே உள்ள வேற்றுமை.

சாக்ரடீஸ் : ஒரே வழியில் தோன்றி வளர்க்கப்பட்டாலன்றி பல்வேறு பிராணிகளை ஒரே வேலைக்கு நாம் பயன்படுத்த முடியுமா?

கிளாக்கன் : முடியாது.

சாக்ரடீஸ் : ஆடவரின் கடமைகள் பெண்டிருக்கும் உண்டு என்றால், அவர்களுக்கும் அதேபோன்ற வளர்ப்பும் கல்வியும் அவசியம் அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இசையும் உடற்பயிற்சியுமே ஆடவர்க்குரிய கல்வி எனச் சொல்லப்பட்டது.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அப்படியாயின், பெண்டிர்க்கும் இசையும் உடற்பயிற்சியும் போதிக்கப்பட வேண்டும்; போர்க்கலையினைக் கூடக் கற்றுத்தரவேண்டும்; அதை அவர்கள் ஆடவரைப் போன்றே பயிலவேண்டும் என்று சொல்கிறாயா?

கிளாக்கன் : அப்படித்தான் ஊகிக்கவேண்டும், என்று எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ் : நமது திட்டங்களிற் பல வழக்கத்திற்கு மாறானவை என்ற காரணத்தால் செயலாக்கப்படும்பொழுது, நகைப்பிற்கிடமாகலாம் என்று நினைக்கிறேன்.

கிளாக்கன் : அதில் ஐயமில்லை.

சாக்ரடீஸ் : ஆம், உடற்பயிற்சிச் சாலையில் ஆடவரோடு சேர்ந்து பெண்டிரும் ஆடையின்றி, அதுவும் இளமை இழந்த பிறகு, ஆடையின்றிப் பயிற்சிபெறும் காட்சி மற்ற

எதனைக் காட்டிலும் மிகமிக நகைப்பிற்குரியதாகும். அவர்கள் அழகுக் காட்சி நல்கமாட்டார்கள் என்பது உறுதி. திரைந்த தோலும், அழகற்ற உருவமும் கொண்டிருப்பினும் உடற்பயிற்சிச் சாலைக்குத் தொடர்ந்து வருகின்ற ஆர்வமிக்க முதிய ஆடவரினும் அழகாக இருக்க மாட்டார்கள்.

கிளாக்கன் : ஆம், உண்மை. இன்றைய கொள்கைகளின்படி இந்தத் திட்டம் நகைப்பிற்குரியதாக எண்ணப்படும்.

சாக்ரடீஸ் : ஆனால் நமது கருத்தை ஒளிக்காது வெளியிட நாம் உறுதி பூண்டிருந்தால், இத்தகைய மாறுதல்களைக்கண்டு சமர்த்தர்கள் செய்யும் ஏளனத்திற்கு நாம் அஞ்சவேண்டியதில்லை. இசையிலும் உடற்பயிற்சியிலும் பெண்டிர் காட்டும் சாதனைகளைப்பற்றியும், எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் படைக்கலன் பூண்டு பரியேறிச் செல்வதைப்பற்றியும் அவர்கள் எவ்வாறெல்லாம் பேசுவர்!

கிளாக்கன் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : எப்படி இருப்பினும், தொடங்கிவிட்டதால் சட்டத்தின் கரடு முரடான இடங்களுக்கும் நாம் தொடர்ந்து செல்லத்தான் வேண்டும். அதே நேரத்தில், இந்தப் பெரியோர்களை அவர்களுடைய வாழ்க்கையில் ஒருமுறையேனும் கவனத்துடன், விளையாட்டுத்தனமின்றி இருக்க வேண்டுவோம். நிர்வாணமாக ஒரு மனிதன் காட்சியளிப்பது நகைப்பிற்குரியதோடு, முறையற்றதுமாகும் என்ற கருத்தை [காட்டுமிராண்டியரிடை இன்னமும் நிலவி வருகின்ற கருத்தை—ஹெல்லனியர் நெடுநாட்களுக்கு முன்பு இல்லை—அண்மையில் கொண்டிருந்தனர். இதை நாம் அவர்களுக்கு நினைவூட்டுகிறோம்.] முதன் முதலில் கிரீடன்ஸாரும்[1] பின்னர் லாகிடயிமோனியரும்[2] புகுத்தியபொழுது, அக்காலத்திய அறிஞர்கள் அப்புதுமையை இதேபோன்று எள்ளி நகையாடி இருப்பர்.

கிளாக்கன் : அதில் ஐயமில்லை.

சாக்ரடீஸ் : ஆனால், பொருள்களை மூடி மறைப்பதைவிட எல்லாவற்றையும் திறந்தே இருக்க விடுவது சிறந்தது என்று அநுபவம் காட்டிய பிறகு, பகுத்தறிவு வலியுறுத்திய

1. Cretans
2. Lacedaemonians

சிறந்த கொள்கையின் முன், வெளிப்புறக் கண்ணுக்குத் தோன்றிய நகையாடல் விளைவு மறைந்தொழிந்த பிறகு, தவருக தீய காட்சிகளையன்றி மற்றைக் காட்சிகளைக் கண்டு நகையாடுகிறவன் அல்லது நல்லது என்ற அடிப்படையை யன்றிப் பிறவற்ருல் அழகை எடைபோட எண்ணுகிறவன் முட்டாளாகக் கருதப்பட்டான்.

கிளாக்கன் : மிக்க உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியாயின், இந்தப் பிரச்சினை வேடிக்கைக் காகவோ அன்றி உண்மைக்காகவோ எழுதப்படவேண்டும் என்பதை விடுத்து,முதலில்பெண்டிரின் தன்மையைப்பற்றிய ஒருமித்ததொரு முடிவுக்கு வருவோம். ஆடவரின் செயல் களில் முழுதும் அல்லது பகுதியாக, பெண் பங்கெடுத்துக் கொள்ள அவளால் இயலுமா? அல்லது பங்கு பெறவே முடியாதா? மேலும், போர்க்கலை என்பது அவள் பங்கு பெறக்கூடிய அல்லது பங்குபெற முடியாத கலைகளில் ஒன்ரு? இதுவே நமது ஆய்வைத் தொடங்க மிகச் சிறந்த வழியாகும்; மேலும் நமக்கு மிகச் சிறந்த முடிவினை நல்கக் கூடும்.

கிளாக்கன் : அது மிகச் சிறந்த வழியாக இருக்கும்.

சாக்ரடீஸ் : முதலில் எதிர்த்தரப்பினை எடுத்துக்கொண்டு நமக் கெதிராகவே வாதம் புரிவதோடு தொடங்குவோமா? இந்த முறையில் எதிர்த்தரப்பு வாதம் பாதுகாப்பின்றிப் போய் விடாது.

கிளாக்கன் : ஏன் அப்படிச் செய்யக்கூடாது!

சாக்ரடீஸ் : அப்படியாஞல், எதிர்த்தரப்பினர் பேச்சைச் சொல்வோம். அவர்கள் சொல்வார்கள். “சாக்ரடீஸ்! கிளாக்கான்! உங்களை எந்த எதிர்த்தரப்பினரும் இசைய வைக்க வேண்டியதில்லை. ஏனெனில் அரசினை முதலில் தொடங்கியபொழுது தனது இயல்புக்கேற்ற ஒரேயொரு வேலையினை ஒவ்வொருவனும் செய்யவேண்டும் என்ற கொள்கையினை நீங்களே ஒப்புக்கொண்டீர்கள்,” என்று, நான் தவருகச் சொல்லவில்லையாஞல், அதை நாம் ஒத்துக் கொண்டோம் என்பது உறுதி. ஆடவர் பெண்டிர் ஆகியோரின் தன்மை பெரிதும் வேறுபடவில்லையா? நிச்சய மாக அவை வேறுபடுகின்றன. பின்னர், ஆடவருக்கும்

பெண்டிருக்கும் வகுத்துத்தரப்பட்ட பணிகள் வேறுபட்டன வாகவும், அவர்களுடைய வேறுபட்ட தன்மைகளுக்கு ஏற்றனவாகவும் அமையவேண்டாவா? என்ற வினு எழும். ஆம் நிச்சயமாக வேருகத்தான் இருக்கவேண்டும். அப்படி யாயின் முற்றிலும் வேறுபட்ட தன்மையரான ஆடவரும் பெண்டிரும் ஒரேவிதச் செயல்களைச் செய்யத்தான் வேண்டும் என்று சொல்வதால் நீங்கள் தீவிர முரண்பா டொன்றில் சிக்கவில்லையா? இத்தகைய எதிர்ப்புக்களைத் தொடுக்கும் எவருக்கும் என்ன விடையிறுப்பாய், என் நண்பா?

கிளாக்கன்: திடுமென எழுங்கால் இவ்வினு விடையளிக்கக் கூடிய அளவிற்கு எளியதன்று; நமது தரப்பு வாதத்தைத் தொடங்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

சாக்ரடீஸ்: கிளாக்கன்! இவையே எதிர்வாதங்கள். இவை போன்றவை இன்னும் பல இருக்கின்றன. இவற்றை முன்னரே எதிர்பார்த்தேன். அகக்கண்ணில் கண்டேன். அவை பெண்டிர், குழந்தைகள் ஆகியோரின் வளர்ப்பு வைப்பு என்பனபற்றிய சட்டமெதையும் ஆராய முடியாத படி என்னை அச்சுறுத்தி, தயங்கச் செய்தன.

கிளாக்கன்: ஸீயஸ் பெருமான் அருளின் வண்மை! தீர்க்கப் படவேண்டிய இந்தப் பிரச்சினை எவ்விதத்திலும் எளிதன்று.

சாக்ரடீஸ்: ஏன் அப்படித்தான். ஆனல் ஒரு மனிதன் சிறிய நீச்சல் குளத்தில் விழுந்திருந்தாலும், அலைகடலின் நடு வில் விழுந்திருந்தாலும் அவனது பாதங்கள் தரையை எட்டாது போய்விட்டால் அவன் நீந்தத்தான் வேண்டும்.

கிளாக்கன்: சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: நீந்திக் கரையேற நாம் முயலவேண்டாவா? ஏரியோனின்[1] மீன் அல்லது ஏதேனும் பிற விந்தையான உதவி நம்மைக் காக்கட்டும் என்று நம்பவேண்டாமா?

கிளாக்கன்: ஆம், அப்படித்தான் எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ்: நன்று, இனித் தப்புவதற்கு வழியேதும் இருக்கிறதா என்று பார்ப்போம். வேறுபட்ட இயல்புகளுக்கு வேறுபட்ட தொழில்கள் வேண்டும் என்றும், ஆடவர் பெண்டிர் ஆகி

1. Arion

யோரின் தன்மைகள் வேறுபட்டவை என்றும், நாம் ஒப்புக் கொண்டோம், அல்லவா? இப்பொழுது நாம் என்ன சொல்கிறோம்? வேறுபட்ட இயல்புகளுக்கு ஒரேவிதத் தொழில்கள் வேண்டும்—இதுதான் நம்மீது சாட்டப்படுகிற முரண்பாடு.

கிளாக்கன் : ஆம், அதுவே.

சாக்ரடீஸ் : ஆம், கிளாக்கன்! முரண்பாட்டுக் கலையின் திறமே திறம்!

கிளாக்கன் : ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?

சாக்ரடீஸ் : காரணம், தமது விருப்பத்திற்கு மாறாகப் பல மனிதர்கள் இதில் இறங்கிவிடுகிறார்கள் என்று நான் எண்ணு கிறேன். தான் அறிவுபடப் பேசுவதாக எண்ணுங்கால் ஒருவன் உண்மையில் கருத்துப்போர் நிகழ்த்துகிறான். ஏனெனில் பேசும் விஷயத்திற்கு இலக்கணம் தந்து வரை யறுக்க இயலாத காரணத்தினால், தான் அதை அறிந்து கொள்ள முடியவில்லை. அவன் எதிர்ப்பு மனப்பான்மையில் சொல்லளவில் வெற்றிகாண வாதம் செய்கிறானேயன்றி, உண்மை அறிய நியாயமான முறையில் வாதம் செய்ய மாட்டான்.

கிளாக்கன் : ஆம், அதுவே பெரும்பாலும் நடைபெறுகிற நிகழ்ச்சி. ஆனால் நம்மோடும் நம்முடைய வாதத்தோடும் என்ன தொடர்பு அதற்குண்டு?

சாக்ரடீஸ் : நிறைய உண்டு, ஏனெனில் நமக்குத் தெரியாமலே வெறும் சொற்போரை நாம் பின்பற்றக்கூடிய அபாயம் நிச்சயம் இருக்கிறது.

கிளாக்கன் : எவ்வகையில்?

சாக்ரடீஸ் : ஏன், வேறுபட்ட இயல்புகள் வேறுபட்ட தொழில் களை உடையனவாக இருக்கவேண்டும் என்ற வாய்மையை விடாமல் துணிவுடன் நாம் வலியுறுத்தினோம்; ஆனால் இயல்பின் ஒற்றுமை அல்லது வேற்றுமையின் பொருள் என்ன என்பதை நாம் கருதவே இல்லையே. அல்லது வேறுபட்ட இயல்புகளுக்கு வேறுபட்ட தொழில்களையும், ஒத்த தன்மைகளுக்கு ஒத்த தொழில்களையும் நாம் வகுத்த போது ஒத்ததன்மை வேறுபட்டதன்மை என்பனவற்றின் பொருளை நிர்ணயிக்கவே இல்லை.

கிளாக்கன் : ஏன் இல்லேதான். அதை நாம் எப்பொழுதுமே விவாதிக்கவில்லே.

சாக்ரடீஸ் : வழுக்கைத் தலேயருக்கும் சிகையுடையோருக்கும் இடையே இயற்கையில் மாறுபாடு இல்லேயா, என்று எடுத்துக்காட்டாகக் கேட்பதாக வைத்துக்கொள். இருப்பதாக நாம் ஒத்துக்கொண்டால், வழுக்கைத் தலேயர் சக்கிலியராக இருப்பின், சிகையுடையோரைச் சக்கிலியராக இருக்கவிடக் கூடாது. அதேபோல் வழுக்கைத் தலேயரை மாருக இருக்க விடக் கூடாது, அல்லவா ?

கிளாக்கன் : அது கேலியாகவே இருக்கும்.

சாக்ரடீஸ் : ஆம் கேலிதான், ஏன் ? காரணம், நமது அரசை உருவாக்கும்பொழுது, இயல்புகளின் முரண்பாடு ஒவ்வொரு வேற்றுமைக்கும் பொருந்தவேண்டும் என்று கருதவில்லே. ஆனல் தனிமனிதன் ஈடுபட்டிருக்கிற தொழிலேப் பாதிக்கின்ற வேற்றுமைகளுக்கே பொருந்தவேண்டும் என்று கருதிேனும். சான்ருக ஒரு மருத்துவனும், மனத்தால் மருத்துவனுகிய ஒருவனும் ஒரே தன்மையர் என்று சொல்லலாம் என்று நாம் வாதித்திருக்க வேண்டும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆனல் மருத்துவனும், தச்சனும் வேறுபட்ட இயல்பினரல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஒரு கலே அல்லது தொழிலுக்கு ஏற்ற தகுதியில் ஆண்பாலரும் பெண்பாலரும் வேறுபடுவதாகத் தோன்றினல், அந்தக்கலே அல்லது தொழில் அவர்களுள் (பொருத்தமான) யாரேனும் ஒருவருக்கே அளிக்கப்பட வேண்டும் என்று நாம் கூறவேண்டும். பெண்டிர் சுமத்தலிலும், ஆடவர் மக்களேப் பெறுதலிலும்தான் இந்த வேறுபாடு இருக்கிறது என்ருல், பெண்டிர், தான் பெறவேண்டிய கல்வி முறை விஷயத்தில் ஆடவனின்றும் வேறுபடுகின்றனர் என்று இதனல் நிரூபிக்க முடியாது. ஆதலின், நமது காப்பாளர்களும், அவர்களது மனேவிமாரும் ஒரேவிதத் தொழிலிலேயே ஈடுபடவேண்டும் என்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்துவோம்.

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : அடுத்து, சமுதாய வாழ்க்கையின் கலைகள் அல்லது தொழிலில் எவற்றையேனும் பொறுத்த அளவில், ஓர் ஆடவனின் தன்மையினின்றும் ஒரு பெண்ணின் தன்மை எவ்வாறு மாறுகிறது என்று நமது எதிர்த்தரப்பினரைக் கேட்போம்.

கிளாக்கன் : அது நியாயமான வழி.

சாக்ரடீஸ் : திடுமென விடையிறுப்பதென்பது எளிதன்று என்று, உன்னைப்போல் அவனும், சொல்லலாம்; ஆனால் சற்றுச் சிந்தித்துப் பார்த்தபிறகு சிரமமேதும் இராது.

கிளாக்கன் : ஆம், அப்படி இருக்கலாம்.

சாக்ரடீஸ் : வாதத்தில் நம்மோடு வர அவனை அழைப்பதாகக் கொள்வோம்; பின்னர் பெண்டிரின் உடலமைப்பில் அரசை ஆள்வதற்குத் தடையென்ற வகையில் சிறப்பாக எதுவும் இல்லை என்பதை அவனுக்கு நாம் காட்டலாம் என்று நம்புகிறேன்.

கிளாக்கன் : உறுதியாக.

சாக்ரடீஸ் : நாம் அவனிடம் சொல்வோம் வா, இப்பொழுது உன்னை ஒன்று கேட்கப் போகிறோம். எவ்விஷயத்திலும் இயல்புகளின் அருமை அல்லது சாதாரணத் தலைமையைப் பற்றி நீ குறிப்பிட்டபொழுது, ஒருவன் ஒன்றை எளிதில் கற்றுக்கொள்வான், மற்றொருவன் சிரமத்துடன் கற்றுக் கொள்வான் என்று கருதிச் சொன்னாயா? சிறிதளவு கல்வி, பெருமளவு அறிய ஒருவனுக்குத் துணைபுரியும்; ஆனால் மற்றொருவன் நிறையப் படித்தும் அநுபவம் பெற்ற பிறகும், உடனடியாக அவற்றை மறந்துவிடுகிறான். அல்லது ஒருவன் தன் எண்ணப்படி ஏவலாளனாக இயங்கும் உடல் பெற்றவனாகவும், மற்றவனது உடல் அவனுக்கு இடையூறு விளைவிப்பதாகவும் இருக்கிறது, என்பதைச் சொல்கிறாயா? இவைதான், அரிய இயல்புகளை உடைய ஒருவனைச் சாதாரணத் தன்மையனாகிய ஒருவனின்றும் வேறுபடுத்திக் காட்டும் வேற்றுமைகள் அல்லவா?

கிளாக்கன் : இதை யாரும் மறுக்கமாட்டார்கள்.

சாக்ரடீஸ் : மனித குலத்தின் தொழில்களில் எதையேனும் குறிப்பிட்டு இதைப் பொறுத்தவரையில் பெண்டிரைவிட அதிக அளவு இந்த அரிய தன்மைகளையும் இயல்பு

களையும் ஆடவர் பெறவில்லை என்று கூறமுடியுமா? நெசவுக்கலை, சமையற்கலை இவற்றில் பெண்குலம் பெரும் புகழ் எய்தியிருக்கிறது. நெசவுக்கலை, சமையற்கலை ஆகிய வற்றில் ஆடவனால் பெண் வெல்லப்படுவது என்பது எல்லாவற்றைக் காட்டிலும் அர்த்தமற்றது. இவ்விரு கலை களையும் பற்றிப் பேசிக் காலத்தைக் கழிப்பானேன்?

கிளாக்கன்: பெண்பாலரின் பொதுவான தாழ்ந்த தன்மை யைப்பற்றி நீங்கள் சொல்வது முற்றிலும் சரி, பெண்டிர் பலர் ஆடவர் பலரைக் காட்டிலும் பலவிஷயங்களில் சிறந் திருந்தாலும், பொதுவாக நீங்கள் சொல்வது உண்மை.

சாக்ரடீஸ்: அப்படியாயின் எனது நண்ப! பெண் பெண்ணாக இருப்பதால் ஓர் அரசில் ஆளும் ஆற்றல் அவளுக்குக் கிடையாது; அல்லது ஆடவனும் ஆண்பாலைச் சேர்ந்த வனாக இருப்பதால் இத்தகைய ஆற்றலைப் பெறவில்லை; ஆனால் இயற்கையின் பரிசுகள் இருபாலரிடத்தும் பரவிக் கிடக்கின்றன. ஆடவரின் தொழில்களனைத்தும் பெண்டிர்க் கும் தொழிலாகும், ஆனால் அவையனைத்திலும் பெண் ஆடவ னுக்குக் கீழ்ப்பட்டவளே.

கிளாக்கன்: சாலவும் உண்மை.

சாக்ரடீஸ்: அப்படியாயின், நமது சட்டதிட்டங்களை எல்லாம் பெண்டிர் மீது ஒன்றுகூட இல்லாமல், ஆடவர் மீதே சுமத்த வேண்டுமா?

கிளாக்கன்: அது கூடாது.

சாக்ரடீஸ்: ஒரு பெண் மருத்துவக்கலையில் கைவந்தவளாக இருக்கிறாள்; மற்றொருத்தி அவ்வாறு இல்லை, ஒருத்தி இசை வல்லவளாகவும் மற்றொருத்தி தனது இயல்பிலேயே இசை யறியாதவளாகவும் இருக்கிறாள், அல்லவா?

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: ஒரு பெண் உடற்பயிற்சியிலும், இராணுவப் பயிற்சி யிலும் பெருவிருப்பு உடையவளாக இருக்கிறாள். மற்றொருத்தி போர்க்குணம் இல்லாதவளாகவும், உடற்பயிற் சியை வெறுப்பவளாகவும் இருக்கிறாள் அல்லவா?

கிளாக்கன்: இது உறுதி.

சாக்ரடீஸ்: ஒருத்தி மெய்ப்பொருள் வல்லவள், மற்றொருத்தி

மெய்ப்பொருளுக்கே எதிரி, ஒருத்தி எழுச்சியுடையவள், மற்றெருருத்திக்கு எழுச்சி இல்லை, எனலாமா ?

கிளாக்கன் : அதுவும் உண்மை.

சாக்ரடீஸ் : இனி, ஒருத்திக்குக் காப்பாளரின் இயல்பு இருக்கும், மற்றெருருத்திக்கு இராது. ஆண் காப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பது இத்தகைய வேறுபாடுகளால் நிர்ணயிக்கப்படவில்லையா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆடவரும் பெண்டிரும் ஒரேமாதிரியாக, காப்பாளருக்கு வேண்டிய தன்மைகளைக் கொண்டிருக்கிருர்கள். வலிமை அல்லது வலிமைக்குறைவு என்பதில்தான் வேறுபடுகிருர்கள்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இத்தகைய குணங்களை உடைய பெண்களை இதே போன்ற குணங்களும், அவர்களை ஒத்தசக்தியும், நடத்தையும் உள்ள ஆடவரின் தோழர்களாகவும், உடன்பணியாளராகவும் தேர்ந்தெடுக்க வேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : சரி, ஒரேவிதத் தன்மைகளுக்கு ஒரேவிதத் தொழில்கள் இருக்கவேண்டாவா ?

கிளாக்கன் : ஆம், இருக்க வேண்டும்.

சாக்ரடீஸ் : இனி, நாம் முன்னர்ச் சொன்னதுபோல, காப்பாளரின் மனைவிமாருக்கு இசைப்பயிற்சியும் உடற்பயிற்சியும் வேண்டுமென்று வகுத்துத் தந்ததில் இயற்கைக்குப் புறம்பானதொன்றுமில்லை - இந்த விஷயத்திற்கு வளைத்துக் கொண்டு - மீண்டும் வந்து விட்டோம்.

கிளாக்கன் : நிச்சயமாகப் புறம்பானதொன்று இல்லை.

சாக்ரடீஸ் : நாம் அப்பொழுது வகுத்த விதி இயற்கைக்கு ஏற்றதாக இருந்தது ; ஆகவே முடியாததொன்ருகவோ, கேவலம் விருப்பமாகவோ இல்லை ; இப்பொழுது வழக்கிலிருக்கின்ற மாருன முறை உண்மையில் இயற்கையை மீறிய ஒன்று.

கிளாக்கன் : அது உண்மையெனத் தோன்றுகிறது.

சாக்ரடீஸ் : முதலில், நாம் சொன்ன கருத்துக்கள் நடை முறைக்கு ஏற்றனவா என்றும் நாம் கவனிக்கவேண்டி யிருந்தது அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : நடைமுறைக்கு ஏற்றவை என்பது ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது, அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அடுத்து, மிக அதிகமான பயன் அளிக்கும் என்பதை நிரூபிக்க வேண்டும், அல்லவா ?

கிளாக்கன் : அப்படித்தான்.

சாக்ரடீஸ் : ஒருவனை நல்ல காப்பாளனுக உருவாக்கும் கல்வியே ஒரு பெண்ணையும் அவ்வாறு ஆக்கும் என ஒப்புக் கொள்ளுகிருயல்லவா ? ஏனெனில் அவர்களது அடிப்படை இயற்கை ஒன்று என்பதனுல்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : நான் உன்னை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன்.

கிளாக்கன் : அது என்ன ?

சாக்ரடீஸ் : அரிய தன்மையில் எல்லோரும் சமமானவர் என் பாயா ? அல்லது ஒருவன் மற்றெருவனைவிடச் சிறந்தவன் என்று சொல்வாயா ?

கிளாக்கன் : பின்னதைத்தான் கூறுவேன்.

சாக்ரடீஸ் : சரி, நாம் நிறுவிக்கொண்டிருந்த பொதுநல அரசில் நம்முடைய மாதிரி முறையில் பயிற்றுவிக்கப்பட்ட காப்பாளர்கள் பூரணமானவர்கள் என்று கருதுகிருயா ? அல்லது சக்கிலித் தொழிலைக் கற்ற சக்கிலியர் பூரணமான வர்கள் என்று கருதுகிருயா ?

கிளாக்கன் : என்ன நகைப்பிற்குரிய கேள்வி !

சாக்ரடீஸ் : எனக்கு விடையிறுத்து விட்டாய். நன்று மேலும் நமது காப்பாளர்கள்தான் குடிமக்களுள் மிகச் சிறந்தவர் என்று நாம் சொல்லவேண்டாமா ?

கிளாக்கன் : இருப்பவருள் மிகச் சிறந்தவரே.

சாக்ரடீஸ் : சரி, அவர்களுடைய மனைவிமார் மிகச் சிறந்த பெண்டிராகாரா ?

கிளாக்கன் : ஆம், இருப்பவருள் மிகச் சிறந்தவரே.

சாக்ரடீஸ் : ஓர் அரசின் ஆடவரும் பெண்டிரும் எத்துணை இயலுமோ அத்துணை அளவுக்கு நல்லவராக இருக்கவேண்டு மென்பதைவிட, சிறந்த நலம் ஏதேனும் ஓர் அரசுக்கு இருக்க முடியுமா ?

கிளாக்கன் : இதை விடச் சிறந்த தொன்று இருக்க முடியாது.

சாக்ரடீஸ் : இதுதான், இசையும் உடற்பயிற்சியும் நாம் விவரித்த முறையில் இருக்கும்பொழுது, நன்மை விளை விக்கும் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அப்படியாயின் நடைமுறைக்கு ஒத்தது மட்டு மல்லாமல் அரசிற்குப் பெருத்த அளவில் பயன்தரக்கூடிய விதியை அமைத்து விட்டோம் அல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : மேலும் நமது காப்பாளரின் மனைவிமார் ஆடையைக் களையட்டும், அவர்களது நற்பண்பே அவர் களது ஆடை ஆகும். தமது நாட்டைக் காக்கும் பணியிலும், போர்த்தொல்லைகளிலும் பங்கு பெறட்டும் ; வேலைகளைப் பிரித்துக்கொடுப்பதில் இயல்பிலேயே வலிமைக் குறைவுடைய எளிய வேலைகளைப் பெண்டிருக்குக் கொடுக்க வேண்டும் ; ஏனெனில் இயற்கையில் அவர்கள் வலிமை குறைந்தவர் ; ஆனால் மற்ற விஷயங்களில் அவர்களுடைய கடமைகள் ஒன்றாகவே இருக்கவேண்டும். இனி, மிகச் சிறந்த நோக்கத் தால் உந்தப்பட்டு, தமது உடலுக்குப் பயிற்சியளிக்கும் நிர் வாணமான பெண்டிரைக் கண்டு சிரிக்கும் ஆடவனைப் பொறுத்த அளவில், அவன் தனது சிரிப்பினால் 'முற்றாத அறிவுக்கனியை'ப் பறிக்கிறான் எனலாம். மேலும் 'எதைக் கண்டு சிரிக்கிறோம்' அல்லது 'என்ன செய்கிறோம்' என் பதை அவனே அறியான். ஏனெனில் "பயன்தருவது மேதக்கது, தீங்குவிளைவிப்பது இழிந்தது" என்ற மொழி பொன்மொழிகளுள் மிகச் சிறந்தது. என்றும் மிகச்சிறந்த தாக அது மிளிரும்.

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : பெண்டிருக்கென நாம் உருவாக்கிய சட்ட திட்டங் களில் இங்குதான் ஓர் இன்னல் இருக்கிறது ; ஆனால் அதி லிருந்து நாம் தப்பிவிட்டதாகச் சொல்லலாம். இருபாலராகிய

காப்பாளரும் தம்முடைய தொழில்களனைத்தையும் பொது வாகக் கொண்டிருக்க வேண்டும் என்று விதித்ததற்காக அலை நம்மை உயிரோடு விழுங்கிவிட வில்லை. இத்தகைய ஏற்பாட்டின் பயனுக்கும் அது நடைமுறைக்கு ஒத்திருக் கிறது என்பதற்கும் வாதத்தில் முரணின்மையே சான்று பகருகிறது.

கிளாக்கன் : ஆம், நீங்கள் தப்பிச் சென்ற அலை வலியதோர் அலைதான்.

சாக்ரடீஸ் : ஆம், ஆனால் அதைவிடப் பெரிய அலையொன்று வந்து கொண்டிருக்கிறது, அடுத்து வருவதைக் காணும் பொழுது, இதைப் பெரிதாக நினைக்கமாட்டாய்.

கிளாக்கன் : மேலே செல்லுங்கள் பார்க்கிறேன்.

சாக்ரடீஸ் : இதிலிருந்தும் இதற்குமுன் சென்ற அனைத்தி லிருந்தும் தொடரும் சட்டம், பின்வருவதை விதிக்கும் : — " நமது காப்பாளரின் மனைவிமார் பொதுவாக இருக்க வேண்டும், அவர்களுடைய குழந்தைகள் பொதுவாக இருக்க வேண்டும், எந்தப் பெற்றோரும் தன்னுடைய குழந்தையை அறியக்கூடாது, எக்குழந்தையும் தனது பெற்றோரை அறியக் கூடாது ".

கிளாக்கன் : ஆம், அதைவிட இது மிகப் பெரிய அலைதான், அத்தகைய சட்டத்தின் பொருத்தமும் பயனும் மேலும் பெரும் ஐயத்தை எழுப்பும்.

சாக்ரடீஸ் : மனைவியரையும் குழந்தைகளையும் பொதுவாக வைத்திருப்பதன் பெரும்பயனைப் பற்றிய எதிர்ப்பு ஏதும் இருக்கும் என்று நான் கருதவில்லை ; ஆனால் இயலும் தன்மை வேறு விஷயம் ; அது அலசி ஆராயப்படும் – எதிர்க் கப்படும் –.

கிளாக்கன் : அவை இரண்டையும் பற்றிப் பல ஐயப்பாடுகள் எழுப்பப்படலாம், என்று எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ் : இரண்டு பிரச்சினைகளும் ஒன்றாக இணைக்கப்பட வேண்டும் என்று நீ கருதுகிறாய் போலும். அதன் பயனை நீ ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் என நான் கருதினேன் ; இந்த வகையில் அவற்றில் ஒன்றிலிருந்து நான் தப்பிவிட லாம் ; பின்னர் அதன் இயலும் தன்மை ஒன்றுதான் எஞ்சி யிருக்கும் என்றுதான் நான் எண்ணினேன்.

கிளாக்கன் : ஆனல் அந்தச் சிறு முயற்சி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டுக்கும் அரண்செய்து பேசுங்கள்.

சாக்ரடீஸ் : நன்று, எனது விதிக்குத் தலை வணங்குகிறேன். எனினும், எனக்கு ஒரு சிறு உதவி செய்க. தனியே நடந்து செல்லும்பொழுது தமக்குத்தாமே கனவுலக விருந்தளித்துக் கொள்ளும் வழக்கமுடைய பகற்கனவு காண்போரைப் போல், நானும் எனக்குக் கனவு விருந்து நல்கவேண்டும். ஏனெனில் தமது விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வழி வகைகளைக் காண முற்படுமுன் — அந்த விஷயம் அவர்களுக்கு என்றும் கவலை தருவதே இல்லை – இயலக்கூடிய விஷயங்களைப்பற்றிச் சிந்தித்து ஓய்ந்துவிடமாட்டார்கள். தம்மை வருத்திக் கொள்ள மாட்டார்கள். ஆனல் தாம் விரும்புவது முன்னரே தமக்கு அளிக்கப் பட்டுவிட்டதாகக் கருதிக்கொண்டு தமது திட்டத்துடன் தொடர்ந்து செல்கின்றனர். மேலும் தமது விருப்பம் நிறைவேறிவிட்டதும் எதைச் செய்யப்போகிறுர்கள் என்பதைப்பற்றி விரிவாக எண்ணுவதில் இன்பங் காணுகின்றனர். அதிக நன்மையைத் தராத தம் சக்தியை, அந்த அளவிற்குக் கூடப் பயன் படுத்திக் கொள்ளாத ஒரு முறைதான் அவர்கள் மேற்கொள்ளும் வழி. இப்பொழுது எனக்கே மனந் தளரத் தொடங்குகிறது. உனது அனுமதியுடன் ‘ அது இயலுமா ’ என்ற பிரச்சினையை இப்பொழுது தள்ளிப் போட விரும்புகிறேன். ஆகவே, அந்தத் திட்டம் அமுலுக்கு வரக்கூடியது தான் என்று கருதிக்கொண்டு, இந்த ஏற்பாடுகளை எவ்வாறு ஆட்சியாளர் நிறைவேற்றுவர் என்பதை ஆராயத் தொடங்குகிறேன். மேலும் நமது திட்டம் நிறைவேற்றப்பட்டால், அது அரசுக்கும் காப்பாளருக்கும் பெரும் பயன் தரும் என்பதைக் காட்டுகிறேன். இனி முதற்கண் உனக்கு மறுப்பு இல்லையென்ருல் உனது உதவியுடன் இந்த ஏற்பாட்டின் பயன்களைக் கவனிக்கத் தொடங்குவேன். இதற்குப் பின்னர் இயலுமா என்பதையும் ஆராயலாம்.

கிளாக்கன் : எனக்கு ஆட்சேபனை இல்லை ; தொடர்ந்து செல்லுங்கள்.

சாக்ரடீஸ் : முதலில் நமது ஆட்சியாளரும் அவர்களது படை வீரரும் தாங்கள் தாங்கியுள்ள பெயர்களுக்கு ஏற்பத் தகுதியுடையவர்களாக இருக்கவேண்டுமாயின் அவர்களுள் ஒரு

சாரார்பால் பணிந்துபோக விருப்பமும் மற்றவர் பால் ஆணை செலுத்தும் ஆற்றலும் இருக்கவேண்டும். காப்பாளரே சட்டங்களுக்குப் பணிந்து நடக்க வேண்டும். தங்கள் பொறுப்பில் விடப்பட்ட எந்த விஷயங்களிலும் அந்தச் சட்டங்களின் தத்துவத்தைப் பின்பற்றவேண்டும்.

கிளாக்கன் : அது சரி.

சாக்ரடீஸ் : அவர்களுக்குச் சட்டங்களியற்றும் நீ ஆடவரைத் தேர்ந்தெடுத்துவிட்ட பின், பெண்டிரைத் தேர்ந்தெடுத்து அவர்களை ஆடவர்களுக்குக் கொடுக்கவேண்டும். அவர்கள் கூடுமான வரையில் அவர்களை (ஆடவரை)ப்போன்ற தன்மையராய் இருக்கவேண்டும். மேலும் அவர்கள் அனை வரும் பொதுமனைகளில் வாழவேண்டும் ; பொது உணவிடங் களில் சந்திக்க வேண்டும். அவர்களில் யாருக்கும் அவன் அல்லது அவளுக்கெனத் தனியே ஒன்றும் கிடையாது. அவர் கள் ஒன்ருக இருப்பர் ; ஒன்ருகவே வளர்க்கப்படுவர் ; உடற் பயிற்சிகளில் கலந்து கொள்வர். ஆகவே தங்கள் இயற்கை யின் அவசியத்தால் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள ஈர்க்கப்படுவர். ‘அவசியம்’ என்ற சொல் மிக அழுத்த மான சொல்லல்ல என்று எண்ணுகிறேன், என்ன ?

கிளாக்கன் : ஆம், இந்த அவசியம், க்ஷேத்திர கணிதம் அறியும் அவசியம் அல்ல, காதலர்கள் உணரும் வேருெரு வகை அவசியம். அது மேலும் மனித குலத்திற்கு நம்பத் தகுந்ததும், வலியுறுத்துவதுமாகும்.

சாக்ரடீஸ் : உண்மை, கிளாக்கன் ! பிற அனைத்தும் இதுவும் ஒழுங்கான முறையில் செல்லவேண்டும். அரிய பேறுபெற்ற நகரத்தில் வரம்பின்மை தெய்வீகத்திற்குப் புறம்பான செயலாகும். இதை ஆட்சியாளர் அனுமதிக்கக் கூடாது.

கிளாக்கன் : ஆம், இது அனுமதிக்கப்படவே கூடாது.

சாக்ரடீஸ் : அப்படியாயின் திருமணத்தை மிகப் பெருமளவில் தெய்வீகத்தனமாகச் செய்வதுதான் அடுத்துச் செய்ய வேண்டியது. மிக்க பயன் தருவதுதான் தெய்வீகமான தாகக் கருதப்படும், அல்லவா ?

கிளாக்கன் : முற்றிலும் சரி.

சாக்ரடீஸ் : சரி, திருமணங்களை எப்படி மிக்க பயன் தருவன வாக ஆக்குவது ? இதுதான் நான் உனக்கு விடுக்கும் வினு.

ஏனெனில் உன்னுடைய இல்லத்தில் வேட்டைக்கென நாய்களும், மிகச்சிறந்த வகையைச்சார்ந்த பல பறவைகளும் இருக்கக் காண்கிறேன். உன்னைப் பணிவுடன் கேட்கிறேன்: அவை இணைவதையும் இனம் பெருக்குவதையும் நீ எப்பொழுதேனும் கவனித்திருக்கிருயா? இதற்குப் பதில் சொல்.

கிளாக்கன்: எந்த விஷயங்களில்?

சாக்ரடீஸ்: ஏன், பொதுவாக, அவை அனைத்தும் நல்ல வகையினவாக இருப்பினும், சில மற்றவற்றைக் காட்டிலும் சிறந்தவை அல்லவா?

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: அவை எல்லாவற்றிலிருந்தும் இனம் பெருக்குவதை மனம்போனபடி அனுமதிக்கிருயா அல்லது மிகச்சிறந்தவற்றிலிருந்து வளர்ப்பதை மட்டும் விரும்புகிருயா?

கிளாக்கன்: மிகச் சிறந்தவற்றிலிருந்துதான்.

சாக்ரடீஸ்: சரி, மிக முதியவற்றை அல்லது மிக இளையனவற்றை எடுத்துக்கொள்ளுகிருயா அல்லது தக்க பருவத்தினதை மட்டும் எடுத்துக்கொள்கிருயா?

கிளாக்கன்: தக்க பருவத்திலிருப்பவற்றை மட்டும்தான் தேர்ந்தெடுக்கிறேன்.

சாக்ரடீஸ்: இனப் பெருக்கத்தில், தக்க கவனம் செலுத்தாவிடில் உனது நாய்களும், பறவைகளும் சீரழிந்து போய்விடும் அல்லவா?

கிளாக்கன்: உறுதியாக.

சாக்ரடீஸ்: இதுவே குதிரைகளுக்கும், பொதுவாக பிராணிகளுக்கும், பொருந்தும், அல்லவா?

கிளாக்கன்: ஐயமின்றி.

சாக்ரடீஸ்: நன்று, என் அருமை நண்ப! இதே விதி மனித வர்க்கத்திற்கும் பொருந்துமானல், நமது ஆட்சியாளருக்கு எத்தகைய திறமை தேவைப்படும்!

கிளாக்கன்: நிச்சயமாக இதே விதி பொருந்துகின்றது. ஆனல் தனித்ததொரு திறமை இதற்கேன்?

சாக்ரடீஸ்: ஏனெனில், நமது ஆட்சியாளர் பெரும்பாலும் சமூகத்தில் உடலுக்கு மருந்து அளிக்க நேரிடும். நோயாளி

களுக்கு மருந்து தேவைப்படாத பொழுதும், அவர்கள் கட்டுப்பாடுகளுக்குள் இருக்கவேண்டும் என்னும்பொழுதும் இதைவிடத் தாழ்ந்த தரத்து 'மருத்துவர் போதுமென்பர், ஆனல் மருந்து கொடுக்கப்பட வேண்டும் எனுங்கால், மருத்துவன் மனித இயல்பு படைத்தவனுக இருக்க வேண்டும்.

கிளாக்கன் : அது மிகவும் உண்மை. ஆனல் நீங்கள் எதைக் குறித்து இதைச் சொன்னீர்கள் ?

சாக்ரடீஸ் : தமது குடிமக்களின் நன்மைக்குத் தேவையான பொய், ஏமாற்றம் ஆகியவற்றை ஒரு குறிப்பிட்ட அளவில் நமது ஆட்சியாளர் காண்பர் என்பதைத்தான் குறிப்பிடு கின்றேன். மருந்தாகக் கருதப்படும் இவற்றின் உபயோகம் பயன் தரலாம் என்று நாம் முன்னர் சொல்லிக்கொண்டிருந் தோம்.

கிளாக்கன் : நாம் சொன்னது முற்றிலும் சரியே.

சாக்ரடீஸ் : இவற்றை இப்படிச் சட்டப்படி உபயோகப்படுத்து வது திருமணங்கள், பிறப்பு ஆகியவற்றைக் கட்டுப்படுத்து வதற்குப் பெரும்பாலும் தேவைப்படலாம், என்று தோன்று கிறது.

கிளாக்கன் : எங்ஙனம் ?

சாக்ரடீஸ் : ஏன் இருபாலாரிலும் சிறந்தவரைச் சிறந்தவரோடு அதிக அளவில் இணைக்க வேண்டும் என்றும், தாழ்ந்த தரத்தினரைத் தாழ்த்த தரத்தினரோடு எவ்வளவு குறைந்த அளவில் முடியுமோ அவ்வளவு குறைந்த அளவில் இணைக்க வேண்டும் என்றும் முன்னரே விதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மக்கள் தொகுதியை முதல் தரமான நிலையில் வைத்துக்கொள்ள வேண்டுமானல், அவர்கள் ஒருவகை இணைப்பினுல் வந்த குழந்தைகளையே வளர்க்கவேண்டும்; பிறவகைக் குழந்தைகளை வளர்க்கக் கூடாது. ஆட்சியாள ருக்கு மட்டும் தெரிந்த இந்த நடவடிக்கைகள், இரகசியமாக வைத்திருக்கப்படவேண்டும். இன்றேல், நமது காப்பாளர் கூட்டம் புரட்சி செய்யும் என்ற அபாயமும் இருக்கிறது.

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : பலிகள் பல தந்து, நமது கவிஞர்கள் இயற்றிய ஏற்றப்பாடல்களைப் பாடி, சில திருவிழாக்களை நடத்தி அவற்றில் மணமக்களை ஒருங்கே கொணர்தல் நல்லதல்லவா?

திருமணங்களின் எண்ணிக்கையை, மக்கள் தொகுதியின் சராசரியைக் காக்கும் நோக்கம் கொண்ட, ஆட்சியாளரின் விருப்பத்திற்கு விட்டுவிட வேண்டும், அல்லவா? நாடு மிகப் பெரிதாகவோ, மிகச் சிறியதாகவோ ஆவதை முடிந்தமட்டும் தடுப்பதற்தாக, போர்களின் விளைவுகள், நோய்கள் இவை போன்ற நிகழ்ச்சிகள் மற்றும் பல விஷயங்களை அவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது.

கிளாக்கன் : உறுதியாக.

சாக்ரடீஸ் : தாழ்ந்த தரத்தினரை இணைக்கும்போதெல்லாம் அவர்களுக்கென அரியதொரு சீட்டுப் போடும் தேர்வு முறையை நாம் கண்டுபிடிக்கவேண்டும்; அப்பொழுதுதான் அவர்கள் தமது நற்பேறின்மையையே நொந்துகொள்வர்; ஆட்சியாளரை நிந்திக்கமாட்டார்.

கிளாக்கன் : நிச்சயம்.

சாக்ரடீஸ் : மேலும் சிறந்த துணிவுமிக்க நம் இளைஞர்கள் தங்களது பெருமைகளோடும் பரிசுகளோடும் கூட, தமக்குத் தரப்பட்ட பெண்டிரோடு கூடி முயங்கப் பல வசதிகள் பெறலாம் என எண்ணுகிறேன்; அவர்களது துணிவு அதற் கொரு காரணமாயிருக்கும். மேலும் அத்தகைய தந்தையர் இயன்ற அளவு அதிகப் பிள்ளைகளைப் பெறவேண்டும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : பதவிகளை ஆடவரும் பெண்டிரும் வகிக்கலாம்; ஆதலால் ஆடவனோ, பெண்ணோ அல்லது இருவருமோ, யாராயிருப்பினும் தக்க அலுவலர்கள்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : தக்க அலுவலர்கள் நல்ல பெற்றோரின் மக்களை வளர்ப்பதற்கு எடுத்துச் செல்வர், தனித்த இடத்தில் வாழ் கின்ற தாதியரிடத்து அக்குழந்தைகளை விடுவர். ஆனால் தாழ்ந்த தரத்தினரின் குழந்தைகளோ, அல்லது உயர்ந்த தரத்தினரின் ஊனமான குழந்தைகளோ யாருமறியாத இனந்தெரியாத இடமொன்றில் விடப்படுவர். அவர்கள் இருக்கவேண்டிய இடம் அதுதான்.

கிளாக்கன் : ஆம், காப்பாளரின் இனம் பரம்பரைத் தூய்மை யுடன் காக்கப்படவேண்டுமானால் அதைத்தான் செய்ய வேண்டும்.

சாக்ரடீஸ் : அவர்களுடைய வளர்ப்புக்கான வழிவகைகளை வகுப்பர், பால் நிரம்பிய தாயரை வளர்ப்பிடத்திற்கு அழைத்து வருவர்; தன்னுடைய குழந்தையை எந்தத் தாயும் அறிந்துகொண்டுவிடாமல் விழிப்புடன் கவனித்துக் கொள்வர். இன்னும் சிலர் தேவைப்பட்டால், பால்தரும் தாதியரை—முலைத்தாயை—அமர்த்திக்கொள்ளலாம். பால் குடிக்கும்—பாலூட்டும்—முறை அதிக நேரம் நீடிக்காமல் பார்த்துக்கொள்ளப்படும். அன்னைமார் நள்ளிரவில் எழுந்திருக்கவோ மற்ற கஷ்டங்கள் ஏற்கவோ அவசியமிராது; இவைபோன்றவை தாதியரிடமும் பணியாளரிடமும் விட்டு விடப்படும்.

கிளாக்கன் : நமது காப்பாளர்களின் மனைவிமார் தங்களுக்குக் குழந்தைகளிருக்குங்கால் எளிய இனிய முறையில் பொழுதைக் கழிப்பர் என்று நீங்கள் கருதுகிறீர்கள் போலும்.

சாக்ரடீஸ் : ஏன், அவர்கள் அப்படித்தான் இருக்கவேண்டும். இனி, நாம் நமது திட்டத்தையறிய மேற் செல்வோம். பெற்றோர் தக்க பருவத்தினராயிருக்கவேண்டும் என்று நாம் சொன்னோமல்லவா ?

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : அப்பருவம் யாது ? அது ஒரு பெண்ணின் வாழ்க்கையில் இருபது ஆண்டுக் காலம் எனவும் ஓர் ஆணின் வாழ்க்கையில் முப்பது ஆண்டுக் காலம் எனவும் வரையறை செய்யலாமல்லவா ?

கிளாக்கன் : எந்த ஆண்டுகளை நீங்கள் சேர்க்க நினைக்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : ஒரு பெண் தனது இருபதாவது வயதில் நாட்டிற்காகக் குழந்தைகளைப் பெறத் தொடங்கலாம். தனது நாற்பதாவது வயதுவரை நீடித்துப் பெறலாம். ஓர் ஆடவன் வாழ்க்கையின் நாடி மிக வேகமாகத் துடிக்கும் எல்லையைத் தாண்டிவிட்ட நேரத்தில், அஃதாவது தனது இருபத்தைந்தாவது வயதில், தொடங்கலாம், தனது ஐம்பதாவது வயது வரை நீடிக்கலாம்.

கிளாக்கன் : நிச்சயமாக. ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலாரிடத்தும் அந்த ஆண்டுகள் உடல் அறிவு ஆகியவற்றினுடைய திறனின் உச்சிக்காலம்.

சாக்ரடீஸ் : குறிப்பிட்ட வயதுகளுக்கு மேற்பட்டோ குறைந்தோ இருப்பவன் பொது மணவிழாவில் கலந்து கொண்டால் தெய்வத்திற்குப் புறம்பான, அறங் கொன்ற, செயலை அவன் செய்தவனுகிருன் எனலாம். அவனுடைய குழந்தை உயிருடன் இருக்க நேர்ந்தாலும் அது பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட முறைக்குப் புறம்பாக உதித்ததாகும். குருமார், சமயப் பெண்டிர், மற்றும் நகரமுழுதும் செய்கின்ற மணவிழாவில் வரும் பலிகள், வணக்கப்பாடல்கள் ஆகிய வற்றுக்கு நேர்மாருனதாகக் கருதப்படும். காரணம் தங்க ளுடைய நல்ல பயனுள்ள பெற்ருேரைக் காட்டிலும் புதிய தலைமுறையினர் மேலும் சிறந்தவராகவும் பயனுள்ளவராக வும் இருக்கவேண்டும் என்பதே. ஆனல் அவருடைய குழந்தைகள் இரகசியமான தகுதியற்ற காமவெறியின் விளைவு எனப்படும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : குறிப்பிட்ட வயது எல்லைக்குள் இருக்கும் எந்த ஆடவராயினும் அன்னேர் தக்க பருவத்துப் பெண்ணுடன் ஆட்சியாளரின் அநுமதியின்றித் தொடர்பு கொண்டால் அவர்களுக்கும் இதே விதி பொருந்தும். ஏனெனில் அன்னேர் தெய்வ சம்மதம் பெருது நற்சாட்சியற்ற வேசி மக்களை நாட்டிற்கு அளிக்கின்றனர் என நாம் கூற வேண்டும்.

கிளாக்கன் : முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : எனினும் இது குறிப்பிட்ட வயதெல்லைக்குள் உள்ளோருக்குமட்டுமே பொருந்தும்; பின்னர் தமதிஷ்டப் படி அவர்கள் செல்ல நாம் அநுமதிப்போம்; எனினும் ஒரு ஆடவன் தனது மகளையோ, தனது மகளின் மகளையோ அல்லது தனது தாயையோ, தாயின் தாயையோ மணக்கக் கூடாது; பெண்டிரும் தமது ஆண்மக்களையோ, தந்தை யரையோ, மகளின் மகனையோ, தந்தையின் தந்தையையோ, அதேபோல இருவழிகளிலும், மணக்கக்கூடாது. இதை யெல்லாம் அனுமதிக்கிருேம். ஆனல் அதே நேரத்தில் நாம் இவ்வளவு மதிப்போடு கடுமையாக இடும் உத்திரவு யாதெனில், இக்கலவியினல் ஏற்படக்கூடும் கரு வெளிக் காணுது தடுக்கப்பட வேண்டும் என்பதாம். ஏதேனும் ஒன்று பிறக்குமாயின் அத்தகைய இணைப்பின் விளைவான

குழந்தையைப் பராமரிக்க முடியாது என்பதை அப்பெற்ருேர் உணர்ந்து அதற்கு ஏற்றவாறு ஏற்பாடு செய்யவேண்டும்.

கிளாக்கன் : அதுவும் பொருத்தமான கருத்துத்தான். ஆனல் யார் தந்தையர், யார் பெண்மக்கள், மற்றவர் யார் என்பதை அவர்கள் எங்ஙனம் அறிவர் ?

சாக்ரடீஸ் : அது அவர்களுக்கு எப்பொழுதுமே தெரியாது. வழி பின்வருமாறு : மணவிழா நாள்தொடங்கி அப்பொழுது மணமான மணமகன் ஏழாவது, பத்தாவது மாதங்களில் பிறக்கும் எல்லா ஆண் குழந்தைகளையும் தனது மகன்களெனச் சொல்வான். பெண் குழந்தைகளையும் மகளெனச் சொல்வான். அக்குழந்தைகள் அவனைத் தந்தை என அழைப்பர். அவர்களுடைய குழந்தைகளைத் தன் பேரர்களென அழைப்பான். அப்பேரக் குழந்தைகள் மூத்த பரம்பரையினரைத் தாத்தாக்களெனவும், பாட்டிகளெனவும் அழைப்பர். தங்களுடைய தாயாரும் தந்தையரும் கூடி நின்ற காலே தோன்றிய அனைவரும் அவர்களால் உடன் பிறப்பாளராகக் கருதப்படுவர். நான் முன்னர்ச் சொல்லிக் கொண்டிருந்தவாறு, இவர்கள் தங்களுக்குள் மணம்புரிந்து கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனல் உடன் பிறப்பாளர்கள் திருமணம் செய்துகொள்வதற்கு அறவே தடைவிதித்ததாகக் கொள்ளவேண்டாம். பெரும்பாலோர் அதை ஆதரித்தால், பிதியன் பாவை (Pythian oracle) யின் அனுமதி அவர்களுக்குக் கிடைத்தால், சட்டம் அவர்களை அனுமதிக்கும்.

கிளாக்கன் : முற்றிலும் சரி.

சாக்ரடீஸ் : நமது திட்டம் இத்தகையது ; கிளாக்கன் இதன்படி நமது நாட்டின் காப்பாளர்கள் தங்களது மனைவியரையும் குடும்பங்களையும் பொதுவில் வைத்திருக்க வேண்டும். இப் பிரிவினர் நமது அரசின் மற்ற உறுப்பினர்களோடு முரண் படாது ஒத்துப் போகின்றனர் எனவும் இதைவிடச் சிறந்தது இருக்கமுடியாது எனவும் நமது விவாதம் நிறுவவேண்டும் எனவும் விரும்புவாய்—விரும்பமாட்டாயா ?

கிளாக்கன் : ஆம், நிச்சயமாக.

சாக்ரடீஸ் : எது மிக்க நன்மை எனவும் எது மிக்க தீமை எனவும் கண்டபின், நமது முன்னைய விளக்கவுரை நல்லதன்

முத்திரையைக் கொண்டதா? தீயதன் முத்திரையைக் கொண்டதா? எனக் கவனித்துச் சட்டங்களை இயற்றுவதிலும் அரசினை நடத்துவதிலும் நமது சட்ட மன்ற அறிஞனின் குறிக்கோள் எதுவாக இருக்கவேண்டும், என்றும் நம்மை நாமே கேட்டுக்கொள்வதன் வாயிலாக ஒரு பொது அடிப்படையைக் காண நாம் முயலலாமா?

கிளாக்கன் : எவ்வகையானும் செய்வோம்.

சாக்ரடீஸ் : ஒற்றுமை ஆட்சிபுரியவேண்டிய இடத்தில் பன்மையும், பிளவும், பிரிவும் இருப்பதைவிடப் பெரியதொரு தீங்கு இருக்க முடியுமா? ஒற்றுமையின் பிணைப்பை விடப் பெரியதொரு நன்மை இருக்க முடியுமா?

கிளாக்கன் : இருக்க முடியாது.

சாக்ரடீஸ் : ஒத்த இன்ப துன்பங்கள் நேருமிடங்களில் எங்கு குடிமக்களனைவரும் இன்பக்காலத்தில் மகிழ்ந்தும் துன்பக் காலத்தில் வருந்தியும் இருக்கின்றனரோ அங்கு ஒற்றுமை இருக்கும் அல்லவா?

கிளாக்கன் : ஐயம் இல்லை.

சாக்ரடீஸ் : ஆம், ஒரு நகருக்கோ குடிமக்களுக்கோ ஏற்படும் ஒத்த நிகழ்ச்சிகளைப்பற்றி, உலகின் ஒரு பகுதியினர் வெற்றி எக்களிப்பில் மூழ்கியும், மற்றைப் பகுதியினர் துக்கத்திலாழ்ந்தும் இருக்குங்கால், அவர்களிடையே பொதுவான உணர்வில்லாமல் தனி உணர்ச்சி மட்டுமே இருக்கும் பொழுது, அந்நாடு நன்னிலையற்ற நாடு அல்லவா?

கிளாக்கன் : உறுதியாக.

சாக்ரடீஸ் : 'எனது,' 'எனதல்ல,' 'அவனுடையது,' 'அவனுடையதல்ல' என்ற சொற்களைப் பயன் படுத்துவதில் எழுகின்ற கருத்து வேற்றுமையில்தான் பொதுவாக இத் தகைய வேற்றுமைகள் தோன்றுகின்றன.

கிளாக்கன் : அறுதியிட்டுச் சொன்னீர்கள்.

சாக்ரடீஸ் : ஒரே பொருளுக்கு ஒரேமுறையில் 'எனது' என்றோ 'எனதல்ல' என்றோ ஒத்த சொற்களை அதிகமான தொகையினர் பயன்படுத்துகின்ற நாடு, மிக நன்கமைந்த நாடல்லவா?

கிளாக்கன் : சாலவும் உண்மை.

சாக்ரடீஸ் : அல்லது தனி மனிதனின் நிலைக்கு மிக நெருங்கி வருகின்ற நாடும் அவ்வாறுதானே—உடலில் போலவே, நம்முள் ஒருவனின் விரல் மட்டும் காயமடைந்தால் உடல் முழுவதும் மையமான உள்ளத்தினிடத்து இழுக்கப்பட்டு, அங்குள்ள ஆட்சிப் பீடத்தின் கீழ் இயங்கும் அரசாக மல ரும்போது, அந்தக் காயத்தை உடல் உணர்கிறது. காயம் பட்ட பகுதியைக் கண்டு எல்லா உடற்பகுதிகளும் ஒருங்கே ஒத்துணர்வு, பச்சாத்தாபம் காட்டுகின்றன. அந்த மனித னுக்கு விரலில் வலி இருக்கிறது என்று சொல்கிறோம். துன்பத்தின்போது வலியும், துன்பம் நீங்கியபோது இன்ப மும் உணர்கின்ற உடலின் மற்ற எந்தப் பகுதியைக் குறித் தும் இப்படித்தான் சொல்கிறோம்.

கிளாக்கன் : முற்றிலும் உண்மை, நீங்கள் விரித்துக் கூறும் பொது உணர்வைப் பெறுவதற்கு மிக நெருங்கிய வழி நன் கமைந்த அரசியலில்தான் இருக்கின்றது என்ற உங்கள் கருத்தை நான் ஒப்புக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : இனி, குடிமக்களுள் யாரேனும் ஒருவன் நன்மை யையோ தீமையையோ அனுபவித்தால், அந்த நாடு முழு வதுமே அவனுடைய அனுபவத்தைத் தன்னதாகக்கொண்டு அவனோடு சேர்ந்து மகிழும் அல்லது வருந்தும், அல்லவா?

கிளாக்கன் : ஆம், அதுதான் ஒரு நன்கமைந்த நாட்டில் நிலவும் நிகழ்ச்சி.

சாக்ரடீஸ் : மீண்டும் நமது நாட்டைக் காண, இது அல்லது வேறு எந்த வகையேனும் இந்த அடிப்படைக் கொள்கை களோடு மிக ஒத்துப்போகின்றதா என்பதை அறியவும் இது சரியான நேரமாயிருக்கும்.

கிளாக்கன் : மிக நன்று.

சாக்ரடீஸ் : மற்றவற்றைப் போலவே, நமது அரசும் ஆட்சி யாளர் குடிமக்கள் ஆகியோரைக் கொண்டது அல்லவா?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அவர்களில் அனைவரும் ஒருவரையொருவர் குடி மக்கள் எனவே அழைப்பர் அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : மற்ற அரசுகளில் குடிமக்கள் தன்னுடைய ஆட்சி யாளருக்குக் கொடுக்கும் வேறு பெயர் உண்டா?

கிளாக்கன்: பொதுவாக, அவர்கள் அவர்களை எஜமானர்கள் என அழைக்கின்றனர்; ஆனால் மக்களாட்சி நாடுகளில் அவர்களை ஆட்சியாளர் என்று மட்டுமே அழைக்கின்றனர்.

சாக்ரடீஸ்: குடிமக்கள் என்ற பெயரைத் தவிர ஆட்சியாளருக்கு என்ன பெயரை நமது நாட்டு மக்கள் தருகின்றனர்?

கிளாக்கன்: காப்போர் எனவும் உதவி செய்வோர் எனவும் அவர்கள் அழைக்கப்படுகின்றனர்.

சாக்ரடீஸ்: ஆட்சியாளர் மக்களை என்னவென்று, எங்ஙனம் அழைக்கின்றனர்?

கிளாக்கன்: தங்களை வாழவைப்போர், பராமரிக்கும் தந்தையர் என்பர்.

சாக்ரடீஸ்: மற்ற நாடுகளில் மக்களை அவர்கள் எப்பெயரிட்டு அழைக்கின்றனர்.

கிளாக்கன்: அடிமைகள்.

சாக்ரடீஸ்: மற்ற நாடுகளில் ஆட்சியாளர் ஒருவரையொருவர் என்னவென்று அழைக்கின்றனர்?

கிளாக்கன்: உடன் ஆள்வோர், சக ஆட்சியாளர்.

சாக்ரடீஸ்: நமது நாட்டில் எப்படி?

கிளாக்கன்: உடன் காப்பாளர்.

சாக்ரடீஸ்: ஆட்சியாளன் ஒருவன் தன் உடன் ஆட்சியாளருள் ஒருவரைத் தன் நண்பர் எனவும், மற்றொருவரைத் தன் நண்பரல்ல எனவும் கூறுவதை வேறு எந்த நாட்டிலேனும், எப்பொழுதாவது நீ அறிந்திருக்கிறாயா?

கிளாக்கன்: ஆம், அடிக்கடி.

சாக்ரடீஸ்: அந்த நண்பனை அவன்பால் தனக்கு அக்கறை உண்டென்றும், மற்றவனைப் புதியவன், அவன்பால் தனக்கு அக்கறை இல்லையென்றும் கூறுகின்றான், அல்லவா?

கிளாக்கன்: சரியே.

சாக்ரடீஸ்: ஆனால், உனது காப்பாளர்களில் யாரேனும் மற்றைக் காப்பாளனைப் புதியவன் என எண்ணுவார்களோ, அல்லது பேசுவார்களோ?

கிளாக்கன்: நிச்சயமாகச் செய்யமாட்டார்கள்; ஏனெனில் அவர்கள் சந்திக்கிற ஒவ்வொருவரும் சகோதரன் அல்லது

சகோதரி, தந்தை அல்லது தாய், மகன் அல்லது மகள், குழந்தை அலலது தன்னோடு இவ்வாறு தொடர்பு கொண்டோரின் பெற்றோர் என்றெல்லாம் அவர்களால் கருதப்படுவர்.

சாக்ரடீஸ் : மெச்சத் தகுந்தது; ஆனால் மீண்டும் ஒன்று கேட்கப் போகிறேன். அவர்கள் பெயரளவில் மட்டும் குடும்பமாக இருக்கலாமா? அல்லது எல்லாச் செயல்களிலும் பெயருக்கேற்றாற் போல உண்மையாக இருக்கலாமா? சான்றாக, தந்தை என்ற சொல்லைப் பயன் படுத்துவதில், தந்தையின் கவனிப்பும், சட்டம் எதிர்பார்க்கின்ற குழந்தைகளின் பணிவும், கடமையும் பெறப்படுமா? இக்கடமைகளினின்றும் வழுவுகின்றவனைப் பக்தியற்றவன், அறங்கொன்றவன், ஆகவே கடவுளிடத்தோ மனிதனிடத்தோ அதிக நன்மைகளைப் பெற முடியாதவன் என்றும் அழைக்கலாமா? குழந்தைகளெல்லாம் அவர்களோடு பெற்றோர்கள் எனவும் ஏனைய உறவினர் எனவும் தொடர்பு கொண்டோரைப்பற்றி மக்களால் திரும்பத் திரும்பச் சொல்லக் கேட்கும் கருத்துக்களாக இவை இருக்கலாமா, கூடாதா?

கிளாக்கன் : இவைமட்டுமே இருக்கலாம், பிற எதுவும் கூடாது. ஏனெனில் உதட்டில் மட்டும் குடும்ப உறவுகளின் பெயர்களைச் சொல்லி, அவற்றின் தத்துவத்தை ஒட்டி நடவாது போவதைவிட வேறெது நகைப்பிற்குரியதாக இருக்கமுடியும்?

சாக்ரடீஸ் : அப்படியாயின், நமது நகரத்தில் ஒற்றுமை, இயைபு ஆகியவற்றின் ஒலி மற்ற நகரங்களைக் காட்டிலும் அடிக்கடிக் கேட்கப்படும். நாம் முன்னர் விளக்கியது போல, யாரேனும் ஒருவன் நலமாகவோ நோயுற்றோ, இருக்குங்கால் பொதுவான உலகுக்கொத்த சொல் 'என்னோடு நலம் தான்' அல்லது 'நலமில்லை' என்ற ஒன்றுதான் வெளிப்படும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இத்தகைய சிந்தனை வழிக்கும், பேச்சு முறைக்கும் ஏற்றாற்போல, அவர்கள் தங்களுடைய இன்ப துன்பங்களைப் பொதுவாக வைத்திருப்பர் என்று நாம் சொல்லிக் கொண்டிருந்தோம், அல்லவா?

கிளாக்கன் : ஆம், அப்படித்தான் வைத்திருப்பர்?

சாக்ரடீஸ்: எல்லோரும் ஒருமித்து எந்த ஒரு பொருளை 'என்னுடையதே' என்று சொல்லுகிறார்களோ, அதனிடத்துப் பொதுவான அக்கறை வைத்திருப்பர். இஃதிருப்பதால் இன்ப துன்ப உணர்ச்சிகளையும் பொதுவாகக் கொண்டிருப்பர்.

கிளாக்கன்: ஆம், மற்ற நாடுகளில் இருப்பதை விட அதிகம்.

சாக்ரடீஸ்: நாட்டின் பொது அரசியலமைப்புக்கும் மேலாக பெண்டிர், குழந்தைகள் ஆகியோரைக் காப்பாளர்கள் பொதுவில் வைத்திருப்பர் என்பதுதான் இதன் காரணமாயிருக்கும்.

கிளாக்கன்: ஆம், அதுதான் தலையாய காரணமாய் இருக்கும்.

சாக்ரடீஸ்: இந்த உணர்ச்சியொற்றுமையை என்ன என்பது! இன்பத்தாலோ துன்பத்தாலோ அலைக்கப்படும்பொழுது உடலும் அதனுறுப்புக்களும் இருக்கும் நிலையோடு நன்கமைந்த ஓர் அரசை ஒப்பிட்டதில் உள்ளுறை—கருத்தாக பெறப்பட்டது. நாம் இவ்வொற்றுமை மிகவும் நலம் பயக்கும் என்பதை ஒப்புக்கொண்டோம்.

கிளாக்கன்: ஆம், ஒப்புக்கொண்டோம். ஒப்புக்கொண்டது முற்றிலும் சரிதான்.

சாக்ரடீஸ்: அப்படியாயின் நமது குடிகளிடை மனைவியர் குழந்தைகள் ஆகியோரின் பொதுப்பயன் நாட்டிற்கு மிக அதிக நலந்தரும் என்பது தெளிவு அல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: இது நாம் வற்புறுத்திவந்த கொள்கையோடு ஒத்துப் போகிறது. அதாவது :— வீடுகள், நிலம் அல்லது எந்தச் சொத்தும் காப்பாளர்கள் வைத்திருக்கக் கூடாது. அவர்களுக்கு உணவுதான் ஊதியம். அவ்வுணவையும் மற்ற குடிமக்களிட மிருந்து பெறவேண்டும், அவர்களுக்குத் தனி அல்லது சொந்தச் செலவுகள் இருக்கக்கூடாது; ஏனெனில் காப்பாளர்களின் உண்மையான இயல்பை அவர்கள் காக்க வேண்டும்.

கிளாக்கன்: சரி.

சாக்ரடீஸ்: பொதுச் சொத்து, பொதுக் குடும்பங்கள் ஆகியவை இரண்டுமே அவர்களை மேலும் நல்ல காப்பாளர்களாக உண்மையிலேயே ஆக்க முனைகின்றன. 'எனது' 'எனதல்ல' என்பனபற்றி முரண்பட்டுப் பொருது நகரைப் பிளவு

படுத்தி நிற்க மாட்டார்கள். தனி மனைவியும் குழந்தைகளும் தனி இன்ப துன்பங்களும் இருக்கும் தனது தனித்த வீட்டில் சேர்த்து வைத்திருக்கும் சொத்துக்களை ஒவ்வொருவனும் இழுத்துச் செல்வான். ஆனால் அனைவரும் எவ்வளவு முடியுமோ அந்த அளவுக்கு அதே இன்ப துன்பங்களினால் அலைக்கப்படுவர். ஏனெனில் தங்களுக்கு நெருக்கமானதும் அருமையானதுமாக இருப்பவைபற்றி அவர்களனைவருக்கும் ஒரே கருத்துத்தான் இருக்கிறது, ஆகவே அவர்கள் ஒரு பொதுக்குறிக்கோளை நோக்கிச் செல்வர்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : தங்களுடைய உடலைத் தவிர, தமதென்று சொல்லிக்கொள்ள வேறொன்றும் இலராதலின் அவர்களிடை வழக்குகளும், புகார்களும் இல்லாதொழியும். பணம் அல்லது குழந்தைகள் அல்லது உறவுகளினால் வரும் சண்டைகளினின்றும் அவர்கள் விடுவிக்கப்படுவர்.

கிளாக்கன் : ஆம், விடுபடுவர்.

சாக்ரடீஸ் : ஏச்சு அல்லது அடிதடி ஆகியவை பற்றிய நீதிமன்ற நடவடிக்கைகளும் தொடர வழி இல்லை. தன்னோடு ஒத்தவர்களிடமிருந்து தங்களைத் தாமே காத்துக்கொள்ள வேண்டும் என்பது பெருமைக்குரியது, சரியானது என நாம் சொல்வோம். உடலைக் காப்பதை அவசியமானது எனச் செய்வோம்.

கிளாக்கன் : அது நன்று.

சாக்ரடீஸ் : ஆம், சட்டத்தில் இன்னுமொரு நன்மை இருக்கிறது. அதாவது, ஒருவனுக்கு மற்றவனோடு விவாதம் ஏற்பட்டால் தனது வெறுப்பை அங்கே அப்பொழுதே தீர்த்துக்கொள்ளலாமேயன்றி, அபாயகரமான எல்லைக்குச் சொல்லக்கூடாது.

கிளாக்கன் : உறுதி.

சாக்ரடீஸ் : ஆளும் பொறுப்பையும் இளையோரை அமைதிப்படுத்தும் பணியையும் மூத்தோரிடம் விட்டுவிடுவோம்.

கிளாக்கன் : தெளிவு.

சாக்ரடீஸ் : நீதிபதிகள் ஆணையிட்டாலன்றி மூத்தோர் ஒருவரை இளைஞனொருவன் அடிக்கவோ பிறவன் முறைகளால் துன்புறுத்தவோ கூடாது என்பதில் ஐயமில்லை. மேலும்

அவரை எவ்வகையிலும் குறைத்து மதிக்கவும் மாட்டான். ஏனெனில் அவனைத்தடுக்கும் வல்லமைபடைத்த வெட்கம், அச்சம் என்ற காவலர்கள் இருக்கின்றனர். தந்தை உறவில் இருப்போரைத் துன்புறுத்துதலினின்றும் மனிதரை விலக்கும் வெட்கம் அது. துன்புற்றவன் அவனுடைய உடன்பிறந்தோர், சகோதரர்கள், புதல்வர்கள், தந்தையர் ஆகியோரால் உதவி பெறுவான் என்பதனால் அச்சம் தடுக்கும்.

கிளாக்கன் : அது உண்மையே.

சாக்ரடீஸ் : அப்படியாயின், குடிமக்கள் தங்களுக்குள் அமைதியைக் காத்துக்கொள்ளச் சட்டங்கள் எல்லாவகையிலும் துணை செய்யும், எனலாமா ?

கிளாக்கன் : ஆம், அமைதிக் குறைவு இருக்காது.

சாக்ரடீஸ் : காப்பாளர்கள் தமக்குள் ஒருபொழுதும் எதிராக நிற்கமாட்டார்கள் என்பதனால் நகரத்து மற்றப் பகுதியினர் அவர்களுக்கு எதிராகவோ, தமக்குள்ளோ பிளவுபடுவர் என்னும் அபாயம் இராது.

கிளாக்கன் : ஆம் எவ்வித அபாயமும் இராது.

சாக்ரடீஸ் : அவர்களிடமிருந்து விலக்கப்படும் சிறிய இழி குணங்கள் பற்றி நான் சொல்லக்கூட விரும்பவில்லை. ஏனெனில் அவை கவனித்தற்குரியன அல்ல. சான்றாக ஏழைகள் செல்வர்களை நேரடியாகப் புகழ்வது, குடும்பத்தை நடத்துவதற்கும் வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்கப் பணம் திரட்டுவதற்கும் கடன்வாங்குவது, பின்னர் இல்லையென மறுப்பது, எவ்வாறெல்லாம் இயலுமோ அவ்வாறெல்லாம் ஈட்டுவது, அப்பணத்தைப் பெண்டிர், அடிமைகள் ஆகியோரிடத்துக் கொடுத்து வைப்பது, ஆகியவற்றிலெல்லாம் துன்பமும் தொல்லையும் மிக அடைவது இவை போன்ற பல்வகையான தீங்குகளால் மக்கள் துன்புறுகின்றனர். இவை பெரிதளவு இழிந்தவை, இவ்விழிவும் நமக்கு வெளிப்படையே, எனவே இவற்றைப்பற்றிப் பேசுவதும் பயனற்றது.

கிளாக்கன் : ஆம், இவற்றைக் காண்பதற்காக ஒரு மனிதன் கண்களைப் பெற்றிருக்க வேண்டியதில்லை.

சாக்ரடீஸ் : இந்தத் தீமைகள் அனைத்திலிருந்தும் அவர்கள் காக்கப்படுவர். ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிபெறுவோரது வாழ்க்கையைப்போல, இன்னும் அதிகமாகக்கூட,

அவர்களது வாழ்க்கை இனியதாக ஆண்டவன் அருள் பெற்றதாக இருக்கும்.

கிளாக்கன் : எங்ஙனம்?

சாக்ரடீஸ் : வெற்றிபெற்ற - பொதுச்செலவில் முழு வாழ்க்கையும் வாழ்கிற நமது குடிமக்களுக்குக் கிடைக்கும் அருளில் - இனிய வாழ்க்கையில் - ஒரு பகுதிமட்டுமே பெறுவதனால் தான் ஒலிம்பிக் வெற்றிவீரன் மகிழ்ந்திருக்கிறன் எனப்படுகிறன். ஏனெனில் குடிமக்கள் பெற்ற வெற்றி நாடு முழுவதின் முன்னேற்றத்தைக் குறிக்கிறது. வாழ்க்கையின் தேவைகளனைத்தும் நிறைந்து காணப்படுவதுதான் அவர்களும் அவர்களுடைய குழந்தைகளும் அணிந்திருக்கும் மணிமுடி. வாழ்ந்திருக்கும்போது நாட்டினிடமிருந்து பரிசுகள் பெறுகிறர்கள்; மறைந்தபின் பெருமைக்குரிய முறையில் புதைக்கப்படுகிறர்கள்.

கிளாக்கன் : ஆம், அவை புகழ்சான்ற பரிசுகள்தாம்.

சாக்ரடீஸ் : முந்திய விவாதமொன்றில் பெயரிலாத ஒருவன் நமது காப்பாளர்களை நாம் மகிழ்ச்சியற்றவர்களாக்குகிறோம் - அவர்களுக்கு எல்லாம் இருந்திருக்கலாம் ஆனல் ஒன்றும் இல்லை - என்று நம்மைக் குற்றம் சாட்டியதும், வாய்ப்பு ஏற்படும்போது இப்பிரச்சினையை இனி ஆராயலாம் என்றதும், ஆனல் இப்பொழுது அறிவுறுத்தப்பட்டபடி நமது காப்பாளர்களை உண்மையிலேயே நல்ல காப்பாளர்களாக ஆக்குவதாகக் கூறியதும், ஒரு பிரிவினருடையதல்ல, நாடு முழுவதன் மிகப் பெரிய அளவு இன்பத்தை மனத்திற் கொண்டு நமது நாட்டை உருவாக்கியதாகச் சொன்னதும் உனக்கு நினைவிருக்கிறதா?

கிளாக்கன் : ஆம், நினைவிருக்கிறது.

சாக்ரடீஸ் : இனி நமது காப்பாளர்களின் வாழ்க்கையை ஒலிம்பிக் வீரனின் வாழ்க்கையைவிட மேம்பட்டதாகவும் சிறந்ததாகவும் ஆக்கிவிட்ட பிறகு என்ன சொல்கிறய்? சக்கிலியரது வாழ்க்கை அல்லது வேறெந்த கைத்தொழிலாளரின் வாழ்க்கை அல்லது உழவரது வாழ்க்கையை அதனேடு ஒப்பிட வேண்டுமா?

கிளாக்கன் : நிச்சயமாக வேண்டாம்.

சாக்ரடீஸ் : அதே நேரத்தில் பிறிதோர் இடத்தில் நான்

சொன்னதை இங்கே திருப்பிச் சொல்லவேண்டும். அதாவது நமது காப்பாளரில் யாரேனும் காப்பாளனுகை இருக்கமுடியாத முறையில் இன்புற்றிருக்க முயன்ருல், நமது மதிப்பில் எல்லா வாழ்க்கைகளைவிட மிகச்சிறந்த பாதுகாப்பும் ஒருமைப்பாடும் கொண்ட இவ்வாழ்க்கையில் மனநிறைவு அடையாதுபோனுல், தனது தலைக்கேறிய இன்ப மயக்கத்திலும் இளமைச் செருக்கிலும் மதிமறந்து நாடு முழுவதையும் தன்னதாக்கிக் கொள்ள முனைவானேயானுல் அவன் பாதி என்பது முழுமையைவிடப்பெரியது, என்று ஹிசியாடு[1] எவ்வளவு அறிவுக்கூர்மையோடு சொன்னுன் என்பதை அறிய நேரிடும்.

கிளாக்கன் : அவன் என்னைக் கலந்தாலோசிப்பானேயாகில், அத்தகைய வாழ்க்கையை உனக்குத் தந்திருக்கிற பொழுது நீ எங்கிருக்கிருயோ அங்கேயே இரு, என்றே சொல்வேன்.

சாக்ரடீஸ் : அப்படியாயின் ஆடவரும் பெண்டிரும் நாம் விவரித்ததுபோல பொதுக்கல்வி பொதுக்குழந்தைகள் என்று பொதுவான வாழ்க்கைகொண்டவர்களாக இருக்கவேண்டும். நகரில் வாழ்வதோ போருக்குப் போவதோ பொதுவாகக் குடிமக்களை அவர்கள் கண்காணித்தலோ வேண்டும், ஒருங்கே இருந்து கண்காணித்து ஒருங்கே சேர்ந்து நாய்களைப்போல் வேட்டையாடவேண்டும் ; மேலும் எப்பொழுதும் எல்லாவற்றிலும் தம்மால் இயன்ற அளவு பெண்டிர் ஆடவரோடு பங்குபெறவேண்டும் என்பதையெல்லாம் நீ ஒப்புக்கொள்கிருய் அல்லவா? இப்படிச் செய்வதனுல் மிகச் சிறந்ததையே செய்வார்கள். இயற்கையான உறவுகளைக் காப்பதல்லாது, அவற்றை மீறமாட்டார்கள்.

கிளாக்கன் : உங்கள் கருத்தை ஏற்கிறேன்.

சாக்ரடீஸ் : அத்தகைய சமுதாயம் மற்ற பிராணிகளைப்போல் மனிதரிடையேயும் உருவாவது இயலுமா? இயலுமானுல் எவ்வழியில் இயலும் என்பவைபற்றி இனி ஆராயவேண்டும்.

கிளாக்கன் : நான் சொல்ல இருந்த பிரச்சினையை நீங்களே எதிர்பார்த்துச் சொல்லிவிட்டீர்கள்.

சாக்ரடீஸ் : அவர்களால் எப்படிப் போரிட முடியும் என்பதைக் காண்பதில் சிரமம் ஒன்றும் இல்லை.

---

1. Hesiod

கிளாக்கன் : எப்படி ?

சாக்ரடீஸ் : ஏன், அவர்கள் அனைவரும் சேர்ந்து போர்ப் பயணங்கள் மேற்கொள்வர். தங்களுடைய குழந்தைகளில் வலிமையுடைய குழந்தைகளைத் தம்முடன் அழைத்துச் செல்வர். ஏனெனில் கைத்தொழில் வல்லானது மகன் உருவாக்கப்படுவதுபோல அக்குழந்தைகள் வளர்ந்த பிறகு தாங்கள் செய்யவேண்டிய வேலையை இப்போதே பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும். பார்ப்பதோடுமட்டுமின்றி, போரில் துணையிருக்கவும் வேண்டியிருக்கும், தங்களுடைய பெற்றோருக்குப் பணியாளராகவும் இருக்கவேண்டியிருக்கும். குயவனது பிள்ளைகள் சக்கரத்தைத் தொடுவதற்கு நெடு நாள் முன்னரே அதைப் பார்த்து உதவி செய்கிறார்கள் என்று கலைகளில் பார்க்குங்கால் நீ கவனித்ததில்லையா ?

கிளாக்கன் : ஆம், கவனித்திருக்கிறேன்.

சாக்ரடீஸ் : குயவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி தந்து அவர்கள் தங்கள் கடமைகளைப் பார்க்கவும் பயிலவும் வாய்ப்பு அளிப்பதில் நமது காப்பாளர்களைவிடக் கவனமாக இருப்பாரா ?

கிளாக்கன் : இக்கருத்து நகைப்பிற்குரியது.

சாக்ரடீஸ் : பெற்றோரிடத்திலும் இதன் விளைவைக் காணலாம். குழந்தைகள் இருப்பது மற்றைப் பிராணிகளிடத்திற் போல் பெற்றோருக்கும் வீரத்திற்குப் பெருந் தூண்டுகோலாக இருக்கும்.

கிளாக்கன் : சாலவும் உண்மை. சாக்ரடீஸ்! இருப்பினும் அவர்கள் அடிக்கடி போரில் நிகழ்வதுபோலத் தோல்வி யுற்றால் அவ்வபாயம் எவ்வளவு பெரியது. குழந்தைகளும் அவர்களது பெற்றோரும் அழிந்துபோவர், பின்னர் நாடு என்றுமே புத்துயிர் பெறாது.

சாக்ரடீஸ் : உண்மை, ஆனால் அவர்கள் அபாயகரமான செயல் களில் ஈடுபடுவதை என்றுமே அனுமதிக்கமாட்டாயா ?

கிளாக்கன் : அப்படிச் சொல்லவில்லை.

சாக்ரடீஸ் : சரி, ஆனால் எப்போதாகிலும் அவர்கள் ஆபத்துக் குள்ளாகும் நிலையை ஏற்கவேண்டுமாயின், எதனினின்றும் தப்பினால் தமக்கு நன்மை அடையும்படியாக இருக்குமோ, அதை ஏற்க வேண்டாமா ?

கிளாக்கன் : தெளிவாக.

சாக்ரடீஸ் : எதிர்காலச் சிப்பாய்கள் தங்களது வாலிபத்தில் யுத்தத்தைப் பார்ப்பார்களோ, மாட்டார்களோ என்பது ஒரு முக்கியமான காரியம். இதன்பொருட்டு இடைஞ்சலுக்குள்ளாகலாம்.

கிளாக்கன் : ஆம், இது மிகவும் முக்கியம்.

சாக்ரடீஸ் : நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முதல் நடவடிக்கை நம்முடைய பிள்ளைகளை யுத்தத்தைக் காணச்செய்ய வேண்டியது ; ஆனால் அவர்களை ஆபத்தில் சிக்காதபடிப் பார்த்துக் கொள்ளவேண்டும் ; அப்பொழுது யாவும் நன்றாக இருக்கும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அவர்களுடைய பெற்றோர் யுத்தத்தின் அபாயங்களுக்குக் கண்மூடிகளாக இருக்கமாட்டார்களென்று எதிர்பார்க்கலாம். அவர்களுக்கு எந்தப் படையெடுப்புக்கள் பத்திரமானவை, எவை ஆபத்தானவை என்று மானுட தூர திருஷ்டிப் பிரகாரம் தெரியுமல்லவா ?

கிளாக்கன் : இதை எதிர்பார்க்கலாம்.

சாக்ரடீஸ் : பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பத்திரமான படையெடுப்புக்களுக்கு அழைத்துச் செல்வார்கள், அபாயகரமான தாக்குதல்களைக் குறித்து விழிப்பாக இருப்பார்கள் அல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அவர்களை அனுபவமுள்ள திறமைசாலிகளின் ஆளுகையின்கீழ் விட்டுவிடுவார்கள் அல்லவா ?

கிளாக்கன் : அதிக நியாயமானதுதான் இது.

சாக்ரடீஸ் : ஆயினும் யுத்தத்தின் அபாயங்களை எப்பொழுதும் முன்னோடியாக அறியமுடியாது. அவை சம்பந்தமாக நிச்சயமற்ற நிலை அதிகமாகவுள்ளது அல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே இப்படிப்பட்ட நிச்சயமற்ற நிலைகளிலிருந்து தப்பும் பொருட்டு அவர்களுக்கு உடனடியாக இறக்கைகள் தரப்படவேண்டும்.

கிளாக்கன் : நீர் என்ன கூறுகிறீர் ?

சாக்ரடீஸ் : நான் என்ன கூறுகிறேன் என்றால் அவர்கள் அதிக இளைஞராய் இருக்கும்போதே அவர்களைக் குதிரைமீது ஏற்ற வேண்டும். அவர்கள் குதிரையைச் செலுத்த அறிந்தபிறகு குதிரைமீது அவர்களை அமர்த்தி யுத்தத்தைப் பார்க்க அழைத்துச் செல்லவேண்டும். இக்குதிரைகள் உணர்ச்சி வசப்பட்டதாகவோ யுத்த சன்னத்தமாகவுள்ளதாகவோ இருக்கக்கூடாது. ஆனால் அடக்கக் கூடியதாகவும், மிகவும் வேகமாக ஓடக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இவ்வாறு இனி தங்களுடைய அலுவலாகப் பேசக்கூடியதைப் பற்றி ஒரு சிறந்த பார்வையை அவர்கள் பெறுவார்கள். அபாயம் ஏற்பட்டால் தங்களுடைய மூத்த தலைவர்களைப் பின்பற்றி அவர்கள் தப்பித்துக்கொள்வார்கள்.

கிளாக்கன் : நீர் கூறுவது சரி என்று நம்புகிறேன்.

சாக்ரடீஸ் : பிறகு யுத்தத்தைப்பற்றி, உம்முடைய வீரர்களுக்கு இடையே உறவுமுறைகள் எவ்வாறு இருக்கவேண்டும், அவர்களுக்கும் அவர்களுடைய விரோதிகளுக்குமிடையே உறவு எப்படி இருக்கவேண்டும்? தன்னுடைய நிலையை விட்டுப் போகிறவனும், தன்னுடைய ஆயுதங்களை எறிந்து விட்டுப் போகிறவனும், அல்லது வேறுவிதமான கோழை யான செயல்புரிபவனும் விவசாயி அல்லது தொழிலாளியாகக் கீழ் நிலைகளுக்கு இறக்கப்படவேண்டும் என்று கூற விரும்பு கிறேன். நீ என்ன நினைக்கிறாய்?

கிளாக்கன் : நானும் அப்படித்தான் கூறவேண்டும்.

சாக்ரடீஸ் : தன்னைக் கைதியாக ஒப்புக்கொடுப்பவன் அவ னுடைய விரோதிகளுக்கு வெகுமானமாகவே கொடுக்கப் படலாம், அவன் அவர்களுடைய நியாயமான உணவு; அவர்கள் விருப்பப்படி அவனைச் செய்யட்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : வெற்றியிற் சிறந்த புகழ்மிக்க வீரனுக்கு என்ன செய்யப்படவேண்டும்? முதலில் தன்னுடைய வாலிபத் தோழர்களிடமிருந்து கௌரவத்தைப் பெறட்டும், அவர்கள் ஒவ்வொருவரும் அவனுக்கு முடி சூட்டட்டும். நீ என்ன சொல்லுகிறாய்?

கிளாக்கன் : நான் அங்கீகரிக்கிறேன்.

சாக்ரடீஸ் : அவனுக்குத் தோழமையின் வலதுகை கிடைப் பதைப்பற்றி நீ என்ன கூறுகிறாய்?

கிளாக்கன் : அதற்குக்கூட நான் ஒப்புகிறேன்.

சாக்ரடீஸ் : ஆனால் நான் கூறப்போகும் அடுத்த காரியத்திற்கு நீ ஒப்புவது அரிது.

கிளாக்கன் : அது என்ன?

சாக்ரடீஸ் : அவன் முத்தம் கொடுக்கவேண்டும், முத்தம் கொடுக்கப்படவேண்டும்.

கிளாக்கன் : மிக நிச்சயமாக நான் இன்னும் சற்று அதிகமாக ஒருபடி முன்செல்வேன். படையெடுப்புத் தொடரும்வரை அவன் முத்தம்கொடுக்க விரும்பும் எவரும் அவனால் முத்தம் கொடுப்பதை மறுக்கக்கூடாது. ஆக, சேனையில் ஒரு காதலன் இருந்து அவன் காதல் இளமையாகவோ முதன் முதலானதாகவோ இருந்தால் அவன் வீரத்தின் வெகுமதியைப் பெற அதிக ஆர்வமுள்ளவனாக இருப்பான்.

சாக்ரடீஸ் : சிறந்த பேச்சு, வீரபுருடன் மற்றவர்களைவிட அதிக மனைவியரை அடையலாம், என்பது ஏற்கனவே நிச்சயிக்கப் பட்டுவிட்டது. இப்படிப்பட்ட காரியங்களில் அவனுக்கு முதலிடம் கொடுத்து அவன் எத்தனை பிள்ளைகளைப் பெற முடியுமோ அத்தனை பிள்ளைகளைப் பெறச் செய்ய வேண்டாமா?

கிளாக்கன் : ஒத்துக்கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ் : மேலும் ஹோமர் கூறியபடி, தைரியசாலிகளான இளைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டிய மற்றொரு முறை ஒன்று உண்டு. எப்படி அஜாக்ஸ், சண்டையில் சிறப்பாக விளங்கியபோது, நீண்ட முதுகெலும்புகளைப் பெற்றானோ அப்படியே வீரனுக்குச் செய்யப்பட வேண்டும். இது மலர்ச்சியடைந்துள்ள வீரனுக்குப் பொருத்தமான பாராட்டுதலாவதோடு பலப்படுத்தும் காரியமுமாகும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இதில் ஹோமர் நமது ஆசிரியராகட்டும். நாமும் கூட, பலியிடும்போதும் அப்படிப்பட்ட மற்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்போதும் வீரர்களை அவர்களது தீரத்திற்கேற்பக் கௌரவிப்போம். ஆண்களானாலும் பெண்களானாலும் சரி பாடல்களாலும் மற்றவற்றாலும் சிறப்பிப்போம். "முதலிடங்களைக் கொடுப்போம். சிறந்த உணவை அளிப்போம். நிரம்பி வழியும் பானபாத்திரங்களைத் தருவோம்." அவர்

களைச் சிறப்பிக்கும்போதே அவர்களுக்குப் பயிற்சியும் அளிப்போம்.

கிளாக்கன் : இது மிகவும் சிறந்தது.

சாக்ரடீஸ் : ஆம், ஒரு மனிதன் யுத்தத்தில் பெருமையுடன் இறக்கும்போது முதலாவதாக நாம் அவன் பொன்மயமான இனத்தைச் சேர்ந்தவன் என்று கூறவேண்டாமா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவர்கள் இறந்தபிறகு அவர்கள் பூமியின் பரிசுத்த மான தேவதூதர்கள், நன்மையின் சிற்பிகள், கெடுதல்களைத் தவிர்ப்பவர்கள், பேச்சுக்கலைஞரின் பாதுகாவலர் என்று கூறுவதற்கு நமக்கு ஹெசியடின் அங்கீகாரம் இல்லையா ?

கிளாக்கன் : ஆம் அவரது அதிகாரத்தை ஒப்புகிறோம்.

சாக்ரடீஸ் : தெய்வீகமும் வீரமும் பொருந்திய பெரியோரை எவ்வாறு அடக்கம்செய்யவேண்டுமென்றும் அவர்களுக்கு எவ்வகைச் சிறப்புச் செய்யவேண்டும் என்றும் தெய்வத்தி னிடமிருந்து அறியவேண்டும். தெய்வத்தின் கட்டளைப் படியே நாம் செய்யவேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : எப்படியும் அவ்வாறுதான் செய்யவேண்டும்.

சாக்ரடீஸ் : வருங்காலத்தில் அவர்களுக்கு மரியாதை காட்டு வோம். வீரர்களின் கல்லறைகளுக்கும் சமாதிகளுக்கும் முன்பு மண்டி இடுவோம். வீரர்களுக்குமட்டுமன்றி நல்லவர் களுக்கும் அவர்கள் முதிர்வின் காரணமாகவோ மற்றப் படியோ இறந்தால் இவ்வாறு மரியாதை செய்வோம்.

கிளாக்கன் : அது மிகவும் சரி.

சாக்ரடீஸ் : பிறகு வீரர்கள் தங்கள் விரோதிகளை எங்ஙனம் நடத்தவேண்டும் ? இதைப்பற்றி என்ன கூறுகிறாய் ?

கிளாக்கன் : எந்த முறையில் என்று நீர் நினைக்கிறீர் ?

சாக்ரடீஸ் : முதலாவதாக அடிமைத்தனமாக நடத்துவதைப் பற்றி என்று கூறலாமா ? கிரேக்கர்கள் கிரேக்கநாடுகளை அடி மைப்படுத்துவது சரி என்று நீ நினைக்கிறாயா ? மற்றவர்கள் அவர்களை அடிமையாக்க வேண்டுமென்று எண்ணுகிறாயா ? அல்லது அவர்களை விட்டுவிடவேண்டும் என்ற பழக்கத்தைக் கைக்கொள்ளவேண்டுமா ? மற்றப்படி கிரேக்க இனம் முழுமை யும் ஒருநாள் காட்டுமிராண்டிகளின் பிடியில் சிக்கிவிடாதா ?

கிளாக்கன் : கிரேக்கர்களை விட்டுவிடுவது மிகமிகச் சிறந்தது.

சாக்ரடீஸ் : ஆக எந்த ஒரு கிரேக்கனும் அவர்களால் ஓர் அடிமையாகக் கொள்ளப்படாது. இப்படிச் சட்டத்தை அவர்கள் அநுசரிக்கவேண்டும். மற்றைக் கிரேக்கருக்கும் இதை அநுசரிக்க ஆலோசனை கூறவேண்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக இவ்வாறு அவர்கள் மிலேச்சருக்கு எதிராக ஒத்து வாழ்வார்கள். தங்களுக்குள்ளேயே கைநீட்டிக்கொள்ளமாட்டார்கள்.

சாக்ரடீஸ் : யுத்தத்தில் விழுந்து போகின்றவர்களைப் பற்றி என்ன? வெற்றிபெற்றவர்கள் தோற்றவர்களின் ஆயுதங்களைத் தவிர வேறு எதையும் எடுத்துக்கொள்ளலாமா என்று நான் கேட்டேன். விரோதியைச் சூறையாடுவது என்ற முறை சண்டைக்குப் போகவேண்டாம் என்பதற்கு ஒரு சாக்காக ஆகிவிடாதா? தாங்கள் ஒரு கடைமையைச் செய்வதாகப் பாசாங்குகாட்டிக் கோழைகள் சவங்களுக்கு அருகில் பதுங்கிக் கொள்ளுகிறார்கள். கொள்ளையிட வேண்டுமென்ற தங்களது ஆசையால் பல சேனைகள் இதுவரை அழிந்து விட்டன.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஒரு பிணத்தைத் திருடுவதில் பேராசையும், ஓர் அளவிற்கு அற்பத்தனமும், பேடித்தனமும் இல்லையா? உண்மையான எதிரி தன் ஆயுதங்களை விட்டுவிட்டு இறந்து போய்விட்டபிறகு இவ்வாறு நடப்பது ஒரு நாய் தன்னைத் தாக்குபவனை விட்டுவிட்டுத் தன்மேல் எறியப்படும் கற்களைக் கோபிப்பது போன்று இல்லையா?

கிளாக்கன் : நாயைப் போன்றதுதான்.

சாக்ரடீஸ் : இறந்தவர்களைக் கெடுக்கவோ அவர்களது சவ அடக்கத்தைத் தடுக்கவோ கூடாது.

கிளாக்கன் : ஆம் நிச்சயமாக.

சாக்ரடீஸ் : தெய்வங்களின் கோயில்களில் நாம் ஆயுதங்களைப் படைக்கவேண்டாம். மற்றைக் கிரேக்கர்களோடு நல்ல தொடர்பு கொள்ளவேண்டுமானால் கிரேக்க ஆயுதங்களைப் படைக்கவே கூடாது. உண்மையாக உறவினர்களிடமிருந்து எடுக்கப்பட்ட கொள்ளைப் பொருள்களைத் தெய்வத்தின் சம்மதமின்றிப் படைப்பது பரிசுத்தக் குறைவாகும் என்று நாம் பயப்படக் காரணமுண்டு.

கிளாக்கன் : மிக உண்மை.

சாக்ரடீஸ் : கிரேக்கப் பிரதேசங்களைப் பாழ்படுத்துதல் அல்லது கிரேக்க வீடுகளைச் சுட்டெரித்தல் சம்பந்தமாக என்ன பழக்கத்தைக் கொள்ளவேண்டும் ?

கிளாக்கன் : இது சம்பந்தமாக உம்முடைய அபிப்பிராயத்தை நான் அறியலாமா ?

சாக்ரடீஸ் : என்னுடைய தீர்மானத்தின்படி இரண்டும் தடை செய்யப்பட வேண்டும். வருட விளைவைத் தவிர மற்ற ஒன்றையும் எடுத்துக்கொள்ள மாட்டேன். ஏன் என்று சொல்லட்டுமா ?

கிளாக்கன் : தயவுசெய்து சொல்லும்.

சாக்ரடீஸ் : ஒற்றுமை இன்மைக்கும் யுத்தத்திற்கும் பெயரில் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அவைகளின் தன்மையிலும் வித்தியாசம் உண்டு. முன்னது அகநிலை, உள்நாடு சம்பந்தமானது ; மற்றது புறநிலை, வெளிநாடு சம்பந்தமானது.

கிளாக்கன் : இது சரியான வித்தியாசம்.

சாக்ரடீஸ் : இது போன்றே பொருத்தமான மற்றொரு செய்தியை நான் கூறலாமா ? இரத்தக் கட்டினுலும் நட்பினுலும் கிரேக்க இனம் இணைக்கப்பட்டிருக்கிறது. அது மிலேச்சரோடு சம்பந்தமில்லாதது.

கிளாக்கன் : மிகவும் சரி.

சாக்ரடீஸ் : ஆகவே கிரேக்கர் மிலேச்சரோடு சண்டைபோடும் பொழுதும், மிலேச்சர் கிரேக்கரோடு சண்டைபோடும் பொழுதும் அவர்கள் யுத்தத்திலிருக்கிருர்கள் என்று கூறுவோம். அவர்கள் விரோதிகள் ; அவர்களது பூசல்தான் சண்டையென்று கொள்ளப்படவேண்டும். கிரேக்கர்கள் தங்களுக்குள்ளேயே சண்டை போட்டுக்கொள்ளும்போது கிரேக்கநாடு ஒழுங்கீனமாகவும் ஒற்றுமையற்றும் இருக்கிறது என்று கூறுவோம். இயற்கையில் அவர்கள் நண்பர்களாய் இருப்பதால் சண்டையிடும்போது ஒற்றுமை அற்றவர்களாகிருர்கள்.

கிளாக்கன் : நான் ஒப்புக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : ஒற்றுமை இல்லாது ஒரு நகரம் பிளவுபட்டு இருக்கும்போது, இரு சாராரும் நிலங்களை அழித்துக்கொண்டும் வீடுகளைத் தீயினுக்கு இரையாக்கிக்கொண்டும் இருக்கும் போது சண்டை எவ்வளவு பொல்லாததாய் இருக்கிறது என்

பதை எண்ணிப்பார். தன் நாட்டை நேசிக்கும் எந்தத் தேசாபிமானியும் தன் சொந்தத் தாயையும், செவிலியையும் சின்னுபின்னமாக்கத் துணியமாட்டான். வெற்றியடைந் தோன் தோல்வியுற்றவனின் விளைபொருள்களைக் கொள்ளை அடிப்பதற்குக் காரணம் இருக்கலாம். ஆனுல் அவர்கள் மனத்தில் சமாதானத்தின் எண்ணம் இருக்கும். எப் பொழுதுமே சண்டை செய்து கொண்டிருக்க வேண்டு மென்று நினைக்கமாட்டார்கள்.

கிளாக்கன் : ஆம் மற்றதைவிட அது உயர்ந்த குணம்.

சாக்ரடீஸ் : நீ அமைக்கவிருக்கும் நகரம் கிரேக்க நகரமாய் இராதா?

கிளாக்கன் : அது அவ்வாறுதான் இருக்கவேண்டும்.

சாக்ரடீஸ் : பின்னே, அந்த நகரத்தார் நல்லவர்களாகவும் நாகரீகமானவர்களுமாக இருக்கமாட்டார்களோ?

கிளாக்கன் : ஆம் அதிக நாகரீகமாக இருப்பார்கள்.

சாக்ரடீஸ் : பிறகு அவர்கள் கிரேக்க நாட்டின் அன்பர்களாக வும் அந்நாட்டைத் தங்கள் சொந்த நாடாகக் கருதுபவர் களாகவும் பொதுவான கோயில்களில் பங்குகொள்பவர் களாகவும் இருக்கமாட்டார்களா?

கிளாக்கன் : அது நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவர்களிடையே தோன்றும் வித்தியாசங்கள் அவை வெறும் ஒற்றுமை இன்மையே அன்றி யுத்தம் என்று கூறக்கூடாது. அவை நண்பர்களிடையே தோன்றும் விளை யாட்டுச் சண்டைகள் அல்லவா?

கிளாக்கன் : யுத்தம் என்று நிச்சயமாகக் கூறக்கூடாது.

சாக்ரடீஸ் : ஒரு காலத்தில் மறுபடியும் சேரப்போகிறவர்கள் போன்றுதானே அவர்கள் சண்டை போட்டுக்கொள்வார்கள்.

கிளாக்கன் : நிச்சயம்.

சாக்ரடீஸ் : அவர்கள் சினேக மனப்பான்மையோடு ஒருவரை யொருவர் திருத்திக் கொள்வார்கள். அடிமைகளாகவோ, மாற்ருரை அழிக்கின்றவர்களாகவோ இருக்கமாட்டார்கள். அவர்கள் திருத்துகிறவர்களாகவன்றி விரோதிகளாக இருக்க மாட்டார்கள் அல்லவா?

கிளாக்கன் : அப்படியேதான்.

சாக்ரடீஸ் : அவர்கள் கிரேக்கராக இருப்பதால் கிரேக்கநாட்டை அழிக்கமாட்டார்கள் ; வீடுகளையும் எரிக்கமாட்டார்கள், நகரத்திலுள்ள ஆண்கள், பெண்கள் சிறுவர்கள் ஆகிய அனைவரையும் சரிசமானமான எதிரிகளாகக் கருதமாட்டார்கள். யுத்தத்தின் குற்றம் ஒரு சிலரையே சாரும் என்றும், மற்றவர்கள் யாவரும் நண்பர்கள் என்றும் அவர்களுக்குத் தெரியும். இக்காரணங்களினாலேயே நிலங்களை அழிக்கவோ, வீடுகளை இடிக்கவோ விரும்பமாட்டார்கள். குற்றம் புரிந்த சிலரைத் தண்டிக்கும் வரையில் மட்டும் குற்றமுற்றோரிடம் விரோதம் பாராட்டுவார்கள் ; பின்னவர் முன்னவரைத் தண்டித்துத் திருப்தியாகும் வரை, இது சரிதானே ?

கிளாக்கன் : நான் ஒத்துக்கொள்ளுகிறேன். இவ்வாறு தான் நமது நகரத்தார் கிரேக்கரின் விரோதிகளை நடத்தவேண்டும். அவ்வாறே மிலேச்சர்களையும் நடத்தவேண்டும்.

சாக்ரடீஸ் : பிறகு இந்தச் சட்டத்தை நமது பாதுகாவலர்களுக்காகவும் செய்வோம். அதாவது அவர்களும் கிரேக்கரது நிலங்களைப் பாழ்படுத்தவோ அவர்களது வீடுகளைக் கொளுத்தவோ கூடாது.

கிளாக்கன் : ஒப்புக்கொள்ளப்பட்டது. இச்சட்டம் நமது முந்திய சட்டங்களைப்போன்று மிகவும் நல்லவை என்றும் நாம் சிந்தித்துக்கொள்ளலாம்.

ஆயினும் சாக்ரடீஸ்! நான் சொல்லவேண்டியது என்னவென்றால் இம்மாதிரி நீர் சிந்தித்துக்கொண்டு போவீரானால் நம்முடைய வாதத்தின் ஆரம்பத்தில் நீர் ஒதுக்கிவைத்த மற்றைப் பிரச்சினையை முழுவதுமாக மறந்துவிடுவீர். காரியங்களின் இப்படிப்பட்ட ஒழுங்குமுறை சாத்தியமா ? சாத்தியமானால் எவ்வாறு ? நீர் கூறும் திட்டம் சாத்தியமானால் நாட்டிற்கு எல்லாவிதமான நன்மையும் விளைவிக்கும் என்பதை நான் சேர்த்துக் கொள்வேன். அதாவது உமது நகரத்தார் வீரர்களிலே தீரர்களாகி இருப்பார்கள். அவர்கள் தமது நிலைகளைவிட்டு இடம் பெயர மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஒருவரையொருவர் அறிந்திருப்பார்கள். ஒருவர் மற்றொருவரைத் தகப்பன் என்றோ சகோதரன் என்றோ மகன் என்றோ அழைப்பார். பெண்கள் இந்த அணிகளில் அவர்களோடு ஒத்தோ அல்லது பின்னாகவோ பயமுறுத்துபவர்களாகவோ உதவியாளர்களாகவோ சேர்ந்துகொள்வார்

கள் என்று நீர் எண்ணினால் அவர்களைத் தோற்கடிக்க முடியாதபடிப் பலம் பெற்றவர்களாவார்கள். இன்னும் பல உள் நாட்டுக்கு இலாபகரமான காரியங்களும் நடைபெறலாம் என்று கூறலாம். அவற்றையும் நான் மனப்பூர்வமாக அங்கீகரிக்கிறேன். ஆனால் இந்த நன்மைகளும் இவற்றிற்கு மேற்பட்டவைகளும் நீர் கூறும் நாடு நடைமுறையில் வந்தால்தான் சாத்தியப்படும். அவற்றைப்பற்றி இன்னும் நாம் அதிகமாகப் பேசத் தேவையில்லை. ஆக இந்த நாடு உருவாகிவிட்டது என்று வைத்துக்கொண்டு வழிவகைகளை ஆராய்வதற்குத் திரும்புவோம். மற்றவற்றை விட்டு விடலாம்.

சாக்ரடீஸ்: ஒரு விநாடி விவாதப் பொருளினின்று நான் விலகிச் சென்றால் உடனடியாக நீ என்னைத் தாக்கு, இரக்கம் காட்டாதே என்று நான் கூறினேன். முதலிரண்டு அலைகளின் மோதுதலினின்று தப்பித்ததும் தப்பியாதது மாக இருக்கும் சமயத்தில் நீ மூன்றாவது முறை தாக்க முற்படுவதை அறியவில்லை போலும். இது பெரியதும் வன்மை மிக்கதுமாகும். நீ இந்த மூன்றாவது அலையைப் பார்த்துக் கேட்ட பிறகு அதிகமாக இரக்கம் காட்டுகிறாய். இப்போது நான் கூறி ஆராயப்போகும் யோசனை சம்பந்தமாகச் சிறிது பயமும், தயக்கமும் உண்டாவது இயற்கையே என்று ஒத்துக்கொள்வாய்.

கிளாக்கன்: இப்படிப்பட்ட வேண்டுகோளை நீர் செய்யச் செய்ய நாங்கள் அதிகமதிகமாகவே உறுதிகொண்டு நீர் எங்ஙனம் அப்படிப்பட்ட நாடு சாத்தியம் ஆகும் என்று கூறவேண்டுமென்று வற்புறுத்துவோம். உடனடியாகப் பேசும்.

சாக்ரடீஸ்: நியாயம், அநியாயம் ஆகியவற்றைப்பற்றி ஆராயப் புகுந்து இந்த இடத்திற்கு நாம் வந்திருக்கிறோம் என்று உனக்கு நினைவுபடுத்தி நான் ஆரம்பிக்கிறேன்.

கிளாக்கன்: உண்மை, ஆனால் அதனாலென்ன.

சாக்ரடீஸ்: நான் கேட்க ஆரம்பித்தது என்னவென்றால் நாம் அவற்றைக் கண்டுபிடித்திருந்தால் நேர்மையான மனிதன் எந்த ஒன்றிலும், முழுவதுமான நீதியை விட்டு வழுவாதிருத்தல் வேண்டும் என்று நாம் விரும்புவோமா? அல்லது அவன் அதற்கு அருகில் வந்தால் போதுமா? அல்லது மற்ற

மனிதரில் காணப்படும் நீதியைவிட அவன்பால் நீதி ஒருபடி அதிகமாகிக் காணப்பட்டால் திருப்தி அடைவோமா ?

கிளாக்கன் : உயர்ந்த நீதியின் அருகில் வந்தால்போதுமானது.

சாக்ரடீஸ் : நமக்கு ஒரு குறிக்கோள் இருக்கும்பொருட்டு, பரிபூரண நீதியைப் பற்றியும், முழு நீதிமானின் குணங்களைப் பற்றியும், அநீதியைப் பற்றியும், பரிபூரண அநீதியைப் பற்றியும் நாம் ஆராய்ந்து கொண்டிருந்தோம். இந்தக் குறிக்கோளின் அடிப்படையில் நமது இன்ப துன்பத்தை அளந்தறிய நாம் இவற்றைப் பார்த்தோம். அவை உண்மையில் உலகத்தில் இருக்கக்கூடும் என்ற எண்ணத்தில் அல்ல.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஓர் ஓவியக் கலைஞன் ஒரு பரிபூரண அழகுள்ள மனிதனைத் தன் கலையின்மூலம் படைத்த பிறகு அப்படிப்பட்ட ஒருமனிதன் இருந்ததையோ இருப்பதையோ உலகத்தில் காட்ட முடியாததினால் குறைபாடுள்ளவனாவானா ?

கிளாக்கன் : ஆகமாட்டான்.

சாக்ரடீஸ் : சரி ஒரு பரிபூரணமான நாடு எவ்வாறு இருக்க வேண்டுமென்று நாம் குறிக்கோளைத் தோற்றுவிக்கவில்லையா ?

கிளாக்கன் : நிச்சயமாகச் செய்தோம்.

சாக்ரடீஸ் : அப்படிப்பட்ட ஒருநகரம் இருப்பதை நிரூபிக்க முடியாததினால் நம்முடைய கொள்கை குறைபாடுள்ளதாகுமோ?

கிளாக்கன் : நிச்சயம் ஆகாது.

சாக்ரடீஸ் : அதுதான் உண்மை. ஆனால் நம்முடைய விருப்பப்படி எப்படி எந்த நிலைமைகளில் இது அதிகமாகச் சாத்தியப்படும் என்று நான் காண்பிக்கவேண்டுமானால் நான் நீங்கள் முன்பு அங்கீகரித்தவைகள் யாவை என்று திருப்பிக்கூறும்படி உம்மைக் கேட்க வேண்டும்.

கிளாக்கன் : எந்த அங்கீகாரங்களை ?

சாக்ரடீஸ் : நான் அறிய விரும்புவது என்னவென்றால் குறிக்கோள்கள் எப்பொழுதாவது மொழியின் மூலமாக நிறைவாக்கப்படுகின்றனவா ? உண்மை நிகழ்ச்சியைவிட வார்த்தை அதிகமாகப் பொருளை வெளிப்படுத்துவதில்லையா ? மனிதன் எதனைச் சிந்தித்தாலும் உள்ளது உண்மைக்குச்

சற்றுக் குறைவாக இருப்பது என்பது இயற்கைதானே? நீ என்ன கூறுகிருய்?

கிளாக்கன் : நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ் : ஆகவே, நடைமுறையில் உள்ளநாடு குறிக்கோளுக்கு ஒத்ததாக இருக்கும் என்று நான் நிரூபிக்க வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது. நாம் எண்ணுவது போன்று ஒரு நகரம் ஆளப்படுவதை நாம் கண்டுபிடித்தால் சாத்தியக்கூற்றை நாம் கண்டு பிடித்ததாக நீ ஒப்புக் கொள்ளலாம். இது திருப்தி அளிக்கும். நான் இதில் திருப்திப்படுவேன் என்பது எனக்கு நிச்சயம். நீ திருப்தி அடைய மாட்டாயா?

கிளாக்கன் : ஆம் நான் திருப்தியாவேன்.

சாக்ரடீஸ் : நாடுகளின் இன்றைய தவருன ஆட்சிமுறைக்கு என்ன காரணம் என்று அடுத்து ஆராய முயற்சிக்கிறேன். குறைந்த அளவு என்ன மாறுதல்கள் செய்யப்பட்டால் ஒரு நாடு உண்மையான உருவத்தைப் பெறும் என்றும் அறிய முற்படுகிறேன். அந்த மாறுதல் ஒன்ருக மட்டும் இருக்கட்டும். அல்லது இரண்டாக இருக்கட்டும், எப்படியும் மாறுதல்கள் மிகவும் குறைவாகவும் சிறியனவாகவும் இருக்கட்டும்.

கிளாக்கன் : நிச்சயம்.

சாக்ரடீஸ் : ஏதோ ஒரு மாறுதல் செய்யப்பட்டால் அது சீர் திருத்தமாகும். இது அற்பமானதாகவோ அல்லது எளிதானதாகவோ இருக்காது. ஆனல் செய்யக்கூடியதாக இருக்கும்.

கிளாக்கன் : அது என்ன?

சாக்ரடீஸ் : அது மிகப் பெரிய அலைபோன்றதாகும், அந்த அலை என்னை உடைத்துச் சிரிப்பிற்கும் அவமானத்திற்கும் இடமாக ஆக்கினுலும் அதைக் கூறலாமா! நான் கூறுவதை நீ கவனிக்கிருயா!

கிளாக்கன் : மேலே செல்லும்.

சாக்ரடீஸ் : தத்துவ ஞானிகள் அரசர்களாகும் வரையிலும் அல்லது இவ்வுலக அரசர்களும் அரசிளங்குமாரர்களும் தத்துவ ஞானத்தின் சக்தியையும் மனப்பான்மையையும் கொள்ளும் வரையிலும், அரசியல் மேதையும் ஞானமும் ஒருவரில் சேர்ந்து காணப்படும் வரையிலும், பொதுமக்கள்

இரண்டில் ஒன்றைமட்டும் தொடர்ந்து மற்றதை விட்டுவிட்டு இருக்கும்போது ஒதுங்கி இருக்கக் கட்டாயப்படுத்தும் வரையிலும் நகரங்கள் அவற்றின் கேடுகளிலிருந்து ஓய்வு பெரு. இல்லே, மனித இனமே ஓய்வுபெருது என்று நான் நம்புகிறேன். பிறகே இந்த நமது நாடு உயிர்பெறக்கூடும். வெளிச்சத்தைக் காணக்கூடும். என் பிரிய கிளாக்கனே! இவ்வாருகத்தான் மகிழ்ச்சியோடு கூறி இருப்பேன், நான் கூறுவது அதிகப்பிரசங்கித்தனமாக இல்லாதிருந்தால் வேறு எந்தவிதமான நாட்டிலும் தனிப்பட்ட முறையிலோ பொது வாகவோ இன்பம் இராது என்று மனப்பூர்வமாக நம்புவது மிகவும் கடினமான காரியம்.

கிளாக்கன் : சாக்ரடீஸ்! நீர் என்ன கூறுகிறீர்? நீர் கூறிய வார்த்தையைக் கவனியும், அதை அனேகர் கண்ணியத்திற்கு உரியவர்கள் கூடக் கேட்பின் ஒரே விநாடியில் தங்கள் மேல் சட்டைகளேக் களேந்துவிட்டுக் கையில் அகப்பட்ட ஆயுதத்தை எடுத்துக்கொண்டு உம்மை நோக்கி முழு பலத் தோடு ஓடிவருவார்கள். நீர் எங்கு இருக்கிறீர் என்பது உமக்குப் புரியாது போய்விடும். நீர் ஒரு பதிலேத் தயார் செய்துகொண்டு ஓடத்தயாராய் இராவிட்டால் அவர்களது புத்திசாலித்தனத்திற்கு இலக்கு ஆகிவிடுவீர். இதில் சந்தேகமே இல்லே.

சாக்ரடீஸ் : நீ என்னே உதவாக்கரையாக்கிவிட்டாய்.

கிளாக்கன் : நான் செய்தது மிகவும் சரி. இருந்தபோதிலும் இதிலிருந்து உம்மை மீட்க என்ஞல் முடிந்ததை எல்லாம் செய்வேன். ஆனுல் நான் என்னுடைய நல்லெண்ணத்தை யும் நல்ல ஆலோசனேயையும்தான் கொடுக்கமுடியும். ஒரு வேளே மற்றவர்களேவிட உயர்வான பதிலே நான் உம்முடைய கேள்விகளுக்குக் கொடுக்கமுடியும்; அவ்வளவுதான். இப் பொழுது இப்படிப்பட்ட உதவியாள் இருக்கும்போது நம்பிக்கை இல்லாதவர்களுக்கு நீர் கூறுவது சரியென்று காண்பிக்க உம்முடைய முழுத்திறமையையும் பயன்படுத்த வேண்டும்.

சாக்ரடீஸ் : நீ உன்னுடைய மதிப்பிடமுடியாத உதவியை உதவ முன்வரும்போது நான் அவசியம் முயலவேண்டும், நான் நினேப்பது என்னவென்ருல் நாம் தப்பித் துப் போகச் சந்தர்ப்பம் இருந்தால் தத்துவ ஞானி

கள் நாட்டை ஆளவேண்டுமென்று கூறும்போது யாரை நாம் குறிப்பிடுகிறோம் என்று தெளிவுபடுத்தவேண்டும், பிறகு நம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளலாம். யார் தத்துவம் படித்து நாட்டின் தலைவராக வேண்டுமென்று சிலர் கண்டுபிடிக்கப்படலாம். மற்றவர்கள் தத்துவ ஞானிகளான தலைவர்களாகப் பிறவாமல், பின்பற்றுவர்களாகப் பிறந்துள்ளார்கள் என்றும் அறியலாம்.

கிளாக்கன் : ஒரு வரையறை கொடுங்கள்.

சாக்ரடீஸ் : என்னைப் பின்பற்று. எப்படியாவது ஒருவகையில் உனக்குத் திருப்திகரமான விளக்கம் தரக்கூடும் என்று நான் நினைக்கிறேன்.

கிளாக்கன் : மேலே செல்லுங்கள்.

சாக்ரடீஸ் : உனக்கு நினைவு இருக்குமென்று நினைக்கிறேன், ஆகவே நான் நினைவுபடுத்த வேண்டாம். அதாவது ஒரு காதலன் அப்பெயருக்குத் தகுதி உள்ளவனாக இருந்தால் தன்னுடைய அன்பைக் காட்டவேண்டும். நான் நேசிக்கும் ஒன்றின் ஒரு பகுதிமட்டுமல்ல, முழுவதற்குமே அவன் நேசத்தைக் காட்டவேண்டும்.

கிளாக்கன் : உண்மையில் எனக்கு இது விளங்கவில்லை. எனவே என்னுடைய நினைவைத் திருப்ப உதவி செய்யும்படி உம்மைக் கெஞ்சுகிறேன்.

சாக்ரடீஸ் : வேறொரு ஆள் நீ கூறுகிறபடி பதில் தரலாம், ஆனால் உன்னைப் போன்ற ஓர் இன்பவாதி ஒரு காதலனின் மனதில் இளவயதினர் இன்ப உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றனர் என்று அறிந்திருக்கவேண்டும். இந்த உணர்ச்சியைத் தூண்டும் இளவயதினர் அன்புகலந்த மரியாதைக்குப் பாத்திரர் என்று காதலன் நினைப்பான். அழகுள்ளவரிடம் இப்படித்தானே நீ நடந்துகொள்வாய்! ஒருவனுக்குச் சப்பை மூக்கு இருக்கிறது, அவனுடைய கவர்ச்சிகரமான முகத்தைப் புகழுகிறாய். நீ கூறுகிறபடி வளைந்த மூக்கு ஒருவனுக்கு இராஜ தோற்றத்தை அளிக்கிறது. சப்பை மூக்கோ வளைந்த மூக்கோ இல்லாதவன் ஒழுங்கின் அழகைக் கொண்டிருக்கிறான். கருமையான தோற்றம் ஆண்மையை அளிக்கின்றது. அழகுடையோர் தெய்வங்களின் பிள்ளைகள். இனிமையான தேன்நிறமுடையோர் இப்படித்தான் காதலர் குறுகிய வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றனர். கன்னத்தில்

வெளுப்பை உடைய இளைஞரை என்ன சொல்வது? ஒரு சொல்லில் இளைஞனை—வாலிபவசந்தத்தில் மலர்போன்ற ஒரு இளைஞனை—இழக்காமலிருக்கும் பொருட்டு எந்த ஒரு சாக்குப் போக்கையும் பேச்சையும் கூறுமலிருக்கத் தயங்க மாட்டாய்.

கிளாக்கன் : என்னை நீர் காதலில் துறைபோனவனுகக் கருதி ஞல் வாதத்திற்கென்று நீர் கூறுவதை ஆமோதிக்கிறேன்.

சாக்ரடீஸ் : திராட்சை ரசத்தை நேசிப்பவர்களைப் பற்றி நீ என்ன கூறுகிருய்? அவர்களும் அதையே செய்வதை நீ பார்க்கவில்லையா? எந்த ஒரு பாசாங்கான காரணத்தைக் கொண்டாவது எந்த மதுவையாவது குடிப்பதில் மகிழ் கிருர்கள்.

கிளாக்கன் : மிகவும் சரி.

சாக்ரடீஸ் : இந்த உண்மை, பேராசைகொண்ட மனிதர் சம்பந்தமாகவும் நிரூபிக்கப்படலாம். அவர்கள் ஒரு சேனையை ஆள முடியாவிட்டால் ஒற்றைப்படை அணி ஒன்றை ஆளத்தயாராய் இருக்கின்றனர், உண்மையும் முக்கியமும் வாய்ந்தவர்களால் கௌரவிக்கப்பட முடியா விட்டால் தாழ்ந்த அற்ப மனிதரால் கௌரவத்தை அடைவ தில் மகிழ்வடைகின்றனர். எப்படியும் ஏதாவது ஒரு கௌரவம் அவர்களுக்கு வேண்டும்.

கிளாக்கன் : அதேதான்.

சாக்ரடீஸ் : மற்றுமொருமுறை என்னைக் கேட்க விடுக. ஏதாவது ஒரு வகுப்பைச் சார்ந்த பொருள்களை விரும்பு பவன், முழு வகுப்பை விரும்புகிருனு? அல்லது அதன் ஒரு பகுதியைமட்டும் விரும்புகிருனு?

கிளாக்கன் : முழுவதையும்.

சாக்ரடீஸ் : தத்துவ ஞானியைப்பற்றி, அவன் ஞானத்தின் ஒரு பகுதியை மட்டுமல்ல. முழுமையையும் விரும்புகிருன் என்று நாம் கூறக்கூடாதா?

கிளாக்கன் : ஆம் முழுவதையும்தான்.

சாக்ரடீஸ் : படிப்பை வெறுப்பவன் அதிலும் வாலிபத்தில் வெறுப்பவன், அதாவது நன்மை தீமை என்று நிர்ணயிக்க முடியாத பருவத்தில் இருப்பவன், தத்துவஞானியாகவோ அறிவின் அன்பனுகவோ இருக்கமாட்டான். இது எப்படி

என்றால் உணவை மறுப்பவன் பசியாய் இருக்கமாட்டான். அல்லது நல்ல பசியுள்ளவனாக இருக்கமாட்டான் என்பது போன்று.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: எல்லாவகை அறிவையும் சுவைத்தவனும், படிக்க ஆர்வமுள்ளவனும், ஒருபோதும் படித்ததுபோதும் என்று திருப்தியடையாதவனும் நியாயமாகத் தத்துவஞானி என அழைக்கப்படலாம். நான் சொல்வது சரி இல்லையா?

கிளாக்கன்: ஆவல் ஒருவரைத் தத்துவ ஞானியாக்கினால் அனேக விநோதமான ஆட்கள் தத்துவ ஞானி என்ற பெயருக்கு அருகதையுள்ளவர்களாவார்கள். காட்சிகளைக் காணப் பிரியப்படுவோர் எல்லோரையும்கூட இந்த வகையில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இன்னிசையில் தொழிற் பற்றில்லாத ஈடுபாடுடையோர் தத்துவஞானிகளாகார். உலகத்திலேயே தத்துவம் பேசக்கூடாதவர்கள் அவர்கள். டயோனிசியாக் திருவிழாவில் தங்கள் காதுகள் ஒவ்வொரு கோஷ்டி கானத்தையும் கேட்கும்படி இங்குமங்கும் ஓடுபவர்களாயிற்றே, கச்சேரிகள் ஊரில் நடந்தாலும் கிராமத்தில் நிகழ்ந்தாலும் அங்கே அவர்கள் இருப்பார்கள். இவர்கள் எல்லோரையும், இப்படிப்பட்ட சுவை ருசியுள்ள மற்றோரையும், முக்கியமற்ற மற்றைக் கலைகளைப் பயில்வோரையும் தத்துவஞானிகளென்று நாம் கொள்ளமுடியுமா?

சாக்ரடீஸ்: நிச்சயம் இல்லை, அவர்கள் வெறும் போலிகளே.

கிளாக்கன்: பிறகு யார் உண்மையான தத்துவஞானிகள்?

சாக்ரடீஸ்: உண்மையின் தரிசனத்தை நேசிப்பவர்களே.

கிளாக்கன்: அதுவும் சரிதான். ஆனால் நீர் என்ன அர்த்தத்தில் அவ்வாறு கூறுகிறீர் என்று அறிய விரும்புகிறேன்.

சாக்ரடீஸ்: வேறு ஒருவருக்கு இதைவிளக்க எனக்குக் கஷ்டமாக இருக்கும். ஆனால் நான் இப்பொழுது கூறப்போகிற ஒரு செய்தியை நீ ஒத்துக்கொள்வாய் என்று நான் நினைக்கிறேன்.

கிளாக்கன்: அச்செய்தி என்ன?

சாக்ரடீஸ்: அழகு அவலட்சணத்திற்கு நேர்மாறானதால் அவை இரண்டு தன்மைகள் அல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவை இரண்டானபடியால் ஒவ்வொன்றும் தனியானதொன்றல்லவா ?

கிளாக்கன் : இதுவும் உண்மை.

சாக்ரடீஸ் : நீதி, அநீதி, நன்மை, தீமை இப்படிப்பட்ட மற்ற வற்றிற்கும் இந்தப் பேச்சு உண்மையாகும் அல்லவா? அவற்றைத் தனியாக எடுத்துக்கொண்டால் ஒவ்வொன்றும் ஒன்று. ஆனல் அவற்றைப் பலசேர்க்கையில் பார்த்தால், அதாவது செயல்களோடும் காரியங்களோடும் பார்த்தால் பலவித வெளிச்சங்களில் காணப்படுவதோடு அவை பல வாகவும் தோன்றுகின்றன, அல்லவா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இவ்வகைப் பாகுபாட்டைத்தான் காட்சியை விரும்புவோர், கலையை விரும்புவோர் நடைபேற்றை—செயலை—விரும்புவோர் ஆகியோருக்கும் நான் குறிப்பிடும் மற்றவர்கள், அதாவது தத்துவஞானிகள் என்ற பெயரைப் பெறத் தகுதியுள்ளவர்களுக்கும் இருப்பதாகக் கொள்ளு கிறேன்.

கிளாக்கன் : எவ்வாறு நீர் அவர்களைப் பாகுபடுத்துகிறீர் ?

சாக்ரடீஸ் : சப்தங்களையும் காட்சிகளையும் விரும்புகிறவர்கள், சிறந்த மெல்லிசையையும் வண்ணங்களையும் உருவங்களை யும் அவற்றின்மூலம் தோன்றும் செயற்கையான விளைவு களையும் விரும்புகிருர்கள் ; ஆனல் அவர்களுடைய உள்ளம் பூரண அழகைக் காணவோ நேசிக்கவோ தகுதியுள்ளதாக இல்லை.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இந்தக் காட்சியை அடையக்கூடியவர்கள் அனேக மாக இல்லை என்று கூறலாம்.

கிளாக்கன் : மிக உண்மை.

சாக்ரடீஸ் : அழகான பொருள்களை அறிந்தும் பூரண அழகை உணரமுடியாதவனும் அல்லது ஒருவன் அவ்வழகைக் காண்பித்தாலும் அதைப் புரிந்துகொள்ள முடியாதவனும் இப்படிப்பட்ட ஒருவன் விழிப்பு நிலையில் இருக்கிருனே அல்லது கனவு காண்கிருனே என்று நான் கேட்கிறேன். சிந்தித்துப் பார். இதைக் காண்பவன் தூங்கினுலும் விழித் திருந்தாலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டவற்றை ஒன்று

போல் கருதவில்லையோ? அவன் பிரதியை அசல் பொருள் இருக்கவேண்டிய இடத்தில் வைக்கிறதில்லையா?

கிளாக்கன்: அப்படிப்பட்ட ஆள் கனவுகண்டுதான் இருக்க வேண்டும் என்று நான் கூறவேண்டும்.

சாக்ரடீஸ்: ஆனால் மற்றொரு ஆளின் காரியத்தை எடுத்துக் கொண்டாயானால், அவன் பரிபூரண அழகு உண்டென்பதை ஒத்துக்கொண்டு, பொருள்களுக்கும், எண்ணங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் காண்கிறான். எண்ணங்கள் இருக்கவேண்டிய இடத்தில் பொருள்களையோ பொருள்கள் இருக்கவேண்டிய இடத்தில் எண்ணங்களையோ மாற்றி வைப்பதில்லை. இந்த ஆள் கனவு காண்பவரா, அல்லது விழித்திருப்பவரா?

கிளாக்கன்: அவர் மிகுந்த விழிப்பாக இருக்கிறார்.

சாக்ரடீஸ்: அறிகிறவனுடைய மனது அறிவைப் பெறுகிறது என்றும் அபிப்பிராயமுள்ளவனது மனது அபிப்பிராயத் தைக் கொண்டுள்ளது என்றும் கூறலாமா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: பிற் கூறப்பட்டவர் நம்மோடு சண்டைக்கு வருவாரானால் நம்முடைய பேச்சிற்குச் சவால் விடுவாரானால் அவருக்கு ஏதாவது சமாதானமோ, ஆலோசனையோ கொடுக்க முடியுமா? இதை அவனுக்கு மூளைக்கோளாறு இருக்கிறது என்று தெரிவிக்காமல் கூறமுடியுமா?

கிளாக்கன்: நிச்சயம் நாம் அவனுக்கு நல்ல புத்திமதி அளிக்க வேண்டும்.

சாக்ரடீஸ்: ஆகவே நீ வா, அவனுக்குச் சொல்லவேண்டி யதைப்பற்றி ஆலோசிக்கலாம். அவன் அறிந்தவற்றைப் பற்றி நமக்குச் சந்தோஷம் என்று உறுதிகூறி ஆரம்பிக்க லாமா? ஆனால் நாம் அவனை ஒரு கேள்வி கேட்க விரும்பு கிறோம். அறிவுள்ள அவனுக்கு ஏதாவது தெரியுமா அல்லது ஒன்றும் தெரியாதா? (அவனுக்குப் பதிலாக நீதான் பதில் கூறவேண்டும்.)

கிளாக்கன்: அவனுக்குச் சிறிது தெரியும்.

சாக்ரடீஸ்: அச்சிறிது அறிவு, உள்ளதைப் பற்றியா அல்லது இல்லாததைப் பற்றியா?

கிளாக்கன் : இருப்பதைப் பற்றி ; ஏனெனில் எப்பொழுதும் இல்லாததைப்பற்றி எப்படி அறியமுடியும் ?

சாக்ரடீஸ் : இக்காரியத்தைப் பற்றிப் பல கோணங்களிலிருந்து பார்த்த பிறகு முழுமுதற்பொருள் இருக்கிறது, அதை முழுவதுமாக அறியலாம் என்பதை நாம் நிச்சயித்துக் கொள்ளலாமல்லவா ? முழுவதும் இல்லாத தொன்று முழுவதும் அறியப்படமாட்டாது அல்லவா ?

கிளாக்கன் : இதைவிட வெருென்றும் அதிக நிச்சயமாக இராது.

சாக்ரடீஸ் : நல்லது. ஆனல் இருப்பதும் இல்லாததுமான தொன்று இருந்தால் அது உள்பொருளுக்கும் பரிபூரண இல்பொருளுக்கும் இடையே ஓர் இடத்தைப் பெறக்கூடும்.

கிளாக்கன் : ஆம், அவற்றின் மத்தியில்தான்.

சாக்ரடீஸ் : அறிவு உள்பொருளுக்கு நிகரானது போன்றும், அறியாமை இல்பொருளுக்கு நிகரானது போன்றும், உள்ளதும் இல்லாததுமான ஒன்றிற்குச் சரிநிகரான ஒன்றை அறியாமைக்கும் அறிவிற்கும் இடையே கண்டுபிடித்தல் வேண்டும், அப்படி ஒன்றிருந்தால் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயம்.

சாக்ரடீஸ் : அபிப்பிராயம் என்று ஒன்றுண்டு என்பதை நாம் ஒத்துக்கொள்ளுகிறோமா ?

கிளாக்கன் : சந்தேகத்திற்கு இடமில்லாமல்.

சாக்ரடீஸ் : அறிவோடு சேர்ந்தா அல்லது மற்றொரு சக்தியோடு இணைந்தா ?

கிளாக்கன் : மற்றொரு சக்தியோடு.

சாக்ரடீஸ் : பிறகு அபிப்பிராயமும் அறிவும் வெவ்வேருன சக்திகளைச் சார்ந்த வெவ்வேறு விஷயங்கள் சம்பந்தப் பட்டன அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அறிவு உள்பொருளைப் பற்றியது ; உள்பொருளை அறிகிறது. மேற்கொண்டு செல்வதற்கு முன்னுல் ஒரு பாகுபாட்டைச் செய்துகொள்வேன்.

கிளாக்கன் : என்ன பாகுபாடு ?

சாக்ரடீஸ்: சக்திகளை ஒரு வகுப்பாகத் தனியே தொகுத்து வைத்து ஆரம்பிப்பேன், அவை நம்மிடம் உள்ள சக்திகள். மற்றவற்றிலும் அவை உள்ளன. அவற்றால் நாம் செய்கிறதைச் செய்கிறோம். எடுத்துக்காட்டாகப் பார்த்தலும் கேட்டலும் சக்திகள் என்று நான் கூறவேண்டும். நான் நினைக்கும் வகுப்பைத் தெளிவாக விவரிக்கிறேனா?

கிளாக்கன்: ஆம் நான் நன்றாகப் புரிந்துகொள்கிறேன்.

சாக்ரடீஸ்: ஆக, அவற்றைப்பற்றிய என் எண்ணத்தை உனக்குச் சொல்லுகிறேன். அவற்றை நான் கண்கொண்டு பார்க்கவில்லை. ஆகையினால் உருவம் வண்ணம் முதலிய வித்தியாசங்கள் சில பொருளுக்கு இருப்பன போல் அவற்றில் காண்பதில்லை. சக்தியைப்பற்றிப் பேசும்போது அதனுடைய இயக்க நிலையையும் பயனையும்தான் நினைக்கிறேன். ஒரே விதமான இயக்க நிலையையும் பயனையும் உடையதை ஒரு சக்தி என்று அழைக்கிறேன். வேறொரு நிலையும் பயனும் உள்ளது வேறொரு சக்திக் கூறுபாடு. அவ்வாறு கூறுவது உன்னுடைய முறைப்படிப் பேசுவதாகுமா?

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: மற்றொரு கேள்விக்குப் பதில்கூறி உதவமாட்டாயா? அறிவை ஒரு சக்திக்கூறுபாடு என்பாயா? அல்லது எந்த வகுப்பில் அதை வைப்பாய்?

கிளாக்கன்: நிச்சயமாக அறிவு ஒரு சக்திக்கூறுபாடுதான். அது எல்லாச் சக்திகளையும் விட அதிக வலிமை பொருந்தியது.

சாக்ரடீஸ்: அபிப்பிராயமும் ஒரு சக்திக்கூறுதானா?

கிளாக்கன்: நிச்சயமாக. ஏனெனில் அபிப்பிராயம் என்பதும் அதன் மூலமாகத் தோற்றுவிக்கப்படுவதாகும்.

சாக்ரடீஸ்: இருப்பினும் சற்று நேரத்திற்கு முன்பு அறிவும் தீர்மானமும் ஒன்றல்ல என்று நீ அங்கீகரிக்கவில்லையா?

கிளாக்கன்: ஏன், ஆம். எப்படி ஒரு நியாயவான் குற்றம் புரியமுடியாத ஒன்றைத் தவறு இழைக்கும் ஒன்றினோடு ஒப்பாகக் கொள்ளமுடியும்?

சாக்ரடீஸ்: இது ஒரு சிறந்த விடை. இரண்டினுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் உணருகிறோம் என்பதை நிரூபிக்கிறது.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : எனவே அறிவும் அபிப்பிராயமும் வெவ்வேறு சக்திகள் உடையவையாகையால் அறுதியிட்ட வெவ்வேறு இயக்க நிலைகளையும் பொருள்களையும் கொண்டிருக்க வில்லையா ?

கிளாக்கன் : அது நிச்சயம்.

சாக்ரடீஸ் : உள்பொருள் அறிவின் இயக்கநிலை அல்லது பொருள். அறிவென்பது உள்பொருளின் தன்மையை அறிவதாகும் அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அபிப்பிராயம் என்பது அபிப்பிராயம் கொள்ளுதல்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : எதைப்பற்றி அபிப்பிராயம் கொள்கிறோம் என்று நமக்குத் தெரியுமா ? அல்லது அபிப்பிராயத்தின் பொருளும் அறிவின் பொருளும் ஒன்றேதானே ?

கிளாக்கன் : இல்லை. அது ஏற்கனவே தவறு என்று நிரூபிக்கப் பட்டுவிட்டது. சக்திக்கூறுபாடுகளின் வேறுபாடு இயக்க நிலைகள் அல்லது பொருள்களின் வேறுபாடுகளாய் இருந் தால், நாம் கூறிக்கொண்டு இருந்ததுபோல் அபிப்பிராய மும் அறிவும் வெவ்வேறு சக்திகளாக இருந்தால், அவற்றின் இயக்க நிலைகள் ஒன்றாக இருக்கமுடியாது.

சாக்ரடீஸ் : இருத்தல் அல்லது உள்பொருள் அறிவின் விஷய மாக அல்லது பொருளாக இருக்கிறதென்றால் அபிப்பிராயத் துக்கு விஷயமாக, பொருளாக வேறு ஒன்று இருக்கவேண்டு மல்லவா ?

கிளாக்கன் . ஆம், வேறொன்று.

சாக்ரடீஸ் : மிகவும் நன்று. இல்பொருள் அபிப்பிராயத்தின் விஷயமாகாதா ? அல்லது இல்பொருளைப்பற்றி ஓர் அபிப் பிராயமே இருக்கக்கூடுமா ? சிந்தனை செய்யும் ஒரு மனித னுக்கு அபிப்பிராயம் இருந்தால் அந்த அபிப்பிராயம் ஏதோ ஒன்றைப்பற்றி இருக்கவேண்டுமல்லவா ? அவனது அபிப்பிராயம் ஏதோ ஒன்றாக, இல்லாததைப்பற்றி இருக்கக் கூடுமா ?

கிளாக்கன் : முடியாது.

சாக்ரடீஸ் : எவனொருவனுக்கு அபிப்பிராயம் இருக்கிறதோ அந்த அபிப்பிராயம் ஏதாவதொன்றைப்பற்றித்தானே இருக்கமுடியும்?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இல்பொருள் ஒரு பொருளல்ல. ஆனால் கூறப் போனால் வெறுமையே.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இல்பொருள் சம்பந்தமாக அதன் இன்றியமையாத தொடர்பு அறியாமை என்று கொள்ளப்பட்டது. அதேபோல் உள்பொருள் அறிவின் தொடர்புள்ளதல்லவா?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : எனவே, அபிப்பிராயம் உள்பொருள் சம்பந்தமாகவோ, இல்பொருள் சம்பந்தமாகவோ இராதல்லவா?

கிளாக்கன் : இரண்டில் ஒன்றோடும் சம்பந்தப்படாது.

சாக்ரடீஸ் : ஆகவே அது அறியாமையும் ஆகாது,

கிளாக்கன் : இது உண்மையென்று காணப்படுகிறது.

சாக்ரடீஸ் : அறிவைவிடத் தெளிவாக, அல்லது அறியாமையைவிட இருள்மயமாக, அபிப்பிராயம் வெளியே இருந்தும் இவற்றிற்கு மேலேயும் தேடப்படவேண்டுமா?

கிளாக்கன் : ஒன்றிலிருந்துமல்ல.

சாக்ரடீஸ் : ஆக உனக்கு அபிப்பிராயம் அறிவைவிடக் கருமையாகவும் அறியாமையைவிட ஒளியுடையதாகவும் தோன்றுகிறது அல்லவா?

கிளாக்கன் : இரண்டும்; சிறிய அளவில் அல்ல.

சாக்ரடீஸ் : அவற்றினுள்ளேயும் இடையேயும்கூட.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆக அபிப்பிராயம் மத்திமமானது என்று நீ ஊகிக்கின்றாய் அல்லவா?

கிளாக்கன் : கேள்விக்கே இடம் இல்லை.

சாக்ரடீஸ் : ஆனால் ஒருபொருள் ஒருவகையாக இருந்தும் இல்லாததுமாகக் காணப்பட்டால் அது உள்பொருள் இல்பொருள் ஆகிய இரண்டிற்கும் இடையே இருக்குமென்றும், அது சம்பந்தமான சக்திக்கூறுபாடு அறிவாகவோ அறியாமையாகவோ இருக்கிறதென்றும் ஆனால் அவை இரண்டிற்

கும் நடுவில் இருக்குமென்றும் நாம் முன்பு சொல்லிக் கொண்டு இருக்கவில்லையா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அந்த மையத்தில் அபிப்பிராயம் என்று கூறப்படும் ஒன்று இருப்பதாக இப்பொழுது கண்டுபிடிக்கப்படவில்லையா ?

கிளாக்கன் : கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சாக்ரடீஸ் : இனி, கண்டுபிடிக்கப் படவேண்டியது யாதெனில் உள்பொருள் இல்பொருள் ஆகிய இரண்டின் தன்மையை உடைய பொருள்தான். இப்பொருளைச் சுத்தமானதென்றோ எளிமையானதென்றோ கூறமுடியாது. இதை நாம் கண்டு பிடித்துவிட்டால் அதற்கு அபிப்பிராயத்தின் பொருள் எனப் பெயரிடலாம். இவை ஒவ்வொன்றையும் அதன் சக்திக் கூறுபாட்டின் கீழே கொண்டுவரலாம். அதிகமானதை அதிகமான சக்திகளின் கீழேயும், மிதமானதை மிதமான தின் கீழேயும் கொண்டுவரலாம்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இதை முகவுரையாகக் கொண்டு, அழகு என்பது பலதிறப்பட்டது என்றுகூறி; அதற்குப் பூரணமான அல்லது மாற்றமுடியாத உருவம் இல்லை என்று கூறுபவனிடம் ஒரு கேள்வி கேட்பேன். அழகிய காட்சிகளை நேசிக்கும் உன்னுடைய ஆண், அழகு ஒன்றே என்றோ, நீதி ஒன்றே என்றோ, வேறெதுவும் ஒன்றே என்றோ சொல்லப்படுவதைப் பொறுக்கமாட்டான். இந்த ஆளிடம் ஐயாவே, இந்த அழகுப் பொருள்களில் எல்லாம் ஏதாவது ஒன்று அவலட்சணமாக இல்லையா என்று கேட்க விரும்புகிறேன். நீதி யாவற்றினுள்ளே நீதியற்ற ஒன்று இருக்காதா ? பரிசுத்தமானவற்றுள் அசுத்தமான ஒன்று இருக்காதா என்றும் கேட்க விரும்புகிறேன்.

கிளாக்கன் : இல்லை. அழகு சில கோணங்களில் அவலட்சணமாகக் காணப்படும். இந்த உண்மை மற்றவற்றிற்கும் பொருந்தும்.

சாக்ரடீஸ் : இரட்டையாகவுள்ளவை பல, பாதியாகவும் இராவா ? இரட்டை என்பது ஒரு பொருளின் இரட்டையா ? மற்றவற்றின் பாதிகளா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : பெரிதும் சிறிதுமான பொருள்கள் பளுவும் இலே சானதுமான பொருள்கள், இந்தப் பதங்களினுலன்றி எதிர் மாறுன பதங்களால் அழைக்கப்படமாட்டாவா?

கிளாக்கன் : உண்மை. இவையும் இவற்றிற்கு மாறுன பெயர் களும் அவை எல்லாவற்றிற்கும் தொடர்ந்து வரும்.

சாக்ரடீஸ் : குறிப்பிட்ட பெயர்களால் அழைக்கப்படுபவைகளில் ஒன்று, இதுவென்ருே அல்லது இதுவல்ல என்ருே சொல்லப் படமாட்டாதா?

கிளாக்கன் : இவை விருந்துகளில் கேட்கப்படும் புதிர் விளுக்கள் போன்று உள்ளன; அல்லது பிள்ளைகளின் விடுகதை போன்றவை. ஒருவன் ஒரு வௌவாலைக் குறி பார்க்கிருன், எதனுல் அதை அடிக்கிருன், எதன்மேல் அவ்வௌவால் அமர்ந்திருக்கிறது என்பன போன்று. நான் பேசிக்கொண்டிருக்கும் தனிப்பட்ட பொருள்களும் விடுகதை போன்று சிக்கலானவை; இருபொருள் கொண்டவை, அவற்றை உமது மனத்தில் உள்ளவை என்ருே இல்லாதவை என்ருே இரண்டுமோ அல்லது இவற்றில் ஒன்ருே என்றே நிச்சயப்படுத்திக்கொள்ள முடியாது.

சாக்ரடீஸ் : பின்பு அவற்றை நீ என்ன செய்வாய்? அவை களுக்கு உள்பொருள் இல்பொருள் ஆகிய இரண்டினுக்கும் நடுவே இருப்பதைக் காட்டிலும் உயர்ந்த இடம் கிட்டுமா? ஏனெனில் அவைகள் தெளிவாக இல்லாமை அல்லது அதிக இருளில் இல்லை. அல்லது உள்பொருளைவிட அதிக எளிமை யும் இருப்பும் உள்ளனவாக இருக்கின்றன.

கிளாக்கன் : அது முழுவதும் உண்மை.

சாக்ரடீஸ் : இவ்வாறு பொதுமக்கள் அழகைப்பற்றியும் மற்ற வற்றைப் பற்றியும் கொண்டுள்ள எண்ணங்கள் உள்பொரு ளுக்கும் இல்பொருளுக்கும் இடையே தத்தளித்துக் கொண் டிருக்கின்றன என்பதைக் கண்டுபிடித்துள்ளோம்.

கிளாக்கூன் : நாம் கண்டுபிடித்துள்ளோம்.

சாக்ரடீஸ் : ஆம் இத்தகைய காரியம் எதுவும் அபிப்பிராய சம்பந்தமானவை, அறிவு சம்பந்தமானதல்ல என்று முன்பே ஒத்துக்கொண்டிருக்கிருேம். இது மாறிக்கொண்

டிருக்கும் மத்திய காரியம், மத்திய ரகமான சக்தியின் கூறு பாட்டால் நிலைநிறுத்தப்படுவது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : பிறகு, அனேக அழகியவற்றைப் பார்ப்போராயிருந்தும் முழு அழகைப் பாராதும் அதைக் காட்டுபவரைப் பின்பற்றிப் பார்க்காதும் இருப்பவர்களுக்கு அபிப்பிராயம் இருக்குமே அன்றி அறிவு இருக்காது என்று கூறலாம். இவ்வாறே அநேக நீதியானவற்றைப் பார்த்தும் பரிபூரண நீதியை உணராதவர்களும் அபிப்பிராயம் உள்ளவர்களே, அறிவு உள்ளவர்கள் அல்ல, அல்லவா?

கிளாக்கன் : அது நிச்சயம்.

சாக்ரடீஸ் : ஆனால் முழுமுதலைப் பார்ப்போர்—நிலையானதையும் மாறாததையும் பார்ப்போர் அறிவுள்ளோர். அபிப்பிராயம் மட்டும் உள்ளோர் அல்லர் அல்லவா?

கிளாக்கன் : அதையும் மறுக்கமுடியாது.

சாக்ரடீஸ் : ஒன்று அறிவு சம்பந்தமான விஷயங்களை நேசிக்கிறது, தழுவுகிறது. மற்றொன்று அபிப்பிராய சம்பந்தமானது. பின்கூறப்பட்டது இனிமையான சப்தங்களைக் கேட்பவர்களும் அழகான வண்ணங்களைப் பார்த்தவர்களும் பூரண அழகு இருப்பதை அங்கீகரிக்காதது போன்றது. இதை நாம் முன்பே கூறினோம். இதை நீ மறந்திருக்க மாட்டாய்.

கிளாக்கன் : ஆம், எனக்கு நினைவு இருக்கிறது.

சாக்ரடீஸ் : ஆகவே அவர்களை நாம் அபிப்பிராயத்தை நேசிப்பவர்கள், ஞானத்தை நேசிப்பவர்கள் அல்லர் என்று கூறுவதில் ஏதாவது தவறு இருக்கிறதா? நாம் அவர்களை இவ்வாறு விவரிப்பதைப் பற்றி அவர்களுக்கு அதிகக் கோபம் வருமா?

கிளாக்கன் : கோபப்படாதபடி நான் அவர்களுக்குக் கூறுகிறேன். உண்மையானவற்றைப் பற்றி ஒரு மனிதனும் கோபப்படக்கூடாது.

சாக்ரடீஸ் : ஆனால் ஒவ்வொரு காரியத்திலும் உண்மையை நேசிப்பவர்கள் ஞானத்தை நேசிப்பவர்கள்; அபிப்பிராயத்தை நேசிப்பவர்கள் அல்ல என்று குறிப்பிடவேண்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

ஆரும் புத்தகம்

இங்ஙனம் உற்சாகமின்றி நெடிது நடந்த விவாதத்தின் இறுதியில் மெய்யான தத்துவ ஞானிகளும், பொய்யான தத்துவ ஞானிகளும் புலப்பட்டனர்.

கிளாக்கன் : விவாதத்தின் போக்கு, குறுக்கப்பட்டிருக்கலா மென நான் நினைக்கவில்லை.

சாக்ரடீஸ் : நானும் அவ்வாறே நினைக்கிறேன். ஆயினும் விவாதம் இந்த ஒரு பொருள்பற்றி மட்டும் இருந்திருந்தால் அந்த இருவரையும்பற்றி இன்னும் செம்மையாகக் கண்டிருக்கலாம். மேலும் நீதிமானுடைய வாழ்க்கை, அநீதியாளனுடைய வாழ்க்கையிலிருந்து எவ்வகையில் வேறுபடுகிறது என்று காண விழைபவன் எண்ணவேண்டிய பிரச்சினைகள் பலவும் நமது ஆராய்ச்சியில் இடம் பெறுமல் இருத்தல் வேண்டும்.

கிளாக்கன் : இனி அடுத்த கேள்வி என்ன ?

சாக்ரடீஸ் : முன்பு கூறியதைத் தம்மியல்பில் தொடர்ந்து பிறகு வரும் பிரச்சினைகளையே இனிக் காணவேண்டியுள்ளது. நிரந்தரமானதும் மாருததுமான உண்மைகளை உணரும் ஆற்றலை மெய்ஞ்ஞானிகளே பெற்றவர்கள் ; வேறுபாடுகளுடையும் பலவற்றிடையே உழலுபவர்கள் மெய்ஞ்ஞானிகள் ஆகமாட்டார்கள், எனின் இவ்விருவகையினரில் யாரிடம் ஆட்சிப் பொறுப்பு இருக்கவேண்டும் ?

கிளாக்கன் : எந்த வழியில் இவ்வினவிற்கு விடை காணலாம் ?

சாக்ரடீஸ் : இந்த இருசாராரில் யார் ; நமது நாட்டின் சட்டங்களையும் ஸ்தாபனங்களையும் சிறந்தமுறையில் பாதுகாக்கக்

கூடுமோ அவர்களே நம் பாதுகாவலராக அமைதல் வேண்டும்.

கிளாக்கன் : மிகவும் சரியானது.

சாக்ரடீஸ் : பாதுகாவலர்கள் கண்கள் உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதுபற்றிய ஐயமேதும் எழவில்லை அல்லவா?

கிளாக்கன் : அதைப்பற்றிச் சந்தேகமேயில்லை.

சாக்ரடீஸ் : ஒவ்வொரு பொருளைப்பற்றிய உண்மைத் தன்மையையும் காணும் அறிவு இல்லாதவர்களையும், தம்முடைய உயிர்களின் உண்மை அமைப்பை அறியாதவர்களையும், ஒரு ஓவியனைப் போன்று அருவமான ஆழ்ந்த உண்மையையும் அறியக்கூடிய கண்ணில்லாதவர்களையும், பரத்தைப்பற்றிய அறிவுக் கண்களின்மையால் அழகு, நன்மை, நீதி ஆகியவற்றைப் பற்றிய சட்டங்களியற்றவோ, அவை இல்லாத அளவில் அவற்றை நிலைநிறுத்தவோ முடியாதவர்களையும் குருடர்கள் எனலாம் அல்லவா ?

கிளாக்கன் : ஆம் அவர்களே கண்ணில்லாதவர்களாவர்.

சாக்ரடீஸ் : அவர்களை ஆட்சியாளர்களாக ஆக்கலாமா ? அன்றி அனுபவத்திலும் மற்றெல்லா வகைகளிலும் அவர்களையொத்தவர்களும் இன்னும் ஒவ்வொரு பொருளின் உண்மை நிலைகளை அறிந்தவர்களுமான ஏனையோரை ஆட்சியாளர்களாக ஆக்கலாமா ?

கிளாக்கன் : சிறந்த குணங்களில் தலைசிறந்ததான இந்த அறிவியலைப் பெற்றவர்களை நாம் எக்காரணத்தினாலும் நிராகரிக்க முடியாது. வேறு எவ்வகையிலும் அவர்கள் தவறியவர்களல்ல என்றால் எப்போதும் அவர்களே முதலிடம் பெறவேண்டும்.

சாக்ரடீஸ் : இச் சிறப்பியல்பும் ஏனைய நற்குணங்களும் எவ்வளவு தூரம் அவர்கள்பால் இணையக்கூடும் என்பதை நாம் பார்க்க வேண்டுமல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : சரி, நாம் முன்னர்த் துவங்கியதுபோன்று, மெய்ஞ்ஞானியின் இயற்கைத் தன்மையை முதற்கண் காண வேண்டும். அவர் தம் தன்மையைப்பற்றி ஒரு முடிவுக்கு வரவேண்டும். அப்போது அப்படிப்பட்ட குணங்களின் ஒற்றுமை சாத்தியம் என்பதை (என் கருத்து தவறானது

அல்லவென்றல்) அறிந்து ஏற்போம். இவ்வொற்றுமை எவர்களிடம் காணப்படுகின்றதோ அவர்களே நாட்டின் ஆட்சியாளர்களாக இருத்தல் வேண்டும் என்பதை முடிவு செய்வோம்.

கிளாக்கன் : தாங்கள் விளக்கிச் சொல்லவேண்டும்.

சாக்ரடீஸ் : மெய்ஞ்ஞானியின் தன்மைகளில் ஒன்று அறிவு வேட்கையாகும். அவ்வேட்கை நிலைத்த உண்மையையும், மாருத, அழியாத உண்மையையும் விளக்குவதாகும் என்று கொள்வோம்.

கிளாக்கன் : ஆகட்டும்.

சாக்ரடீஸ் : மேலும் அவர்கள் பொருள்களின் உண்மை நிலையையே விழைகின்றனர் என ஒப்புக்கொள்வோம். எந்த ஒரு சிறப்புள்ளவற்றையும் அவர்கள் இழக்க விரும்புவதில்லை. இவ்வியல்புகளை நாம் காதலர்களைப் பற்றியும், பேராசைக்காரர்களைப் பற்றியும் கூறியவற்றில் கவனித்துள்ளோம்.

கிளாக்கன் : முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : நாம் கூறிய குணநலன்களை மெய்ஞ்ஞானியிடம் காணவேண்டுமாயின் மற்றொரு குணமும் அவனுக்கு இருக்கவேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : என்ன அது ?

சாக்ரடீஸ் : அதுதான் உண்மையுடைமை, மெய்ஞ்ஞானியின் மனம் அவனறிந்து பொய்யை ஏற்காது. பொய் அவனது வெறுப்புக்கான பொருள். அவன் உண்மையையே நேசிப்பான்.

கிளாக்கன் : இத்தன்மை அவர்கள்பால் இருப்பதாகச் சந்தேகத்திற்கிடமின்றிக் கூறலாம்.

சாக்ரடீஸ் : கூறலாம் என்பதை விட, கூறவேண்டும் என்பதே சரி. ஏனெனில் யாருடைய தன்மை ஏதொன்றையும் இச்சிக்கக்கூடுமோ, அவர் தனது நேசிப்புக்குகந்த பொருளிடமும் அதைச்சார்ந்தவற்றிடமும் அன்பு செலுத்தாமல் இருக்கமுடியாது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் அறிவுடன் தொடர்புள்ளவைகளில் உண்மையை விட நெருங்கிய தொடர்புள்ளது வேறு ஏதேனும் உள்ளதா ?

கிளாக்கன் : எப்படி இருக்க முடியும்?

சாக்ரடீஸ் : ஆகவே ஒருவர் ஞானம் அல்லது அறிவையும் பொய்யையும் ஒருங்கே நேசித்தல் இயலாததல்லவா?

கிளாக்கன் : ஒருபோதும் இயலாது.

சாக்ரடீஸ் : அறிவை விரும்பும் ஒருவன் தன் இளமைதொட்டே உண்மையையும் விரும்பவேண்டுமல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆனுல் நாம் அனுபவத்திஞல் அறிந்த உண்மை யாவது ஒருவனுடைய விருப்பங்கள் ஒரு திசையில் பல முள்ளனவாக இருந்தால், மற்ருெரு பக்கத்தில் அவை பல மற்றனவாக இருக்கும். அது மற்ருெரு கால்வாயில் இழுக்கப் படும் ஒரு நீரோட்டத்தை ஒக்கும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : உண்மையான தத்துவ ஞானியாக இருப்பவனின் விருப்பங்கள் அனைத்தும் அறிவின்பால் ஈர்க்கப்படும், ஆன்மாவின் இன்பங்களில் திளைக்க, உடல் சம்பந்தமான இன்பங்கள் அவரைப் பாதிக்கமாட்டா.

கிளாக்கன் : அது மிகவும் நிச்சயம்.

சாக்ரடீஸ் : அத்தகையவன் நிச்சயமாகத் தன்னடக்கம் உடையஞகவும், பேராசைக்குப் புறம்பானவஞகவும் இருப் பான். அவனுடைய நடத்தையில் சாதாரண மனிதனின் விருப்பத்தையும், செலவுசெய்யும் தன்மையையும் தூண்டக் கூடிய நோக்கங்களே இடம்பெரு.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இனி, தத்துவ அறிவின் மற்ருெரு தன்மையைக் காணவேண்டும்.

கிளாக்கன் : அது என்ன?

சாக்ரடீஸ் : கருமித்தனத்துடன் கூடிய இரகசிய எண்ணமே இராது. தெய்வீகமானதோ, மனிதத்தன்மையதோ ஆன எச் செயல்களிலும் முழுமையையே விரும்பும் ஆன்மாவுக்கு அற்பத்தனத்தைவிட விரோதமானதொன்றும் இருக்க முடியாது.

கிளாக்கன் : மிகமிக உண்மை.

சாக்ரடீஸ்: அப்படியாயின் மனத்தின் உயர்வு மிகப் பொருந்திய தத்துவஞானி காலம் என்பதின் முழுமையையும் உயிர்கள் யாவற்றையுமே ஒருங்குநோக்கும் பார்வையாளனாக இருக்கும்போது, எங்ஙனம் மானிட வாழ்வின் தன்மையைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கமுடியும்?

கிளாக்கன்: சிந்திக்க முடியாது.

சாக்ரடீஸ்: அப்படிப்பட்ட ஒருவன் சாவைக் கண்டு அஞ்சுவானா?

கிளாக்கன்: அஞ்சமாட்டான்.

சாக்ரடீஸ்: பின்னர், பயப்படக் கூடியதும் அற்பமான இயல்புடையதும் உண்மையான தத்துவ ஞானத்தில் இடம்பெற முடியாதல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக முடியாது.

சாக்ரடீஸ்: பூரணமாக நற்குணங்கள் ஒருங்கு சேர்ந்து உருவாக்கப்பட்ட ஒருவன், ஆசை அல்லது கீழ்த்தரமான தன்மை அகன்று வீண் பெருமையும் கோழைத்தனமும் அற்றவனாயின் அவன் எப்பொழுதாவது அநீதியாளனாகவும் நேர்மையற்றவனாகவும் இருக்கமுடியுமா?

கிளாக்கன்: முடியாது.

சாக்ரடீஸ்: ஆகவே எவனொருவன் நீதியுடனும், மேன்மையுடனும் கூடியவனாக அல்லது முரட்டுத்தனமும் சமூகத்தில் கலந்து பழகாத தன்மையும் கூடியவனாக இருக்கிறான் என்பது விரைவில் காணத்தக்கது அல்லவா? இத்தன்மைகள் இளமையிலேகூட தத்துவ ஞானமிக்கவரைப் பிறரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுபவையாம்.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: மற்றொரு குறிப்பும் உண்டு. அதையும் இங்கே காணவேண்டும்.

கிளாக்கன்: அது என்ன குறிப்பு?

சாக்ரடீஸ்: அவன் கற்றுக்கொள்வதில் இன்பமடைகின்றானா இல்லையா என்பது. ஏனெனில் துன்பமளிக்கும் எதையும் எவனும் நேசிக்கமாட்டான். அதிகம் உழைத்தும்கூட முன்னேற்றம் காணாத ஒன்றையும் எவனும் விரும்பமாட்டான் அன்றோ?

கிளாக்கன்: நிச்சயமாக விரும்பமாட்டான்.

சாக்ரடீஸ் : மேலும் படித்தது எதையும் நிலைநிறுத்திக்கொள்ளாது மறந்துவிட்டால் அவன் ஒரு வெற்றுப் பாத்திரமாகி விடுவான் அல்லவா ?

கிளாக்கன் : அது நிச்சயம்.

சாக்ரடீஸ் : வீணுக உழைத்துத் தன்னையும் தன்பயனற்ற அலுவலையும் வெறுப்பதிலேயே அவன் முடிவு காணவேண்டும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆகவே மறதியுறும் ஆன்மா மெய்ஞ்ஞானத்தின் இயல்பைக் கொண்டதாகக் கொள்ளமுடியாது. தத்துவ ஞானிக்கு நல்ல ஞாபகசத்தி இருக்கவேண்டும், என்று வற்புறுத்தவேண்டும்.

கிளாக்கன் : கண்டிப்பாக.

சாக்ரடீஸ் : ஒவ்வாததும் தகுதியற்றதுமான தன்மை வரையறை இன்மைக்கு அல்லது பொருத்தமின்மைக்குக் கொண்டு செல்லும்.

கிளாக்கன் : சந்தேகமின்றி.

சாக்ரடீஸ் : உண்மை என்பது பொருத்தம் உடையது அல்லது வரையறை உடையது என்பதோடு தொடர்புடையதா அன்றி, பொருத்தம் இன்மை அல்லது வரையறை இன்மை என்பதோடு தொடர்புடையதா ?

கிளாக்கன் : பொருத்தமுள்ளதோடுதான்.

சாக்ரடீஸ் : ஆகவே மற்றவியல்புகளுடன் நாம் நல்ல பாகுபாடமைந்த அருள் நிரம்பிய மனத்தைக் காணவேண்டும். அது தன்னிச்சையுடன் எல்லாப் பொருள்களின் உண்மைத் தன்மையையே நாடும்.

கிளாக்கன் : ஆம், உண்மை.

சாக்ரடீஸ் : நாம் இதுகாறும் எண்ணிவந்துள்ள பண்புகள் எல்லாம் சேர்ந்து அமைகின்றன அல்லவா ? ஒருவன் வாழ்வில் செம்மையும் முழுமையும் காணவேண்டுமாயின் அவனிடத்தே இப்பண்புகள் யாவும் ஒருவகையில் அவசியமாகின்றன, அல்லவா ?

கிளாக்கன் : மிகவும் அவசியம்.

சாக்ரடீஸ் : எவன் ஒருவனுக்கு நல்ல நினைவாற்றல் உள்ளதோ, எவன் ஒருவனுக்கு விரைவில் கற்கும் ஆற்றல் உள்ளதோ, எவன் ஒருவனுக்கு நேர்மை இரக்கம், உண்மை, நீதி, வீரம்,

நெறிபிறழாமை ஆகியவற்றுடன் தொடர்புள்ளதோ அவன் பெறக்கூடிய கல்வி குற்றமற்றதாகத்தானே இருக்கும்?

கிளாக்கன் : பொருமையின் கடவுள்கூட அப்படிப்பட்ட கல்வியில் குற்றம் ஒன்றும் காணமுடியாது.

சாக்ரடீஸ் : அத்தகைய மனிதர் வயதிலும், கல்வியிலும் மேன்மையடையும்பொழுது அவரிடமே நாட்டை ஒப்புவிக்க விழைவோமல்லவா?

இவ்விடத்தில் அதைமாந்தஸ் குறுக்கிட்டுக் கூறத் தொடங்கினர். "சாக்ரடீஸ் அவர்களே! இந்த வாதங்களுக்கு ஒருவராலும் பதில் கூற இயலாது. ஆனல் தாங்கள் பேசுவதைக் கேட்பவர்கள் மனதில் ஓர் விஞேதமான உணர்வு ஏற்படுகின்றது. விவாதம் செய்யும்போது தாங்கள் அவர்களைப் படிப்படியே தம் வழியைவிட்டு விலக்கிக்கொண்டு சென்று விடுகீறீர்கள் என்று நினைத்துவிடுகின்றனர். அதற்குக் காரணம், வின எழுப்பவும் விடை அளிக்கவும் தங்கட்குத் (கேட்போர்) திறமையின்மையே என்று எண்ணுவர். இது போன்ற சிறு தோல்விகள் சேரச்சேர விவாதத்தின் முடிவில் பெரிய அளவில் தாங்கள் தோற்கடிக்கப்பட்டதை அறிகின்றனர். அவர் தம் முன்னைய எண்ணங்கள் யாவும் தலை கீழாக மாற்றப்பட்டதாகத் தோன்றிவிடுகின்றது. சதுரங்க ஆட்டத்தில் சாமர்த்தியமற்ற ஆட்டக்காரன் கடைசியில் தன் வலிய எதிரியின் காய்களால் சூழப்பட்டு, ஒரு காயைக் கூட இடம் பெயர்த்து வைக்க முடியாதபடி அடைக்கப்படுவதுபோல் ஆகிவிடுகின்றனர். விவாதமாகிய இந்தப் புதிய விளையாட்டில் சொற்களாகிய காய்களை அவர்களால் தக்கபடி வைக்க இயலவில்லை. ஆனல் முழுநேரமும் சரியான நிலையிலேயே அவர்கள் இருக்கின்றனர். இந்த எண்ணம் இங்கு நடப்பதைக் கவனிக்கும்போதுதான் எனக்கும் தோன்றியது. ஏனெனில், விவாதத்தில் எங்களில் எவரும் உங்களை எதிர்க்க இயலாவிடினும், யாம் காணும் உண்மை இதுவே. தத்துவ ஞானத்தைப் பின்பற்றுபவர்கள் தங்கள் படிப்பின் ஒரு பகுதியாக, இளமையில் படிக்கும்போது மட்டுமின்றி முதுமையிலும் தொடர்ந்து படிக்கும்போதும் அவர்களில் பெரும்பாலோர் விந்தைமிக்க ஜந்துக்களாகிவிடுகின்றனர். அவர்களை முழு அயோக்கியர்கள் என்று கூறமுடியாவிட்டாலும் இவ்வாறுதான் சொல்லவேண்டியுள்ளது. தத்துவ ஞானிகளில் சிறந்தவர்களெனக் கருதப்படும் பெரியோர்கள்,

நீங்கள் புகழும் அவர்களுடைய படிப்பாலேயே உலகிற்கு உபயோகமற்றவர்களாக ஆக்கப்படுகின்றனர்.

சாக்ரடீஸ்: நல்லது. அப்படிச் சொல்பவர்களைத் தவருகச் சொல்கின்றனர் என்று நீ நினைக்கிருயா ?

அதைமாந்தஸ்: நான் கூற இயலாது. ஆனல் தங்கள் கருத்து என்ன எனபதை அறிய விரும்புகிறேன்.

சாக்ரடீஸ்: அவர்கள் சொல்வது முற்றிலும் சரி என்பதே என் கருத்து.

அதைமாந்தஸ்: அப்படியானல் தத்துவ ஞானிகள் ஆட்சி செய்யாதவரையில் நகரங்கள் தீமையினின்று நீங்கா எனத் தாங்கள் கூறுவது தத்துவ ஞானிகள் நகரங்களுக்கு உதவ மாட்டார்கள் என்று நாங்கள் கூறுவதுடன் எங்ஙனம் பொருந்தும் ?

சாக்ரடீஸ்: நீ கேட்கும் வினவுக்கு ஒரு நீதிக் கதையின் மூலமே விடையளிக்க முடியும் என நான் நினைக்கிறேன்.

அதைமாந்தஸ்: அப்படிப்பட்ட முறையில் தாங்கள் விவாதம் செய்யும் வழக்கமில்லையே !

சாக்ரடீஸ்: என்னை இதுபோன்ற மோசமான விவாதத்தில் மூழ்கவிட்டு நீ இன்பமடைகிருய் போலும். ஆனல் இப்பொழுது எனது கதையைக் கேள். எனது எளிய கற்பனையைக்கண்டு நீ இன்னும் அதிகமாக இன்புறுவாய். ஆன்ருேர் நம் நாடுகளில் நடத்தப்படும் விதம் மிகவும் வருந்துதற்குரியது. அதற்கு ஒப்பாக உலகில் எந்தச் செயலையும் கூற முடியாது. அவர்களுக்காக நான் வாதாட வேண்டுமெனில் கட்டுக்கதைகளைத்தான் துணைக்கொள்ள வேண்டும். படங்களில் வெள்ளாடுகளும் மான்களும் சேர்ந்து காணும் விநோதத்தைப்போலப் பல பொருள்கள் இணைந்த ஓர் உருவத்தைத் தோற்றுவிக்கவேண்டும். இப்பொழுது ஒரு கப்பல் கூட்டத்தையோ அல்லது ஒரு கப்பலையோ கற்பனை செய்து கொள்ளுங்கள். அதன் தலைவர், ஏனைய கப்பல் சிப்பந்திகளைவிட உயரமாகவும் பலமிகுந்தும் ஆனல் சற்று மந்தமான காதும் சற்றே ஒளியிழந்த கண்ணும் கப்பலோட்டும் அறிவிலும் அப்படியே மேன்மையற்றவராகவும் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அங்கே மாலுமிகள் கப்பலைச் செலுத்துவதைப்பற்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்கின்றனர். ஒவ்வொருவரும் கப்பல் செலுத்தும் அறிவைப் பெருதிருந்தும் தனக்கே செலுத்தும் உரிமை

உண்டென வாதாடுகின்றனர். அவர்களில் ஒருவனும் தனக்கு யார் எப்பொழுது அக்கலையைக் கற்பித்தார் என்று சொல்ல முடியாதிருந்தும், அக்கலையானது கற்பிக்கப்பட முடியாததென்று கூறுகின்றனர். இதற்குமாருன கொள்கைகளைக் கூறுபவர்களைக் கண்டதுண்டமாக வெட்டிப்போடவும் தயாராயிருப்பர். மேலும் தலைவனைச் சூழ்ந்துகொண்டு கப்பலைச் செலுத்தும் பகுதியைத் தங்களிடம் கொடுக்கும்படி வேண்டுகின்றனர். அல்லது கெஞ்சுகின்றனர். தங்களைத் தவிர வேறு சிலர் விருப்பப்பட்டால் அவர்களைக் கொன்று விடுகின்றனர், அல்லது நீரில் தள்ளி விடுகின்றனர். கண்ணியமுள்ள அந்தக் கப்பல் தலைவனின் உணர்வினைக் குடியின் மூலமோ அன்றிப் போதைப் பொருள்களின் மூலமோ கட்டிவிட்டுக் கலகம் விளைவிக்கின்றனர். கப்பலைச் சொந்தமாக்கிக்கொண்டு அவர்கள் கப்பலில் சேமித்து வைக்கப்பட்டுள்ள பண்டங்களைத் தாராளமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். இவ்வாறு தின்று, குடித்து, எவ்வாறெல்லாம் அவர்கள் நடந்து கொள்வர் என்று எதிர் பார்க்க முடியுமோ அவ்வாறெல்லாம் நடந்துகொண்டு பிரயாணம் செய்கின்றனர். அவர்களுக்கு ஆளாக இருந்து, அவர்களது கூட்டாளியாக, சூழ்ச்சிகளுக்கு உடன்பட்டு, பலாத்காரத்தினுலோ அன்றித் தூண்டுதலினுலோ கப்பலை அதன் தலைவனிடமிருந்து கைப்பற்றித் தம்மிடம் அளிப்பவனை வழிகாட்டி, மாலுமி, சிறந்த கடல்வீரன் என்றெல்லாம் புகழ்கின்றனர். மற்றவனைப் பயனற்றவன் என்பர். உண்மையான மாலுமியோ எனில் வருடம், காலம், வானிலை, நட்சத்திரங்கள், காற்றுக்கள் மற்றும் கப்பலோட்டும் கலைக்கு வேண்டிய அனைத்தையும் குறித்தே கவனம் செலுத்துவான் ; ஒரு கப்பலின் தலைவனுகவும் கப்பலை நடத்துபவனுகவும் தன்னைத் தகுதியாக்கிக்கொள்ள விரும்புவான். ஏனையோர் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் அவைகளிலேயே கண்ணுயிருப்பான். அதிகாரமும் மாலுமியின் கலைத்திறனும் ஏவ்வாறு இணையவேண்டுமென்ற எண்ணம் மற்றவர்களுடைய சிந்தையில் வருவதே இல்லை. அவனைத் தம்பால் ஏனையோர் சேர்த்துக்கொள்வதுமில்லை. கலகம் நடைபெறும் கப்பல்களில் கலகம் விளைவிக்கும் மாலுமிகள் அந்த உண்மையான மாலுமியை மதிக்கமாட்டார்களல்லவா ? மேலும் அவனை அரட்டையடிப்பவன், உதவாதவன்,

வீணுக்கு வானத்தைப் பார்த்து நேரம் போக்குபவன் என்றெல்லாம் பரிகாசிப்பார்களல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இப்பொழுது யான் சொல்லிய உபமானத்தைப் புரிந்துகொண்டிருப்பாய் என நினைக்கிறேன். உண்மையான மாலுமியை ஏனையோர் நோக்குவது போன்றே, உண்மையான தத்துவஞானியைச் சமுதாயம் பார்க்கிறது.

அதைமாந்தஸ் : ஆம், புரிந்துகொண்டேன்.

சாக்ரடீஸ் : சமூகம் தத்துவஞானிகளை மதிப்பதில்லை என்பதைக் கண்டு ஆச்சரியப்படும் ஒருவரிடத்தில் இதைச் சொல். இந்த உவமானத்தை விளக்கி அப்படிப்பட்ட ஞானிக்கு மதிப்பு அளித்தால் மேலும் சிறப்புண்டாகும் என்பதையும் தெரியப்படுத்து.

அதைமாந்தஸ் : சரி, செய்கிறேன்.

சாக்ரடீஸ் : சிறந்த தத்துவ ஞானி ஏனைய உலகமாந்தர்க்குப் பயன்படமாட்டார் எனக் கருதும் ஒருவனிடத்தில் அவ்வளவில் அவன் கருத்துச் சரியென்றே கூறிவிடு. ஆனால் அந்தத் தத்துவஞானிகளின் பயனற்ற தன்மை அவர்களைச் சார்ந்ததல்ல என்றும், அவர்களை நன்கு பயன்படுத்தாதவர்களையே சாரும் என்றும் கூறு. கப்பலின் தலைவன் இதர மாலுமிகள் தனக்கு அடங்கி நடக்கும்படிக் கெஞ்சிக் கேட்கக் கூடாது. இது இயற்கைக்கு முரணானது. அதேபோன்று ஞானிகள் பணக்காரரின் வாயிலுக்குச் செல்லக்கூடாது. உண்மை என்னவெனில் ஒரு மனிதன் உடல்நலமின்றி இருந்தால், அவன் பணக்காரனானாலும் சரி, ஏழையானாலும் சரி அவன் வைத்தியனிடமே செல்லவேண்டும். அது போன்று ஆள்வோரைத் தேடுவோன் அரசாளத் தகுதியுடையோனிடம்தான் செல்லவேண்டும். ஆட்சியாளர் குடிமக்களைத் தன்னால் ஆளப்படும்படிக் கெஞ்சக்கூடாது. ஆனால் தற்கால ஆட்சியாளர்கள் வேறுவிதமாக உள்ளனர். அவர்களைக் கலகம் விளைக்கும் மாலுமிக்கு ஒப்பிடலாம். உண்மையான மாலுமிகளைப் போன்று தகுதியுள்ள ஆட்சியாளர்களை முன்பு கலகக்காரர்களால் உதவாதவர், வானம் பார்க்கும் சோம்பேறிகள் எனப்பட்டோருக்கு ஒப்பிடலாம்.

அதைமாந்தஸ் : சரியாக வரையறுத்துக் கூறிவிட்டீர்கள்.

சாக்ரடீஸ் : இக்காரணங்களால்தான் எல்லாவிதத்திலும் சிறந்த தத்துவஞானம் எதிரிகளால் மதிப்புள்ளதாகக் கருதப்படுவதில்லை. தத்துவஞானத்திற்குப் பெரிய நிரந்தரமான கேடு எதிரிகளால் மட்டும் விளைவதில்லை, பெரிதும் தத்துவ ஞானத்தைப் பின்பற்றுவதாகப் பாசாங்கு செய்யும் மனிதர்களாலேயே ஏற்படுகிறது. இவர்களையே குற்றம் சாட்டுபவர்கள் அயோக்கியர்கள், உதவாதவர்கள் என்று சொல்லுகிறுர்கள் என்று நீ சொன்னுய், நானும் அவர்கள் கூறுவது சரி என்றே ஒத்துக்கொண்டேன்.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : நல்லவர்கள் ஏன் உபயோகமற்றவர்கள் என்பதற்குக் காரணம் இப்பொழுது விளங்குகிறது அல்லவா?

அதைமாந்தஸ் : ஆம் உண்மை.

சாக்ரடீஸ் : பெரும்பாலோர் கெடுக்கப்படுவது தவிர்க்க முடியாதது என்பதை நாம்காட்ட இனி முற்படுவோம். இதை மற்றவைகளையெல்லாம் ஒதுக்கித் தத்துவ ஞானத்தின் குறைபாடாகக் கொள்ளமுடியாது.

அதைமாந்தஸ் : ஆம், எவ்வகையிலும் கொள்ளக்கூடாது.

சாக்ரடீஸ் : முதலில், நாம் பின்னே சென்று, மேன்மை, கண்ணியம் ஆகியவற்றுக்குள்ள விளக்கங்களை நினைவுபடுத்திக் கொண்டு விடைகூறத் தொடங்குவோம். உண்மையே அவருக்குத் தலைவர் என்பது உனக்குத் தெரியும். உண்மையை அவர் எல்லாக் காரியங்களிலும் எப்பொழுதும் பின்பற்றலாம். அங்ஙனம் அவர் செய்யாவிடில் அவர் பிறரை ஏமாற்றுபவராவதுடன் உண்மைத் தத்துவ ஞானத்தில் அவருக்குப் பங்கு இல்லை.

அதைமாந்தஸ் : ஆம் முன்னரே கூறப்பெற்றது.

சாக்ரடீஸ் : மற்றவைகளெல்லாம் நிற்க, இந்த ஒரு குணவிசேஷமே அத்தகையோரைப் பற்றிய நமது கொள்கைகளுக்கு வேறுபட்டதாயுள்ளது அல்லவா?

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : உண்மையான அறிவை விரும்புபவர் சார்பில் நமக்கு இது கூற உரிமையுண்டு—அவர் தம் இயல்பாகவே பூரண வாழ்வுக்காக உழைக்கிறுர். வெறும் தோற்றமான கூட்டுவாழ்விலோ பொதுமக்களின் மனப்பான்மையிலோ

மன நிறைவு கொள்வதில்லை. உற்சாகமிக்கு, பொருள்களின் உண்மைத் தன்மையை உணர்ந்து, மன நிறைவு கொள்வதி லேயே ஈடுபடுகிருர். அவர் உண்மையுடன் தொடர் புள்ளதும் உண்மையையும் அறிவையும் அளிப்பதும் உண்மையுடன் ஒத்துப்போவதுமான உண்மையான வளர்ச்சியுடன் கூடிய வாழ்வையும் அதன் தோன்றலாகிய மன நிறைவையுமே நாடுகிருர். அதைப்பெறும் வரை அவர் தம் முயற்சியை விடுவதில்லை.

அதைமாந்தஸ் : தத்துவஞானியின் தன்மையை இதைவிடச் சீராக விளக்கமுடியாது.

சாக்ரடீஸ் : பொய்யை விரும்புதல் மெய்ஞ்ஞானியின் இயல் புக்குப் புறம்பானதல்லவா? அவன் அதை அடியோடு வெறுப்பானல்லவா?

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆகவே உண்மை ஒன்றே வழிகாட்டியாக இருக்கு மிடங்களில் தீமை தலைகாட்டுவதில்லை.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : நீதியும், மன உறுதியும் அங்கு சேர, தன்னடக்க மும் வந்தடையுமல்லவா ?

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே உண்மையான தத்துவ ஞானியின் எல்லாக் குண நலன்களையும் மீண்டும் நான் எடுத்துரைக்க வேண்டிய அவசியமில்லை என நான் நினைக்கிறேன். அவர் களுடைய குண நலன்களில் தைரியம், பரந்தநோக்கம், புரிந்துகொள்ளும் திறம், நல்ல நினைவுத்திறம் ஆகியவையும் சேர்ந்தவை என்று உனக்குத்தெரியும். ஆனுல், அப்பொழுது நீ கூறியது ஒருவரும் இக்கூற்றை மறுக்க முடியாதெனினும் வீண் சொற்களை விட்டுவிட்டு நடப்பை நோக்கினுல் யாவரு மறிய, சில தத்துவ ஞானிகள் உபயோகமற்றவர்கள், வேறு சிலர் முற்றிலும் கெட்டவர்களே என்பது இந்தக் குற்றச் சாட்டுக்குக் காரணம் என்ன என்று நாம் கண்டோம். இப்பொழுது அவர்களில் ஏன் பெரும்பாலோர் கெட்டவர்கள் என்றும் கேட்டுக் கொண்டு இந்தக் கேள்விக்கு ஆதாரமாக ஓர் உண்மையான தத்துவ ஞானியை எப்படி வரையறுத்துக் கூறுவது என்றும் ஆராய்ந்துவிட்டோம்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இனி, தத்துவஞானத் தன்மையில் தரத்தைக் கெடுக்கும் செயல்களை நாம் ஆராயவேண்டும். ஏன் பெரும்பாலோர் கெட்டுவிடுகின்றனர்? ஏன் மிகச் சிறுபான்மையினரே இக்கேட்டினின்று தப்புகிறுர்கள்? இங்கு நான் உபயோகமற்றவர்கள் என்பவர்களைப்பற்றிக் குறிப்பிடுகின்றேனேயன்றி, தீயவர்களானவர்களைப்பற்றி அல்ல. தத்துவ ஞானிபோன்று நடிக்கும் ஆட்களைப் பற்றியும் தங்கள் தகுதிக்கு அப்பாற்பட்ட தொழிலை விழையும் இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதுபற்றியும் எப்படித் தங்கள் முரணை செய்கைகளால் தத்துவ ஞானத்துக்கும் எல்லா மெய்ஞ்ஞானிகட்குமே நான் கூறிய பொதுப்படையான அவதூற்றைக் கொண்டு வருகிறுர்கள் என்பதைப்பற்றியும் பின்னர் ஆராய்வோம்.

அதைமாந்தஸ் : எனக்கு அந்தத் தரக்குறைவுகளை விளக்குங்கள்.

சாக்ரடீஸ் : அவற்றை உனக்கு நான் விளக்க முடியுமா என்று பார்க்கிறேன். ஒரு தத்துவ ஞானிக்கு இருக்கவேண்டிய எல்லாக் குணங்களும் பூரணமாக ஒருவனிடம் அமைவது இயற்கையில் அரிது என்பதை அனைவரும் ஒத்துக் கொள்வர்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அத்தகைய அரிய தன்மைகளை அழித்துவிட எத்தனையோ எண்ணிலடங்காத சக்திவாய்ந்த காரணங்கள் முற்படுகின்றன.

அதைமாந்தஸ் : அவை யாவை ?

சாக்ரடீஸ் : முதலில் அவர்களுடைய சொந்த நற்பண்புகள் ஆகிய தைரியம் தன்னடக்கம் இன்னும் இவைபோன்ற புகழத்தக்க இயல்புகளே அவர்களது ஆன்மாவை அழிக்கவும், தத்துவ ஞானத்தில் ஈடுபடாமல் பிரிக்கவும் செய்கின்றன. இது மிகவும் விந்தையானதொரு நிலையாகும்.

அதைமாந்தஸ் : இது மிகவும் விந்தையாக உளது.

சாக்ரடீஸ் : இன்னும் சாதாரண வாழ்வின் நன்மைகள் உள்ளன - அழகு, சொத்து, வலிமை, சமூகத்தில் உயர்வு,

அரசியலில் நெருங்கிய தொடர்பு இவையனைத்தும்தான் - உனக்குத் தெரிந்தவைதான். இப்பொருளும்கூட, தரத்தைக் குறைத்துக் கவர்ச்சியை இழக்கச் செய்யும் விளைவுகளை உண்டாக்குபவை.

அதைமாந்தஸ்: இது எனக்குப் புரிகிறது. ஆனால் இதைப் பற்றி இன்னும் சிறப்பாகத் தாங்கள் என்ன குறிக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

சாக்ரடீஸ்: முழுமையாக உண்மையைப் புரிந்து கொள்ள முயற்சி செய்தால் நான் இதுகாறும் கூறியவற்றை அறிவதில் தொல்லை இராது. அவை விநோதமாகவும் இரா.

அதைமாந்தஸ்: என்ன சொல்கிறீர்கள்?

சாக்ரடீஸ்: இப்பொழுது நான் சொல்வதைக் கேள், உயிர்களின் ஜீவாணுக்களோ, தாவர விதைகளோ, சரியான போஷாக்கையோ சீதோஷ்ண நிலையையோ பூமியின் சாரத்தையோ அவற்றின் தரத்துக்குத் தக்க அளவில் பெருவிடில் பாதிக்கப்படும் அல்லவா? சூழ்நிலையின் தரக்குறைவு இவற்றுக்குக் கேடுசெய்வதல்லவா? கெடுதியாவது நல்லதல்லாததைவிட நல்லதென்பதற்குத்தானே பெரிய விரோதியாகும்.

அதைமாந்தஸ்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: விபரீத நிலைமைகளில் சாதாரண இயல்புகளைவிட, சிறந்த தன்மைகளே பெரிதும் பாதிக்கப்படுகின்றன. ஏனெனில் அங்கே வேற்றுமை அதிகம். இவ்வாறு நாம் கொள்வதற்குக் காரணம் உள்ளது.

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அதிகத் திறமையுள்ள மூளையே தவறான கல்வியினால் அதிகத் தீங்கு செய்யும் பொருளாகுமல்லவா? பெரிய குற்றங்களும், கெடுதலே செய்யும் மனப்பான்மையும் இயற்கையில் ஆற்றல்மிகுந்து கல்விமுறையினால் கொடுக்கப்பட்டோராலேயே ஏற்படுகின்றனவே யன்றித் தரத்தில் குறைந்தோரால் அல்ல. ஆனால் வலிமையற்ற தன்மையுடையோர்களால் பெரிய நன்மையோ அன்றிப் பெரிய தீமையோ ஏற்படுவதில்லை.

அதைமாந்தஸ்: நீங்கள் சொல்லுவது மிகவும் சரியானது என்றே எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ் : நமது உவமானப்படி, தத்துவ ஞானியும் ஒரு தாவரத்தைப் போன்றவரே. அத்தாவரம் சரியான உணவைப் பெறின் நிச்சயம் நன்கு வளர்ந்து எல்லா நற்பண்புகளையும் பெறும். ஆனால் அது சத்தில்லாத, தகுதியற்ற மண்ணில் பயிர் செய்யப்பெறின் மிகவும் கேடுற்ற களையாகிவிடும். ஏதாவதொரு தெய்வசத்திதான் அவரை அந்நிலையில் காப்பாற்ற முடியும். மக்கள் கூறுவது போன்று நமது வாலிபர்கள் சோபிஸ்டுகள் எனப்படும் தர்க்க வாதிகளால் கெடுக்கப்படுகின்றனரா ? அல்லது தனிப்பட்ட போதகர்கள் குறிப்பிடத்தக்க அளவில் அப்பணியைச் செய்கிறார்களா ? நீ உண்மையில் எவ்வாறு நினைக்கிறாய் ? குறை கூறும்பொது மக்களே சோபிஸ்டுகளுள் தலைநிற்பவர் அல்லரோ ? அவர்களே இளைஞர்களையும், முதியோர்களையும் ஆடவர்களையும், பெண்டிர்களையும் பேதமின்றி உயர்ந்த நிலைக்குக் கற்பித்துப் பின் தமதிச்சைப்படியே உருவாக்கவில்லையா ?

அதைமாந்தஸ் : அது எப்பொழுது நடைபெறுகிறது ?

சாக்ரடீஸ் : அவர்கள் சந்திக்கும்போது, அல்லது உலக அரங்கம் ஒன்று கூடும்பொழுது, அல்லது நீதி மன்றத்தில் அல்லது நாடகமன்றத்தில் அல்லது முகாமில் அல்லது மக்கள் சாதாரணமாகச் செல்லும் இடத்திலே நடக்கின்றது. பெருங்கூச்சல்களினிடையே அங்குப் பேசப்படும் அல்லது செய்யப்படும் சில செயல்கள் புகழப்படுகின்றன. ஏனையவைகள் இகழப்படுகின்றன. இரண்டையுமே பெரிதாக்கிப் பேசுகின்றனர், கத்துகின்றனர், கைதட்டுகின்றனர். அவர்களின் புகழ்ச்சியும், இகழ்ச்சியும் பாறைகளின் எதிரொலியினாலும் அவர்கள் கூடிய இடங்களினாலும் இரட்டிப்பாகின்றன. இந்நிலையில் அவர்களிடையே உள்ள வாலிபரின் இதயம் அவனுக்குள்ளேயே துள்ளுமல்லவா ? தனிப்பட்ட பயிற்சி அவனைப் பொதுமக்கள் கருத்தாகிய வெள்ளத்திற்கு எதிராக நிலைத்து நிற்கச் செய்யுமா ? அன்றி அந்த வெள்ளத்திலேயே அவனும் அடித்துக் கொண்டு செல்லப்படுவானா ? நன்மை தீமைபற்றி மக்கள் கொண்ட எண்ணங்களே அவனிடமும் காணப்படுமல்லவா ? சுய உணர்வை விடுத்து, அவர்கள் எண்ணுவதையே எண்ணி, அவர்கள் செய்வதையே செய்வானல்லவா ?

அதைமாந்தஸ்: சாக்ரடீஸ் அவர்களே! அவன் தேவையினால் அவ்வாறு கட்டாயப்படுத்தப்பட்டு விடுகிறான்.

சாக்ரடீஸ்: இருந்தபோதிலும் இதைவிட முக்கியமான தேவை ஒன்று உண்டு. அது இன்னும் கூறப்படவில்லை.

அதைமாந்தஸ்: அது என்ன?

சாக்ரடீஸ்: புதிய சோபிஸ்டுகளும் கல்வியாளர்களுமாகிய இம் மக்கள் தங்கள் சொற்கள் சக்தியை இழக்கும்போது, பறிமுதல் செய்வதையோ அன்றிக் கொலை செய்வதையோ பயன்படுத்துகிறார்கள் என்பது உனக்குத் தெரியும்.

அதைமாந்தஸ்: உண்மையில் அவர்கள் அப்படிச் செய்கிறார் கள் - அதைத் தீவிரமாகவே செய்கிறார்கள்.

சாக்ரடீஸ்: இத்தகைய நிகரற்ற இப்பூசலில் மற்ற சோபிஸ்டு களின் அல்லது தனிமனிதனின் அபிப்பிராயம் எப்படி வெல்லமுடியும்?

அதைமாந்தஸ்: ஒன்றும் முடியாது.

சாக்ரடீஸ்: உண்மையில் முடியாது. அங்ஙனம் முயற்சி செய்வதும்கூட முட்டாள்தனமாகும். பொதுமக்களின் மனப்பான்மையினின்று உருவாவதைத்தவிர வேறு நற் குணங்களை உருவாக்கக்கூடிய பயிற்சிகளேதும் அங்கு இல்லை, இருந்ததில்லை, இருக்கவும் முடியாது. நற்குணங்க ளென்னும்போது மனித நற்குணத்தைப்பற்றியே நான் இங்கே குறிப்பிடுகிறேன். பழமொழிகள் கூறுவது போன்று மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்டதை நான் சேர்க்கவில்லை. ஏனெனில் தற்காலத்தில் உள்ள தீமை மிக்க அரசாங்கங் களில் ஏதாவது காப்பாற்றப்பட்டு நன்கு பயன்படுமானால் அது கடவுளின் சக்தியாலேயே காப்பாற்றப்படுகிறது என்று நாம் சொல்லலாம். இது உனக்குப் புரியாததல்ல என நினைக் கிறேன்.

அதைமாந்தஸ்: தாங்கள் சொல்வதை நான் முழுதும் ஆமோதிக்கிறேன்.

சாக்ரடீஸ்: மற்றொரு குறிப்பையும் கூறி உனது அங்கீகாரத் தைப் பெறவிழைகிறேன்.

அதைமாந்தஸ்: என்ன சொல்லப்போகிறீர்கள்?

சாக்ரடீஸ்: சோபிஸ்டுகள் எனப்பட்டு, பலராலும் எதிர்க்கப் படும், பாடம் சொல்லிப் பிழைக்கும் கூலிக்காரர்களனைவரும்

உண்மையில் பலருடைய அபிப்பிராயத்தையே போதிக்கின்றனர். அதாவது அவர்களது குழுவின் கொள்கைகளையே போதிக்கின்றனர். அவர்களனைவரும் தங்களால் பராமரிக்கப்படும் வலிமை மிகுந்த விலங்கின் தன்மைகளை ஆராயும் மனிதனை ஒத்தவர்கள் என்றே கூறலாம். அவ்விலங்கினை எப்படி நெருங்கவேண்டும், எப்படி நடத்தவேண்டும் என்றெல்லாம் அவன் அறிய வேண்டும். எந்தச் சமயங்களில் எந்தக்காரணம் பற்றி அப்பிராணி தொல்லைதரும் அல்லது தொல்லைதராது என்றும், அதனுடைய பல்வேறு ஒலிகளுக்கும் பொருள் என்னவென்றும், எந்த ஒலியினுல் அது அமைதியடையும் என்றும் எதனுல் கோபமடையும் என்றும் அறிவான். தொடர்ந்து அப்பிராணியைப் பராமரிப்பதில்—அதைப்பொறுத்த மட்டில் முழு அறிவை அடைகிருன். தனது அறிவையே ஞானம் என்று கூறி, அதனை ஒரு தொகுப்பாகவோ அன்றி ஒரு கலையாகவோ மாற்றிக் கற்றுக் கொடுக்கத் தொடங்குவான். இப்படியிருந்தும் உண்மையில் அவன் குறிப்பிட்டுப் பேசும் கொள்கைகள், உணர்ச்சிகள் ஆகியவைபற்றி அவன் ஏதும் அறிவதில்லை. இது நியாயம் இது நியாயமல்ல, இது நேர்மையானது இது நேர்மையற்றது, இது நல்லது இது கெட்டது என்று மட்டும் பாகுபடுத்திக் கூறுவான். இவையனைத்தையும் அந்தப் பிராணியின் ருசி, குணம் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு கூறுவான். அந்தப் பிராணி எதைக்கண்டு மகிழ்கின்றதோ, அது நல்லது என்றும் அது வெறுப்பவைகளைக் கொடியது என்றும் கூறுவான். நீதியும் கௌரவமும் தேவை என்பதைத் தவிர வேறு ஒன்றும் அவனுல் கூற இயலாது. வேறுபாடு மிகுந்த இவற்றை அவன் பார்த்ததில்லை, அவற்றின் தன்மைகளை அவனுல் விவரிக்க முடிவதில்லை. மேலும் அவற்றின் வேறுபாடுகளையும் அவன் உணராததால் இந்நிலை ஏற்படுகின்றது. இப்படிப்பட்டவன் மிக விந்தையானதொரு கல்விமான் அல்லவா ?

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : சித்திரத்திலோ, இசையிலோ அன்றி அரசியலிலோ, பொதுமக்களின் மனநிலையையும் ஆசையையும் பகுத்துக் காண்பதே ஞானம் என்று கூறுபவன், நான் முன்பு கூறியவனினின்றும் எங்ஙனம் மாறுபடுகின்ருன் ? பலருடன்

தொடர்புகொண்டு அவசியமில்லாதபோதும் அவர்கள்பால் தனது கவிதையையோ அன்றி மற்றைக் கலைப்பொருளையோ அல்லது நாட்டிற்குத் தான் செய்த தொண்டையோ காண்பித்து அம்மக்களைத் தீர்ப்புக்கூறும்படிச் செய்தால், இதுவே டையோமீடின் தேவையென்பதுபோல் கட்டாயமாக அவனை அம்மக்கள் புகழும் காரியங்களையே தோற்றுவிக்கச் செய்கிறது. அப்பொழுது கௌரவத்துக்கும் நல்லவையென்பதற்கும் அவர்கள் எண்ணங்களை நிலைநாட்டக் காட்டும் காரணங்கள் நகைப்பிற்கிடமானவையாகவே உள்ளன. இதற்குப் புறம்பான எதையாவது அறிவாயா ?

அதைமாந்தஸ் : கேட்டதில்லை. இனியும் கேட்க நேரிடாது.

சாக்ரடீஸ் : நான் கூறியவற்றின் உண்மையை உணருகிறாய் அல்லவா. உலகில் தனிப்பட்ட அனேக அழகான பொருள்கள் உள்ளன என்பதைவிட அழகு என்ற தனியொரு தன்மை உண்டு என்பதை நம்பும்படித் தூண்டமுடியுமா என்று உன்னைக் கேட்க விழைகின்றேன் ; ஒவ்வொரு வகையையும் சேர்ந்த பல பொருள்கள் இருப்பினும் முதலும் முழுவதுமான தன்மை ஒன்று தனித்துக் காணப்படுகின்றது, அல்லவா ?

அதைமாந்தஸ் : இதை நம்பும்படிச் செய்தல் இயலாது.

சாக்ரடீஸ் : அப்பொழுது உலகம் தத்துவ ஞானியாக இருக்க முடியாதல்லவா ?

அதைமாந்தஸ் : இருக்கமுடியாது.

சாக்ரடீஸ் : ஆகவே, உலகத்தின் கண்டனங்கள் தத்துவ ஞானிகளைத் தாக்குதலைத் தவிர்க்க முடியாதல்லவா.

அதைமாந்தஸ் : ஆம், தவிர்க்க முடியாது.

சாக்ரடீஸ் : கூட்டத்தில் சேர்ந்து அங்குள்ளவர்களை மகிழ்விக்க விழையும் ஆட்களும் அப்படித்தானே ?

அதைமாந்தஸ் : ஆம் தெளிவாக.

சாக்ரடீஸ் : பிறகு இறுதிவரை தன்நிலையில் தத்துவஞானி நிலைத்திருக்கக்கூடிய ஒரு வழியை நீ காட்டமுடியுமா ? நாம் இதுகாறும் அந்த ஞானியைப்பற்றிக் கூறியதை நினைவுபடுத்திக்கொள். அவர் விரைவும், ஞாபகசத்தியும், வீரமும், விரிந்த உள்ளமும், உடையவராக இருக்க

வேண்டும் என்றோம்; இவையே அவரது சிறந்த நற்குணங்களாக நம்மால் ஒப்புக்கொள்ளப்பட்டன, அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: அத்தகையவரது உள்ளப்பண்புகளை யொத்து, உடலும் உறுதிபெற்றதனால் அவர் தம் இளமை முதலே எல்லாவற்றிலும் முதன்மையாக இருக்கமாட்டாரா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அவர்தம் நண்பர்களும், அவருடன் வாழும் நகரமக்களும் தம் காரியத்திற்காக வேண்டி அவரை அவரது வயது முதிரமுதிரப் பயன்படுத்திக் கொள்ளுவார்கள் அல்லவா?

அதைமாந்தஸ்: இதில் என்ன சந்தேகம்!

சாக்ரடீஸ்: மேலும் அவருடைய காலில் விழுந்து அவரை இறைஞ்சுவர், அவரை மரியாதையுடன் துதிப்பர், காரணம் அவர் பெறக்கூடிய சக்தி தம்மிடம் வரவேண்டும் என்ற எண்ணமே.

அதைமாந்தஸ்: அது அடிக்கடி நடைபெறுகின்றது.

சாக்ரடீஸ்: இப்படிப்பட்ட சூழ்நிலையில் தனவானும், கனவானும், வலிமையுள்ள வாலிபனும், ஒரு'பெரிய நகரில் நற்குடிமகனும் என்ன செய்யக்கூடும்? அவன் எல்லையற்ற விருப்பங்கள் நிரம்பியுள்ளவனாக இருக்கக்கூடுமல்லவா? நாடாளவும் காட்டுமிராண்டிகளின் மேல் ஆதிக்கம் செலுத்தவும் எண்ணக் கூடும். இப்படிப்பட்ட எண்ணங்களினால் பொருளற்ற ஆடம்பரம், வீண் பெருமைகளின் மூலம் தன்னை உயர்த்திக் கொள்ளுவான் அல்லவா?

அதைமாந்தஸ்: நிச்சயமாகச் செய்வான்.

சாக்ரடீஸ்: இப்படிப்பட்ட மனநிலையில் இருக்கும்போது யாரேனும் ஒருவர் அவனிடம் மெதுவாக வந்து அவன் ஒரு முட்டாள் என்றும், இன்னும் அறிவு பெறவேண்டும் என்றும், அது உழைப்பினால்தான் கிடைக்கும் என்றும் கூறினால் இப்படிப்பட்ட எதிரான சூழ்நிலையில் அவனை அதைக் கவனிக்கச் செய்ய முடியுமா?

அதைமாந்தஸ்: எதிர்மாறுதான் நடக்கும்.

சாக்ரடீஸ்: தன்பாலமைந்த நற்குணத்தாலும் இயற்கையான அறிவினாலும் ஒருவனது அறிவுக்கண்கள் சிறிது திறக்கப்பட்டு, அடக்கத்தன்மை பெற்று, தத்துவஞானத்திற்கு

அடிமையாகிவிடும் ஒருவன் இருப்பானாகில் அவனது நண்பர்கள் தமக்கு அவனால் கிடைக்கக்கூடிய லாபத்தை இழக்க நேரிடுமென எதிர்பார்த்தால் எப்படிப் பழகுவார்கள் தெரியுமா? உயர்ந்த மனஎழுச்சிகளுக்கு அவன் கீழ்ப்படி வதைத் தடுப்பதற்கும் அவனது ஆசிரியரை வலிவிழக்கச் செய்வதற்கும் எதையும் பேசவும் செய்யவும் மாட்டார்களா? இதன்பொருட்டுத் தனிப்பட்ட சூழ்ச்சிகளிலும், பகிரங்கக் குற்றச்சாட்டுக்களிலும் ஈடுபடமாட்டார்களா?

அதைமாந்தஸ் : இதில் ஐயமில்லை.

சாக்ரடீஸ் : இத்தகைய சூழலில் ஒருவன் எங்ஙனம் தத்துவ ஞானியாக ஆக முடியும்?

அதைமாந்தஸ் : நிச்சயமாக முடியாது.

சாக்ரடீஸ் : ஆகவே தத்துவஞானியாக ஆவதற்கு வேண்டிய அருங்குணங்கள் அத்தனையும் ஒருவனிடம் இருந்தாலும், அவன் நல்ல முறையில் கல்விபெறாவிடில் அவன் தத்துவ ஞானத்திற்கு மாறாகப் போய்விடுவான். செல்வமும், நன்மைகளெனப்படும் செல்வ வாழ்க்கையின் விளைவுகளும் கூட, தகாத கல்வி செய்வதைவிட அதிகக் கேடு செய்வ தில்லை சரிதானே?

அதைமாந்தஸ் : தாங்கள் கூறுவது முற்றிலும் சரியே.

சாக்ரடீஸ் : ஆருயிர் நண்பா, தொழில்களெல்லாவற்றிலும் சிறந்ததற்குத்தக்கதென நான் கூறிய பண்புகள் நாம் இது காறும் விவரித்தபடித் தோற்கடிக்கப்பட்டு அழிக்கப்பட ஏதுவாகின்றன. இப்பண்புகள் எப்போதும் மிகவும் அபூர்வ மானவைகள் என்பது நம் தீர்மானம். இவற்றினின்றுதான் நாட்டிற்கும் தனிப்பட்டவர்களுக்கும் தீமையை உண்டாக்கு பவர்கள் தோன்றுகின்றனர். ஆனால் நல்லவழியில் அவர் களைக்கொண்டு சென்றால் மிகவும் நல்லவற்றைச் செய்கிறார் கள். ஆனால் ஒரு சிறிய மனிதன் எந்த ஒரு பெரிய காரியத்தையும் தனிப்பட்ட மனிதருக்கோ நாடுகளுக்கோ என்றும் செய்ததில்லை.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே தத்துவ ஞானமாகிய அணங்கு, தன் திருமணச் சடங்கு முழுதும் நிறைவேறாமலேயே தனித்து விடப்பட்டுவிடுகிறாள். ஏனெனில் அவளுக்கு மிகவும்

வேண்டியவர்களே அவளைக் கைவிட்டு விட்டனர். பொய் யானதும் தகுதி அற்றதுமான வாழ்க்கையை அவர்கள் நடத்தும்போது, அவளைப் பாதுகாக்க உறவினர் வேறு ஒருவரும் இல்லை என்று கண்ட மற்றவர்கள் அவளை மரியாதைக் குறைவாக நடத்த முற்படுகின்றனர். அவள்மீது குற்றங்கள் சாட்டுகின்றனர். நீ சொல்வது போலவே தத்துவஞானம் பெற்ற சிலரை உதவாதவர்கள் என்றும் வேறு பலரைக் கடும் தண்டனை பெறத் தகுதியுள்ளவர் என்றும் கூறுகின்றனர்.

அதைமாந்தஸ்: உண்மையில் மக்கள் அப்படித்தான் கூறு கின்றனர்.

சாக்ரடீஸ்: ஆம், வேறு எதை நாம் எதிர்பார்க்கமுடியும்? நற் பெயரும் அலங்காரமான படங்களும் நிறைந்த இந்நாடு தங்களுக்குக் கிடைத்ததை அறிந்த வலிமையற்ற மக்கள், கைதிகள் சிறையினின்றும் தப்பி நல்ல வாழ்விடங்களுக்கு ஓடுவதுபோலவே, தங்களது தொழில்களைவிட்டுத் தத்துவ ஞானத்திற்குள் குதித்து விடுகின்றனர். வருந்துதற்குரிய தங்களது சொந்தத் தொழிலில் அவர்கள் கைதேர்ந்தவர்கள் அல்லவா? தத்துவஞானமாகிய அணங்கு இத்தகைய துயர மான நிலையில் இருந்தும்கூட, வேறு தொழில்களில் காணப் படாத ஒரு கண்ணியம் அவளிடம் உள்ளது. அவர்க ளிடத்தில் சீரிய இயற்கைப் பண்புகள் முழு அளவில் இல்லா விட்டாலும் அவர்களது ஆன்மா அங்கக் குறைவாய் இருந்தா லும், அவர்களுடைய தொழிலால் அவலட்சணமாகிய அவர் களின் உடலைப்போன்ற அவர்களது அற்பத்தனத்தாலேயே அவர்களின் ஆன்மா அவலட்சணமாகி இருந்தாலும் அவர் கள் தத்துவ ஞானம் என்ற அணங்கினால் கவரப்பட்டுள்ள வரே, இது தடுக்கமுடியாததா?

அதைமாந்தஸ்: ஆம், தடுக்க முடியாதது.

சாக்ரடீஸ்: ஒரு சிறிய தலைவழுக்கையான ஈயம் பூசுபவன் திடீ ரென்று பணக்காரனாகிறான். உடனே அவன் குளித்து நல்லாடை அணிந்து, தனது திக்கற்ற ஏழையான எசமான னுடைய மகளைத் திருமணம் புரிந்துகொள்ளப் புறப்படுகின்ற நிலைக்கு இவர்களையும் ஒப்பிடலாம் அல்லவா?

அதைமாந்தஸ்: ஆம் மிகவும் பொருத்தமான ஒப்புமை.

சாக்ரடீஸ்: இப்படிப்பட்ட திருமணத்தின் விளைவு என்ன வாகும்? இவற்றின் சந்ததிகள் அற்பமானவையும் ஒழுங் கற்றவையுமாக இருக்குமன்றோ?

அதைமாந்தஸ்: அதில் ஐயமில்லை.

சாக்ரடீஸ்: கல்விக்குத் தகுதி அற்றவர்கள், தங்களைவிட உயர்ந்த தத்துவஞானத்தை அணுகித் தொடர்புகொண்டால் எத்தகைய எண்ணங்களும் தீர்மானங்களும் தோன்றும்? அவை மெய்யான அறிவுக்குத் தொடர்பற்றவையாகவும் தகுதியற்றவையாகவும் இருக்கையில் காதுகளுக்கு இனிமை யான பிதற்றல்களேயாகு மன்றோ?

அதைமாந்தஸ்: அதில் சந்தேகமில்லை.

சாக்ரடீஸ்: அதைமாந்தஸ்! இன்னும் நன்ருகக் கேள், தத்துவ அறிவுக்குத் தகுதியுள்ள சீடர் மிகச் சிலரே. தப்பித்தவறி ஏதோ ஓர் உயர்ந்த, நல்ல படிப்பாளி நாடுகடத்தப்பட்டான் போலத் தத்துவ சேவை செய்வதற்கென்று நிலேத்து, எவ்விதத் தீய சூழலும் இன்றித் தத்துவ ஞானத்திலே ஈடு பாடுறுவான். அல்லது அந்நகரின் அரசியலேக் கவனியா மலோ அல்லது கண்டனம் செய்தோ, தீய சூழல் அமைந்த நகரில் பிறந்த ஓர் உயர்ந்த ஆன்மா அவ்வாறு இருக்கலாம். இறைவனருள் பெற்ற சிலர் தமக்குப் பிடிக்காத காரணத்தால் கலேகளைத்தள்ளி வைத்துவிட்டுத் தத்துவ அறிவை நாடி வரலாம். அன்றித் தற்செயலாக ஒருசிலர் அவர்கள் நண்பர் களின் தன்மையால் கட்டுண்டு தடுக்கப்பட்டு விடலாம், தியேகசின் கடிவாளத்தைப்போல. தியேகசின் வாழ்க்கை யின் ஒவ்வொரு காரியமும் அவரைத் தத்துவ ஞானத்தி லிருந்து வெகு தொலேவிற்குப் போகச் செய்தது. ஆனல் அவரது உடல்நலமின்மை அவரை அரசியலிலும் ஈடுபடாத படிச் செய்தது. என்னைப் பொறுத்தவரையில் என்னுள் ளிருந்து என்னை இயக்கும் தெய்வீகக் குரலேப் பற்றி, அதிகம் குறிப்பிடத் தேவையில்லே. ஏனெனில் அத்தகைய வழிகாட்டி இதுகாறும் எவருக்கும் கொடுக்கப் பெறவில்லே. இச்சிறு வகுப்பினர் தத்துவ அறிவு, எவ்வளவு இனிமையாக வும் அருள்பெற்றதாகவும் உள்ள உடைமை என்று சுவைத் திருக்கிருர்கள்! பெருங்கூட்டத்தின் பைத்தியக்காரத்தனத் தையும் இவர்கள் போதுமான அளவிற்கு நுகர்ந்து உள்ளனர். எந்த ஓர் அரசியல் வாதியும் நேர்மையானவன் அல்ல என்று

அவர்களுக்குத் தெரியும். நீதிக்குப் பரிந்து பேசிப் பக்கத்தில் நிற்கும் தம்மைக் காப்பாற்றக்கூடிய நீதிக்காவலன் எவனு மில்லை என்று அவர்கள் அறிவர். அப்படிப்பட்டவன் காட்டு விலங்குகளிடை அகப்பட்ட மனிதன் போலாகிருன். ஏனையோருடன் தீமை செய்ய அவன் ஒருப்படுவதில்லை. ஆனல் தனியே அவர்களது கொடூரத்தன்மை அத்தனையை யும் எதிர்த்து நிற்க அவனுல் இயலாது. எனவே நாட்டிற்கும் தன் நண்பர்களுக்கும் தன்னுல் பயனில்லை என்பதைக் கண்டு, தனக்கோ தன் நண்பர்களுக்கோ ஒரு நன்மையை யும் செய்ய இயலாத நிலையில், அவனுடைய வாழ்நாள் வீணுவதை உணர்ந்து அமைதியாகத் தன் வழியே செல் வான். வேகமாக வீசும் புழுதிக் காற்ருல் பாதிக்கப்பட்டவன் சுவரின் மறைவில் மறைந்து கொள்வதுபோன்று அவன் இருப்பான். மற்றவர்கள் தீமை நிறைந்தவர்களாக இருப் பதைக் கண்டு, தனது வாழ்க்கை தீமை, நேர்மையின்மை ஆகியவற்றிலிருந்து அகன்று சுத்தமாக இருப்பதில் மன நிறைவு கொண்டு அமைதியும் நல்ல எண்ணமும் நம்பிக்கை யும் கொண்டு வாழ்ந்து இறக்கவே விரும்புவான்.

அதைமாந்தஸ்: ஆம், அவன் இவ்வுலகை விட்டுப் புறப்படு முன்னரே பெரிய பணியைச் செய்தவனுகிருன்.

சாக்ரடீஸ்: ஆம், பெரிய பணி. ஆனல் தனக்குகந்த நாட்டை அவன் அடையாவிடில் அது மிகச் சிறந்த பணி அல்ல. தனக்குத் தக்கதொரு நாட்டில் அவன் பெருகி வளர்ந்து தன்னையும் நாட்டையும் காப்பாற்றும் போது மிகவும் சிறந்தவனுகிருன். இனி, தத்துவ ஞானத்தின் பெயர் ஏன் கெடுகின்றதென்பதற்குப்போதிய காரணங்களைக் காட்டி அதைச்சாரும் அவதூறுகள் நீதியற்றவை என்பதனை நன்கு விளக்கிவிட்டோம் என நினைக்கிறேன். நீ இதுபற்றி இன்னும் கூற விரும்புகிருயா?

அதைமாந்தஸ்: இல்லை, இனியும் சேர்ப்பதற்கொன்றுமில்லை. ஆனல் தற்கால அரசியல் அமைப்புக்களில் எது தாங்கள் கூறியதற்குப் பொருந்தும் என அறிய விரும்புகிறேன்.

சாக்ரடீஸ்: ஒன்றும் பொருந்தாது, அதுவேதான் முக்கியமாக நான் கூறும் குற்றச்சாட்டு. தத்துவ ஞானத்திற்கேற்ற அரசியலமைப்பு ஒன்றும் இப்பொழுது இல்லை. ஆகவே அது தகுதியற்ற மண்ணில் விதைத்த சிறப்புமிக்க விதை

யானது கூட, அம் மண்ணின் குணத்தினால் தன்மையிழந்து அழிவது போன்று உருமாறிவிடுகிறது. விபரீதத் தன்மை அடைகிறது. தத்துவ அறிவு அதன் உண்மை நிலையை இழந்து அதற்குப் புறம்பான பழக்கங்களில் சென்றுவிடு கிறது. முழுமை என்றே அழைக்கக்கூடிய தத்துவ ஞானம் அதற்குத் தகுந்த அரசியலமைப்பில் தனக் கொப்பான நிறைவைக் கண்டால் அப்போதே அதன் உண்மையான தெய்வீகத் தன்மை நன்கு புலப்படும். இஃதில்லாத வரையில் மனிதரோ அல்லது ஸ்தாபனங்களோ கீழ்த்தர இயல்புகளே உடையவையாம். அப்படியானால், நேர்மையான அரசிய லமைப்பு என்றால் என்ன பொருள் என்று நீ கேட்பாய் அல்லவா ?

அதைமாந்தஸ் : உங்கள் ஊகம் தவறு. என் வினா வேறு. நாம் சொல்வதெல்லாம் அந்த அரசியலமைப்பாவது நம்மால் காணப்பட்டு நிறுவப்படுவதா அல்லது வேறா ?

சாக்ரடீஸ் : அநேக வகைகளில் நமது அரசியலமைப்பேதான். ஆனால் நான் முன் சொன்னது நினைவிலிருக்க வேண்டும். சட்டங்களை உருவாக்கும்போது அரசியலமைப்பைப் பற்றி நீ கொள்ளும் கருத்துக்களை நினைவில்கொண்ட அதிகாரிகள் அதற்கு அவசியம்.

அதைமாந்தஸ் : ஆம், அப்படித்தான் நாம் சொன்னோம்.

சாக்ரடீஸ் : ஆனால் நாம் இன்னும் அதைத் திருப்திகரமாகக் குறிக்கவில்லை. உனது எதிர்ப்புக்கள் குறுக்கிட்டு எம்மைப் பயமுறுத்திவிட்டன. அவற்றின் பயனாக விவாதம் நீண்டும் கடினமானதாயும் இருக்கும் எனத் தெரிந்தது. இன்னும் தீரவேண்டியது எளிதானதல்ல !

அதைமாந்தஸ் : எஞ்சியுள்ளது எது ?

சாக்ரடீஸ் : அதாவது, தத்துவ ஞானத்தைப் பின்பற்றும் நாட்டை அது அழித்துவிடா வண்ணம் எப்படி ஏற்பாடு செய்வது என்பது. எல்லாப் பெரிய காரியங்களுமே கடின மானவைதான். மக்கள் கூறுவது போன்று நல்ல காரியங்கள் அனைத்தும் கஷ்டமானவைதான்.

அதைமாந்தஸ் : உண்மை. விவாதம் முழுதானதாக வேண்டி இதையும் நன்கு ஆராயவேண்டும்.

சாக்ரடீஸ் : செய்யவேண்டுமெனத்தான் எண்ணுகிறேன். எனக்

குத் தேவையான திறமை உள்ளதா என்று பார்க்க வேண்டும். நான் எவ்வளவு ஆர்வமுடன் இருக்கிறேன் என்பதை நீ உணர்வாய். தற்பொழுது உள்ள நிலைக்கு முற்றிலும் மாறுபட்ட முறையில் ஒருநாடு தத்துவ ஞானத்தைப் பின்பற்ற வேண்டும் என்று நான் உறுதியாகவும் தயக்கமில்லாமலும் சொல்கிறேனென்பதைக் கவனி.

அதைமாந்தஸ்: எந்த முறையில்?

சாக்ரடீஸ்: தற்பொழுது தத்துவ ஞான மாணுக்கர்கள் இளைஞர்களே. குழந்தைப் பருவம் தாண்டியவுடன் பொருள் ஈட்டல், குடும்பக் கவலைகள் இவை வரும் முன்னரே அவர்கள் தத்துவஞானம் போன்ற கல்வியில் ஈடுபடுகின்றனர். தத்துவ அறிவுக்குத் தக்க மனநிலை பெற்றவர்கள் எனப்புகழடைந்தோரும் அதன் சிரமங்களைச் சிறிது அறிந்தவுடன் அதை விட்டு விலகிவிடுகின்றனர். இச்சிரமங்களென்னவோ சொல் வன்மையளவிலானவையே. பிற்காலத்தில் தத்துவ அறிவு விவாதங்களைக் கேட்க அவர்களை அழைத்தால் போகலாம், ஏதோ சொற்பொழிவுகள் கேட்கலாம். அதை ஒரு பொழுது போக்காகவே அவர்கள் நினைக்கின்றனர். தத்துவ அறிவு பற்றி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்யலாம். அவர்களது தொழிலுக்குப் புறம்பானது எனத் தத்துவ அறிவு எண்ணப் படுவது அவர்கள் முழுமைப் பருவம் எய்தியவுடன் அவர்கள் தத்துவ அறிவும் *ஹெராக்ளைடஸின் சூரியனைப்போல மாறி மறைந்துவிடுகிறது. அவ்வொளி பின்னர்த் தூண்டப் படுவதே கிடையாது.

அதைமாந்தஸ்: அப்படியானல் அவர்களுக்குத் தகுந்த முறை எது?

சாக்ரடீஸ்: தற்பொழுது உள்ள வழிக்கு நேர் எதிரிடையானது. அதாவது இளமையில் அவர்தம் மனநிலைக்கேற்ற தத்துவ அறிவை அவர்கள் பயிலுதல் வேண்டும். இந்நிலையிலும் அவர்கள் வளரும் பருவத்திலும் தத்துவ அறிவுபெறத் தகுந்த கருவியாக்கும்படித் தமது உடலைப் பேணிக் கவனித்துக் கொள்ள வேண்டும். வயது முதிரமுதிர அவர்களுடைய மனமும் பக்குவமடையும். அப்பொழுது அவர்கள் ஆன்மாவிற்கான பயிற்சிகளில் ஈடுபடவேண்டும். இறுதியில்

---

* ஹெராக்ளைடஸ் சூரியனின் ஒளி ஒவ்வொரு மாலையிலும் அணைக்கப்பட்டு மறுபடியும் காலையில் தூண்டப்படுவதாகக் கூறியுள்ளார்.

அவர்கள் வலிமை குறையத் துவங்கி அவர்கள் இராணுவம், ஆட்சிப் பொறுப்பு இவற்றுக்குத் தகுதியற்றுவிடுவர். அப்போது தாமாகவே கடினமான உழைப்புக்களிலிருந்து விலகி சுகவாழ்விலே நின்று பின்வரக்கூடிய வாழ்வின் இன்பத்தால் இகவாழ்வை முகிழ்வித்துக்கொள்ள வேண்டும்.

அதைமாந்தஸ் : சாக்ரடீஸ், மிகவும் தீவிரமாகவே பேசுகின்றீர்கள். ஆனால் தங்கள் பேச்சைக் கேட்போரில் பெரும்பாலோர் உங்களை எதிர்ப்பதில் உங்களைவிடத் தீவிரமாக இருப்பர் என்றே நினைக்கிறேன். அதோடுகூட அவர்கள் யாவரும் முக்கியமாக, திராசிமாக்கஸ், இதில் தீர்மானம் பெறார்.

சாக்ரடீஸ் : தயவுசெய்து தற்பொழுது எனக்கும் திராசிமாக்கசுக்கும் ஒரு சண்டையைக் கிளப்பிவிடாதே. இப்பொழுதுதான் நாங்கள் நண்பர்களானோம். அப்படியென்றால் நாங்கள் எதிரிகளாக இருந்தோம் என்று பொருள் அல்ல! ஆனால் நான் அவரையும் மற்றவர்களையும் மனம் மாறச் செய்யும்வரை இதை விடுவதாக இல்லை. அல்லது எப்படியாவது வருங்காலத்தில் வேறொரு நிலையில் அவர்கள் விவாதத்திற்குக் கூடும்போது ஆதாயத்துடன் ஆராயக் கூடிய சிலவற்றையாவது உருவாக்கி வைக்கவேண்டும்.

அதைமாந்தஸ் : நீங்கள் சொல்லும் காலம் தொலைவிலன்றோ உள்ளது?

சாக்ரடீஸ் : காலம் என்பதன் முழு அளவுடன் அதை ஒப்பிட்டால் அவ்வளவு தொலைவுள்ளதாகத் தோன்றாது. பெரும்பான்மையோரை நாம் திருத்த முடியாவிடில் அதற்காக நாம் கலங்க வேண்டியதில்லை. நமது சொற்கள் உண்மையாவதை அவர்கள் கண்டார்களில்லை. நாம் பேசும் சொற்கள் போன்று இயல்பானதொரு ஒருமைப்பாடு பெற்றவையல்லாது, செயற்கையாக ஒன்று சேர்க்கப்பட்ட சொற்றொகுதிகள் கொண்ட பழக்கமான தத்துவ அறிவு ஒன்றையே அவர்கள் கண்டுள்ளனர். கொண்ட கொள்கைகளுக்காக வாழ்ந்து அவற்றைத் தம் மன மொழி மெய்களால் நிலை நிறுத்தித் தன்னைப் போன்றே ஒரு நல்ல அரசை நடத்தும் ஒரு மனிதனை அவர்களில் எவருமே என்றும் கண்டதேயில்லை. கண்டிருப்பர் என்று எண்ணுகிறாயா?

அதைமாந்தஸ் : நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : இப்பெரும்பாலோரில் எவரோ ஓரிருவர்கூட மேன்மையுள்ள சுதந்திரமான கருத்துக்களை அபூர்வமாகவே கேட்டிருக்கலாம். கேளாதவர்களே மிகுந்தவர்கள். சட்ட மன்றத்திலும் சரி, மக்கள் சமூகத்திலும் சரி, ஊக்கத்துடனும் தம் ஆற்றல் முழுவதையும் பயன்படுத்தியும் அறிவின் பொருட்டு என்றும் உண்மையையே நாடும் சிலரே அக்கருத்துக்களைக் கூறத் தக்கவர்கள். அபிப்பிராய பேதத்தையும் பூசலையுமே முடிவாகக்கொண்ட விவாதத் தந்திரங்களை இவர்கள் புறக்கணிப்பர்.

அதைமாந்தஸ் : இக்கருத்துக்களெல்லாம் பெரும்பாலோருக்குப் புதியவைதாம்.

சாக்ரடீஸ் : ஆகவே இத்தகைய காரணங்களை மனதில் கொண்டு பயத்துடனும் சற்று மனக்கவலையுடனும்கூட நாம் கூறவேண்டியுள்ளது : தற்பொழுது பயனற்றவர்கள், (ஆனால் சீர்கெடாதவர்கள்) என நாம் கருதும் இச்சிறு பான்மையோரான தத்துவ ஞானிகளை அவர்கள் விரும்பினும் விரும்பாவிடினும் எப்படியாவது அரசியலில் நுழைத்து, சமூகத்தையும் அவர்களுக்குக் கீழ்ப்படியும்படிச் செய்ய வேண்டும். அல்லது கடவுளாவது தற்கால அரசர்களையோ, அவர்களுடைய பிள்ளைகளையோ, அரச குமாரர்களையோ உண்மையான தத்துவ ஞானத்தில் ஆர்வம் கொள்ளும்படிச் செய்யவேண்டும். இவ்விரு நலன்களில் ஒன்றுவது இல்லாவிடில் அந்த நாடோ அன்றிச் சமூகமோ அல்லது தனிப்பட்டவரோ முழுமை எய்தியதாகக் கூறமுடியாது. இந்த இரண்டிலும் ஒன்றோ அல்லது இரண்டுமோ முடியாதது என நினைக்க எவ்விதக் காரணமுமில்லை. அப்படியிருந்தால் நாம் பகற்கனவு காண்கிறோம் என்று பிறர் ஏளனம் செய்வார்கள் அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆகவே கடந்த காலத்திலோ, அன்றி நிகழ் காலத்திலோ நமது உலகில் நமது நோக்குக்கு அப்பாற்பட்ட தொலைவில் உள்ள ஒரு நாட்டில் பூரணத்துவம் பெற்ற தத்துவ ஞானி ஒருவர் நாட்டுப் பொறுப்பைப் பெற்றோ, பெறும்படி உயர்ந்ததொரு சக்தியினால் விதிக்கப்பட்டோ இருப்பாராகில், அதுவே நமக்குகந்த அரசியலமைப்பு என்றும் தத்துவ அறிவின் தேவதையே அதன் அரசி

யென்றும், உயிருள்ளவரை அடித்துக் கூறுவோம். இதில் முடியாதது என ஒன்றுமில்லை. கடினம் ஓரளவு உளதென் பதை நாமே ஒப்புக்கொள்ளுகிறேம்.

அதைமாந்தஸ் : தாங்கள் சொல்வதை நானும் ஒத்துக்கொள்ளு கிறேன்.

சாக்ரடீஸ் : ஆனல் பெரும்பான்மையோர் அவ்வாறு எண்ணுவ தில்லை என்பாயா ?

அதைமாந்தஸ் : ஆம், எதிர்பார்க்க முடியாது.

சாக்ரடீஸ் : பொதுமக்களைக் குற்றம் சாட்டாதே. குறை கூருது மென்மையுடன் அவர்களைச் சமாதானப்படுத்தும் முறையில், அதிகக் கல்வி பெற்றேரிடம் அவர்களுக்குள்ள வெறுப்பை மாற்றும்வகையில், தத்துவ ஞானிகளின் உண்மையியல்புகளையும் தன்மைகளையும் உண்மை புலப் படும்படி நாம் பேசியபடி அவர்களுக்கு விளக்கிவிட்டால் அவர்கள் மனமாற்றம் பெறுவர். இப்புதிய ஒளியில் அவர் கள் தத்துவஞானியைக் கண்டால் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்வர். நம் எல்லோரையும் நேசிப்பவர் ஒருவரை எவன் எதிர்ப்பான்? இயல்பாகப் பொருமையகன்றவனும் மேன்மை யுள்ளவனும் பொருமையற்றவனைக் கண்டு பொருமை யடைவான ? உனக்காக நானே பதில் கூறலாம். மனித இனத்தில் பெரும்பான்மையோரிடம் இக்கொடுங் குணம் இருப்பதற்கில்லை. ஓரிருவரிடம் இருக்கக்கூடும்.

அதைமாந்தஸ் : உண்மை. தாங்கள் கூறுவதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : பொதுவாக, எங்கும் அழையாமலே ஓடி வருவோ ரும் பிறரைக் குறைகூறி நிந்திப்போரும் பொருள்களைப் பற்றிப் பேசுவதைவிடுத்து மக்களைப்பற்றிப் பேசிக் கொண் டிருப்போரும் ஆகியோரிடமிருந்து தத்துவ ஞானத்தின் மீது பலரால் காட்டப்படும் வெறுப்புத் தோன்றுகிறது என நான் நினைப்பதுபோல் நீயும் நினைக்கிருயல்லவா? தத்துவ ஞானிகளிடத்து இதைக் காட்டிலும் பொருத்த மற்றதைக் காண இயலாது.

அதைமாந்தஸ் : முற்றிலும் பொருந்தாதது தான்.

சாக்ரடீஸ் : ஏனெனில் உயர்ந்த உண்மையில் திளைக்கும் மனப்பான்மை வாய்ந்த உண்மையான தத்துவ ஞானிக்குச் சாதாரண மனிதர்களுடைய நடைமுறை வாழ்வில்

ஈடுபடவோ அன்றி அவர்தம் பொறுமையும் கெட்ட எண்ண மும் நிறைந்த சண்டைகளில் ஈடுபடவோ நேரம் இல்லை. ஆனால் கட்டுப்பாடும் ஒருநிலைப்பாடும் ஒழுங்கும் உள்ள நீதிமிக்க ஓர் உலகில் அவனுடைய எண்ணங்கள் எல்லாம் பொருந்தியிருக்கும். அந்நிலையிலே ஒன்றுக்கொன்று முரண் பாடுகொள்வதென்பது கிடையாது. எல்லாம் காரணத்தையே அடிப்படையாகக்கொண்டு நிகழும். இக்குண நலன்களையே அவன் பேணி நடப்பான். நற்குண நற்சிறப்பில் நன்கு ஈடுபட்டுள்ள ஒருவனை அதிலிருந்து பிரிக்க அல்லது அதி லிருந்து தடுக்க முடியுமா?

அதைமாந்தஸ்: முடியாது.

சாக்ரடீஸ்: தெய்வத்தன்மையில் ஈடுபட்ட தத்துவ ஞானி ஒரு மனிதனால் எவ்வளவுதூரம் அதில் ஈடுபடமுடியுமோ அவ்வளவு தூரம் ஈடுபட்டு ஒழுங்கும் தெய்வீகமும் பெறுகிறான். ஆனால் மற்றவர்கள் போலவே அவனும் கலைக்கும் சக்திகளால் துன்புறுகிறான்.

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: நான் கண்ட ஒன்றைத் தன்னிடமும் மற்றவர்களிட மும் நிலைப்படுத்தி, தன்னுடையதையும் அவர்களுடையதை யும் ஆனபழக்கங்களை உருவாக்கி, சமுதாயத்தையும் உரு வாக்கத் தத்துவஞானி கட்டாயப்படுத்தப்பட்டால் அவன் நீதியையும் கட்டுப்பாடு போன்ற நற்குணங்களையும் உரு வாக்கவேண்டிய திறமையற்றவனாகவா இருப்பான்?

அதைமாந்தஸ்: நிச்சயமாக இருக்கமாட்டான்.

சாக்ரடீஸ்: இன்னும் தத்துவ ஞானிகளைப்பற்றி நாம் சொல் லும் இயல்புகள் உண்மை என மக்கள் உணர்ந்துவிட்டார்க ளானால் பிறகும் தத்துவ அறிவின் மீது சினம் கொள் வார்களா? அன்றியும் தெய்வீக அமைப்பை விரும்பி ஏற்ற கலைஞனால் நாடு உருவாக்கப் பெறுவிட்டால் நாடு நலம் பெறாது என்று நாம் சொல்லும்போது நம்மீது நம்பிக்கை யற்றிருப்பார்களா?

அதைமாந்தஸ்: மக்கள் அதை உணர்ந்துவிட்டால் நம்மீது சினம்கொள்ளமாட்டார்கள். ஆனால் நீங்கள் கூறும் அமைப்பை எப்படி அவர்கள் ஏற்படுத்துவர்?

சாக்ரடீஸ்: அவர்கள் செய்யவேண்டிய சற்றுக்கடினமான செயல் யாதெனில் பழைய அரசியலையும் பழக்கங்களையும்

அறவே அகற்றிவிட்டுப் புதிதாகத் தொடக்கம் செய்ய வேண்டும். இது சற்றுக் கடினமானதே. கடினமாயினும் சரி; எளிமையாயினும் சரி. நம் தத்துவஞானிகளுக்கும், சட்டம் இயற்றும் ஏனையோர்களுக்கும், உள்ள வேறுபாடு இதுதான். தத்துவஞானிகள் ஒரு நல்ல அடித்தளத்தைப் பெறுத வரையில் அல்லது தாமே தயாரிக்காத வரையில் தனியொருவனைப் பற்றியோ அல்லது நாட்டைப் பற்றியோ எவ்வகைத் தொடர்பும் கொள்ளமாட்டார்கள். எத்தகைய சட்டமியற்றவும் தொடங்க மாட்டார்கள்.

அதைமாந்தஸ்: ஆம், அவன் செய்வது முற்றிலும் சரியே.

சாக்ரடீஸ்: இது செய்த பின்னர் அவன் எண்ணியுள்ள அரசியலைப்பற்றிய ஒரு வரையறையை ஏற்படுத்துவது அவனது முதற்காரியமாகும்.

அதைமாந்தஸ்: சந்தேகமில்லை.

சாக்ரடீஸ்: அவன் வேலையில் முன்னேறுகையில் தான் வைத்துள்ள மாதிரியையும், பாரபட்சமற்ற நீதி, அழகு, கட்டுப்பாடு போன்ற தூயவாழ்வின் குணங்களையும் அடிக்கடிக் கவனித்து, மறுபடியும் தான் உருவாக்குகின்ற மனிதத்தன்மையுடன் பொருத்தி, அதற்கு மனிதப் பண்பை அளிக்க வல்ல மாறுதல்களைச் செய்து, ஹோமர் சொன்னதுபோல - கடவுள் தன்மையைப் போலவும் கடவுளாக அமைவதுமான குணங்களை மனித உருவில் படைப்பான்.

அதைமாந்தஸ்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: ஓர் அம்சம் நீக்கப்பெறும்; மற்றென்று அவர்களால் புகுத்தப்பெறும். மனிதர்களால் மேற்கொள்ளப் பெறுவதாகிய இந்த நீக்குதலும் புகுத்துதலும் இறைவன் மேற்கொள்ளும் நெறிகளோடு கூடியவரை பொருந்தச் செய்வதன் பொருட்டேயாகும்.

அதைமாந்தஸ்: ஆம், இதைவிட அழகானதொரு உருவம் அமைய முடியாது.

சாக்ரடீஸ்: ஆற்றலும் ஆத்திரமும் மிகக்கொண்டு நம்மைத் தாக்கியோரை, நாம் அரசியல் அமைப்பின் ஓவியனுடைய குணநலன்களைப் புகழ்ந்து எடுத்துக்காட்டி ஒருவகையாக நம் வழிக்குக் கொணரத்தொடங்கியுள்ளோம் போலும். இவ்வோவியனிடம் நாம் நாட்டை ஒப்படைக்க எண்ணிய

போதுதான் இவர்கள் வெகுவாகக் கோபப்பட்டனர். நாம் சொன்னதெல்லாம் கேட்டபின் சிறிதே அமைதியடைகின்றனரா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக அவர்களுக்கு உண்மையிலேயே உணர்ச்சியிருந்தால் அப்படித்தானே நடக்கும்.

சாக்ரடீஸ்: இன்னும் என்ன மறுப்புக்களை அவர்கள் எழுப்ப முடியும்? தத்துவ ஞானிகள் உண்மையையும் உண்மைப் பொருளையும் விரும்புபவர் என்பதை ஐயமுறுவார்களா?

அதைமாந்தஸ்: அது மிகவும் அர்த்தமற்றது.

சாக்ரடீஸ்: அன்றி நாம் சொல்லும் குணநலன்கள் மிக உயர்ந்த நிலையைச் சார்ந்தவை என்பதை மறுப்பார்களோ?

அதைமாந்தஸ்: இதுவும் முடியாது

சாக்ரடீஸ்: இத்தகைய குணநலன்கள், தக்க சூழ்நிலையில் முற்றிலும் உயர்ந்ததும் அறிவாற்றல் மிக்கதுமான பயனைக் கொடுக்கத் தகாதவை என்பரோ? அல்லது நாம் விலக்கித் தள்ளிவிட்ட இயல்புகளையே கேட்பரோ?

அதைமாந்தஸ்: நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ்: தத்துவ ஞானிகள் அதிகாரத்தின் முழுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டாலன்றித் தனி மனிதனுடையவும் சமுதாயத்தினுடையவும் கஷ்டங்கள் தீரா; தீயனவைகளிலிருந்து அவர்கள் விலகார்; என நாம் சொன்ன கொள்கைகளினால் இவர்கள் ஆத்திரமடைவரோ? நாம் கனவு காணும் இலட்சிய அரசியல், தத்துவஞானிகளாலன்றி ஏற்படாது என்ற நம் கூற்றைக் கேட்டுச் சினமடைவரோ?

அதைமாந்தஸ்: நாம் பேசியதெல்லாம் கேட்டபின் அவர்கள் ஆத்திரம் குறைந்திருக்குமெனவே எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ்: அவர்களது ஆத்திரம் குறைந்ததுமட்டுமல்ல, அவர்கள் மென்மையே பெற்றுவிட்டார்கள்; ஆனால் வெட்கத்தினால் தாம் திருந்திவிட்டதை ஒப்புக்கொண்டு நாம் சொல்வதை ஏற்கத் தயங்குகிறார்கள் எனலாமா?

அதைமாந்தஸ்: அப்படியே நம்பலாம்.

சாக்ரடீஸ்: சரி. அவர்களை இந்த அளவில் திருப்தி செய்துவிட்டோம் என வைத்துக் கொள்வோம். அரசனது அல்லது ஆட்சியாளர்களது பிள்ளைகள் சிலரும் இயல்பாகவே தத்துவ

அறிவைப் பெற்றிருக்கலாம், என்பதை அவர்களில் யாராவது மறுப்பார்கள் என்று நினைக்கிறாயா ?

அதைமாந்தஸ் : இல்லை, ஒருவரும் அப்படிச் சொல்லவும் மாட்டார்கள்.

சாக்ரடீஸ் : அப்படி உருவானவர்கள் இருப்பின் அவர்களையெல்லாம் அரசகுலத்தில் வந்தவர்களென்பதால் அடியோடு அழிக்கவேண்டுமென்பரோ ? தவறுகளினின்று தனித்து நிற்பது அவர்களிடையே கடினமிக்கது என நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆனால் தவற்றிலிருந்து தப்பியவன் ஒருவனும் அவர்களில் என்றும் இருக்கமுடியாது என்று யாராவது திட்டமாகக் கூறமுடியுமா ?

அதைமாந்தஸ் : எவராலும் முடியாது.

சாக்ரடீஸ் : ஒருவன் போதும் நமது காரியத்திற்கு. சமுதாயம் அவனுக்குக் கீழ்ப்படிந்தால், நடக்கக்கூடுமோ என நமது மக்கள் ஐயப்படும் இலட்சிய அரசியலையே அவன் உருவாக்குவான்.

அதைமாந்தஸ் : ஆம்; ஒருவனே போதும்.

சாக்ரடீஸ் : ஒரு சமயம் அவன்பால் அதிகாரம் இருந்து நாம் விவரித்த சட்டங்களையும் ஸ்தாபனங்களையும் அவன் ஏற்படுத்திவிட்டான் என்றால் அவனது கட்டளைகளை எல்லா மக்களும் ஏற்று நடத்த இணங்குவது நடக்கலாமல்லவா ?

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : நாம் எதை ஏற்றுக்கொள்கிறோமோ அதை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்பதில் அதிசயமோ நடக்கக் கூடாதென்பதோ இல்லை அல்லவா ?

அதைமாந்தஸ் : இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

சாக்ரடீஸ் : ஆகவே நமது கொள்கைகள் நடைமுறையில் ஏற்கப்பட்டால், அவை உலகிலேயே சிறந்ததனவாக இருக்கும் என்பதனையும் போதிய அளவு விளக்கிவிட்டோம்.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : முடிவு என்னவெனில், நமது ஆட்சிமுறை செயல்பட்டால் சிறந்ததாக இருக்கும். அதைச் செயலாற்றுவது கடினமாக இருப்பினும் முடியாததன்று அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், அதுவே நமது முடிவு.

சாக்ரடீஸ் : நல்லது. நமக்கு ஓரளவு சிரமத்தோடு அந்தப் பகுதி முடிவடைந்தது. நாம் இனி அடுத்து வருவதைக் கவனிப்போம். இனி நமது நாட்டின் காவலர்களை உருவாக்கு வதற்கான கல்வியையும் பயிற்சியையும் பற்றி விசாரிப்போம். அவர்கள் எவற்றைக் கற்கவேண்டும் ? எந்த வயதில் கற்க வேண்டும் ?

அதைமாந்தஸ் : கவனிக்க வேண்டியதுதான்.

சாக்ரடீஸ் : இலட்சிய அரசியல் பொருமைக் கண்களுடன் நோக்கப்படும், அது எளிதில் அடையமுடியாதது என்ற காரணங்களால் அதன்கண் உள்ள பொருள்களில் சிலவற்றை விவாதிக்க நான் விரும்பவில்லை. பெண்டிரைப் பேணுதல், மக்கட்பேறு, ஆட்சியாளரைப் பொறுக்கியெடுத்தல் இவற்றிலுள்ள சிரமங்களை விளக்க எண்ணவில்லை. ஆனால் என் சாமர்த்தியம் செயல்படவில்லை ; அவைகளைப் பற்றிப் பேசும்படியே நேர்ந்துவிட்டது. பெண்களையும் குழந்தைகளையும் பற்றிய பொருள் ஒருவாறு விளக்கப்பட்டுவிட்டது. ஆயின், ஆட்சியாளர்கள் பற்றிய பிரச்சினையை இன்னும் தொடக்கமுதல் ஆராயவேண்டும். அவர்கள் நம் நாட்டை நேசிக்கவேண்டும். வாழ்வின் இன்பதுன்பங்களாகிய சோதனைகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அவர்களுடைய நாட்டுப்பற்று கஷ்டத்தினாலோ அன்றிப் பயத்தினாலோ அன்றி இதர இன்னல்களாலோ மாறுபாடு அடையாதிருக்கவேண்டும். இத்தகைய சோதனையில் தோற்றுப் போனவர்களை நீக்கிவிட வேண்டும். இதில் நெருப்பில் புடம்போட்ட தங்கம்போல என்றும் தூயவராகத் தேறியவர்களையே ஆட்சியாளராக அமைக்க வேண்டும். அவர்கள் வாழ்நாளிலும் சரி இறந்தபின்னும் சரி அவர்களுக்குரிய கௌரவத்தையும் பெருமையையும் அளித்தல் வேண்டும் என நாம் முன்னர்ச் சொன்னது நினைவிருக்கும் என நினைக்கிறேன். இதைத்தான் நாம் முன்னர்ச் சொன்னோம். ஆனால் வேறு பிரச்சினைகள் தோன்றி அதனைத் திரையிட்டுவிட்டன. ஆகையால் இதனை முன்னரே ஆராயாது விட்டுவிட்டோம்.

அதைமாந்தஸ் : ஆம். நன்றாக நினைவிற்கு வருகிறது.

சாக்ரடீஸ் : இதுவரை தைரியத்துடன் கூறத்தயங்கிய கருத்தை இப்போது தைரியமாகச் சொல்கிறேன். நமது காவலர்கள்

சிறந்தோராக வேண்டின் தத்துவ ஞானிகளாகத்தான் இருக்கவேண்டும்.

அதைமாந்தஸ் : அப்படித்தான் அமையவேண்டும் என்பது திண்ணம்.

சாக்ரடீஸ் : அவ்வகைப் பட்டவர்கள் அனேகர் இருக்கமாட்டார்கள் அல்லவா ? நாம் இதுகாறும் சொன்ன குணநலன்கள் ஒருங்குசேர்வது அரிதுதான். ஆனல் சாதாரணமாகத் தனித்தனியேயும் சிற்சிலவாகவும்தான் அவை காணப்படுகின்றன.

அதைமாந்தஸ் : எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : நுண்ணறிவு, ஞாபகசக்தி, அகவுணர்வு, சாமர்த்தியம் போன்ற குணங்கள் சேர்ந்து வளர்வதை மாந்தரிடம் காண்பதில்லை. இவற்றையும் ஒருங்கே பெற்று உயர்ந்த பண்பும் தாராள மனமும் அமைந்தோர் இயற்கையாகவே நேர்மையாகவும் அமைதியாகவும் ஒருநிலையாகவும் வாழ்வில் நிற்பதில்லை. உணர்ச்சிகளால் உந்தப்பட்டு, திட்டமான கொள்கைகளையும் அவர்கள் கைவிட்டு விடுகின்றனர்.

அதைமாந்தஸ் : முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் . ஆனல் நாம் நன்கு நம்பக்கூடிய திடசித்த இயல்புடையவர்கள், வெஞ்சமரிலும் அஞ்சாத சித்தத்துடன் நிலைத்து நிற்கக்கூடியவர்கள், ஏதாவது புதிதாகக் கற்க வேண்டியபோதும் அசைந்து கொடுப்பதில்லை. எப்போதும் ஒரு மயங்கிய நிலையிலிருப்போராக, மூளைக்கு வேலைவரின் கொட்டாவி விட்டுத் தூங்கத் தொடங்கிவிடுவர்.

அதைமாந்தஸ் : அது முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : இருப்பினும் இந்த இருவகைக் குணங்களும் எவனிடத்தில் ஒருங்கே பொருந்தியுள்ளனவோ அவனுக்கே உயர்ந்த கல்வியை அளித்து ஆட்சியிலும் பங்குதர வேண்டும் என்று கூறினேம்.

அதைமாந்தஸ் : திட்டமாக.

சாக்ரடீஸ் : ஆக, நாம் விரும்பும் குணநலன்கள் பெற்றோரைக் காண்பது அரிதல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : அவர்களுடைய தன்மையை நாம் முன்னர்ச் சொன்னவகையான உழைப்பாலும் இன்பதுன்பங்களாலும்

சோதிப்பது தவிர மற்ருென்றும் உள்ளது. இதை நாம் இதுகாறும் கூறவில்லை. பல்வகை அறிவுகளிலும் அவர்கள் தேர்வதால் அவர்களது ஆன்மா உயர்ந்ததான அறிவியலை ஏற்க இணைகிறதா அல்லது ஏனைய அறிவியல்களில், பயிற்சிகளில் உறுதியிழப்பன போன்று, பின்வாங்குகிறதா என்றும் அறியவேண்டும்.

அதைமாந்தஸ் : சிறந்த சோதனை. ஆனுல் தாங்கள் குறிப்பிடும் உயர்ந்த அறிவியல் எது ?

சாக்ரடீஸ் : ஆன்மாவை மூன்று பிரிவுகளாக நாம் முன்னர்ப் பிரித்து, அதன்பிறகு நீதி, தன்னடக்கம், தைரியம், அறிவாற்றல் முதலியவற்றின் இயல்புகளை ஆராய்ந்தது உனக்கு நினைவிருக்கிறதா ?

அதைமாந்தஸ் : அது எனக்கு நினைவுக்கு வராவிட்டால் நான் மேலே பேசவே தகுதியற்றுப் போவேனன்ருே ?

சாக்ரடீஸ் : சரி, அப்படியானுல் அதற்கும் முன்னர் நாம் கவனித்த எச்சரிக்கை நினைவிலிருக்கிறதா ?

அதைமாந்தஸ் : எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : நம்முடைய முன்னைய விவாதங்களில், சிறந்த கல்வியறிவின் பூரண எழிலைப்பற்றித் தெளிவுபெறச் சுற்றுவழியில் செல்லவேண்டும் என நாம் சொன்ேனும். ஆனுல் முன்னர் நடந்த நமது விவாதத்திற்குத் தக்கதொரு பிரபலமான விளக்கமும் உண்டெனக் கண்டோம். இம்முறை குறைகளுடையது எனினும், நீ அதனை ஆமோதித்ததால் அவ்வழி தொடர்ந்தோம். உனக்குத் தெளிவு ஏற்பட்டதா இல்லையா என்பதை நீதான் கூறவேண்டும்.

அதைமாந்தஸ் : நல்ல முறையிலேயே விளக்கினீர்கள் என்பது என் எண்ணம். மற்றவர்களும் அப்படியே எண்ணினர்.

சாக்ரடீஸ் : இதுபோன்றவற்றில் முழு உண்மைக்குப் புறம்பான எந்த அளவும் சரியான அளவாக இருக்கமுடியாது. முழுமை பெருத எதையும் அளவாகக் கொள்ளலாகாது. மக்கள் சில சமயங்களில் அத்துடனே திருப்தியடைந்து மேலே செல்ல அவசியமில்லை என்று நினைக்கிருர்கள்.

அதைமாந்தஸ் : அவர்கள் சோம்பேறித்தனம் பெற்றிருப்பின் அது எதிர்பார்க்கக் கூடியதே !

சாக்ரடீஸ் : ஆட்சி சட்டம் ஆகியவற்றின் காவலர்களிடம் இருக்கக்கூடாத ஒன்றல்லவா இது. இதைவிடப் பெரிய குறை எது?

அதைமாந்தஸ் : நல்ல குறிப்பு.

சாக்ரடீஸ் : இனி அவன் தனது உடல்நலத்திற்காகச் செய்யும் பயிற்சிகளைப்போன்று உள நலத்திற்கும் உழைக்கவேண்டும். நாம் குறிப்பிட்ட நீள்வழியில் செல்லாவிடில் அவன் அடைய வேண்டிய 'மிக உயர்ந்த அறிவு நிலையை அடையவே முடியாது. இவ்வறிவுதான் அவனது நேர்மையான குறிக்கோள்.

அதைமாந்தஸ் : நீதியையும் அதுபோன்று வேறு உயர்குணங்களையும்விட மேலானது ஏதேனும் உண்டா?

சாக்ரடீஸ் : ஆம், இருக்கிறது. ஆனால் இந்த வெறுங் குண நலன்களைப்பற்றிய மேலெழுந்தவாரியான அறிவு பெறுவதுடன் நின்றுவிடக்கூடாது. அவற்றைப்பற்றிப் பூரண ஞானம் பெறவேண்டும். மிகச் சிறு விஷயங்களெல்லாம் அவற்றின் முழு அழகைத் தெளிவாகக் காணும் பொருட்டு நம்மால் மிகுந்த முயற்சியுடன் அலசி ஆராயப்படும்போது எள்ளளவும் பிழையின்றி அறியப்பட வேண்டிய உயர்ந்த பேருண்மைகளும் அவ்வாறே முழு முயற்சியோடு ஆராயப் பட வேண்டியவைகளே என்று எண்ணாமல் நாம் கவனக் குறைவாக விடுதல் அவக்கேடல்லவா?

அதைமாந்தஸ் : தங்கள் கருத்து மிகச் சீரிய கருத்துத்தான். ஆனால் தாங்கள் குறித்த மிக உயர்ந்த பொருள்களையும் அறிவையும் பற்றி நாங்கள் குறுக்குக் கேள்விகள் கேட்கத் தயங்குவோம் என நினைக்கிறீர்களா?

சாக்ரடீஸ் : இல்லையில்லை, உங்கள் கேள்விகளைத் தாராளமாகக் கேட்கலாம். என் விடையைப் பலமுறைகள் கேட்டிருந்தும் என்னை மீண்டும் கேட்பதன் காரணம் நான் சொன்னதைப் புரிந்து கொள்ளவில்லை அல்லது என்னைத் தொந்தரவு செய்யவேண்டும் என்ற எண்ணம் ஆகிய இரண்டில் ஒன்றாயிருக்கவேண்டும். இது இரண்டாவதாகக் குறித்தது தான் போலும். ஏனெனில் மிக உயர்ந்த அறிவு என்பது நல்ல தன்மையைப் பற்றிய அறிவு என்றும் அதிலிருந்தே நேர்மையான பொருள்கள் தோன்றி மதிப்பையும் பயனையும் பெறுகின்றன என்றும் பலமுறை குறிப்பிட்டுள்ளோம்.

நாம் மிகக் குறைவாகவே இதை அறிந்துள்ளோம் என்று பலமுறைகள் கூறியுள்ளேன். இதைப் பற்றித்தான் இப்போது கூறத்தொடங்கினேன் என்பது உங்களுக்குப் புரியாமல் இருக்கமுடியாது. இவ்வறிவை விடுத்து வேறு எவ்வறிவையும் செல்வங்களையும் பெறினும் பயன் கிடையாது. அதைப் பெருது மற்றவைகளைப் பெற்றுள்ளதால் ஏதேனும் பயன்தரும் என நீ நினைக்கிருயா? சிறப்பையும் அழகையும் அறியாவிடில் அறிவின் பல பகுதிகளையும் பெற்றிருப்பதால் ஏதேனும் பயன் உண்டா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ்: அனேக மக்கள் சுகமே நல்லது என நினைக்கிருர்கள். ஆனல் அறிவிற்சிறந்த மக்களோ அறிவுதான் உயர்ந்தது என்று சொல்கின்றனர் என்பதை நீ மேலும் அறிந்திருக்கிருயா?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: ஆனல் பின்னல் குறித்த கொள்கைகளையுடையவர்களால் எந்த அறிவை அவர்கள் அறிவு எனக் குறிக்கின்றனர் என்று விளக்கமுடியாது. ஆனல் கட்டாயப் படுத்திக் கேட்டால் நல்லதைப் பற்றிய அறிவையே குறிப்பதாக அவர்கள் சொல்ல நேரிடும்.

அதைமாந்தஸ்: அது மிகவும் பிதற்றலாகும்.

சாக்ரடீஸ்: பிதற்றலேதான். ஏனெனில் நாம் நல்லதைப் புரிந்து கொள்ளவில்லை என்று நம்மைக் குறைகூறத் தொடங்கி, நல்லதைப்பற்றித் தாம் தெரிந்து கொண்டுவிட்டதாகவே நம்மிடம் பேசுவர். அவர்கள் நல்லதைப்பற்றிய அறிவு என்று குறிப்பிடும்போது நல்லது என்ருல் என்ன என்பதை நாம் நன்கு அறிவோம் என்பது பிதற்றலானதொரு எண்ணம்.

அதைமாந்தஸ்: முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ்: சரி, சுகமே நல்லது என்று சொல்கிருர்களே, அவர்களுடைய குழப்பம் சற்றுக் குறைவானதோ? இல்லவே இல்லை. சுகங்களிலும் சீர்கேடானவை உண்டு என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: ஆகவே நல்லதும் கெட்டதும் ஒன்றுதான் என்று அவர்கள் ஒத்துக்கொள்கிருர்களல்லவா?

அதைமாந்தஸ் ஆம்.

சாக்ரடீஸ். ஆகவே இந்த விஷயம் புதிர் நிறைந்ததாக உள்ளது என்பதில் ஐயமில்லையல்லவா?

அதைமாந்தஸ்: உண்மையில் அப்படித்தான்.

சாக்ரடீஸ்: மேலும் பலரும் நீதியையும் நேர்மையையும் பற்றிய உண்மை நிலையைவிடத் தோற்றத்தையே அதிகமாக விரும்புகின்றனர் என்பது உண்மைதானே? இயல்பாகவே அவை அவர்களிடம் இல்லாவிடினும் இருப்பதுபோலக் காட்டிக் கொள்வதில் மகிழ்கின்றனர் அல்லவா? ஆனல் நல்லதாகத் தோன்றுவதைவிட உண்மையிலேயே நல்லதாக உள்ளதைத் தான் ஒருவன் கண்டு திருப்தியடைகிருன். நல்லது என்பதில் வெறும் தோற்றத்தினுல் மட்டும் பயனில்லை அல்லவா?

அதைமாந்தஸ்: முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ்: ஆகவே எல்லா முயற்சிகளின் முடிவும் நன்மையே. அதன்மேல்தான் எல்லோர் மனமும் பதிகின்றன. அந்த நிலையையே யாவரும் விரும்பி அவாவுகின்றனர், ஆனல் அது எப்படியிருக்கும் என்று அறிய இயலாததாலும், அது கிட்டும் என்ற உறுதி மற்றவற்றைப்போல் அதில் இல்லாததாலும் ஓரளவான உயர்வையும் இழக்கும் நிலைகூட இதனுல் ஏற்படுகின்றது. ஆகவே, நாம் எல்லாவற்றையும் ஒப்படைக்கப் போகின்ற நமது நல்ல குடிமக்களை இத்தகைய ஒரு முக்கிய விஷயத்தைப் பற்றி இருளில் இருக்கும்படி நாம் விடக்கூடுமோ?

அதைமாந்தஸ்: எப்படி விடமுடியும்?

சாக்ரடீஸ்: எப்படியிருப்பினும் அழகும் நேர்மையும் கொண்ட எப்பொருளும் நல்லதாகவே இருக்கும் என்பதை உணராத ஒரு மனிதன் பயனுள்ள ஆட்சியாளனுக இருக்கமுடியாது, நல்லதை அறியமாட்டாதவன் நல்ல பொருள்களைப்பற்றிய உண்மை அறிவைப் பெறமுடியாது என எண்ணுவேன்.

அதைமாந்தஸ்: தாங்கள் நினைப்பது உண்மைதான்.

சாக்ரடீஸ்: இத்தகைய அறிவுபெற்ற ஆட்சியாளன் நமக்குக் கிடைத்தால்தான் அரசு நிறைவுபெற்றதாக முடியும்.

அதைமாந்தஸ்: ஆம் அப்படித்தான். ஆனல் தாங்கள் நினைப்

பது என்ன? நல்லது என்பதன் தத்துவம் அறிவா? அன்றிச் சுகமா? அல்லது வேறு ஏதாவதொன்ரு?

சாக்ரடீஸ்: அப்படிக் கேள். பிறருடைய கருத்துக்களில் எளிதில் திருப்தியடையாத சிந்தனைத்திறன் உடையவன் நீ என்ற உண்மை வெகு நாளாகத் தெரியுமே!

அதைமாந்தஸ்: அதிருக்கட்டும். சாக்ரடீஸ் அவர்களே! உம்மைப்போல் வாழ்நாள் முழுவதும் தத்துவ அறிவிற் கழித்தவர்கள் தம் கருத்தைக் கூருது பிறர் கருத்துக்களைப் பற்றியே பேசிக் கொண்டிருத்தல் கூடாது.

சாக்ரடீஸ்: ஆம் தெரியாததொன்றைத் தெரிந்ததுபோலத் தீர்மானமாகப் பேசுவதற்கு எவருக்காவது உரிமையுண்டா?

அதைமாந்தஸ்: அவனுக்குத் தெரிந்ததுபோலத் தீர்மானமாகப் பேச உரிமை கிடையாதுதான். ஆனல் அவனைப் பொறுத்தவரையில் தான் எண்ணுவதைக் 'கருத்து' என்று தெரிவிக்கலாமல்லவா?

சாக்ரடீஸ்: நல்லது. அறிவு இல்லாத கருத்து பயனற்றது என்பது உனக்குத் தெரியாததா? அவற்றில் சிறந்தவையும் கூட குருட்டுத்தனமானவைகளே. அறிவின்றிச் சரியான எண்ணம் மட்டும் பெற்றவர்கள், சாலையில் வழிதடவிச் செல்லக்கூடிய குருடர்களுக்கொப்பானவர்களே என்பதை மறுப்பாயா?

அதைமாந்தஸ்: மறுக்க முடியாது.

சாக்ரடீஸ்: ஆகவே பிறரிடமிருந்து தெளிவையும் அழகையும் பெறத்தக்க நிலையிலுள்ளபோது ஏன் குருட்டுத்தனமானதும் நேரில்லாததும் கீழ்த்தரமானதுமான ஒன்றைக் காணவிழைகிருய்?

கிளாக்கன்: (இவ்விடத்தில் இடைமறித்து) தயவு செய்து முடியும் தறுவாயில் இதை விட்டுவிடாதீர்கள், சாக்ரடீஸ் அவர்களே! நீதியைப்பற்றியும் தன்னடக்கத்தைப் பற்றியும் மற்றும் இவைபோன்ற குணநலன்களைப் பற்றியும் தாங்கள் விவரித்தது போலவே நல்லதைப்பற்றியும் ஒரு விளக்கம் கொடுத்தீர்களாஞல் நாங்கள் மிகவும் திருப்தியடைவோம்.

சாக்ரடீஸ்: ஆம் நண்பா! அது எனக்குக்கூடத் திருப்தியைத்தான் தரும். ஆனல் அது எனக்கு அப்பாற்பட்டதாயிருக்கிறதே என்றுதான் அஞ்சுகிறேன். அதற்காக நான் பிடி

வாதமாக முயற்சித்தால் என்னையே நான் முட்டாளாக்கிக் கொள்ள நேரிடும். ஆகவே நல்லது என்றால் என்ன என்பதைப் பற்றிய வினாவை இப்பொழுது எழுப்பவேண்டாம். அதற்கான திருப்தியான விடை எனது திறமைக்கு அப்பாற்பட்டதாக எண்ணுகிறேன். ஆனால் நீங்கள் விரும்பினால் நல்ல தன்மையின் குழந்தையும் அதையொத்ததுமான ஒன்றை எண்ணி மகிழ்ச்சியோடு அதைப்பற்றிச் சொல்கிறேன். சரியென்பாயோ?

கிளாக்கன் : குழந்தையைப் பற்றிச் சொல்லுங்கள். அதன் பெற்றோரைப் பற்றிய உம் கடனைக் கணக்கில் கொள்ளுகிறோம்.

சாக்ரடீஸ் : குழந்தையை விடுத்துப் பெற்றோரின் கணக்கைக் கூறி உங்களைப் பெற்றுக் கொள்ளச் சொல்வதுதான் எனக்கும் திருப்தி. அது இயலவில்லை. ஆனால் இப்பொழுது நல்ல தன்மையினுடைய குழந்தையின் கணக்கை வட்டியாக நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். கவனமாக இருங்கள். உங்களை ஏமாற்றும் எண்ணம் எனக்கில்லையெனினும் தப்புக் கணக்கு நேராமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

கிளாக்கன் : எங்களால் முடிந்தவரை கவனமாக இருப்போம். மேலே சொல்லுங்கள்.

சாக்ரடீஸ் : இதற்குமுன் பல இடங்களில் பல விவாதங்களில் பல சமயங்களில் நான் சொன்னவற்றை உங்களுக்கு நினைவுறுத்தி உங்கள் ஒப்புதலை நான் முதலில் பெறவேண்டும்.

கிளாக்கன் : அது என்ன?

சாக்ரடீஸ் : அழகு பலவகை. நல்லது பலவகை. இவ்வாறே நாம் எடுத்து, விவரித்து இலக்கணம் கூறும் ஏனைய பொருள்களும் பலவகைப்பட்டவையே என்பது பழைய கொள்கை. அவைகளுக்கெல்லாம் பல என்ற அடைமொழி உபயோகப்படுத்தப்படுகிறது.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அழகியவற்றிலே முற்றிலும் அழகானது அல்லது அழகு என்பதற்கு இலக்கணமாவது ஒன்று உண்டு. நல்லவற்றிலே முற்றிலும் நல்லது ஒன்று உண்டு. இப்படியே மற்றவைகளுக்கும் சொல்லலாம். ஒவ்வொன்றிற்கும் நாம் சொன்னது போன்று ஒரு தனியான அமைப்பு—ஓர் சாராம்சம்—உண்மைத்தன்மை—உள்ளது அல்லவா.

கிளாக்கன் : ஆம் அப்படித்தான்.

சாக்ரடீஸ் : பொருள்கள் பலவும் காட்சிக்கு விஷயமாகின்றன ; அறிவுக்கு அல்ல. கருத்துக்களோ அறியப்படுகின்றன ; ஆனால் காட்சிக்கு விஷயமாவதில்லை.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : நாம் எந்தப் புலனால் பார்க்கின்றோம் ?

கிளாக்கன் : பார்வை என்ற புலனால்.

சாக்ரடீஸ் : நல்லது. கேட்டல் என்ற புலனால் கேட்கிறோம். மற்றைப் புலன்கள் இயங்குவதும் அவ்விதமே.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆனால் ஒன்று கவனித்தாயா ? புலன்களைப் படைத்து ஈந்த சிற்பியின் செயல்களிலே விலையுயர்ந்ததும், நுண்மை நிறைந்ததுமானது பார்க்கும் புலனேயன்றோ ?

கிளாக்கன் : இதை எண்ணிப் பார்த்ததில்லை நான்.

சாக்ரடீஸ் : சற்று யோசித்துப் பார். நம் காதுகட்கோ அல்லது குரலுக்கோ அவற்றின் வேலையைச் செய்வதில் வேறொரு புலனின் தேவை உண்டா ? அதாவது இந்த மூன்றும் பொருள் இல்லாவிடில் கேட்கவோ கேட்கப்பெறவோ முடியாது என்று உண்டோ ?

கிளாக்கன் : அப்படி ஏதொன்றும் கிடையாது.

சாக்ரடீஸ் : அந்த உண்மை புலன்களெல்லாவற்றிற்கும் இல்லாவிடினும் பெரும்பாலானவற்றுக்குப் பொருந்தும். அது போன்று மூன்றுவது பொருளை இன்றியமையாததாகக் கொண்டது எதுவும் இல்லை என்பாயோ ?

கிளாக்கன் : ஏதுமில்லை.

சாக்ரடீஸ் : பார்ப்பதோ, பார்க்கப்படுவதோ பார்வைப் புலன் தவிரப் பிறிதொன்றில்லாமல் நடக்காத செயல்கள் என்பதைக் கவனித்தாயா ?

கிளாக்கன் : எப்படி ?

சாக்ரடீஸ் : கண் பார்க்கும் சக்தி பெற்றது ; அதனை நீ பயன்படுத்த முயலுகிறாய் ; பார்க்கும் பொருள்கள் வண்ணங்கள் உடையவை. எல்லாம் இருந்தும் அப்பொருளோ அதன் வண்ணங்களோ கண்ணுக்குத் தெரியாமல் இருக்கலாம். காரணம் அங்கு அதற்கென்றே சிறப்பாகவுள்ள அந்த மூன்றுவது பொருள் இல்லை என்பதாகும்.

கிளாக்கன் : அந்தப் பொருள்தான் என்ன?

சாக்ரடீஸ் : அதுதான் நீ ஒளியென்று அழைக்கும் பொருள்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே மதிப்புமிக்கதொரு இணைக்கும் பொருளின் மூலம் பார்வையுணர்வும் பொருள்களின் தோற்றமும் இணைக்கப்படுகின்றன. இவ்விணைப்பு எல்லா இணைப்புக் களிலும் மேன்மையானதல்லவா ? ஒளியென்பது சாதாரண மான பொருள் அல்ல.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அப்படியானல் அதற்குரிய தெய்வம் எது? யாரு டைய ஒளி நம்மையெல்லாம் பார்க்கச் செய்கிறது? பார்க்கும் பொருள்களை எது தெரியும்படிச் செய்கிறது ?

கிளாக்கன் : நீங்கள் சூரியனைக் குறிப்பிடுகிறீர்கள் அல்லவா ? அதை மனித இனம் முழுதுமே ஒப்புக்கொள்ளும்.

சாக்ரடீஸ் : அப்படியாயின் சூரியனுக்கும் பார்வைக்கும் தொடர்பு உள்ளது, இத்தொடர்பைப் பின்வருமாறு விளக்க லாம்.

கிளாக்கன் : எப்படி?

சாக்ரடீஸ் : பார்வையென்ற புலன் கண்ணின்பாற்பட்டது, ஆயினும் கண்ணே பார்வையோ, சூரியன் ஆகமாட்டா.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : எல்லாப் புலன்களையும் விட, கண் பெரும்பாலும் சூரியனை ஒத்து இருக்கிறதல்லவா ?

கிளாக்கன் : பெரும்பாலும் அப்படித்தான்.

சாக்ரடீஸ் : ஆகவே கண்ணின் பார்வைச் சக்தியானது சூரிய னிடத்தினின்றும் தோன்றும் ஒரு விளைவேயாகும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : மேலும் சூரியனே பார்வையாக இல்லாவிடினும் அதுவே பார்வைக்குக் காரணமாயும் பார்வையினல் அறியத் தக்கதாயும் உள்ளது.

கிளாக்கன் : ஆம் அப்படித்தான்.

சாக்ரடீஸ் : இதைத்தான் நல்லதன் குழந்தை என்று நான் முன்னர்ச் சொன்னேன். நல்லது கண்கூடாகக் காணும் உலகில் தன்னைப்போன்ற விளைவுகளை ஏற்படுத்தும். இத்

தொடர்பு பார்வைக்கும் தோற்றப் பொருள்களுக்கும் உள்ள தொடர்பைப் போன்றது. அவ்வாறே, நல்லது என்பது அறிவுலகில் மனத்துக்கும் மனத்தால் அறியப்படும் பொருளுக்கும் இடையேயுள்ள தொடர்பாக இருக்கிறது.

கிளாக்கன் : இன்னும் சற்று அதை விளக்கமுடியுமா ?

சாக்ரடீஸ் : சூரிய ஒளி பொருள்களில் படாத நேரத்தில் அவற்றை நிலவொளியிலோ அல்லது நட்சத்திர ஒளியிலோ கண்டால் ஒளியற்று, தெளிவின்றி, பொருள்களே இல்லை என்பதுபோல் தோன்றும் அல்லவா ? கண்கள் பார்வை யிழந்தவை போன்று தோன்றுமல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆனால் அவற்றைச் சூரிய ஒளி வீசும்போது பார்த்தால் அவை தெளிவுடன் ஒளிபெற்று விளங்குகின்றன அல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இவ்வுண்மையை மனதில் பொருத்திப் பார்க்க வேண்டும். ஆன்மாவும் கண் போன்றதே. உண்மையாயும் நிலையாயும் உள்ள பொருள்கள் மீது பொருந்தும் போதே ஆன்மா அவைகளைக் கவனித்துப் புரிந்து, அறிவுச் சுடராக இயங்குகிறது, அழியக்கூடிய மாறும் உலகாகிய அந்தி ஒளிக்குத் திரும்பும்போது வெறும் எண்ணங்களே ஏற்படுகின்றன. ஆன்மா தடுமாறுகிறது. அதன் பார்வை மங்குகிறது. எண்ணங்கள் மாறுகின்றன. அது அறிவற்றது போன்றே இயங்குகிறது.

கிளாக்கன் : உண்மையே.

சாக்ரடீஸ் : ஆகவே அறியப்பெறும் பொருள்களுக்கு உண்மையையும் அறிபவனுக்கு அறிவின் சக்தியையும் கொடுப்பது நன்மை அல்லது நல்லெண்ணமே ஆகும். ஆகவே உண்மைக்கும் விஞ்ஞானத்திற்கும் அதுவே காரணம். விஞ்ஞானம் என்பது அறிவின் பொருளே அல்லவா? அறிவையும் உண்மையையும் போல அது அழகானதும் கூட. ஆனால் அறிவு உண்மை இவற்றைவிட அழகில் மேலானதென மதிப்பினும் அது சரியே. ஒளியையும் பார்வையையும் சூரியனுடன் ஒப்பிடுவது பொருத்தமானது. ஆனால் அவற்றைச் சூரியனாகவே நினைப்பது தவறு. அது

போலவே விஞ்ஞானத்தையும் உண்மையையும் நன்மையைப் போல நினைப்பது சரி. ஆனால் நன்மை என்றே கருதுதல் தவறாகும். நன்மை என்பது அவற்றைவிட மிக மேலான நிலை அளிக்கப்படவேண்டியது தோன்றும்.

கிளாக்கன் : அறிவியலுக்கும் உண்மைக்கும் அதுவே காரணமாயிருப்பதுடன் அழகான அவற்றிற்கு மேலாகவும் உள்ளது என்று கூறி அதை மிகவும் உயர்ந்ததாகச் செய்துவிட்டீர்களே. என்ன ஆச்சரியம்! ஆனால் அதைச் சுகம் என்று சொல்லமாட்டீர்கள் அல்லவா?

சாக்ரடீஸ் : உனது யோசனை மிகவும் விபரீதமாயுள்ளது. கடவுளே தவிர்க்கட்டும். சரி அந்தக் கற்பனையையே மேலும் வேறு நோக்கில் ஆராய்வோம்.

கிளாக்கன் : எப்படி?

சாக்ரடீஸ் : பார்க்கக் கூடிய பொருள்களெல்லாவற்றின் பார்வைக்கும் காரணமாயிருப்பதோடு மட்டுமல்லாமல் கதிரவன் அவைகளின் பிறப்புக்கும் காத்தலுக்கும் வளர்ச்சிக்கும் கூடக் காரணமாக இருக்கிறான் என்பதை ஒப்புவாயல்லவா? ஆனால் கதிரவனே பிறப்பு என்பாயோ? இல்லையே.

கிளாக்கன் : இல்லை.

சாக்ரடீஸ் : அவ்வாறே நன்மை என்பது தாமறிந்த எல்லா அறிவிற்கும் காரணமாயிருப்பதுடன் எப்பொருளும் நிலைத்தற்கும் அவற்றின் சாராம்சத்துக்கும் காரணமாயுள்ளது. இருந்தும் அதுவே சாராம்சம் எனலாகாது. மேலும் அதை விடச் சக்தியிலும் கௌரவத்திலும் மிகவும் உயர்ந்தது அல்லவா?

கிளாக்கன் : (ஏளனமாக) சொர்க்கத்தினின்று வந்த ஒளியின் உயர்வுபோலும்.

சாக்ரடீஸ் : மிகைப்படுத்தியதற்கு என்னைக் குறைகூறிப் பயன் இல்லை. என் எண்ணம் என்ன என்பதைத் தானே சொல்லச் சொன்னாய்?

கிளாக்கன் : நல்லது. தயவுசெய்து மேலே சொல்லுங்கள். கதிரவனின் ஒப்புமையைப்பற்றி எஞ்சியுள்ளதையாவது முடிக்கவேண்டும்.

சாக்ரடீஸ் : சொல்லவேண்டியது நிறைய உண்டு.

கிளாக்கன் : ஒன்றையும் விட்டுவிடாமல் மேலே சொல்லுங்கள்.

சாக்ரடீஸ் : பெரும்பகுதியை விட்டுவிட நேரிடலாம் என அஞ்சுகிறேன். ஆனல் என்னுலியன்ற அளவு கூற முயலுவேன்.

கிளாக்கன் : அப்படியே.

சாக்ரடீஸ் : நான் சொன்னபடி இருசக்திகளை எண்ணிப் பார்க்கவேண்டும். ஒன்று அறிவுலகினுக்கானது. மற்ருென்று காட்சியுலகினுக்கானது. உனது கற்பனையினைப் பயன்படுத்துவதாக நீ எண்ணுவதைத் தவிர்க்கவேண்டி அதை விண்ணுலகம் எனக் குறிப்பிடமாட்டேன். எப்படியிருந்தும் காணுவன, அறிவன என இருநிலைகள் உள்ளன என்பதை அறிந்து கொண்டாய் அல்லவா ?

கிளாக்கன் : ஆம் புரிந்துகொண்டேன்.

சாக்ரடீஸ் : சமமற்ற இருபாகங்களாகப் பிரிந்த ஓர் நேர்க்கோட்டை எடுத்துக்கொள். அவற்றைக் காணுமுலகிற்கு ஒப்பிடுவோம். அந்தப் பாகங்களையும் மீண்டும் இரண்டாக முன்கூறிய விகிதத்திலேயே பிரிப்போம். ஒன்று காட்சிக்குரியது; ஏனையது அறிவிற்குரியது. இச்சிறு பிரிவுகள் தெளிவையும் தெளிவின்மையையும் குறிக்கும். மேலும் காணுமுலகின் முதற்பகுதி உருவங்களைக் குறிக்கும். உருவம் என்ருல் முதலில் நிழலையும், இரண்டாம் நிலையில் நீரில் விழும் பிம்பம் அவ்வாறே நிலத்தில் அதன்பிறகு பளபளப்பான இடத்தில் தெரிவது போன்றன. இவற்றையும் பற்றிக் கூறுகிறேன். நான் சொல்வதெல்லாம் உனக்குப் புரியும் என்றே நினைக்கிறேன்.

கிளாக்கன் : நன்கு புரிகிறது.

சாக்ரடீஸ் : அதிலேயே இரண்டாவது பகுதியானது பிம்பங்களில் முதற்பொருளாக நம்மால் காணப்பெறும் மிருகம், இதர உற்பத்திப் பொருள்கள், படைப்புக்கள் போன்றவற்றைக் குறிக்கட்டும்.

கிளாக்கன் : மிகவும் நல்லது.

சாக்ரடீஸ் : இந்தப் பிரிவுகள் உண்மையின் அளவில் வேறுபடுகின்றன என்பதையும் பொருளுக்கும் நிழலுக்கும் உள்ள

தொடர்பே அறிவுக்கும் கொள்கைக்கும் உள்ளது என்பதையும் ஒப்புக்கொள்வாயா ?

கிளாக்கன் : நான் ஒத்துக்கொள்வேன்.

சாக்ரடீஸ் : இனி, அறியும் பகுதியை எப்படிப் பிரிப்பது என்பதைக் காண்போம்.

கிளாக்கன் : எத்தகைய பிரிப்பு ?

சாக்ரடீஸ் : இவ்வாறுதான். இரண்டு சிறு பிரிவுகள் இருக்கின்றன. சிறிய பகுதியில், முதற்பகுதியால் கொடுக்கப்பெறும் பிம்பங்களையே சுயபொருள்களாகக் கொண்டு ஆன்மா அவற்றைப் பயன்படுத்துகிறது. இதில் தோன்றும் ஆராய்ச்சி கொள்கையினடிப்படையானதே. முறையான கருத்தைக் குறித்து முன்னேறாமல் எதிர்ப்புறம் செல்லுகிறது. ஆனால் பெரிய உயர்வான பகுதியில் ஆன்மா கருதுகோள்களையெல்லாம் தாண்டி அவற்றினடிப்படைகளுக்கு மேலான கருத்துச் செம்மையை நோக்கிச் செல்கிறது. உருவங்களினடிப்படையிற் செல்வதை விடுத்து எண்ணங்களினின்று நேரடியாக ஆராய்ச்சியில் செல்லுகிறது.

கிளாக்கன் : என்றால் முழுதும் புரிந்துகொள்ள முடியவில்லையே.

சாக்ரடீஸ் : மீண்டும் சொல்கிறேன். முன்னுரையாகச் சில சொற்கள் கூறின் என் கருத்தை நன்கு புரிந்துகொள்ள உதவும் என நினைக்கிறேன். வடிவ கணிதம் போன்ற துறையில் பயிலும் மாணவர்கள் ஒற்றைப்படை, இரட்டைப்படை எண்களையும் மூவகைக் கோணங்களையும் இன்னும் அது போன்றவற்றையும் இருப்பதாக எண்ணிக்கொண்டு மேலே தங்கள் படிப்பைத் தொடருகின்றனர். அவர்கள் அவற்றைத் தெரிந்ததாகக் கொள்கின்றனர். அவற்றையே அடிப்படை உண்மைகளாகக் கொள்கின்றனர். அவற்றைத் தமக்கெனவோ பிறர்க்காகவோ விளக்குவதில்லை. ஏனெனில் அவற்றை விளக்கவேண்டிய அவசியமில்லை. அவற்றிலிருந்து தொடர்ந்து பலபடிகளாகத் தாங்கள் அடைய வேண்டிய முடிவுகளுக்குச் செல்கின்றனர்.

கிளாக்கன் : ஆம் அது புரிகின்றது.

சாக்ரடீஸ் : ஆராயும் பொருள்களைப்பற்றிய உண்மையை அறியாவிடினும் தெரியும் தோற்றங்களை அவர்கள் பயன்

படுத்தி ஆராய்கின்றனர். ஆனால் அவை அவர்கள் எண்ணும் பொருள்களுக்கு ஏற்ப அமைவன. விவாதிக்கையில் அவர்கள் தாம் வரைந்த சதுரத்தையோ அன்றி மூலைவிட்டத்தையோ பற்றி எண்ணுவதில்லை. ஆனால் அவை குறிக்கும் மூலப்பொருள்களையே சிந்திப்பர். அவர்கள் வரையும் படங்களும் நீரிலோ மற்றவற்றிலோ காணும் பிம்பங்களும் மாதிரி உருவங்களே. அவைகள் தமக்கென்று உண்மை மூலங்களைப் பெற்றிருக்கும். இந்த உண்மையான பொருள்கள் மனக்கண்களுக்குத்தான் புலப்படும். அவற்றின் உருவங்களைக் கண்கள் காண்கின்றன.

கிளாக்கன் : ஆம் முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : அத்தகைய நிலையைத்தான் நான் அறியும் தன்மையது என்று குறித்தேன். அதை ஆராய்கையில் நேராக முதல் உண்மைக்குச் செல்ல முடியாதாகையால் கற்பனை உருவங்களையும் அவற்றின் கொள்கைகளையும் அடிப்படையாகப் பயன்படுத்தியாக வேண்டியுள்ளது. அவைகள் பொருள்களை விளக்கும் கற்பனையுருவங்களாக அல்லது பிம்பங்களாக இறுதியில் காணப்போகும் தெளிவான உயர்ந்த மதிப்புள்ள பொருள்களுக்குச் சமமாக ஆனால் மிகக் கீழான நிலையில் காணப்படுகின்றன.

கிளாக்கன் : நீங்கள் வடிவ கணிதத்திலும் அதுபோன்ற அறிவியல் துறைகளிலும் நடப்பதைத்தானே குறிப்பிடுகிறீர்கள், நன்றாகப் புரிகிறது.

சாக்ரடீஸ் : இனி அறியும் பிரிவின் மற்றொரு பகுதியைப்பற்றி நாம் குறிப்பிடும்போது, தெளிவான விவாதத்தின் சக்தியினாலேயே சிந்தனையானது அடையக்கூடிய அறிவியலைப்பற்றி நான் உரைப்பதை உணர்வாய். அது கற்பனைகளை முதல் உண்மைகளாகக் கருதாது கற்பனைகளாகவே, தன்னிகரற்ற மூல உண்மையை அறிவதற்கு முதற்படிகளாகவே கருதுகின்றது. இப்படி முயலும்போது கொள்கைகள் அவற்றினடிப்படைகளுக்கெல்லாம் மிகவும் மேலே சென்று முழுதான மூல உண்மையறிவுக்குச் சென்றடையும். இதையும் அதையுமாகப் பல்வேறு எண்ணங்களையும் கருத்துக்களையும் பற்றிப் பின் கீழிறங்கிப் படிப்படியாக வேறு உணரக்கூடிய பொருள்கள் எதனுடனும் தொடர்பின்றி எண்ணங்களிலேயே முடிவு காண்கிறது.

கிளாக்கன் : நான் முழுதும் புரிந்துகொள்ள முடியாவிடினும் ஓரளவு புரிந்துகொண்டேன். நீங்கள் சொல்வது ஒரு மிகப் பெரிய வேலையாகத் தெரிகிறது. எண்ணத்தினாலேயே விவாதங்களின் துணைக்கொண்டு காணும் அறிவு நிலையை மிகவும் உயர்ந்ததாகக் காட்டத் தாங்கள் விரும்புகிறீர்கள். வெறும் கொள்கைகளினடிப்படையிலான அறிவுகளைவிட அது தெளிவானதாயும் மாறுபாடற்றதாயும் உள்ளது. பின் சொல்லப்பட்டவைகளும் அறிவியல்கள்தான், புலனறிவிற் சேர்ந்தவை அல்ல. ஆயினும், கொள்கைகளிலிருந்தே தொடங்குவதால் மூல உண்மைகளை அவை அடைவதில்லை. முழு முதலுண்மைகள் சேர்க்கப்பட்டால் உயர்ந்த தரப்பட்ட சிந்தனை என மதிப்பிடக் கூடுமாயினும் இவ்வறிவியல்களைப் பேணுவோர் உயர்ந்த சிந்தனையிலீடுபடுவதில்லை. வடிவ கணிதம் முதலிய விஞ்ஞானங்களைப் பயிலுவோரின் வழிகள் அறிவு முறைகளேயாயினும் உயர்ந்த சிந்தனை சக்தியின்பாற் பட்ட மெய்யறிவுக்குச் சமமாகா. இம்முறைகள் வெறும் எண்ணங்கட்கும் மெய்யறிவுக்கான சிந்தனைக்கும் இடை நிலையிலுள்ளவை. சரிதானே?

சாக்ரடீஸ் : நான் கூறியவற்றை நன்கு புரிந்துகொண்டு விட்டாயே. அந்த நான்கு பிரிவுகளுக்கும் சமமாக நான்கு மனநிலைகள் உள்ளன என்று கற்பனை செய்துகொள்ளலாம். மேல்பகுதி அறிவு அல்லது உயர்ந்த சிந்தனை. இரண்டாவது அறிமுறைகள். மூன்றாவது கொள்கை. நான்காவது நிழலுருவங்களினறிவு. இவற்றை ஓரளவுகோலாகப் பாகுபடுத்தி மேற்சொன்ன பொருள்களின் உண்மைக்கு ஏற்பத் தனித் தனி அளவில் தெளிவும் நிச்சயத்தன்மையும் உள்ளன என்றும் கற்பனை செய்துகொள்ளலாம்.

கிளாக்கன் : தாங்கள் சொல்லிய ஏற்பாடு நன்கு விளங்குகிறது. தாங்கள் கூறியவற்றை ஒத்துக்கொள்கிறேன்.

ஏழாம் புத்தகம்

சாக்ரடீஸ் : நமது அறிவு எந்த அளவுக்குத் தெளிவு பெற்றுள்ளது என்பதை ஒரு உதாரணத்தால் விளக்கலாம். ஒரே ஒரு வாயிலைக்கொண்ட இருண்ட பாதாள அறையில் வாழும் மனிதர்களை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்களுடைய அறையில் உள்ள அந்த வாயில் வழியே ஒளி உள்ளே சென்று கடைசி வரை பரவுகின்றது. அவர்கள் அங்கே தம் இளமை முதல் வாழ்கிறார்கள். அவர்கள் எங்கும் நகர முடியாதபடி அவர்களுடைய கால்களும் கழுத்தும் சங்கிலியால் கட்டப்பட்டுள்ளன. தமக்கு முன்னேயுள்ளதைக் காணமுடியுமே அன்றி அவர்களால் நகரவும் முடியாது; திரும்பிப் பார்க்கவும் முடியாது. அவர்களுக்கு மேலேயும் பின்புறத்திலும் சற்றுத் தொலைவில் நெருப்பு எரிகின்றது. நெருப்புக்கும் அவர்களுக்கும் இடையில் ஒரு உயர்ந்த பாதை செல்கிறது. பொம்மலாட்டக்காரர்கள் பொம்மையாட்டுவதற்குக் கட்டியுள்ள திரைபோன்ற ஒரு குட்டையான சுவர் அவ்வழியிலே எழுப்பப்பட்டுள்ளது.

கிளாக்கன் : சரி புரிகிறது.

சாக்ரடீஸ் : அந்தச் சுவரின் ஓரமாக விதவிதமான கலங்கள், மரத்தாலும் கற்களாலும் இன்னும் பலவற்றாலும் ஆன விலங்கு உருவங்கள், சிலைகள் இவற்றை எடுத்துச் செல்லும் மனிதர்களின் தோற்றம் அச்சுவரின் மேல் தெரிகின்றதைப் பார்க்கிறாயா? அவர்களிற் சிலர் பேசிக் கொண்டும் சிலர் அமைதியாகவும் இருக்கின்றனர்.

கிளாக்கன் : மிக விந்தையான உருவகம் காட்டுகின்றீர்கள். மிக விந்தையான கைதிகள்.

சாக்ரடீஸ் : நம்மைப் போலத்தான். நெருப்பின் ஒளி எதிரி லுள்ள குகைச் சுவரில் தோற்றுவிக்கும் தமது நிழலையும் பிறருடைய நிழலையுமே அவர்கள் காண்கின்றனர்.

கிளாக்கன் : ஆம் உண்மையே. நகரக்கூட முடியாதெனின் அவர்கள் நிழலைத்தவிர வேறு எதனைக் காணமுடியும் ?

சாக்ரடீஸ் : அவர்கள் நிழலைத் தவிர வேறு எதனையும் காண முடியாதல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள முடிந்தால் அவர்கள் தங்கள் முன்புள்ள நிழலை வைத்துக்கொண்டு பொருள்களுக்குப் பெயரிட முடியுமல்லவா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இன்னும், அந்தச் சிறையில் எதிர்ப்புறத்திலிருந்து எதிரொலி கேட்பதாகவும் வைத்துக்கொள்வோம். சுவருக் கப்பால் செல்லும் ஒருவனின் ஒலியைக்கேட்டு அவனுடைய நிழலைக்கண்டு அந்நிழல்தான் அவ்வொலியை எழுப்பியது என நினைத்துக்கொள்ளலாமல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவர்களுக்கு உண்மை என்பது நிழலுருவங்களே.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இந்தக் கைதிகளை விடுவித்து அவர்களது பிரமையை நீக்கினுல் என்ன ஆகும் என்று பார்ப்போம். முதலில் அவர்களில் யாரேனும் ஒருவனை அச்சிறையினின் றும் விடுவித்து, அவனை நேராக நிற்க வைத்து, சுற்றிப் பார்க்கச் சொல்லி, நடக்கச் செய்து, ஒளியைக் காணச் செய்தால் அவன் கடுமையாகத் துன்பப்படுவான். அந்த ஒளி அவனைத் துன்புறுத்தும். முன் நிலையில் நிழலில் கண்டவற்றின் உண்மையுருவை அவனுல் அறிய இயலாது. யாரேனும் அவனிடம் சென்று, அதற்குமுன் அவன் கண்டவையனைத்தும் வெறும் தோற்றமே என்றும் இப் போதே உண்மைப் பொருள்களைக் காணத்தொடங்கி அவன் நல்ல பார்வையைப் பெற்றுள்ளான் என்றும் சொன்னுல் அவன் பதில் என்னவாக இருக்கும் ? அவன் முன்தோன்றும்

பொருள்களைக் காட்டி அவற்றின் பெயர்களைச் சொல்லச் சொன்னால் அவன் திகைப்பான் அல்லவா? நேராகக் காட்டப்படும் அப்பொருள்களைவிட முன்னர் நிழலில் கண்டவைகளையே உண்மை என்று நினைப்பானல்லவா?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஒளியையே பார்க்கும்படிக் கட்டாயப்படுத்தப் பட்டால் அவனது கண்களில் வலி ஏற்பட்டு, அவன் கண்ணைத் திருப்பிக்கொள்வான் அல்லவா? உண்மையான பொருள்களைவிடத் தான் முன்னர்க் கண்டதே தெளிவானது என்று கருதி அவற்றையே நாடுவான் அல்லவா?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அவனைக் கட்டாயப்படுத்தி மிக உயர்ந்த செங்குத்தான பாதை வழியே சூரியனுக்கு எதிரில் கொண்டு போனால் அவனது கண்கள் துன்புற்று வருந்தக்கூடும். ஒளியை நெருங்கவே அவனது கண்கள் கூசும். நாம் உண்மை எனச் சொல்லும் எதையும் அவனால் பார்க்கமுடியாது.

கிளாக்கன் : உடனடியாக அவனால் பார்க்கமுடியாதுதான்.

சாக்ரடீஸ் : அவன் மேலுலக, பாதாள உலகிற்கு மேலான இவ்வுலகக் காட்சிகளுக்குத் தன்னைப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். முதலில் நிழலை அவன் நன்கு காணமுடியும். பிறகு தண்ணீரில் ஏற்படும் மனித அல்லது பிறபொருள்களின் நிழலை நன்கு கவனிக்கவேண்டும். பிறகு உண்மைப் பொருளைக் காண வேண்டும். அதற்குப் பிறகே சந்திரன் நட்சத்திரங்கள் ஆகியவற்றின் ஒளியைக் காண்பான். பகலில் சூரிய ஒளியைக் காண்பதைவிட இரவில் நட்சத்திர ஒளியை அவன் நன்கு காண்பான் அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : கடைசியாக அவன் சூரியனையே பார்க்க இயலும். நீரில் தோன்றும் சூரியனின் பிரதிபலிப்பை அல்ல, மேலும் சூரியனை அவனுக்குரிய இடத்தில் காண்பான். வேறு இடத்தில் அல்ல. அவனது தன்மையை உள்ளவாறு சிந்திக்கத் தொடங்குவான்.

கிளாக்கன் : ஐயமின்றி.

சாக்ரடீஸ் : பிறகு சூரியனே பருவங்களையும், ஆண்டுகளையும் அளிக்கிறான் என்றும், காணுமுலகின் காவலன் அவன்தான்

என்றும், தானும் தன் நண்பர்களும் கண்ட எல்லாப் பொருள்கட்கும் அவனே ஒருவகையில் காரணமென்றும் விவாதிப்பான் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக. முதலில் அவன் சூரியனைப் பார்த்த பிறகு அவனைப்பற்றிச் சிந்திப்பான்.

சாக்ரடீஸ் : தனது பழைய இருப்பிடத்தை நினைக்கும் பொழுதும், தனது பாதாளச்சிறை, சககைதிகள் பற்றி நினைக்கும்பொழுதும் தனது நிகழ்கால நிலைக்கு மகிழ்ந்து ஏனையோர் நிலைக்கு இரங்குவான் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : நிழலை அறிவதிலும் எந்த நிழல் முதலில் சென்றது? எது பிறகு சென்றது? எது சேர்ந்து சென்றது? என்று அறிவதிலும் யார் விரைவாகவும் நன்ருகவும் உள்ளார்களோ, யார் இவைகளைக்கொண்டு முடிவு காண்பதில் சிறந்தவர்களாக உள்ளார்களோ அவர்களுக்குக் கவுரவம் அளித்துப் பாராட்டும் வழக்கத்தில் அவர்கள் இருந்திருப்பார்களேயானல் இப்பொழுது அவன் அந்த கவுரவங்களையும் புகழையும் மதிப்பானு ? அல்லது அவ்விதம் கவுரவமடைந்தவர்களைக் கண்டு பொருமைப்படுவானு ? ஹோமர் சொன்னது போன்று "ஏழை முதலாளியிடம் ஏழை வேலைக்காரனுக இருப்பதே மேல்" என்று கருதுவதுடன் சிறைச்சாலை வாழ்வை நினையாது எதையும் பொறுத்துக்கொண்டு வாழ்வான் அல்லவா ?

கிளாக்கன் : ஆம். இதுபோன்று பரிதாபமான வாழ்வுடன் பொய்யான எண்ணங்களை வளர்ப்பதைவிட எதையும் ஏற்று அனுபவிக்க அவன் விரும்புவான் என்றே நான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : சூரிய ஒளியினின்றும் அவனை உடனே மீண்டும் அவனது பழைய நிலைக்கே அனுப்புவதாக வைத்துக்கொள்வோம். இப்பொழுது அவனது கண்களில் இருள் அடையும் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவன் கண்கள் வெளி ஒளிக்கு முற்றும் பழக்கப் படுவதற்கு வெகுகாலம் ஆகலாம். இப்படிப் பழக்கப்படாத நிலையில் அவனை வெளியே என்றும் செல்லாத மற்றைக் கைதி

களுடன் சேர்த்து நிழலையளப்பதில் ஒரு போட்டி நடத்தினல் அவன் பரிகசிப்புக்கிடமாக நடப்பான் அல்லவா? வெளிச் சென்ருன், கண்களையிழந்து திரும்பிவந்து சேர்ந்தான் என்று அவனை இகழ்ந்து மேலே செல்லாமல் இருத்தலே நன்று என்றும் மக்கள் கூறுவர் அன்ரே? வேறெவனை யாவது யாராயினும் வெளிச்சத்திற்குக்கொண்டு செல்வ ராயின் அவர்களிடம் சிக்கும்போது அவரைக் கொன்றே விடுவாரல்லவா?

கிளாக்கன் : அதிலென்ன சந்தேகம்.

சாக்ரடீஸ் : இந்த உருவகத்தை எண்ணி நாம் முன்னர் விவா தித்த பொருளைத் தொடர்வோம். நான் கூறிய சிறைச் சாலையே நம் காட்சி உலகம். அங்கே காணும் நெருப்பின் ஒளியே, சூரியன். நான் சொன்ன மேலுலகப் பயணமாவது அறிவுலகிற்கு ஆன்மா செல்வதே. இது சரியோ, தவரு கடவுளே அறிவார். நீ விரும்பியபடி என் எளிய நம்பிக்கை யைக் கூறிவிட்டேன். அது பொய்யோ மெய்யோ, எனது கருத்துப்படி அறிவுலகில் நல்ல எண்ணம் இறுதியிலேயே தோன்றுகிறது. முயற்சியின் பயனுலேயே வெளிவருகிறது. இன்னும் பார்க்கப்போனல் அழகானதும் சரியானதுமான எல்லாப் பொருள்கட்கும் அதுவே முதற் காரணமாகக் கொள்ளப்படுகிறது. ஒளியின் முதற் காரணமாகவும், காட்சி யுலகில் ஒளிக்குத் தலைவனுகவும், உண்மை சிந்தனை ஆகிய வற்றின் முதலாதாரமாகவும், அறிவுள்ளவற்றில் உண்மை யாகவும் அது விளங்குகின்றது. இந்தச் சக்தியின் மீதுதான் சொந்த வாழ்விலும் சரி பொது வாழ்விலும் சரி பகுத்தறி வுடன் செயலாற்றுபவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

கிளாக்கன் : என்னல் புரிந்துகொள்ள முடிந்தவரையில் தாங் கள் கூறுவதை நான் ஒத்துக் கொள்ளுகிறேன்.

சாக்ரடீஸ் : நமது உருவகம் நம்பக்கூடியதாயிருப்பின், இந்த மிக உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் சாதாரண மனித விவகாரங்களில் ஈடுபட விழைவதில்லை என்பதைக் கண்டு ஆச்சரியப்பட முடியுமா? அவர்களுடைய ஆன்மா எப் பொழுதும் மேலுலகில் வாழ்வதற்கே விரைகிறது. அது மிகவும் இயற்கையானதே.

கிளாக்கன் : முற்றிலும் இயற்கையே.

சாக்ரடீஸ் : நல்ல தெய்வீக நிலையினின்றும் மோசமான மனித

நிலைக்கு மாறி, வெறுக்கத்தக்க முறையில் ஒருவன் நடந்து கொண்டால் அதில் விந்தையுளதோ ? அவன் அங்கே விழித்துக்கொண்டு சூழ்ந்துள்ள இருளுக்குப் பழக்கப்படும் வரை நீதியின் உருவங்களையும் நிழலையும் பற்றி நீதிமன்றங்களிலோ அல்லது பிற இடங்களிலோ வாதாட வேண்டி வரும். மேலும் முழு நீதியையறியாதவர்களுடைய கொள்கைகளை எதிர்த்து நிற்க முயல வேண்டி நேரிடும்.

கிளாக்கன் : இதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லையே.

சாக்ரடீஸ் : கண்களின் தடுமாற்றத்திற்கு இரு காரணங்கள் உண்டு என்றும், ஒன்று ஒளியிலிருந்து வெளியே செல்லுதல், மற்றொன்று திடீரென்று ஒளியை நோக்கி வருதல் என்றும் பொது அறிவுள்ளவர் அறிவர். இது அகக்கண்ணுக்கும் பொருந்தும். இந்த நினைவுடன் கண் பார்வை மங்கியவனை மற்றவன் பார்க்கும்போது அவனுக்குச் சிரிப்பு வராது; அப்பொழுது அம்மனிதனின் அகக்கண் ஒளியை நோக்கி வருகிறதா என்பதைத்தான் முதலில் தெரிந்து கொள்ள எண்ணுவான். அவன் அல்லலுறக் காரணம், ஒன்று அவன் இருளுக்குப் பழக்கப்படாதவனுயிருக்கவேண்டும் அல்லது அவன் திடீரென்று இருளிலிருந்து ஒளியை நோக்கி வந்திருக்கவேண்டும்.தன் போன்ற நிலையில் இருப்போரைக் கண்டு அவன் மகிழ்ச்சியடைவான். ஏனையோரைக் கண்டு இரங்குவான். அல்லது கீழ்நிலையிலிருந்து மேனிலைக்கு வரும் ஆன்மாவைக்கண்டு அவன் ஏளனம் செய்ய நினைத்தால் மேனிலையிலிருந்து கீழ்நிலைக்குப் போகும் ஒருவனைக் கண்டு ஏனையோர் செய்யக்கூடிய ஏளனத்தைவிட அதற்கு அதிக நியாயம் இருக்கலாம்.

கிளாக்கன் : ஆம், அது நியாயமானதே.

சாக்ரடீஸ் : ஆனுல் நான் சொல்வது சரியானுல், குருடனுக்குக் கண் பார்வை அளிப்பதுபோல அறிவற்ற ஆன்மாவுக்கு அறிவுபுகட்ட முடியும் என்று சில கல்வி வல்லுநர்கள் கூறுவது தவறு ஆகும்.

கிளாக்கன் : அவர்கள் அப்படித்தான் சொல்கிருர்கள்.

சாக்ரடீஸ் : ஆனுல் நமது விவாதத்தின்படி அறியும் ஆற்றலும் திறமும் ஆன்மாவுக்கு இயற்கையிலேயே இருப்பதாகக் காண்கிறோம். நமது உவமையில் உடலில்லாமல் கண்மட்டும் எங்ஙனம் இருளிலிருந்து ஒளியை நோக்கித் திரும்ப

முடியாதோ, அதைப்போன்றே அறிவும் முழு ஆன்மாவின் துணைக்கொண்டே மாறும் பொருளுலகத்திலிருந்து நீங்கி நிலைத்த உண்மைப் பொருளுலகத்திற்குத் திரும்பும். அப்போதுதான் நிலையானவற்றின் பார்வையைப் பெற்றுப் பொறுக்கவும், அவற்றுள் ஒளிமிக்கவற்றையும் சிறந்தவற்றையும் அதாவது நல்ல தன்மையுடையவற்றைப் பகுத்தறியவும் வேண்டிய ஆற்றலைப் படிப்படியாக ஆன்மா பெறும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இந்த மாறுதலைச் சுலபமாகவும் விரைவாகவும் செய்ய ஏதாவது ஓர்முறை இருக்கவேண்டுமல்லவா? பார்வை என்பதை நாம் புதிதாகக் கொடுக்கவேண்டுவதில்லை. அது ஆங்கே உள்ளது. ஆயின் உண்மைக்கு எதிரான வழியில் தவறுகத் திரும்பி நிற்கிறது.

கிளாக்கன் : ஆம் ஓர் வழியைக் காணவேண்டியதவசியம்.

சாக்ரடீஸ் : ஆனல் ஆன்மாவின் பேறுகள் என அழைக்கப்படும் மற்ற அனைத்தும் உடல் இயல்புகளைப் போன்றே காணப்படுகின்றன. ஏனெனில் அவைகள் இயற்கையாகவே இல்லாவிடினும் பழக்கத்திஞலும் பயிற்சியிஞலும் அவைகளை ஏற்படுத்திக்கொள்ளலாம். அறிவின் திறமானது ஏனையவற்றைவிட எப்பொழுதும் உள்ள ஓர் தெய்வீகத்திறம் ஆகும். நாம் கூறிய அதன் மாறுதல்கள் பயனுள்ளனவாகவும் இலாபகரமாயும் உள்ளன. இல்லாவிடில் கேடு செய்வனவாகவும் பயனற்றனவாயும் மாறிவிடும். புத்திக் கூர்மையுள்ள அயோக்கியனுடைய கண்களிலிருந்து குறுகிய புத்தி ஒளி வீசுவதைப் பார்த்ததில்லையோ? அவன் எவ்வளவு ஆவலுடன் இருக்கிருன்! அவனுடைய கீழ்த்தரமான மனப்பான்மை தனது குறுகிய நோக்கத்தை நிறைவேற்ற எவ்வளவு தெளிவாக வழி காண்கிறது! அவன் குருடனல்லன். அவனது கூர்மையான கண்பார்வை தீய செயல்களுக்கே ஈர்க்கப்படுகிறது. அவனது தந்திர புத்திக்கேற்ப அவன் குறும்புக்காரஞகவே இருக்கிருன்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அவர்களுடைய இளமையிலேயே அத்தகைய தன்மைகள் திருத்தி வளர்க்கப்பெற்ருல் என்ன ஆகிவிடும்! ஆனல் அவர்களோ சாப்பிடுதல், குடித்தல் போன்ற உலக சுகத்தில் மிகவும் அழுந்தியுள்ளனர். அவை அவர்களது

பிறப்புமுதலே அவர்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. ஈயப் பளுவைப்போன்று அவை அவர்களைக் கீழே இழுத்து அவர் தம் ஆன்ம ஒளியைக் கீழ்நோக்கிச் செல்லும்படிச் செய்து விடுகிறது. இந்தத் தடையினின்றும் அவர்களை விடுவித்து மாற்றுப் பக்கத்தில் செலுத்தினுல் தீயவற்றில் காணும் அவர் களுடைய இந்தத் தீவிர திருஷ்டி முழுதும் உண்மையின் பால் திரும்பிவிடுமல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆம் இன்னென்றும் உண்டு. அது இதற்குமுன் நாம் கூறியதிலிருந்தே அனுமானிக்கலாம். கல்வியறிவற்ற வர்களும், உண்மையறியாதவர்களும், ஏன் கல்வியை முடிக் காது தொடர்ந்து பயில்வோர்களும்கூட, நாட்டின் அமைச் சர்களாக விளங்கமுடியாது. முதலில் குறிப்பிட்டவர்க்கு எல்லாக் காரியங்களிலும் இருக்கவேண்டிய—அது பொது வாழ்வாக இருப்பினும் சரி, சொந்த வாழ்வாக இருப்பினும் சரி—ஒரு குறிப்பிட்ட குறிக்கோள் இராது. ஆகவே அவர் அதற்குப் பயன்படமாட்டார். பின்னுல் சொல்லப் பட்டவரோ எனின், கட்டாயப்படுத்தப்பட்டால் அன்றி அவர் செயலாற்றமாட்டார். ஏனெனில் அவருடைய சிந்தனை கற்பனை முதலிய அனைத்தும் வேறு அமைதிபெற்றேரது உலகில் சஞ்சரித்துக்கொண்டிருக்குமல்லவா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இனி, நாட்டை அமைக்கும் நம்போன்றேர் வேலை யாதெனில் மிகச் சிறந்த இயல்புள்ளவர்களை நாம் முன்னர்ச் சொன்ன உயர்வு மிக்க அறிவு பெறும்படிச் செய்ய வேண்டும். அவர்கள் நல்ல தன்மையை அடையும்வரை மேலே சென்றுகொண்டேயிருக்கவேண்டும். அவர்கள் அந் நிலையை அடைந்து காணவேண்டியதைக் கண்டுவிட்டார் களேயானுல் இப்பொழுது அவர்கள் செய்வதைச் செய்வதற்கு அவர்களை நாம் அனுமதிக்கக்கூடாது.

கிளாக்கன் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : அதாவது அவர்கள் மேலுலகில் சிந்தையில் நின்று விடுகிருர்கள், என்கிறேன். இதை நாம் அனுமதிக்கலாகாது. அவர்களை மீண்டும் பாதாளக் கைதிகளிடையே கொண்டுவர வேண்டும். அவர்களை அங்குள்ள வேலைகளிலும் கவுரவங்

களிலும் ஈடுபடுத்தவேண்டும். அவைகள் பெறத்தக்க வையோ இல்லையோ அதைப்பற்றிக் கவலையில்லை.

கிளாக்கன் : இது நேர்மையற்ற செயல் அன்றோ? அவர்கள் நன்முறையில் வாழ இருக்கும்போது மோசமான வாழ்வையா நாம் அளிப்பது?

சாக்ரடீஸ் : நண்பா, மீண்டும் மறந்துவிட்டாயே! சட்ட மியற்றுபவனின் எண்ணம் சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட இனத்தைமட்டும் மற்றதைவிடச் சுகமாயிருக்குபடிச் செய் வது அல்லவே? அந்தச் சமுதாயம் முழுவதும் சுகமாயிருக்க வேண்டுமல்லவா? எல்லாக் குடிமக்களையும் தன் வயப் படுத்தித் தேவைகளை உணரச் செய்து ஒன்றாக வாழச்செய்ய வேண்டும். அவர்களை நாட்டுக்குகந்த நல்லவர்களாக ஆக்க வேண்டும். அதனால் ஒருவருக்கொருவர் நன்மையை விழை வர். இங்ஙனம் செய்வதில் அவர்கள் தாங்கள் மகிழ்வதுடன் நில்லாது நாட்டை ஒருமைப்படுத்துவதில் அவனது கருவி யாகவும் இருக்கவேண்டும்.

கிளாக்கன் : உண்மை, நான் இதனை மறந்துவிட்டேன்.

சாக்ரடீஸ் : கிளாக்கன்! இன்னும் கவனி, நமது தத்துவ ஞானிகளை மற்றவர்களைப்பற்றி ஈடுபாடும் கவனிப்பும் மேற் கொள்ளும்படிச் செய்வது அநீதியாகாது. மற்ற நாடுகளில் எல்லாம் தத்துவஞானிகள் அரசியலில் ஈடுபாடில்லாமல் தமது சொந்த நலனுக்காக வாழ்கிறார்கள். அரசாங்கம் அவர் களை நாடுவதில்லை, என்பதனை நாம் நமது தத்துவஞானி களிடம் சொல்லவேண்டும். இதுவே நியாயமானதும் கூட. காரணம்: தத்துவ ஞானிகள்தாமே பயின்றவர்களாதலால் அவர்கள் பெறாத ஓர் பண்பாட்டிற்கு அவர்கள் நன்றி செலுத்துதலை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால் இங்கோ அவர்கள் ஆட்சியாளர்களாகக் கொண்டுவரப்பட்டுள்ளார் கள். அவர்கள் தங்களை ஆள்வதற்கும் ஏனைய மக்களையாள் வதற்கும் தகுதியுள்ளவர்கள். மற்றவர்களைவிடச் செம்மை யாகவும் உயர்வாகவும் கல்வி அளிக்கப்பட்டுள்ளனர். இந்த இரு கடமைகளிலும் பங்குகொள்ள அவர்கள் பிறரைவிட முற்றிலும் தகுதியுடையவர்கள். ஆகவே அவர்களில் ஒவ் வொருவர் முறைவரும்போதும் அந்தப் பாதாள உலகிற்குச் சென்று இருளிலும் பார்ப்பதற்குப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். அந்தப் பழக்கம் கைவரப்பெறின் அந்த இருட்

டறையிலுள்ளோரைக் காட்டிலும் பதினுயிரம் மடங்கு அவர்கள் நன்ருகப் பார்க்கமுடியும். மேலும் பலவித உருவங்களேயும் அவை எதனே விளக்குகின்றன என்பதையும் புரிந்து கொள்ளலாம். ஏனெனில் அழகானவற்றையும் நல்லனவற்றையும் நேர்மையானவற்றையும் அவர்கள் உண்மையாகவே பார்த்திருக்கின்றனர். ஆகவே அவர்களுக்கும் உரிமையுள்ள நமது நாடு வீண்கனவாயிராது. ஓர் உண்மையானதாக மாறிவிடும். நிழலேப்பற்றி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டும் அதிகாரத்தையே பெரிதாக நினேத்துக் கொண்டு அதற்காகப் போராடிச் சிதறடிக்கப்பட்டு வருந்தும் மற்ற நாடுகளேப் போலன்றி அவர்கள் நிர்வாகம் ஓர் உணர்வுடன் செயல்படும். உண்மையாதெனில் எந்த நாட்டில் ஆட்சியாளர்கள் ஆளும் விருப்பின்றி ஆள்கிருர்களோ அந்த ஆட்சி நன்ருகவும் அமைதியாகவும் காணப்படும். எந்த நாட்டில் ஆட்சியாளர்கள் ஆளும் விருப்பத்தில் ஆர்வம் மிகுந்து உள்ளார்களோ அது மோசமாகவே காணப்படும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : தமது நேரத்தில் பெரும் பகுதியை ஒருவரோடொருவர் கலந்து உயரிய தெய்வீக ஒளியில் திகழ அனுமதிக்கப் பெற்ருல் நமது மாணவர்கள் இதைக்கேட்டதும் ஆட்சி நிர்வாகத்தில் தமது பங்கை ஏற்க மறுப்பார்களா ?

கிளாக்கன் : முற்றிலும் இல்லே. ஏனெனில் அவர்கள் நேர்மையானவர்கள். நாம் அளிக்கும் கட்டளேகளும் நேர்மையானவை. அவர்கள் தற்கால ஆட்சியாளர்களேப்போல் இருக்கமாட்டார்கள். ஒவ்வொருவரும் பதவியை ஏற்பது தவிர்க்கவொண்ணுத கடமை என்று கருதுவர் என்பதில் ஐயமில்லே.

சாக்ரடீஸ் : ஆம் நண்பா, அங்கேதான் விஷயம் இருக்கிறது. வாழ்க்கை முறையை உங்களது வருங்கால ஆட்சியாளர்களுக்கு நீங்கள் அமைக்கவேண்டும். அப்பொழுதுதான் நல்ல நிலேமையைக்கொண்ட நாட்டை ஏற்படுத்த முடியும். அதை அளிக்கும் அரசியலில்தான் உண்மையான செல்வந்தர்—வெள்ளியிலும் தங்கத்திலும் உள்ளவர் அல்ல, ஆனுல், அறமும் அறிவும் பொருந்தியவர்—ஆட்சி செய்வர். இவையே வாழ்வின் உண்மையான பேறுகளாம். அவ்வாறின்றி, ஏழை (பண்பு குறைந்தவர்கள்)களும் சுயநலத்தில் வேட்கை

கொண்டவர்களும், இதுவே நன்மையைக் கைப்பற்றும் தருணம் என்று கருதி, பொதுவிவகாரங்களில் நிர்வாகப் பொறுப்பை ஏற்ருல், அங்கே ஒருபொழுதும் ஒழுங்கு ஏற் படாது. பதவிக்காக அவர்கள் சண்டையிடுவர். இதன் மூலமாக விளையும் குடும்பப் பொதுப்பூசல்கள் நாளடைவில் ஆட்சியாளர்களாகிய அவர்களையே அழித்து, நாடு முழு வதையும் பாழாக்கிவிடும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அரசியல் பேராசையை அருவருக்கும் வாழ்வு முறையே உண்மையான தத்துவ அறிவின்பாற்பட்டதாகும். வேறு ஏதேனும் அவ்வாறுள்ளதோ ?

கிளாக்கன் : உண்மையில் ஏதும் இருக்கமுடியாது.

சாக்ரடீஸ் : ஆட்சியாளர்கள் ஆளுவதில் மோகங்கொண்டவர் களாயிருக்கக் கூடாது அல்லவா? ஏனெனில் இன்னும் பலர் அதுபோன்று மோகங்கொண்டவர்கள் இருக்கக்கூடும். அப்பொழுது அவர்களிடையே போர் நிகழக்கூடும்.

கிளாக்கன் : இதிலென்ன சந்தேகம்.

சாக்ரடீஸ் : இனி வேறு யாரை நாம் ஆட்சியாளர்களாயிருக்கும் படிக் கட்டாயப்படுத்தலாம்! உண்மையில் அவர் தாம் நாம் கண்ட நாட்டின் நிர்வாகத்தில் மிகச் சிறந்தவர்கள். அவர் களால்தான் நாடு நல்ல முறையில் இயங்கமுடியும். ஆனல் அதே சமயத்தில் அவர்கள் வேறு வகைகளிலும் சிறப்புடைய வர்கள். அரசியலைவிடச் சிறந்த வாழ்க்கை நலன்களைக் கொண்டவர்கள்கூட.

கிளாக்கன் : ஆம் அவர்களே உயர்ந்த மனிதர்கள் ; நான் அத் தகைய மனிதர்களைத்தான் பொறுக்கி எடுப்பேன்.

சாக்ரடீஸ் : இனி அவர்களை எப்படி உருவாக்கலாம், எனப் பார்ப்போம். கீழுலகிலிருந்து கடவுளை நோக்கி மேற் செல்வதுபோல அவர்களை இருளிலிருந்து எப்படி ஒளிக்குக் கொண்டுவர முடியும் எனப்பார்ப்போம்.

கிளாக்கன் : அதையே காணவேண்டும்.

சாக்ரடீஸ் : அந்த முறையானது ஒருபக்கம் வெள்ளையும் ஒரு பக்கம் கறுப்பும் கொண்ட கிளிஞ்சலைத் திருப்புவது போன்று எளிதல்ல. ஆனல் இரவைவிட, சற்றே மேலான பகலி லிருந்து உண்மையான நிலையான பகலுக்கு ஓர் ஆன்

மாவைக் கொணர்வது போன்றது. அதாவது கீழேயிருந்து மேலே செல்லுதல், அதுதானே நாம் கூறும் உண்மையான தத்துவஞானம் ?

கிளாக்கன் : முற்றிலும் சரி.

சாக்ரடீஸ் : அம் மாறுதலைச் செய்யக்கூடிய சக்தி வாய்ந்த அறிவு எது என்பதை நாம் ஆராயவேண்டுமல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆன்மாவை மாறும் நிலையினின்று நித்திய நிலைக்குக் கொணர எத்தகைய அறிவு தேவை ? மற்றொரு எண்ணம் இப்பொழுது எனக்குத் தோன்றுகிறது. நமது இளைஞர்கள் போர்வீரர்களாயிருக்க வேண்டுமென்பது உங்களுக்கு நினைவிருக்கிறதா ?

கிளாக்கன் : ஆம் அப்படித்தான் சொன்னோம்.

சாக்ரடீஸ் : ஆகவே நாம் காணும் அந்த அறிவு அவனுக்கு மற்றொரு இயல்புமுள்ளதாக அமையவேண்டும்.

கிளாக்கன் : என்ன இயல்பு ?

சாக்ரடீஸ் : போரில் பயன் படுத்தக்கூடியது.

கிளாக்கன் : ஆம் முடிந்தால்.

சாக்ரடீஸ் : நமது முந்தையக் கல்வித் திட்டத்தில் இரு பகுதிகள் உள்ளன. அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஒன்று உடல் வளர்ச்சிக்கும் அழிவுக்கும் தலைமையான உடல்பயிற்சி—அதனையே சமுதாய வளர்ச்சிக்கும் கேட்டிற்கும் தொடர்புள்ளதாகச் சொல்லலாமல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆனால் அந்த அறிவை நாம் இப்பொழுது காண எண்ணவில்லை.

கிளாக்கன் : சரி.

சாக்ரடீஸ் : நமது திட்டத்தில் ஓரளவு இடம் பெற்ற இசையைப் பற்றி என்ன சொல்லுகிறாய் ?

கிளாக்கன் : இசை என்பது தேகப் பயிற்சியைப் போன்றது தான் என்பது உங்களுக்கு நினைவிருக்கும். பழக்கத்தின் சலுகையால் காவலர்களைச் செம்மைப்படுத்துவது இசை. சுரங்களின் இனிய சேர்க்கையால் ஒற்றுமையையும்,

சீரினுடைய தன்மையால் சீரிய இயல்பையும் வளர்க்க வல்லது. ஆனால் அது அவர்களுக்கு வேண்டிய அறிவை அளிக்காது. பொய்யானவையோ மெய்யே ஆனவையோ ஆகிய இசையின் சொற்கள் இனிய கோவையும் சீரும் ஊடே கொண்டவை. ஆயினும் நீங்கள் இப்போது பேசிய உயர்ந்த நன்மைக்கும் சேரக்கூடியது ஒன்றும் அதில் இல்லை.

சாக்ரடீஸ் : மிகவும் சரியாக நினைவிலிருத்திக்கொண்டிருக்கிறாயே. உண்மையில் இசையில் நாம் காணுவதுபோன்ற அறிவு நிச்சயமாய் இல்லை. அதில் எத்தகைய அறிவு இருக்கிறது? என் இனிய கிளாக்கனே! ஆனால் நாம் விரும்பும் தன்மை வாய்ந்த அறிவு எங்கு உள்ளது? பயனுள்ள எல்லாக் கலைகளையும் பயனற்றவை என ஒதுக்கி விட்டோமே!

கிளாக்கன் : சந்தேகமில்லாமல் இசையையும் உடற்பயிற்சியையும் அகற்றிவிட்டு, கலைகளையெல்லாம் அகற்றிவிட்டால் பிறகு மீதி என்ன இருக்கிறது?

சாக்ரடீஸ் : நல்லது. சிறப்பான பொருள்களில் ஒன்றும் மீதி இல்லை. ஆகவே சாதாரணமாக ஆனால் பொதுவாகப் பயன்படும் சிலவற்றை நாம் இப்பொழுது எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிளாக்கன் : அது எதுவாக இருக்கக்கூடும்?

சாக்ரடீஸ் : அதுதான் எல்லாக் கலைகளும், விஞ்ஞானமும் அறிவியல்களும் பொதுவாகப் பயன்படுத்தும் ஒன்று. அதை ஒவ்வொருவனும் தமது அடிப்படைக் கல்வியாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

கிளாக்கன் : அது என்ன?

சாக்ரடீஸ் : ஆம். அதுதான், ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணும் பொருள் ஒரே வார்த்தையில் சொன்னால் எண்ணும், அளவையும். எல்லாக் கலைகளும் விஞ்ஞானமும் அவைகளைக் கட்டாயமாகப் பயன்படுத்துகின்றன அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : போர்க்கலையிலும் அது பயன்படுகிறதா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : துன்பியல் நாடகங்களில் எப்பொழுதாவது பல

மீடஸ் (Palamedes) தோன்றிஞல் அகமம்னனேப் (Agamemnon) பரிசிக்கத்தக்க உபயோகமற்ற தளபதி என நிரூபித்துவிடுகிருன். தான் எண்களேக் கண்டுபிடித்துக் கப்பல்களே எண்ணிக் கணக்கெடுத்தும், படைவீரர்களே எண்ணி அணிவகுத்தும் டிராய் நகரில் நிறுத்தியதைப் பற்றி அவன் கூறுவதைக் கவனித்திருக்கிருயா ? அதற்கு முன் எண்கள் இருந்ததில்லே யென்றுதானே ஏற்படுகிறது ? அகமெம்னனுக்குத் தன் கால்களே எண்ணக்கூடத் தகுதி யில்லே என்று கருதவேண்டும். எண்ணிக்கைகளேத்தான் அவன் அறிவானில்லேயே ! இது உண்மையெனில் அவன் எப்படிப்பட்ட தளபதியாக இருந்திருக்க முடியும் !

கிளாக்கன் : நீங்கள் சொல்வது சரியென்ருல் இது அதிசய மானது என்றே சொல்லவேண்டும்.

சாக்ரடீஸ் : ஒரு போர்வீரன் கணிதம் பயின்றிருக்கவேண்டும் என்பதை நாம் மறுக்க முடியுமா ?

கிளாக்கன் : நிச்சயமாக அவன் பயின்றிருக்கவேண்டும். இராணுவத்தின் மிகச்சிறிய நுட்பங்களே அறிவதற்குக்கூட, ஏன்—அவன் மனிதனுக இருக்கவேண்டுமெனில்—கணிதம் கட்டாயம் அறிந்திருக்க வேண்டுமென்றே நான் கூறுவேன்.

சாக்ரடீஸ் : இதனேப்பற்றிய கருத்தையே நீயும் கொண்டிருக் கிருயா என்பதை அறிய விரும்புகிறேன்.

கிளாக்கன் : உங்கள் கருத்து யாது ?

சாக்ரடீஸ் : நாம் நாடிச்செல்லும் இயல்புள்ள அறிவு வகை யாகவே அது இருக்குமென எனக்குத் தோன்றுகிறது. அது இயல்பாகவே சிந்தனேயைத்தூண்டும் தன்மையது. ஆனுல் அது சரியானபடிப் பயன்படுத்தப்பட்டதில்லே. ஏனெனில் அதன் உண்மையான பயன் சுலபமாக ஆன் மாவை நிலேயான தன்மையிடம் கொண்டு செல்லுதலே யாகும்.

கிளாக்கன் : தாங்கள் சொல்வதை இன்னும் சற்றுத் தெளிவாக்க முடியுமா ?

சாக்ரடீஸ் : நான் முயற்சி செய்கிறேன். எமது ஆராய்ச்சியில் நீயும் பங்குகொள்ளவேண்டும். எந்த அறிவு இந்தக் கவரும் சக்தியை உடையது என நான் என் மனப்படிப் பிரித்தறியும்போது நான் சொல்வது சரியா, தவரு என்று

சொல்லவேண்டும். அப்பொழுதுதான் கணிதமானது அவைகளில் ஒன்று என்பதை நாம் நன்கு நிரூபிக்க முடியும்.

கிளாக்கன் : சரி, விளக்குங்கள்.

சாக்ரடீஸ் : உணரும் பொருள்கள் இருவகைப்படும் என்று நான் சொல்கிறேன். அவற்றில் சில நமது எண்ணங்களை ஈர்ப்பதில்லை. ஏனெனில் உணர்வே அவற்றைத் தீர்மானித்து விடுகிறது. ஆனால் மற்றவைகளோ மேற்கொண்டு ஆழ்ந்த விசாரணையைத் தேவையாக்கும் அளவிற்கு நம்பமுடியாதனவாய் இருக்கின்றன.

கிளாக்கன் : உணர்வு தூரத்தினாலும் ஒளியினாலும் நிழலினாலும் மாறுபடுகின்றது என்பதைத்தானே நீங்கள் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : இல்லை, அதைப்பற்றி நான் குறிப்பிடவில்லை.

கிளாக்கன்: அப்படியானால் தாங்கள் கூறுவதன் பொருள்யாது?

சாக்ரடீஸ் : கவர்ச்சியற்ற பொருள்களைப்பற்றிப் பேசும்போது ஒரு உணர்ச்சியிலிருந்து அதற்கு எதிரான உணர்ச்சிக்கு மாறாதவற்றையே நான் குறிப்பிடுகிறேன். ஆனால் கவர்ச்சியுள்ள பொருள்கள் பற்றிய உணர்ச்சி மாறும் தன்மை வாய்ந்தது. பின் சொன்னதில் பொருளின்மீது உணர்வு ஏற்படுகிறது. அது அருகே இருப்பினும் தொலைவில் இருப்பினும் எவ்விதஉணர்ச்சியும் அதற்கு எதிரானவற்றை விடச் சிறப்பாக ஏற்படுவதில்லை. ஒரு உதாரணம் இதனை நன்கு விளக்கும். இதோ மூன்று விரல்கள் உள்ளன—ஒரு சுண்டு விரல், இரண்டாம் விரல், ஒரு நடுவிரல்.

கிளாக்கன் : நல்லது.

சாக்ரடீஸ் : அவற்றை மிக அருகில் காண்பதாக நீங்கள் நினைக்கலாம். இங்குதான் கவனிக்கவேண்டும்.

கிளாக்கன் : எதை ?

சாக்ரடீஸ் : ஒவ்வொன்றும் விரல் என்ற அளவில் சமமாகக் கருதப்படுகின்றது. அது நடுவில் இருப்பினும் சரி, ஓரத்தில் இருப்பினும் சரி, அது கறுப்பாக இருந்தாலும் சரி, வெளுப்பாக இருந்தாலும் சரி, அது மெல்லியதாக இருந்தாலும் சரி, அது பருத்து இருந்தாலும் சரி—அதனால் வேறுபாடுகள் இல்லை. ஒரு விரல் என்பது மற்றொரு விரலைப்

போன்றதாகும். இந்த சமயங்களில் மனதில் ஒரு விரல் என்பது என்ன என்பதைப்பற்றி எண்ணுவதற்குக் கட்டா யப்படுத்தப்படுவதில்லை. விரல் விரலைவிட வேறுபட்டது என்ற எண்ணம், விரலைக்காணும்போது நம் மனதில் ஏற் படுவதே இல்லை.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே நாம் எதிர்பார்க்கும் அளவுக்குப் புத்தி சாலித்தனத்தை ஈர்க்கக்கூடியது இங்கு ஒன்றும் இல்லை.

கிளாக்கன் : ஒன்றுமில்லை.

சாக்ரடீஸ் : ஆனல் இது விரலின் பெரிய தன்மைக்கோ அன்றிச் சிறிய தன்மைக்கோ பொருத்தமாகுமா? போதிய அளவு பார்வை அவற்றைக் கவனிக்குமா? சூழ்நிலையால் ஒரு விரல் நடுவினும் மற்றது இறுதியிலும் இருப்பதால் வேறு பாடு ஏதும் இல்லையா? அதைப்போன்றே, தொடும் உணர்ச்சியானது போதிய அளவு, பருமன், மெலிவு, மிரு துத் தன்மை, கடினத்தன்மை ஆகியவற்றை உணருமா? இது போன்றே ஏனைய புலன்களும் அந்தந்த விஷயங்களைப் பற்றிய சரியான தகவலைத் தெரிவிக்குமா? இதில் அவற்றின் இயங்கும் தன்மைதானே முக்கியம்? கடினத் தன்மையை உணரும் புலனே மிருதுத் தன்மையையும் உணரும். அந்தப் பொருளின் கடினத்தன்மையையும் மிருதுத் தன்மையையும் ஒருங்கே ஆன்மாவுக்கு அது உணர்த்தும் அல்லவா?

கிளாக்கன் : தாங்கள் சொல்வது சரி.

சாக்ரடீஸ் : ஒரு பொருளே கடினமாயும் மிருதுவாயும் உள்ளது என்று ஒரு புலன் தெரிவிப்பது கண்டு மனம் கலங்காதா? சரி, இலேசானது கனமானது இவற்றின் பொருள் யாது? இலேசான பொருளே கனமாயும் கனமான பொருளே இலே சாயும் இருக்கக்கூடுமா?

கிளாக்கன் : ஆன்மாவுக்கு உணர்த்தப்பெறும் இவை விநோத மானவையே. இவற்றை நன்கு விளக்கவேண்டும்.

சாக்ரடீஸ் : ஆம், இந்தக் கலக்கங்களில் பொதுவாக, ஆன்மா, அளவை, பகுத்தறிவு இரண்டையுமே உதவிக்கழைத்துத் தனக்குத் தெரிவிக்கப்பட்ட பொருள்கள் ஒன்ரு? இரண்டா? என ஆராயும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அவை இரண்டாயிருப்பின் ஒவ்வொன்றும் வேறு பட்ட ஒன்று அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவை ஒவ்வொன்றும் ஒன்ருயிருந்து அவை இரண்டாயிருப்பின் அந்த இரண்டையும் ஒன்றின் பிரிவு களாகவே ஆன்மா காணும். ஏனெனில் அவற்றைப் பிரிக்கா விடில் ஒன்ருகத்தானே அவற்றைக் கருதவேண்டும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : கண் சிறியவற்றையும் பெரியவற்றையும் நன்கு காண்கிறது. ஆனல் அவற்றை நன்கு பிரித்தறியாது சற்றுக் குழம்பிய நிலையிலேயே காண்கிறது.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : சிந்திக்கும் மனம் குழப்பத்தை விடுவிக்க எண் ணும்போது அதன் போக்கைத் திருப்பிக்கொள்ளும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டுச் சிறியதையும் பெரியதையும் வேரு கவே குழப்பமின்றிக் காண்கிறது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இதுவே, எது பெரிது ? எது சிறிது ? என்னும் விசாரணைக்குத் துவக்கமல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இப்படித்தான் காணப்படுவதற்கும் புரியப்படு வதற்கும் உள்ள வேறுபாடு தோன்றியது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : நான் பகுத்தறிவை நாடும் பதிவுகளையும் மற்றவற் றையும் பற்றிக் குறிப்பிடும்போதும் இதைத்தான் குறிப் பிட்டேன். எதிரிடையான நிலைகளை ஒரே சமயத்தில் குறிக் கும் பதிவுகள் எண்ணங்களை ஈர்க்கின்றன, ஆனல் ஒரே சமயத்தில் நிகழாதவை அப்படியல்ல.

கிளாக்கன் : தாங்கள் சொல்வதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : ஒற்றுமையும், எண்களும் எதைச் சார்ந்தவை.

கிளாக்கன் : எனக்குத் தெரியவில்லையே.

சாக்ரடீஸ் : கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் நான் முன்னர்ச் சொன்னதே விடை அளிப்பதைக் காணலாம். சாதாரண

ஒற்றுமை கண் பார்வையாலோ அன்றி மற்றைப் புலன் களாலோ நன்கு உணரப்படின் நாம் விரல்களைப் பற்றிக் குறிப்பிட்டதுபோல அதில் நிலையானதைக் குறித்து நம்மை ஒன்றும் ஈர்ப்பதில்லை. ஆனால் ஓர் எதிரிடை நிகழ்ச்சி எப் பொழுதும் காணப்பட்டால் ஒன்றே அதன் எதிரிடையாய் மாறிப் பன்மையாகக் காணப்படின் உடனே நம் உள்ளத்தில் சிந்தனை எழத்தொடங்கிவிடுகிறது. மனம் ஆராய்ச்சியில் இறங்கி "ஒருமை" என்றால் என்ன? என்பது பற்றிய ஓர் முழுமையான முடிவுக்கு வரவிரும்புகின்றது. இங்ஙனம் ஒன்று என்பதன் ஆராய்ச்சி மனதைக் கவர்ந்து உண்மை நிலையைக் காணும்படிச் செய்யும் சக்திவாய்ந்ததாக இருக்க வழியுண்டு அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக, இது சிறப்பாக ஒன்றைப்பற்றிய நிகழ்ச்சிகளில் நடக்கிறது. ஒரு பொருளையே ஒன்றாயும், பன்மையில் முடிவற்றதாயும் நாம் காண்கிறோம்.

சாக்ரடீஸ் : ஆம், ஒன்றைப் பற்றிய இந்த உண்மை எல்லா எண்களைப்பற்றியும் உண்மையாகத் தானே இருக்க வேண்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : எல்லாக் கணக்குகளும், அளவைகளும் எண்களை வைத்துக்கொண்டுதான் செய்யவேண்டுமோ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அவை மனதை உண்மையை நோக்கிச் செலுத்து வது போலத் தோன்றுகிறது அல்லவா?

கிளாக்கன் : ஆம், மிகச் சிறந்த முறையில்.

சாக்ரடீஸ் : சரி, இத்தகைய அறிவியலைத்தான் நாம் இதுகாறும் தேடிக்கொண்டிருந்தோம். இது இரு பயனையுடையது, போரிலும் தத்துவ ஞானத்திலுமாக ; ஏனெனில் போர்வீரன் எண் கலையைக் கட்டாயம் கற்கவேண்டும். இல்லாவிடில் அவன் தன் படைகளின் அளவையும் அமைப்பையும் அறிய முடியாது. தத்துவ ஞானியும் எண்கலையைக் கற்கவேண்டும். ஏனெனில் அவனும் மாறும் கடலிலிருந்து மேலே எழ வேண்டும். நிலையானவற்றைக் கைப்பற்றவேண்டும். ஆகவே அவன் கணிதம் கட்டாயம் கற்கவேண்டும்.

கிளாக்கன் : அது உண்மைதான்.

சாக்ரடீஸ் : நமது காவலர்தான் தத்துவஞானியும் போர்வீரனும் கலந்தவராயிற்றே.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இனி இத்தகைய அறிவுதான் சட்டத்தின்மூலம் அளிக்கப்படவேண்டும். நமது நாட்டின் முக்கிய மனிதர்களைக் கணிதம் அறியும்படி—கற்றுக்குட்டிகளாக மட்டும் இல்லாது மனதில் எல்லா எண்களின் தன்மையையும் அறியும் வரை அவர்கள் கற்றுக்கொண்டே இருக்கும்படி—வியாபாரிகள், சில்லரைக் கடைக்காரர்களைப் போலின்றி, விற்கவோ வாங்கவோ செய்பவன் போலின்றித் தங்களது போர் உபயோகத்திற்காகவும் ஆன்மாவுக்காகவும் அதைக் கற்கும்படிச் செய்யவேண்டும். இதுதான் ஒரு நாடு நிரந்தரமும் உண்மையுமான நிலையை அடைய எளிய முறை.

கிளாக்கன் : மிகவும் நல்ல முறை.

சாக்ரடீஸ் : ஆம். இதைப்பற்றி ஆய்ந்த நாம் இனி, இவ்விஞ்ஞானம் எவ்வளவு அழகானது என்பதையும் கவனித்தல் வேண்டும். கடைக்காரனைப் போலன்றித் தத்துவ ஞானியின் உணர்வுடன் அதனைப் பின்பற்றினுல் அது எத்தனை விதங்களில் நாம் விரும்பும் முடிவுகளுக்குக் கொண்டு செல்லும் தெரியுமா?

கிளாக்கன் : எங்ஙனம்?

சாக்ரடீஸ் : நான் கூறுவது யாதெனில்—கணிதம் மிகவும் உயர்ந்தது. உயர்நிலைக்கு நம்மைக் கொணரும் சக்தி வாய்ந்தது. அருமையான எண்களைப்பற்றிச் சிந்திக்கும்படி ஆன்மாவைக் கட்டாயப்படுத்தும். உருவமுள்ள அல்லது விளங்கும் பொருள்களை விவாதத்தில் அனுமதிக்காது. கலையில் வல்லுநர்கள் முழுதான ஒருமையைக் கணக்கிடும்போது யாரேனும் அளவைக்காகப் பிரிக்க முயன்ருல் அவர்களை எப்பொழுதும் பரிகசித்து எதிர்ப்பர். நீங்கள் வகுத்தால் அவர்கள் பெருக்குவர். அதாவது வகுத்தலென்பதைப் பின்னங்களால் பெருக்குவதெனவே காண்பர். பின்னங்கள் அளவுகளாக உள்ளதால் அதனைப்பெருக்கும் முறையாகக் கொள்வர். மேலும் ஒன்று ஒன்ருகவே இருக்கவேண்டுமேயன்றிப் பின்னங்களாக மாறி அழிந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக இருப்பர்.

கிளாக்கன் : அது மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அவர்களிடம் சென்று எனது நண்பர்களே! இந்த அதிசயமான எண்களைப்பற்றி விவாதிக்கிறீர்களே, அவை எவை? அவற்றில் நீங்கள் ஓர் ஒற்றுமையைக் காண்பதாகக் கூறுகின்றீர்களே? ஒவ்வொரு அளவும் சமமானவை, மாரு தவை, பிரிக்கப்படாதவை எனில் அவற்றின் பொருள் யாது? என்று ஒருவர் கேட்டால் அவர்களது பதில் என்னவாக இருக்கும்?

கிளாக்கன் : அவர்கள் உடனே தாங்கள் ஆராயும் எண்கள் எண்ணங்களில்தான் காணப்படும் என்று விடையளிப்பார் என நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : அப்படியானுல் அந்த அறிவு நிச்சயமாகத் தேவை தான் எனலாம். முழு உண்மையைக் காண்பதற்கு வேண் டிய தூயபகுத்தறிவின் தேவையை இது ஏற்படுத்துகிறது.

கிளாக்கன் : ஆம், அதுவே அதன் குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும்.

சாக்ரடீஸ் : இயல்பாகவே கணிதத்தில் திறமைவாய்ந்தவர்கள் பொதுவாக மற்றெல்லா அறிவுத்துறைகளிலும் தேர்ச்சியுட னேயே விளங்குகின்றனர் என்பதைக் கவனித்திருக்கிருயா? மந்தமானவனுங்கூடக் கணிதத்தில் பயிற்சி பெறுவானுனல் மற்றெந்தப் பயனும் அடையாவிடினும் முன்பு இருந்ததை விடச் சற்றுச் சுறுசுறுப்புடனேயே விளங்குவான் அல்லவா?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : உண்மையில் இதைவிடக் கடினமான படிப்பைச் சுலபமாகக் காணமுடியாது. இதைப்போன்று கடினமான தும் அதிகமில்லை.

கிளாக்கன் : அரிதுதான்.

சாக்ரடீஸ் : இந்தக் காரணங்களால் மனிதர்களில் நல்ல திறமை யுள்ளோரெல்லாம் கணிதம் என்ற அறிவியலிற் பயிற்சியளிக் கப்பட வேண்டும். இதனை விட்டுவிடக்கூடாது.

கிளாக்கன் : நான் ஒத்துக்கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : இதை நமது கல்வி முறையில் ஒரு 'பாடமாக வைத்துவிடலாம். இனி இதற்கடுத்து இத்துடன் தொடர் புடைய விஞ்ஞானமும் நமக்குப் பயனுள்ளதா என்பதை ஆராய்வோமா?

கிளாக்கன் : நீங்கள் வடிவ கணிதத்தைத்தானே (Geometry) குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : அதையேதான்.

கிளாக்கன் : கட்டாயம் வடிவ கணிதத்தில் போருக்குப் பயன் படும் பகுதியை நாம் ஆராயவேண்டும். முகாம் அமைத்தல், ஓர் இடத்தில் நின்று தாக்குதல், படைகளை வரிசையாக அமைத்தல் இதுபோன்ற போர் நிர்வாகங்களிலும் அன்றி அணிவகுத்தலிலும் ஒரு தளபதி வடிவ கணிதம் அறிந்தவரா இல்லையா என்பது மிக முக்கியமானதொரு பிரச்சினையாகும்.

சாக்ரடீஸ் : ஆம், ஆனால் அந்த செயல்களுக்கெல்லாம் ஓர் சிறு அளவு வடிவ கணிதமோ அல்லது அளவைகளோ தெரிந்தால் போதும். இப்பொழுது நமது வினா வடிவ கணிதத்தில் மிக வும் முன்னேற்றமடைந்த பெரும்பகுதியைப் பற்றியது. அது நல்லதைப்பற்றிய எண்ணத்தை எளிதாக்க உதவுமா ? எவ் வளவு எளிதாக்கும் ? இங்கே நான் சொல்லியது போன்று ஆன்மாவானது வாழ்வின் முழுமையையே என்றும் எதிர் நோக்க வேண்டும். இம் முழுமை அல்லது பூரணத்துவத் தின் திக்கில்தான் ஆன்மாவைச் செயல்படுத்தக்கூடிய எல்லாப் பொருள்களும் திரும்பவேண்டும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : வடிவ கணிதம் அங்ஙனம் நிலைத்த உண்மையின் பால் நம்மை ஈர்க்குமாயின் அதை நாம் நன்கு கவனிக்க வேண்டும். அது மாறுவனவற்றை எண்ணி இருந்தால் நமக் குப் பயன் தராதே ?

கிளாக்கன் : ஆம், அதுதான் நம் முடிவு.

சாக்ரடீஸ் : ஆனால் வடிவ கணிதத்தில் மிகக் குறைந்த அறிவு உடையவனும் இவ்வறிவியலைப்பற்றி நாம் கொண்ட இக் கொள்கை வடிவ கணிதத்தை அறிவோரது பொது மொழியி னுக்கே முரண்பாடுள்ளது என்பதை மறுக்கமாட்டான்.

கிளாக்கன் : எப்படி ?

சாக்ரடீஸ் : அவர்கள் செய்முறையையே மனதில் கொண்டுள் ளனர். வர்க்கங்கள் காணல், நீட்டுதல், விரித்தல் போன்ற முறைகளை மிகவும் குறுகிய வழியிலேயே பயன்படுத்துகின் றனர். அன்றாட வடிவ கணிதத்தின் தேவைகளான முறை களுடன் அன்றாட வாழ்வின் தேவைகளைச் சேர்த்துக் குழப்பு

கின்றனர். ஆனால் விஞ்ஞானத்தின் உண்மையான கருத்து, அறிவைப் பெறுவதேயாகும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அப்படியானால் மற்றொன்றையும் ஒப்புக்கொள்ள வேண்டுமல்லவா ?

கிளாக்கன் : அது என்ன ?

சாக்ரடீஸ் : வடிவ கணிதம் நாடும் அறிவு அழியக்கூடிய நிலையற்ற அறிவு அல்ல. அது நாடும் அறிவு அழிவற்றது, நிலைத்த உண்மையானதாகும்.

கிளாக்கன் : அதை ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். அது உண்மைதானே.

சாக்ரடீஸ் : எனது உயரிய நண்பா, வடிவ கணிதமானது ஆன்மாவை உண்மையை நோக்கி அழைத்துச் செல்லும். தத்துவ உணர்வை ஏற்படுத்தும். இப்பொழுது கவனிப்பாரற்றுக் கீழே உள்ளதை மேலே நோக்கி வரச்செய்யும்.

கிளாக்கன் : இப்பயனையளிக்கவல்ல சிறந்தது வேறெதுவும் இல்லை.

சாக்ரடீஸ் : அப்படியானால் தங்களது அழகான நகரில் உள்ள எல்லாக் குடிமக்களும் எப்படியாவது வடிவ கணிதத்தைக் கட்டாயம் கற்கவேண்டும் என்று வைத்துவிட வேண்டும். அதுவே சிறியவையென மதிக்கமுடியாத பல மறைமுகமான விளைவுகளையும் ஏற்படுத்தும்.

கிளாக்கன் : எப்படிப்பட்ட விளைவுகள் ?

சாக்ரடீஸ் : நாம் போரில் அதன் பயன்களைப்பற்றிப் பேசினோம். வடிவ கணிதம் அறிந்தவன் அதனை அறியாதவனைவிட மிகத் துரிதமாகவும் சிறப்பாகவும் எல்லா அறிவுத்துறைகளிலும் விளங்குவான் என்று அனுபவம் விளக்குகிறது.

கிளாக்கன் : உண்மை. அதை அறியாதவனுக்கும் அறிந்தவனுக்கும் உள்ள வேறுபாடு மிகவும் பெரியது.

சாக்ரடீஸ் : அப்படியானால் நம் இளைஞர்கள் கற்கவேண்டிய இரண்டாவது அறிவுத்துறையாக இதனை முடிவு செய்யலாமா ?

கிளாக்கன் : ஆம், அப்படியே செய்வோம்.

சாக்ரடீஸ் : வான சாஸ்திரத்தை மூன்ருவதாக வைப்போமா? அதுபற்றி உன் கருத்தென்ன?

கிளாக்கன் : நான் அதற்கு முழு ஆதரவு அளிக்கிறேன். பருவங்களையும் மாதங்களையும் ஆண்டுகளையும் ஆராய்வது விவசாயிக்கும் மாலுமிக்கும் மட்டுமன்றி, படைத் தளபதிக்கும் மற்ற எல்லோர்க்கும் இன்றியமையாதது.

சாக்ரடீஸ் : நன்று, நன்று. நீ உலகைக் கண்டுகொள்ளும் அச்சம், பயனற்ற படிப்புக்களைக் கட்டாயப்படுத்துவதினின்று பாதுகாப்புச் செய்துகொள்ள உன்னைத் தூண்டுவது எனக்கு விநோதமாகவே உள்ளது. நீ கூறுவதன் பொருள் எனக்குப் புரிகிறது. எல்லா மனிதனுக்கும் அகக்கண் ஒன்று உண்டு என்பதை நம்பவைப்பது கடினமே. ஏனைய முயற்சிகளினுல் அது பயனற்று இருளடைந்து போகும்போது இவ்வறிவியல்களின் மூலம்தான் புனிதமடைந்து புத்தொளி பெறவேண்டும். அகக்கண் புறக்கண்ணைவிடப் பல்லாயிரம் மடங்கு மதிப்பு வாய்ந்தது. ஏனெனில் அதன் மூலமாகத்தான் நாம் உண்மையைக் காண முடியும். இருவகையான மனிதர்கள் இருக்கிருர்கள். ஒரு வகையினர் உன்னை ஒத்துக்கொண்டு உன் வாக்கை வேதவாக்காகக் கொள்ளுவர். இரண்டாம் வகையான மக்களுக்கு நீ சொல்வது பொருளற்றதாய், பயனற்ற வீண் கதையாய்த் தோன்றும். அவர்களுக்கு அதிலிருந்து எந்த விதமான இலாபமும் தோன்ருது. அந்த இருவகையினரில் எவ்வகையினருடன் நீ விவாதிக்கப் போகிருய் என்பது பற்றி ஓர் முடிவுக்கு வரவேண்டும். ஆனுல் அந்த இருவகையினருடனும் அல்ல என்றும் இந்த விவாதங்களெல்லாம் உனது சொந்த முன்னேற்றத்திற்காகவே என்றும் கூறிவிடலாம். ஆனுல் அதே சமயத்தில், பிறர் இதனுல் ஏதேனும் பயனடைவதைக் கண்டு நீ முணுமுணுக்கவில்லை, சரிதானே?

கிளாக்கன் : இந்த விவாதங்களை நான் எனது சொந்தத் தேவைக்காகவே மேற்கொள்ள வேண்டுமென நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : அப்படியானுல் ஓர் அடி பின்னே செல்லவேண்டும். நாம் விஞ்ஞான வரிசையில் தவறு செய்துவிட்டோம்.

கிளாக்கன் : என்ன தவறு?

சாக்ரடீஸ் : வடிவ கணிதத்திற்குப் பிறகு நாம் உடனே சுழலும் திடப்பொருள்களுக்கு, வானசாத்திரத்திற்குச் சென்று விட்டோம். ஆனால் திடப்பொருள்களைப்பற்றி அறியவில்லை. இரண்டளவுகள் கொண்ட உருவத்திற்குப் பிறகு மூன்றளவு அல்லது கனபரிமாணமுள்ள உருவம் வரும். கனப்பொருள்களையும் ஆழம் உயரம்பெற்ற அமைப்புக்களையும் நாம் பார்த்திருக்க வேண்டும்.

கிளாக்கன் : அது உண்மைதான், சாக்ரடீஸ் அவர்களே! இந்த அறிவியல்களைப்பற்றி நாம் மிகக் குறைவாகவே அறிந்துள்ளோம்.

சாக்ரடீஸ் : ஆம், அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவதாக எந்த அரசாங்கமும் இவற்றை ஊக்குவிப்பதில்லை. அதனால் அவற்றை அறிவதற்கு வேண்டிய திறம் குறைவுபடுகிறது. மேலும் அவை கடினமானவை கூட. இரண்டாவதாக, ஓர் வழிகாட்டி இல்லாமல் மாணவர் தாமே அவற்றைக் கற்க முடியாது. அதற்கு வழிகாட்டுவோர் கிடைப்பதும் அரிது. அப்படிக் கிடைத்தாலும் தற்காலத்து அகந்தைமிக்க மாணவர்கள் அவர்கள் சொல்வதைக் கவனிக்கமாட்டார்கள். இருந்தும், அரசாங்கமே இவ்வறிவியல்களுக்கு வழிகாட்டுவதாவதுடன் போதிய கவுரவமும் அளிக்குமானால் நிலைமை மாறிவிடும். மாணவர்கள் அதிகமாக வரவிழைவர். தொடர்ந்து நல்ல ஆராய்ச்சி நடைபெறும். புதிய கண்டுபிடிப்புக்கள் ஏற்படும். இதுவரை உலகில் மதிப்பற்று ஊனமாகித் தமது நன்னிலையை இழந்த அவை, தம் மாணவர் ஒருவர்கூட அவற்றின் பயன்களைச் சொல்லாவிட்டாலும் தமது வசீகர இயல்பால் முன்னேறி வருகின்றன. அரசாங்கத்தின் உதவியும் கிடைக்கும் பட்சத்தில் நிச்சயமாக ஒருநாள் ஒளி பெற்றுவிடும்.

கிளாக்கன் : ஆம், அவற்றில் குறிப்பிடத்தக்க வசீகரம் உள்ளது. ஆனால் நீங்கள் சொன்ன வரிசையில் மாறுதல் ஏற்படுத்துவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. முதலில் தாங்கள் மேற்பரப்பு வடிவ கணிதத்தில் தொடங்கினீர்கள் அல்லவா ?

சாக்ரடீஸ் : ஆம்.

கிளாக்கன் : அடுத்து வான சாத்திரத்தைக் கூறினீர்கள். ஆனால் பிறகு ஓர் அடி பின்னோக்கி வைத்தீர்கள்.

சாக்ரடீஸ் : ஆம் எனது வேகத்தினால் உங்களைத் தாமதிக்க வைத்து விட்டேன். வரிசையில் இயல்பாகப் பின்பற்ற வேண்டிய திடவடிவ கணிதத்தின் நகைக்கத்தக்க நிலை என்னை அதனை விட்டுவிட்டுத் திடப்பொருள் அசைவுகளுக்கு—வானசாத்திரத்திற்குக்—கொண்டு சென்றது.

கிளாக்கன் : உண்மைதான்.

சாக்ரடீஸ் : நம்மால் விடப்பட்ட அறிவியல் அரசினர் ஊக்கமளித்தால் நன்னிலையடையும் என வைத்துக்கொண்டு நாம் நான்காவதாகிய வானசாத்திரத்திற்குச் செல்வோம்.

கிளாக்கன் : சரியான வரிசை. ஆமாம், சாக்ரடீஸ் அவர்களே! நான் முன்பு வானசாத்திரத்தைப் பற்றிப் புகழ்ந்தபோது அநாகரிகமாகக் கண்டனம் செய்தீர்களே! இப்பொழுது நான் புகழ்ந்ததைத் தானே உங்கள் வழியிலே புகழப் போகிறீர்கள்! வானசாத்திரம் ஆன்மாவை மேல்நோக்கிப் பார்க்கச் செய்து இந்த உலகிலிருந்து மற்றொரு உலகிற்குக் கொண்டு செல்வதை ஒவ்வொருவரும் உணர்வர் என்று நான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : எல்லோரும் ; என்னைத்தவிர—மற்றவர்களுக்கு—அது புரியலாம், எனக்கில்லை.

கிளாக்கன் : அப்படியானால் தாங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : வானசாத்திரத்தைத் தத்துவ ஞானத்தின் நிலைக்கு உயர்த்துபவர்கள் நம்மை மேல்நோக்கிப் பார்க்கத்தான் செய்வர் என்று எனக்குத் தோன்றுகிறது.

கிளாக்கன் : தாங்கள் சொல்வது புரியவில்லையே.

சாக்ரடீஸ் : உயரேயுள்ள பொருள்களைப்பற்றி மிக உயர்ந்த ஒரு கொள்கையை நீ கொண்டுள்ளாய். ஒருவன் தலையை அண்ணாந்துகொண்டு வேலைப்பாடுகளுள்ள மேற்கூரையைக் கவனித்துப் பார்ப்பானேயானால் அவன் மனம் எதையோ உணர்கிறதே அன்றி அவனது கண்களல்ல என்று நீ நினைப்பாய் என நான் கூறுவேன். தாங்கள் நினைப்பது சரியானதாக இருக்கலாம். நான் முட்டாளாக இருக்கலாம். ஆனால் எனது கொள்கைப்படி நிலைத்த உண்மையையும் கண்காணாத பொருள்களையும் பற்றிய அறிவுதான் மேனிலைக்குக் கொண்டுசெல்லும். ஒருவன் விண்வெளியை அண்ணாந்து பார்த்தாலும் சரி, பூமியை

நோக்கி விழித்தாலும் சரி ஏதோ குறிப்பிட்ட புலனறிவைப் பெற அவன் விழைந்தால் அவன் அறிவு பெறமுடியும் என்பதை நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஏனெனில் அது போன்று விஞ்ஞானத்தில் எதுவும் இல்லை. அவனது அறிவின் பாதை நீரின் மூலமாயிருப்பினும் சரி, நிலத்தின் மூலமாயிருப்பினும் சரி, அவன் மிதந்தாலும் சரி, படுத்துக் கொண்டிருந்தாலும் சரி, அவனுடைய ஆன்மா கீழ்நோக்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறதேயன்றி மேல் நோக்கியல்ல.

கிளாக்கன் : தாங்கள் ஏளனம் செய்ததன் காரணத்தை இப்பொழுது புரிந்துகொள்கிறேன். ஆனால் வான சாத்திரத்தை எந்த முறையில் பயின்றால் நாம் பேசுகின்ற அறிவுக்குப் பயன்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

சாக்ரடீஸ் : அதைப்பற்றியும் நான் சொல்கிறேன். நாம் பார்க்கும் நட்சத்திரவெளி நமது காணும் உலகின் மீது சிருட்டிக்கப்பட்டுள்ளது. ஆகவே அது நிறைவுடையதாகவும் மிகவும் நேர்த்தியாகவும் பார்வையிலுள்ளவற்றில் சிறப்பாக இருப்பதாலும் தனித்த விரைவையும் விரைவின்மையையும் கொண்ட அத்தாரகைகளின் போக்குக்குத் தாழ்ந்ததாகவே கருதப்படும். இவ்விரைவும் விரைவின்மையும் ஒன்றுக்கொன்று தொடர்புள்ளவை. அவை உண்மையான உருவமும் உண்மையான எண்ணிக்கையும் உடைய பலவேறு பொருள்களையும் தம்மியல்பில் கொண்டவை. அவைகளைச் சிந்தனையாலும் பகுத்தறிவினாலுமே காணவேண்டுமன்றிக் காட்சியினால் காணமுடியாது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : மின்னும் விண்வெளியை உயர் அறிவுக்கான ஓர் அமைப்பாகக் கொள்ளவேண்டும். டேடாலஸ் அல்லது அவர்போன்ற வேறு சிறந்த கலைஞனால் வரையப்பட்ட சித்திரங்களைப்போன்ற அழகாம் அவற்றினழகு. விண்வெளியைக் கண்ணுறும் வடிவ கணிதம் அறிந்த எவனும் அதன் நேர்மையான வேலைப்பாடுகளைக் கண்டு பாராட்டுவான். ஆனால் அதிலமைந்துள்ள உண்மையான சமம், இரட்டிப்பு அல்லது எந்த விகிதத்தையும் காணமுடியும் என அவன் கனவிலும் எண்ணமாட்டான்.

கிளாக்கன் : அதுபோன்ற எண்ணம் நகைத்தற்குரியது.

சாக்ரடீஸ் : நட்சத்திரங்களின் அசைவைக்காணும் உண்மை

யான வான நூலறிஞனும் அதைப்போன்றே எண்ணுவா னல்லவா ? விண்ணும், விண்ணில் காணப்படும் பொருள் களும் கர்த்தாவினால் மிகச் சிறந்த முறையிலமைக்கப்பட் டவை என்று கருதமாட்டானு ? ஆனால் இரவு பகல் ஆகியவை ஒன்றுக்கொன்று பெற்ற விகிதமும், அவற்றுடன் மாதம் பெற்ற விகிதமும், அத்துடன் ஆண்டின் விகிதமும் அல்லது அத்துடன் நட்சத்திரங்களும் நட்சத்திரங்கள் தங்களுக்குள் பெற்ற விகிதமும் அன்றி வேறு கண்கூடாக உள்ள எந்தப் பொருள்களும் நிரந்தரமானவையாக—மாருதவையாக—இருக்கலாம் என அவன் எண்ணவே மாட்டான். அப்படி அவன் எண்ணினால் அது பிதற்றலே யாகும். மேலும் அவற்றைப்பற்றிய சரியான உண்மைகளை ஆராய மேற்கொள்ளும் எந்த உழைப்பும் அதைப்போன்றே பிதற்றல்தானே.

கிளாக்கன் : தாங்கள் கூறுவதை முற்றிலும் ஒத்துக்கொள் கிறேன். ஆனால் இதைப்பற்றி நான் இப்படி இதுவரை எண்ணியதேயில்லை.

சாக்ரடீஸ் : இன்னும் வடிவ கணிதத்தைப் போலவே வான நூலி லும் நாம் பிரச்சினைகளை ஆராயவேண்டும். பொருள்களை நோக்கி நேர்வழியில் சென்று நமது இயல்பான சிந் தனையை நன்முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டு மெனின் அந்த விண்ணைத் தனியே விட்டுவிடுதல் நலம்.

கிளாக்கன் : ஆனால் தற்கால வான நூலாருக்கு இது மிகவும் அப்பாற்பட்ட விஷயமாயிற்றே.

சாக்ரடீஸ் : ஆம். நமது அரசு ஏதேனும் உயர்வடைய வேண்டுமெனில் வேறுபலவிஷயங்களுக்குமுள்ள தொடர்ச்சி கள் விளக்கம்பெற வேண்டும். ஆனால் இதைப்போன்று பொருத்தமான வேறு ஒரு படிப்பைச் சொல்ல முடியுமா ?

கிளாக்கன் : சிந்திக்காமல் எங்ஙனம் கூறமுடியும் ?

சாக்ரடீஸ் : அசைவு பல வடிவங்களில் அமையும். ஒன்றல்ல அவற்றில் இரண்டுவிதம் நம்போன்றோர்க்குப் புரியும். வேறு சிலவும் உள்ளன. அவற்றை அறிவுடையோர்களுக்கென்று விட்டுவிடுவோம்.

கிளாக்கன் : தாங்கள் சொல்லிய இரண்டு எவை ?

சாக்ரடீஸ் : நாம் முன்பு சொன்ன ஒன்றின் துணையாகவே இரண்டாவது உள்ளது.

கிளாக்கன் : அது எது ?

சாக்ரடீஸ் : முதலில் கூறியது எங்ஙனம் கண்ணுக்குத் தொடர் புள்ளதோ அதுபோன்றே அந்த இரண்டாவது காதுக்குத் தொடர்புடையது. நட்சத்திரங்களைக் காண்பதற்கு ஏற்றபடி எப்படிக் கண்கள் அமைந்துள்ளனவோ அப்படியே அவற்றின் இயைந்த அசைவுகளைக் கேட்பதற்குத் தக்கபடிக் காதுகள் அமைந்துள்ளன என நினைக்கிறேன். ஆனால் அவை தொடர்புடைய விஞ்ஞானங்கள் எனப் பிதகோரியர்கள் சொல்கிறார்கள். என்ன கிளாக்கன்! நாமும் அவர்கள் கூறுவதை ஒத்துக்கொள்ளலாமா ?

கிளாக்கன் : ஆம் சரி.

சாக்ரடீஸ் : ஆனால் இது கடினமான படிப்பு. நாம் அவற்றைக் கற்றுக்கொள்வது நலம். இந்த விஞ்ஞானங்களால் வேறு ஏதேனும் பயன்கள் உள்ளனவா என்றும் அவையே கூறக் கூடும். ஆனால் அதே சமயத்தில் நாம் நமது உயர்ந்த குறிக்கோளை விட்டுவிடலாகாது.

கிளாக்கன் : அது என்ன ?

சாக்ரடீஸ் : எல்லா அறிவின் முடிவும் ஓர் நிறைவைப் பெறுதலேயாகும். நமது மாணவர்களும் அதையே அடைதல் வேண்டும். வான சாத்திரத்தில் உள்ளதுபோலக் குறையில் நின்று விடலாகாது. இசையிலும் இதுபோன்றிருப்பதை நீ அறிவாய். கேட்கும் ஒலிகளையும் குரல்களையுமே இசையாசிரியர்கள் ஒப்பிடுகிறார்கள். ஆகவே அவர்களுடைய உழைப்பும் வான நூலாரைப் போன்று பயனற்றதாகிவிடுகிறது.

கிளாக்கன் : ஆம் சுருக்கமான ஒலிகள் என்று அவர்கள் கூறும் ஒலிகளைப் பற்றி அவர்கள் பேசும்பொழுது மிக விளையாட்டாகவே இருக்கிறது. அடுத்த வீட்டுச் சுவரோரம் போய் ஏதோ ஒட்டுக் கேட்பதுபோல அவர்கள் தங்கள் காதுகளைத் தங்கள் கருவியின் நரம்புக்கருகில் வைத்துக் கொள்வர். அதே சமயத்தில் அவர்களில் ஒரு பகுதியினர் ஒரு நடுத்தரமான ஒலியைக் கேட்பதாகவும், அதைக் கணக்கிடுவதற்கேற்ற மிகச் சிறிய அளவுகளைக் கண்டுள்ளதாகவும் கூறுவர். மற்றும் சிலர் இருவிதக் குரல்கள் ஒன்றாகி வந்துள்ளன என்பர். அவர்களில் ஏதாவதொரு பகுதியினர்

தாங்கள் புரிந்துகொண்டவற்றுக்குக் காதுகளையே சான்றுகளாகக் கூறுவர்.

சாக்ரடீஸ்: இசையின் பெயரால் கருவிகளின் நரம்புகளைத் தாக்கி அடித்துப் பாழடிக்கும் பெருமக்களைத்தானே நீ குறிப்பிடுகிறாய்? நரம்பை மீட்டுவதற்கு விரைவில் மாட்டிக்கொள்ளும் கட்டையானது ஏற்படுத்தும் ஒலியை எடுத்துக்கொள்வோம். தாம் ஏற்படுத்தும் மோசமான ஒலிகளுக்காக அவர்கள் தமது கருவிகளைக் குறைகூறுவர். ஒலியின் கூடுதல் குறைதல் ஆகியவற்றைக் குறைகூறுவர். அவர்களது முறைகளை உருவகமாகக் கொள்வது நெடியதொரு வழியாகும். ஆகவே நான் இந்த மனிதர்களைப் பற்றிக் குறிப்பிடமாட்டேன். பிதாகோரியஸின் வழிநடப்போரது ஒருமைப்பாட்டையே நான் எண்ணினேன். வான சாத்திரியரைப்போன்று அவர்களும் தவறு செய்துவிடுகின்றனர். ஒருங்குசேரும் எத்தனை ஒலிகள் கேட்கப்பட்டன என்று ஆராய்கின்றனர். ஆனால் அவர்கள் பிரச்சினைகளை அணுகுவதில்லை. அதாவது இயற்கையாக இசையும் எண்களை அல்லது ஏன் சில ஒலிகள் இயைகின்றன ஏன் மற்றவை இயைவதில்லை? என்பன போன்றவற்றை அவர்கள் அணுகுவதேயில்லை.

கிளாக்கன்: ஆனால் அது மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாயிற்றே?

சாக்ரடீஸ்: அதை நான் பயனுள்ள ஒரு பொருள் என்றே குறிப்பேன். அதாவது அழகையும் நல்லதையும் குறிக்கோளாகக் கொண்டு பார்த்தால் மாத்திரமே பயன்விளைப்பது. ஆனால் வேறு நோக்கத்துடன் அது பின்பற்றப்பட்டால் அதற்குப் பயன்விளைவதில்லை.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: இந்த எல்லாப் படிப்புகளும் தம்மிடையே தொடர்புகொண்டு ஒன்றுக்கொன்று இணையும்போது அவற்றிடையே உள்ள தொடர்பை நாம் ஆராயும்போதுதான் அவற்றைப் பேணுதல் பயன்தரும், உயர்வுபெறும்; இல்லாவிடின் அவை எவ்விதப் பயனும் தருவதில்லை.

கிளாக்கன்: நானும் அப்படியே நினைக்கிறேன். ஆனால், சாக்ரடீஸ் அவர்களே! நீங்கள் மிகப்பெரியதொரு வேலையைப் பற்றியன்றோ பேசுகிறீர்கள்?

சாக்ரடீஸ் : என்ன சொல்கிருய்? முன்னுரையைப் பற்றியா, அன்றி வேறு எதையாவதைப் பற்றியா? நாம் கற்கவேண்டியதற்கு மேற்கொள்ளும் சிரமங்களுக்கெல்லாம் இது முன்னேடிதான் என்பதை நீ இன்னும் அறிந்துகொள்ளவில்லையா? சரி. திறமைவாய்ந்த கணிதநூல் வல்லானை ஓர் தர்க்கவாதி என்று கருதமாட்டாயல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக இல்லை. சிந்திப்பதில் வல்ல ஓர் கணித நூல் வல்லானை நான் கண்டதேயில்லை.

சாக்ரடீஸ் : நேர்மையான காரணத்தைக் கூறவோ ஏற்கவோ முடியாத மனிதன் நாம் விரும்பும் அறிவைப்பெற முடியும் என நம்புகிருயா?

கிளாக்கன் : இதையும் நம்பமுடியாது.

சாக்ரடீஸ் : ஆகவே, கிளாக்கன்! தர்க்கநூலைப்பற்றிய ஓர் உண்மையை இப்பொழுது அறிந்தோம். அந்த உழைப்பு, பகுத்தறிவைப்பற்றியதொன்று. ஆனல் அதைப் பார்வைப் புலன் பின்பற்ற முயல்கின்றது. ஏனெனில் நாம் முன்னர் அறிந்தபடி, பார்க்கும் புலன் சிறிதுநேரம் சென்றபின் தன்ஞல் உண்மையான பிராணிகள் நட்சத்திரங்களையும் பின்னர்க் கதிரவனையும் கூடக்காணும் தன்மைவாய்ந்தது. அதைப்போன்றே தர்க்க அறிவும், சிந்தனையின் துணை மட்டும்கொண்டு புலன்களின் துணையின்றி அறிவிஞல் மட்டுமே முழுமையைக்காண ஒருவன் முற்பட்டு, தனித்த நன்மை யென்பதைப் பகுத்தறிவால் காணும் வரை தொடர்வாஞகில் கடைசியில் அவன் அறிவுலகத்தின் முடிவை அடைகிருன். பார்வையைப் பொறுத்த மட்டில் காட்சியுலகில் கடைசியில் காணப்படுகிருன்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இதைத்தான் தர்க்கவாதமென்று அழைக்கிருயோ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆனல், இருப்புச்சங்கிலி இணைப்புக்களிலிருந்து கைதிகளை விடுவித்தலும், நிழலினின்றும் உருவிற்கும் ஒளிக்கும் அவர்களைக் கொணர்தலும், பாதாளச் சிறையினின்றும் சூரிய ஒளி நோக்கி வருதலும் அவருடைய பார்வைக்கு, அவர்கள் பிராணிகளையும் தாவரங்களையும் சூரிய ஒளியையும் காண வீணே முயன்ருலும் அவர்கள்தம் வலுவற்ற கண்

களால் நீரில் தெரியும் தெய்வீகமான பிம்பங்களேயும் உண்மைப் பொருள்களின் நிழலேயும் பார்க்கமுடியும். ஆனால் அவை நெருப்பொளியில் தெரியும் பொருளின் நிழல்கள் அல்ல. இந்நிழல் தரும் நெருப்பொளி சூரியனுடன் ஒப்பிட்டால் ஒரு பிம்பமேயாகும். உலகில் இருக்கும் மிகச் சிறந்த வற்றைப்பற்றித் தியானிப்பதற்கு ஆன்மாவை மிக உயர்ந்த நிலேக்குக் கொண்டு வரக்கூடிய இச்சக்தியை நாம் நமது உடலின் ஒளியினால் காட்சியுலகிலும் பொருள் உலகிலும் மிகப் பிரகாசமான காட்சியை நோக்கி மேலெழும் சக்தியுடன் ஒப்பிடலாம். இதற்கு முன்பு நாம் சொல்லிவந்த இந்த எல்லாப் படிப்புக்களும் கலேகளும் இச்சக்தியை அளிக்க வல்லவை.

கிளாக்கன் : தாங்கள் சொல்வதை ஒத்துக்கொள்கிறேன். அவை நம்பமுடியாதவை. இருந்தபோதிலும் மற்ருெரு புறத்தினின்றும் பார்த்தால் அவற்றை மறுப்பதும் கடினமானது. இன்னும் மேலெழுந்தவாரியாக விடத்தக்கதல்ல இது. மீண்டும் மீண்டும் இதனே விவாதிக்க வேண்டும். ஆகவே நமது முடிவு சரியாக இருப்பினும் சரி, தவருக இருப்பினும் சரி, இவை எல்லாவற்றையுமே ஒத்துக் கொண்டு உடனே அந்த முகவுரையோ முன்னுரையோ ஏதாயிருப்பினும் சரி, அதிலிருந்து முக்கியமான சிரமங்களே எடுத்துக்கொள்வோம். இப்போது செய்தது போன்றே அவற்றை விளக்குவோம். சொல்லுங்கள், தர்க்கநூலின் தன்மை யாது? பிரிவுகள் யாவை? அதை நோக்கி எத்தனே விதங்களில் சொல்லலாம்? இவ்வழிகளே நமது இறுதி முடிவுக்கும் கொண்டுவிடுமல்லவா?

சாக்ரடீஸ் : அன்புள்ள கிளாக்கன்! இவ்விடத்தில்தான் நீ என்னேப்புரிந்து கொள்வது கடினம். இருப்பினும் என்னல் முடிந்தவரை பார்க்கிறேன். என்னுடைய கொள்கைப்படி நீ ஒரு குறிப்பிட்ட உருவத்தை மனதில் கொள்ளாது முழு உண்மையையே மனதில் கொள்ள வேண்டும். நான் சொல்வது உண்மை நிலேயிலே இருக்கும். அல்லது இராது. அதைப்பற்றி நான் இங்கே சொல்லத்துணியவில்லே. ஆனல் உண்மை நிலேயைப் போன்ற ஒன்றை நீ காண்பாய். அதில் எனக்கு நம்பிக்கை உள்ளது.

கிளாக்கன் : சந்தேகமின்றி.

சாக்ரடீஸ் : மற்ருென்றையும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தர்க்கத்திறமை மட்டுமே இதை உணர்த்தக் கூடும். அதுவும் நாம் முன் சொன்ன விஞ்ஞானங்களை யெல்லாம் பயின்றவனுக்குத்தான் முடியும்.

கிளாக்கன் : அதைப்பற்றி நீங்கள் முன்கூறியதிற் போலவே நிச்சயமாக இருக்கலாம்.

சாக்ரடீஸ் : நிச்சயமாக வேறுமுறைகளைக் கொண்ட நேரான வேறு எந்த வழியும் உண்மையான நிலையைக்காணும் என்று ஒருவரும் விவாதிக்கமாட்டார்கள். அல்லது ஒவ்வொன்றும் தன்னியல்பாக எவற்றைக் கொண்டுள்ளன என்பதையும் தீர்மானிக்கமாட்டார்கள். ஏனெனில் பொதுவாகக் கலைக ளெல்லாம் மனிதனுடைய எண்ணங்களையும் ஆர்வத்தை யுமே முக்கியமாகக் கொண்டவை. மேலும் அவை உற்பத்திக் காகவும் ஆக்க வேலைகளுக்காகவுமே வளர்க்கப்படுகின்றன அல்லது அவற்றைக் காப்பதற்காக வளர்க்கப்படுகின்றன. நாம் சொன்னபடி உண்மையைப்பற்றி ஓரளவு ஐயுறும் ஜியோமிதி போன்றவை—எனச் சொல்லக்கூடிய கணித அறிவு—நிலைத்த உண்மை என்பதைப்பற்றிக் கனவு மட் டுமே காண்கிறது. ஆராயாத சில உண்மைகளை, அடிப்படை களாக அவை பயன்படுத்தும் வரையில் விழித்த நிலையிலும் உண்மையின் இயல்பைக் காணமுடியாது. ஏனெனில் ஒருவன் முதற்கொள்கையினையே அறியாத பொழுது முடிவு களும் இடைநிலைப்படிகளும் எதைச் சார்ந்தன என்பதை யும் அறியாதபொழுது, அவனுக்குத் தோன்றும் அறி வமைப்பை விஞ்ஞானம் என்று எண்ணுவது எப்படி ?

கிளாக்கன் : முடியாது.

சாக்ரடீஸ் : தர்க்கம் மட்டுமே முதற்கொள்கைகளை ஆராய்வதில் தொடங்குகிறது. அதுதான் தன் நிலை நன்கமைவதற்காக வேண்டித் தொடக்கத்தில் கொள்ளும் சிலமுதற் கொள்கை களையே ஒதுக்கிவிடுகிறது. விந்தையான சூழலில் சிக்கி யுள்ள அகக்கண் தர்க்க நூலின் பேருதவியினுலேயே மேல் நோக்கிக் கொண்டுவரப்படுகின்றது. மாற்று வேலைகளில் நாம் விவாதிக்கும் விஞ்ஞானங்களைப் பணிப்பெண்களாகவும் உதவியாளர்களாகவும் தனது பேச்சுக்களில் பயன்படுத்து கிருள் தர்க்கமாகிய பெண். பழக்கமே அவற்றை விஞ்ஞான மாக்கியது ; ஆனுல் விஞ்ஞானத்தைவிடக் குறைவான

தெளிவும், கொள்கையைவிடச் சற்று மேலான உயர்வும் உள்ள வேறு பெயர்களை அவற்றிற்குக் கொடுத்தல்வேண்டும். இவற்றையே நாம் முன்னைய விவாதங்களில், புரிந்து கொள்ளக்கூடியவை, என அழைத்தோம். முக்கியமான பல உண்மைகளை ஆராய வேண்டியிருக்க, முக்கியமற்ற பெயர்களைக் குறித்து நாம் ஏன் விவாதிக்கவேண்டும்?

கிளாக்கன்: உண்மையில் நமது மனக்கருத்துக்களை எந்தச் சொல்லும் தெளிவாக்கும்போது நாம் எதற்காகப் பெயர்களைக் குறித்து விவாதிக்கவேண்டும்?

சாக்ரடீஸ்: எப்படியிருப்பினும், முன்னர்ச் சொன்னதுபோல, நான்கு பிரிவுகள் இருக்கவேண்டுமென்று நாம் ஒருமுடிவுக்கு வந்துவிட்டோம். இரண்டு பகுத்தறிவுக்காகவும் இரண்டு கொள்கைகளுக்காகவும் இருப்பன. முதற் பிரிவினை விஞ்ஞானமென்றும், இரண்டாவதைப் புரிந்துகொள்ளுதல் என்றும் மூன்ருவதை நம்பிக்கை என்றும், நான்காவதை நிழலை உணர்தல் என்றும் கூறுவோம். கொள்கையை மாறும் தன்மையுடனும், பகுத்தறிவை நிலையான உண்மையுடனும் தொடர்புள்ளவையாகக் குறிக்கலாம். நிலைத்ததற்கும் மாறுவதற்கும் உள்ளதுபோன்ற தொடர்பே பகுத்தறிவுக்கும் கொள்கைக்கும் உள்ள தொடர்பு என்றும் கொள்கைக்கு அறிவு அமைதல்போல நம்பிக்கைக்கு விஞ்ஞானமும், நிழலை உணர்தலுக்குப் புரிந்து கொள்ளுதலும் அமைகின்றன என்னலாம். ஆனால் இனி அறிவுக்கும் கருத்துக்குமிடையே எந்தவிதத் தொடர்பையோ அன்றிப் பிரிவுகளையோ நாம் எண்ணிப்பார்க்க வேண்டாம். ஏனெனில் அது இப்பொழுது உள்ளதைவிடப் பன்மடங்கு நீண்ட ஓர் ஆராய்ச்சியில் கொண்டுவிடும்.

கிளாக்கன்: எனக்குப் புரிந்தவரை தாங்கள் கூறுவதை ஒத்துக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: ஒவ்வொரு பொருளின் சாரத்தின் இயல்பையும் தர்க்கநூல் வல்லான் அறிகிருன் என்று சொல்வதை நீயும் ஒத்துக்கொள்கிருய் அல்லவா? அப்படி அறியமாட்டாதவன் இதனை விளக்குங்கால் எவ்வளவு தோல்வியடைகின்ருனே அவ்வளவு தூரம் புத்திக்கூர்மையிலும் தோல்வியே அடைவான் என்றுதானே கூறவேண்டும்? அதனையும் ஒத்துக் கொள்வாயா?

கிளாக்கன் : ஆம், அதை என்னல் எங்ஙனம் மறுக்கமுடியும்?

சாக்ரடீஸ் : நல்லது எனக்கூறியதன் அறிவைப் பற்றியும் இப்படித்தானே கூறவேண்டும்? நல்லதைப்பற்றிய அருவமானதும் முறையானதுமான எண்ணம் ஏற்பட்டுத் தன்னறிவால் அதனை வரையறுக்கும் வரை, எல்லா மறுப்புக்களையும் எதிர்த்துத் தக்கமுறையின் விடையளிக்கும்வரை, கொள்கையின் மூலமன்றி உண்மையின் துணைகொண்டு தர்க்க வாதத்தில் எவ்விடத்திலும் தவறு செய்யாது அம்மறுப்புக்களைப் பொய்யென நிரூபிக்கும் அவன் நன்மையைப்பற்றிய எண்ணத்தையோ அன்றி நன்மையையோ அறியாதவன் என்று தானே சொல்வாய்? மேலும் விஞ்ஞானத்தாலன்றிக் கொள்கையால்மட்டும் அளிக்கப்படும் நிழலையே காண்கிருன். சொப்பனமும் தூக்கமுமே அமைந்த வாழ்வில் மிக நன்கு கண்விழிப்பதற்கு முன்பாகவே கீழுலகிற்கும் சென்று அவன் தன் இறுதி அமைதியையும் அடைந்துவிடுகிருன்.

கிளாக்கன் : இவையனைத்திலும் நிச்சயமாகத் தாங்கள் கூறுவதை நான் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

சாக்ரடீஸ் : நிச்சயமாக இப்படிப்பட்டோரால் வளர்த்துக் கற்பிக்கப்படும் குழந்தைகள் ஒரு இலட்சிய அரசின் குழந்தைகளாகமாட்டா. இலட்சியங்கள் கண்கூடான உண்மையாக வேண்டுமானல் வருங்கால ஆட்சியாளர்களைச் சிந்தனையற்றவர்களாகவும் சிறந்த அதிகாரம் மட்டும்பெற்றும் பந்தய எல்லையைக் குறிக்கும் வெறும் கம்பங்கள் போலவும் இருக்க விட்டுவிட மாட்டாய்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அங்ஙனமாயின் திறமையுடன் கேள்வி கேட்பதற்கும் பதிலளிப்பதற்கும் வேண்டிய மிகச் சிறந்த அறிவைப் பெறத்தகுதியளிக்கும் ஒரு கல்வியை அவர்கள் பெறவேண்டும் என நீ சட்டமியற்றுவாய் அல்லவா?

கிளாக்கன் : ஆம், நாமிருவரும் சேர்ந்தால் அதனைச் செய்வோம்.

சாக்ரடீஸ் : ஆகவே விஞ்ஞானங்களுக்கெல்லாம் மிகவும் உயர்ந்தது தர்க்கம் என்று நீ ஒத்துக்கொள்வாய். அதனைவிட மிகச் சிறந்த எந்த விஞ்ஞானமும் இல்லை. அறிவியல் என்பது அதனை மிஞ்சிவிட முடியாது.

கிளாக்கன் : நான் ஒத்துக்கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: சரி, இப்படிப்புக்களை யாரிடம் ஒப்படைப்பது? எந்த விதத்தில் அவர்களிடம் ஒப்படைப்பது? என்பன போன்றவைகள் நாம் இன்னும் ஆராய வேண்டியுள்ளன.

கிளாக்கன்: ஆம் தெளிவாக ஆராயவேண்டும்.

சாக்ரடீஸ்: ஆட்சியாளர்கள் எவ்வாறு பொறுக்கி எடுக்கப் பட்டவர் என்பது நினைவிருக்கிறதா?

கிளாக்கன்: நன்ருக.

சாக்ரடீஸ்: அதே முறையிலேயே இப்பொழுதும் பொறுக்கி எடுத்தாகவேண்டும். முன்போன்றே திடசித்தமுள்ளவர்கட்கும் தீரமிக்கவர்க்குமே சலுகைகள் அளிக்கப்படவேண்டும். முடிந்தால் நியாயமும் சமநோக்குமுள்ளவர்களும் பெருந் தன்மையுள்ளவர்களும் தேர்ந்தெடுக்கப்படலாம். மேலும் அவர்கள் கல்வியை எளிதாகப்பெறும் இயல்புகளையும் பெற்றிருக்கவேண்டும்.

கிளாக்கன்: இவ்வியல்புகளாவன யாவை?

சாக்ரடீஸ்: கூர்மையான அறிவும் பொருள்களைக் கிரகிப்பதில் விரைவுமே இவ்வியல்புகள். ஏனெனில் கடுமையான உடற் பயிற்சியினுல் மனம் சோர்வடைதலைவிடப்படிப்பின் கடுமை யினுல் மனம் பெரிதும் சோர்வடைந்து விடுகிறது. காரணம் அந்த உழைப்பு முற்றிலும் மனதைப் பொறுத்தது, அது உடலுடன் பங்கு கொள்வதில்லை.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: இன்னும் நாம் தேடிக்கொண்டிருப்பவர்கள் நல்ல நினைவாற்றலைப் பெற்றிருக்கவேண்டும். அவர்கள் உழைப் பின் எந்த விதத்தையும் விரும்பக்கூடிய சோம்பலற்ற உறுதி படைத்தவர்களாயிருக்க வேண்டும். இல்லாவிடில் கடின மான உடற்பயிற்சியைத் தாங்கமாட்டாதவனுயிருப்ப துடன் நாம் விரும்பும் அறிவியல்களெல்லாவற்றையும் முறைப்படி ஏற்றுக் கற்க முடியாதவனுவான்.

கிளாக்கன்: நிச்சயமாக. இயல்பாகவே குண நலன்களை அவன் பெற்றிருக்க வேண்டும்.

சாக்ரடீஸ்: தற்பொழுதுள்ள குறையாதெனில், தத்துவநூல் பயில்வோரெல்லாம் பிழைப்பில்லாமலிருக்கிருர்கள். நாம் முன்பு சொன்னதுபோன்று இதுவே இவ்வறிவியல் பெருமையிழந்து நிற்பதற்குக் காரணம். தத்துவ அன்னை

யின் உண்மையான மக்கள் அவளுக்குக் கைகொடுக்க வேண்டும், வேறு போலிப்பிள்ளைகளல்ல.

கிளாக்கன் : தங்கள் கருத்து ?

சாக்ரடீஸ் : முதலில் அவளது மக்கள் உழைப்பில் அலுப்புக் கொள்ளுபவர்களாகவோ அன்றி இடையில் நின்றுவிடுபவர் களாகவோ இருக்கக்கூடாது. அதாவது அரைச் சோம் பேறிகளாகவும் அரை உழைப்பாளிகளாகவும் இருக்கக் கூடாது. உதாரணமாக, ஒருவன் வேட்டையாடுதலிலும் விளையாட்டிலும் உடற்பயிற்சியிலும் விருப்புடையவனு யிருந்து கற்றல், கேட்டல், சிந்தித்தல் ஆகியவற்றில் வெறுப்புடையவனுயிருத்தல் கூடாது. இல்லாவிடில் அவன் ஈடுபடும் தொழில் அதற்கு எதிரானவிதமாக அமைந்துவிடும் அல்லது அவனுக்கு வேறுபல குறைகள் ஏற்பட்டுவிடும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : உண்மையைப் பொறுத்தமட்டில், தெரிந்து செய்யும் தவறுகளை வெறுத்தும், பிறர் பொய் சொல்லுங்கால் தன்னையும் அவர்களையும் கோபித்துக்கொண்டும், தெரி யாமல் செய்த பிழைகளைமட்டும் பொருட்படுத்தாமலும், அறிவற்ற பன்றிகளைப்போல் மூடத்தனத்தில் உழலும் தமது பேதைத் தனத்தைப் பொருட்படுத்தாமலும், பிறர் அதை அறியும்போதும் வெட்கமே அடையாமலும் உள்ள ஆன்மாக்களை முன்கூறியோரைப் போன்றே உதவாக்கரை ஆன்மாக்கள் என்று கருதிவிடலாமல்லவா ?

கிளாக்கன் : முற்றிலும் உண்மை.

சாக்ரடீஸ் : இன்னும் மிதமாயிருத்தல், தைரியம், பெருந் தன்மை இதுபோன்ற நற்குண நலங்களின் அடிப்படையில் தத்துவ அன்னையின் உண்மை மகனையும் நேர்மையற்ற மகனையும் நாம் கவனமாக வேறுபடுத்திவிடலாமல்லவா ? ஏனெனில் அதுபோன்று வேறுபடுத்தாவிடில் நாடுகளும் மனிதர்களும் தன்னுணர்வின்றியே தவறுகளில் மலிந்து விடுவர். குறைபாடுடைய நொண்டியையோ அன்றி நேர்மையற்ற மகனையோ அறியாத்தனமாக ஆட்சியாள ளுகவோ நண்பனுகவோ ஓர் நாடும், ஓர் மனிதனும் முறையே பெற்றுவிடக்கூடும்.

கிளாக்கன் : இது மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இவ்விஷயங்களையெல்லாம் நாம் நன்கு ஆராய வேண்டும். நமது இந்தப் பெரிய கல்வித்திட்டத்தையும் பயிற்சியையும் பெறுபவர்கள் உடலிலும் உள்ளத்திலும் திடமாக இருந்தால்தான் நீதி நம்மைக் கேள்விகேட்க முடியாது. நாம் நமது நாட்டையும் அரசியலமைப்பையும் பாதுகாத்தவர்களாவோம். ஆனால் நமது மாணவர்கள் வேறுவிதமாய் இருந்துவிட்டாலோ இதற்கு எதிரான விளைவுகளே ஏற்படும். அதனால் இப்பொழுது அது தாங்கியுள்ள ஏளன நிலையைவிடத் தத்துவ ஞானத்திற்குப் பெரிதும் அவமதிப்பைத் தேடிக்கொடுத்துவிட நேரிடும்.

கிளாக்கன் : மதிப்புக்குரிய செயலல்ல.

சாக்ரடீஸ் : நிச்சயமாக இல்லைதான், இருந்தும் விளையாட்டுப் பேச்சை வினையாகத் தோன்றச் செய்து நான் பரிகசிக்கும் நிலைக்கு வந்திருக்கிறேனே ?

கிளாக்கன் : எங்ஙனம் ?

சாக்ரடீஸ் : தீவிரமாக இராது, மிகவும் வேடிக்கையாகவே நாம் உணர்ச்சி வசமாகப் பேசிவிட்டோம் என்பதை மறந்து விட்டேன். ஆனால் மிகவும் தகாத முறையிலேயே தத்துவ ஞானம் காலால் துகைக்கப்படுவதைக் காணும்போது அதற்குக் காரணமானவர்களிடம் நான் மிகவும் ஆத்திரம் அடைந்தேன். இந்த வேதனையில் நான் மிகவும் பொல்லாதவனாகவும் தீவிரங்கொண்டவனாகவும் மாறிவிடுகிறேன்.

கிளாக்கன் : அப்படியா ! ஆனால் நான் கவனித்தவரை அப்படி நினைக்கவில்லை.

சாக்ரடீஸ் : ஆனால் பேசும்பொழுது அந்நிலையை யான் உணர்ந்தேன். நமது பழைய முடிவின்படி வயதானவர்களைத் தேர்ந்தெடுத்தபோதிலும் இப்பொழுது அங்ஙனம் செய்யக்கூடாது என்பதை உனக்கு நினைவுபடுத்துகிறேன். மனிதன் வயது முதிரமுதிரப் பலவிதமான விஷயங்களைக் கற்கிறான் என்று சோலன் என்பவர் மனப்பிரமையிலேதான் சொல்லிவிட்டார். ஆனால் வயதானவன் எங்ஙனம் விரைவாக ஓடமுடியாதோ அங்ஙனமே அவன் அதிகமாகக் கற்கவும் முடியாது. சிறப்பான உழைப்பிற்கு ஏற்ற பருவம் இளமையே.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆகவே தர்க்கவியல் கற்பதற்கான ஆயத்தம் செய்யக்கூடிய எண்மானம், வடிவ கணிதம் இன்னும் இது போன்ற அறிவின் அம்சங்கள்யாவும் இளமையிலேயே மூளைக்குக் கொடுக்கப்படவேண்டும். ஆனால் நமது கல்வி முறையை எந்த விதத்திலும் கட்டாயப்படுத்தும் வகையில் ஏற்படுத்தக்கூடாது.

கிளாக்கன் : ஆம் செய்யக்கூடாது.

சாக்ரடீஸ் : சுதந்திர மனிதன் அறிவைப்பெறும் முறையில் அடிமையாக மாறிவிடக்கூடாது. உடற்பயிற்சி கட்டாய மாக்கப்பட்டால் அதனால் உடலுக்குத் தீங்கு இல்லை. ஆனால் கட்டாயப்படுத்தி அளிக்கும் கல்வி மனதில் தங்குவதே இல்லை.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே எனதருமை நண்பா! கட்டாயப்படுத் தாதே. இளமையிலமையும் கல்வி ஓர்விதமான வேடிக்கை யாகவே அமையட்டும். அதன் மூலம் நாளடைவில் கற்போரது இயல்பான ஆர்வத்தையும் நன்கு உணரமுடியும்.

கிளாக்கன் : அது மிகவும் நேர்மையான எண்ணமே.

சாக்ரடீஸ் : குதிரையின் மீதிருந்து போர்செய்யும் காட்சியைக் காணக் குழந்தைகள் அழைத்துச் செல்லப்படவேண்டும் என்பது நினைவிலிருக்கட்டும். அதில் தீங்கு இல்லாதிருப் பின் சற்று அருகேகூட அவர்களைக் கொண்டு செல்லலாம். வேட்டை நாய்களைப் போன்று இரத்தச் சுவையை அவர் களுக்கு அளிக்கலாமென்பது நினைவிருக்கிறதா?

கிளாக்கன் : ஆம் நினைவிலிருக்கிறது.

சாக்ரடீஸ் : அம்முறையையே உழைப்பிலும், படிப்பிலும் அபாயங்களிலும் பின்பற்றலாம். இவை எல்லாவற்றிலும் மனந்தளராது தன்னிலையாக இருப்பவர்களையே முக்கிய மாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களாகப் பதிவு செய்யவேண்டும்.

கிளாக்கன் : எந்த வயதில்?

சாக்ரடீஸ் : தேவையான உடற்பயிற்சிகள் எல்லாம் முடிந்த வுடன். இதுபோன்ற பயிற்சிபெறும் இரண்டு அல்லது மூன்ருண்டுக்காலம் வேறு எதற்கும் உபயோகமற்றது. ஏனெனில் தூக்கமும் உடற்பயிற்சியும் கல்விகற்பதற்குச்

சாதகமற்ற சூழலாகும். ஆனால் உடற்பயிற்சியில் எவன் முதன்மையானவன் என்பதற்காக நடத்தப்படும் போட்டி, நமது இளைஞர்களுக்கு அளிக்கப்படவேண்டிய போட்டிகளில் முக்கியமானதொன்றும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அடுத்து, இருபது வயது வந்தவர்களைக் கொண்ட பகுதியினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உயர்பதவி களுக்கு உயர்த்தப்படுவர். ஒழுங்கற்ற முறையில் இளமை யில் அவர்கள் பெற்ற விஞ்ஞான அறிவு அனைத்தும் இப் பொழுது ஒருங்கிணைக்கப் பெறும். அப்பொழுது அவை இயல்பாகவே தம்மிடையேயும், உண்மையுடனும் கொண் டுள்ள தொடர்பை அவர்களால் உணரமுடியும்.

கிளாக்கன் : ஆம் நிலைத்து நிற்கும் வேரூன்றக்கூடிய அறிவு அதுவே.

சாக்ரடீஸ் : ஆம், அந்த அறிவுபெறத் திறமை உடைமையே தர்க்கநூல் வல்லமைக்கும் அளவு கோலாகும். பரந்த அறிவு பெற்ற மனமே தர்க்கவல்லமை உடையதாகும்.

கிளாக்கன் : தாங்கள் கூறுவது சரிதான்.

சாக்ரடீஸ் : நீங்கள் கவனிக்கவேண்டிய அம்சங்கள் இவ்வளவு தான். பரந்த அறிவு உடையவர்களும், தம் படிப்பிலும் இராணுவம் போன்ற மற்றைக் கடமைகளிலும் உறுதியாக நிற்பவர்களும், முப்பது வயது அடைந்தவுடன் தகுதி வாய்ந்தவர்களாக உங்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அவர்களியல்பு தர்க்கத்தால் நிரூபிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவர்களில் எவர் வெற்றுப் பார்வையை யும் புலனறிவையுமே நம்புவதை விட்டவர், எவர் உண்மை யையும் முழுமை அடைவதையுமே முற்றிலும் விரும்பு கின்றவர் என்று காணமுடியும். எனதருமை நண்பா, இங்கேதான் மிகவும் கவனமாயிருக்க வேண்டும்.

கிளாக்கன் : ஏன் அவ்வளவு கவனம் ?

சாக்ரடீஸ் : தர்க்கவியல் எத்துணைத் தீமை வாய்ந்தது என்று நீ காண்கிறுயல்லவா ?

கிளாக்கன் : எந்தத் தீமை ?

சாக்ரடீஸ் : கலைபயில் மாணவர்கள் ஒழுங்கின்றி உள்ளனர்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அவர்தம் நிலையில் மன்னிக்க முடியாதது, அல்லது இயற்கைக்கு மிகவும் புறம்பானது இருக்கிறது என்று நினைக்கிருயா? அல்லது அவர்களுக்காக ஓரளவு பொறுத்துக் கொள்வாயா?

கிளாக்கன் : எந்த வகையில் அவர்களைப் பொறுத்துக் கொள்ள முடியும்?

சாக்ரடீஸ் : ஒரு உவமை காண்போம். ஒரு மூடக்கொள்கை கொண்ட மகனை எடுத்துக் கொள்வோம். அவன் செல்வச் செழிப்புடன் வளர்க்கப்படுகிருன். உயர்ந்த பெரியதொரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவனுய் விளங்குகிருன். அவனைப் புகழ்வதற்குப் பலரும் சூழ்ந்துள்ளனர். அவன் வயது வந்த இளைஞனைவுடன் தன் பெற்ருேரெனக் கூறப்பட்டவர்கள் தன் உண்மையான பெற்ருேர்கள் அல்ல என்பதை உணர் கிருன். ஆனுல் உண்மையான பெற்ருேர்களையும் அவனுல் கண்டுபிடிக்க முடியவில்லை. தன் பெற்ருேர்களெனக் கருதி யவர்களிடத்தும் தன்னைப் புகழ்பவர்களிடத்தும் இந்தப் பொய்த் தொடர்பை அறிவதற்கு முன்னும் இப்போதும் அவன் பழகக்கூடிய முறையை உன்னுல் ஊகிக்கமுடியுமா? நான் சொல்லட்டுமா?

கிளாக்கன் : தயவு செய்து சொல்லுங்கள்.

சாக்ரடீஸ் : அவன் உண்மையை அறியாத பிள்ளையாயிருக்கும் வரையில் தனது தந்தை தாய் தன் சுற்றத்தார் என்போரைத் தன்னைப்புகழ்வோரைக் காட்டிலும் அதிகமாகவே மதித்து நடப்பான். அவர்களுக்குத் தேவையுள்ளபோது அவர்களை உதறித்தள்ள அவனுக்கு மனம் வராது. அவர்களுக்கெதி ராக எதுவுமே சொல்லவோ செய்யவோ மாட்டான். முக்கிய விஷயங்களில் அவர்களுக்குக் கீழ்ப்படியாமலிருக்க விரும்ப மாட்டான்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆனுல் அவன் உண்மையை அறிந்த பின்னரோ எனின் அவர்களுக்குக் காட்டிய மதிப்பையும் கவுரவத்தையும் குறைத்துத் தன்னைப் புகழ்வோரையே பெரிதும் விரும்பும் தன்மைபெறுவான். புகழ்வோரின் செல்வாக்கு மிகும். அவர்கள் சொற்படியே நடக்க விரும்புவான். மேலும் எல்லோர்க்கும் தெரியும்படியே அவர்களுடன் இழைவான்.

தனது பெற்றோர்கள் எனக்கருதப்பட்டவர்களையும், சுற்றத்தார்களையும் பற்றி அதன்பின் எண்ணவேமாட்டான்.

கிளாக்கன் : ஆம் இவையனைத்தும் நடக்கக்கூடியவைதான். ஆனால் இவ்வுவமை எங்ஙனம் தத்துவஞானம் பயில்வோர்க்குப் பொருந்தும் ?

சாக்ரடீஸ் : இதோ கவனி. நம் இளமையில் கற்பிக்கப்பட்ட நீதிகளையும் கவுரவங்களையும் பற்றிய சில உண்மைகள் உள்ளன. நாம் அவற்றால் வளர்க்கப்பட்டு அவைகளுக்குக் கீழ்ப்படிந்து அவற்றைக் கவுரவப்படுத்தி வருகிறோம்.

கிளாக்கன் : அது உண்மைதான்.

சாக்ரடீஸ் : அதே சமயத்தில் மனதைப் புகழ்ந்து ஈர்க்கும் தன்மைவாய்ந்த சில எதிரிடையான கொள்கைகளும் புலனின்பப் பழக்கங்களும் உள்ளன. ஆனால் அவை, நல்லது எது என்பதையறிந்த நம் போன்றோரை ஒன்றும் செய்துவிடமுடியாது. அவர்கள், தங்களின் முன்னோரின் கொள்கைகளைத்தான் கவுரவித்துக் கீழ்ப்படிவார்கள்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே இந்நிலையில் ஒரு மனிதன் இருக்கும் போது எது நல்லது ? எது கௌரவம் ? என்ற வினாக்கள் எழும்போது அவன் தனது சட்டமியற்றுவோர் சொல்லிக் கொடுத்தபடியே பதிலளிக்கிறான். உடனே அவன் சொற்களை எதிர்த்துப் பல மறுப்புக்கள் கிளம்புகின்றன. இறுதியில் நேர்மையானவை என்பன எல்லாம், அதே அளவுக்கு நேர்மையற்றவை; மேலும் மதிப்பு வாய்ந்தவை யென்பன எல்லாம் அதே அளவுக்கு மதிப்பற்றவை என்ற முடிவுக்கே வந்துவிடுகிறான். பின்னர் அவன் மதித்துவந்த எல்லா எண்ணங்களுக்கும் முன்போன்றே அவன் கீழ்ப்படிந்து நடந்து கவுரவிப்பான் என எண்ணுகிறாயா ?

கிளாக்கன் : நிச்சயமாக நடக்கமாட்டான்.

சாக்ரடீஸ் : அவை நல்லவை, மதிப்பு வாய்ந்தவை என எண்ணுவதை அவன் விட்ட பிறகு அவன் உண்மையைக் காண்பதில் தோற்றுவிடுகிறான். அதன்பின்னர் ஆசைகளைப் போற்றித் தூண்டும் வாழ்வையன்றி வேறுவித வாழ்வை அவன் பின்பற்றுவான் என நினைக்கிறாயா ?

கிளாக்கன் : அவன் பின்பற்ற மாட்டான்.

சாக்ரடீஸ் : சட்டத்தின் பாதுகாவலனுயிருந்த அவன் இப்போது சட்டத்தை மீறுபவனுகி விடுவானல்லவா ?

கிளாக்கன் : இதிலென்ன சந்தேகம் ?

சாக்ரடீஸ் : நான் இதுவரை சொன்னவை போன்ற அனைத்தும் தத்துவ நூல் பயிலும் மாணவர்க்கு இயற்கையே. மேலும் நான் சொல்லியது போன்று இவை பெரும்பாலும் மன்னிக்கக் கூடியவைதான்.

கிளாக்கன் : ஆம், அத்துடன் இரங்கற்குரியதும்கூட என்பதை நான் சேர்க்கலாமா ?

சாக்ரடீஸ் : ஆகவே நமது தற்காலத்து முப்பது வயது வந்தவர்கள்பால் நீங்கள் இரக்கம் கொள்ளும் நிலையை அடையாமலிருக்கவேண்டி அவர்களுக்குத் தர்க்க அறிவு புகட்டுவதில் முழுக்கவனம் செலுத்த வேண்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அரிதிற் பெறக்கூடிய இன்பங்களை இளமையிலேயே அவர்கள் அனுபவிக்க விடுவது ஆபத்தானது. நீ கவனித்திருக்கலாம். முதலில் சொற்சுவையை அறிந்தவுடன் இளைஞர்கள் வேடிக்கைக்காக விவாதிக்கின்றனர். தங்களை மறுக்கும் மற்றவர்களைப் போன்றே வேண்டுமெனத் தாங்களும் பிறரை மாறுபட்டு மறுக்கின்றனர். நாய்க்குட்டிகள் போன்று, தன்னிடம் வருவோர்களை இழுத்துத் துன்புறுத்தி அவர்களும் மகிழ்கின்றனர்.

கிளாக்கன் : ஆம் அதைவிட மேலாக அவர்கள் எதையும் விரும்புவதில்லை.

சாக்ரடீஸ் : பல வெற்றி தோல்விகளைப் பலரிடமிருந்து அடைந்தவுடன் அவர்கள், தாம் முன்னர் நம்பிவந்த எதையும் நம்பாத ஓர் வழியிலேயே துணிவாகவும் விரைவாகவும் செல்கின்றனர். ஆகவே அவர்கள் மட்டுமின்றித் தத்துவ அறிவும் இன்னும் அதனுடன் தொடர்புகொண்ட அனைத்தும் உலகிலுள்ள மற்றவைகளுடன் ஓர் கெட்ட பெயரை அடைந்து விடுகின்றன.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆனல் ஒருவன் வயது முதிர்ந்தபின் அதுபோல் பைத்தியக்காரத்தனத்துடன் இருக்கமாட்டான். உண்மையை விழைகின்ற தர்க்கவாதியைப் பின்பற்றுவானே

யன்றி விளையாட்டுக்காக, வாதாட வேண்டுமென்றே, மறுக்கும் தன்மையனுக இருக்கமாட்டான். அவனது குண நலங்கள் அவன் விரும்பும் அறிவின் கவுரவத்தை உயர்த்துமே யன்றி வேறல்ல.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இதைப் பொறுத்தே நமது தத்துவ அறிவு பெறும் மாணவர்கள் கட்டுப்பாட்டுடனும் உறுதியுடனும் இருக்க வேண்டும் என்றுகூறி அதற்கான சிறப்பான விதிகள் ஏற்படுத்திளும் அல்லவா ? அதன்படி, தற்பொழுதுள்ளது போல் ஏதோ தவறுதலாகக் கொண்ட விருப்பம் அல்லது அழையாமலே நுழையும் தன்மை கொண்டவர்களாக இருக்க மாட்டார்கள் அல்லவா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : தத்துவ நூல் படிப்பு உடற்பயிற்சியின் இடத்தைப் பிடித்துக்கொண்டு இப்பொழுது உடற்பயிற்சிக்கு உள்ள ஆண்டுகளைப்போல இருமடங்கு காலத்தில் தீவிரமுடனும் விவேகத்துடனும் கடின உழைப்புடனும் தனியே தொடரப் படுகிறது என்று வைத்துக்கொள், அது போதுமா ?

கிளாக்கன் : நான்காண்டுகளா அன்றி ஆருண்டுகளா ?

சாக்ரடீஸ் : ஐந்து ஆண்டுகள் என்றுதான் வைத்துக்கொள் வோமே. அது முடிவு பெற்றவுடன் அவர்களை நம் குகைக்கு அனுப்பி இளைஞர்கள் பெறத் தகுதிவாய்ந்த இராணுவ அல்லது மற்ற ஏதாவது பதவிகளை ஏற்கும்படிக் கட்டாயப் படுத்தவேண்டும். இங்ஙனம் அவர்கள் பயிற்சியும் வாழ்க்கை அனுபவமும் அடையவேண்டும். இப்படிச் செய்கையில் ஆசையினுல் பலவழிகளில் உந்தப்பட்டு இழுபடும் போது மன உறுதியுடன் இருக்கிருர்களா ? அன்றிப் பயந்து பின்வாங்குகிருர்களா ? என்பதைப் பற்றியும் அறிய ஓர் வாய்ப்பு ஏற்படும்.

கிளாக்கன் : இந்நிலை அவர்கள் வாழ்வில் எவ்வளவு காலம் நீடிக்கும் ?

சாக்ரடீஸ் : பதினைந்து ஆண்டுகள். ஐம்பது வயது அடைந்த பிறகு உயிர் வாழ்பவர்கள் வாழ்வில் எல்லா அறிவுத்துறைகளிலும் சிறப்படைந்து தம் செயல்கள் ஒவ்வொன்றிலும் சிறப்புறும் நிலைக்கு வரும்போது நிறைவை அடைவர். அப்

பொழுது அவர்கள் தனது அகக்கண்களை எல்லாப் பொருள் களையும் ஒளிவிடச் செய்யும் பொது ஒளியைக் கண்டு கலப் பற்ற முழு நன்மைகளைப் பற்றும் நிலைக்கு உயர்த்திப் பார்க்க வேண்டும். அத்தகைய அமைப்பையே நாட்டிலும் மனித வாழ்விலும் ஏற்படுத்தும்படி அவர்கள் கட்டளையிட வேண் டும். தமது எஞ்சிய வாழ்விலும் அந்நிலையையே பின்பற்ற வேண்டும். தத்துவ அறிவைத் தம் முதற்குறிக்கோளாகக் கொண்டு—ஆனால் அவர்கள் முறை வரும்போது அரசியல் உழைப்பிலும், பொதுமக்கள் நன்மைக்காக ஆணையிடுதலி லும்—ஏதோ வீரச்செயல் புரிந்தது போலன்றித் தங்கள் கடமையைக் கருத்தில் கொண்டு பாடுபடுபவர்களாக ஒவ் வொரு சமுதாயத்தையும் தம்மைப் போன்றே வளர்த்து ஆங்குள்ளவர்களை நாட்டின் காவலாளர்களாக அமைத்து விட வேண்டும். அதன்பின்னர் வாழ்த்தப்பட்டவர்களுல கிற்கு அவர்கள் சென்றுவிடுவர். அவர்களது நாடு நகரங் கள் அவர்களுக்காகப் பொது நினைவுச் சின்னங்களையும் கவுரவங்களையும் அமைக்கும். அந்த பிதியன்அருள் வாக்கு—அப்போலோ கோயிலின் பெண் பூசாரி—அனு மதித்தால் கடவுளின் பிரதிநிதியாக, ஆனால் அப்படி இல்லா விடினும் தெய்வீகத் தன்மைவாய்ந்த பேறு பெற்றவர்களாக— அவர்கள் விளங்குவர்.

கிளாக்கன் : சாக்ரடீஸ் அவர்களே! நீங்கள் ஒரு சிற்பி, நமது ஆட்சியாளர்களின் குற்றமற்ற அழகான சிற்பங்களைச் செதுக்கி விட்டீர்களே!

சாக்ரடீஸ் : ஆமாம், நமது பெண் காவலர்களையும்கூட, ஏனெ னில் நான் சொல்லிய அனைத்தும் ஆண்களை மட்டுமே குறிக் கின்றன என்று எண்ணிவிடாதே, பெண்தன்மைக்கேற்ற வகையில் அவையனைத்தும் பெண்களுக்கும் பொருந்தும்.

கிளாக்கன் : நீங்கள் சொல்வது சரி, ஆண்களைப் போன்றே அவர்களையும் எல்லாவற்றிலும் பங்கு கொள்ளும்படிச் செய்துவிட்டோம்.

சாக்ரடீஸ் : நல்லது. நாட்டைப் பற்றியும் அரசைப் பற்றியும் நாம் சொன்னவையனைத்தும் வெறும் கனவல்ல என்பதை ஒத்துக்கொள்வாயா? அன்றி ஒத்துக்கொள்ள மாட்டாயா? இது கடினமாயிருப்பினும், முடியாததல்ல. அது எம்முறை யில் உருவாக்கப்பட்டதோ அம்முறையிலேயே அதை

அடையமுடியும். அதாவது நாட்டில் தத்துவஞானமறிந்த உண்மையான காவலர்கள் இவ்வுலகில் ஏற்பட்டவுடன் அவர்களில் ஒருவரோ அன்றிப் பலரோ தற்காலக் கவுரவங் களைப் பலனற்ற வீணானவை என உதறித் தள்ளிவிட்டு நேர்மையையும் நேர்மையால் விளையும் பொருளையுமே எல்லாவற்றிலும் சிறந்ததென மதித்து எல்லாவற்றையும் விட மிகச் சிறந்ததாக—மிகவும் இன்றியமையாததாக நீதியை மதித்து அவற்றின் வழித்தோன்றல்களாய் நம் நாட்டில் நீதியை நிலைநிறுத்தி உயர்த்தி அதன் கொள்கை களையே பின்பற்றுவார்களல்லவா ?

கிளாக்கன் : அவர்கள் இயங்குவர்.

சாக்ரடீஸ் : முதலில் நம் நகரங்களில் வாழ்வோரில் பத்து வய திற்கு மேற்பட்ட அனைவரையும் கிராமங்களை நோக்கி வெளி யேற்றிவிடுவர். நம் பெற்றோர்களின் பழக்க வழக்கங்களால் பாதிக்கப்படாத அங்குள்ள குழந்தைகளைத் தம் பொறுப் பின்கீழ்க் கொண்டு வருவர். பிறகு தம் சட்டங்களையும் பழக்கங்களையும் அவர்களுக்கே உரிய முறையில் அவர்களுக் குக் கற்பிப்பர். அதாவது நாம் சொன்ன சட்டங்களைத் தான். இவ்விதமாக நாம் இதுகாறும் பேசிவந்த அரசாங்க மும் வெகு விரைவில் சுலபமாகச் சுகம் பெறும்; நாடும் நல மிகப்பெறும்.

கிளாக்கன் : ஆம் இதுவே மிகச் சிறந்த வழி. இதுபோன்ற அரசியலமைப்பு ஏற்படவேண்டுமேயானால் அதற்கான வற்றை மிகச் சிறந்த முறையில் நீங்கள் விளக்கி விட்டீர்கள் என்றே நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : நல்லது. நன்னாட்டைப் பற்றியும் அதன் உருவ மான மனிதனைப் பற்றியும் நன்கு ஆராய்ந்து விட்டோம். இனி அவனை எப்படி விவரிக்க வேண்டும் என்று பார்ப்பதில் எவ்வித இன்னலும் இராது.

கிளாக்கன் : எவ்வித இன்னலும் இல்லை. இவற்றைவிட அதிக மாக எதையுமே நாம் சொல்லத் தேவையில்லை என்பதையும் நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

எட்டாம் புத்தகம்

சாக்ரடீஸ் : ஆகவே கிளாக்கன்! குறையற்ற நல்ல நாட்டில் மனைவியரும் குழந்தைகளும் பொது உடமையாகவே இருப்பர். கல்வி, போரும் சமாதானமும் என்பவற்றில் நாட்டம் ஆகிய அனைத்தும் பொதுவாகவே இருக்கும். மேலும் மிகச் சிறந்த தத்துவ ஞானிகளும் வீரமிக்க போர் வீரர்களும் அந் நாட்டின் ஆட்சியாளர்களாயிருப்பர் என்னும் இம்முடிவுக்கு நாம் வந்து விட்டோமல்லவா?

கிளாக்கன் : அதை முன்னரே ஒத்துக்கொண்டு விட்டோம்.

சாக்ரடீஸ் : மேலும் காவலர்கள் தாமாகவே பதவிபெற்ற பொழுது தங்களுடைய ஆட்களை நாம் முன்னர்ச் சொன்ன படி எல்லோருக்கும் பொதுவான ஒருவருக்கும் தனி உரிமை யில்லாத வீடுகளில் அமர்த்துவர். அவர்களுடைய சொத்துக் களைக் குறித்து நாம் என்ன சொன்னோம் என்பது நினை விருக்கிறதா?

கிளாக்கன் : நினைவிருக்கிறது. சாதாரணமாக மாந்தர்க்குத் தேவைப்படும் எதையும் அவர்களில் ஒருவரும் வைத்துக் கொள்ளக்கூடாது. வீரர்களாகவும் பாதுகாவலர்களாகவும் உள்ள அவர்கள் தமக்கு வேண்டிய வாழ்க்கைச் செலவுகளை மட்டும் ஆண்டுக்கொருமுறை மற்றைக் குடிமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் தம்மையும் நாட்டை யும் நன்கு கவனித்து வரவேண்டும்.

சாக்ரடீஸ் : உண்மை. அந்தப் பகுதி வேலை முடிந்தது. நாம் எந்த இடத்தில் நம் வழியினின்றும் விலகினோம் என்பதைக்

கண்டுபிடித்து அந்தப் பழைய வழியை மறுபடித் தொடர வேண்டும்.

கிளாக்கன் : நாம் திரும்புவதில் எவ்வித இன்னலும் இராது. முன்னைப்போலவே இப்பொழுதும் நாட்டைப்பற்றிய விவரங்களை முடித்துவிட்டதாகச் சொல்கிறீர்கள். அதுபோன்ற நாடு சிறந்தது, அதற்குப் பொறுப்பான மனிதனும் சிறந்தவன் என்று சொன்னீர்கள். இருந்தும் அம்மனிதனைப் பற்றியும் அந்நாட்டைப் பற்றியும் இன்னும் சிறப்பான அம்சங்கள் சொல்லக்கிடப்பன போன்று தோன்றுகிறது. இன்னும் அந்த அமைப்பே உண்மையானது. மற்றவையனைத்தும் பொய்யே என்றும் சொன்னீர்கள். அந்தப் பொய் அமைப்புக்களைப்பற்றிக் கூறுங்கால் அங்கு நால்வகை அமைப்புக்கள் உள்ளன என்றும், அவற்றின் குறைகளும் அவற்றுடன் தொடர்புகொண்ட மனிதர்களின் குறைகளும் ஆராயத்தக்கவை என்றும் தாங்கள் சொன்னதாக எனக்கு நினைவிருக்கிறது. அதன் பிறகு அவர்களில் எவன் உயர்ந்தவன், எவன் மோசமானவன் என்பதைக் கண்டு, அந்தச் சிறந்தவனே மிகவும் சந்தோஷமிக்கவனுமாக இருக்கிறான், அந்த மோசமானவனே மிகவும் துன்பப்படுகிறான் என்பதையும் ஆராய இருந்தோம். நாம் அந்த நான்குவித அரசமைப்புக்களைப்பற்றித் தங்களைக் கேட்டேன். தாங்களும் அதைப் பற்றிச் சொன்னீர்கள். உடனே பாலிமார்க்கசும், அதை மாந்தசும் பேசினர். தாங்கள் மீண்டும் தொடங்கி நாம் இப்பொழுது வந்துள்ள நிலைக்கு வந்துள்ளீர்கள்.

சாக்ரடீஸ் : உனது நினைவாற்றல் மிகச் சிறந்தது.

கிளாக்கன் : மற்போர் வீரனைப்போன்று நாங்கள் அந்நிலையை மீண்டும் மேற்கொள்ளவேண்டும். அப்பொழுது தாங்கள் முன்னர் விடையளித்ததைப் போன்றே, இப்பொழுதும் முன் கேட்ட கேள்விகளையே திரும்பக் கேட்பேன், விடையளிப்பீர்களா?

சாக்ரடீஸ் : என்னால் முடிந்தவரை சொல்லுவேன்.

கிளாக்கன் : தாங்கள் முன்னர்ச் சொல்லிய அந்த நான்குவித அரசியலமைப்புக்களைப்பற்றி அறிய மிகவும் ஆசைப்படுகிறேன்.

சாக்ரடீஸ் : அதற்குப் பதில் மிகவும் சுலபமானது. நாம் பேசிய நான்கு அரசாங்கங்களையும் அவற்றிற்கே உரிய சிறப்பான

பெயர்களுடன் குறிப்பிடுவோம். முதலாவது பொதுவாகப் பாராட்டப்பட்ட கிரீட், ஸ்பார்டோ போன்ற இடங்களில் விளங்கிய அமைப்பு. அதன் பிறகு ஒரு சிலரால் ஆளப்படும் ஆட்சி. இதுவே இரண்டாவதாகும். இதை அவ்வளவு தூரம் ஒத்துக்கொள்வதில்லை. ஏனெனில் இது தீமைகள் மலிந்த ஓர் ஆட்சியாகும். மூன்ருவதாக மக்களாட்சி இது இரண்டாவதைத் தொடர்வது, ஆனல் அதினின்று பெரிதும் மாறுபட்டது. கடைசியாக வருவது மிகப்புகழ் படைத்த கொடுங்கோன்மை. ஏனைய எல்லாவற்றிலும் இது மாறு பட்டது. இந்த நான்காவதாட்சியே குழப்பமிகுந்த மோச மான ஆட்சியாகும்.

இதைத்தவிர வேறு தனிப்பட்ட தன்மைவாய்ந்த அரசி யலமைப்பு ஏதேனும் உள்ளதாக எனக்குத் தெரியவில்லை. ஒருகால் உனக்குத் தெரியுமோ ? பிரபுத்துவமும், நாட்டின் பகுதிகளும் வாங்கப்படுவதும் விற்கப்படுவதும் யாவரும் அறிந்ததே. இன்னும் இடைப்பட்ட அரசியலமைப்புக்களும் உண்டு. ஆனல் இவைகள் எல்லாம் வரைமுறையற்றவை இவற்றை கிரேக்கர்களிடமும் காட்டுமிராண்டிகளிடமுமே பொதுவாகக் காணலாம்.

கிளாக்கன் : ஆம். அவர்களிடையே நிலவும் விந்தையான பல அரசியலமைப்புக்களை நாம் கேள்விப்படுகிருேம்.

சாக்ரடீஸ் : மனிதனின் இயல்பு வேறுபடுவதையொத்தே அர சாங்கமும் வேறுபடுகிறது என்பதை நீங்கள் அறிவீர்களா ? ஒவ்வொரு தன்மையிலும் பிறவற்றில் உள்ளதைப் போன்று பலர் இருக்கவேண்டுமல்லவா ? நாடு என்பது அங்குள்ள மனித இயல்புகளாலல்லாமல் மரத்தாலும் கல்லாலும் செய் யப்பட்டது என்று கருதிவிடக்கூடாது. அங்குள்ளவர்களைப் பொறுத்தே அந்நாட்டின் அளவும் அமைப்பும் ஏற்படும் அல்லவா ?

கிளாக்கன் : ஆம். மனிதனின் தன்மையைப் போன்றே அவன் நாடு அமையும். மேலும் மனித இயல்புகளினின்றே ஆட்சி முறைகள் வளர்கின்றன.

சாக்ரடீஸ் : அரசாட்சியின் வகை ஐந்து எனின் மனிதனின் மன அமைப்பும் ஐந்தாகத்தானே இருக்கும் ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : மேன்மக்களாட்சிக்கு விருப்பம் தெரிவிப்பவனை நல்லவன், நேர்மையானவன் என்று நாம் அழைக்கிறோம். அவனைப்பற்றி முன்னரே நாம் விளக்கிவிட்டோம்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இனி நாம் குறைந்த தரமானவர்களைப்பற்றி ஆராயப்புகுவோம். ஸ்பார்த்தியன் கொள்கையை ஏற்றவர்களாயும், பேராசை மிகுந்த சண்டையிடுபவர்களாய் உள்ளவர்களையும் ஒரு சிலராதிக்க உணர்வு உள்ளவர்களையும் மக்களாட்சி உணர்வு உள்ளோரையும், கொடுங்கோன்மை உணர்வு உள்ளோரையும் காணவேண்டும். மிகவும் நேர்மையானவர்களை மிகவும் நேர்மையற்றவர்களுடன் வைத்து ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் நேர்மையானவன் அடையும் இன்பத்தையும் மிகவும் நேர்மையற்றவன் அடையும் துன்பத்தையும் நாம் நன்கு காணலாம். அப்பொழுது தான் நமது ஆராய்ச்சி முடியும். பிறகு திராசிமாக்கஸ் உபதேசித்ததுபோன்று அநீதியைப் பின்பற்றலாமா அன்றி நீதியையே பின்பற்றலாமா என்பதைப்பற்றி ஓர் முடிவுக்கு இவ்விவாத மூலமாகவே வரலாம்.

கிளாக்கன் : நிச்சயமாகத் தாங்கள் சொல்வது போன்றே நாம் செய்யவேண்டும்.

சாக்ரடீஸ் : முதலில் நாட்டை எடுத்துக்கொண்டு அதனினின்றும் தனி மனிதனை நோக்கிச் செல்லும் நமது தெளிவான முறையையே இப்பொழுதும் பின்பற்றுவோமா? முதலில் கவுரமிக்க அரசாங்கத்திலிருந்து தொடங்குவோம். அதைக் கவுரவத்தின் ஆட்சியென்று பெயரிடுவோம். அதற்கு வேறு பெயரொன்றும் எனக்குத் தெரியவில்லை. இவ்வாட்சியை இது போன்று மனிதரிடைக்காணும் தன்மையுடன் ஒப்பிடுவோம். அதன் பிறகு ஒரு சிலராட்சித் தன்மையுடைய மனிதனைக் காண்போம். மீண்டும் மக்களாட்சியை நோக்கித் திரும்பி அத்தன்மைவாய்ந்த மனிதனையும் காண்போம். கடைசியில் கொடுங்கோன்மை நகரைக் காணச் செல்வோம். மறுபடியும் கொடுங்கோலனின் ஆன்மாவை ஆராய்ந்து ஏதேனும் திருப்திகரமான முடிவுக்கு வரமுடியுமா என்பதை ஆராய்வோம்.

கிளாக்கன் : இம்முறையில் இவற்றை ஆராய்வதே மிகவும் பொருத்தமானது.

சாக்ரடீஸ் : அப்படியானுல் முதலில் எப்படி உயர்ந்தோரின் ஆட்சியினின்றும் கவுரவத்தின் ஆட்சி ஏற்படுமென்பதைக் காண்போம். ஆனல் ஆளும் சக்தியின் பிரிவுகளிலிருந்தே எல்லா அரசியல் மாறுபாடுகளும் தோன்றுகின்றன என்பது தெளிவு. ஒருங்கிணைந்த அரசாங்கம் எவ்வளவு சிறியதாயிருப்பினும் அதனை அசைக்கமுடியாது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியாயின் நமது அரசு மாறக்கூடுமோ? மேலும் எங்ஙனம் அந்த இருவகைத்துணை வகுப்பினரும் ஆட்சியாளர்களும் தமக்குள்ளும் ஒருவரோடொருவரும் மன வேறுபாடு கொள்வர்? சரி, ஹோமரைப் போன்று எங்ஙனம் முரண்பாடு தோன்றியது என்பதைச் சொல்லும்படி அறிவுத் தெய்வங்களை வழிபடுவோமா? அன்றி, பரிகாச மனப் பான்மையோடு அவர்களை நம்மைக் குழந்தைகள் என எண்ணி நம்முடன் விளையாடிக் களித்து, மிகுந்த துன்ப உணர்வுடன் மிகவும் உண்மையானவர்களைப் போன்று நாம் நம்பும்படி நம்மிடம் பேசுகின்றனர் என்று கற்பனை செய்து கொள்வோமா?

கிளாக்கன் : அவர்கள் நம்மிடம் எப்படிப் பேசுவர்?

சாக்ரடீஸ் : இப்படித்தான். இதுபோன்று அமையும் ஒரு நாட்டை அமைப்பது கடினம். ஆனல் தோன்றுகின்ற அனைத்தும் அழியக்கூடியவை. ஆதலால் உங்களது ஆட்சி முறையும் காலப்போக்கில் ஒருநாள் அழிந்துவிடும். இதுவே அதன் முடிவு. உலகில் தோன்றி வளரும் பயிர்களும் நடமாடும் பிராணிகளும் அவற்றிற்கான வாழ்க்கைச் சக்கரத்தின் முடிவுக்கு வரும்போது அவை தம் ஆன்மா உடல் ஆகியவற்றின் வளமும் வளமின்மையும் ஏற்படுகின்றன. குறுகியகால வாழ்வுடையனவற்றுக்குக் குறுகிய காலத்திலும் நீண்டகால வாழ்வுள்ளனவற்றுக்கு மிகுதியான கால அளவிலும் இது நேரும். ஆனல் மக்களில் மலடு மலடற்றது இத் தன்மைகளைக்காணும் திறனை உங்கள் ஆட்சியாளர்களின் எந்தக் கல்வியும் அறிவும் தந்துவிடல் அரிது. உணர்ச்சியுடன் பிணைக்கப்பட்ட புத்திக்கூர்மையும் அவைகளைக் கட்டுப்படுத்தும் விதிகளைக் கண்டுவிட முடியாது. உணர்ச்சி இவ்விதிகளை மீறவல்லது. வேண்டாத நேரங்களில் அவைகள் குழந்தைகளை உலகிற் கொண்டுபோய்ச் சேர்க்கும். தெய்வீகப் பிறவி

யுடைய எதுவும் பூரணமான எண்ணமைந்த காலத்தைப் பெற்றிருக்கும். ஏதாவது 6 போன்ற எண்ணுனது 1, 2, 3 ஆகியவற்றின் பெருக்குத் தொகைக்கும் அவற்றின் கூட்டுத் தொகைக்கும் சமம். 6ஐக் குறிக்கும் ஒரு வட்டம் அல்லது காலம் முடிவடையும்போது 1, 2, 3 ஆகியவற்றைக் குறிக்கும் குறுகிய காலங்கள் அல்லது சுற்றுக்களும் முடிவடைகின்றன அல்லவா? ஆனல் மனிதப் பிறவியின் காலமோ சிக்கலும் வளர்ச்சியுமுடைய அல்லது வர்க்கத்தையும் கனத்தையும் உடைய உயர்வையும் மூன்று இடைவெளிகளேயும் பெற்று, விருப்பு, வெறுப்பு இனப்பெருக்கம், குறைதல் ஆகிய நான்கு பருவங்களேயும் பெற்று எல்லாப் பருவங்களும் ஒன்றுக் கொன்று கணக்கிடக்கூடியனவாயும் ஒத்துக்கொள்ளக் கூடி யனவாகவும் அமைந்துள்ளன. இவற்றின் அடிப்படையான மூன்றுடன் அதன் மூன்றிலொரு பாகத்தைச் சேர்த்து 4 ஐந்துடன் இணைத்து, பெருக்கி 4 5 20 அதனுடைய மூன்ரும் திறனுக்கு உயர்த்துகையில் (20) ³ இரு சீர்களேப் பெறுகிரேம். முதலாவது 100 மடங்கு பெரிய ஒரு சதுரம் 4 100 400 20 20 அடுத்துள்ளதில் ஒரு பக்கம் முன் சொன்னதற்குச் சமம், ஆனல் செவ்வக அமைப்புடையது. 5 அளவுள்ள சதுரத்தின் மூலேவிட்டத்தின் மேல் நூறு மடங்கு வர்க்கமாக்கப்பட்டுள்ளது. பின்னங்களே நீக்கி விடுக. 5 5 50 ஆனல் 50 7 பின்னத்தை நீக்கியபின் $7\times7=49$ $49\times100=4900$. அவற்றில் ஒவ்வொன்றும் முழு வர்க்கத்துக்கு ஒன்று குறைவானது அதாவது 49 50 1 5 5 1. அல்லது முழு எண்ணல்லாத இரு பக்கங்களேக் கொண்ட சதுரங்களின் தொகையைவிடக் குறைவானது. அந்தச் சதுரத்தின் ஒரு பக்கம் 5 50+50 100. மேலும் மூன்றின் கனத்தின் 100 மடங்கு 3 100 2700 இப்பொழுது மொத்தம் 2700 4900 400 8000 20. இந்தத் தொகை ஒரு வடிவ கணித எண்ணேக் குறிக்கிறது. இந்த எண் பிறப்பின் நன்மை தீமைகளேக் கட்டுப்படுத்தும் தன்மை வாய்ந்தது. சட்டத்தை உணராது பருவமல்லாக் காலத்தில் மணமக்களே இணைத்தால் பிறக்கும் குழந்தைகள் அதிர்ஷ்டமுள்ளனவாகவோ நல்லன

3, 4, 5 என்ற எண்களில் முதலில் வரும் மூன்று பிதகோரஸ் முக்கோணத்தில் மூன்று பக்கங்கள். அப்பொழுது அந்தப் பகுதி களின் கனங்களின் அதாவது 3 4 5 ஆகியவற்றின் கூடுதல் 216 6 3 4 5 216 6 ஆகிறது.

வாகவோ இருக்குமா ? அவர்களின் முன்னோர்கள் சிறந்தவர் களையே நியமித்தபோதிலும் தங்கள் தந்தைகளின் இடத்தில் அமர அவர்கள் அருகதையற்றவர்களாகவேயிருப்பர். மேலும் நாட்டின் காவலர்களாக அவர்கள் பதவி ஏற்றவுடன் நம்மைக் கவனிப்பதில் தோல்வியடைவதை விரைவில் காணலாம். இசையை அமைப்பதின் மூலம் இசைத் தெய்வங்களையும் புறக்கணிப்பர். அந்தப் புறக்கணிப்பு உடற்பயிற்சிக்கும் பரவும். அதனால் உங்கள் நாட்டு இளைஞர்கள் சிறப்புற வளர்க்கப்படமாட்டார்கள். உங்கள் நாட்டுப் பல இனங் களின் தன்மையைச் சோதித்து உணரும் சக்தியற்றவர்களே பின்வரும் சமுதாயத்தில் ஆட்சியாளர்களாக நியமிக்கப்படு வர். ஹெசியது (Hesiod) பெற்றது போன்று அங்கே தங்கமும் வெள்ளியும் பித்தளையும் இரும்பும் கலந்தே காணப் படும். இரும்பு வெள்ளியுடனும் பித்தளை தங்கத்துடனும் கலக்கப்படும். ஆதலால் ஒழுங்கின்மையும் சமமின்மையும் ஒப்பின்மையுமே ஏற்படும். அவைதாம் என்றும் எவ்விடங் களிலும் வெறுப்புக்கும் போருக்கும் காரணமாக அமை கின்றன. இதனின்றே எங்கு ஏற்பட்டாலும் சரி முரண்பாடு எழுகின்றது என்று அறிவுத் தெய்வங்கள் ஒத்துக்கொள் கின்றன. இதுவே அவை நமக்களிக்கும் செய்தியாகும்.

கிளாக்கன் : அவை அளிக்கும் செய்தி உண்மையானது என்றே கருதுதல் நலம்.

சாக்ரடீஸ் : ஏன், அவை அளிக்கும் செய்தி மிகவும் உண்மை யானதுதான். தெய்வம் எங்ஙனம் பொய் சொல்லும் ?

கிளாக்கன் : இன்னும் அத்தெய்வங்கள் என்ன சொல் கின்றன ?

சாக்ரடீஸ் : முரண்பாடு எழுந்தவுடன் இரு இனங்களும் எதிர் வழிகளில் ஈர்க்கப்படுகின்றன. இரும்பும் பித்தளையும், பணம், நிலம், வீடு, தங்கம், வெள்ளி ஆகியவற்றைப்பெற முந்துகின்றன. ஆனால் தங்கம் வெள்ளி இனமோ பணத்தை விரும்பாது தானே செல்வநிலை பெற்றுள்ளமை யால் நற்குணத்தையும் பழம்பெரு நன்முறைகளையும் முறை யாகப் பெற விழைகின்றது. அங்கு அவ்விரு இனங்களி டையே போர் மூளுகின்றது. இறுதியில் தங்கள்வீட்டையும் நிலத்தையும் தனிப்பட்டவர்களிடமிருந்தும் பிரித்தளிப்பது என்னும் முடிவுக்கு வருகின்றனர். முன்னர், தாமே சுதந்திர

மனிதனுக மதித்துக் காத்தவர்களேயும் நண்பர்களேயும் அடிமைகளாக்கி, அவர்களேக் குடிமக்களாகவும் வேலேக் காரர்களாகவும் ஆக்கிவிட்டுத் தான் போரிலீடுபட்டும் அது மீளாமல் பாதுகாவல் கண்காணித்துக்கொண்டே செய்வதிலும் வாழ்வர்.

கிளாக்கன் : ஆகா ! இந்த மாற்றத்தின் தோற்றத்தை மிகவும் நன்ருக விளக்கிவிட்டீர்கள் என்று நினேக்கிறேன்.

சாக்ரடீஸ் : இதுபோன்று ஏற்படும் ஆட்சி உயர்ந்தோர் ஆட்சிக்கும் ஒரு சிலராட்சிக்கும் இடைப்பட்ட தன்மை வாய்ந்ததாக இருக்கும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : மாற்றத்தின் தன்மை அதுதான். அந்த மாறுதல் ஏற்பட்டவுடன் அவர்கள் எங்ஙனம் ஆளத்தொடங்குவர் ? நல்ல அரசுக்கும் ஒரு சிலராட்சிக்கும் இடைப்பட்ட இவ்வரசு நிச்சயமாக ஒரு பகுதியில் ஒன்றையும் மறுபகுதியில் மற்ருென்றையும் பின்பற்றுவதுடன் சில குறிப்பிடத்தக்க தனி அம்சங்களேயும் பெற்றிருக்கும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆட்சியாளர்களுக்கு மதிப்புக் கொடுப்பதிலும் ; விவசாயம், கைத்தொழில், வாணிபம் ஆகியவற்றைப் போரிடும் இனத்தார் விலக்குவதிலும், பொது உணவு அமைப்புக்களிலும், போர்ப்பயிற்சி உடற்பயிற்சி ஆகியவற்றில் ஈடுபாடு காட்டுவதிலும் ஆகிய இந்த எல்லா அம்சங்களிலும் இந்த ஆட்சி நல்ல ஆட்சியை ஒத்திருக்கும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : எளிய தன்மையர்களாகவும், ஊக்கமுள்ளவர்களாகவும் தத்துவ அறிவாளர்கள் கிடைப்பதில்லேயென்பதால் மாறுபட்ட பல்வேறு குணங்களேக் கொண்ட அவர்களேச் சேர்ப்பதற்கு அஞ்சுவதிலும் ; தத்துவ வல்லுநர்களே விடுத்து, இயல்பாகவே அமைதிக் கல்லாது, போருக்கே தகுதி பெற்றவர்களான சிக்கலற்ற குணம் பெற்றேரையும் ஆசைக்கடிமையாவோரையுமே நாடுவதிலும் ; போர்த்தந்திரங்களிலும் முறைகளிலும் தொடர்ந்த போரிலுமே மதிப்பு வைத்திருப்பதிலும் இவ்வாட்சி மிகத்தனித்த இயல்புடையதாகும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இன்னும் ஒரு சிலராட்சியில் வாழும் மக்கள் போன்று இம்மனிதர்களும் பணத்தாசை பிடித்தவர்களா யிருப்பர். தங்கம் வெள்ளி ஆகியவற்றின்மீது பயங்கர அளவுடைய இரகசிய ஆசை மிகுந்து, அவற்றை இருட்டறை களில் சேமித்து வைத்து, தங்களுக்கெனச் சேமிப்புக்களும் பொக்கிஷங்களும் பணம் சேமிப்பதற்கும் எடுப்பதற்கும் அமைத்துக்கொள்வர். இன்னும் முட்டையிடுவதற்கமைந்த கூடுகளைப்போன்று கோட்டைகளையமைத்து அதில் தம் மனைவியர்க்காக அதிகமாகச் செலவிடுவர். அன்றித் தங்களுக்கு விருப்பமானவர்களுக்காகச் செலவிடுவர்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்டீஸ் : அவர்கள் உலோபிகள். ஏனெனில் அவர்கள் பெரிதும் மதிக்கும் செல்வத்தைப் பெறுவதற்கு உலகறிந்த வழிகளே கிடையாது. பிறருடைய பணத்தைத் தம் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகச் செலவிடுவர். தங்கள் தந்தையின் கட்டுப்பாட்டினின்றும் தப்பும் குழந்தை களைப்போலப் பிறருடைய சுகங்களை அபகரித்து நீதிக்குப் புறம்பாகச் சென்றுவிடுவர். அவர்கள் மென்மையான இயல்பு களாலல்லாமல் வன்மையால் பயிற்சியளிக்கப்பட்டவர்கள். ஏனெனில் சிந்தனை தத்துவஞானம் ஆகியவற்றின் தோழி யாகிய உண்மைத் தேவதையை அவர்கள் புறக்கணித்து விட்டனர். இசையைவிட உடற்பயிற்சியையே பெரிதும் மதிக்கின்றனர்.

கிளாக்கன் : தாங்கள் சொல்லும் ஆட்சிமுறை ஐயமின்றி நன்மையும் தீமையும் கலந்த ஒன்றுக உள்ளது.

சாக்ரடீஸ் : ஏன், அது கலவைதான். ஆனால் ஒரே பொருள் தான் தலைதூக்கி நிற்கும். அதுதான் திருப்தியும் பேராசையும். இவை ஆவலின் மிகுதியும் உற்சாமும் ஆதிக்கம் பெற்றுள்ளதாலேயே ஏற்படுகின்றன.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இங்ஙனம் அந்நாட்டின் தன்மையும் தோற்றமும் அமைகின்றன. அதன் அமைப்பைக் கண்டோம். இதில் இன்னும் விளக்கம் தேவையில்லை. ஏனெனில் ஒரு வரை யறையிருந்தால் போதும். அதுவே அந்நாடு நேர்மை யானதோ அன்றி நேர்மையற்றதோ என்பதைக் காட்டி விடும். அதைவிட்டு அந்நாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும்

ஒவ்வொரு மனிதனையும் அவனியல்பையும் ஒன்றுகூட விடாமல் காண்பது ஓர் முடிவற்ற வேலையாகிவிடும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இப்பொழுது எத்தகைய மனிதன் இந்த ஆட்சிக்குத் தக்கவனாகிறான்? அவன் அங்கு எப்படிச் சேருகிறான்? அவன் எப்படி இருப்பான்?

அதைமாந்தஸ் : வாதம் செய்யும் மனப்பான்மையோடு விளங்கும் அவன் நமது கிளாக்கனைப் போன்றுதான் இருப்பான்.

சாக்ரடீஸ் : இருக்கலாம். அந்த ஒரு அம்சத்தில் மட்டும் அவன் கிளாக்கனைப் போன்றிருக்கலாம். ஆனால் வேறுபல அம்சங்களில் அவன் மிகவும் மாறுபடுகிறான்.

அதைமாந்தஸ் : எந்த அம்சங்களில்?

சாக்ரடீஸ் : தான் எண்ணுவதை நிலை நிறுத்தும் எண்ணம் அவனிடம் மிகுந்திருக்கும். ஆனால் அறிவுப்பயிற்சி இராது. இருந்தும் அவன் நற்பண்பின் நண்பனாக இருப்பான். அவன் சிறந்த ரசிகனாக இருப்பான். ஆனால் பேச மாட்டான். அப்படியிருந்தால்தான் படிப்பினால் கர்வம் மிகுந்தவனைப் போலன்றி அடிமைகளிடம் கடுமையாக நடந்து கொள்ளமுடியும். அவன் சுதந்திர மனிதர்களிடம் பண்புடனேயே நடந்துகொள்வான். அதிகாரிகளிடம் சிறப்பான முறையில் கீழ்ப்படிவான். அவன் அதிகாரத்தையும் கவுரவத்தையும் பெரிதும் விரும்புவான். பேசும் திறனோ அன்றி அதுபோன்ற திறமைகளினாலோ அன்றி வீரன், போர்ச் செயல்களில் தீரம் காட்டியவன் என்ற காரணத்தினாலேயே தன்னை ஆட்சியாளர் என்று கூறிக்கொள்வான். மேலும் ஓட்டப் பந்தயத்திலும் உடற்பயிற்சியிலும் அவன் மிகவும் விருப்பமுள்ளவனாயிருப்பான்.

அதைமாந்தஸ் : ஆம் இத்தன்மைதான் கவுரஆட்சிக்கேற்றது.

சாக்ரடீஸ் : அது போன்றவன் இளமையில்தான் செல்வத்தை வெறுப்பானேயன்றி வயது அதிகரித்தவுடன் அவற்றால் அவன் பெரிதும் கவரப்படுவான். ஏனெனில் அவனிடத்தில் அப்பேராசையின் அம்சம் உள்ளது. மேலும் நல்ல வழிகாட்டியை இழந்துவிட்ட அவன் அறத்தின்பால் உறுதியுடன் இருக்கமாட்டான்.

அதைமாந்தஸ் : அந்த வழிகாட்டி யார் ?

சாக்ரடீஸ் : அதுதான் தத்துவஞானம். இசையினுல் பதம் செய்யப்பெற்றது. அது மனிதனைத் தன் இருப்பிடமாகக் கொள்கின்றது. அவனது தருமத்தை வாழ்நாள் முழுதும் காப்பது அதுவே.

அதைமாந்தஸ் : மிகவும் நல்லது.

சாக்ரடீஸ் : கவுரவமான அரசாங்கத்தன்மை வாய்ந்த மனிதனின் தன்மை அதுதான். அவன் அந்த அரசைப் போன்றே இருக்கிருன்.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவனுடைய தோற்றம் கீழ்க்கண்டவாறு இருக்கும். அனேகமாக அவன் வீரமிக்க தந்தையின் இளைய மகனுயிருப்பான். அத்தந்தை நன்கு ஆளப்படாத நாட்டில் வசிப்பார். அதில் எந்த கவுரவத்தையும் பதவிகளையும் அவர் ஏற்றுக்கொள்ளமறுப்பார். சட்டத்திஞுதவியை நாட மாட்டார். தன்னை எந்த விதத்திலும் முயற்சி மேற்கொள்ள மாட்டார். துன்பத்தினின்றும் தப்புவதற்காகத் தனது உரிமைகளையும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருப்பார்.

அதைமாந்தஸ் : அப்படியானுல் அவருடைய மகன் மட்டும் எங்ஙனம் வேறுவிதமாக இருக்கமுடியும் ?

சாக்ரடீஸ் : அவனுடைய தாய், தன் கணவனுக்கு ஆட்சியில் எவ்வித கவுரவமுமில்லை, அதனுல் அங்குள்ள பெண்மணிகளைக் காட்டிலும் தனக்கு எவ்விதச் சிறப்புமில்லை என்று முறையிடுவதைக் கேட்கும்போது அம்மகனின் தன்மை வளரத் தொடங்குகின்றது. மேலும் தனது கணவன் பணத்திலே எவ்வித ஈடுபாடுமின்றி இருப்பதையும் சண்டையிட்டுக் கொண்டு நீதிமன்றங்களிலும் அரசவையிலும் முறையிடாமல் எது ஏற்பட்டாலும் பொறுமையாக ஏற்றுக்கொள்வதையும், அவனது எண்ணங்கள் அவனையே சூழ்ந்திருப்பதையும் அவளை அவன் மிக்க அலட்சியத்துடன் நடத்துவதையும் காணும்போது அவள் மிக்க வேதனை அடைந்து தன் மகனிடம் அவன் தந்தை அரை மனிதர்தான் என்றும் பெரிய சோம்பேறி என்றும் கூறுவதுடன், பெண்மணிகளுக்கே அமைந்த விருப்பமான நடிப்புடன் தன்னைத் தன் கணவன் நடத்துகின்ற மோசமான விதத்தையும் அடிக்கடி குறிப்பிடுவாள்.

அதைமாந்தஸ் : ஆம். அப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்களை அவர்கள் அதிகமாக நமக்குச் சொல்லுகிறார்கள். இவ்வாறு குற்றஞ் சாட்டிப் பேசும் தன்மை அவர்களுக்கு இயல்பே.

சாக்ரடீஸ் : குடும்பத்திலே சேர்ந்தவர்களென எண்ணக் கூடிய கிழ வேலைக்காரரும்கூட அவ்வப்போது தனிமையில் இதே முறையில் அம்மகனிடம் சொல்வானென்பது உனக்குத் தெரியுமன்றோ ? அவனது தந்தைக்குப் பணம் கொடுக்க வேண்டியவர்களைக் காணும்போதும், அவருக்குத் தீமை செய்த ஒருவனை அவர் தண்டிக்காததை எண்ணும்போதும் அவனது தாயும் வேலைக்காரரும் அவனிடம், அவன் வயது வந்தவுடன் அவர்களைப் பழிக்குப் பழி வாங்கவேண்டும், தன் தந்தையைப் போலன்றி மனிதனாக வாழ வேண்டும் என்று சொல்கிறார்கள். அவன் கொஞ்சம் வெளியே வந்தாலும் போதும். இது போன்றவற்றையே காண்கிறான் ; கேட்கிறான். நாட்டில் தமது காரியங்களை மட்டுமே கவனிப்பவர்கள் அறிவிலிகள் என்று கருதப்பட்டு அவர்களுக்கு மதிப்பு அளிப்பதில்லை. ஆனால் பிறருடைய காரியங்களே வேலையாக வாழ்பவர்களைச் சிறப்பித்துப் பாராட்டுகின்றனர். இதன் விளைவு யாதெனில் அவ்விளைஞன் இவற்றையெல்லாம் கண்டு கேட்டு, தந்தையின் சொற்களையும் மனதிற் கொண்டு தன் தந்தையின் அருகில் தன்னையும் பிறரையும் ஒப்பிட்டு—மாறுபட்ட வழிகளில் ஈர்க்கப்படுகிறான். ஆன்மாவில் பகுத்தறிவை அவன் தந்தை நீரிட்டு வளர்க்கும்போது ஏனையோர் ஆவலையும் விருப்பத்தையும் தூண்டி விடுகின்றனர். இயல்பாகவே தீயோனாக இல்லாத அவன் தீய சேர்க்கையிருப்பதனால் கடைசியில் இவ்விரண்டு இயல்புகளின் செல்வாக்கால் ஒரு நடுத்தர நிலையை அடைகிறான். அதனால் தன் இதயத்தே இருக்கும் நல்லிடத்தைப் போட்டியிடும் மனப்பான்மைக்கும் ஆசைக்கும் அளித்துவிடுகிறான். அதன்பயனாகக் கர்வமிகுந்து பேராசை பிடித்தவனாகிறான்.

அதைமாந்தஸ் : அவனது தோற்றத்தை மிகவும் நன்கு விளக்கி விட்டீர்களே ?

சாக்ரடீஸ் : இங்கே இரண்டாவது வகையான அரசாங்க அமைப்பையும் அத்தகைய தன்மைவாய்ந்த மனிதரையும் கண்டு விட்டோம்.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : அடுத்து இன்னுமொரு மனிதனையும் நாம் காண வேண்டும். அவன் அக்கில்லஸ் கூறியதுபோல மற்றொரு நாட்டை எதிர்த்துக் கிளம்பியுள்ளான். நமது திட்டத் தின்படி முதலில் நாட்டிலிருந்தே தொடங்குவோம்.

அதைமாந்தஸ் : அப்படியே.

சாக்ரடீஸ் : 'ஒரு சிலராட்சி' நமது வரிசையில் அடுத்துக் காணப்படுகிறது என எண்ணுகிறேன்.

அதைமாந்தஸ் : ஆம். ஆனல் எந்தவிதமான அரசாங்கத்தைத் தாங்கள் ஒரு சிலராட்சி என்று கருதுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : செல்வத்தின் அடிப்படையில் அரசாங்கம் அமைக் கப்பட்டு, பணக்காரர்கள் அதிகாரம் உடையவர்களாயும் ஏழைகளிடமிருந்து இது விலக்கப்பட்டும் உள்ள ஆட்சியை ஒரு சிலராட்சி என்று அழைக்கிறோம்.

அதைமாந்தஸ் : புரிகிறது.

சாக்ரடீஸ் : கவுரவ ஆட்சியினின்றும் ஒரு சிலராட்சிக்கான மாறுதல் எப்படி ஏற்படுகிறது என்பதைச் சொல்லவேண்டு மல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : நல்லது. இங்கே ஒன்று எப்படி மற்றொன்றாக மாறு கிறது என்று காண்பதற்குத் தனிக் கண்கள் தேவையில்லை.

அதைமாந்தஸ் : ஏன் ?

சாக்ரடீஸ் : தனிப்பட்டவரின் பொக்கிஷத்தில் தங்கம் குவிந் தால் கவுரவ ஆட்சிக்கு அழிவு ஏற்படுகிறது. அவர்கள் நேர்மையற்ற வகையான செலவுகளைக் காண்பர். அவர்களா வது அவர்தம் மனைவியராவது சட்டத்தைப் பற்றிக் கவலைப் படுவார்களா ?

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : ஒருவன் பணக்காரனுவதைக் கண்டு மற்றொருவன் அவனுடன் போட்டியிடுகிறன். இவ்வாறு பெரும்பாலான மக்கள் பணத்தாசை பிடித்தவர்களாகின்றனர்.

அதைமாந்தஸ் : ஏற்படக்கூடியதுதான்.

சாக்ரடீஸ் : பணம் அதிகரிக்க அதிகரிக்க மேலும் மேலும் பணம் சேர்க்க அவர்கள் விழைகின்றனர். அவர்களிடம் ஒழுக்கத் தைப் பற்றிய சிந்தனை குறைகிறது. ஏனெனில் செல்வத்தை

யும் ஒழுக்கத்தையும் தராசின் இரு தட்டுக்களில் வைத்தால் ஒன்றுமேல் நோக்கினுல் மற்றொன்று கீழ்ச் சென்று விடு கிறது.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: அப் பணத்திற்கு ஏற்பப் பணக்காரர்கள் நாட்டில் கவுரவிக்கப்படுகிருர்கள். அறமும் ஒழுக்கசீலர்களும் பழிக்கப் படுகிருர்கள்.

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: எதைக் கவுரவிக்கிருர்களோ அதுதானே வளர்க் கப்படும்? எதற்குக் கவுரவமில்லையோ அது ஒதுக்கப்பட்டு விடுகிறது.

அதைமாந்தஸ்: அது இயற்கைதானே?

சாக்ரடீஸ்: ஆகவே, கடைசியில், மனநிறைவையும் புகழையும் விரும்புவதற்குப்பதிலாகப் பணத்தையும் வாணிபத்தையுமே விரும்புகின்றனர். பணக்காரனைக் கவுரவித்து நேசித்து அவனை ஆட்சியாளனுக்குகின்றனர். ஏழையை அவமதிக் கின்றனர்.

அதைமாந்தஸ்: அவர்கள் அப்படித்தான் செய்வர்.

சாக்ரடீஸ்: அடுத்து அந்நாட்டுக் குடிமகனுவதற்கு ஒரு குறிப் பிட்ட தொகையை நிர்ணயிக்க ஒரு சட்டம் கொண்டு வரு கின்றனர். ஒரு இடத்தில் அத்தொகை அதிகமாயும் மற்றொரு இடத்தில் குறைவாயும் ஒரு சிலராட்சி அத்தன்மை யில் அதிகமாகவோ குறைவாகவோ விளங்குதற்கேற்ப அமைகிறது. குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாகப் பொருள் பெற்று ஒருவனை அவர்கள் அங்கீகரிப்பதில்லை. அவனுக்கு ஆட்சியில் எவ்விதப் பங்கும் கிடையாது. இம் மாறுதல்களைப் பயமுறுத்திச் செய்ய இயலாவிடில் படை பலத்தால், அவர்கள் ஏற்படுத்துகின்றனர்;

அதைமாந்தஸ்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: பொதுவாக இவ்வாறுதான் ஒரு சிலராட்சி ஏற்படு கின்றது.

அதைமாந்தஸ்: ஆம், அந்த அரசாட்சியின் குணங்கள் யாவை? நாம் பேசிக்கொண்டிருந்த அதன் குறைகள் யாவை?

சாக்ரடீஸ்: முதலில், அதன் தகுதிகளினியல்பை ஆராய்வோம். செல்வத்தின் அடிப்படையில் கப்பலோட்டி தேர்ந்தெடுக்கப் பட்டால் என்ன நிகழும் என்று சற்று யோசித்துப் பார்.

அங்கு ஏழை ஒருவன் கப்பலோட்டுவதில் சிறந்தவனு யிருப்பினும் அவனுக்கு முன்னேற வாய்ப்பிராது அல்லவா?

அதைமாந்தஸ்: கப்பல் மூழ்கி அவர்கள் நீருக்கு இரையாவர் என்கிறீர்கள் இல்லையா?

சாக்ரடீஸ்: ஆம். எந்த ஆட்சிக்கும் இது பொருந்துமல்லவா?

அதைமாந்தஸ்: அப்படித்தான் நானும் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ்: இது நகர ஆட்சியைத் தவிர ஏனையவற்றுக்குப் பொருந்தும் என்கிருயா? அன்றி நகரத்தையும் இதில் சேர்த்து விடுவாயா?

அதைமாந்தஸ்: இல்லை, ஒரு நகரின் நிலை மிகவும் வலுவானது. ஏனெனில் நகர நிர்வாகம் ஏனையவற்றைவிடப் பெரியதும் கடினமானதுமாகும்.

சாக்ரடீஸ்: அப்படியானுல் இதையே ஒருசிலராட்சியின் முதற் குறையாகக் கொள்வோம்.

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அதைப் போன்றே தீமைமிக்க மற்ருெரு குறையும் இங்கு உளது.

அதைமாந்தஸ்: என்ன குறை அது?

சாக்ரடீஸ்: தவிர்க்க முடியாத பிரிவினை. அந்த நாடு இருபிரிவானது. ஒன்று ஏழைகளுடையதும் மற்ருென்று பணக்காரருடையதுமாகும். ஒரே நாட்டில் அவர்கள் ஒருவரை எதிர்த்து ஒருவர் சதி செய்து கொண்டு வாழ்வர்.

அதைமாந்தஸ்: அது மிகவும் மோசமானதுதான்.

சாக்ரடீஸ்: மற்ருெரு வெறுக்கத்தக்க அம்சம் யாதெனில் அந்தத் தன்மையின் காரணமாகவே போரிடத் தகுதி அற்றவர்களாகி விடுகின்றனர். அவர்கள் பெரிய கூட்டத்துக்கு ஆயுதங்கள் அளித்துப் பின்னர் எதிரியைவிடத் தமது படையினையே கண்டு அச்சமுறுவர். அல்லது போர்க் காலங்களில் அப்படையினரை வெளியே அழையாவிடில் ஒருசிலர் ஆள்வது போன்று ஒருசிலரே போரிடும்படி நேர்ந்துவிடும். அதே சமயத்தில் அவர்களது பண ஆசை அவர்களை வரி கொடுக்க மறுக்கும்படிச் செய்துவிடுகிறது.

அதைமாந்தஸ்: எவ்வளவு கீழ்த்தரமானது?

சாக்ரடீஸ்: மேலும், நாம் முன்னர்ச் சொன்னதுபோல் அந்த ஆட்சியில் ஒரு மனிதனே பலவித, வேலைகளையும் செய்

வான். அவனே உழவனும் வியாபாரியும் வீரனும் எல்லாம். இது காண்பதற்கு நன்ருக உள்ளதா?

அதைமாந்தஸ்: இது நன்மைக்குப் புறம்பானது.

சாக்ரடீஸ்: இங்கு மற்றுமொரு தீங்கும் உண்டு. அது எல்லாவற்றையும் விடப் பெரிதும்கூட. அதுதான் அந்த ஆட்சியில் முதலில் ஏற்படக் கூடியது.

அதைமாந்தஸ்: அது என்ன?

சாக்ரடீஸ்: ஒருவன் தனது ஆஸ்தி முழுவதையும் விற்கலாம். மற்றவன் அதை வாங்கலாம். இருந்தும் அந்த விற்பனைக்குப் பிறகு அந்நாட்டின் எப்பகுதியும் சொந்தமில்லாத அவனும் அந்நாட்டிலேயே வசிக்கலாம். இப்பொழுது அவன் வியாபாரியுமல்ல வீரனுமல்ல ஆனல் ஒரு உதவியற்ற ஏழையே அவன்.

அதைமாந்தஸ்: ஆம். அத்தீங்குதான் அங்கு முதலில் ஏற்படும்.

சாக்ரடீஸ்: இத்தீமையை அவர்கள் தடுப்பதேயில்லை. மிகப் பெரிய பணக்காரன் மிக மோசமான ஏழை ஆகிய இரு நிலைகளையும் நாம் ஒரு சிலராட்சியில் காணமுடியும்.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: மீண்டும் நினைத்துப்பார். இன்னும் செல்வமிக்கவன் தன் பணத்தைச் செலவிடும்போது நாட்டிற்குகந்த நல்லவனுகவும் குடிமகனுகவும் இருக்க அருகதை உடையவனுயிருப்பான? அல்லது ஆட்சிக்குழுவில் ஒருவனுக அவன் விளங்குவான? உண்மையில் அவன் குடிமகனுமல்ல ஆட்சியாளனுமல்ல, ஆனல் ஒரு செலவாளி.

அதைமாந்தஸ்: நீங்கள் சொல்வதைப்போல் ஆட்சியாளனுக அவன் காணப்படினும் உண்மையில் அவன் செலவாளிதான்.

சாக்ரடீஸ்: அவனைத் தேன்கூட்டிலுள்ள ஆண் தேனீக்கு ஒப்பிடலாமல்லவா? அது தேன் கூட்டிற்கு உள்ளதுபோல இவன் நாட்டிற்குத் தொற்று நோய்தானே.

அதைமாந்தஸ்: அப்படித்தான், சாக்ரடீஸ் அவர்களே!

சாக்ரடீஸ்: அதைமாந்தஸ்! பறக்கும் தேனீக்களை எல்லாம் கொடுக்கற்றவையாகப் படைத்ததைப்போன்று இந்த நடக்கும் சோம்பேறிகளை—சிலரைக் கொடுக்கில்லாமலும்,

சிலரைப் பயங்கரமான கொடுக்குடனும்—கடவுள் படைத்துள்ளார். அவர்களுள் கொடுக்கில்லாதவர்கள் தம் வாழ்வின் இறுதியில் வறியோராகி விடுகின்றனர். கொடுக்குள்ளவர்களோ குற்றவாளிகளெனப்படும் தீயோராகின்றனர்.

அதைமாந்தஸ்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: எப்பொழுதாவது வறியோர்கள் ஒரு நாட்டில் காணப்பட்டால் அங்கேயே கொள்ளைக்காரர்களும், பணப்பை எடுப்பவர்களும், கோயில் திருடர்களும் இன்னும் எல்லாவகைத் தீயோர்களும் மறைந்திருக்கின்றனர் என்பது தெளிவு.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: ஒருசிலராட்சியில் வறியோர்களைக் காணவில்லையா?

அதைமாந்தஸ்: ஆம், ஆட்சியில்லாத அனைவருமே வறிஞர் தாம்.

சாக்ரடீஸ்: அவர்களில் அனேகக் குற்றவாளிகளும் இருப்பர் என நாம் உறுதியாக நம்பலாம் அல்லவா? கொடுக்குள்ள தீயோர்களும் இருப்பர். பலத்தால் அவர்களை அடக்குவதில் அதிகாரிகள் கவனமாயிருப்பர்.

அதைமாந்தஸ்: அப்படித்தானிருக்கும் என்று திட்டமாகக் கூறலாம்.

சாக்ரடீஸ்: அவ்விதமான மனிதர் இருப்பதற்குக் காரணம் கல்வி இன்மையும், முறையான பயிற்சியின்மையும், நாட்டின் தீய அரசியலமைப்புமே யாகும்.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: இதுவே ஒரு சிலராட்சியின் நிலை; இவைகளே அதன் தீமை; மேலும் பல தீமைகளும் அதனிடம் காணலாம்.

அதைமாந்தஸ்: இருக்கும்.

சாக்ரடீஸ்: ஒருசிலராட்சியை அல்லது பணத்தின் அடிப்படையில் ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று, அவர்களால் அமையும் ஆட்சியை இத்துடன் நிறுத்திக்கொண்டு அதற்கேற்ற மனிதனுடைய தன்மையையும் குணங்களையும் காண்போம்.

அதைமாந்தஸ்: சரி.

சாக்ரடீஸ்: கவுரவ அரசியல் விழைவோன் ஒருசிலராட்சியின் தன்மை வாய்ந்தவனாக மாறமாட்டானா?

அதைமாந்தஸ் : எங்ஙனம் ?

சாக்ரடீஸ் : கவுர ஆட்சியின் பிரதிநிதிக்கு ஓர் மகன் பிறக்கிறன் என்போம். முதலில் தந்தையின் அடிச்சுவடு களிலேயே சென்று தந்தையுடன் போட்டியிடுகிறன். ஆனுல், திடீரென்று மூழ்கிய கற்பாறையில் மோதியது போன்று அவன் தந்தை நாட்டிற்கெதிராகத் தடுமாறுவதைக் காண்கிறன். அவர் தன்னையும் தான் பெற்ற எல்லாவற்றை யும் இழந்து விடுகிறர். படைத் தளபதியாகவோ அன்றி ஓர் உயர் அதிகாரியாகவோ இருந்த அவர்மீது கோள் சொல் வோர் செய்த மனமாற்றத்தின் காரணமாக வழக்குத் தொடரப்பட்டு நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்படுகிறர். அங்கு ஒன்று அவர் கொலைத் தண்டனை பெறலாம். அன்றி நாடு கடத்தப்படலாம். அன்றி அவர் தம் உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர் சொத்துக்களெல்லாம் பறிக்கப்படலாம்.

அதைமாந்தஸ் : ஏற்படக் கூடியதுதான்.

சாக்ரடீஸ் : இவையனைத்தையும் கண்டறிந்த மகன், தன் தந்தை சீரழிக்கப்பட்டு விட்டார் என்பதை உணர்கிறன். அவனது அச்சம் தன் மனத்தினின்று உயர்வின் நாட்டத்தையும் ஆசையையுமே தலை கீழாக உதறித்தள்ளிவிடச் செய்கிறது. ஏழ்மையால் உந்தப்பட்ட அவன் பொருளீட்டுவதை மேற் கொண்டு கீழ்த்தரமான சிக்கனமான சேமிப்புக்களாலும் கடின உழைப்பாலும் செல்வந்தனுகிறன். அத்தகைய தன்மை பெற்ற அவன் காமத்துக்கும் பேராசைக்குமே தன் உள்ளத்தில் இடமளித்து இவற்றையே முடியும் குதிரையும், சங்கிலியும் கத்தியுமாகத் தன்னை ஆளவிட்டு விடுவா னன்றே ?

அதைமாந்தஸ் : ஆம் மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : சிந்தனை, உணர்வு ஆகியவற்றை அவனுள்ளத்தை யாளும் காமத்துக்கும் பேராசைக்கும் கீழ்ப்படிந்து இருபுற மும் அமரச் செய்து, அவைகளின் தற்போதுள்ள தாழ்ந்த நிலைகளை அவைகளுக்கு உணர்த்தி எப்படிச் சிறிய தொகை யினுல் பெரிய தொகையை யாக்கலாம் என்பதைப் பற்றியே எண்ணும்படிக் கட்டாயப்படுத்தி, பணத்தையும் பணக்காரர் களையும் மட்டுமே விரும்பி வழிபட வேண்டுமென்றே அன்றிச் செல்வம் பெறுவதையும் அதனைப் பேணும் வழிகளை யும் பற்றியே பேரவாக் கொள்ள வேண்டுமென்றே அவற்றைக் கட்டாயப்படுத்துகிறன்.

அதைமாந்தஸ் : ஆவலுள்ள இளைஞன் பணத்தாசை மிக்க வனாக மாறுவதைப் போன்ற துரிதமான மாறுதல் வேறு எதுவுமே இராது.

சாக்ரடீஸ் : இப்பேராசை கொண்டவன்தானே ஒருசிலராட்சித் தன்மை வாய்ந்த இளைஞன் ?

அதைமாந்தஸ் : ஆம். எப்படிக் கவுரமான ஆட்சியினின்றும் ஒருசிலராட்சி ஏற்பட்டதோ அதைப் போன்றே அந்தத் தன்மை வாய்ந்தவனிடத்தினின்றும் இவன் தோன்றுகிறான்.

சாக்ரடீஸ் : இனி இவர்களிடையே ஏதேனும் ஒற்றுமையுளதா என்று பார்ப்போம்.

அதைமாந்தஸ் : மிகவும் நல்லது.

சாக்ரடீஸ் : செல்வத்தின்மீது வைக்கும் மதிப்பில் ஒருவன் மற்றவனைப் போன்றவன்.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இழிந்த தன்மையிலும் கடின உழைப்பிலும் அவர் கள் ஒத்துப் போகின்றனர். தனக்குத் தேவையான வேட் கைகளையே அவன் திருப்தி செய்து கொள்கிறான். அவை களுக்காகவே அவன் செலவிடுகிறான். ஏனைய ஆசைகளைப் பயனற்றவை என்ற எண்ணத்தினால் ஒதுக்கிவிடுகிறான்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : ஒவ்வொன்றிலும் சிறிது சிறிது சேமித்துத் தனக் கெனப் பணம் சேர்க்கும் அவன் ஒரு மோசமானவன். கீழ்த்தரமானவர்களும் அவனையே போற்றுகின்றனர். அவனது நாட்டுக்கேற்ற உண்மையான இயல்பு அவனிடம் காணப்படுகிறது அல்லவா ?

அதைமாந்தஸ் : அப்படித்தான் எனக்கும் தோன்றுகிறது. எங்ஙனமாயினும், அவனும் சரி, அவனுடைய நாடும் சரி பணத்தையே பெரிதும் மதிக்கின்றனர்.

சாக்ரடீஸ் : அவன் நன்கு பண்பாடு பெற்றவனில்லை என்று நீ நினைக்கிறாய் அல்லவா ?

அதைமாந்தஸ் : நான் அப்படி நினைக்கவில்லை. அவன் கல்வி புகட்டப்பட்டிருப்பானானால், தனது இசைக் குழுவினரை மேற்பார்வையிட ஓர் குருட்டுத் தெய்வத்தை அமைத்து அதனைக் கவுரவித்திருக்கமாட்டான்.

சாக்ரடீஸ் : மிக நன்று ! இன்னும் பார். பண்பாடில்லாத தனால் சோம்பேறித்தனமும், அற்பர், வறிஞர்கொள்ளும்

கீழ்த்தர ஆசைகளும் அவனிடம் உள்ளன ; ஆனால் வாழ்க்கை முறையின் காரணமாகப் பழக்கத்தினால் இவை அடக்கி வைக்கப்படுகின்றன அல்லவா ?

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அவனது போக்கிரித்தனத்தை நீ கண்டுபிடிக்க விரும்பினால் எங்கே காணலாம் என்பதை நீ அறிவாயா ?

அதைமாந்தஸ் : நாம் எங்கே நோக்க வேண்டும் ?

சாக்ரடீஸ் : ஒரு அநாதையின் காப்பாளனாகச் சில சமயங்களில் அவன் நேர்மையற்று நடக்கும் வாய்ப்பைப் பெறும்போது நீ காணலாம்.

அதைமாந்தஸ் : சரி.

சாக்ரடீஸ் : நேர்மைக்குக் கவுரவம் கொடுக்கும் அவனது அன்றாட நடவடிக்கைகளில் தனது தீய எண்ணங்களை, வற்புறுத்தப்பட்ட அறத்தால் கட்டாயப்படுத்துகிறான். அவை தவறானவை என்றுகூடத் தோன்றாதபடிச் செய்து காரணங்களால் அவற்றை நிலைநிறுத்தாது, கட்டாயத்தாலும் பயத்தினாலுமே வற்புறுத்துகின்றான். ஏனெனில் அவன் தனது உடைமைகட்காகவே நடுங்குகிறான்.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆம். எனதருமை நண்பா, உண்மை. சோம்பேறி ஈயின் இயல்பான ஆசைகளனைத்தும் அவனிடம் இருப்பதை அவன் தனதல்லாதவற்றைச் செலவிடும்போது நன்கு காணலாம்.

அதைமாந்தஸ் : ஆம். அவனிடம் அவை தீவிரமாகவே காணப்படுகின்றன.

சாக்ரடீஸ் : அவனிடம் தனக்குள்ளேயே போரிடுகிறான். அவன் ஒருவனாயிராது இருவனாகிவிடுகிறான். ஆனால், பொதுவாக அவனது நல்ல ஆசைகள் அவனது தீய ஆசைகளைவிட மேலோங்கியே இருக்கும்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : இத்தகைய காரணங்களால் இவன் ஏனைய பலரை விடச் சிறந்தவனாவன். இருப்பினும், ஒருமைப்பாடும் சமநிலையும் பெற்ற மனத்தின் நற்பண்புகள் அவனை விட்டேகிவிடும், அணுகவே அணுகா.

அதைமாந்தஸ் : நானும் அப்படித்தான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : நிச்சயமாக, தனிப்பட்ட முறையில் ஒரு உலோபி, வெற்றியின் எந்தப் பரிசுக்கும் அல்லது பெருமை வாய்ந்த மற்ற எந்தப் பொருளுக்கும் மிக இழிந்த போட்டியாளனுகிறுன். புகழடைவதற்குப் போட்டியிடுவதில் அவன் தனது செல்வத்தைச் செலவிடமாட்டான். செலவதிகமாகுமெனப் பயந்து இப்போட்டியில் தனது அவாக்களுக்குக் கட்டுப்படமாட்டான். உண்மையான ஒருசிலராட்சியின் இயல்புடனேயே அவன் தனது உடைமையின் ஒருசிறு பகுதியைக் கொண்டே போட்டியிடுவான். விளைவுயாதெனில் அப்பரிசை அவன் இழப்பான். ஆனுல் அவன் பணம் செலவாகாது சேமிக்கப்படும்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : உலோபியும் பணம் சேர்ப்பவனுமே ஒருசிலராட்சிக்கு ஏற்றவர்கள் என்று சந்தேகமின்றிக் கூறலாமல்லவா ?

அதைமாந்தஸ் : அதில் சந்தேகமில்லை.

சாக்ரடீஸ் : அடுத்து வருவது ஜனநாயகம். இதன் தோற்றமும் இயல்பும் நம்மால் ஆராயப்பட வேண்டியுள்ளன. அதன்பிறகு அத்தன்மை வாய்ந்த மனிதனின் இயல்புகளைக் கண்டு அவனுக்குத் தீர்ப்புக் கூறுவோம்.

அதைமாந்தஸ் : அதுதான் நமது வழி.

சாக்ரடீஸ் : நல்லது. ஒருசிலராட்சியினின்றும் எங்ஙனம் மக்களாட்சி தோன்றுகின்றது? பின்கண்டவாறு தானே? ஒருசிலராட்சியின் திருப்தி செய்யவொண்ணுத ஒரு விழைவு—அவ்வாட்சி எப்போதும் நாடும் ஓர் நலன்—முடிந்த அளவு அதிகப் பொருள் ஈட்ட வேண்டும் என்பதே அல்லவா ?

அதைமாந்தஸ் : அதனுல் ?

சாக்ரடீஸ் : நமது அதிகாரம் நமது செல்வத்தைப் பொறுத்ததே என்றுணர்ந்த ஆட்சியாளர்கள் செலவாளியான இளைஞர்களுடைய கட்டுக்கடங்காத தன்மையைச் சட்டத்தின்மூலம் தடுக்கமாட்டார்கள், அவர்களது அழிவே ஆட்சியாளருக்கு லாபம் தரும். ஆனுல் அவர்களிடமிருந்து வட்டியைப் பெறுவதுடன் அவர்கள் சொத்துக்களையும் விலைக்கு வாங்கிக் கொண்டு தம் செல்வத்தையும் முக்கியத்துவத்தையும் பெருக்கிக் கொள்வர் அல்லவா ?

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : எந்த ஒரு அரசியலிலும் மக்களிடையே செல்வத்தின்மீது மோகமும், மிதமாயிருத்தலில் நாட்டமும் ஒருங்கு சேர்ந்து தோன்ருது. ஏதாவது ஒன்று அவமதிக்கப்படும்.

அதைமாந்தஸ் : இது நன்கு விளங்குகிறது.

சாக்ரடீஸ் : ஒருசிலராட்சியில் நல்ல குலத்தில் பிறந்தவர்கள் பரவிநிற்கும் கவனக் குறைவாலும் கட்டுக்கடங்காச் செலவுகளாலும் எளிதில் பிச்சைக்கார நிலையெய்துகின்றனர்.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : இருந்தும் இவர்கள் நகரிலேயே வசிப்பர். ஆனால் அவர்களோ முழு ஆயுதங்களுடனும் எதிர்ப்பதற்குத் தயாராகவும் இருக்கின்றனர். சிலர் கடன்பட்டவர்கள் ; சிலர் உரிமை இழந்தவர்கள், மற்றும் சிலரோ இரண்டுவகைக் கேடும் உற்றவர்கள். இவர்கள் செல்வமிக்கவர்களைக் கண்டு வெறுப்படைந்து அவர்கட்கும் மற்ருேர்க்கும் எதிராகச் சதி செய்கின்றனர். புரட்சி செய்ய ஆவலுள்ளவர்களாய் உள்ளனர்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : மற்ருெரு புறத்தில் வணிகச் செல்வந்தர்களோ, தரையையே நோக்கி நடந்து கொண்டு தாங்கள் முன்பு பாழாக்கியவர்களைப் பார்க்கவும் விரும்பாதாரைப் போன்று பாசாங்கு செய்து கொண்டு, அஜாக்கிரதையாக உள்ளவர்களிடம் தங்கள் கொடுக்குகளைச் சொருகி அதாவது பணத்தைக் கொடுத்துவிட்டுப் பிறகு அப்பணத்தைப் பன்மடங்காகப்—பல குழந்தைகளால் பெருகிய குடும்பத்தைப்போல—பெறுகின்றனர். அங்ஙனம் அந்நாட்டைத் தரித்திரர்களும் சோம்பேறிகளும் மிகுந்தவர்களாகச் செய்து விடுகின்றனர்.

அதைமாந்தஸ் : ஆம் உண்மைதான். அவர்கள் மிகுதியாகத்தானிருக்கிருர்கள்.

சாக்ரடீஸ் : இத்தீங்கு நெருப்பைப்போலப் பரவுகின்றது. மக்கள் தம் சொத்துக்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தியோ அன்றி மற்ற எந்தத் தடுப்பு முறையினுலோ அத்தீயை அவர்கள் அணைப்பதில்லை.

அதைமாந்தஸ் : வேறு தடுப்பு முறை என்ன ?

சாக்ரடீஸ் : அடுத்த சிறந்த முறை குடிமக்களைத் தங்கள் நடத்தையை உணரும்படிச் செய்யும் தன்மை வாய்ந்தது.

அதாவது ஒவ்வொருவனும் தன்போக்காகச் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கு அவனவனே பொறுப்பாளி என்று ஒரு பொது விதி வரட்டும். அப்பொழுது இந்த இழிவான பணம் சம்பாதிக்கும் முறை குறைவதுடன் நாம் இதுகாறும் பேசிவந்த தீமைகளும் ஓரளவு குறையும்.

அதைமாந்தஸ்: ஆம். பெரும்பகுதி குறையும்.

சாக்ரடீஸ்: நான் இப்பொழுது கூறிய எண்ணங்களால் தூண்டப்பட்ட ஆட்சியாளர்கள் தம் குடிமக்களைமிகவும் கேவலமாக நடத்துகின்றனர். அதே சமயத்தில் அவர்களும் அவர்களைப் பின்பற்றுவோரும் குறிப்பாக ஆளும் வர்க்கத்தின் இளைஞர்களும் மிகவும் ஆடம்பரமானதும் உடல், உள்ளம் ஆகியவற்றில் சோம்பேறித்தனம் மிகுந்ததுமான வாழ்க்கையே வாழ்கின்றனர். அவர்கள் ஒன்றுமே செய்வதில்லை. இன்பத்தையோ துன்பத்தையோ தாங்கும் வல்லமையும் அவர்களுக்கு இல்லை.

அதைமாந்தஸ்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: அவர்கள் பணம் சேர்ப்பதிலேயே கவனமாயிருப்பர். நன்னடத்தையைப் பயில்வதில் வறியோனைப் போன்று அலட்சியமாயிருப்பர்.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: அங்கு இருக்கும் நிலை இதுதான். அடிக்கடி ஆட்சியாளர்களும் குடிமக்களும் ஒருவரை ஒருவர் சந்திப்பதும் உண்டு. பிரயாணத்திலோ, அணிவகுப்பிலோ அவர்கள் சக வீரர்களாக அன்றிச் சகமாலுமிகளாகவோ செல்லக்கூடும். இடுக்கண் வரும்போது ஒருவர் மற்றொருவருடையநடத்தையைக் கவனிக்கலாம். இடுக்கண் நேர்ந்தபோது ஏழைகளைப் பணக்காரர்கள் வெறுத்து விடுவார்களோ என்ற அச்சம் இல்லை. மேலும், தனது நிறங்கெடாமல் சதைப் பற்றுக உள்ள பணக்காரனுடனேயே இணைத்து வெயிலில் கருகிய ஏழை ஒருவனும் போரில் நிறுத்தப் படலாம். அந்நிலையில் பெருமூச்செறியும் அப்பணக்காரனைக் காணும் ஏழை அவனைக்கெடுக்கும் தீரம் எவர்க்குமில்லாததால்தான் அவன் செல்வந்தனுகவே இருக்கிருன், என்ற முடிவுக்குத் தானே வர முடியும்? இன்னும் தனியே அவர்களைச் சந்திக்கும் போது பொது மக்கள் தமது போர் வீரர்கள் இலாயக்கற்றவர்கள் என்றுதானே பேசிக் கொள்வார்கள்?

அதைமாந்தஸ்: ஆம். அவர்கள் பேசும் முறை இதுதான் என் பதறிவேன்.

சாக்ரடீஸ்: வியாதியுற்ற ஓர் உடலை வெளியிலிருந்து மற்றொன்று தொடும்போது பிணி அதிகரிக்கின்றது. அப்படியில்லாவிடினும் உள்ளுக்குள்ளிருந்தே குமுறலும் ஏற்படும். அதைப்போன்றே நாட்டில் எங்காவது வலுவற்ற நிலை ஏற்படும்போது அதுவே அந்நாட்டிற்கு நலிவு. அசாதாரண நிகழ்ச்சியா யிருந்தால்கூட ஒருசிலராட்சியினரும் மக்களாட்சி பேணுவோரும் தம்மவர் சிலரை வெளியிலிருந்து கொணரக்கூடும். அப்பொழுது நாடு நோயுறுகின்றது. அதனுள்ளேயே போர் மூளுகின்றது. வெளியிலிருந்து எவ்வித ஆபத்தும் ஏற்படாவிடினும் உள்ளேயே ஒற்றுமையின்மை ஏற்பட்டு விடுகின்றது.

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அப்போரில் ஏழைகள் தம் எதிரில் சிலரைக் கொன்றும், சிலரை நாடுகடத்தியும் வென்ற பிறகு மக்களாட்சி ஏற்படுகின்றது. எஞ்சியுள்ளவர்கட்கு உரிமையும் அதிகாரமும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. இந்த ஆட்சியில் நீதி செலுத்துவோர் மக்களாலேயே தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

அதைமாந்தஸ்: ஆம். அவ்வாறுதான் அச்சத்தினலோ அன்றிப் படைகளாலோ புரட்சி ஏற்பட்டு எதிரிகள் விரட்டப்பட்டவுடன் மக்களாட்சி அமைகிறது.

சாக்ரடீஸ்: இனி அவர்கள் வாழ்க்கை முறை யாது? அவர்களின் ஆட்சித்தன்மை யாது? என்பனவற்றைக் காண்போம். எப்படி ஆட்சியுள்ளதோ அப்படித்தானே அங்குள்ள மனிதனும் இருப்பான்?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: முதலாவதாக, அவர்களனைவரும் சுதந்திரமாக இல்லையா? அந்நகர் முழுதும் சுதந்திரமும் நேர்மையும் நிறைந்துள்ளன அல்லவா? ஒருவன் தான் நினைப்பதைச் சொல்லலாம்; செய்யலாம் அல்லவா?

அதைமாந்தஸ்: அப்படித்தான் சொல்லப்படுகிறது.

சாக்ரடீஸ்: எங்கு சுதந்திரம் உள்ளதோ அங்கு மனிதன் தன்னிச்சைப்படித் தன் வாழ்வை அமைத்துக் கொள்ளலாம். அல்லவா?

அதைமாந்தாஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: இந்த ஆட்சியில் மனிதத்தன்மையில் பலவேறு பாடுகளும் இருக்கப்பெறுமா?

அதைமாந்தஸ்: இருக்கும்.

சாக்ரடீஸ்: நாடுகளிலெல்லாம் அழகுடைத்தாக இது காணப் படுகிறது. எல்லாவிதப் பூ வேலைகளாலும் அலங்கரிக்கப் பட்ட அழகான ஆடைபோல விளங்குகின்றது. எப்படிப் பெண்டிரும் சிறுர்களும் வண்ணங்களின் நிறைவையே எல்லாவற்றிலும் அழகானதென்று எண்ணி மகிழ்கிருர்களோ அதைப்போன்றே பல்வேறுபட்ட மனிதத் தன்மையும் இயல் பும் கொண்ட இந்நாடு எல்லா நாடுகளையும்விட மிகச் சிறந்த தாகப் பலருக்குத் தோன்றும்.

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: ஆம் எனதருமை நண்பா, ஆட்சி முறையைக் காணும்போது அதைவிடச் சிறந்த நாடு இருக்க முடியாது.

அதைமாந்தஸ்: ஏன்?

சாக்ரடீஸ்: ஏனெனில் அங்கு உரிமை ஆளுகின்றது. அரசிய லமைப்புக்களின் எல்லா வகைகளும் அவர்களிடமே காணப் படுகின்றன. நாம் முன்னே செய்ததைப் போன்று ஒரு நல்ல நாட்டை அமைக்க இருக்கும் எண்ணமுடைய ஒருவன் குடியாட்சி முறைக்குச் செல்லவேண்டும். பொருள்கள் பல வும் விற்கப் பெறுகின்ற கடைக்குச் சென்று, ஒருவன் தனக் குப் பொருத்தமான ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது போல் தேர்ந்தெடுத்து, அவனுடைய விருப்பப்படி, அவன் அதற்கேற்ற ஆட்சியை அமைத்துக் கொள்ளலாம்.

அதைமாந்தஸ்: ஆம். அங்கு பல அமைப்புகள் காணப்படும்.

சாக்ரடீஸ்: நீ தான் ஆள வேண்டும் என்ற தேவையில் லாததனுல் உனக்குத் திறமையிருந்தும்கூட நீ சும்மா யிருக்கலாம். ஏனையோர் போருக்குப் போகும்போது நீ நினைத்தால் போருக்குச் செல்லலாம் அன்றிச் சும்மா யிருக்கலாம். ஏனையோர் அமைதியாக இருக்கும்போது நீயும் அமைதியாக இருக்கலாம் அன்றி அப்படி நினைக் காவிடில் உன்னிச்சைப்படி இருக்கலாம். ஏனெனில் நீ பதவி பெறுவதையோ, நீதிபதியாக இருப்பதையோ ஒரு சில விதிகள் தடுக்கலாம். அதாவது உனக்கு விருப்ப மில்லையானுல் நீ அப்பதவிகளில் இருக்கவேண்டாம் என்று

கூறலாம். இது போன்ற வாழ்க்கை ஒவ்வொரு சமயங்களில் மிகவும் அதிகமாக இருக்குமல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், ஒரு சில நேரங்களில்.

சாக்ரடீஸ் : அவர்களால் புறக்கணிக்கப்பட்டவர்களிடம் அவர்கள் காட்டும் பரிவு சில சமயங்களில் எவ்வளவு வசீகரமாயுள்ளது ; மக்களாட்சியில், சிலர் கொலைத் தண்டனையோ, நாடுகடக்க வேண்டுமென்ற தண்டனையோ பெற்றிருந்தும் அங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அப்பெருமக்கள் மாவீரர்களைப் போன்று நடைபோடுகிறார்கள். அவர்களை ஒருவர்கூடக் கவனிப்பதுமில்லை ; லட்சியம் செய்வதுமில்லை என்பதைக் கவனித்தாயா ?

அதைமாந்தஸ் : ஆம், அதுபோன்று பலர் அங்கு உள்ளனர்.

சாக்ரடீஸ் : இன்னும் பார், மக்களாட்சியில் மன்னிக்கும் தன்மையையும் சிறு சச்சரவுகளைக் கண்டு கலங்காமையையும் கவலையின்மையும் நாம் முன்னரே நாட்டின் அடிப்படையெனக் கண்ட நற்கொள்கைகள் மதிப்பற்றுப் போதலையும் காண்பாயாக ; ஒரு சில தனிப்பேறு பெற்றவர்களைத் தவிர இளமையிலிருந்து அழகான பொருள்களிடையே விளையாடி அவற்றைத் தன் மகிழ்ச்சிப் பொருள்களாக எண்ணுதவன் நல்லவர்களில் ஒருவன்கூட இருக்கமுடியாது என்றெல்லாம் கண்டோம். இந்த மென்மையான நற்கருத்துக்களெல்லாம் மிதித்து நசுக்கப்படுகின்றன ; அரசியலார்க்கு நலம் பயக்கக் கூடியவையென நாம் கண்ட கருமங்கள் கருத்தில் கொள்ளப்படுவதே இல்லை. மக்களின் நண்பர் எனக் கூறிக் கொள்வோர் உயர் பதவிக்கும் கவுரவத்துக்கும் ஏற்றுவிக்கப் படுகின்றனர்.

அதைமாந்தஸ் : ஆம், இவ்வாட்சி உயர்குணம் பெற்று விளங்குவதாம் !

சாக்ரடீஸ் : இதுபோன்ற இன்னும் தொடர்புள்ள தன்மைகள் எல்லாம் சரியான மக்களாட்சிக்குப் பொருந்திய அம்சங்களாகும். வேறுபாடுகளையும் ஒழுங்கின்மையையும் கொண்டு சமமானவர்களுக்கும் சமமற்றவர்களுக்கும் ஒரேவித சமத்துவத்தையளிக்கும் கவர்ச்சிமிக்க ஆட்சியமைப்பு.

அதைமாந்தஸ் : மக்களாட்சியை நாம் நன்கறிவோம்.

சாக்ரடீஸ் : அத்தன்மை வாய்ந்த மனிதன் எப்படியிருப்பான்

அல்லது அவ்வாட்சியின் தோற்றத்தைக் கண்டதுபோல் அவன் எவ்விதம் அமைந்தான் என்பதைக் காண்போம்.

அதைமாந்தஸ் : மிகவும் நல்லது.

சாக்ரடீஸ் : அவன் உலோபியாகவும் ஒருசிலராட்சித்தன்மை வாய்ந்தவனுகவும் உள்ள ஒருவனின் மகனுகத் தோன்றி அதே பழக்கத்தில் வளர்க்கப்பட்டவன் அல்லவா? இது தானே முறை.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : தனது தந்தையைப் போலவே, பணச் செலவு விளைவிக்கக்கூடிய சுகங்களைத் தேவையற்றவை என்று கட்டுப்படுத்துவானல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : தெளிவாகத் தெரிந்துகொள்ளும் பொருட்டு அவசியமான சுகமெது, அவசியமற்ற சுகமெது, என்பதைச் சற்று வேறுபடுத்திக் காண எண்ணுவாயா ?

அதைமாந்தஸ் : ஆம், அதைக் காண வேண்டும்.

சாக்ரடீஸ் : நம்மால் தவிர்க்கமுடியாத சுகங்கள் அவசியமானவை, அவற்றின் திருப்தியால் நமக்குப் பயன் உண்டு அல்லவா ? இது பொருத்தமானதே. ஏனெனில், அவசியமான பயன்தரக்கூடியவற்றை விரும்பக்கூடிய இயல்பு நமக்கு இயற்கையிலேயே அமைந்துள்ளது. அதைத் தவிர்க்க முடியாது.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே அவற்றை அவசியமானவை என்று அழைப்பதில் தவறில்லை.

அதைமாந்தஸ் : தவறென்றும் இல்லை.

சாக்ரடீஸ் : நன்மை செய்யாது சில சமயங்களில் நன்மைக்குப் புறம்பாகவே பயன்தரும் தன்மைவாய்ந்த ஆசைகளை, இளமை முதலே கவனமாக இருப்பின் தவிர்க்கக் கூடியவற்றை, அவசியமற்றவை என்று கருதுதல் சரிதானே.

அதைமாந்தஸ் : ஆம், நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவற்றைப் பற்றி ஓர் பொது எண்ணம் ஏற்பட அவற்றில் ஒவ்வொன்றிலும் ஓர் உதாரணம் எடுத்துக் கொள்வோம்.

அதைமாந்தஸ் : சரி.

சாக்ரடீஸ் : சாதாரண உணவும் சுவையூட்டும் பொருள்களும்

உடல் நலத்திற்காகவும் உடல் வலிமைக்காகவும் தேவைப் படும் என்பதால் உண்ணும் ஆசை அவசியமானதன்றோ?

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: சாப்பிடும் விருப்பம் இருவிதங்களில் அவசியம். முதலில் அது நமக்கு நன்மை செய்கிறது. அடுத்து வாழ்க் கையானது தொடர்வதற்கு அது இன்றியமையாதது.

அதைமாந்தஸ்: ஆம்.

சாக்ரடீஸ்: ஆனல் உடலுக்கு நன்மை செய்யுமளவிற்கே சுவையூட்டும் பொருள்கள் அவசியம்.

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அதற்கு மேற்பட்ட ஆசை - நல்ல மிருதுவான உணவு அல்லது மற்ற ஆடம்பரமான உணவு ஆகியவற் றைத்—தவிர்க்கவேண்டும். சாதாரணமாக அவை தவிர்க்கக் கூடியவை. அவற்றை இளமை முதலே கட்டுப் படுத்தப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். இவ்வாசை உடலுக்கு ஊறு செய்யும்; அறிவையும் அறத்தையும் ஆன்மா நாட்டங் கொள்வதற்கு இடையூருக அமையும். இது அவசியமற்றது என்று கருதுவது சரிதானே.

அதைமாந்தஸ்: மிகவும் சரி.

சாக்ரடீஸ்: இந்த ஆசைகள் எல்லாம் பணம் செலவிடச் செய் பவை. ஆனல் மற்றவை உற்பத்திக்கு உதவுவதால் பணம் செய்பவை என்று சொல்லலாமல்லவா?

அதைமாந்தஸ்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: காதல் சுகம் இன்னும் மற்ற சுகங்களுக்கெல்லாம் இது பொருந்துமல்லவா?

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: நாம் முன்னர்ப் பேசிய ஆண் தேனீ—சோம்பேறி— என்பவன் இவ்விதமான சுகத்திலும் ஆசைகளிலும் நிறை பவனே. அவசியமற்ற ஆசைகளுக்கு அவன் அடிமை. ஆனல் அவசியமானவைகளுக்கு அடிமையானவன் உலோபி யாகவும் ஒருசிலராட்சித் தன்மை வாய்ந்தவனுகவும் உள்ளான்.

அதைமாந்தஸ்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: மேலும் ஒருசிலராட்சித் தன்மையினின்றும் எப்படி மக்களாட்சித் தன்மை வாய்ந்த மனிதன் வளர்கிருன் என்று

பார்ப்போம். ஓரளவுக்கு நான் எண்ணும் வழியே சரியான தென்று நான் நினைக்கிறேன்.

அதைமாந்தஸ்: எது?

சாக்ரடீஸ்: நாம் சற்று முன்பு சொன்னதுபோன்று மோசமான உலோபத்தனமான முறையில் வளர்க்கப்படும் ஓர் இளைஞன் ஆண் தேனீயைப்போல் தேனைச் சுவைத்துவிட்டுத் தனக்கு எல்லாவித சுகங்களையும் அளிக்கவல்ல கொடுமையும் தந்திரமும் நிறைந்தவர்களோடு ஈடுபடுகிறன். பிறகு அவன் மனத்திலுள்ள ஒரு சிலராட்சித் தன்மை, மக்களாட்சித்தன்மையாக மாறத் தொடங்குவதை நீ கற்பனை செய்துகொள்ளலாம்.

அதைமாந்தஸ்: தவிர்க்க முடியாது!

சாக்ரடீஸ்: நாட்டில் ஒத்த ஒன்று அதனேடு ஒத்த ஒன்றுடன் சேர்ந்து, மாற்றத்தை ஏற்படுத்துவதுபோல அவனது தன்மையும் மாறுதலுறுகின்றது. வெளியிலிருந்து வந்து ஓர் தொடர்பால் ஒரு பகுதி மக்கள் மாறவே அங்கு மாறுதல் ஏற்பட்டது. அதைப் போன்றே இந்த இளைஞனுக்கும் வெளியிலிருந்து வந்த ஒருவகை ஆசைகளால் அவனுள்ளே உள்ள ஆசைகள் உந்தப்பட்டு, ஒன்றைப் போன்று உள்ளவற்றிற்கு அதைப்போன்ற மற்ருென்று உதவுகிறது அல்லவா?

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: அவனது ஒரு சிலராட்சித் தன்மைக்குதவும் நண்பன் யாரேனும் அங்கிருந்தாலும் சரி, தந்தையின் செல்வாக்கோ அன்றி உறவினரின் செல்வாக்கோ அவனுக்கு அறிவுறுத்தினுலும் சரி, அவனைத் திட்டினுலும் சரி, அவனுள்ளத்திலே ஓர் கட்சியும் அதற்குப் போட்டியாக மற்ருெரு கட்சியும் ஏற்படவே, அவனுக்குள்ளேயே போர் நிகழுகின்றது.

அதைமாந்தஸ்: ஆம் அப்படித்தான்.

சாக்ரடீஸ்: அப்போரில் சில சமயங்களில் ஒரு சிலராட்சிக்கு மக்களாட்சி தோற்றுவிடும். அவனுடைய சில ஆசைகள் அழியும், சில நாடு கடத்தப்படும். பிறகு ஒரு விதமான பணிவு அவனுள்ளத்தே ஏற்பட்டு அங்கு ஒழுங்கு நிலை நிறுத்தப்பெறுகின்றது.

அதைமாந்தஸ்: ஆம் அப்படிச் சில சமயங்களில் நிகழும்.

சாக்ரடீஸ்: அந்தப் பழைய ஆசைகளனைத்தும் விரட்டப்பட்டவுடன் புதிய ஆசைகள் எழுகின்றன. அவை முன்னுள்ளவற்

றைப் போன்றவையே. ஏனெனில் அவற்றின் தந்தையான அவன், கற்பித்தலை யறியான். ஆகவே அவை மூர்க்கத் தனமாக வளர்ந்து பெருகுகின்றன.

அதைமான்தஸ் : அதுதான் முறையாக இருக்கக் கூடும்.

சாக்ரடீஸ் : அவை அவனை அவனுடைய பழைய நண்பர் களிடம் கொண்டுசெல்கின்றன. அவற்றுடன் அவை இரகசி யத் தொடர்பு கொண்டு வளர்கின்றன, பெருகுகின்றன.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : கடைசியில் அந்த இளைஞனது மனக்கோட்டையை அவை பிடித்துக்கொள்கின்றன. அம்மனக் கோட்டை கடவுளுக்குப் பிரியமான மனிதர்களுடைய மனதைத் தம் இருப்பிடமாகக் கொண்டு அவர்தம் நல்வழிகாட்டியாகவும் நற்றுணையாகவும் விளங்கும் எல்லா நற்குணங்களும் நல்ல எண்ணமும் உண்மை வார்த்தையும் அற்று இருப்பதை அவை காண்கின்றன.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : பொய்யும், கர்வமும் அவற்றுடன் தொடர்பு கொண்ட சொற்களும் வந்து உயர்ந்து தங்களிடத்தைப் பிடித்துக்கொள்கின்றன.

அதைமாந்தஸ் : ஆம் அப்படித்தான் நிகழும்.

சாக்ரடீஸ் : ஆகவே அந்த இளைஞன் சோம்பேறிகள் வாழும் நாட்டிற்கு வருகிறான். எல்லோருடைய முன்பும் தான் வசிக்குமிடத்தைக் கொள்கிறான். அவனது நண்பர் களால் அவனது ஒரு சிலராட்சித் தன்மைக்கு ஏதேனும் உதவி அனுப்பப்படின் நாம் முன் சொன்னவை வழியை அடைத்து விடுகின்றன. நுழைவதற்குக் கூட அவை அனுமதிப்பதில்லை. அன்றித் தந்தையைப் போன்று அறிவு றுத்தும் தனிப்பட்டவர்களையும் ஏற்பதுமில்லை, கேட்பதும் இல்லை. அங்கே நிகழும் போரிலும் அவையே வெல்கின்றன. பணிவெனும் பண்பு அவற்றால் கீழ்த்தரமானது என்று கருதப்பட்டு முட்டாள்தனமாக நாடு கடத்தப்படுகின்றது. தன்னடக்கமோ ஆண்மையின்மை எனக் கருதப்பட்டுத் தூக்கி எறியப்பட்டுச் சகதியில் மிதித்து நசுக்கித் தள்ளப் படுகின்றது. மேலும் அவை நிதானத்தையும் ஒழுங்கான பணச் செலவையும் கீழ்த்தரமானவை, மோசமானவை என்று மனிதனின் மனத்தைக் கட்டாயப்படுத்தி மாற்ற

முயல்கின்றன. அத்தீய கூட்டங்களின் உதவியால் அவை மனித எல்லைக்கப்பால் விரட்டப்படுகின்றன.

அதைமாந்தஸ் : ஆம், தீர்மானமாக.

சாக்ரடீஸ்': தமது ஆதிக்கத்தின்கீழ் கொணரப்பட்ட ஆன்மாவை வெறும் வெற்றிடமாக ஆக்கிப் பெரிய இரகசியங்கள் அதற்குப் புகட்டப்படுகின்றன. அடுத்து கர்வம், தெளிவின்மை, வீண்தன்மை, அடக்கமின்மை ஆகியவை ஒரு கூட்டமாகத்தம் புகழைப் பாடிக் கொண்டு கோலாகலமாக மாலை சூடி மீண்டும் அவ்வவற்றின் இடத்தைப் பிடித்துக் கொள்கின்றன. கர்வம் வளர்ச்சி என்றும், அராஜகம் சுதந்திரம் என்றும், வீண்தண்மை பெருந்தன்மை என்றும், அடக்கமின்மை தைரியமென்றும் அழைக்கப்படுகின்றன. ஆகவே, அவ்விளைஞன் அவசியத்தால் பயிற்சியளிக்கப்பட்ட தனது பழைய தன்மையை விட்டுவிட்டுப் பயனற்ற அவசியமற்ற, சுகங்களை அளிக்கும் சுதந்திரத்திலும் உரிமைகளிலும் ஈடுபடுகிறான்.

அதைமாந்தஸ் : ஆம், அவனிடம் காணப்படும் மாறுதல் தெளிவாகத் தோன்றுகின்றது.

சாக்ரடீஸ் : அதன் பிறகு அவசியமான சுகங்களைப்போன்றே அவசியமற்ற சுகங்களில் தனது காலத்தையும், உழைப்பையும் செல்வத்தையும் செலவிட்டு வாழ்கிறான். அவன் அதிர்ஷ்டக்காரனாக இருந்தால் இவ்வறிவால் அவன் அதிகம் மழுங்குவதில்லை. ஆண்டுகள் பல சென்று அவனது ஆசைகளெல்லாம் அடங்கிய பின்னர் நாடுகடத்தப்பட்ட சில பண்புகளை மீண்டும் நகருக்குள் நுழைக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவனிழந்த சில நற்குணங்கள் அவனை முழுதும் பின் வந்தவற்றிடம் சேர்த்து விடுவதில்லை. ஆதலால் அவன் தனது சுகங்களைச் சீராக்கிக் கொண்டு ஓரளவு சமமான வாழ்வை நடத்துகிறான். தன்னுள்ளத்தை முதலில் வந்த தன்மைக்கு அளித்து அதைத் தேவையான அளவு பெற்றவுடன் மற்றொன்றிற்கு அளித்து இப்படியே ஒன்றையும் வெறுக்காது எல்லாவற்றிற்கும் சமமான வாய்ப்பு அளித்து ஊக்குவிப்பான்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : உண்மையான அறிவுரையை அவன் கொடுப்பதுமில்லை, தன் மனக்கோட்டையில் நுழையவிடுவதுமில்லை.

யாராவது அவனிடம் வந்து, சில சுகங்கள் நல்ல சிறந்த ஆசைகளைத் திருப்திசெய்யும், மற்றவை தீய ஆசைகளைத் திருப்திப்படுத்தும், சிலவற்றைக் கவுரவிக்க வேண்டும், சில வற்றை விரட்டியடிக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் சொன்னால் அவன் தலையை அசைத்து, 'எல்லாம் ஒன்று தான் ஒன்றைப்போன்றே மற்றொன்றும் நல்லதுதான்' என்று கூறுகிறான்.

அதைமாந்தஸ் : ஆம், அதுதான் அவன் போக்கு.

சாக்ரடீஸ் : ஆம், அவ்வப்போது உள்ள ஆசைகளுக்கு இடங் கொடுத்து அவன் வாழ்கிறான். சில சமயங்களில் குடியிலும், சில சமயங்களில் இசையிலும் ஈடுபடுகிறான். பிறகு உடல் மெலிவதற்காக எனத் தண்ணீரைமட்டுமே அருந்துகிறான். பிறகு உடற்பயிற்சியிலீடுபடுகிறான். சில சமயங்களில் ஒன்றும் செய்யாது எல்லாவற்றையும் வெறுக்கிறான். சில சமயங்களில் தத்துவஞானி போன்று வாழ்கிறான். அடிக்கடி அரசியலில் உற்சாகத்துடன் ஈடுபடுகிறான். தோன்றுவதை எல்லாம் செய்துவிடுவதாகக் கிளம்புகிறான். வீரனுடன் போட்டியிட்டால் அவ்வழியில் செல்கிறான். அல்லது வணிக னுடன் போட்டியிட்டால் அவ்வழியில் செல்கிறான். அவனு டைய வாழ்வில் சட்டமோ ஒழுங்கோ இல்லை. இவ்வித மான வாழ்வைச் சந்தோஷமானதாயும் சுவர்க்கமென்றும் சுதந்திரமிக்கதாயும் அவன் கருதுகிறான். இப்படியே அவன் போய்க்கொண்டிருக்கிறான்.

அதைமாந்தஸ் : ஆம், அவன் எல்லாவித உரிமைகளையும் சமத் துவங்களையும் கொண்டவன்.

சாக்ரடீஸ் : ஆம், அவனது வாழ்க்கை, கலப்பான பலவித இயல்புகள் அமைந்தது. அது பலருடைய வாழ்விலிருந்து எடுக்கப்பெற்ற சங்கிரகமான ஒரு பிரிவு. இவன்தான் நாம் சொன்ன அழகிய ஒளிமிக்கதான நாட்டிற்கு ஏற்றவன். பல ஆண்களும் பெண்களும் இவனையே தாம் கொள்ளவேண்டிய அமைப்பாகக் கருதுகின்றனர். பலவித ஆட்சியமைப்பும் நடைமுறைகளும் கொண்ட ஒரு மேல்வரிச்சட்டம் அவனி டமே அடங்கியுள்ளது.

அதைமாந்தஸ் : அப்படித்தான்.

சாக்ரடீஸ் : ஆம், அவனையே ஜனநாயக மனிதன் எனலாம். அவனே ஜனநாயகத்துக்கும் பொருத்தம்.

அதைமாந்தஸ் : அதுவே அவனிடமாக இருக்கட்டும்.

சாக்ரடீஸ் : இனி, இறுதியாக எல்லாவற்றிலும் அழகு வாய்ந்த ஆட்சியும், மனிதனும் வருகின்றன. அவைதான் கொடுங் கோன்மையும் கொடுங்கோலனும். அவற்றை இப்பொழுது காண்போம்.

அதைமாந்தஸ் : நல்லது.

சாக்ரடீஸ் : எப்படிக் கொடுங்கோன்மை ஏற்படுகின்றது? மக்களாட்சியினின்றே தோன்றுமென்பது வெளிப்படை.

அதைமாந்தஸ் : தெளிவாக.

சாக்ரடீஸ் : ஒரு சிலராட்சியினின்றும் ஜனநாயகம் தோன்றுவதுபோல ஜனநாயகத்தினின்றும் ஓர் பிரிவாகக் கொடுங் கோன்மையும் தோன்றுதா ?

அதைமாந்தஸ் : எங்ஙனம் ?

சாக்ரடீஸ் : 'ஒரு சிலராட்சி' தனக்கெனக் கொண்ட நலம் செல்வம் ; அது தன்னை நிலைநிறுத்திக் கொண்ட வகை அதிகமான செல்வத்திலேயே அடங்கியுள்ளது. நான் சொன்னது சரிதானே ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : இந்தக் கட்டுக்கடங்காத பண ஆசையும், பணம் சம்பாதிப்பதற்காக ஏனையவற்றைப் புறக்கணிப்பதும் ஒரு சிலராட்சி அழியக் காரணமாயிற்று அல்லவா ?

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : ஜனநாயகமும் அதற்கேயியல்பாயுள்ள நன்மையை உடையது. அதில் கட்டுக்கடங்காத ஆசையே அதனைக் குலைத்தும் விடுகிறது.

அதைமாந்தஸ் : என்ன நன்மை ?

சாக்ரடீஸ் : சுதந்திரம். அதுவே நாட்டின் புகழ் என்று ஜனநாயகத்தில் கூறுகின்றனர். ஆகவே இயல்பாக, சுதந் திரம் நாடும் மனிதன் ஜனநாயகத்தில் மட்டுமே வாழ விழைகிறான்.

அதைமாந்தஸ் : ஆம் அதனையே ஒவ்வொருவரும் சொல் கிறார்கள்.

சாக்ரடீஸ் : சுதந்திரத்தில் கட்டுக்கடங்காத ஆசை கொள்ளுத லும் ஏனையவற்றைப் புறக்கணித்தலுமே ஜனநாயகத்தில் மாறுதலையுண்டாக்கும் என்று நான்சொல்ல எண்ணினேன். அச்சமயத்தில் தேவைப்படுவது கொடுங்கோன்மையே.

அதைமாந்தஸ் : எப்படி ?

சாக்ரடீஸ் : சுதந்திரதாகம் மிகுந்து, ஜனநாயகமெனும் விருந்திலே மதுக்கோப்பை நாடும் தீயோர் தலைமை தாங்கினால் மக்கள் அதிகமாகச் சுதந்திர மதுவைக் குடித்துவிடுகின்றனர். ஆட்சியாளர்கள் இணக்கமுள்ளவராயும் குடிக்க விடுவோராயுமில்லாவிடில் உடனே அவர்கள் தண்டிக்கப்பட்டு ஒரு சிலராட்சித் தன்மையினர் என்று கண்டிக்கப்படுகின்றனர்.

அதைமாந்தஸ் : அது சாதாரணமாக நடக்கக் கூடியதே.

சாக்ரடீஸ் : இதனால் நல்ல குடிமக்களும் மனம் புண்படும்படி, தளைகளை விரும்பும் அடிமைகள் எனவும் உதவாக்கரைகள் எனவும் அழைக்கப்படுகின்றனர். ஆட்சியாளர்களினியல்புள்ள குடி மக்களும் குடிமக்களின் குணம் கொண்ட ஆட்சியாளருமே அங்கு அமைகின்றனர். அவர்களே பொது வாழ்விலும் தனிவாழ்விலும் விரும்பிப் பாராட்டப் படுகின்றனர். அப்படிப்பட்ட நாட்டில் இனியும் சுதந்திரத்திற்கு வரையறை இருக்குமா ?

அதைமாந்தஸ் : நிச்சயமாக இராது.

சாக்ரடீஸ் : சிறிது சிறிதாகத் தனியோர் வீடுகளிலும்கூடக் குழப்பம் தோன்றி இறுதியில் பிராணிகளையும் பற்றிவிடுகின்றது.

அதைமாந்தஸ் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : அதாவது தந்தையர் தம்பிள்ளைகள் நிலைக்கு வந்து அவர்களைக்கண்டு அஞ்சுகின்றனர். பிள்ளை தந்தையாகிறான். அதாவது அவன் தன் பெற்றோர்களுக்கு மரியாதையோ மதிப்போ கொடுப்பதில்லை. அதுதான், அவன் கண்ட சுதந்திரம். அங்கு குடிமகனும் சாதாரண ஒருவனும் சமமே. புதியவனும் அவர்கட்குச் சமமாகி விடுவான்.

அதைமாந்தஸ் : அப்படித்தான் இருக்கும்.

சாக்ரடீஸ் : தீமைகள் இவ்வளவுதான் என்று எண்ணிவிடாதே. இது போன்ற அரசியலில் இன்னும் கீழ்த்தரமானவைகளும் பல உள்ளன. ஆசிரியர் மாணவனைக் கண்டு அஞ்சி அவனைப் புகழ்கிறார். மாணவனோ ஆசிரியரை வெறுக்கிறான். இளைஞனும் முதியவனும் ஒரே மாதிரி இருக்கின்றனர். இளையவன் முதியவன் நிலையில் காணப்படுகிறான். பேச்சிலும் செயலிலும் அவன் முதியவனுடன் போட்டியிடத் தயாராக இருக்கிறான். வயது வந்தவர்கள் இளைஞர்களுடன் தாழ்

வாகச் சென்று சேர்ந்து இன்பமாகவும் நிறை மகிழ்ச்சியுடனும் இருக்கிருர்கள். முதியோர்கள் வயது வந்தவர்களாய் அதிகாரத்துடன் இருக்காது இளைஞர்களைப் போன்று இருக்கவே விழைகிருர்கள்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அந்த சுதந்திரத்தின் இறுதி எல்லை யாதெனில் அடிமையை (ஆணுகவோ பெண்ணுகவோ இருக்கலாம்) ஒருவன் வாங்கியவுடன் அவ்வடிமையும் முதலாளியைப் போலவே சுதந்திரம் கொண்டாடுவதுதான். ஆண் பெண் இருபாலரும் தங்களிடையே உறவுகொள்வதிலும் பெற்றுள்ள சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நான் குறிப்பிடாமலிருக்க முடியாது.

அதைமாந்தஸ் : அஸ்ச்சிலஸ் சொல்வது போல என் வார்த்தைகள் உதடுகளிலிருந்து எழும்பா.

சாக்ரடீஸ் : அதைத்தான் நானும் இப்பொழுது செய்துகொண்டிருக்கிறேன். மனிதனுக்குக் கீழ்ப்பட்ட மிருகங்கள் ஜனநாயகத்தில் மற்ற அரசியல்களைவிட அதிகம் சுதந்திரமாக உள்ளன என்பதை அறியாதவர் நம்பமாட்டார்கள். அவை வேறெங்கும் அவ்வளவு சுதந்திரமாய் வாழ முடியாது. பழமொழி சொல்வதுபோல, உண்மையில் பெண் நாய்களும் தம் எஜமானியைப் போன்றே உள்ளன. மேலும், குதிரைகளும் கழுதைகளும் தமக்கே உரிய தன்மையில் உரிமையுடனும் சுதந்திர மனிதப் பண்புடனும் நடந்து செல்கின்றன. அவற்றிற்கு ஒதுங்காது வரும் யார் மீதும் அவை ஏறிவிடும். எல்லாப் பொருள்களும் சுதந்திரம் நிறைந்து வழியுமாப் போல் காணப்படுகின்றன.

அதைமாந்தஸ் : கிராமங்களில் செல்லும்போது நீங்கள் இப்பொழுது சொல்வதை அடிக்கடி நான் அனுபவித்திருக்கிறேன். நம்மிருவர் கனவும் ஒன்ருகவே இருக்கின்றன.

சாக்ரடீஸ் : எல்லாவற்றையும்விட, இவை எல்லாவற்றின் விளைவாக மக்கள் எவ்வளவு உணர்ச்சியுள்ளவர்களாக உள்ளனர் என்பதைக் காணவேண்டும். சாதாரண அதிகாரச் சொல்லைக் கூடத் தாளாதவர்களாய், நாளடைவில் சட்டங்களையே (எழுதியவையாயினும் எழுதப்படாதவையாயினும் கவலையில்லை) புறக்கணித்துத் தமக்கு மேலே ஒருவரும் இருப்பதற்கு இல்லை என்றே வாழ்கின்றனர்.

அதைமாந்தஸ் : ஆம் அதை நன்கறிவேன்.

சாக்ரடீஸ் : என் நண்பா! இதுதான் கொடுங்கோன்மை என்பது செழித்து உயர்ந்து தோன்றுவதற்கேற்ற தொடக்கமாகும்.

அதைமாந்தஸ் : மிகவும் அருமையானதுதான்! பின்னர்...?

சாக்ரடீஸ் : ஒரு சிலராட்சியின் அழிவே ஜனநாயகத்தின் அழிவுமாகும். அந்த வியாதியே சுதந்திரத்தால் பெரிதாகி வளர்ந்து ஜனநாயகத்தை அழித்து விடுகிறது. உண்மை யாதெனில் அளவுக்கு மிஞ்சி ஒன்று வளருமேயானுல் அதுவே அதற்கு எதிரான விளைவுகளை ஏற்படுத்திவிடும். இது பருவங்களுக்கும் பயிர்களுக்கும் பிராணி வாழ்க்கைக்கு மட்டுமல்ல; அரசாங்க அமைப்புக்களுக்கும் பெரிதும் பொருந்தும்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆம், அதிகப்படியான சுதந்திரம் நாட்டில் இருந்தாலும் சரி, தனி மனிதனிடம் இருந்தாலும் சரி கடைசியில் அது அடிமைத்தனத்திலேயே சென்று முடியுமெனத் தோன்றுகிறது.

அதைமாந்தஸ் : ஆம், இயற்கை விதி அதுவே.

சாக்ரடீஸ் : ஆகவே கொடுங்கோன்மையானது, ஜனநாயகத்தினின்றும் இயற்கையாகவே தோன்றுகின்றது. மிகவும் தாங்க முடியாத சுதந்திரத்தினின்றும் மிகவும் பொறுக்கமுடியாத கொடுங்கோன்மையும் அடிமைத்தனமும் ஏற்படுகின்றன.

அதைமாந்தஸ் : எதிர்பார்க்கக் கூடியதுதான்.

சாக்ரடீஸ் : ஆனுல் அது நமது கேள்வியன்று. நீ கேட்பது, எந்த ஒழுங்கின்மை, ஒரு சிலராட்சியில் தோன்றியது போன்று ஜனநாயகத்திலும் தோன்றவல்லது; இரண்டையும் அழிக்கக் கூடியது என்பதுதானே.

அதைமாந்தஸ் : அதுதான்.

சாக்ரடீஸ் : நல்லது. அந்தச் சோம்பேறிச் செலவாளிகள் இனத்தையே நான் குறிப்பிட்டேன். அவர்களில் தைரிய முள்ளவர்கள் தலைவர்களாகின்றனர். மற்றோர் பணிவு மிகுந்து அவர்களைப் பின் தொடர்கின்றனர். இதைத்தான் நாம் ஆண் தேனீக்களுடன் ஒப்பிட்டோம். சில கொடுக்கு அற்றவை. சில கொடுக்குடையவை என்று.

அதைமாந்தஸ் : மிகவும் பொருத்தமான உவமை.

சாக்ரடீஸ் : இந்த இரு வகுப்புக்களும் எந்த நாட்டில் உள்ளனவோ அவையே அந்நாட்டுக்கு விரோதிகள். நமது உடலிம் உள்ள பித்தமும் வாதமும் போன்றவை அவை. நாட்டின் நல்ல மருத்துவனும் சட்டம் அமைப்பவனும் தேனீ வளர்ப்பவனைப் போன்று அவற்றை ஓர் குறிப்பிட்ட தூரத்திலேயே வைத்து, முடிந்தால் தேன் கூட்டினுள் வருவதையே தடுத்துவிடுகின்றனர். அப்படியின்றி வேறு வழியாக அவை கூட்டுக்குள் வந்துவிடின் அவற்றின் அறைகளை எவ்வளவு விரைவாகத் தனிப்படுத்த முடியுமோ அவ்வளவு விரைவில் தனிப்படுத்தி விடுதல் நலம்.

அதைமாந்தஸ் : ஆம், எப்படியாவது அவற்றைத் தடுத்துவிட வேண்டும்.

சாக்ரடீஸ் : நாம் செய்வது என்ன என்பதைத் தெளிவாக்கும் பொருட்டு இப்பொழுது உள்ளது போலவே ஜனநாயகத்தை மூன்று பகுதிகளாகப் பிரிப்பதாக வைத்துக் கொள்வோம். ஏனெனில், முதலாவதாகச் சுதந்திரமானது, ஒரு சிலராட்சியில் உள்ளதைவிட அதிகச் சோம்பேறிகளை ஜனநாயகத்திலே உண்டாக்குகிறது.

அதைமாந்தஸ் : அது உண்மை.

சாக்ரடீஸ் : ஆம். ஜனநாயகத்தில் அவர்கள் அதிக வலுப்பெறுகின்றனர்.

அதைமாந்தஸ் : எங்ஙனம் ?

சாக்ரடீஸ் : எப்படியெனில், ஒரு சிலராட்சியில் அவர்கள் அருகதையற்றவர்கள் என விரட்டப்படுகின்றனர். ஆகவே அவர்கள் அங்கே பயிற்சிபெற முடியாது. வலுப்பெற இயலாது. ஆனால் ஜனநாயகத்திலோ அவர்களே ஆளும்சக்தி. ஆர்வமிக்கவர்கள் பேசிச் செயல்படும்போது மீதியுள்ளவர்கள் அவர்களைப் புண்படுத்தும்படி ஒரு வார்த்தையும் சொல்லாது அவர்களையே சூழ்ந்து கொள்கின்றனர். ஆக ஜனநாயகம் ஆண் தேனீக்களாலேயே (சோம்பேறிகளாலேயே) நிர்வகிக்கப்படுகிறது.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : மற்றொரு பகுதி எப்பொழுதுமே கூட்டத்தினின்றும் தனிப்படுத்தப்பட்டு நிற்கிறது.

அதைமாந்தஸ் : அது எது ?

சாக்ரடீஸ் : அதுதான் ஒழுங்குள்ள வகுப்பு. வணிகர்கள் நாட்டில் அதுவே மிகவும் பணக்காரர்களுடையதாயிருக்கும்.

அதைமாந்தஸ் : இயல்பாகவே அப்படித்தான்.

சாக்ரடீஸ் : அவ்வகுப்புத்தான் தேன் அதிகம் உட்கொண்டதாகும். இவர்களே அதிகத் தேனை ஆண் தேனீக்களுக்கு அளிக்கின்றனர்கள்.

அதைமாந்தஸ் : ஏன் ஒன்றுமே இல்லாத மக்களிடம் ஒன்றையுமே பிழிய முடியாதே ?

சாக்ரடீஸ் : இந்த வகுப்புத்தான் பணக்கார வகுப்பு எனப்படுவது. அவர்களால் தானே சோம்பேறிகள் வாழ்கிறார்கள்.

அதைமாந்தஸ் : உண்மைதான்.

சாக்ரடீஸ் : தங்கள் கையால் உழைக்கும் மூன்றாவது பிரிவு மக்களுண்டு. அவர்கள் அரசியல் வாதிகளல்ல, அவர்களுக்குச் சொத்தும் கிடையாது. ஆனால் அவர்கள் ஒன்று கூடினால் ஜனநாயகத்தில் மிகுந்த சக்தி வாய்ந்த கூட்டமாக அது அமையும்.

அதைமாந்தஸ் : உண்மை. ஆனால் கொஞ்சம் தேனாவது கிடைக்காதெனில் இக்கூட்டம் ஒன்று சேராதே ?

சாக்ரடீஸ் : அவர்கள் பங்குபெற மாட்டார்களா ? பணக்காரர்களிடம் ஏமாற்றிப் பெற்ற செல்வத்தை அவர்களின் தலைவர்கள் அவர்களிடையே பிரித்துக் கொடுப்பர். அதே சமயத்தில் தங்களுக்கெனப் பெரும்பகுதி சேமித்து வைத்துக் கொள்ளவும் தவறமாட்டார்கள்.

அதைமாந்தஸ் : ஆம், இம்முறையில்தான் பங்கு போடுதல் நடக்கும்.

சாக்ரடீஸ் : எவரிடமிருந்து சொத்துக்கள் எடுத்துக்கொள்ளப் படுகின்றனவோ அவர்கள் மக்களுக்கெதிர் நின்றே தம் சொத்துக்களை முயன்றவரை காத்துக்கொள்ள நேரிடுகிறது. அல்லவா ?

அதைமாந்தஸ் : அவர்கள் வேறு என்ன செய்ய முடியும் ?

சாக்ரடீஸ் : அதன்பிறகு, அவர்கள் மாறுதல் எதையும் விரும்பாதவர்களாயினும் அவர்கள் ஒருசிலராட்சியின் நண்பர்கள் எனவும் மக்களுக்கெதிராகச் சதித்திட்டமிடுபவர்கள் எனவும் பிறரால் குற்றம் சாட்டப்படுகின்றனர்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : இதன் முடிவு—தம்மிச்சையால் இல்லாவிடினும், அறியாமை காரணமாக, கோள் சொல்பவர்களால் ஏமாற்றப் பட்ட மக்கள் அவர்களுக்குத் தீமை செய்ய எண்ணுவதைக் கண்டு அவர்கள் உண்மையில் ஒரு சிலராட்சிக்காரர்களா கவே பலாத்காரமாக மாறிவிடுகின்றனர். அவர்கள் அப்படி யாக எண்ணுவதில்லை. ஆனால் சோம்பேறி ஈக்கள் கொட் டிக் கொட்டி அவர்களில் புரட்சி மனப்பான்மையை ஏற் படுத்திவிடுகின்றன.

அதைமாந்தஸ் : உண்மை அதுதான்.

சாக்ரடீஸ் : அதன்பிறகு குற்றச்சாட்டு, விசாரணை, முடிவு கூறல் ஆகியவை ஒவ்வொருவரைப் பற்றியும் வருகின்றன.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : இதற்குள் மக்கள் யாராவது ஒரு காவலனைத் தலை வணக்கி அவனைப் பெரியவனாக வளர்த்து விடுகின்றனர்.

அதைமாந்தஸ் : அதுதான் அவர்கள் வழக்கம்.

சாக்ரடீஸ் : இதிலிருந்துதான் கொடுங்கோலன் தோன்று கிறான். ஆரம்பத்தில் அவன் பாதுகாவலனாகவே இருக் கிறான்.

அதைமாந்தஸ் : அது தெளிவாகத் தெரிகிறது.

சாக்ரடீஸ் : பாதுகாவலன் எங்ஙனம் கொடுங்கோலனாக மாறு கிறான்? லிகேயியன் ஸீயஸின் ஆர்கேடியக் கோயில் கதை யில் வரும் மனிதன் என்ன செய்வானோ அதையே அவனும் செய்கிறான்.

அதைமாந்தஸ் : அது என்ன கதை ?

சாக்ரடீஸ் : அதாவது, மற்ற இறைச்சிக் குடல்களுடன் கலந்து வைக்கப்பட்ட ஒரு மனிதக் குடலின் சுவையை ருசித்தவுடன் மனிதன் ஓநாயாக மாறிவிட்டான். இக்கதையை நீ கேட்ட தில்லையா ?

அதைமாந்தஸ் : ஆம், கேட்டிருக்கிறேன்.

சாக்ரடீஸ் : மக்களின் பாதுகாவலனும் இப்படித்தான். தனது இச்சைப்படி நடக்கும் ஒரு கூட்டத்தைக் கொண்ட அவன் தனது நாட்டு மக்களின் குருதியைக் கொட்டவைப்பதினின் றும் தவறமாட்டான். அவனுக்குப் பிடித்தமான வழியான குற்றச் சுமத்தல் மூலம் அவர்களை நீதிமன்றங்களுக்குக் கொணர்ந்து கொலை செய்துவிடுகிறான். மனிதர்களை

அழிக்கிறுன். தனது மோசமான நாவாலும் உதடுகளாலும் மாந்தர் குருதியைச் சுவைக்கிறுன். சிலரைக் கொல்லு கிறுன், சிலரை நாடு கடத்துகிறுன் ; அதே சமயத்தில் கடன் நிவாரணத்தையும் நிலப்பிரிவினையையும் குறிப்பிடுகிறுன். அதன்பிறகு அவன் நிலை யாது ? அவன் தனது விரோதிகள் கையினுலேயே அழிய வேண்டியதுதானே ? அல்லது ஓநா யாக மாறிவிடுவான்—ஆம், கொடுங்கோலனுக !

அதைமாந்தஸ் : தவிர்க்க முடியாதது.

சாக்ரடீஸ் : பணக்காரர்களை எதிர்த்துக் கட்சி ஆரம்பிப்பவன் இவன்தான்.

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : சிறிதுநாள் கழித்து அவன் விரட்டப்படுகிறுன். ஆனுல் எதிரிகளிருப்பினும் மீண்டும் கொடுங்கோலன் உடையில் தோன்றிவிடுகிறுன்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அவனை விரட்ட அவர்களால் முடியாவிடில் அவன் மீது பழி சுமத்திக் கொல்லப் பார்க்கின்றனர். அதுவும் முடியாவிட்டால் அவனைக் கொல்ல இரகசியத் திட்டமிடுகின் றனர்.

அதைமாந்தஸ் : ஆம், அதுதானே அவர்கள் வழக்கமான வழி.

சாக்ரடீஸ் : அவனுக்கு ஒரு சிறந்த மெய்க்காப்பாளன் இருக்க வேண்டுமென ஓர் வேண்டுகோள் வரும். கொடுங்கோன் மைத் தன்மையால் இவ்வளவு தூரம் வந்தவர்களுக்கு இது தான் வழி. "மக்களின் நண்பனை அவர்கள் இழந்துவிடக் கூடாது" என்றும் அவர்கள் பேசிக் கொள்வர்.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : மக்கள் விரைவில் சம்மதிப்பர். அவர்களனைவரும் அவனைக் குறித்தே அஞ்சுகின்றனர் ; தம்மைப் பற்றி அஞ் சுவதில்லை.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஒருவன் பணக்காரனுயிருந்து மக்களின் விரோதி என்று அவன்மீது பழி சுமத்தப்படும்போது இதைப் பார்த் தால் கிரீசசுக்குப் பூசாரி கூறியதுபோல, அவன் "கல் நிறைந்த ஹெர்மஸ் கரை வழியாக ஓடுகிறுன். எங்கும் நிற்

காது ஒடிக்கொண்டிருக்கும் அவன் தான் கோழை என்று கூறப்படுவதைக் கேட்டு வெட்கமடையவில்லை ''.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை. அவனாகவே இருந்தால் மீண்டும் அதைக் கண்டு வெட்கப்படமாட்டான்.

சாக்ரடீஸ் : அவர்கள் அவனைப் பிடித்து விட்டாலோ இறந்து விடுகிறான்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : சரி. நாம் பேசிவந்த பாதுகாவலனைப்பற்றிக் காண்போம். அவன் தனது வலிமையால் அவ்விடத்தைக் காப்பவனல்ல. ஆனால் பலரையும் கீழே தள்ளியவன், நாட்டுத் தேர்மீது நின்று கடிவாளத்தைப் பற்றியிருக்கும் அவன் பாதுகாவலனல்ல—முழுக் கொடுங்கோலன்தான்.

அதைமாந்தஸ் : சந்தேகமின்றி.

சாக்ரடீஸ் : இப்போது அவனுடைய சுகத்தையும், அவன் போன்ற ஜீவனைப் பெற்ற நாட்டின் சுகத்தையும் காண்போம்.

அதைமாந்தஸ் : ஆம், அதைக் கவனிக்க வேண்டும்.

சாக்ரடீஸ் : அவனது ஆட்சியின் தொடக்கத்தில் அவன் புன்னகை பூத்துக் காண்போருக்கெல்லாம் வந்தனம் செய்கிறான். இவனா கொடுங்கோலன்! எனும்படிச் சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் உறுதிகளையளிக்கிறான். கடன்காரர்களை மீட்கிறான். தன்னைப் பின்பற்றுவோர்க்கும் பிறருக்கும் நிலத்தைப் பிரித்து அளிக்கிறான். எல்லாரிடமும் அன்பாகவும் நன்றாகவும் நடந்து கொள்கிறான்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆனால் தனது வெளி விரோதிகளைப் போர் மூலமோ அன்றி உடன்படிக்கையின் மூலமோ வெற்றி கொண்டவுடன் அவர்களால் அவன் அஞ்சவேண்டியதொன்றுமில்லாமையால் எப்பொழுதும் ஏதாவதொரு சண்டையைக் கிளப்புகிறான். அப்பொழுதுதான் மக்களுக்கு ஒரு தலைவன் தேவைப்படுகிறான் என்பதற்காக.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அவனுக்கு மற்றொரு திட்டமும் இருக்குமல்லவா? அதாவது வரிகளின் மூலம் அவர்களை வறியோராக்கித் தம் அன்றாடத் தேவைகளுக்குப் பாடுபடுவதிலேயே அவர்களை

ஈடுபடும்படிச் செய்து தன்மீது சதித்திட்டம் போடுவதைக் குறைக்க முடியுமல்லவா ?

அதைமாந்தஸ் : தெளிவாக.

சாக்ரடீஸ் : அங்குள்ளவர்களில் யாராவது சுதந்திர உணர்வு கொண்டு தன்னை எதிர்த்துக் கிளம்புவார்கள் என்று அவன் ஐயுற்றால் அவர்களை அழிக்க ஓர் நல்ல திட்டமிடுவான். அதாவது அவனைத் தன் எதிரிகளிடம் ஒப்படைத்து விடுவான். இந்தக் காரணங்களுக்காகவே கொடுங்கோலன் எப்பொழுதும் போர் மூட்டிக்கொண்டே இருக்கவேண்டும்.

அதைமாந்தஸ் : ஆம், கட்டாயமாக.

சாக்ரடீஸ் : இப்பொழுது அவன் மதிப்பிழக்கத் தொடங்குகிறான்.

அதைமாந்தஸ் : ஏற்பட வேண்டிய விளைவு.

சாக்ரடீஸ் : அவனைப் பதவிபெறச் செய்த அதிகாரத்திலுள்ளவர்களில் சிலர் அவனிடம் இதைச் சொல்வதுடன் தங்களிடையேயும் பேசிக் கொள்கிறார்கள். அவர்களில் மிகவும் தைரியம் உள்ளவர்கள் நடக்கும் விஷயத்தை அப்படியே சொல்லிவிடுகிறார்கள்.

அதைமாந்தஸ் : ஆம், அதையும் எதிர்பார்க்கலாம்.

சாக்ரடீஸ் : தான் இன்னும் ஆளவேண்டுமென அக்கொடுங்கோலன் எண்ணினால் அவர்களை ஒழித்துவிடவேண்டும். அவனுடைய நண்பனோ எதிரியோ எப்படியாவது பயன்படுவோர் இருக்கும்போது அவனால் வாளாவிருக்க முடியாது.

அதைமாந்தஸ் : ஆம், முடியாதுதான்.

சாக்ரடீஸ் : ஆகவே அவன் தன்னைச் சுற்றியுள்ளவர்களில் யார் பலசாலி, யார் உயர்ந்தவன், யார் அறிவுள்ளவன், யார் பணக்காரன், எனப் பார்க்கவேண்டும். சுகவாசியான இவன் ஏனைய எல்லோர்க்கும் எதிரி. இதை விரும்புவானோ விரும்பமாட்டானோ, நாட்டில் இவர்களில்லாமற் செய்யும்வரை அவர்களை எதிர்க்கும் சந்தர்ப்பங்களையே அவன் கவனிக்க வேண்டும்.

அதைமார்ந்தஸ் : ஆம், அது அவசியமான சுத்திகரிப்பு.

சாக்ரடீஸ் : உடலுக்கு மருத்துவர் அளிக்கும் பேதிமருந்து போன்றதல்ல அது. ஏனெனில் மருத்துவர் மருந்து உடலில்

நல்ல பகுதிகளை விட்டு மோசமானவற்றையே எடுக்கும். ஆனால் கொடுங்கோலனது மருந்தோ அதற்கு எதிரிடையானது.

அதைமாந்தஸ் : அவன் ஆளவேண்டுமெனில் அதைச் செய்யாமலிருக்க முடியாதே.

சாக்ரடீஸ் : என்ன புனிதமான மாற்று, தீயோர்க்கும் வெறுக்கத்தக்க வாழ்வுதான் வாழ்வு எனில் வாழாதிருப்பது எவ்வளவு மேலானது !

அதைமாந்தஸ் : அதுதான் மாற்று.

சாக்ரடீஸ் : குடிமக்களுக்கு அவன் செயல்கள் எவ்வளவுக்கெவ்வளவு வெறுக்கத்தக்கனவாக உள்ளனவோ அவ்வளவுக்கவ்வளவு அதிக மதிப்பையும் ஈடுபாட்டையும் அவர்களிடமிருந்து அவன் பெறவேண்டும் அல்லவா ?

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவனிடம் ஈடுபாடு கொண்ட குழு எது? அவன் அவர்களை எங்கே சம்பாதிப்பான் ?

அதைமாந்தஸ் : பணத்தைக் கொடுத்தால் தாமாகவே அவர்கள் அவனிடம் வந்து குவிகின்றனர்.

சாக்ரடீஸ் : அட ! நாய்களேபோல் முழுச் சோம்பேறிகளில் எல்லா வகைகளும் எல்லா நாடுகளிலிருந்து அங்கே வந்து சேரும் அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், அவைதாம்.

சாக்ரடீஸ் : ஆனால் இப்படிப்பட்டவர்களை அந்நாட்டிலிருந்தே சேர்ப்பதைத்தானே அவன் விரும்புவான் ?

அதைமாந்தஸ் : எப்படிச் சொல்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : மக்களிடமிருந்து அடிமைகளைப் பறித்துவிடுவான். அடிமைகளை விடுதலை செய்து, தனது மெய்க்காவலர்களாக அவர்களைச் சேர்த்துக் கொள்வான்.

அதைமாந்தஸ் : நிச்சயமாக ; ஏனையோரைவிட அவர்களை அவன் அதிகம் நம்பக்கூடும்.

சாக்ரடீஸ் : இக்கொடுங்கோலன் என்ன புனிதமான பிராணியாக இருக்கவேண்டும்? மற்றவர்களைக் கொன்றுவிட்டு இவர்களைப்போய் நம்பிக்கைக்குகந்த நண்பர்களாக்கிக் கொண்டுள்ளானே !

அதைமாந்தஸ் : ஆம், இந்தவித மக்களைத்தான் கொள்வான்.

சாக்ரடீஸ் : ஆம், இவர்களே அந்நாட்டின் புதிய குடிகள். இவர்கள் அவனைப் புகழ்கிறார்கள். ஆனால் நல்லவர்களோ அவனை வெறுத்துத் தள்ளுகின்றனர்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியானால் நிச்சயமாகத் துன்பியல் மிகவும் உயர்ந்தது. மேலும் யூரிபிடஸ் மிகச் சிறந்த துன்பியல் ஆசிரியன்.

அதைமாந்தஸ் : ஏன் அப்படி ?

சாக்ரடீஸ் : ஏன், அவர்தானே "புத்திசாலிகளுடன் வாழ்தலால் கொடுங்கோலர்கள் புத்திசாலிகள்" என்ற பொருள் நிறைந்த பழமொழியின் ஆசிரியர்! நிச்சயமாக அவர் சொன்னதன் பொருள், கொடுங்கோலன் தனக்கு நண்பர்களாக்கிக் கொள்ளும் அனைவரும் புத்திசாலிகளே என்பது தான்.

அதைமாந்தஸ் : ஆம், கடவுளைப் புகழ்வது போன்று அவர் கொடுங்கோன்மையைப் புகழ்கிறார். இன்னும் அதுபோன்ற பலவற்றையும் அவரும் ஏனைய புலவர்களும் சொல்லியுள்ளனர்.

சாக்ரடீஸ் : நாமும் நம்போன்றோரும் அவர்களை நம் நாட்டிற்கு வரவேற்காவிடில் துன்பியல் புலவர்கள் புத்திசாலிகளாதலின் நம்மை மன்னித்துவிடுவர். ஏனெனில் அவர்கள் கொடுங்கோன்மையைப் புகழ்பவர்களன்றோ !

அதைமாந்தஸ் : ஆம், அறிவுள்ளவர்கள் நம்மை மன்னித்து விடுவர் என்பதில் ஐயமில்லை.

சாக்ரடீஸ் : ஆனால் அவர்கள் வேறு நகரங்களுக்கும் சென்று மக்கள் கூட்டங்களைக் கவர்வர். இனிய உயர்ந்த குரல்களை இரவல் வாங்கிக் கொண்டு மக்களைத் தன்வயப்படுத்துவர். அந்நகரங்களைக் கொடுங்கோன்மைக்கும் ஜனநாயகத்துக்கும் இழுத்துவிடுவர்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : மேலும் அவர்கள் இதற்காகக் கவுரமும் பணமும் பெறுகின்றனர். கொடுங்கோலர்களிடமிருந்து எதிர்பார்க்கக் கூடியதற்கு அடுத்த மிகப் பெரிய கவுரவம் குடியாட்சியிலிருந்து பெறுவர்; ஆனால் அவர்கள் அரசியலமைப்புக்

குன்றின் மேலே ஏற ஏற அவர்தம் பெருமை குன்றத் தொடங்கி இறுதியில் மூச்சுவிட முடியாமைபோல மேலேற முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : நாம் எடுத்த பொருளினின்று பிறழ்ந்து அலேந்து கொண்டிருக்கிருேமே! திரும்பிக் கொடுங்கோலன் எங்ஙனம் தனது மிகவும் வேறுபட்டதும் பெரிதும் எப்போதும் மாறுவதுமான படையைப் பாதுகாக்கிருன் என்று பார்ப்போம்.

அதைமாந்தஸ் : புனிதமான பொக்கிஷங்கள் அந்நாட்டில் இருந்தால் அவற்றைத் தன்னுடைமையாக்கிச் செலவிட்டு விடுவான். தனது மக்களின் சொத்துக்கள் போதுமானதாக இருக்கும் வரை அவர்களிடமிருந்து வாங்கக்கூடிய வரிகளேக் குறைத்துவிடுவான்.

சாக்ரடீஸ் : அந்தச் சொத்துக்கள் குன்றிவிடும்போது?

அதைமாந்தஸ் : ஏன், அவனும் அவனது உயிர்த்தோழர்களும் (ஆணுக இருக்கட்டும், பெண்ணுக இருக்கட்டும்) அவனது தந்தையின் சொத்துக்களிலிருந்து காப்பாற்றப்படுவர்.

சாக்ரடீஸ் : அதாவது, பொதுமக்களிடமிருந்து தன் நிலேயைப் பெற்ற அவனேயும் அவன் நண்பர்களேயும் பொதுமக்களே காப்பாற்றுவர் என்று சொல்கிறீர்கள் அல்லவா?

அதைமாந்தஸ் : ஆம், அவர்களால் இதைத் தவிர்க்க முடியாது.

சாக்ரடீஸ் : ஆனுல் வயது வந்த ஒரு மகனேத் தந்தை காப்பாற்றுவது முறையல்ல, மகனே தந்தையைக் காப்பாற்ற வேண்டும், என்று மக்கள் சினந்து பேசினுல் என்ன ஏற்படும்? தன் மகன் மனிதனுனவுடன் அவனது அடிமைகளேயும் நண்பர்களேயும் கயவர் கூட்டங்களேயும் தானே காக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் அத்தந்தை தன் மகனேப் பெறவோ அன்றி வாழ்க்கையிலிருத்தவோ முன்வரவில்லே. ஆனுல் தன் மகன் தன்னேக் காப்பாற்ற வேண்டும், அவனுடைய உதவியால் பணக்காரர்கள் பிரபுக்கள் என்று சொல்லப்படும் இவர்களாட்சியினின்றும் விடுதலே பெறலாம் என்றே எண்ணுகிருன். புரட்சி செய்யும் மகனேயும் அவனது மட்டரகமான நண்பர்களேயும் விரட்டும் தந்தையைப் போன்றே, இத்தந்தையும் அவனேயும் அவன் நண்பர்களேயும் அகலும்படிக் கட்டளேயிடுகிருன்.

அதைமாந்தஸ்: கடவுளே, எத்தகைய அரக்கனைத்தான் இது காறும் வளர்த்தோம் என்பதை அந்தத் தந்தை பிறகுதான் உணர்வர். அவனை வெளியே விரட்ட எண்ணும்போதுதான் தான் வலுவற்றிருப்பதையும் தன் மகன் வலுவுடனிருப்பதையும் காண்கிருர்.

சாக்ரடீஸ்: ஏன்? அவர்மீது அக்கொடுங்கோலன் பலத்தைப் பயன்படுத்துவான் என்று சொல்லுகிருய்? எதிர்க்கும் தந்தையை அவன் அடிக்கிருன் என்று?

அதைமாந்தஸ்: ஆம், முதலில் தன் தந்தையை நிராயுதனுக்கிய பின் அடிப்பான்.

சாக்ரடீஸ்: பிறகு அவனே தந்தையைக் கொன்ற பாதகன். வயதான தந்தையின் கொடிய பாதுகாவலன். இதுவே உண்மையான கொடுங்கோன்மை. அதை அப்படிக் கருதுவதில் இனித் தவறேயில்லை. சுதந்திர மனிதனின் அடிமைத்தனமாகிய புகையினின்றும் தப்பும் மக்கள் அடிமைகளின் கொடுங்கோன்மையாகிய நெருப்பில் விழுந்துவிடுகின்றனர். இங்ஙனம் சிந்தனை, ஒழுங்கு ஆகியவற்றை விட்டு வெளியேறிய சுதந்திரம் கொடுமையான அடிமைத்தனத்திற்குச் சென்றுவிடுகிறது.

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: மிகவும் நன்று. கொடுங்கோன்மையின் தன்மையைப் பற்றியும், அது எங்ஙனம் மக்களாட்சியினின்றும் தோன்றி வளர்ந்ததென்பதையும் போதிய அளவு விவாதித்து விட்டோம் என்று கருதுதல் சரிதானே?

அதைமாந்தஸ்: ஆம், போதிய அளவு கண்டுவிட்டோம்.

ஒன்பதாம் புத்தகம்

சாக்ரடீஸ் : கடைசியாகக் கொடுங்கோன்மையாளன் வருகிருன். அவன் எங்ஙனம் மக்களாட்சியைச் சேர்ந்தோனின்றும் தோன்றினுன் என்பதையும், இன்பத்திலும் துன்பத்திலும் அவன் எப்படி வாழ்கிருன் என்பதையும் மீண்டும் நாம் ஆராயவேண்டும்.

அதைமாந்தஸ் : ஆம் அவன் ஒருவனே இன்னும் எஞ்சியுள்ளான்.

சாக்ரடீஸ் : இருந்தும், இதற்கும் முன்னேய விஞவே இன்னும் விடையளிக்கப்படாமல் உள்ளது.

அதைமாந்தஸ் : என்ன விஞ?

சாக்ரடீஸ் : ஆசைகளின் எண்ணிக்கையும் இயல்பும் பற்றிப் போதிய அளவு கண்டுவிட்டோம் என நான் நினைக்கவில்லை. அதை அறியாதவரை இவ்விவாதம் குழப்பமிகுந்தே காணப்படும்.

அதைமாந்தஸ் : நல்லது, விட்டுப்போனதைப் பூர்த்தி செய்வதற்கான தருணத்தை நாம் இன்னும் இழந்துவிடவில்லையே.

சாக்ரடீஸ் : மிகவும் உண்மை. இங்கே நாம் புரிந்துகொள்ள விரும்பும் கருத்தைக் காண வேண்டியுள்ளது. சில தேவையற்ற சுகங்களையும் ஆசைகளையும் நான் நீதிக்குப் புறம்பானவை எனக் கருதுகிறேன். ஒவ்வொருவனிடத்தும் அவை இருப்பனபோன்று தோன்றுகின்றன ; ஆனல் சிலரிடத்தில் மட்டும் அவை சிந்தனையாலும் விதிகளாலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அங்கே அவற்றிற்கு மேலாக நல்ல

ஆசைகள் நிலவுவதுடன், ஒன்று அத்தீய ஆசைகள் முற்றி லும் வெளியே விரட்டப்பட்டுவிடுகின்றன, அல்லது குன்றி வலுவிழந்து விடுகின்றன. ஆனால் மற்றவர்களிடமோ அவை வலுப்பெற்று மிகுதியாகக் காணப்படுகின்றன.

அதைமாந்தஸ் : எந்த ஆசைகளை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

சாக்ரடீஸ் : அதாவது மனிதனின் சிந்தனையும், மனிதத் தன்மையும், ஆட்சித்திறனும் உறங்கும்போது, விழித்துக் கொண்டிருக்கும் ஆசைகளையே குறிப்பிடுகின்றேன். அப் பொழுது நம்மிடமுள்ள கொடிய விலங்கு, இறைச்சி (உணவு) யினாலோ குடியினாலோ உந்தப்பட்டுக் கிளம்பிவிடுகிறது. அது எழுந்து தன் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்ளக் கிளம்புகிறது. அப்போது, வெட்கத்தையும் அறிவையும் அறவே துறந்து விட்ட மனிதன் தன் எண்ணத்தில் தோன் றும் எந்த இழி செயலையும் குற்றத்தையும் புரியத் தயங்க மாட்டான்—முறை கெட்ட புணர்ச்சி, கூடாவொழுக்கம், பெற்றோரைக் கொல்லல், உண்ணத் தகாதவற்றை உண்ணு தல் இவை எவையும் இவ்விதிக்குப் புறம்பானவையல்ல!

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : மனிதன் எப்பொழுது சரியான உண்மை நிலையை அறியக் கூடியவனாகிறான்? எப்படி அவன் வெறும் கற்பனை யானவைகளும் நீதிக்குப் புறம்பானவைகளுமான தோற்றங் களுக்கு—கனவுகளுக்குப் பலியாகாமல் தப்புவான்? அவனது நாடி வலுவாகவும் மிதமான இயல்புடையதாகவும் இருக்கும் போது, தனது ஆசைகளை, கூடுதலாகவோ குறைவாகவோ இல்லாமல் போதிய அளவுக்கு அவற்றை அடக்கி (தூங்க) வைத்துத் தன் உயரிய சிந்தனைகட்கு இடையூறு வராமற் செய்யக்கூடிய அளவுக்குத் திருப்திசெய்துகொண்ட பின்னர், தனது பகுத்தறிவு உறங்கிவிடுமுன் அதனை உயரிய எண் ணங்களிலும் நேர்மையான சிந்தனைகளிலும் ஈடுபடுத்திக் கடந்த காலத்திலோ, நிகழ் காலத்திலோ அல்லது எதிர் காலத்திலோ, பெறுதற்கரிய பேரறிவை நாடுவானாகில் இது சாத்தியம். ஆசையை அடக்கிய பின்னும் வேறு எதனுட னாவது முரண்பாடு ஏற்படின் அதனையும் பகுத்தறிவுக்கு ஒவ்வாததென விலக்கிப் பிறிதொன்றான சிந்தனையென்ற ஆற்றலைப் பெருக்கி ஓய்வு பெறுவதற்கு முன் உண்மை நிலையை அநேகமாக எட்டிவிடுகிறான் எனலாம்.

அதைமாந்தஸ்: தாங்கள் சொல்வதை நான் முற்றிலும் ஒத்துக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: இதைச் சொல்லும்போது நான் எடுத்துக்கொண்ட பொருளினின்று விலகிச் செல்கிறேன். ஆனால் நான் சொல்ல விரும்புவது யாதெனில், நம்மனைவரிடத்தும்—நல்ல மனிதர்களிடத்தும் கூட—கட்டுக்கடங்காத கொடிய விலங்குத் தன்மை உள்ளது. அது நாம் தூங்கும்போது வெளிவருகிறது. நான் இப்படிக் கூறுவது சரியா, நீ இதை ஒத்துக் கொள்கிறாயா என்பதைத் தயவு செய்து சொல்லவேண்டும்.

அதைமாந்தஸ்: சரிதான், நான் ஒத்துக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: இப்பொழுது மக்களாட்சி மனிதனுக்கு நாம் அளித்த இயல்புகளை நினைவுபடுத்திக் கொள். இளமை முதலே ஓர் உலோபியான தந்தையால் வளர்க்கப்பட்டான் எனக் கூறினோம். அவர் அவனிடம் சேமிப்பு மனப்பான்மையை ஊக்குவித்தார். ஆனால் கேளிக்கைகளுக்கும் அணிகலன்களுக்குமான தேவைகள் அவசியமற்றவை என்பதால் அவர் அவற்றுக்கு முகங்கொடுப்பதில்லை. அல்லவா?

அதைமாந்தஸ்: உண்மை.

சாக்ரடீஸ்: அதன் பின்னர் அவன் மிகவும் தரம்மிகுந்த தான்தோன்றிகளாகிய மாந்தருடன் சேர்ந்துகொண்டான். அவர்களுடைய எல்லா விருப்பமான வழிகளையும் ஏற்றுத் தன் தந்தையின் உலோபத்தனத்திலிருந்து அதற்கு நேர் எதிரிடையான நிலைக்கு விரைகிறான். கடைசியில் இயல்பாக அவனைக் கெடுத்தவர்களிலும் மேலானவனாகையால் அவன் இரு திசைகளிலும் இழுக்கப்பட்டு மோசமான, இழிவான, ஆசைகளில்லாமல் எல்லா இன்பங்களிலும் ஒருமிதமான தன்மையுடன் ஈடுபடுவதாக எண்ணி வாழ்கிறான். இதே முறையில்தானே ஒரு சிலராட்சித் தன்மையினின்றும் மக்களாட்சி மனிதன் தோன்றினான்?

அதைமாந்தஸ்: இதுவரை அவனைப் பற்றிய நமது கருத்து அதுதான்.

சாக்ரடீஸ்: இனி, ஆண்டுகள் பலகழிந்தபின் நீ அவனைக் காண வேண்டும். அவனுக்கு ஒரு மகன் பிறந்திருப்பான். அவனும் தந்தையின் கொள்கைகளிலேயே வளர்க்கப்படுகிறான்.

அதைமாந்தஸ் : அவனைக் கற்பனை செய்து கொண்டேன்.

சாக்ரடீஸ் : பிறகு அத் தந்தைக்கு ஏற்பட்ட அனைத்தும் மகனுக்கும் ஏற்படுவதாகவும் கற்பனை செய்து கொள்ள வேண்டும். அதாவது அவனது நண்பர்களால் முழுச் சுதந்திரம் என அழைக்கப்படும் ஓர் ஒழுங்கற்ற வாழ்வுக்குக் கொண்டு சொல்லப்படுகிறான். ஆனால் அவனது தந்தையும் உற்றாரும் அவனது மிதமான ஆசைகளையே விரும்புகின்றனர். அந்த எதிர்க்கட்சியோ எதிரிடையான ஆசைகளில் அவனுக்கு உதவுகின்றது. தங்கள் பிடிமானம் அவனிடத்தில் குறைவதைக் கண்டவுடன் அந்த வித்தைக்காரர்களும் கொடியவர்களும் அவனை ஒரு பெரிய ஆசையில் நுழைத்துவிடத் திட்டமிடுகின்றனர். அவனைச் சோம்பலும் பணச் செலவும் மிகுந்த காமச் செயல்களில் ஈடுபடும் ஒரு வகையான இறக்கைகளமைந்த ராட்சத ஆண் தேனீயாக மாற்றச் சதி செய்கின்றனர். இதுதான் பொருத்தமான கற்பனை.

அதைமாந்தஸ் : ஆம். அவன் நிலையை விளக்கும் சரியான கற்பனை அதுவே.

சாக்ரடீஸ் : நறும்புகை, நறுமணம், மலர், மது ஆகியவையிணைந்த சூழலுக்கிடையே அமைந்த மற்றைக் காமங்களும் இன்னும் சிற்றின்பச் சுகத்துடன் கூடிய வாழ்வும் அவன் முன்னே அவிழ்த்துவிடப்பட்டு அவனைச் சுற்றிச் சூழ்ந்து கொள்கின்றன. அந்த ஆண் தேனீக்கு ஆசையாகும் கொடுக்கை அவர்களால் முடிந்தவரை வளர்த்துக் கடைசியில் அந்த ஆன்மாவின் தலைவன், பைத்தியத் தன்மையைத் தனது பாதுகாப்பாளனாகக் கொள்ளும்படிச் செய்து அவனைப் பித்தனாக்கிவிடுகின்றன. ஏதாவது நல்ல கொள்கைகளோ அன்றி ஆசைகளோ உருவாகுமானால் அல்லது அவனிடம் ஏதேனும் வெட்க உணர்வு இருக்குமேயாகில் அவன் இந்தக் கொள்கைகளுக்கு முடிவு கட்டுகிறான். கடைசியில் தன்னுணர்வையிழந்து முழுப் பித்தனாகும் வரையில் இவற்றை வெளியே தள்ளிவிடுகிறான்.

அதைமாந்தஸ் : ஆம், அப்படித்தான் கொடுங்கோன்மை மனிதன் உருவாகிறான்.

சாக்ரடீஸ் : இக் காரணத்தால்தானே தொன்று தொட்டுக் காதலும் கொடுங்கோலன் என அழைக்கப்படுகிறது?

அதைமாந்தஸ் : ஆய்சரியப்படுவதற்கில்லை.

சாக்ரடீஸ் : மேலும், குடிகாரனும்கூடக் கொடுங்கோலனின் உணர்வுகள் கொண்டுள்ளான் அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : பித்தமேறிய ஒருவன் தன்னிலையிழந்திருக்கும் போது தன்னை மனிதர்க்கு மட்டுமின்றிக் கடவுளுக்கும் மேலாக ஆளத்தகுந்தவன் என நினைக்கிறான் அல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், அப்படித்தான் எண்ணுவான்.

சாக்ரடீஸ் : இயல்பினாலோ, பழக்கத்தினாலோ அன்றி இந்த இரண்டினாலுமோ உந்தப்பட்டு மனிதன் குடிகாரனாக, ஆசைமிக்கவனாக, காமவெறிபிடித்தவனாக, ஆகும்போது இவன்தானே கொடுங்கோன்மை மனிதனுக்கு இலக்கணம் ஆகிறான் ? எனதருமை நண்பா ! யான் சொல்வது சரி தானே ?

அதைமாந்தஸ் : மிகவும் சரி.

சாக்ரடீஸ் : இவனே கொடுங்கோலன். இவன் தோற்றம் இதுவே. இவன் எப்படி வாழ்கிறான் ?

அதைமாந்தஸ் : நீங்கள் தான் சொல்லியாக வேண்டும்.

சாக்ரடீஸ் : சரி, நான் கற்பனை செய்கிறேன். அடுத்து அங்கு விருந்துகளும், வீர விளையாட்டுக்களும், குடிக்களிப்பும், விலைமகளின்பமும் இன்னும் எல்லாவிதக் கேளிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டு அவன் அவற்றில் திளைப்பான். காமமே அவனுள்ளத்தில் ஆட்சி செய்யும். அதுவே அவனது ஆன்மாவின் எல்லா அம்சங்களையும் ஆள்கிறது.

அதைமாந்தஸ் : அது உண்மை.

சாக்ரடீஸ் : ஆம். ஒவ்வொரு பகலும், ஒவ்வொரு இரவுமாக அவனது ஆசைகள் வளர்ந்து கட்டுக் கடங்காதவையாகி விடுகின்றன. அவற்றின் தேவைகளும் பெருகுகின்றன.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அவனிடம் இருக்கக் கூடிய பொருள்களும் விரை வில் செலவாகிவிடுகின்றன.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : அதன்பிறகு கடன் ஏற்பட்டுச் சொத்தானது கரை கிறது.

அதைமாந்தஸ் : உண்மை.

சாக்ரடீஸ் : இறுதியில் ஒன்றுமில்லாத நிலை ஏற்பட்டவுடன் அவனுடைய ஆசைகளனைத்தும் அவனைச் சூழ்ந்து கொண்டு இளம் அண்டங் காக்கைகள் கூட்டில் சூழ்ந்து கொண்டு உணவிற்காக அலறுவதைப் போன்று அலறுகின்றன. ஆனால் அவனே அவற்றிற்கெல்லாம் தலைமைதாங்கும் காமத்தினால் சிறப்பாகத் தூண்டப்பட்டு, பித்தம் ஏறி, யாருடைய பொருள்களைக் கவரலாம், யாரை ஏமாற்றலாம், கெடுக்கலாம் என்று அவற்றைத் திருப்தி செய்வதற்கான வழிகளைக் காணத் தொடங்குகிறான்.

அதைமாந்தஸ் : ஆம், அவன் நிலை அப்படித்தான்.

சாக்ரடீஸ் : அவன் கொடிய வேட்கைகளினின்றும் இன்னல்களினின்றும் விடுபடவேண்டுமெனில் அவனுக்கு வேண்டியது பணம். அது எவ்வழியில் வந்தால் என்ன ?

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : அவனுள்ளத்திலேயே இன்பங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பதவிக்கு வரும். புதிதாக வருவது பழையவற்றின் உரிமைகளையும் சிறப்புக்களையும் எடுத்துக் கொள்வது போல, இளைஞனாக அவன் தாய் தந்தையர்களிடம் அவர்களுடையதைவிடவும் அதிகப் பங்கு கோருவான். தனது சொந்தப் பங்குச் சொத்தைச் செலவிட்டு விட்டால் அவர்களிடமிருந்தும் சிறிது எடுத்துக் கொள்வான்.

அதைமாந்தஸ் : ஆம், அப்படிச் செய்வது அவனியல்புதான்.

சாக்ரடீஸ் : அவனுடைய பெற்றோர்கள் அதற்குஇணங்கவில்லையெனில், உடனே அவர்களையும் ஏமாற்றுவான்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அதிலும் அவன் தோற்றுவிட்டால் பலத்தைப் பயன்படுத்தி அவர்களைச் சூறையாடுவான்.

அதைமாந்தஸ் : ஆம், அனேகமாக அப்படித்தான் செய்வான்.

சாக்ரடீஸ் : என் நண்பா? அந்தக் கிழவனும் கிழவியும் தம் சொத்திற்காக அவனுடன் போராடினால் என்ன நிகழும் ? அந்தப் பிராணி அவர்களைக் கொடுங்கோன்மைப் படுத்துவதற்காக இரங்குமோ ? அன்றிக் கவலைப்படுமோ ?

அதைமாந்தஸ் : அந்தப் பெற்றோர்களின் நிலையை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

சாக்ரடீஸ் : ஆனால் கடவுளே ; தேவையற்ற ஒரு புதிய விலை மகள் தொடர்பால், அவளது சொற்களைக் கேட்டு, அவன் நெடுநாள் பந்தமுள்ள தனது தாயை—அவனது தோற்றத் திற்கே காரணமான அந்தப் பழைய உறவினை—எதிர்த்து அதே வீட்டில் அவருடன் கொணரப்பட்ட—தன் காதலியி னுடைய அதிகாரத்தின்கீழ்க் கொண்டுவருவதை உங்களால் நம்ப முடிகிறதா ? அல்லது அதுபோன்ற நிலையிலேயே தேவைக்குப் புறம்பான இள நண்பனுக்காகத் தனது பழைய, தவிர்க்க முடியாத, நண்பனை தன்வயதான தந்தைக்கும் அதே இழிவை அவன் செய்வானல்லவா ?

அதைமாந்தஸ் : ஆம், அவன் அவ்வாறு செய்வது இயல்பே.

சாக்ரடீஸ் : உண்மை. ஆகவே கொடுங்கோன்மை மகன்—தனது பெற்றோர்களுக்கு ஒரு பேறு !

அதைமாந்தஸ் : ஆம்.

சாக்ரடீஸ் : முதலில் அவர்களது சொத்துக்களை எடுத்துக் கொள்கிறான். அது தோற்றுவிட்டால் ஆன்மாவில் ஆழத் தில் குவிந்துள்ள ஆசைகளால் உந்தப்பட்டு, ஒரு வீட்டில் கன்னக்கோல் சார்த்துகிறான். அல்லது இரவில் வழிப் போக்கர்களின் பொருளைத் திருடுகிறான். அதன் பிறகு கோயிலில் திருடுகிறான். இதற்கிடையில் அவன் இளமை முதல் பயின்ற பழைய கொள்கைகள்—நல்லது தீயது பற்றிய தீர்ப்புக்கூறும் தன்மைவாய்ந்தவை—விரட்டப்படு கின்றன. தீய ஆசைகளே அவனது காமத்தின் துணை களாய் அவனது பேரரசில் பங்கு கொள்கின்றன. அவனு டைய மக்களாட்சியியல்பு கொண்ட நாட்களில் சட்டத்திற் கும், பெற்றோருக்கும் கட்டுப்பட்டிருக்கும்போது இவை யனைத்தும் தூக்கத்திலோ அன்றிக் கனவிலோதான் அவிழ்த்துவிடப்பட்டன. ஆனால் இப்பொழுதோ காமத்தின் ஆட்சியில் அவன் இருக்கிறான். கனவில் அன்றிருந்த நிலையை இன்று நனவில் எப்பொழுதும் அடைந்துகொண் டிருக்கிறான். மிகக் கொடுமையான கொலையும் புரிவான், அன்றி உண்ணத்தகாதவற்றை உண்பான், அன்றி வேறு ஏதாவது கொடிய செயல்களைச் செய்கின்ற குரூரமானவனாக இருப்பான். காமமே அவனது கொடுங்கோலன். அது

அவனது எசமானன். ஒழுங்கற்ற அவனது அரசுனை அது ஒரு கொடுங்கோலன் நாட்டைச் செலுத்துவது போன்று அவனைச்செலுத்துகின்றது. ஏதாவது முறையற்ற செயல்களைச் செய்து அதன் மூலமாகத் தன்னையும் தன் நண்பர்களின் கூட்டத்தையும் நிலைக்கச் செய்யும்படி அவன் செய்கிறன். அவன் அச்செயல்களை, வெளியிலிருந்து வந்த தீய தொடர்பினுலோ அன்றி அவனுள்ளேயே மலிந்து கிடக்கும் தீய தன்மையினுலோ செய்துவிடுகிறன். அவனது வாழ்வின் தன்மையை நாம் அறிந்திருக்கிறேமல்லவா?

அதைமாந்தஸ்: ஆம், உண்மை.

சாக்ரடீஸ்: அதுபோன்று நாட்டில் ஒருசிலரே இருப்பார்களானல், ஏனைய மக்கள் நற்குணத்தோராயின் இத் தீயோர் வெளியே சென்று வேறெரு கொடுங்கோலனுக்கு மெய்க் காவலராகவோ அன்றிக் கூலிப்போர் வீரர்களாகவோ அமர்கின்றனர். போரேதுமில்லாவிடில் வீட்டிலிருந்துகொண்டு நாட்டில் பல சிறு குறும்புகளைச் செய்துகொண்டிருக்கின்றனர்.

அதைமாந்தஸ்: எப்படிப்பட்ட குறும்புகள்?

சாக்ரடீஸ்: உதாரணமாக, அவர்கள் திருடர்களாகவோ, கொள்ளையடிப்பவர்களாகவோ, பணப்பையைப் பறிப்பவர்களாகவோ, வழிப்பறி செய்பவர்களாகவோ, கோயில் திருடர்களாகவோ, மனிதர்களையே திருடுபவர்களாகவோ இருக்கின்றனர். அல்லது அவர்கள் பேசும் திறன் பெற்றவர்களாயிருப்பின் கோள் சொல்பவர்களாக ஆகின்றனர்; பொய்ச் சாட்சி கூறுகின்றனர்; லஞ்சம் பெறுகின்றனர்.

அதைமாந்தஸ்: குற்றங்களின் ஒரு தொகுதி! அவற்றைச் செய்யும் குற்றவாளிகளின் எண்ணிக்கை குறைவாயினும் அவை குற்றங்களே.

சாக்ரடீஸ்: ஆம். சிறியது, பெரியது என்பவை ஒப்பிடும் சொற்களே. தீமைகளையும், துன்பங்களையும், நாட்டிற்கு இழைக்கும் இக்குற்றங்கள், கொடுங்கோலனை அணுகுவதேயில்லை. ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலேயே நின்றுவிடுகின்றன. அவன் செய்யும் கொடுமையும் இழைக்கும் பாவமும் மிகப் பெரியவை. இந்தத் தீய கூட்டமும், அதன் அடியார்களும் பெருகியவுடனே தமது வலிமையை உணர்கின்றனர். மக்களின் கண்மூடிதனமான ஆதரவால் உதவி

செய்யப்பட்டுத் தங்களிடையே உள்ள ஒருவனை—கொடுங் கோலனின் குணங்களில் பலவும் உள்ளத்தே கொண்ட ஒருவனைத் தேர்ந்தெடுத்து அவனைத் தம்மை ஆளும் கொடுங்கோலனாக்கி விடுகின்றனர்.

அதைமாந்தஸ் : ஆம், அவனேகொடுங்கோலனுவதற்குமிகவும் பொருத்தமானவன்.

சாக்ரடீஸ் : மக்கள் இடங்கொடுத்தால் நல்லதுதான். ஆனால் அவர்கள் எதிர்த்தால் அவன் தனது சொந்தத் தாயையும் தகப்பனையும் அடித்தது போன்று இப்பொழுது அவர்களை யும் அடிக்கிறான். தந்தை நாட்டைத் (அன்றி கிரீட் நாட்டி னர் சொல்வதுபோல் தாய் நாட்டை) தான் காக்கும் இளை யோர்களுக்குக் கொடுத்து அவர்களை ஆட்சியாளர்களாகவும் எசமானர்களாகவும் செய்துவிடுகிறான். அவனது ஆசை களுக்கும் உணர்ச்சிகளுக்கும் இதுவே முடிவு.

அதைமாந்தஸ் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அந்த இளைஞர்கள் அதிகாரம் பெறுவதற்கு முன், தனி நபராயிருக்கும்போது, அவர்களுடைய பண்பு இது தான் தமது கருவிகளாக இருந்து தம்மைப்புகழ்பவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வர். எவரிடத்தாவது ஏதாவது பெற வேண்டுமெனில் அவரிடம் தலை குனிந்து பணிவாக நிற்கத் தயாராயிருப்பர். அவரிடம் பேரன்பு கொண்டவ ராகவே தோன்றுவர். ஆனால் தம் எண்ணம் ஈடேறிய பின்னரோ அவரைக் கண்டு கொள்ளவே மாட்டார்.

அதைமாந்தஸ் : ஆம், உண்மை.

சாக்ரடீஸ் : அவர்கள் எப்பொழுதும் எசமானர்களாகவோ அன்றி ஊழியர்களாகவோ இருப்பர். அவர்கள் ஒருவருக் கும் நண்பராயிருப்பதில்லை. உண்மையான சுதந்திரத் தையோ, நட்பையோ அக்கொடுங்கோலர் ஒருபோதும் சுவைத்ததில்லை.

அதைமாந்தஸ் : நிச்சயமாக, இல்லை.

சாக்ரடீஸ் : அத்தகைய மனிதரை மோசக்காரர்கள் என நாம் அழைப்பதில் என்ன தவறு?

அதைமாந்தஸ் : இதிலென்ன கேள்வி?

சாக்ரடீஸ் : நேர்மையைப் பற்றிய நமது கருத்து சரியானதா யிருப்பின், அவர்கள் முற்றிலும் நேர்மையற்றவர்களே.

அதைமாந்தஸ் : முற்றிலும் சரி.

சாக்ரடீஸ் : ஒரே வார்த்தையில் சொல்லப்போனால், மிக மோசமான மனிதனின் தன்மையானது, நாம் கனவில் காண்பதன் உண்மை உருவம்.

அதைமாந்தஸ் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இயல்பாகவே கொடுமைத்தன்மை பெற்றவனே கொடுங்கோலனாக ஆள்கிறான். அவன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகக் காலம் வாழ்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு மிகவும் கொடுங்கோலனாகிறான்.

கிளாக்கன் : அது உண்மை. (இதைக் கூறித்தன் பேச்சுமுறையைத் தொடங்கினான், கிளாக்கன்).

சாக்ரடீஸ் : தீயோனெனத் தீர்மானிக்கப்பட்ட அவன் துயரமிக்கோனுமல்லவா? தொடர்ந்தும் தீவிரமாகவும் கொடுங்கோன்மை புரிவோன், தொடர்ந்தும் தீவிரமாகவும் வருந்துவோனல்லவா? பொதுவாக மக்கள் இதை எண்ணுவதென்னவோ கிடையாது.

கிளாக்கன் : ஆம், அது தவிர்க்கமுடியாதது.

சாக்ரடீஸ் : கொடுங்கோன்மை மனிதன், கொடுங்கோன்மை நாட்டைப் போன்றும், மக்களாட்சி பேணும் மனிதன் மக்களாட்சி நாட்டைப் போன்றும், இதைப்போன்றே மற்றவைகளும் இருக்கக் கூடும் அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : சுகத்திலும் நன்மையிலும் நாட்டிற்கு நாடு தொடர்பு உள்ளதுபோல மனிதனுக்கு மனிதன் தொடர்பு இருக்குமன்றோ?

கிளாக்கன் : நிச்சயமாக உண்டு.

சாக்ரடீஸ் : அப்படியானால், அரசனின் கீழிருந்த நமது நாட்டை, கொடுங்கோலன் நாட்டுடன் ஒப்பிடுவோம். நற்குணம் பற்றியவரையில் அவை எங்ஙனம் காணப்படுகின்றன?

கிளாக்கன் : அவை எதிர் முனைகளில் நிற்கின்றன; ஏனெனில் ஒன்று,மிகவும் சிறப்பானது, மற்றொன்று மிகவும் கொடியது.

சாக்ரடீஸ் : எது எப்படிப்பட்டது என்று காண்பதில் தவறில்லை. இப்பொழுது அவற்றின் தொடர்பான நன்மை தீமைகளைக் குறித்து என்னைப் போன்ற முடிவுக்கே நீயும் வருகிறாயா? என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

கொடுங்கோலனின் தோற்றத்திஞல் இங்கே நாம் பீதி மிகுந்தவர்களாக ஆகிவிடக் கூடாது. அவன் தனிமை யானவனே, அவனுடன் அவனைத் தாங்குவோர் ஒருசிலர் களும் இருப்பர். ஆனல் நாம் செய்ய வேண்டியபடி நகரின் எல்லா மூலை முடுக்குக்களையும் சென்று பார்த்துவிட்டு நம் கருத்தைத் தெரிவிப்போம்.

கிளாக்கன் : இது ஒரு நல்ல அழைப்பு. ஒவ்வொருவரும் அறியக் கூடியதையே நானும் காண்கிறேன். கொடுங் கோன்மை ஆட்சி அமைப்புமிகவும் இழிந்த ஆட்சி அமைப்பா கும். ஆனல் அரசனுடைய ஆட்சியே மிகவும் இன்பமானது.

சாக்ரடீஸ் : மனிதனை அளவிடுவதற்கும்கூட, மனிதத்தன்மை யைப் புகுந்துகாணக்கூடிய மனம் படைத்த ஒரு நீதிபதி வேண்டுமெனவும் நான் விரும்புகிறேன். அவர் பொருளின் பகட்டான வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்கும் குழந்தை களைப் போலக் கொடுங்கோன்மையின் பெரிய பிரகாசமான வெளித்தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடக் கூடாது. ஆனல் தெளிவான அகக்கண் படைத்தவராக இருத்தல் வேண்டும். அத்தகைய ஆராயும் தன்மை வாய்ந்த ஒருவர் தீர்ப்புக்கூற வேண்டும். ஒரே இடத்தில் அவனுடனேயே வசித்து, அவனது அன்றாட வாழ்வைக் கண்டு, தனது துன்ப ஆடை யைக் கழற்றிவிட்டு, அவன் தன்னியல்புடனிருக்கக் கூடிய அவனது குடும்ப உறவுகளில் காணப்படும் அவன் நிலையை அறிந்தும், பொது மக்களுக்கு இன்னல்கள் நேரும்போது மேற்கொள்ளும் அவன் செய்கையைக் காணும் அவர்தான் கொடுங்கோலனின் இன்பதுன்பங்களைப் பிறமாந்தருடன் ஒப்பிட்டு நமக்குக் கூறமுடியும்.

கிளாக்கன் : அது மிகச் சிறந்த யோசனை.

சாக்ரடீஸ் : நாமே மிகவும் சிறந்த அனுபவமிக்க நீதிபதிகள் என்று கருதி, நம் முன்னர் அத்தகைய மனிதனைக் கண்ட தாக வைத்துக்கொள்வோம். நமது கேள்விகளுக்குப் பதிலிறுக்கக் கூடியோர் எவராவது வேண்டும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இப்பொழுது தனி மனிதனும் அவனியல்பு கொண்ட நாடும் இணையாய் இருப்பதை மறந்துவிடாதே. இதை மனதில் கொண்டு ஒன்றிலிருந்து மற்றென்றைக் கண்டு அவற்றின் தன்மைகளைக் கூற முடியுமா ?

கிளாக்கன் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : நாட்டினின்றும் தொடங்குவோம். கொடுங்கோலாட்சியில் சுதந்திரம் காணப்படுமா அன்றி அடிமை நிலை காணப்படுமா ?

கிளாக்கன் : அதைவிட அடிமை நிலையுள்ள எந்த நாடும் இருக்க முடியாதே.

சாக்ரடீஸ் : இருந்தும், சுதந்திர மனிதர்களுடன் எசமானர்களும் அங்கு உள்ளனர் என்பதைப் பார்த்தாயா ?

கிளாக்கன் : ஆம், ஒருசிலர் இருப்பதைக் காண்கிறேன். மக்கள் நிலையைப் பொதுவாகக் கூறுமிடத்து மிகச் சிறந்தவர்கள் இரங்கத்தக்க முறையில் நிலையழிந்து அடிமைகளாக்கப் பட்டுள்ளனர்.

சாக்ரடீஸ் : நாட்டுக்கேற்றது மனித நிலை என்பதுதானே விதி. அக்கொடுங்கோலனின் ஆன்மா இழிவாலும் மோசமான தன்மையாலும் நிரம்பியுள்ளது. அவனுடைய நல்லியல்புகளனைத்தும் அடிமைகளாக்கப்பட்டுள்ளன. ஒரு சிறிய ஆளும் பிரிவு அங்கு உண்டு. அதுவும் மோசமான பைத்தியக்காரத்தன்மை வாய்ந்தது.

கிளாக்கன் : தவிர்க்கமுடியாது.

சாக்ரடீஸ் : அத்தகையவனது உள்ளம் சுதந்திர மனிதரைப் போன்றிருக்குமோ, அன்றி அடிமையினரைப் போன்றிருக்குமா ?

கிளாக்கன் : அவனது ஆன்மா அடிமைத்தன்மை வாய்ந்தது என்பதே என் கருத்து.

சாக்ரடீஸ் : கொடுங்கோலனால் அடிமையாக்கப்பட்ட நாடு, தன்னியல்பாக இயங்குவதற்கு முற்றிலும் தகுதியற்று விடும்.

கிளாக்கன் : ஆம், முற்றிலும் தகுதியற்றது.

சாக்ரடீஸ் : ஆகவே கொடுங்கோலனுடைய ஆன்மாவும் தன் இச்சைப்படி இயங்கத் தகுதியற்றதோர் பெண் போலாம். அப்பெண்ணை ஒரு தூண்டுகோல் குத்திக் கொண்டே இருப்பதால் அவள் துன்பமும் கோபமும் அடைகிருள்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : கொடுங்கோலனின் கீழ் உள்ள நாடு ஏழ்மை நிலையிலிருக்குமா ? செல்வ நிலையிலிருக்குமா ?

கிளாக்கன் : ஏழ்மையாகத்தானிருக்கும்.

சாக்ரடீஸ் : அந்தக் கொடுங்கோலனின் ஆன்மாவும் எப்பொழுதும் ஏழ்மையுடன் திருப்தியடையாமலே யிருக்குமல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இத்தகைய நாடும் மனிதனும் என்றும் அச்சத்துடனேயே வாழ வேண்டுமல்லவா ?

கிளாக்கன் : சந்தேகமில்லாமல் !

சாக்ரடீஸ் : எந்த நாட்டிலாவது இதைவிட அதிகமான துன்பமும், ஒப்பாரியும், வலியும், முனகலும் காணப்படுமா ?

கிளாக்கன் : நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : ஆசாபாசங்களிலேயே என்றும் அமிழ்ந்துள்ள கொடுங்கோலனைவிட வேறு எந்த மனிதனிடமாவது இவ்வளவு துன்பத்தைக் காண முடியுமா ?

கிளாக்கன் : முடியாது.

சாக்ரடீஸ் : இத்தகைய தீமைகளையெல்லாம் மனதில் கொண்டு தானே நாடுகளிலெல்லாம் மிகவும் துன்பம் நிறைந்தது கொடுங்கோலனது நாடே என்ற முடிவுக்கு வருகிறாய்?

கிளாக்கன் : ஆம், நான் நினைப்பதும் சரியல்லவா ?

சாக்ரடீஸ் : உண்மை. இத்தகைய தீமைகளைக் கொடுங்கோன்மை மனிதனிடம் காணும்போது அவனைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய் ?

கிளாக்கன் : மாந்தரெல்லோரிலும் மிகவும் துன்பம் நிறைந்தவன் அவனே என்றுதான் கருதுகிறேன்.

சாக்ரடீஸ் : அங்கேதான் நீ முதலில் தவறுசெய்யத் தொடங்குகிறாய் என்பேன் நான் !

கிளாக்கன் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : அவன் துன்பத்தின் எல்லையை அடைந்துவிட்டான் என நான் நினைக்கவில்லை.

கிளாக்கன் : அப்படியானால் அவனிலும் துன்பம் மிகுந்தவன் எவன் ?

சாக்ரடீஸ் : நான் இனிமேல் சொல்லப்போகும் ஒருவன்.

கிளாக்கன் : அவன் யார் ?

சாக்ரடீஸ் : கொடுங்கோன்மை வாய்ந்து, தனிப்பட்ட வாழ்வை நடத்த வொண்ணுது பொது வாழ்விலே கொடுங்கோலனுக வாழும் சாபக்கேடு பெற்ற ஒருவன்.

கிளாக்கன் : இப்பொழுது தாங்கள் சொல்வதே சரி என நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : ஆம், இத்தகைய கருத்து நிறைந்த விவாதங்களில் நீ சற்று மிகவும் உறுதியாகவே இருக்க வேண்டும். வெறும் கற்பனையுடன் நின்றுவிடக் கூடாது. எல்லாவற்றிலும், நன்மை தீமைகளை ஆராயும் இவ்வினுவே மிகவும் முக்கியமானது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இப்பொழுது நான் தரும் ஒரு விளக்கம் நம் நிலையைச் சற்றுத் தெளிவாக்கும்.

கிளாக்கன் : அந்த விளக்கம் யாது ?

சாக்ரடீஸ் : நகரங்களில், அடிமைகளை மிகுதியாகப் பெற்ற பணக்காரர்கள் இருக்கக்கூடும். அவர்களிடமிருந்து கொடுங்கோலனின் தன்மை உங்கட்குப் புலப்படும், அவர்களிருவருமே அடிமைகளைப் பெற்றுள்ளனர். வேறுபாடு யாதெனில் கொடுங்கோலன் அதிக அடிமைகளைப் பெற்றுள்ளான்.

கிளாக்கன் : ஆம். அதுதான் வித்தியாசம்.

சாக்ரடீஸ் : அப்பணக்காரர்கள் தம் அடிமைகளைக் கண்டு அஞ்சாது நன்கு வாழ்கின்றனர், அல்லவா ?

கிளாக்கன் : அவர்களைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும் ?

சாக்ரடீஸ் : வேண்டாம் ; ஆனுல் அதற்கான காரணத்தை அறிந்து கொண்டாயா ?

கிளாக்கன் : ஆம். அம்முழு நகரமும் ஒவ்வொருவருடைய, பாதுகாவலுக்காகவும் இணைக்கப்பட்டுள்ளது.

சாக்ரடீஸ் : மிகவும் உண்மை. இந்த எசமானர்களில் ஒருவனை மீண்டும் கற்பனை செய்து கொள்ளுவாயாக. அவன் அடிமைகளைப் பெற்றுள்ளான் என வைத்துக் கொள்வோம். அவனும் அவனுடைய குடும்பமும், சொத்தும், அடிமைகளும் கடவுளால் திடீரென ஒரு பாலைவனத்துக்குக் கொண்டு போகப்படுகின்றனர் என்போம். அவனுக்கு உதவியாக எந்தச் சுதந்திர மனிதனும் அங்கில்லை. அப்பொழுது தானும்

தனது மனைவியும் குழந்தைகளும் அடிமைகளால் கொல்லப் படுவோமோ என்னும் அச்சம் அவனுள்ளத்தைக் கவ்விக் கொள்ளுமல்லவா ?

கிளாக்கன் : ஆம், அவன் பெரிதும் அஞ்சுவான்.

சாக்ரடீஸ் : இப்பொழுது அவன் தனது அடிமைகளைப் போற்றும் காலம் வந்து விடுகின்றது. அவர்களுக்குச் சுதந்திரம், மற்ற உரிமைகள் ஆகியவற்றை அளிப்பதாகப் பல உறுதி மொழிகளைக் கூறுகிறான். தன் விருப்பத்திற்கு மாருகவே அவன் அவர்களை மகிழ்வித்தாக வேண்டும்.

கிளாக்கன் : ஆம், அவனைக் காத்துக் கொள்ள அந்த ஒருவழி தான் அங்குண்டு.

சாக்ரடீஸ் : ஒருவன் மற்றொருவனுக்கு எசமானனுவதை விரும்பாத பலரை அவனைச் சுற்றிலும் அதே கடவுள் கொண்டுவந்து வைத்து விடுவதாகக் கொள்வோம். அவர்களில் எவரேனும் அவனைப் பிடித்து விட்டார்களானுல் அவனுயிரை எடுத்துவிடுவர் அல்லவா ?

கிளாக்கன் : எதிரிகளால் எங்கும் சூழப்பட்டுக் கண்காணிக்கப் படுகிருன் என்று நினைக்கும்போது அவன் நிலை மிகவும் பரிதாபமானது.

சாக்ரடீஸ் ; நாம் விவரித்துக் கூறிய தன்மைகளை இயற்கை யாகவே பெற்றுப் பலவித ஆசைகளும் அச்சங்களும் நிரம்பிய கொடுங்கோலன் கட்டுப்பட்டுக் கிடக்கின்ற இடம் ஒருவகையான சிறைதானே ? அவனுடைய ஆன்மா வலுவற்றது, பொருமை மிகுந்தது, தனிமையானது. அந்த நகரிலுள்ள அனைவரிலும் அவனே ஒரு யாத்திரை செல் வதற்கும், அல்லது சுதந்திர மனிதர் காணவிழையும் காட்சி களைக் காண்பதற்கும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனுல் வீட்டில் பதுக்கி வைக்கப்பட்ட ஒரு பெண்ணைப் போல அவனும் தனது வளையிலேயே வாழ்ந்து கொண்டு, வெளி யிடங்களுக்குப் போய் விருப்பமானவற்றைக் காணும் மற்ற வர்களைக் கண்டு அழுக்காறு அடைகிருன்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : கொடுங்கோலன் தன்னையும் நன்கு ஆண்டு கொள்வதில்லை. இப்பொழுது நாம் கண்ட தீமைகளுக் கிடையே, அவன் தனி வாழ்விலன்றிப் பொது வாழ்விலும்

கொடுங்கோலனுக மாறும் விதி நேரின், அவன் நிலை மிகவும் மோசமாகி விடுமல்லவா? தனக்கே எசமானனில்லாத அவன் மற்றவர்களுக்கு எசமானனுகிவிடுகிருன். ஓய் வெடுத்துக் கொள்ளாது பிறருடன் போரிட்டுக் கொண்டிருக் கும் நிலையிலுள்ள பாரிச வாய்வால் பீடிக்கப்பற்ற நோயாளி யைப் போன்றது அவன் நிலை.

கிளாக்கன்: ஆம், அந்த உவமை மிகவும் பொருத்தமானது.

சாக்ரடீஸ்: இந்நிலை மிகவும் துன்பமானது அல்லவா? மோசமானது என்று நீ கருதியதைவிட மிகவும் மோசமான வாழ்வை இந்த உண்மையான கொடுங்கோலன் நடத்து கிருன் அல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: உண்மையான கொடுங்கோலன், மற்றவர்கள் எப்படி நினைத்தபோதிலும், உண்மையில் அடிமையே. மேலும், நன்கு முகமன் கூறுதலையும், அடிமைத் தனத்தை யுமே மேற்கொள்ளும் நிலை அவனுக்கு ஏற்பட்டுவிடுகிறது. மனித சமுதாயத்தில் மிகவும் உபயோகமற்றவைகளையும் புகழ்பவனுகவும் அவன் விளங்குகிருன். தன்னுல் திருப்தி செய்துகொள்ள முடியாத ஆசைகளையும் வேறு எவருக்கு மில்லாத அளவுள்ள தேவைகளையும் பெற்ற அவனே உண்மையில் மிகவும் ஏழை. அவனது ஆன்மா முழுவதை யும் ஆராய நீ அறிந்திருந்தால், அவன் எங்ஙனம் தன் ஆயுள் முழுதும் அச்சத்தால் நடுங்கிக் கலக்கம் நிறைந்து தடுமாறுகிருன் என்பதை நன்கு காணலாம். தனது நாட் டுக்குப் பொருத்தமுள்ளவன் அவன், அவனது நாடும் அவனைப் போன்றே இருக்கும். என்ன! நான் சொல்வது சரிதானே?

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: மேலும் நாம் முன்னர்ச் சொன்னதுபோன்று அதி காரத்தைப் பெறும்போது மேலும் மோசமாகிருன். தேவை யின் காரணமாக முன்னர் இருந்ததைவிடப் பொருமை மிகுந்தும், நண்பர்களற்று, நேர்மையற்று, தூய்மை இழந்து எல்லாவிதக் குற்றங்களையும் செய்பவனுகி அவைகளின் நிறைவாகவே ஆகிவிடுகிருன். அதன் விளைவு யாதெனில், அவன் சொல்லொணுத் துன்பமடைந்து, தன்னைப்போன்றே ஏனையோரும் துன்பமடையச் செய்கிருன்.

கிளாக்கன் : அறிவுள்ள எவனும் தாங்கள் சொல்வதை மறுக்க மாட்டான்.

சாக்ரடீஸ் : நாடகப் போட்டிகளில் முடிவு சொல்லும் நீதிபதி களைப்போன்று நீயும் உன் தீர்ப்பின்படிச் சுகத்தில் எவன் முதன்மையானவன், எவன் இரண்டாமவன், எந்த வரிசையில் ஏனையோர் வருகின்றனர் என்பதைத் தீர்மானிப் பாயா ? அங்கே ஐந்து வகுப்பினர் காணப்படுகின்றனர். அதாவது மன்னராட்சியினர், கவுரவ ஆட்சியினர், ஒருசில ராட்சியினர், மக்களாட்சியினர், கொடுங்கோலாட்சியினர்.

கிளாக்கன் : தீர்ப்புக் கூறுதல் மிக எளிது. இசைக் குழுவினர் போன்று மேடையில் அவர்கள் வரும்போது நன்மை தீமை, இன்பம் துன்பம் ஆகிய அடிப்படையில் நாம் அவைகளை வரிசைப்படுத்திவிட முடியும்.

சாக்ரடீஸ் : சிறந்தவனும் நேர்மை மிக்கவனுமே மிகவும் இன்ப மடைகின்றவன். எவனொருவன் தன்னைத்தானே சிறப்பாக ஆள்வானோ அவனே நாட்டின் ஆட்சிக்கு ஏற்றவன். மிக வும் மோசமான நேர்மையற்றவனே மிகவும் துன்பமடை கிறான். அதாவது எவனொருவன் தனக்குத்தானே கொடுங் கோலனாக உள்ளானோ அவனே நாட்டிற்கும் மிகப்பெரிய கொடுங்கோலன் என்று அரிஸ்டனின் மகன் தீர்மானித்துள் ளான் என்பதை அறிவிக்க ஒரு அறிவிப்பாளனை அமர்த்திக் கொள்வோமா அன்றி நானே அறிவித்துவிடட்டுமா ?

கிளாக்கன் : தாங்களே அறிவித்து விடுங்கள்.

சாக்ரடீஸ் : அத்துடன் 'கடவுளாலோ மனிதனாலோ, காணப் பட்டாலும் சரி, அன்றிக் காணப்படாவிடினும் சரி' என் பதையும் சேர்த்துக் கொள்ளலாமல்லவா ?

கிளாக்கன் : ஆம், சேர்த்துக் கொள்ளலாம்.

சாக்ரடீஸ் : அப்படியானால் இதுவே நமது முதல் நிரூபணம். இன்னொன்றும் உள்ளது — அதுவும் இதைப்போன்றே மதிப்பு வாய்ந்தது.

கிளாக்கன் : அது எத்தன்மையதோ ?

சாக்ரடீஸ் : அந்த இரண்டாவது நிரூபணம் ஆன்மாவின் இயல்புகளினின்றும் கிடைக்கிறது. தனிப்பட்ட ஆன்மா நாட்டைப்போலவே இருப்பதாகக் கொண்டு நாம் அதை

மூன்று கொள்கைகளாகப் பிரிப்போமாயின், புதியதொரு காட்சி தோன்றும் என நான் நினைக்கிறேன்.

கிளாக்கன்: அது என்னவோ?

சாக்ரடீஸ்: இந்த மூன்று கொள்கைகளுக்கும் மூன்று சுகங்கள் பொருத்தமாகும். மூவித ஆசைகளையும் ஆட்சிகளையும் கூட அவை குறிக்கின்றன.

கிளாக்கன்: எப்படிச் சொல்கிறீர்கள்?

சாக்ரடீஸ்: நாம் முன் கூறியதுபோல் முதல் கொள்கையாவது மனிதனின் அறிவு நாட்டமாகும். அடுத்தது அவனைச் சின மடையச் செய்வது. மூன்றுவது பல அமைப்புக்களையுடைய தாகையால் அதற்குச் சிறப்பான பெயர் இல்லை. ஆனல் அது ஆசை என்ற பெயரால் குறிக்கப்படுவது. சாப்பிடு தல், குடித்தல், இன்னும் புலன் உணர்ச்சிகள் ஆகியவை அதனுள் அடங்கியவை. அது குறிப்பிடத்தக்க வலிமை யும் வேகமும் வாய்ந்தது. பணத்தாசையும் இதைச் சேர்ந்ததே. ஏனெனில் பணத்தின் உதவியினுலேயே அந்த ஆசைகள் பொதுவாக நிறைவேற்றப்படுகின்றன.

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: மூன்றுவது பிரிவான இந்த ஆசைகளும் சுகங் களும் பயனுடன் இணைக்கப்பட்டால் வேறு நோக்குடன் இவையெல்லாவற்றையும் ஒரே கருத்தில் இணைக்கலாம். அதை ஆன்மாவின் பயன் விரும்பும் அல்லது பணம் விரும் பும் தன்மை என்று தெளிவாகக் கூறிவிடலாம்.

கிளாக்கன்: தாங்கள் சொல்வதை ஒத்துக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ்: அந்த ஆசையுணர்ச்சியே புகழ் பெறுவதற்கும் வெற்றி பெறுவதற்கும் ஆட்சி செய்வதற்கும் காரணமா கின்றது அல்லவா?

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: அதை நாம் பேராசை மிக்கது அல்லது போட்டி யிடும் இயல்புடையது என அழைப்பது பொருந்துமா?

கிளாக்கன்: மிகவும் பொருத்தமே.

சாக்ரடீஸ்: மற்றெரு புறத்தில் அறிவு வழியதான முதற் கொள்கை உண்மைக்கே வழிகாட்டுவதை அனைவரும் காண்பர். அது ஏனைய இரண்டையும்போலப் புகழுக்கோ பயனுக்கோ அதிக விருப்பம் காட்டுவதில்லை.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆன்மாவின் அப்பகுதிக்கு ஞானத்தை நேசிப்பது, அறிவை நேசிப்பது என்ற பட்டங்களை நாம் கொடுத்தல் பொருந்துமா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஒரு வகையான மனிதரிடம் ஒரு கொள்கை நிலவு கின்றது. மற்ருெரு வகையினரிடம் மற்ருென்று. இது நிகழக் கூடியது தானே ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியானல் ஞானத்தை நேசிப்பவர், கவுரவத்தை நேசிப்பவர், பயனை நேசிப்பவர் என்று மூவகை மாந்தர்கள் உள்ளனர் என்று வைத்துக் கொள்வோம்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : சுகங்களிலும் மூன்று வகையுண்டு, இவற்றைத் தான் அம்மூவகையினரும் முறையே விழைகின்றனர்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அந்த மூவகை மனிதர்களையும் ஆராய்ந்தால், எவருடைய வாழ்வு மிகவும் இன்பமானது என்று கேட்டால்- ஒவ்வொருவரும் அவரவர் நிலையையே புகழ்ந்துகொண்டு மற்றவரின் நிலையை இகழ்வார்கள். பணம் ஈட்டுபவன் கல்வியோ கவுரவமோ தங்கம் வெள்ளியைப் போன்று பயனும் பணமும் தருவதில்லை, என்று கூறுவான்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : கவுரவத்தையே மதிப்பவனது கருத்து என்ன ? செல்வத்தின் இன்பம் கீழ்த்தரமானதென்பான். அறிவின் இன்பமோ, அது கவுரவத்தைத் தேடித்தராதெனின் புகைக் குவமையானது—அர்த்தமற்றது என்பானல்லவா ?

கிளாக்கன் : மிக உண்மை.

சாக்ரடீஸ் : உண்மையையறியும் நிலையில் உண்டாகும் சுகத் துக்கீடாய் வேறு எந்த சுகத்தையும் மதிக்காத தத்துவ ஞானிகள் அவ்வின்பத்திலேயே என்றும் திளைத்து அத் தகைய தெய்வீக இன்பத்திலிருந்து நீங்காமல் அதையே நாடி நிற்பர் அல்லவா ?

மற்றை இன்பங்கள் இருந்தால் அவை அவர்களுக்கு முக்கி யத் தேவையில்லை; தேவையில்லாதவைகளை ஏற்பது

மில்லை என்ற கொள்கையின்படித் தத்துவஞானி மற்றை இன்பங்கள் முக்கியமானவை என்று சொல்லமாட்டான் அல்லவா?

கிளாக்கன் : அதில் எவ்வித ஐயமும் இருக்க முடியாது.

சாக்ரடீஸ் : ஒவ்வொரு வகையினரின் இன்ப வாழ்வுகள், இவற்றின் தராதரங்கள் தீர்மானிக்கப்பட வேண்டி உள்ளன. எந்த வாழ்வு மேலானது, கவுரவமுடையது அன்றி இழிவானது என்பது இப்பொழுது கேள்வியன்று. ஆனால் எது இன்பமிக்கது, துன்பமற்றது என்பதுதான்? எவன் சொல்வது உண்மை என்பதை நாம் எப்படி அறிய முடியும்?

கிளாக்கன் : என்னால் சொல்ல முடியவில்லையே.

சாக்ரடீஸ் : நல்லது. எந்த அடிப்படையில் காண்பது? அனுபவம், ஞானம், சிந்தனை ஆகியவற்றைவிடச் சிறந்த அடிப்படை ஏதேனும் உளதா?

கிளாக்கன் : அவற்றைவிடச் சிறந்தது இருக்க முடியாது.

சாக்ரடீஸ் : அப்படியானால், எண்ணிப் பார். அந்த மூவரில் நாம் கூறிய சுகங்களனைத்தையும் எவன் மிகுதியாக அனுபவித்துள்ளான்? பயனை நேசிப்பவன் உண்மையினியல்பை அறியுங்கால், பயனின் சுகத்தைத் தத்துவஞானி அறிவதை விட அதிகமாக அறிவின் சுகத்தை அனுபவித்துள்ளானா?

கிளாக்கன் : தத்துவ ஞானியே மிகுந்த பயனடைந்தவன். ஏனெனில் தேவையின் காரணமாக எல்லாச் சுகங்களின் தன்மையையும் இளமை முதலே அறிந்தவன். ஆனால் பயனை நேசிப்பவனே, தேவையினால் கற்றலின் இனிமையையும் சுகங்களையும் அனுபவித்திருக்க மாட்டான். அவற்றை எப்போதாவது விரும்பியிருப்பினும் அனுபவித்திருக்க முடியாது.

சாக்ரடீஸ் : அப்படியானால் ஞானத்தை விரும்புவன் பயனை நேசிப்பவனைவிடச் சிறந்தவன். ஏனெனில் அவன் இருவகை அனுபவங்களைப் பெற்றுள்ளான்.

கிளாக்கன் : ஆம், மிகச் சிறந்தவன்.

சாக்ரடீஸ் : இன்னும், அவன் கவுரவத்தின் சுகத்தை அதிகம் பெற்றுள்ளானா அல்லது கவுரவத்தை விழைபவன் ஞானத்தின் சுகத்தை அதிகம் பெற்றுள்ளானா?

கிளாக்கன் : இல்லை, மூவரும் தத்தம் பொருள்களை அடையும் விகிதத்தில் கவுரவிக்கப்படுகின்றனர். ஏனெனில் செல்வந்தனும், வீரனும், அறிஞனும் தமக்கெனத் தங்களைப் பாராட்டும் கூட்டங்களைப் பெற்றுள்ளனர். அவர்கள் கவுரவமடையும்போது, அதன் இன்பங்களை அவர்களனைவரும் அனுபவிக்கின்றனர். ஆனல் உண்மைப் பொருளைப் பற்றிய அறிவில் காணும் இன்பத்தைத் தத்துவ ஞானி ஒருவனே அறியக்கூடும்.

சாக்ரடீஸ் : அவனுடைய அனுபவம் ஏனையோரைவிடச் சிறப்பாக ஆராயும் தன்மையை அவனுக்கு அளிக்கும்.

கிளாக்கன் : நன்ருக.

சாக்ரடீஸ் : அவனொருவனே ஞானத்தையும் அனுபவத்தையும் பெற்றவன்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இன்னும், ஆராய்ந்து தீர்மானிக்கும் திறமைக்குக் கருவியான இயல்பைத் தத்துவ ஞானியே அடைவான். பிறர் பொருளைக் கவர நினைப்பவன் அல்லது பேராசைக்காரன் பெறுவதே இல்லை.

கிளாக்கன் : எந்த இயல்பு?

சாக்ரடீஸ் : சிந்தனை! அதனுதவியால் தானே தீர்ப்புக்கூற வேண்டும்!

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : சிந்தனை அவனுடைய சிறப்பான கருவி.

கிளாக்கன் : ஆம், உண்மை.

சாக்ரடீஸ் : பணமும் பயனும் அடிப்படையெனில் பயனை விழைபவன் கூறும் புகழோ அன்றி இகழோ மிகவும் மதிப்பு வாய்ந்ததாக இருக்கும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அல்லது கவுரவமோ, 'வெற்றியோ அன்றித் தைரியமோ அடிப்படை எனில், அப்பொழுது பேராசை மிக்கவனின் அல்லது போட்டியிடுபவனின் தீர்ப்பே மதிப்பு வாய்ந்தது.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ்: ஆனால் அனுபவமும் ஞானமும் சிந்தனையுமே நீதிபதிகளென்று நாம் கூறினோம்.

கிளாக்கன்: ஆகவே ஞானத்தையும் சிந்தனையையும் நேசிப்பவனால் அங்கீகரிக்கப்பட்ட சுகங்களே உண்மையானவை என்ற ஊகமே நாம் செய்ய வேண்டியது.

சாக்ரடீஸ்: ஆகவே, ஆன்மாவின் பகுதிக்கு அறிவினால் விளையும் சுகமே சுகங்கள் மூன்றிலும் மிகவும் இன்பம் தருவது. நம்மில் எவனொருவனுக்கு இது வாழ்வின் குறிக்கோளாக உள்ளதோ அவன் மிகவும் இன்பமான வாழ்வை நடத்துகிறான் என்ற முடிவுக்கு நாம் வந்து விட்டோம்.

கிளாக்கன்: இதிலென்ன சந்தேகம். தனது சொந்த வாழ்வை அங்கீகரிக்கும்போது அறிவுள்ளவன் அதிகாரத்துடனேயே பேசுகிறான்.

சாக்ரடீஸ்: நீதிபதி என்ற முறையில் எவ்வகை வாழ்வை அடுத்ததாகத் தீர்ப்புக் கூறுவாய்? எந்த சுகத்தை அடுத்ததாகக் கருதுவாய்?

கிளாக்கன்: நிச்சயமாக. கவுரவத்தை விழையும் வீரனது வாழ்வே அடுத்தது. அவன் பணம் செய்பவனைவிட மனச்சாட்சிக்கருகே இருப்பவன்.

சாக்ரடீஸ்: அப்படியானால் பயனை நேசிப்பவன்தான் கடைசியா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: தொடர்ந்து இரு தடவைகளாக, நேர்மையான மனிதன் நேர்மையற்றவனை இப்போட்டியில் தோற்கடித்து விட்டான். இப்பொழுது மூன்றாவதொரு போர். இது காப்பாளரான ஒலிம்பிக் மலையிலமர்ந்த ஸியூசுக்காக ஆடப்படுவது. இப்பொழுது ஒரு முனிவர் என் காதருகில் வந்து "புத்திசாலியினுடைய சுகங்களைத்தவிர மற்றெதுவுமே அவ்வளவு உண்மையாகவும் சுத்தமாகவும் இராது. மற்றவைகளெல்லாம் வெறும் நிழல்களே" என்று சொல்கிறார். ஆகவே இந்த ஆட்டத்தில் ஏற்படும் தோல்வி மிகச் சிறந்ததாகவும் முடிவானதாகவும் இருக்கும் அல்லவா?

கிளாக்கன்: ஆம். மிகச் சிறப்பாக இருக்கும். உங்கள் கருத்தை விளக்கமாகக் கூறுவீர்களா?

சாக்ரடீஸ் : அதையே நான் இப்பொழுது ஆராய்வேன். எனது கேள்விகளுக்கு நீ விடையளிப்பாயாக.

கிளாக்கன் : கேளுங்கள்.

சாக்ரடீஸ் : சுகம் என்பது துன்பத்துக்கு எதிரிடைதானே ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : சுகமோ துக்கமோ இல்லாத ஒரு நடு நிலை இருக்கிறதா ?

கிளாக்கன் : இருக்கிறது.

சாக்ரடீஸ் : ஒரு நடுத்தரமான நிலை, சுகம் அல்லது துக்கம் என்ற இருவித உணர்வுகளும் அற்ற ஓர் நிலையை ஆன்மா அடைவதைத்தானே நீ குறிப்பிடுகிருய்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : மனிதர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது சொல்லுவது நினைவிருக்கிறதா ?

கிளாக்கன் : அவர்கள் என்ன சொல்வார்கள் ?

சாக்ரடீஸ் : 'உடல் நலத்தைவிட இன்பமானது ஒன்றுமேயில்லை' என்பர். ஆனல் இதைச் சுகங்களில் சிறந்ததாக மறுபடியும் அவர்கள் நோய்வாய்ப்படும் வரை நினைப்பதில்லை.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : மிகவும் வலியால் அவதியுறும் மனிதர்கள் அந்த வலிகளினின்றும் குணமடைவதைத் தவிரச் சிறந்த சுகம் வேறு எதுவுமில்லை என்று சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பாய்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இன்னும் பலவித இன்னல்களில் ஓய்வும் பிணியறுதலுமே மிகச் சிறந்த சுகம் என அவர்களால் அழைக்கப்படுகின்றன. தனிப்பட்டதொரு இன்பத்தை அப்போது அவர்கள் எண்ணுவதில்லை அல்லவா ?

கிளாக்கன் : ஆம். அந்த நேரத்தில் அவர்கள் துன்பத்தினின்று ஓய்வு பெறுவதுடன் திருப்தி யடைந்து விடுகின்றனர்.

சாக்ரடீஸ் : இன்னும் சுகம் குறைந்தவுடன் அந்த ஓய்வோ அல்லது இன்ப முடிவோ துன்பமாகத்தானே தோன்றும் ?

கிளாக்கன் : சந்தேகமின்றி.

சாக்ரடீஸ் : ஆகவே, இந்த நடுநிலையாவது ஒருங்கே இன்பமும் துன்பமுமாகுமா?

கிளாக்கன் : அப்படித்தான் தோன்றும்.

சாக்ரடீஸ் : இரண்டுமல்லாதது என்று முன் கூறியதை இரண்டுமானது எனக் கூறலாமா?

கிளாக்கன் : முடியாது என்பேன்.

சாக்ரடீஸ் : ஆகவே, சுகமும் துக்கமும் ஆன்மாவின் அசைவுகளே என்று கூறலாமல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அவையிரண்டுமற்ற ஓர் இடைநிலையை ஓய்வு என்றேமேயன்றி, அது அசைவுக்குப் பொருந்தாது. சரிதானே?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அப்படியானால் துன்பமற்ற நிலை இன்பம், இன்பமற்ற நிலைதான் துன்பம் என்று கருதுவது எப்படிச் சரியானதாகும்?

கிளாக்கன் : நாம் கருதியது சரியல்ல.

சாக்ரடீஸ் : ஆகவே, இது ஒரு தோற்றமே அன்றி உண்மை நிலையல்ல. அதாவது அந்தத் துன்பமுடன் ஒப்பிடும் போது ஓய்வு என்பது அப்பொழுது காணும் சுகம். அதைப்போன்றே துன்பமென்பது இன்பமில்லாதபோது ஏற்படும் ஓய்வு எனலாம். இந்த எல்லா நிலைகளையும் உண்மையான சுகத்தால் சோதித்துப் பார்த்தால் இவை உண்மையல்ல, ஒருவகைக் கற்பிதமே என்பது புலப்படும்.

கிளாக்கன் : ஆம், அதுதான் முடிவு.

சாக்ரடீஸ் : துன்பத்தையே முன்னிடாத மற்றவகைச் சுகங்களைப் பார். அவற்றை அறிவாயானல் தற்பொழுது செய்வதுபோல் சுகமென்பது துன்பம் தவிர்தலே அல்லது துன்பம் என்பது சுகம் இன்மையே என்று எண்ணமாட்டாய்.

கிளாக்கன் : அப்படியானல் அவைகள் யாவை? அவைகளை நான் எங்கே காணமுடியும்?

சாக்ரடீஸ் : அவற்றில் பல உள்ளன. உதாரணமாக நறு மணங்களை நுகரும் இன்பத்தை எடுத்துக் கொள்வோம். அது மிகவும் சிறந்தது. அது துன்பத்தின் மறைவு அல்ல. ஒரு நொடியில் இவ்வின்பம் தோன்றவல்லது. மேலும், அது மறையும்போது எந்தவிதத் துன்பத்தையும் நமக்குத் தருவதில்லை.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே உண்மையான சுகமென்பது துன்பம் நீங்குதலே என்றோ அல்லது துன்பமென்பது இன்பத்தின் மறைவே என்றோ நாம் நினைக்கக்கூடாது. அல்லவா?

கிளாக்கன் : ஆம், கூடாது.

சாக்ரடீஸ் : இருப்பினும் நம் உடலால் உணரப்பெற்று ஆன் மாவை அடையும் எண்ணற்ற பல வலிய சுகங்கள் எல்லாம் பொதுவாக இவ்விதமானவைகளே. அவையெல்லாம் துன்பத் தின் நீக்கமாகிய சுகங்களே.

கிளாக்கன் : அது உண்மை.

சாக்ரடீஸ் : இன்பதுன்பங்களை எதிர் நோக்குதலென்பதும் இத்தகைய இயல்புடையதுதானே?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அவற்றில் ஓர் உதாரணம் தரட்டுமா?

கிளாக்கன் : கொடுங்கள்.

சாக்ரடீஸ் : இயற்கையில் ஒரு உயரம், தாழ்வு, நடுநிலை உள்ளன என்பதை ஒத்துக் கொள்கிறாய் அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஒருவன் கீழிருந்து நடுப்பகுதிக்குப் போகும் போது, தான் மேலே போவதாக நினைக்கமாட்டானா? நடுவில் இருக்கும் ஒருவன் தான் வந்த வழியைக் கண்டு உயர் நிலைக்கு வந்துவிட்டதாக—அந்த உண்மையான உயர்நிலை யைப் பாராத வரையில்—நினைப்பானல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக. அவன் வேறு எப்படி நினைப்பான்?

சாக்ரடீஸ் : ஆனால், அவனை மறுபடியும் கீழே அழைத்துச் சென்றால், அவன் கீழிறங்குவதை உண்மையாகவே உணர் வான் அல்லவா?

கிளாக்கன் : சந்தேகமின்றி.

சாக்ரடீஸ் : இவையெல்லாம் உண்மையான உயர்வு, இடைநிலை, தாழ்வுகளை அவன் அறியாதிருப்பதால் தானே ஏற்படுகின்றன ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியெனில் உண்மையைப்பற்றிய அனுபவமில்லாத மாந்தரைக் கண்டு வியக்கவேண்டாம். ஏனையவற்றைப்பற்றித் தவருன எண்ணம் கொண்டுள்ளதைப் போலவே சுகம், துக்கம், நடுத்தர நிலை ஆகியவற்றைப் பற்றியும் தவருன எண்ணம் கொண்டவர்கள் அவர்கள். துன்பம் பயப்பவற்றை நோக்கி இழுக்கப்படும்பொழுதே அவர்கள் துன்பமடைகின்றனர். அவர்கள் அனுபவிக்கும் அத்துன்பம் உண்மையானது என்றும் நினைக்கின்றனர். அதே முறையில் துன்பத்தினின்றும் நடுநிலைக்குக் கொண்டு செல்லப்பட்டால் அவர்கள் நிறைவு அல்லது சுகத்தை யடைந்து விட்டதாக உறுதியுடன் நம்புகின்றனர். சுகமென்பதை அறியாது அவர்கள் துன்பத்தைத் துன்பமின்மையுடன் ஒப்பிடுகின்றனர். அது கறுப்பை வெண்மை என்று எண்ணிச் சாம்பல் நிறத்துடன் ஒப்பிடுவதை ஒக்கும். இதைக் கண்டு நீ வியப்படையலாமா ?

கிளாக்கன் : கூடாது. ஆனுல் அந்த எதிரிடையான நிலையைக் கண்டு வியப்படைய வேண்டும்.

சாக்ரடீஸ் : அந்நிலையையே இப்படியும் காணலாம். பசி, தாகம் போன்றவையனைத்தும் உடற்பசிகள்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அறிவின்மையும், பொய்யும் ஆன்மாவின் பசிகள்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : உணவும், ஞானமும் அவ்விரு பசிகளையும் பூர்த்தி செய்யும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் – குறைந்த இருப்புடையவைகளில் காணும் திருப்தி உண்மையானதா அன்றி நிறைந்த இருப்புடையவற்றில் காணும் திருப்தி உண்மையானதா ?

கிளாக்கன் : நிச்சயமாக நிறைவில் காணும் திருப்திதான் !

சாக்ரடீஸ் : உணவு, பானங்கள், ஊறுகாய் மற்றும் அது போன்று உயிர் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களின் வகையா அல்லது உண்மையான கொள்கை, அறிவு, மனம் போன்ற நன்மைகளடங்கிய வரிசையா எது உங்கள் தீர்ப்பில் தூய இருப்பின் பெரும் பகுதியைப் பெற்றிருக்கும்? அந்த வினவை இப்படியும் வைத்துக் கொள்ளலாம்—மாருத, அழியாத உண்மையுடன்கூடி அல்லது அதுபோன்றவற்றுடன் தொடர்புகொண்டு மாருது, அழியாது இருக்கும் பொருள்களா அன்றி மாறுபடக் கூடியதும் அழிவதுமானவற்றுடன் தொடர்புகொண்டு மாறி அழியும் பொருள்களா? இவ்விரண்டில் எவை மாசற்ற நிலையுடையவை?

கிளாக்கன் : மாருதவற்றுடன் தொடர்பு கொண்டதே மாசற்றது.

சாக்ரடீஸ் : மாருதவற்றின் சாரம் தன் தகுதிக்குத் தக்கவாறு அறிவை ஏற்கும் அல்லவா?

கிளாக்கன் : ஆம், அந்நிலையிலேயே அறிவை ஏற்கும்.

சாக்ரடீஸ் : உண்மையையும் அந்நிலையிலேயே கொள்ளுமா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இதன் மறுதலையாக, குறைவான உண்மையுடையது குறைவான சாரமுள்ளதாக இருக்குமல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : ஆகவே பொதுவாகக் கூறுமிடத்து, ஆன்மாவுக்குத் தொண்டு செய்யும் பொருள்களைக் காட்டிலும் உடலுக்குப் பணிசெய்யும் பொருள்கள் குறைவான உண்மையும் சாரமும் உடையவை.

கிளாக்கன் : ஆம். மிகக் குறைவு.

சாக்ரடீஸ் : உடல்கூட ஆன்மாவைவிடக் குறைவான உண்மையும் சாரமும் உடையது அன்றோ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : உண்மையான இயல்பினுல் உயர்ந்தது எதுவோ, அதிக உண்மையான நிலையுடையது எதுவோ அதுவே உண்மைக் குறைவான இயல்பையும் உண்மைக்குறைவையும் கொண்டவற்றைக் காட்டிலும் நிறைவு பெற்றது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இயற்கையோடு இயைந்தவற்ருல் நிறைவு செய்யப் பெற்ற பொருள்களில் இன்பம் இருக்குமாளுல், உண்மைப் பொருள்களால் உண்மையாகவே மிகுதியும் நிறைவு செய்யப் பெற்ற பொருள்தான் உண்மையாக அந்த உண்மை இன் பத்தை அனுபவிக்க முடியும். அப்படியின்றி உண்மையில் குறைந்த பொருள்களில் பங்குகொள்வன அனைத்தும் உண்மையற்றுக் கனவு போன்ற உண்மையில் குறைந்த சுகங்களில் பங்கு கொள்ளும், திருப்தியடையும் அல்லவா?

கிளாக்கன் : ஐயமின்றி !

சாக்ரடீஸ் : ஞானத்தையும் நல்லவற்றையும் அறியாது, உண விலும் புலனுகர்ச்சிகளிலுமே ஈடுபட்டிருப்பவர்கள் நடு அளவுவரை மேலும் கீழும் போய்க்கொண்டிருப்பர். இப்பகுதி யிலேயே தம் வாழ்நாள் முழுதும் முன்னும் பின்னுமாக அவர் இயங்கிக் கொண்டிருப்பர். உண்மையான மேல் உலகை அவர்கள் அடைவதில்லை. அதை அவர்கள் காண் பதுமில்லை, அதற்கான வழியைத் தேடுவதுமில்லை—உண் மையியல்புகளால் நிறைவு பெறுவதுமில்லை, மாசற்றதும் நிலையானதுமான இன்பத்தை அவர்கள் எய்துவதுமில்லை. கால்நடைகளைப் போன்று, தங்கள் கண்களை எப்பொழுதும் கீழே நோக்கிக் கொண்டு, தலை தரையில் குனிந்துகொண்டு அதாவது சாப்பாட்டு மேசைகளிலேயே கவனமாக இருந்து உண்டு, கொழுத்து இனப்பெருக்கம் அடைகின்றனர். இச் சுகங்களில் பெற்ற அதிக இன்பத்தால் ஒருவரோடொருவர் இரும்பினுல் செய்யப்பட்ட கொம்புகளாலும் குளம்புகளா லும் உதைத்துக் கொண்டும், மோதிக்கொண்டும் தமது திருப்தி செய்ய முடியாத காமவெறியினுல் ஒருவரை யொரு வர் எதிர்த்து நிற்கின்றனர். ஏனெனில் சாரமற்றவைகளா லேயே அவர்கள் தங்களை நிரப்பிக் கொண்டனர். மேலும் அப்படி அவர்களால் நிரப்பிக் கொள்ளப்படும் ஆன்மா வின் பகுதியும் சத்தில்லாதது, கட்டுப்பாடு இல்லாதது.

கிளாக்கன் : சாக்ரடீஸ் அவர்களே! மிகவும் உண்மை. ஒரு அசரீரியைப் போன்று பலருடைய வாழ்வை நன்கு விளக்கி விட்டீர்களே !.

சாக்ரடீஸ் : அவர்களுடைய சுகங்கள் துன்பங்கள் கலந்தவை. வேறு எப்படி இருக்கமுடியும்? அவர்கள் உண்மையின் வெறும் ஓவியங்களும் நிழலுமேயாவர். ஒப்பனையால் வண்

ணம் பெற்றவர்கள். அந்த ஒப்பனை ஒளியையும், நிழலையும் பெரிதாக்கிக் காட்டவல்லது. ஆகவே முட்டாள்களின் மனதில் சுகதுக்கங்களே கெட்ட ஆசைகளைப் பயிரிட்டு விடுகின்றன. கிரேக்கர்கள் டிராய் நாட்டில் ஹெலனின் நிழலுக்காக உண்மையை அறியாது போரிட்டனர், என்று ஸ்டெஸிரோஸ் சொல்வதுபோல, இவ்வாசைகளினுல் மக்கள் போரிடுகின்றனர்.

கிளாக்கன் : அதுபோன்றது அவசியம் நடக்கத்தான் செய்யும்.

சாக்ரடீஸ் : அதுபோன்ற ஒன்றே ஆன்மாவின் ஆசையுணர்விலும் நிகழக்கூடும், அல்லவா? ஆசைமிக்கவன் தனது ஆசைகளைச் செயலாக்கும்போது, பொருமையும் பேராசையும் கொண்டோ அன்றிப் பலாத்காரமும் கலகமும் மிகுந்தோ அல்லது கோபமும் நிறைவின்மையும் கொண்டோ அதுபோன்றே செயல்படுவான். கவுரவத்தையும் வெற்றியையும் தேடுபவனுயின் சிந்தனை, அறிவு ஆகியவையின்றித் தனது கோப உணர்ச்சியைத் திருப்தி செய்து கொள்ளப் பார்ப்பான் அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக, இந்நிலை உணர்வுமிகுந்தவர்களுக்கும் ஏற்படும்.

சாக்ரடீஸ் : அப்படியானுல், பணத்தையும், கவுரவத்தையும் நேசிப்பவர்கள், அறிவையும், சிந்தனையையும் துணையாகக் கொண்டு தங்கள் சுகத்தைப் பெறவிழைந்தால், அதில் நாட்டங்கொண்டு ஞானம் அளிக்கும் சுகங்களையும் பெற்றுவிட்டால் அவர்களால் அடையக்கூடிய உண்மையான சுகத்தின் மிக உயர்ந்த நிலையை, அவர்கள் உண்மையைப் பின்பற்றக்கூடிய அளவுக்கே பெறுகின்றனர். மேலும் ஒவ்வொன்றிலும் எது சிறந்ததோ அதுவே அவர்களுக்கு இயல்பாக இருந்து விட்டால், அவர்களுக்கு இயல்பாகவுள்ள அத்தனைச் சுகங்களையும் பெறுவர்.

கிளாக்கன் : நிச்சயமாக. எது மிகவும் சிறந்ததோ அதுவே மிகவும் இயல்பானது.

சாக்ரடீஸ் : ஆன்மா முற்றிலும் தத்துவஞானக் கொள்கைகளைப் பின்பற்றும்போது, அங்கே பிரிவுகள் ஏற்படுவதில்லை. எல்லாப் பிரிவுகளும் நேர்மையாக உள்ளன. அவை தத்தம் வேலைகளைக் கவனித்துக் கொண்டு, தாம் அடையக்கூடிய மேலான உண்மையான சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கின்றன, அல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ்- ஆனால் அந்த ஏனைய இரு கொள்கைகளில் எது நிலவினும், தனது சொந்த சுகத்தைப் பெறுவதில் அது தோற்றுவிடுகின்றது. அத்துடன் நில்லாது பிறவற்றையும் அவற்றிற்கு இயல்பல்லாத ஒன்றின் நிழலைச் சுகமெனப் பின் பற்றும்படிக் கட்டாயப்படுத்துகிறது.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : தத்துவ ஞானத்தினின்றும் சிந்தனையினின்றும் அவைகளைப் பிரிக்கும் இடைவெளி பெருகப் பெருக, சுகத்தின் இயல்பும் மிக விநோதமாயும் பொய்மை மிகுந்தும் இருக்கும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அது சிந்தனையினின்றும் வெகு தொலைவில் இருக்குமல்லவா? சட்டம், ஒழுங்கு ஆகியவற்றிற்கும் வெகு தொலைவில் இருக்குமல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : காமவெறி, கொடுங்கோன்மை ஆகியவை அமைத்த ஆசைகள் எல்லாம் அதிலிருந்து வெகு தொலைவிலிருக்குமல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆனால் அரசுக்கேற்ற ஒழுங்கான ஆசைகள் அருகேயிருக்கும்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : உண்மையான இயல்பாயமைந்த சுகத்தினின்றும் வெகு தொலைவில் கொடுங்கோலன் வாழ்கிறான், ஆனால் மன்னனோ வெகு அருகில் வாழ்கிறான்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அப்படியானால் கொடுங்கோலன் மிக்க துன்புறுவான், மன்னன் மிக்க இன்புறுவான்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அவர்களைப் பிரிக்கும் இடைவெளியின் அளவு உனக்குத் தெரியுமா?

கிளாக்கன் : நீங்கள் சொல்வீர்களா?

சாக்ரடீஸ் : மூன்றுவகைச் சுகங்கள் உள்ளன. ஒன்று உண்மை யானது. மற்றை இரண்டும் பொய்யானவை. அக்கொடுங் கோலனின் தீயசெயல்கள் இந்தப் பொய்யானவற்றையும் தாண்டிச் சென்று விடுகின்றன. அவன் சட்டம், சிந்தனை ஆகியவற்றின் எல்லையிலிருந்தும் வெகுதொலைவில் சென்று விட்டான். தன் இடத்தைச் சில அடிமையின்பங்களுக்கு நடுவே அமைத்துக் கொண்டு, அவற்றையே தன் துணைக ளாகக் கொண்டுள்ளான். அவனது கீழ்த்தரமான தன்மை யின் அளவை எண் அளவாகத்தான் குறிக்கலாம்.

கிளாக்கன் : தாங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்.

சாக்ரடீஸ் : கொடுங்கோலன் ஒருசிலர் ஆட்சியினின்றும் மூன் ருவது இடத்தில்தானே 'இருக்கிருன்? இடையே காணப் படுவது ஜனநாயகம்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இதுவரை சொன்னது உண்மையானல், அவனது இன்பங்கள், ஒருசிலராட்சியில் இன்பம் உண்மையினின்று விலகியுள்ளதைப் போன்று மூன்று மடங்கு விலகப்பெற் றிருக்குமல்லவா?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஒருசிலர் ஆட்சியாளன் மன்னராட்சியினின்றும் மூன்ருவதாக உள்ளான். மன்னரையும், செல்வந்தரையும் முதலாவதாக எண்ணினேமல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆகவே, கொடுங்கோலன் உண்மையான சுகத்தி னின்றும் மும்மடங்கு மூன்ருல் பெருக்கிய தூரம் விலகி விடுகிருன்.

கிளாக்கன் : தெளிவாக.

சாக்ரடீஸ் : இனி, கொடுங்கோலனின் சுகத்தின் நிழலானது நீளத்தின் எண்ணிக்கை கொண்டு தீர்மானிக்கப்படும். அப் பொழுது ஒரு சமதள வடிவம்.[1]

கிளாக்கன் : நிச்சயமாக.

---

[1] இரு நீளங்களைப் பெருக்கிக் கிடைப்பது சமதள வடிவத் தின் பரப்பளவு. மூன்று நீளங்களைப் பெருக்கிக் கிடைப்பது ஒரு கன பரிமாணமாகும்.

சாக்ரடீஸ்: இப்பொழுது அந்த எண்ணின் படியை அதிகரித்து அந்தச் சமதள எண்ணை ஓர் உருவமாகச் செய்தாயானால் கொடுங்கோலன் மன்னனிடமிருந்து எவ்வளவு தொலைவி லிருக்கிறான் என்பதைச் சுலபமாகக் கண்டுவிடலாம்.

கிளாக்கன்: இக்கணக்கை கணித நூல் வல்லார் வெகு எளிதில் செய்துவிடுவர்.

சாக்ரடீஸ்: யாராவது அந்த முடிவினின்றும் தொடங்கி, கொடுங்கோலனிடமிருந்து மன்னன் சுகத்தின் உண்மை இயல்பைப் பொறுத்து எவ்வளவு தொலைவில் இருக்கிறான் என்பதைக் கணக்கிட்டால் அப்பொழுது அந்தப் பெருக்கல் முடித்தால் 729 (9×9×9) மடங்கு மிக இன்பமாயும் அந்தக் கொடுங்கோலன் அதே இடைவெளி அளவு துன்ப மிகுந்தும் வாழ்கின்றனர் என்பதைக் காண்பர்.

கிளாக்கன்: என்ன பிரமாதமான கணக்கு! நேர்மையும் நேர்மையின்மையும் சுகதுக்கங்களைப் பொறுத்து எவ்வளவு தொலைவில் பிரிக்கப்பட்டு உள்ளன!

சாக்ரடீஸ்: ஆனால் மிகவும் உண்மையான கணக்கு. பகலும், இரவும், மாதங்களும், ஆண்டுகளும் மனித வாழ்வுடன் சம் பந்தமுடையவை என்றால், இந்த எண்ணும் மனித வாழ்வில் சம்பந்தமுடையது.[1]

கிளாக்கன்: ஆம், மனித வாழ்க்கை உண்மையிலேயே அவற்று டன் சம்பந்தமுடையதுதான்.

சாக்ரடீஸ்: இங்ஙனம் சிறந்த நேர்மையான மனிதன் நேர்மை யற்றவர்களுக்கும் தீமைகளுக்கும் அப்பால் மேலான சுகத் தில் இருக்கும் போது அவனுடைய மேலான தன்மை வாழ் விலும், அழகிலும், சிறப்பிலும் மிகவும் உயர்வாக இருப்ப தைத் தெளிவாகக் காணலாம்.

கிளாக்கன்: அளக்கமுடியாத அளவுக்குச் சிறந்தவன் அவன்.

சாக்ரடீஸ்: தர்க்கத்தின் இந்நிலையிலேயே மீண்டும் நம் வழிக் குச் செல்லுவோம். நேர்மையானவன் என்று போற்றப் படும் முற்றிலும் நேர்மையற்றவனுக்கு அநீதி பயன்தரும் என்று யாரோ ஒருவர் சொன்னாரல்லவா?

---

[1] ஓராண்டின் பகல் இரவுகளைக் கூட்டினால் சுமார் 729 கிடைக்கும்.

கிளாக்கன் : ஆம் அப்படித்தான் சொல்லப்பட்டது.

சாக்ரடீஸ் : நீதியையும் அநீதியையும் அவற்றின் தன்மை, திறம் ஆகியவற்ருல் தீர்மானித்து விட்டோம். இனி அவருடன் சிறிது பேசுவோம்.

கிளாக்கன் : அவரிடம் நாம் என்ன பேசமுடியும் ?

சாக்ரடீஸ் : ஓர் ஆன்மாவின் உருவத்தை அமைப்போம். அவர் கண்முன்னர் அவரது சொற்களை ஓர் உருவமாக நிறுத்துவோம்.

கிளாக்கன் : எவ்வகை உருவம் ?

சாக்ரடீஸ் : அதுவே ஆன்மாவின் உண்மையான அமைப்பு; பழைய புராண இலக்கியங்களில் காண்பதை ஒத்தது. இரண்டு அல்லது அதற்கு மேலான வேறுபட்ட தன்மைகள் வளர்ந்து ஒன்ருகும் என்று சொல்லப்படும் கிமேரா (Chimera) அல்லது சில்லா, (Seylla) அல்லது செர்பிரஸ் (Cerberus) அல்லது அதுபோன்ற பலவற்றைப் போல இது ஒரு கூட்டு அமைப்பாகும்.

கிளாக்கன் : ஆம், அதுபோன்ற இணைப்புக்கள் இருந்தனவாகக் கூறப்படுகின்றன.

சாக்ரடீஸ் : இப்பொழுது அனேகவிதமான பல தலைகளைப் பெற்ற—எல்லாவிதமான கொடியவையும் பழக்கப்பட்டவையுமான விலங்குகளின் தலைகளைப் பெற்ற—தன்னிஷ்டப்படி உண்டாக்கி மாற்றக்கூடிய உடலமைப்பைப் பெற்ற ஒரு கொடிய அரக்கனை நினைத்துக் கொள்.

கிளாக்கன் : கலைஞர்களிடம் மிகச் சிறந்த திறனை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள். மெழுகு அல்லது சிற்பியின் மற்ற எந்தப் பொருள்களையும்விட, சொற்களை நம்மிஷ்டப்படி வளைக்க முடியுமாகையால் நீங்கள் சொல்வதுபோன்ற அமைப்பே இருக்கட்டும்.

சாக்ரடீஸ் : அடுத்தபடி ஒரு சிங்கத்தின் உருவத்தைச் செய்து கொள். மூன்ருவதாக ஒரு மனிதனையும் செய்துகொள். முதலாவதைவிட இரண்டாவது சிறியதாகவும், இரண்டாவதைவிட மூன்ருவது சிறியதாகவும் இருக்கட்டும்.

கிளாக்கன் : மிகவும் சுலபமாக நீங்கள் சொல்லியபடியே செய்துவிட்டேன்.

சாக்ரடீஸ் : இப்பொழுது அவற்றை ஒன்ருக இணைத்துப் பார் ; மூன்றும் ஒன்ருக மாறட்டும்.

கிளாக்கன் : அதையும் செய்து விட்டேன்.

சாக்ரடீஸ் : அடுத்து, அவற்றின் வெளித்தோற்றத்தை ஒரு மனித உருவமாகச் செய்து விடு. அப்பொழுதுதான் உள்ளே நோக்கும் இயல்பற்ற, வெளியுருவைக் காணும் இயல்புள்ள ஒருவன் அவ்விலங்கை ஒரு தனி மனிதவுருவ மென்றே எண்ணுவான்.

கிளாக்கன் : அப்படியே செய்துவிட்டேன்.

சாக்ரடீஸ் : இப்பொழுது, 'மனித நேர்மையற்றிருப்பது பயன் தரும். நேர்மையுடன் இருப்பது பயன்தராது' என்று கருதியவனுக்குப் பதிலளிப்போம். அவன் சொல்வது சரியானால், இந்தப் பிராணிக்குத் தன்னிடமுள்ள பலதலை அரக்கனுக்கு விருந்தளித்து, அந்தச் சிங்கத்திற்கும் அது போன்ற தன்மைக்கும் வலுவளித்து, ஆனால் மனிதனைப் பட்டினிபோட்டு இளைக்கவைத்து நாளடைவில் அந்த ஏனைய இரண்டின் கருணைக்கு இலக்காக்கிவிடுவதே இலாபந் தரும். இந்தப் பிராணி தன்னுள் உள்ள மூன்றும் நெருங்கிய தொடர்பு கொள்ளவோ அன்றி ஒன்றிப் போகவோ முயற்சி செய்யாது. ஒன்றுக்கொன்று போரிட்டுக் கொண்டு ஒன்றையொன்று விழுங்கும் வரை விட்டு வைக்க வேண்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக. அநீதியை அங்கீகரிப்பவர் அப்படித் தான் சொல்வர்.

சாக்ரடீஸ் : அதற்கு நேர்மையின் ஆதரவாளர் கூறுவது யாதெனில், அந்த முழு மனித உருவிலும் உள்ளேயிருக்கும் மனிதனுக்கு முழு எசமானத் தன்மையும் எப்படியாவது அளிக்கும் வரையில் அவர் பேசவும் செயல்படவும் வேண்டும். நல்ல குடியானவனைப்போல அந்தப் பலதலை அரக்கனைக் கவனித்து வரவேண்டும். நல்ல குணங்களை வளர்த்தும் தீயகுணங்கள் வளர்வதைத் தடுத்தும் அந்தச் சிங்கத்தின் தைரியத்தைத்தன் நண்பனுக்கிக் கொண்டும், அவற்றின் பொது நன்மையில் எல்லாப் பகுதிகளையும் ஒன்றோடு ஒன்று இணைத்தல் வேண்டும். எல்லாவற்றையும் தன்னுள்ளே ஒன்று சேர்க்க வேண்டும்.

கிளாக்கன் : ஆம், அதைத்தான் நேர்மையின் பாதுகாவலர் சொல்வர்.

சாக்ரடீஸ் : ஆகவே எந்தவிதத்திலும், சுகத்திலோ, கவுரவத்திலோ அன்றி நன்மையிலோ நீதியை அங்கீகரிப்பவர்

சொல்வதே சரி, அவர் பேசுவதே உண்மை. அதை அங்கீகரிக்காதவர் சொல்வது தவறு, பொய், அறிவீனம்.

கிளாக்கன் : ஆம். எல்லா விதத்திலும்.

சாக்ரடீஸ் : இப்பொழுது மெதுவாக அநீதியாளருடன் விவாதிப்போம். அவர் வேண்டுமென்று தவறு செய்ய வில்லை. அவரிடம் சென்று ''இனிமையுடைய ஐயா! சிறந்தன என்றும் சிறப்பல்லாதன என்றும் மதிக்கப்படும் பொருள் களைப் பற்றி உமது கருத்தென்ன? விலங்குத் தன்மையை மனிதனின்கீழ் அடங்கச்செய்வது அல்லது, மனிதனிடம் உள்ள கடவுள் தன்மைக்குக் கீழ்ப்படுத்துவது தானே சிறப் பானது? மேலும் மனிதனை விலங்கிற்குக் கீழ்ப்படியும் படிச்செய்வது சிறப்பற்றது அல்லவா?'' என்று கேட்டால் அவர் 'ஆம்' என்று சொல்வதைத் தவிர்க்க முடியாது அல்லவா? தவிர்க்க முடியுமா?

கிளாக்கன் : கொள்கைக்கு மதிப்புக் கொடுப்பவனாயிருந்தால் அப்படிச் சொல்ல மாட்டான்.

சாக்ரடீஸ் : ஆனால், இதுவரை அவன் ஒத்துக்கொண்டு விட்டால் அவனிடம் இன்னொரு கேள்வியைக் கேட்கலாம். 'அவனது உயர் குணங்களைக் கீழானவற்றுக்கு அடிமைப் படுத்தும் கட்டுப்பாட்டுக்கிணங்கித் தங்கமும் வெள்ளியும் பெறும் ஒருமனிதன் எங்ஙனம் அவற்றால் பயனடைகிறான்? ஒருமனிதன் தன் மகனையோ அன்றி மகளையோ பணத்திற் காக அடிமையாக விற்கும்போது, குறிப்பாக அவர்களை அவன் மோசமான தீயமனிதனிடம் விற்கும்போது, எவ்வளவு அதிகமான பணம் பெற்ற போதிலும் அவன் பயனடைந்தவன் என்று யாரே கற்பனை செய்வார்? யாரே னும் அவனை, அவன் சிறிதும் வெட்கமில்லாது தனது தெய்வீக இயல்பை மிகவும் கடவுள் தன்மையற்ற வெறுக் கத்தக்க ஒன்றிற்கு விற்றுவிட்டபோது பரிதாபகரமான துரதிர்ஷ்டவான் அல்ல என்று சொல்வார்களா? தனது கணவனின் உயிரின் விலையாக எரிபைல் (Eriphyle) கழுத் தணியைப் பெற்றாள். ஆனால் இவனோ அதைவிட மிகவும் மோசமான அழிவை ஏற்படுத்திக் கொள்ள இலஞ்சத்தைப் பெற்றுள்ளான் அல்லவா?

கிளாக்கன் : ஆம் மிகவும் மோசமானது. அவனுக்காக வினாவுக்கு நானே விடையளிப்பேன்.

சாக்ரடீஸ்: மிதமற்ற போக்குள்ளவன் பழங்காலத்திலிருந்தே நிந்திக்கப்பட்டவனல்லவா? ஏனெனில் அவனிடத்தில் இந்தப் பெரிய பலதலை அரக்கன் மிகுந்த சுயேச்சையுடன் வாழ அனுமதிக்கப்படுகிறான்.

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அந்தச் சிங்கம், பாம்பின் தன்மை ஆகியவை அவன்பால் அளவு கடந்து வளர்ந்து பலம் பெற்றவுடன் அம்மனிதன் கர்வங்கொண்டவன், சீர்கெட்ட உள்ளம் படைத்தவன் என்று நிந்திக்கப்படுவான் அல்லவா?

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: ஆடம்பரமும், மிருதுத் தன்மையும் நிந்திக்கப்படுகின்றன. ஏனெனில் அவை அந்த மனிதனை ஓய்வெடுத்துக் கொள்ளவும் பலமிழக்கவும் செய்து அவனைக் கோழையாக்கி விடுகின்றன.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: முகமன் கூறுவதற்காகவும் கீழ்த்தரத்தன்மைக்காகவும் ஒருவன் வெறுக்கப்படுகிறான். அதற்குக் காரணம் அந்த அடங்காத அரக்கனுக்கும், சிங்கத்திற்கும் அடங்கிக் கீழ்ப்படிந்து, பணத்திற்காக—அதைப் போதிய அளவு அவன் என்றுமே பெற்றதில்லை—தன்னை இளமை முதலே சகதியில் அமிழ்த்திக்கொண்டு சிங்கமாக மாறுவதற்குப் பதில் குரங்காக மாறிவிடுகிறான்.

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: ஏன் கீழ்த்தரமான வேலைகளும் கைவேலைகளும் வெறுக்கப்படுகின்றன? காரணம், உயர்ந்த கொள்கைகளில் காணும் இயல்பான குறைகளை அவை காட்டுகின்றன. அவனுள்ளே உள்ள பிராணிகளை அடக்கமுடியாமல் அவற்றைப் புகழ்கிறான். எப்படி அவற்றைப் புகழ்வது என்பதே அவனது பெரிய படிப்பு.

கிளாக்கன்: ஆம், அதுதான் காரணமாகத் தோன்றுகிறது.

சாக்ரடீஸ்: ஆகவே, சிறந்ததைப் போன்ற ஆட்சியில் அவனை வைக்க வேண்டும் என்ற ஆசையால் நாம் அவனைத் தெய்வத் தன்மையுடன் ஆளப்படும் சிறந்தவனின் வேலைக்காரனாக இருக்கவேண்டுமென்கிறோம். திராசிமாக்கஸ் நம்பியதைப் போன்று வேலைக்காரனுக்குத் துன்பம் ஏற்பட வேண்டும்

என்பதற்காக அல்ல. ஆனால் ஒவ்வொருவனும் தன்னுள்ளே விளங்கும் தெய்வீக ஞானத்தால் ஆளப்பட வேண்டியுள்ள தால்—அன்றி அது முடியாவிடில், ஒரு வெளி அதிகாரத்தி னல் ஆளப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாமெல்லாம் முடிந்தவரையில் ஒரே அரசாங்கத்தின்கீழ் நண்பர்களாகவும் சமத்துவமானவர்களாகவும் வாழமுடியும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : நாட்டின் நண்பனை சட்டத்தின் எண்ணமும் இதுதான் என்பதைத் தெளிவாகக் காணலாம். இதையே குழந்தைகள்மீது நாம் அதிகாரம் செலுத்தும்போதும் காண லாம். நாட்டின் அரசியலமைப்பைப்போல நாமும் அவர் களுள்ளே ஒரு அதிகாரத்தை ஏற்படுத்தும்வரை அவர்களைச் சுதந்திரமாக வாழ அனுமதிப்பதில்லை. இந்த உயர் தன்மையை வளர்ப்பதன்மூலம் நமது ஆட்சியாளரைப் போன்று அவர்களுள்ளத்திலே ஒரு பாதுகாவலனை ஏற் படுத்த வேண்டும். இதன்பிறகு அவர்கள் தம் வழிச் செல்ல விடலாம்.

கிளாக்கன் : ஆம். சட்டத்தின் நோக்கம் தெளிவாக்கப் பட்டது.

சாக்ரடீஸ் : அப்படியானல், எந்த எண்ணத்தில் அல்லது அடிப்படையில், ஒருமனிதன் அநீதியாலோ, தீய உணர் வினலோ, அல்லது வேறு கீழ்த்தரப்பண்புகளினலோ பய னடையமுடியும் என்று நாம் சொல்ல முடியும்? இவன் பணமோ, பதவியோ தனது தீயகுணத்தால் பெற்ருலும்கூட அவை அவனை மோசமான மனிதனக்கிவிடும்.

கிளாக்கன் : எந்த அடிப்படையிலும் நாம் சொல்லமுடியாது.

சாக்ரடீஸ் : அவனது அநீதி கண்டுபிடிக்கப்படாது அவன் தண்டிக்கப்படாவிடினும் அதனல் அவன் என்ன பயனடை கிருன்? கண்டுபிடிக்கப்படாவிடில் தண்டிக்கப்படாவிடில் அவன் இன்னும் மோசமாகிருன். ஆனல் கண்டுபிடிக்கப் பட்டுத் தண்டிக்கப்பட்டால், தனது விலங்குத்தன்மை அடக்கப்பட்டு மனிதத்தன்மை ஆக்கப்படுகிறது. அவனிட முள்ள உயர்ந்த தன்மைகள் விடுதலை பெற்றுவளர்கின்றன. அழகு, வலிமை, நலம் ஆகியவை தந்த பரிசுகளை ஏற்பதன் மூலம் உடல் பெறும் பேற்றைவிட நீதி, நல்லுணர்வு, ஞானம் முதலியவற்றின் போதனைகளால் அவனுடைய முழு ஆன்மா

வும் தூய்மை பெற்று, நேர்மையால் உயர்ந்ததாகிறது. அளவிட்டுப் பார்த்தால், உயிர் உடம்பைவிட மிகவும் பெருமை அளிக்கப்படுதற்கு உரியதாகிறது.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இந்த உயர்ந்த குறிக்கோளுக்காக, புரிந்து கொள்ளும் தன்மை வாய்ந்த மனிதன் தன் வாழ்வின் சக்திகளைப் பயன்படுத்துகிருன். முதலில் ஆன்மாவின் இத்தகைய குணங்களைப் போற்றும் படிப்புக்களைக் கவுரவித்து ஏனையவற்றை அவன் மதிப்பதில்லை.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அடுத்தபடி அவன் தனது உடலின் பழக்கங்களையும் பயிற்சிகளையும் கட்டுப்படுத்துகிருன். விலங்குத் தன்மை வாய்ந்த பகுத்தறிவற்ற சுகங்களுக்கு இணங்காது தனது உடல் நலத்தையும் இரண்டாவதாகவே கருதுவான். அவனது முதல் நோக்கம் அவன் அழகாக, உறுதியாக நன்ருக இருக்க வேண்டுமென்பதல்ல. (தனது மிதத் தன்மையை வளர்க்க வேண்டி மட்டுமே இவற்றை மதிப்பான்) ஆனால் ஆன்மாவுடன் உடல் ஒருங்கிணைந்து அவ்விணைப்பு என்றும் மாருமல் செல்ல வேண்டுமென்பதே அவன் ஆவலாகும்.

கிளாக்கன் : நிச்சயமாக இருப்பான். அவன் தன்னிடம் உண்மையான இசையைப் பெற்றிருந்தால்.

சாக்ரடீஸ் : செல்வம் தேடுவதில் ஒருவித ஒழுங்கையும் ஒருமைப்பாட்டையும் அவன் பின்பற்றுவான். உலகின் முட்டாள்தனமான பாராட்டுதல்களுக்கு அவன் ஏமாற மாட்டான். தனக்கு முடிவற்ற துன்பத்தைத் தருமளவு செல்வத்தைக் குவிக்கமாட்டான்.

கிளாக்கன் : நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : தன்னுள்ளே உள்ள நகரத்தை நன்கு காண்பான் அதில் தேவையினாலோ, அல்லது மிகுதியினாலோ ஏற்படக் கூடிய எவ்வித ஒழுங்கீனமும் ஏற்படாமல் பார்த்துக்கொள்வான். இக்கொள்கையுடன் தனது பொருள்களையும் பயனையும் கட்டுப்படுத்தித் தனது இயல்புக்கேற்பச் செலவிடுவான்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: அந்தக் காரணத்திற்காகவே தன்னை நல்லவனுக்கக் கூடியதென்று கருதும் கவுரவங்களை இன்பமுடன் பெற்றுக் கொண்டு மகிழ்வான். ஆனால் சொந்த வாழ்விலோ பொது வாழ்விலோ, தனது வாழ்வைக் குலைக்கும் எத்தகைய கவுரவங் களையும் அவன் ஒதுக்கிவிடுவான்.

கிளாக்கன்: இது அவனது எண்ணமானால் அவன் சிறந்த ராஜதந்திரியாக இருக்கமுடியாதே?

சாக்ரடீஸ்: எகிப்து நாட்டு நாயின்மீது ஆணை, அவன் இருக்கமுடியும். அவனுக்குச் சொந்தமான நகரில் நிச்சய மாக அவன் விளங்குவான். ஒருக்கால் அவனது பிறந்த நாட்டில், அவனுள்ளேயே இருக்கும் ஒரு தெய்வீக அழைப்பு இருந்தாலன்றி, இருக்கமாட்டான் என்று சொல்லலாம்.

கிளாக்கன்: நான் இப்பொழுது புரிந்துகொண்டேன். நாம் ஏற்படுத்திய நகரிலே அவன் ஆட்சியாளனாக இருப்பான், என்கிறீர்கள். ஆனால் அது எண்ணத்தில்தானே உள்ளது? இந்தவுலகில் எங்குமே அதுபோன்ற நாடு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

சாக்ரடீஸ்: சொர்க்கத்தில் அதன் அமைப்பு ஏற்பட்டுள்ளது. விருப்பமுள்ளவன் பெறலாம். பெற்றுத் தன் வீட்டைத் தன்னிச்சைப்படி ஏற்படுத்திக் கொள்ளலாம். அத்தகைய ஒன்று இருக்கிறதா, உண்மையில் இருக்குமா, என்பவை பிரச்சினையல்ல. ஏனெனில் வேறொருவரிடத்தும் எதையும் விரும்பாத அவன் அந்நகரது இயல்பின் படியே வாழ் வான்.

கிளாக்கன்: நானும் அப்படியே நினைக்கிறேன்.

பத்தாம் புத்தகம்

சாக்ரடீஸ் : நமது நாட்டின் முறைகளிலே உள்ள பல சிறப்புக் களை நான் சிந்தித்துப் பார்க்கும்போது செய்யுளைப் பற்றிய விதியைப்போல வேறு எதுவும் எனக்கு மகிழ்ச்சி அளிக்க வில்லை.

கிளாக்கன் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : போலிச் செய்யுட்களை நிராகரித்தலைக் குறிப்பிடு கிறேன். போலிச் செய்யுட்களை நிச்சயமாக வரவேற்கவே கூடாது என்பது, ஆன்மாவின் பகுதிகள் நன்கு விளக்கப் பட்டு விட்டதால் இப்பொழுது எனக்கு மிகத் தெளிவாகத் தெரிகிறது.

கிளாக்கன் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : உங்கட்கு மட்டும் சொல்கிறேன்—ஏனெனில் அந்தத் துன்பியல் ஆசிரியர்களுக்கும் மற்றைப் போலிக் கூட்டங்களுக்கும் என் சொற்கள் கூறப்படுவதை நான் விரும்பவில்லை—ஆனால் உனக்குச் சொல்வதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. செய்யுளில் காணப்படும் போலி களெல்லாம் அவற்றைக் கேட்பவர்களது சிந்தனையை அழித்துவிடும். அதற்கேற்ற மருந்து அவற்றின் உண்மை யியல்பை அவர்கள் அறிவதேயாகும்.

கிளாக்கன் : தாங்கள் சொல்வதன் பொருளை இன்னும் சற்று விளக்குங்கள்.

சாக்ரடீஸ் : நல்லது. சொல்கிறேன். எனது இளமைப்பருவத் திலிருந்தே எப்பொழுதும் ஹோமரிடம் அன்பும் மதிப்பும்

உண்டு. அவற்றின் காரணமாக இப்பொழுதும் என் உதடுகள் சொற்களுக்குக் தடுமாற்றமடைகின்றன. ஏனெனில் அவர்தான் அந்த வசீகரமிகுந்த துன்பியல் ஆசிரியர் கூட்டம் முழுமைக்கும் பெரிய தலைவரும் ஆசிரியரும் ஆவார். இருந்தாலும் உண்மைக்குப் புறம்பாக நாம் ஒருவரை மதிப்பிட்டுவிடலாகாது. ஆகவே நான் தயங்காமல் பேசுகிறேன்.

கிளாக்கன்: மிகவும் நல்லது.

சாக்ரடீஸ்: அப்படியானால் நான் சொல்வதைக் கவனி. என் வினாக்களுக்குப் பதில் சொல்.

கிளாக்கன்: உங்கள் வினாக்களைக் கேளுங்கள்.

சாக்ரடீஸ்: போலி என்றால் என்ன என்று சொல்வாயா? ஏனெனில் உண்மையில் எனக்கே அது தெரியாது.

கிளாக்கன்: தங்களுக்குத் தெரியாதது, எனக்குமட்டும் எப்படித் தெரிந்திருக்கும்?

சாக்ரடீஸ்: ஏன் தெரியாது? கூர்மை மிக்கவற்றைவிடப் பார்வை மங்கிய கண்களும் பல சமயங்களில் ஒரு பொருளை வெகு துரிதமாகக் காண்பது உண்டல்லவா?

கிளாக்கன்: உண்மைதான். ஆனால் உங்கள் முன்னிலையில் எனக்கு ஏதாவது இலேசாகத் தெரிந்தால்கூடச் சொல்வதற்குத் தைரியம் வருவதில்லை. நீங்களே அதை ஆராயுங்கள்.

சாக்ரடீஸ்: மிகவும் நல்லது. நமது வழக்கமான வழியிலேயே நம் விசாரணையைத் துவங்குவோமா? பல நபர்கள் ஒரு பொதுப் பெயரை எப்பொழுதேனும் பெற்றிருந்தால் அதற்கேற்ற எண்ணமும் அமைப்பும் அவர்கள்பால் இருக்கும் என்று நாம் எண்ணலாம். என்ன! நான் சொல்வது புரிகிறதா?

கிளாக்கன்: புரிகிறது.

சாக்ரடீஸ்: ஏதாவது ஒரு சாதாரண உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இவ்வுலகில் மிக அதிகமான மேசைகளும் படுக்கைகளும் உள்ளன. அல்லவா?

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: ஆனால் அவற்றைப் பற்றி இருவகை எண்ணங்களோ அன்றி அமைப்போதான் உள்ளன. ஒன்று படுக்கையைப் பற்றியது. மற்றொன்று மேசையைப் பற்றியது.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அவற்றைச் செய்பவன் அதற்குரிய எண்ணத்துடன்தான் நமது உபயோகத்திற்காக மேசையையோ அன்றிப் படுக்கையையோ செய்கிறான். இதைப் பற்றி நாம் இவ்வாறு குறிப்பிட்டு இதைப்போன்ற மற்றவற்றைப் பற்றியும் பேசுவோம். ஆனால் தொழிலாளி எவனும் அந்த எண்ணங்களைத் தாமாக ஏற்படுத்துவதில்லை. அவர்களால் எப்படி முடியும்?

கிளாக்கன் : முடியாது.

சாக்ரடீஸ் : இன்னுமொரு கலைஞனும் உள்ளான். அவனைப் பற்றி உனது கருத்து என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

கிளாக்கன் : அவன் யார்?

சாக்ரடீஸ் : அவன்தான் எல்லாத் தொழிலாளிகளுடைய வேலைகளையும் செய்யக் கூடியவன்.

கிளாக்கன் : எத்தகைய சிறந்த மனிதன்!

சாக்ரடீஸ் : கொஞ்சம் பொறு. அங்ஙனம் நீங்கள் சொல்வதற்கு இன்னும் பல காரணங்கள் உள்ளன. ஏனெனில் அவன் எல்லாவிதப் பாத்திரங்களையும் செய்வதோடன்றி எல்லாப் பிராணிகளையும் பயிர்களையும், தன்னையும் இன்னும் மற்ற எல்லாவற்றையும் இந்த உலகம்—ஆகாயம், ஆகாயத்திலுள்ள பொருள்கள் இன்னும் பூமிக்கு அடியில் உள்ள பொருள்கள் ஏன் — கடவுளரையும் அவனே செய்கிறான்.

கிளாக்கன் : ஆஹா, இவன் ஒரு பெரிய மந்திரவாதியாக இருக்க வேண்டும். இதில் தவறில்லை.

சாக்ரடீஸ் : ஓஹோ, நீ நம்பிக்கையிழக்கிறாய் இல்லையா? அதுபோன்ற செயலாற்றுபவர் அல்லது உருவாக்குபவர் இல்லை என்கிறாயா? அல்லது இவையனைத்தையும் ஆக்குபவர் ஒருவித எண்ணத்தில் இருக்கலாம். மற்றொரு வகையில், எண்ணினால் இல்லை என்கிறாயா? அல்லது 'நீயே எல்லாவற்றையும் செய்யக்கூடிய ஒருவழி உள்ளது' என்பதைக் காண்கிறாயா?

கிளாக்கன் : எந்த வழி?

சாக்ரடீஸ்: மிகவும் சுலபமான வழி. இந்த வித்தையை மிக விரைவாகவும் சுலபமாகவும் செய்யப் பலவழிகள் உள்ளன. ஒருவன் ஒரு முகம்பார்க்கும் கண்ணுடியைச் சுற்றித் திருப்பு வதைவிட விரைவான வழி வேறு ஒன்றுமில்லை. அப்பொழுது நீ சூரியனையும், ஆகாயத்தையும் பூமியையும் உன்னை யும், மற்ற உயிரினங்களையும் நாம் இதுகாறும் பேசிவந்த மற்ற எல்லாப் பொருள்களையும் அந்தக் கண்ணுடியால் வெகு விரைவில் செய்துவிடுவாய்!

கிளாக்கன்: ஆம். அவை வெறும் தோற்றங்களாகவே இருக்கும்.

சாக்ரடீஸ்: மிகவும் நல்லது. இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய இடத்திற்கு நீ வந்து கொண்டிருக்கிருய். ஓவியனும்கூட இதே போலத் தோற்றங்களை உருவாக்கு பவன் என்றே நான் நினைக்கிறேன். அப்படித் தானே?

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: ஆனல் அவன் உருவாக்குவது உண்மையற்றது என்று நீ சொல்வாய். இருப்பினும் ஒருவிதத்தில் ஓவி யனும் படுக்கையைச் செய்யக்கூடியவன் அல்லவா?

கிளாக்கன்: ஆம், ஆனல் அது உண்மையான படுக்கை அல்லவே!

சாக்ரடீஸ்: இனி, அப்படுக்கையைச் செய்பவன் நிலை யாது? அவனும் நமது கொள்கைப்படி படுக்கையின் இயல்பாக அமைந்த எண்ணத்தை உருவாக்குவதில்லையே? ஏதோ ஒருவகைப் படுக்கையைத்தானே அவன் செய்ய வல்லவன்?

கிளாக்கன்: ஆம், அப்படித்தான்.

சாக்ரடீஸ்: உள்ளதைச் செய்ய அவனல் முடியாவிடில் உண்மை உருவத்தை அவனல் செய்ய முடியாது, ஆயின் உள்ளதுபோன்றது ஒன்றையே அவன் செய்ய வல்லவன். அப்படுக்கையைச் செய்பவனின் வேலையைப் பற்றியாவது அன்றி வேறு எந்த வேலைக்காரனின் வேலையைப் பற்றியா வது அவை உண்மை உருவங்களே என யாராவது சொன் ஞல் அவர்கள் உண்மையைப் பேசுவதாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது.

கிளாக்கன்: எப்படியிருப்பினும் அவர்கள் உண்மையைச் சொல்லவில்லை என்றே தத்துவஞானிகள் கூறுவர்.

சாக்ரடீஸ் : அப்படியாயின் அவனது வேலையும் உண்மையைப் பற்றிய தெளிவற்றதொரு விளக்கம் அல்லது சாயல் என்பதில் வியப்பில்லையே.

கிளாக்கன் : ஆம். அதில் ஆச்சரியமில்லை.

சாக்ரடீஸ் : இனி நாம் இதுகாறும் சொன்ன உதாரணங்களைக் கொண்டு எவன் போலி என்ற வினவுக்கு விடைகாண வருவதாக வைத்துக் கொள்வோம்.

கிளாக்கன் : தங்கள் இஷ்டப்படியே.

சாக்ரடீஸ் : நல்லது. இப்பொழுது மூன்று படுக்கைகள் உள்ளன. ஒன்று கடவுளால் செய்யப்பட்டு இயல்பாக அமைந்தது என்று வைத்துக் கொள்வோம். ஏனெனில் அதை வேறு யாராவது செய்ய முடியுமா ?

கிளாக்கன் : முடியாது.

சாக்ரடீஸ் : மற்றொன்று தச்சனால் செய்யப்பட்டது.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : மூன்றுவது ஓவியனால் செய்யப்பட்டது.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஆகவே படுக்கைகள் மூன்று வகைப்படும். அவற்றை மூன்று கலைஞர்கள் செய்கிறார்கள். அவர்கள் முறையே கடவுள், தச்சர், ஓவியர் அல்லவா ?

கிளாக்கன் : ஆம். அவர்கள் மூவர்.

சாக்ரடீஸ் : கடவுள், வேண்டுமென்றோ அன்றித் தேவைப் பட்டோ இயற்கையில் ஒரு படுக்கையை அமைத்தார். அது ஒன்றுதான். இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட படுக்கைகளோ அதைப்போலக் கடவுளால் செய்யப்பட வில்லை. செய்யப்படவும் மாட்டா.

கிளாக்கன் : ஏன் இப்படி ?

சாக்ரடீஸ் : ஏனெனில், அவர் இரண்டு செய்திருந்தால்கூட, மூன்றுவது ஒன்று அதைப் போன்று தோன்றக் கூடும். மற்ற இரண்டுக்கும் அதுவே மாதிரியாகக் கருதப்படும். அவரது இரண்டும் மாதிரிகளாகா.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : கடவுள் இதை அறிவார். ஆகவே அவர் ஏதோ ஒரு படுக்கையைச் செய்யும் குறிப்பிட்ட கர்த்தாவாக இல்

லாது உண்மையான படுக்கையைச் செய்யும் உண்மையான கர்த்தாவாகவே இருக்க விழைந்தார். ஆகவே அவர் இயல் பாகவே அவசியத்தேவையினுல் ஒன்றைமட்டுமே உருவாக் கினுர்.

கிளாக்கன்: அப்படியே நாம் நம்புவோம்.

சாக்ரடீஸ்: அப்படியானுல் கடவுளேயே நாம் இயற்கை ஆசான் அல்லது படுக்கையைச் செய்தவன் என வைத்துக் கொள் வோமா ?

கிளாக்கன்: ஆம், சிருஷ்டியின் இயல்புக்கும் மற்ற எல்லாவற் றிற்கும் அவரே முதற் கருத்தாவாக உள்ளதால் அப்படியே வைத்துக் கொள்வோம்.

சாக்ரடீஸ்: அப்படியானுல் தச்சரின் நிலே யாது ? அவனும் படுக்கையைச் செய்கிருன் அல்லவா ?

கிளாக்கன்: ஆம்.

சாக்ரடீஸ்: ஓவியனே நீ சிருஷ்டி கர்த்தா அல்லது செய்பவன் என்பாயா ?

கிளாக்கன்: நிச்சயமாக இல்லே.

சாக்ரடீஸ்: அவன் அப்படிச் செய்பவனுக இல்லேயெனில் அவனுக்கும் படுக்கைக்கும் என்ன தொடர்பு ?

கிளாக்கன்: ஏனேயோர் செய்வதைப் பார்த்து அதுபோலச் செய்பவன் என்று நாம் அவனே அழைக்கலாம் என எண்ணுகிறேன்.

சாக்ரடீஸ்: நல்லது. இயற்கையினின்றும் கீழே மூன்ரும் படியிலுள்ள அந்தக் கலேஞனேப் போலி என்று அழைக்கலா மல்லவா ?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: அந்தத் துன்பியல் புலவனும் ஒரு போலிதான். ஆகவே ஏனேய போலிகளேப் போன்றே அவனும் ஆட்சி யாளனிடமிருந்தும் உண்மையினின்றும் மும்மடங்கு அகற் றப்பட்டுள்ளான் அல்லவா ?

கிளாக்கன்: ஆம். அப்படித்தான் தோன்றுகிறது.

சாக்ரடீஸ்: போலியைப் பற்றி நாம் கருத்தில் ஒன்றிவிட் டோம். ஓவியனேப் பற்றி என்ன சொல்வது ? அவன் இயற்கையில் இயல்பாக உள்ளவற்றைப் போலச் செய்கிருனு

அல்லது ஏனைய கலைஞர்களது பொருள்களைப் போன்று செய்கிருனு என்று நாம் அறிய வேண்டும்.

கிளாக்கன் : பின்னர்ச் சொன்னது போலத்தான்.

சாக்ரடீஸ் : உண்மைப் பொருள்களைப் போன்றவைகளையா, அல்லது அவற்றின் தோற்றங்களைப் போன்றவைகளையா ? அதை இன்னும் முடிவு செய்யவேண்டும்.

கிளாக்கன் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : அதாவது அப்படுக்கையை—சாய்வாக நின்ரே, அன்றி நேராகவோ அல்லது பார்க்கக் கூடிய எந்த இடத்திலிருந்தோ பல கோணங்களிலிருந்தும் அதைக் காணலாம். அப்பொழுது அப்படுக்கை பலவிதங்களில் தோன்றும். ஆனல் அதன் உண்மை நிலையில் ,வேறுபாடு இல்லை. எல்லாப் பொருட்கும் இதுவே பொருந்தும்.

கிளாக்கன் : ஆம், அவ்வேறுபாடுகள் யாவும் வெறும் தோற்றமே.

சாக்ரடீஸ் : இப்பொழுது இன்னெரு கேள்வி. ஓவியக் ,கலையின் தன்மை யாது ? இருக்கும் பொருளைப் போன்று அமைப்பதா ? அன்றித் தோற்றங்களைப் போன்று வரைவதா ? ஓவியங்கள் தோற்றங்களைப் பொறுத்தவையா, உண்மைகளைப் பொறுத்தவையா ?

கிளாக்கன் : வெறும் தோற்றங்களைப் பொறுத்தவையே.

சாக்ரடீஸ் : அப்படியானல் ஓவியனென்ற போலியானவன் உண்மையினின்றும் வெகு தொலைவிலிருக்கிருன். அவன் எல்லாப் பொருள்களையும் செய்ய முடியும். ஏனெனில் அவன் அவற்றின் ஒரு பகுதியை மேலெழுந்த வாரியாகத் தொடுகிருன். அந்தப் பகுதியோ தன்னளவில் ஒரு வடிவமே. உதாரணமாக, ஒரு ஓவியன் ஒரு காலணி செய்பவனையோ, ஒரு தச்சனையோ அன்றி மற்ற எந்தக் கலைஞனையும் ஓவியத்தில் செய்துவிட முடியும். அவர்களது கலையைப் பற்றி அவன் எதுவும் அறிவான் இல்லை. வல்லவனுயின் அவன் தான் வரைந்த தச்சனின் படத்தைத் தொலைவினின்றும் காட்டிக் குழந்தைகளையும் சாதாரண மக்களையும் ஏமாற்றிவிட முடியும். அவர்களும் தாம் உண்மையான தச்சனைக் காண்பதாகவே கருதிவிடுவர்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : எல்லாக் கலைகளையும் எல்லாப் பொருள்களை யும் ஒவ்வொரு பொருளின் மிக நுட்பமான அறிவையும் பிறர் காணுத வகையில் உணர்ந்த ஒருவனைத் தான் கண்ட தாக எவனுவது நம்மிடம் சொன்னுல், சொல்பவன் யாராக இருப்பினும் நாம் அவனை மிகச் சாதாரண ஒரு மனிதனு கவே கருதலாம். அவன் தான் கண்ட ஏதோ ஒரு மந்திர வாதியாலோ அன்றி நடிகனுலோ ஏமாற்றப்பட்டிருக்க வேண்டும். அவனுக்கு அறிவு, அறிவின்மை, போலி ஆகியவற்றைப் பற்றிய இயல்பை ஆராயத் தகுதியின்மை யால் அவன் மற்றவனை எல்லாம் அறிந்தவனுக எண்ணி யிருக்க வேண்டும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே துன்பியலாரையும், அவர் தம் தலைவரான ஹோமரையும் புகழ்ந்து 'அவர்கள் எல்லாக் கலைகளையும், மனிதர்க்குத் தேவையான அனைத்தையும், குணங்களையும், குற்றங்களையும், தெய்வீகத் தன்மைகளையும்கூட அறிந்தவர் கள். ஏனெனில் ஒரு நல்ல புலவன் தனது விஷயத்தை நன்கு அறிந்தாலன்றி நன்ருகச் செய்யுளியற்ற முடியாது. மேலும் அந்த அறிவில்லாதவன் புலவனுகவே விளங்க முடியாது!' என்று யாரேனும் நம்மிடம் வந்து சொன்னுல் இந்த இடத்தில்கூட முன் கூறியது போன்ற தோற்றம் உள்ளதா என்று காண வேண்டும். ஒருவேளை அவர்கள் போலிகளிடையே பழகி அவர்களால் ஏமாற்றப்பட்டிருக்கக் கூடும். மேலும் அவர்களது நூல்களனைத்தும் உண்மையி லிருந்து மும்மடங்கு அப்பாற்பட்டவைகளே. அவர்கள் அவற்றை உண்மையைப்பற்றிய அறிவில்லாமலேயே இயற்ற முடியும். ஏனெனில் அவை வெறும் தோற்றங்களே யன்றி உண்மையல்ல அல்லவா? அன்றி, அவர்கள் சொல்வது சரியாகவும் இருக்கக்கூடும் என்பீரோ? புலவர் தாம் பேசும் பலவற்றையும் பற்றி உண்மையாகவே அறிந் திருப்பர் என்கிருயா?

கிளாக்கன் : இந்த வினு எல்லாவகையிலும் ஆராயப்பட வேண்டியதொன்று.

சாக்ரடீஸ் : உண்மையானவற்றையும் அதைப்போன்ற அமைப் புக்களையும் (போலிகளையும்) ஒருவன் செய்யக் கூடியவனு யிருப்பின் அவன் அந்த அமைப்பை—போலியை—உருவாக்கு

வதிலேயே தனது முழு ஈடுபாட்டையும் செலுத்துவான் என்று நீ நினைக்கிருயா? தன்னியல்புகளில் உயர்வானதே இல்லை என்பது போலப் போலியைவிட மேலானது ஒன்று மில்லையே என்று அவன் கொள்வாஞு?

கிளாக்கன்: மாட்டான் என்றே நான் சொல்லுவேன்.

சாக்ரடீஸ்: தான் நகல் செய்வதை நன்கு உணர்ந்த உண்மையான கலைஞன் போலிகளில் ஈடுபடாது உண்மையியல்பிலேயே ஈடுபடுவான். மேலும் சிறந்த பல செய்பொருள்கள் தனது நினைவாக உலகில் நிலவ வேண்டும் என்று விரும்புவான். வீண் புகழ்ச்சியின் ஆசிரியஞுக இருக்க விரும்பாது பலரும் தன் உயர்வைப் புகழ வேண்டுமென விரும்புவான்.

கிளாக்கன்: ஆம் அதுவே அவனுக்கு மிகப் பெரிய மதிப்பையும் பயனையும் தரும்.

சாக்ரடீஸ்: அப்படியாஞல் நாம் ஹோமரை ஒரு கேள்வி கேட்போம். அது மருத்துவத்தையோ அல்லது அதைப்போல அவர் ஒரு சில இடங்களிலேயே தன் பாக்களில் குறிப்பிடும் கலைகளையோ பற்றியது அல்ல. அவரையோ அல்லது மற்ற எந்தப் புலவரையோ நாம் 'அவர் அஸ்க்ளீபியஸ் போன்ற நோயாளிகளைக் குணப்படுத்திஞரா? அல்லது அஸ்கிளிப்யாடுகளைப் போன்று மருத்துவக் கலையை நிறுவிஞரா? அல்லது மருந்துகளையும் மற்றைக் கலைகளையும் பற்றித் தாம் கேள்விப்பட்டதாகவே சொல்கிருரா?' என்று கேட்கப் போவதில்லை. ஆஞல் அவருடைய பாடல்களில் காணப்பட வேண்டிய தலைமையும் மேன்மையும் அமைந்த முக்கியமான போர் முறைச் சிறப்பு, அரசியல், கல்வி என்பனவற்றைப் பற்றி அறிவதற்கு நாம் உரிமையுடையோம். ஆகவே அவற்றைக் குறித்து அவரிடம் நன்ருகக் கேட்க வேண்டும். அவரிடம் சென்று, 'அன்புடைய ஹோமரே! தாங்கள் உண்மையிலிருந்து மூன்ருவதாக இல்லாமல் இரண்டாம் நிலையிலேயே அகன்றவராயிருப்பின், உருவம் செய்பவராகவோ அன்றிப் போலியாகவோ இல்லாது இருப்பீர்களேயாஞல், பொது வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் மனிதனைச் சிறந்தவஞகவோ அன்றி மோசமானவஞகவோ செய்வது எது? என்று உங்களால் சொல்ல முடியுமாஞல், உங்களது உதவி கொண்டு எந்த நாடாவது நன்கு ஆளப்பட்டிருக்கிறதா? என்று சொல்லுங்கள்.

லாசிடேமானின் உயர்ந்த விதிகள் லைகர்கஸ்ஸினுல் ஏற்பட்டது. அதைப் போன்றே பல்வேறு சிறிய பெரிய நகரங்களும் வேறு பலரால் நன்மையடைந்தன. நீங்கள் ஒரு சிறந்த ஆட்சியாளர் என்றும் தங்களுக்கு நீங்கள் நன்மை செய்திருக்கிறீர்கள் என்றும் யாராவது சொல்கிருர்களா ? இதாலியும் சிசிலியும் சாரன்டாஸால் பெருமையடைந்தன. நம்மிடையே சோலன் புகழ்பெற்ருர். உங்களைப் பற்றி எந்த நகராவது ஏதாவது சொல்கிறதா ?' என்று கேட்கையில் அவரால் எந்த நகரத்தையாவது கூறமுடியுமா ?

கிளாக்கன் : எனக்குத் தோன்றவில்லை. ஹோமரைப் புகழ்ந்து பேசுபவர்கூட அவர் சிறந்த ஆட்சியாளர் என்று பாசாங்கு கூடச் செய்ய மாட்டார்களே !

சாக்ரடீஸ் : அதுபோகட்டும். சரித்திரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள போர்களில் ஏதாவது ஒன்றை அவர் வெற்றி கரமாக நடத்தியுள்ளாரா? அன்றி அவர் உயிருடன் இருந்தபோது அவருடைய ஆலோசனையின் உதவியால் எந்த நாடாவது வெற்றியடைந்ததா ?

கிளாக்கன் : ஒன்றுகூட இல்லை.

சாக்ரடீஸ் : மைலீசியன் தேல்ஸ், சிதியநாட்டு அனகார்சிஸ் அல்லது மற்ற அறிவாளிகளைப்போன்று கலைகளுக்கும் மனித வாழ்வுக்கும் பொருத்தமான பயனுள்ள ஏதாவது ஒரு புதியதை அவர் உண்டாக்கியிருக்கிருரா? அல்லது அவருடன் அதுபோன்று தொடர்புள்ளது ஏதேனும் உண்டா?

கிளாக்கன் : அம்மாதிரி ஒன்றுகூட நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : சரி. ஹோமர் பொதுநலத்தொண்டு ஒன்றும் செய்யவில்லை எனில், அவர் வேறு யாருக்காவது தனிப் பட்ட முறையில் வழிகாட்டியாகவோ ஆசிரியராகவோ இருந்திருக்கிருரா ? அறிவிற் சிறந்த பிதகோரஸ்ஸின் நண்பர்களும் வழித்தோன்றல்களும் இன்றுவரை அவர் வழியைப் பாராட்டிப் பின்பற்றுவதைப்போல ஹோமரும் தன்னுடன் தொடர்பு கொண்டு தன்னை விரும்பிய அருமை நண்பர்களைப் பெற்றிருந்தாரா ? அவர்கள் வருங்கால மனித சமுதாயத்துக்கென ஹோமரின் வாழ்க்கை முறை என ஏதேனும் அறிவித்துள்ளார்களா ?

கிளாக்கன் : அதுபோன்று ஒன்றும் சரித்திரத்தில் அவரைப் பற்றி இல்லவே இல்லை. ஹோமரின் நண்பனுன க்ரியோ பிலஸ்—அவன்தான் சதைக் குழந்தை—அவனது பெயரே நம்மைச் சிரிக்கச் செய்கிறது. அவனுடைய முட்டாள் தனம் கேலி செய்யத்தக்கதே தவிர வேறில்லை. உலகில் சொல்வது போன்று இருப்பின் அவனுலேயே ஹோமர் மிகவும் புறக்கணிக்கப்பட்டார். ஏனையோரும் அவர் உடனிருந்த போதே அவரை அந்நிலையில்தான் வைத் திருந்தனர்.

சாக்ரடீஸ் : ஆம். அதுதான் அவரைப்பற்றிய கூற்று. உண்மையிலேயே மனித சமுதாயத்தைக் கற்பித்து முன்னேற்ற ஹோமரால் முடிந்திருந்தால் அவர் அறிவு பெற்றிருந்து போலியாக இல்லாதிருந்தால் அவர் அதிக மான சீடர்களைப் பெற்று அவர்களால், நன்கு மதிக்கப்பட்டு, நேசிக்கப்பட்டு இருப்பார் என்று கற்பனை செய்து கொள்ளலாமா ? அப்டேராவைச் சேர்ந்த புரோடகோஸ் ஸும், ஸியாசைச் சேர்ந்த ப்ராடிகஸ்ஸும் இன்னும் பலரும் தங்கள் காலத்திய மக்களிடம் சென்று ‘உங்களது வீட்டையோ அன்றி நாட்டையோ நீங்கள் நன்கு நிர்வகிக்க வேண்டுமெனில் எங்களை உங்கள் நாட்டுக் கல்வி அமைச்சர் களாக அமைத்துக் கொண்டால்தான் முடியும்’ என்று சொல்ல வேண்டுவதுதான். அவர்களது புத்திசாலித்தன மான யோசனையானது பிறர் அவர்களை விரும்பி அவர்களைத் தோளில் தூக்கி வைத்துக் கொண்டு செல்லும் அளவுக்கு நேசிக்கச் செய்ய வல்ல சக்திவாய்ந்ததாக இருக்கும். ஹோமர் காலப் பெருமக்களோ, அன்றி மீண்டும் ஹிசியாடின் காலப் பெருமக்களோ, உண்மையிலேயே மனித இனத்தைச் சிறப்புள்ளதாகச் செய்யக் கூடியவர் களாக இருந்திருப்பின், அவர்களை இசையில் திளைப்பவர் களென்று சொல்லிக் கொண்டு உலாவிவரவிட்டிருப்பார்கள் என்று நாம் எண்ண முடியுமா ? தங்கத்தை விட்டுப் பிரிவது போன்று அவர்களை விட்டுப்பிரிய விருப்பமில்லாமல் அவர்கள் இருந்திருக்க வேண்டுமல்லவா ? மேலும் அவர் களைத் தங்களுடனேயே தங்கும்படிக் கட்டாயப்படுத்தி யிருக்க வேண்டும் அல்லவா ? அல்லது அந்த ஆசிரியர் அப்படித் தங்காவிடினும், தேவையான கல்வியைப் பெறும்

வரையில் அம்மாணவர்கள் அவரையே எப்பொழுதும் தொடர்ந்து வந்திருக்க வேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : ஆம். அது மிகவும் உண்மையென்றே நான் நினைக்கிறேன்.

சாக்ரடீஸ் : அப்படியானால் இந்தக் கவிஞர்களெல்லாம்—ஹோமர் உள்பட அனைவரும்—போலிகளே என்று நாம் சொல்லலாமல்லவா ? சிறப்புக்களையும் மற்றவற்றையும் அவர்கள் அப்படியே பிரதிசெய்துள்ளனர். ஆனால் அவர்கள் உண்மையை அடைவதே இல்லை. காலணி செய்வதைப் பற்றி ஒன்றுமே அறியாத ஒரு ஓவியன் காலணி செய்பவனின் படத்தை வரையக்கூடுவது போலவே கவிஞனும் உள்ளான். அவனளவே அறிந்தவர்களாக வண்ணத்தையும் உருவத்தையுமே கொண்டு தீர்ப்புச் செய்யக் கூடியவர்கட்கே அப்படம் நன்றாகத் தோன்றும்.

கிளாக்கன் , ஆம். அப்படித்தான்.

சாக்ரடீஸ் : அதைப் போன்றே தனது சொற்களாலும் சொற்றொடர்களாலும் பலகலைகள் மீதும் அவற்றை நகல் செய்ய வேண்டிய அளவுக்கே அவற்றின் தன்மையை அறிந்தவனாக வண்ணம் தீட்டுகிறான் என்று சொல்லலாம். அவனைப்போன்ற அறிவிலிகளான மற்றவர்களோ, அவனது சொற்களைக்கேட்டு அவனை மதித்துக் காலணி செய்வதைப் பற்றியோ அன்றிப், போர் முறைத் திறத்தையோ அல்லது மற்றவற்றைப் பற்றியோ எதுகை மோனை அழகுடன் இசையிலே அவன் சொல்வது கண்டு அவன் நன்றாகப் பேசுகிறான் என்று 'கற்பனை செய்து விடுகின்றனர். இயல்பாக அமைந்த இசை எதுகை மோனைகளின் செல்வாக்கு அப்படிப்பட்டது. கவிஞரின் பாடல்களில் அவற்றில் அமைந்த இசையை எடுத்துவிட்டுச் சாதாரண உரைநடையில் படிக்கும்போது எத்தகைய கேவலமான தோற்றமுடையதாயுள்ளது என்பதை மீண்டும் மீண்டும் பார்த்திருப்பாய என்று நினைக்கிறேன்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அவை இயற்கையில் அழகில்லாது இளமையால் பிரகாசிக்கும் முகங்களைப் போன்றவை. இப்பொழுது இளமையின் ஒளி அவற்றினின்றும் சென்றுவிட்டது அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இங்கு இன்ஞெரு விஷயம். அந்தப் போலி—உண்மை அமைப்பைப் பற்றியே அறியாதவன்—அவன் வெறும் தோற்றங்களையே அறிவான். நான் சொல்வது சரிதானே !

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இனி, பாதி விளக்கத்துடன் நாம் திருப்தியடைந்து விடக்கூடாது. இப்பொழுது ஒரு தெளிவான எண்ணம் ஏற்பட வேண்டும்.

கிளாக்கன் : சரி, சொல்லுங்கள்.

சாக்ரடீஸ் : ஓவியனைப் பற்றிப் பேசும்போது, அவன் குதிரைக் கடிவாளத்தை வரையும்போது, அதன் உலோகத் துண்டையும் வரைவான் அல்லவா ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அந்தக் கடிவாளத்தைத் தோல் வேலைக்காரர்களும் பித்தளை வேலைக்காரர்களும் செய்வார்கள் அல்லவா !

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அக்கடிவாளம் உலோகத் துண்டு இவற்றின் சரியான அமைப்பை அந்த ஓவியன் அறிவான ? ஏன், பித்தளையிலும் தோலிலும் வேலை செய்பவர்களே அதை முற்றும் அறியமாட்டார்கள் ! ஆனல் குதிரைக்காரன் மட்டும் அவற்றைப் பயன்படுத்தும் முறை தெரிவதால் இதை அறிவான். அவனே அவற்றின் உண்மை அமைப்பை அறிவான்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : எல்லாவற்றையும் பற்றி இதுபோன்றே நாம் சொல்லலாமல்லவா ?

கிளாக்கன் : என்ன சொல்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : எல்லாவற்றையும் கருதும் மூன்று கலைகள் உள்ளன என்றும், அவற்றில் ஒன்று பயன்படுத்துவது, ஒன்று செய்வது, மற்ருென்று அவற்றின் போலியாக உள்ளது.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : உயிருள்ளதும், உயிரில்லாததும் ஆகிய எவ் வகைப் பொருள்களும் அவ்வாறே மனிதனின் செயல்கள்

ஒவ்வொன்றின் உயர்வும், அழகும், உண்மையும், இயற்கையோ அல்லது அவற்றைப் படைத்த கலைஞனே அவற்றிற்கு ஏற்படுத்திய பயன்படுத்தலைப் பொறுத்த தாகவே இருக்குமல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இன்னும், அவற்றைப் பயன்படுத்துபவன் அவற்றில் மிகவும் அனுபவம் நிறைந்தவனாக இருத்தல் வேண்டும். அவற்றைப் பயன்படுத்தும்போது அவற்றின் நல்ல அல்லது தீய தன்மைகள் தாமாகவே தோன்றும். செய்வதற்கு முன்னர், பயன்படுத்துபவன் அவற்றைச் செய்பவனுக்கு அத்தன்மைகளைக் குறிப்பிட வேண்டும். உதாரணமாக, புல்லாங்குழல் ஊதுபவன், அதனைச் செய்பவனிடத்தில் எந்தக் குழல்கள் ஊதுவதற்கு ஏற்றவை என்பதைச் சொல்ல வேண்டும். அவற்றை எப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லவேண்டும். அவற்றைச் செய்பவனும் அவ்விஷயங்களைக் கவனத்துடன் கேட்டுக் கடைப் பிடிக்க வேண்டும் அல்லவா ?

கிளாக்கன் : உண்மையாக.

சாக்ரடீஸ் : நன்கறிந்த ஒருவன் புல்லாங்குழலின் நல்ல தன்மைகளையும் கெட்ட தன்மைகளையும் அதிகாரத்துடன் பேசும்போது மற்றவன் அவற்றை நம்பிக்கையுடன் ஏற்றுக் கொண்டு அவன் சொன்னபடியே செய்வானல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : கருவி ஒன்றுதான், ஆனால் அதன் சிறப்பையும் சிறப்பின்மையையும் அதனைச் செய்பவனே சரியாக அடைய முடியும். அவற்றையும் அவன் தெரிந்தவர்களிடமிருந்தே அறிகிறான். அவர்கள் சொல்வதைக் கேட்கக் கட்டாயப் படுத்தப்பட்டு அவர்களைக் கேட்டு அறிகிறான். அக்கருவியைப் பயன்படுத்துபவனுக்கு அதைப்பற்றிய அறிவு இருக்குமல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இந்த இருவகைகளில் போலிக்கு ஏதாவது இருக்குமா ? தனது ஓவியம் சரியானதா, அழகானதா அன்றி இல்லையா, என்பதை அதன் பயனிலிருந்து அவன் அறிவானா அன்றி அதை அறிந்த வேறொருவனுடன் தொடர்பு

கொள்ளும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டு, அவனுடன் பேசி எங்ஙனம் வரைய வேண்டும் என்பதை அறிந்து கொண்ட அவன் சரியான கொள்கையுடையவனுயிருப்பானு?

கிளாக்கன் : இரண்டுமில்லை.

சாக்ரடீஸ் : ஆகவே தனது போலி உருவங்களின் நன்மை தீமைகளை அறியாததுடன், அவற்றைப் பற்றிய கொள்கையும் அற்றவனுயிருக்கிருன் அல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அந்தப் போலிக் கலைஞன் தனது சொந்தப் படைப்புக்களைப் பற்றிய மேன்மையான அறிவுடனேயே விளங்குகிருன் அல்லவா?

கிளாக்கன் : இல்லை. அதற்கும் மறுதலையாக!

சாக்ரடீஸ் : இருந்தும், எது நல்லது அல்லது தீயது என்பதை அறியாமலேயே அவன் தனது போலித் தனத்தைத் தொடர்கிருன். அறிவற்ற கூட்டங்களுக்கு எது நல்லதாகப் படுகிறதோ அதனையே அவனும் விரும்புகிருன் என்று சொல்லலாம் அல்லவா?

கிளாக்கன் : ஆம். அப்படித்தான்.

சாக்ரடீஸ் : ஆகவே அந்தப் போலியானவன் தான் தயாரிக்கும் போலிகளின் உண்மை உருவங்களைப் பற்றிய எந்த அறிவும் இல்லாதவன் என்பதை நாம் ஒத்துக் கொண்டு விட்டோம். போலி என்பது ஒருவிதமான விளையாட்டு எனலாம். துன்பியல் புலவர்கள் அங்கதப் பாட்டு அமைப்பில் எழுதினுலும் அஃலது வீரகாவிய அமைப்பில் எழுதினுலும் அவர்கள் மிக உயர்ந்த போலிகள்தானே?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இன்னுமொன்று கேட்கிறேன், சொல். உண்மையினின்றும் மும்மடங்கு அகன்ற பொருளிடத்தில் தொடர்புடையவையாகத் தானே நாம் போலிகளைக் கண்டோம்?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : மனிதனின் எந்த அறிவுக்கு இப்போலியானது விளக்கப்படுகிறது?

கிளாக்கன் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

சாக்ரடீஸ்: விவரிக்கிறேன். அருகிலிருக்கும்போது எப் பொருளும் பெரிதாகவும் தொலைவிலிருக்கும் போது சிறிதாக வும் தெரிகிறதல்லவா?

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: அதே பொருளே தண்ணீருக்கு வெளியே பார்க்கும் பொழுது நேராகத் தெரிகிறது. ஆனால் தண்ணீருக்குள் இருக்கும்போது வளைந்தது போன்று தோன்றுகிறது. குவிந் திருப்பது குழிவானதாக மாறிவிடுகிறது. இதற்குக் காரணம், வர்ணங்கள் கண் பார்வையை மாற்றுவதே ஆகும். ஆகவே எல்லாவிதக் குழப்பங்களும் நம்மிடத்திலேயே காணப்படுகின்றன. இந்த மனித மனக் குறையினால்தான் ஒளியினாலும், நிழலினாலும் ஏனைய புத்திசாலித்தனமான முறைகளாலும் கண் கட்டி வித்தைகளை நாம் நம்பும்படியும் ஏமாறும்படியும் செய்யப்படுகிறோம். அவை மந்திரவித்தை களைப் போன்று நமக்குத் தோன்றுகின்றன.

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: முகத்தல் அளவை, எண்ணலளவை, நிறுத்த லளவை போன்றவையே இங்கு மனிதனது அறிவுக்குத் துணை புரிகின்றன. அவற்றின் பயனும் அழகும் ஆங்கே காணத்தக்கன. அப்பொழுது தோற்றத்தில் காணும் உயர்வோ தாழ்வோ, மிகுதியோ குறைவோ, நம்மை ஏமாற்றிவிடமுடியாது. கணக்கிடுதலும் எண்ணுதலும் நிறுத்தலும் அங்கு முன்னிற்கும்.

கிளாக்கன்: மிகவும் உண்மை.

சாக்ரடீஸ்: நிச்சயமாக இது ஆன்மாவின் பகுத்தறிவு, அள விடுதல் இயல்பு ஆகியவற்றின் செயலாக இருக்கவேண்டும்.

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: ஆன்மாவின் பகுத்தறிவு அளவிடும் இயல்பு ஆகியவற்றால் பொருள்களை அளந்து, மதிப்பிட்டுச் சில பொருள்கள் சமமானவை, அல்லது சில உயர்ந்தவை, சில தாழ்ந்தவை என்று சொல்லும்போது ஏதோ ஒரு மேற்போக் கான முரண்பாடு தோன்றுகிறதல்லவா?

கிளாக்கன்: உண்மை.

சாக்ரடீஸ்: அத்தகைய முரண்பாடு இராது என்று நாம் சொல்லவில்லையா? ஒரே அறிவு ஒரே பொருளைப் பற்றி

ஒரே சமயத்தில் வேறுபட்ட எண்ணங்களைக் கொண்டிருக்க முடியாது அல்லவா?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : அளவையைப்பற்றி மாறுபட்ட கருத்துடைய உயிரின் ஒரு பிரிவு அளவையோடு உடன்பட்ட கருத்துடைய ஒரு பிரிவாகவே இருக்காதல்லவா?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆன்மாவின் சிறந்த பகுதி அளவையையும் எண்ணிக்கையையும் நம்பும் பகுதியாகத் தானே இருக்கக்கூடும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவற்றிற்கு எதிரானது ஆன்மாவின் தாழ்ந்த இயல்புகளில் ஒன்றே.

கிளாக்கன் : ஆம், ஐயமின்றி.

சாக்ரடீஸ் : வண்ணச் சித்திரங்களையும் ஓவியத்தையும் போலிகளையும் பற்றி நாம் பேசும்பொழுது பொதுவாக இம் முடிவுக்கே வர விழைந்தேன். இப்பணிகளைச் செய்வோர் அவரவர் தமது சொந்த வேலையைக் கவனிக்கும்போது உண்மையினின்றும் வெகு தொலைவில் பிரிக்கப்பட்டிருப்பதைப் போன்று சிந்தனையினின்றும் பிரிக்கப்பட்ட நமது கொள்கைக்குத் தொடர்பான அனைத்தும் உண்மையான சிறந்த லட்சியத்தைப் பெற்றிருக்கமாட்டா.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : போலிக்கலை எனும் கீழ்மகன் மற்றொரு கீழ்மகளை மணம் செய்துகொண்டு இருவரும் கீழான மக்களைப் பெறுகின்றனர்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இது பார்வைக்கு மட்டும் உண்மையா? அன்றிக் கவிதை என்று சொல்வதுடன் தொடர்புபடுத்தி அதைச் செவிப்புலனுக்கும் விரிக்கலாமா?

கிளாக்கன் : அனேகமாக இதுவே கவிதைக்கும் பொருந்தும்.

சாக்ரடீஸ் : ஓவியத்தின் ஒப்புமையினின்றும் கிடைத்த செய்திகளை வைத்துக் கொண்டு இப்படிக் கூற வேண்டாம். இன்னும் ஆராய்ந்து கவிதையில் காணும் போலி நன்மை

யளிப்பதா, அன்றித் தீமையுடன் தொடர்புடையதா என்று நாம் காண வேண்டும்.

கிளாக்கன் : சரி, காண்போம்.

சாக்ரடீஸ் : அந்தக் கேள்வியை இப்படியும் எண்ணிக் கொள்ள லாம். தன்னியல்பாகவோ அல்லது இயக்கப்பட்டோ மனிதன் செய்யும் எல்லாச் செயல்களையும் போலிகள் பிரதிபலிக்கின்றன. அவற்ருல் நல்ல அல்லது தீய விளைவுகள் ஏற்படும் என்று கற்பனை செய்து அதற்கேற்ப சுகமோ துக்கமோ அடைகின்றன. அவ்வளவுதானே? வேறு ஏதாவது உண்டா?

கிளாக்கன் : இல்லை, இனிச் சேர்க்க வேண்டியது ஒன்று மில்லை.

சாக்ரடீஸ் : இந்த எல்லா வேறுபட்ட சூழ்நிலைகளிலும் மனிதன் தன்னியல்புடன் ஒத்துப்போகிருஞ? அன்றிப் பார்வையில் ஏற்படும் குழப்பம், பொருள் பற்றி எண்ணத்திற்கும் பார்வைக்கும் எதிர்ப்பு ஆகியவை இருப்பன போன்று எதிர்ப்பும் முரண்பாடுகளும் அவனது வாழ்விலும் ஏற்படுமா? இவ்விஞவை மீண்டும் எழுப்ப வேண்டிய தேவை இல்லை. இவையனைத்தும் முன்னமேயே ஒத்துக் கொள்ளப் பட்டுள்ளன. இவையும் இவைபோன்ற பல்லாயிரக் கணக்கான எதிர்ப்புக்களையும் மனம் ஒரே சமயத்தில் அடைகிறது என்று நாம் முன்னரே ஒத்துக் கொண்டுள்ளோம் அல்லவா?

கிளாக்கன் : ஆம், நாம் செய்தது சரியே.

சாக்ரடீஸ் : ஆம்,' இதுவரை நாம் சரியாகவே வந்துள்ளோம். ஆனல் ஒன்றுமட்டும் விடப்பட்டுள்ளது. அதையும் இப்பொழுது கவனிக்க வேண்டும்.

கிளாக்கன் : அது என்ன?

சாக்ரடீஸ் : ஒரு நல்ல மனிதன் தனக்கு மிகவும் விருப்பமான மகனையோ அன்றி மற்றை எதையுமோ இழக்கும்போது ஏனையோரைவிட மிகவும் சீர்பட்ட மனத்துடன் அதை ஏற்கிருன் என்று நாம் சொன்னேமல்லவா?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : அங்ஙனமாயின் அவனுக்குத் துக்கமே இல்லையா அல்லது அவன் வருந்தாமல் இருக்க முடியாவிடினும் தனது

வருத்தத்தை மட்டுப்படுத்திக் கொள்வான் என்று சொல்ல லாமா ?

கிளாக்கன் : பின்னர்ச் சொன்னதுதான் சரியான விளக்கம்.

சாக்ரடீஸ் : இப்பொழுது சொல்லுங்கள். அவனையொத்த நிலையுடையவர்களிடையே இருக்கும்போது அவன் தனது வருத்தத்தைக் குறைத்து ஒருநிலைப்படுத்திக் கொள்வானு ? அன்றித் தனிமையிலிருக்கும்போது அங்ஙனம் செய்வானு ?

கிளாக்கன் : அவன் பிறரால் கவனிக்கப்படுகிறுன், இல்லையா என்பதைப் பொறுத்து இதில் பெரும் வேறுபாடு இருக்கும்.

சாக்ரடீஸ் : அவன் தனியே இருக்கும்போது பலவற்றைச் சொல்லவும் செய்யவும் கூடும். ஆனல் அவற்றையே வேறு யாரேனும் பார்க்கவோ அன்றிக் கேட்கவோ செய்தால் அவன் வெட்கப்படுவான் அல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : அவனிடம் சிந்தனையும் ஒழுங்கும் அமைந்த ஒரு கொள்கை உள்ளது. அதுவே அவனை எதிர்த்துத் தடுக்கச் செய்கிறது. அத்துடன் துரதிர்ஷ்டத்தின் உணர்வு அவனைத் துன்பத்தில் ஆழ்த்தும்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஆனல் ஒரு மனிதன் இரு எதிர்த் திசைகளில் இழுக்கப்படும்போது—ஒரு பொருளிலிருந்து இங்கும் அங்குமாக—அவனிடம் இரு கொள்கைகள் உள்ளன என்பதையே அது காட்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அவற்றில் ஒன்று சட்டத்தின் துணையுடன் செல்லத் தயாராக இருக்கிறது.

கிளாக்கன் : எப்படிச் சொல்லுகிறீர்கள் ?

சாக்ரடீஸ் : சட்ட உணர்வு அறிவுறுத்துவது இதுதான் : துன்பமுறும்போதெல்லாம் பொறுமையாக இருப்பது மேலானது. பொறுமை இன்மைக்கு நாம் எப்போதும் இடம் கொடுக்கலாகாது. நம்மை நோக்கி வருபவை நல்லவையா அன்றித் தீயவையா என அறியும் தன்மை இல்லை. பொறுமை இன்மையால் அடையக்கூடிய பயன் ஒன்றும் இல்லை. மேலும், எந்த மனிதப் பொருளும் மிக முக்கியம் வாய்ந்தது அல்ல. ஆகையால் மிகக் குறுகிய காலத்தில்

மிகவும் தேவைப்படுகிற பொருளைப் பெற முந்துகையில் அவ்வழியில் துன்பந்தான் நிற்கிறது.

கிளாக்கன் : எது மிகவும் தேவைப்படும் பொருள் ?

சாக்ரடீஸ் : என்ன நிகழ்ந்ததோ அதிலிருந்து அச்சமயத்தில் நாம் சிந்திக்க வேண்டும். தாயக்கட்டையை உருட்டி விட்ட பின்னர், சிந்தனை எப்படிச் சொல்கிறதோ அப்படித் தானே நாம் செய்ய வேண்டும்? கீழே விழுந்த குழந்தைகள் அடிபட்ட பகுதியைப் பிடித்துக் கொண்டு கூக்குரலிடுவதில் கவனம் செலுத்துவதைப் போலன்றி, தக்க பரிகாரம், காண விழையும்படி ஆன்மாவைப் பழக்கப்படுத்த வேண்டும். கீழே விழுந்துவிட்ட நம்முடைய பண்பு எது? என்று கண்டு, தூக்கி அதன் நலிவைக் குணப்படுத்தும் கலையால் துன்பக் கண்ணீரைத் துடைக்க வேண்டும்.

கிளாக்கன் : ஆம், அதிர்ஷ்டத்தின் தாக்குதல்களைச் சமாளிக்க அதுவே உண்மையான வழி.

சாக்ரடீஸ் : ஆம், உயர்ந்த இயல்புகள் சிந்தனையின் ஆலோசனையைப் பின்பற்றத் தயாராகியுள்ளன அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : மற்றைக் கொள்கை நமது கஷ்டங்களையும் வருத்தங்களையும் திரும்பத் திரும்ப உணரும்படிச் செய்கின்றன. அவற்றிற்கு முடிவே இல்லை. அவற்றை நாம் பகுத்தறிவற்றவை, பயனற்றவை, கோழைத்தனமானவை என்று அழைக்கலாமல்லவா ?

கிளாக்கன் : உண்மையில் நாம் அப்படித்தான் அழைக்கலாம்.

சாக்ரடீஸ் : ஆனல், பின்னர்ச் சொல்லியது—புரட்சி செய்யும் தன்மையைத்தான் குறிப்பிடுகிறேன்—அதுவே போலிக்கு வேண்டிய பல அடிப்படைப் பொருள்களையும் அளிக்கிறதல்லவா? ஆனல் குறிப்பாக, ஒரு பொது விழாவின் போது ஒழுங்கற்ற ஒரு கூட்டம் ஒரு கலையரங்கில் கூடியிருக்கும் போது அறிவுள்ள அடக்கமான உணர்வு எப்பொழுதும் ஒரே சீராக உள்ளதால் விரைவில் நகல் படுத்த முடியாது. மேலும் நகல்படுத்தியபோது அதன் நகல்கள் விரைவில் பாராட்டுதலைப் பெறுவதில்லை. ஏனெனில் அங்கே காட்டப்படும் உணர்ச்சிக்கு அவர்களனைவரும் புதியவர்கள்தாமே !

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ்: ஆகவே, புகழ்பெற விரும்பும் போலிப்புலவன் இயற்கையாக ஏற்படுவதில்லை. அவனது கலையும் ஆன்மாவின் பகுத்தறிவுக் கொள்கைகளை ஈர்க்கக் கூடியதோ அன்றி மகிழ்விப்பதோ இல்லை. ஆனால் உணர்ச்சி வயப்பட்ட பொருத்தமான உணர்வையே அவன் விரும்புவான். காரணம் அதனைச் சுலபமாக நகல் செய்ய முடியுமல்லவா?

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: ஆகவே இப்பொழுது நாம் அவனை ஓவியக்கலைஞனுக்குப் பக்கத்தில் வைப்போம். அவன் ஓவியனுக்கு இருவிதங்களில் ஒப்பானவன். ஏனெனில் அவனது படைப்புக்கள் மிகக் குறைவான அளவுள்ள உண்மையையே கொண்டுள்ளன. இதில் இருவரும் ஒன்றுகவே உள்ளனர். ஆன்மாவின் மிகக் கீழான பகுதிகளில் தொடர்பு கொள்வதிலும் இருவரும் ஒன்றுகவே உள்ளனர். ஆதலால் நன்கமைந்த நாட்டில் அவனை அனுமதிக்க நாம் மறுப்பது சரியே. ஏனெனில் அவன் உணர்ச்சிகளை எழுப்பி வளர்த்துப் புலப்படுத்துவதுடன் சிந்தனையையும் பாழாக்கி விடுகிறுன். நாட்டில் 'தீயவற்றை அதிகாரத்தில் அனுமதித்தால் அவை நல்லவற்றை எப்படி விரட்டிவிடுமோ அதைப் போன்றே முன்னே கருதியதைப்போல் மனிதனுடைய ஆன்மாவிலும் போலிப் புலவன் தீய அமைப்பை ஏற்படுத்திவிடுகிறுன். அதற்குக் காரணம் பகுத்தறிவற்ற தன்மையில் அவன் ஈடுபடுகிறுன். அது உயர்வு தாழ்வை அறியாது. ஒரே பொருளை ஒரு சமயத்தில் பெரியதாகவும் மற்றொரு சமயத்தில் சிறியதாகவும் அவன் எண்ணுவான். அவன் உருவங்களைச் செய்பவனே, அவன் உண்மையினின்றும் வெகு தூரத்திற்கப்பாற்பட்டவன்.

கிளாக்கன்: நிச்சயமாக.

சாக்ரடீஸ்: நமது குற்றச் சாட்டுக்களின் கடினமான பகுதிக்கு நாம் இன்னும் வரவில்லை. நல்லவர்களையும் துன்புறுத்தும் கவிதையின் சக்தி—அதனுல் பாதிக்கப்படாதவர்கள் மிகவும் சொற்பமே—உண்மையில் மிகவும் பயங்கரமானது அல்லவா?

கிளாக்கன்: ஆம், தாங்கள் சொல்வது உண்மையே.

சாக்ரடீஸ்: கேள், தீர்ப்புக் கூறு. ஹோமரது நூல்களில் காணும் துன்பமிக்க ஒருதலைவன் தனது துன்பங்களை—

வருத்தத்தை—நீண்ட சொற்பொழிவுகளால் விளக்குவது அல்லது அழுவது அல்லது வயிற்றில் அடித்துக் கொள்வது போன்று வருகின்ற பகுதியையோ அல்லது மற்ற எந்தத் துன்பியல் புலவர்களின் பாக்களையோ கேட்கும்போது நம்மில் சிறந்தவர்கள்கூட இரக்கப்படுவதில் மிகிழ்ச்சியடைவதுடன், அவர்களது உணர்ச்சிகளை எழுப்பும் அப்புலவனின் பெருமையைக் குறித்துப் புகழ்ச்சி செய்கின்றனர்.

கிளாக்கன் : ஆம், உண்மை. நான் அதை அறிவேன்.

சாக்ரடீஸ் : ஆனால் நமக்கு ஏதாவது துன்பம் ஏற்படும்போது அதற்கு எதிரிடையான தன்மையால் நாம் கர்வமடைகிறோம் என்பதை நீ பார்த்திருப்பாய். நாம் அமைதியாகவும் பொறுமையாகவும் இருப்பதுபோல் நடிக்கிறோம். இது ஆண் தன்மையாகிவிடுகிறது. ஆனால் கவி பாடும் பொழுது மகிழ்ந்த இயல்பு இப்பொழுது பெண் தன்மையாகக் கருதப் பட்டு விடுகிறது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : நம்மிடம் இருக்கக் கூடாதென வெறுக்கக் கூடியதும், நாம் செய்ய வெட்கப்படக் கூடியதுமான ஒன்றைச் செய்பவனை நாம் புகழ்தலும் பாராட்டுதலும் சரியா ?

கிளாக்கன் : இல்லை, நிச்சயமாகப் பகுத்தறிவுக்கு அது பொருந்தாது.

சாக்ரடீஸ் : இல்லை. ஒரு நோக்கிலிருந்து பார்த்தால் அது மிகவும் சரி என்றே தோன்றுகின்றது.

கிளாக்கன் : எந்தக் கோணத்திலிருந்து ?

சாக்ரடீஸ் : நாம் கஷ்டப்படும்போது நமது துன்பத்திலிருந்து விடுபடும் ஆத்திரத்தில் அழுவதையோ முறையிடுவதையோ மிகவும் விரும்புகிறோம். நமது கஷ்டங்களில் நம்மால் கட்டுப்படுத்தப்படும் இதே உணர்ச்சி, கவிஞர்களால் திருப்தி செய்யப்படுகிறது, மகிழ்ச்சியுடையதாக ஆக்கப்படுகிறது. நம்மில் ஒவ்வொருவரிடமும் உள்ள நல்ல தன்மை போதுமான அளவு சிந்தனையாலோ, வழக்கத்தினாலோ பயிற்சியளிக்கப்படாமல்—இரக்கத்தன்மையை வெளிப்படும்படிச் செய்துவிடுகிறது. காரணம் அத்துன்பம் பிறருடையதாயிருப்பதுதான். மேலும் அதைக் காண்பவன், தன்னை ஒரு நல்ல மனிதன் என்று கூறிக்கொண்டு, வருபவனது

குறைகளை மிகுதிப்படுத்தி அவனைப் புகழ்வதையோ அன்றி அவனுக்கு இரங்குவதையோ தனக்கு ஒரு அவமானம் இல்லை என்றும் கற்பனை செய்கிருன். இதில் கிடைக்கும் இன்பத்தை ஒரு ஆதாயமாக அவன் கருதுகிருன். அகம் பாவத்திஞல் அந்த சுகத்தையும் கவிதையையும் அவன் ஏன் இழக்க வேண்டும்? பிறருடைய தீமையிலிருந்து சிறிது தங்களுக்கும் வருகிறது என்பதை உணர்பவர்கள் அரிதே என்று தான் நினைக்க வேண்டியுள்ளது. ஆகவே பிறரது கஷ்டங்களைக் கண்டவுடன் பலம் பெற்று எழும் துன்ப உணர்வு நமது இன்னல்களின்போது சிரமத்துடன் அடக்கப்படுகிறது.

கிளாக்கன் : எவ்வளவு உண்மை!

சாக்ரடீஸ் : இதுவே கேலிசெய்தலுக்கும் பொருந்தும் அல்லவா? சில கேலிச் சொற்களை நீ சொல்வதற்குக் கூட வெட்கப் படுவாய். இருந்தும் விகட அரங்கிலே அல்லது தனிமையில் அவற்றைக் கேட்கும்போது அவற்ருல் மிகவும் மகிழ்ச்சியடைகிருய். அப்பொழுது அவைகளின் பொறுக்க வொண்ணு இழிவைக் கண்டு வெறுப்படைவதில்லை. மீண்டும் இரக்கமே முன் வருகிறது. மனித இயல்பிலே உள்ள ஒரு கொள்கை சிரிப்பு உண்டாக்கும் தன்மையைப் பேணுவது. கோமாளி என்று எண்ணப்படுவதற்குப் பயந்து முன்பு நீ அடக்கிய இவ்வியல்பு இப்போது வெளிப்படுத்தப் படுகிறது. அரங்கிலே உன்னுள்ளத்தே எழுப்பப்படும் இச்சிரிப்புணர்ச்சி உனது இல்லத்திலே நீ யறியாமலேயே உன்னை ஒரு நகைச்சுவைக்கவியாக நடந்து கொள்ளச் செய்கிறது.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இதனையே காமம், சினம், மற்ற எல்லா ஆசைகள், இன்ப துன்ப உணர்வுகள் ஆகியவற்றிற்கும் சொல்லலாம். அவை ஒவ்வொரு செயலிலும் பிரிக்க முடியாதபடி காணப்படுகின்றன. இவ்வாசைகளை அழிப்பதற்குப் பதிலாக இவைகட்கு வேண்டிய உணவையும், நீரையும் கவிதையே அளிக்கின்றது. மனித இனம் இன்பத்திலும் நற்பண்புகளிலும் மேம்பட வேண்டுமாயின் இவ்வாசைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும். இருப்பினும் கவிதையால் இவை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்படுகின்றன.

கிளாக்கன் : இதை நான் மறுக்கவில்லை.

சாக்ரடீஸ் : ஆகவே, கிளாக்கன்! எப்பொழுதாவது உன்னிடம், ஹோமரின் புகழாளர்கள் வந்து ஹோமர்தான் கிரேக்க நாட்டில் கல்வியளித்தவர், மனித இனத்தின் கல்விக்கும் ஒழுக்கத்திற்கும், அவரே காரணம். மீண்டும் மீண்டும் அவரை நீ நன்கு அறியவேண்டும், அவரது கொள்கைக்கேற்ப உனது வாழ்நாள் முழுதையும் ஒழுங்குபடுத்திக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அவர்களை நாம் நேசிக்கலாம், கவுரவிக்கலாம். அவர்கள் அறிவு செல்லுகின்ற அந்த அளவில் அவர்கள் மிகச் சிறந்தவர்களே. நாமும் ஹோமர் ஒரு மிகச் சிறந்த புலவர் என்பதையும் துன்பியல் கவிஞர்களில் முதன்மையானவர் என்பதையும் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். ஆனால் கடவுள் புகழையும், புகழ்படைத்த மாந்தரையும் பாடும் பாடல்களையே நம் நாட்டிற்குள் அனுமதிக்க வேண்டும் என்ற நமது முடிவில் நாம் உறுதியாக இருக்கவேண்டும். ஏனெனில் இதற்கப்பால் நாம் சென்று அந்தத் தேன் கவிகளை இசைக் காவியத்திலோ அல்லது இதிகாசங்களிலோ வர அனுமதித்துவிட்டால் பொதுவாகச் சிறந்தது என்று மதிக்கப்பெறும் ஒழுங்கும் மனித சிந்தனையும் அற்று அதற்கு மாறாக இன்பமும் துன்பமுமே நம் நாட்டின் ஆட்சியாளர்களாகிவிடும்.

கிளாக்கன் : அது மிகவும் உண்மையே.

சாக்ரடீஸ் : நாம் இப்பொழுது கவிதையெனும் பொருளை ஆராய்ந்ததால் நமது இந்தத் தற்காப்பு முன்னைய நமது தீர்ப்பில் நாம் சொன்ன குணங்களையுடைய கலையை நமது நாட்டினின்றும் விரட்டுவதிலுள்ள நியாயத்தைக் காட்ட வேண்டும். ஏனெனில் சிந்தனையே நம்மைத் தடுத்துவிட்டது. ஆனால், அக்கலையைக் கேவலப்படுத்துவதாகவோ அல்லது மரியாதைக் குறைவாக நடத்துவதாகவோ நாம் எண்ணுகிறோம் என்பதைத் தவிர்க்க வேண்டித் தத்துவ ஞானத்திற்கும் கவிதைக்கும் இடையேயுள்ள பழைய பூசலை நாம் எடுத்துச் சொல்லுவோம். அதற்குப் பல நிரூபணங்கள் உள்ளன. "குலைக்கும் வேட்டைநாய் தன்னை வளர்ப்பவனையே கண்டு குலைத்தது", அல்லது "வீரமுள்ள ஒருவன் முட்டாள் தனமான பேச்சில் வீணுதல்," அல்லது

"முனிவர்களின் கூட்டம் ஸீயூஸ் கடவுளைச் சுற்றி வருவது," அல்லது "நுண்ணிய சிந்தனையாளர்கள் எல்லாம் பிச்சைக்காரர்களே" என்பன போன்ற கூற்றுக்கள் அவற்றில் சில. இன்னும் எண்ணிலடங்காத பல சின்னங்கள் அவற்றினிடையேயுள்ள பழமையான பகையை உணர்த்தும். இத்துடனில்லாது, கவிதையென்னும் நமது அருமைச் சகோதரிக்கும் இன்னும் அவள் உடன்பிறப்பான போலி செய்யும் கலைகளுக்கும் நாம் உறுதியளிக்க வேண்டுவது இதுதான். நன்கு நிர்வகிக்கப்படும் நாட்டில், தான் இருப்பதற்கு உரிய தகுதியை அவள் நிரூபிப்பாளேயாகில் நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம். அவளுடைய வசீகரத்தை நாம் நன்கறிவோம். ஆனால் அதற்காக வேண்டி உண்மைக்கு மோசம் செய்ய மாட்டோம்.

கிளாக்கன்! நான் நிச்சயமாகச் சொல்கிறேன். சிறப்பான அவள் ஹோமருடைய பாடல்களில் தோன்றும்போது என்னைப் போன்றே நீயும் வசீகரிக்கப்படுகிறாய்.

கிளாக்கன் : ஆம், நான் மிகவும் கவுரப்பட்டுவிட்டேன்.

சாக்ரடீஸ் : அப்படியானால், அவள் மீண்டும் திரும்புவதற்கு அனுமதிக்கப்படலாம் என்று சொல்லுவோமா? ஆனால் ஒரு நிபந்தனை—அதாவது இசைப்பாடல்களிலோ மற்றெந்த வகையிலோ—அவள் தன் கட்சியை நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : இன்னும் அவளை விரும்புவோர்க்கு—நேசிப்பவர்க்கு—அவர்கள் கவிகளில்லாவிடினும் அவள் கட்சியில் உரை நடையில் பேச அனுமதியளிப்போம். அவர்கள், அவள் இனிமையானவள் மட்டுமல்ல, ஆனால் நாட்டிற்கும் மனித வாழ்வுக்கும் பயன்படுபவள் என்று காட்டட்டும். அதை நாம் அன்புடன் கேட்போம். இது நிரூபிக்கப்பட்டால் நாம் நிச்சயமாகப் பயனடைந்தவர்களாவோம். அதாவது பாடல்களில் பயனும் மகிழ்ச்சியும் ஒருங்கே காணப்பட்டால் நாம் நலம் பெறுவது திண்ணம்.

கிளாக்கன் : நிச்சயமாக நாம் பயனடைந்தவர்களாவோம்.

சாக்ரடீஸ் : எனது அருமை நண்பா! அவளது கட்சி தோற்றுவிட்டால், சில பொருள்களால் மயக்கமடைந்தவர்

கள் தங்கள் விருப்பம் தங்களியல்புக்கு எதிராக இருப்பதை உணர்ந்து தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொள்வது போல, அவளது காதலர்கள் அவளை விட்டு விடுவதைப் போல நாமும் மிகவும் சிரமப்பட்டாயினும் அவளை விட்டு நாம் விடுவோம். கவிதைகளின் மீதுள்ள ஆசையால் நாமும் தூண்டப்பட்டுள்ளோம். உயர்ந்த நாட்டின் கல்விமுறை அதை நம்மிடையே உண்டாக்கியுள்ளது. ஆகவே தனது மிக உயர்ந்த உண்மை நிலையில் அவள் தோன்றுவதை நாம் விரும்புவோம். ஆனால் அவள் தனது வாதத்தைத் திருப்தியளிக்கும் வகையில் செய்யாத வரையில் நமது இந்த விவாதமே நமக்குக் கவர்ச்சி தரும். அவள் இசையைக் கேட்கையில் மீண்டும் மீண்டும் இதையே சொல்வோம். சிறுபிள்ளைத்தனமாக அவள்மீது காதல்கொண்டு—பல மக்களையும் கொள்ளையிடும் அவள்பால்—நாம் வீணே விழுந்துவிடமாட்டோம். நாம் சொன்னது போன்று கவிதை நிச்சயமாக உண்மையை அடைவதில்லை என்று அறிவோம். அவளது இசையைக் கேட்பவன் தன்னுள்ளே உள்ள நகரத்தின் பாதுகாப்புக்காக அவளது மதியழிக்கும் கவர்ச்சியை எதிர்த்து நின்று நமது சொற்களையே தனது சட்டமாக ஏற்கவேண்டும்.

கிளாக்கன் : ஆம், நிச்சயமாகத் தாங்கள் கூறுவதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

சாக்ரடீஸ் : ஆம், எனதருமைக் கிளாக்கன்! ஒருவன் நல்லவனாக வேண்டுமா, கெட்டவனாக இருக்கலாமா என்பதை நிர்ணயிக்கும் பிரச்சினை மிக முக்கியமானது. மேலாகத் தோன்றுவதைக் காட்டிலும் அது உண்மையில் மிகப் பெரியது. கவுரவத்தாலோ பணத்தாலோ அன்றிப் பதவியாலோ ஏன் கவியின்பத்தாலோ தூண்டப்பட்ட ஒருவன் நீதியையும் அறத்தையும் மறந்துவிட்டால் அதனால் அவன் நன்மை ஏதும் அடைவானா?

கிளாக்கன் : இவ்விவாதத்தினால் நான் தெளிவுற்றேன், யாவருமே தெளிவு பெற்றிருக்க வேண்டும்.

சாக்ரடீஸ் : அப்படியிருந்தும், அறமானது அடையும் மிக உயர்ந்த பரிசுகளையும் வெகுமதிகளையும் பற்றி எங்குமே குறிக்கப்பெறவில்லையே?

கிளாக்கன் : என்ன ? அதைவிட உயர்ந்ததொன்றுண்டா ? அப்படியிருப்பின் அவையனைத்தும் நினைத்தற்கரிய பெருமையுடையதாயிருக்குமே ?

சாக்ரடீஸ் : ஏன் ? குறுகிய காலத்தில் சிறந்து விளங்கியதாக ஏதேனும் கூறப்பட்டுள்ளதா ? எழுபது ஆண்டுகள் அடங்கிய முழுக் காலமும் எல்லையற்ற காலத்துடன் ஒப்பிடும் போது மிகச் சிறியதுதானே ?

கிளாக்கன் : அதை ஒரு காலம் என்று எப்படிச் சொல்வது ? ஒன்றுமில்லாதது என்றே கூறி விடலாம்.

சாக்ரடீஸ் : அழிவற்ற உயிர் இச்சிறிய இடத்தை மிகப் பெரிய முழு இடத்தைவிடப் பெரிதாக நினைக்குமா ?

கிளாக்கன் : நினைக்காது. இதை ஏன் கேட்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : மனிதனது ஆன்மா அழியாதது—அழிக்க முடியாதது என்பதை மறந்து விட்டாயோ ? இங்கு கிளாக்கன் சாக்ரடீசை ஆச்சரியத்துடன் பார்த்துவிட்டுச் சொன்னான்- "இல்லை, கடவுள்மீது ஆணையாக இதைக் கடைசிவரை ஊர்ஜிதம் செய்யத் தயாராக இருக்கிறீர்களா ?" சாக்ரடீஸும் ஆம், நான் செய்தாகவேண்டும். நீயும்கூடத்தான். அதை நிரூபிப்பதில் எவ்வித இன்னலும் இல்லையே ?

கிளாக்கன் : நான் மிகவும் கஷ்டமானதென்று நினைக்கிறேன். ஆனால் அதை மிக எளிதாகக் கூறும் உங்கள் விவாதத்தைக் கேட்க விரும்புகிறேன்.

சாக்ரடீஸ் : சரி, கவனி.

கிளாக்கன் : நான் தயார்.

சாக்ரடீஸ் : ஒன்றை நல்லது என்றும் மற்றதைத் தீயது என்றும் சொல்கிறாய்.

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : பிறரைக் கெடுப்பதும் அழிப்பதும் தீயவை. காப்பதும் முன்னேறச் செய்வதும் நல்லவை என்று நான் நினைப்பது சரிதானே ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : ஒவ்வொரு பொருளிலும் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு என்பதை ஒத்துக் கொள்கிறாயா ? கண்நோய் கண்ணுக்குத் தீமை செய்வதுடன், உடலுக்கும்

ஒரு வியாதியாவதுபோல, தானியத்தில் காளான் பூப்பதைப் போல, மரங்கள் அழுகுவதைப்போல, செம்பும் இரும்பும் துருப்பிடிப்பதுபோல ஏறக்குறைய எல்லாப் பொருள் களிலும் ஒரு தீமையும் நோயும் காணப்படுகின்றன அல்லவா ?

கிளாக்கன் : ஆம், உண்மை.

சாக்ரடீஸ் : இத்தீமைகளால் பாதிக்கப்பட்ட பொருள், கெட் டுப் போய்க் கடைசியில் முற்றிலும் மறைந்து அழிந்துவிடு மல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : ஒவ்வொன்றினுள்ளேயும் காணப்படும் குறைகளும் தீமைகளுமே அவ்வவற்றின் அழிவையும் தருகின்றன. அப் படி அவை அழிக்காவிடில் வேறு எதுவுமே அவற்றை அழிக்க முடியாது. நன்மை அவற்றை நிச்சயமாக அழிக் காது. அல்லது நன்மை தீமை ஆகிய இரண்டுமற்ற ஒன் றும் அவற்றை அழிக்கமுடியாது.

கிளாக்கன் : ஆம் நிச்சயமாக முடியாது.

சாக்ரடீஸ் : அழியாத மறையாத தன்மை வாய்ந்த தீமையின் இயல்பு ஒன்றை நாம் கண்டால் அத்தகைய இயல்புக்கு அழிவே இல்லை என்று நாம் நிச்சயமாகக் கொள்ளலாம் அல்லவா ?

கிளாக்கன் : நன்ருகக் கொள்ளலாம்.

சாக்ரடீஸ் : ஆன்மாவைப் பாழாக்கும் தீமை ஒன்றுகூட இல் லையா ?

கிளாக்கன் : நாம் இதுகாறும் ஆராய்ந்த அத்துணைத் தீமை யும் அத்தன்மை வாய்ந்தவையே. நேர்மையற்ற தன்மை, மிதமின்மை, கோழைத்தனம், அறியாமை என்பன.

சாக்ரடீஸ் : ஆனல் இவற்றில் ஏதாவது ஒன்று ஆன்மாவைக் குலைத்து அழித்து விடுகிறதா ? இங்கே தவருன எண் ணத்தை நாம் கொள்ளலாகாது—அதாவது நேர்மையற்ற மூடன் ஒருவன் கண்டுபிடிக்கப்படும்போது அவனது நேர்மையின்மையினலேயே அழிந்துவிடுகிருன். — அது ஆன்மாவின் ஒரு தீமையே ஆகும். உடம்பை உதாரணமாக எடுத்துக் கொள். உடம்புக்குத் தீமையாவது நோய். அது உடலைப்பாழாக்கி, குறைத்து நாசம் செய்துவிடுகிறது.

நாம் இதுகாறும் பேசிய அனைத்தும் அவ்வவற்றின் இழிவு களாலேயே நாசம் அடைந்து விடுகின்றன. இவ்விழிவு என்பது அப்பொருள்களுடனே ஒட்டிக் கொண்டு ஒன்றுகி அவற்றின் அழிவுக்கு வழி செய்கிறது. உண்மைதானே ?

கிளாக்கன் : ஆம்.

சாக்ரடீஸ் : இதைப்போலவே ஆன்மாவையும் எண்ணிப் பார். ஆன்மாவில் காணப்படும் அநீதியும் மற்றைத் தீமைகளும் ஆன்மாவைப் பாழாக்கி விழுங்கி விடுகின்றனவா ? அவை ஆன்மாவுடன் தொடர்புகொண்டு, ஆன்மாவில் நுழைந்து, கடைசியில் அதனை இறக்கும்படிச் செய்து ஆன்மாவை உடலினின்றும் பிரித்துவிடக் கூடுமா ?

கிளாக்கன் : நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : இருந்தபோதிலும், இவ்வாறு, ஒரு பொருளினுள்ளேயே காணப்படும் இழிவுத்தன்மையால் அது அழிக்கப் படாதெனினும் வெளியிலிருந்து வரும் தீமையினுடைய தொடர்பால் எதுவும் அழிந்துவிடும், என எண்ணுவது நியாயமாகாது.

கிளாக்கன் ஆம்.

சாக்ரடீஸ் : கிளாக்கன் ! இன்னும் பார். உணவின் தீமைகூட உருசியற்றதாயிருப்பினும் அழுகிப்போனதா யிருப்பினும் அல்லது வேறு ஏதாவது தீமை கூடியதாயிருப்பினும் உண வளவிலிருக்கும்போது அது உடம்பை அழித்துவிடாது. அந்த உணவின் தீமை உடலில் இழிவைப் பரப்பியபோது உடல் தன்னுள்ளே ஏற்பட்ட தீங்கினுலேயே உணவினுல் உண்டான நோயினுலேயே அழிந்துவிட்டது என்றே நாம் சொல்லவேண்டும். உடல் என்ற ஒரு பொருள் உணவு என்ற மற்ருெரு பொருளின் கேட்டினுலேயே அழிக்கப்பட லாம். உணவு என்பது உடலுக்குண்டாகும் கேட்டைத் தன் னுள் கொண்டதல்ல என்பது உண்மை. இதை நாம் முழு தும் மறுக்க முடியுமா ?

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இந்த அடிப்படையிலேயே உடலின் ஏதாவது ஒரு தீமை ஆன்மாவுக்குத் தீமையை உண்டாக்காத வரையில் ஆன்மா, வெளியினின்றும் வரும் தொடர்பற்ற ஏதாவது ஒரு தீமையினுல் அழிந்துவிடும் என்று நாம் எண்ணக்கூடாது.

கிளாக்கன் : ஆம், அதில் நியாயம் உள்ளது.

சாக்ரடீஸ் : ஆகையால், ஒன்று இந்தமுடிவை நாம் மறப்போம். அல்லது இது மறுக்கப்படாமல் இருக்குமேயானல் நாம் சொல்ல வேண்டுவது இதுவே. சுரமோ அல்லது மற்ற நோய்களோ அல்லது தொண்டையில் வைத்த கத்தியோ அல்லது உடலைச் சுக்கு நூருக வெட்டுவதோ ஆன்மாவை அழித்துவிட முடியாது ; ஆன்மாவே உடலுக்கு நேர்ந்த இக்கதியினல் புனிதமற்றது நேர்மையற்றுவிட்டது என்று நிரூபித்துக் கொண்டால் ஒழிய ! ஆனல் அந்த ஆன்மா அல்லது மற்றை எதுவும் உள்ளேயுள்ள தீமையினல் அழியாவிடில் வெளியிலிருந்து வரும் தீமையால் அழியக்கூடும் என்பதை ஒருவனும் ஒத்துக் கொள்ள முடியாது.

கிளாக்கன் : ஆம், நிச்சயமாக. சாவினல் ஒருவனது ஆன்மா நேர்மையற்றுவிடுகிறது என்பதை எவனும் நிரூபிக்க முடியாது.

சாக்ரடீஸ் : ஆனல் ஆன்மாவின் அழியாத தன்மையை ஒத்துக் கொள்ளாத ஒருவன் இதைத் துணிந்து மறுத்தால் - இறப்பவர் நிச்சயமாகத் தீமையும் நேர்மையற்றவருமாகலாம் என்று பேசினல்—அவன் சொல்வதும் சரியாயின், அநீதி ஒரு வியாதியைப்போல நேர்மையற்றவனுக்கு யமன் ஆகும் என்று நான் நினைக்கிறேன். இந்த வியாதியை உடையவன் தீமையின் இயல்பான உட்சக்தியால் அழிகிருன். அது அவனை விரைவாகவோ அன்றி மெதுவாகவோ கொன்றுவிடுகிறது. இப்பொழுது உள்ளதுபோன்றில்லாமல் முற்றிலும் வேறு வழியில், அதாவது அயோக்கியர்கள் தமது செயல்களுக்கு அபராதமாகப் பிறர் கையால் அழிவதைப் போலன்றி வேறு வகையில் இவ்வழிவு ஏற்படுகின்றது.

கிளாக்கன் : இல்லை, அநீதியைப் பொறுத்த மட்டில் அது நேர்மையற்றவனுக்கு யமனுனல் அவனுக்குக் கேடு செய்வதாக ஆகாது. அல்லவா ? ஏனெனில் அப்பொழுது தீமையினின்றும் விடுதலை அடைவானே ! ஆனல் உண்மை அதற்கு மாருகவே உள்ளதென்று நான் நம்புகிறேன். அநீதி, அதற்குச் சக்தியிருப்பின் மற்றவர்களைக் கொன்றுவிடும். கொல்பவனை உயிருடன் இருக்கச் செய்யும் ; ஏன் நன்ருக விழிப்புடன் இருக்கச் செய்யும். அநீதியின் உறைவிடம் இறப்பினின்று வெகு தொலைவிலேயே உள்ளது.

சாக்ரடீஸ் : உண்மை, ஆன்மாவின் இயல்பாகக் காணப்படும் இயற்கைக் குற்றம் அல்லது தீமை ஆன்மாவைக் கொல்லவோ அழிக்கவோ முடியாதெனில் மற்ற ஏதாவது ஒன்றை அழிப்பதற்காக ஏற்பட்ட எதுவும், அது எதை அழிப்பதற்காக அமைக்கப்பெற்றதோ அதைத்தவிர ஆன்மாவையோ அல்லது மற்ற ஒன்றையோ அழித்துவிட முடியாது.

கிளாக்கன் : ஆம், அதுபோன்று இருக்க முடியாது.

சாக்ரடீஸ் : உள்ளேயிருப்பதாயினும் சரி, வெளியினின்று வந்ததாயினும் சரி, தீமையினாலும் அழிக்க முடியாத ஆன்மா எப்பொழுதும் நிலையானதொன்ருகும். அது எப்பொழுதும் இருக்க வேண்டுமென்பதாலேயே அது அழியாததொன்ருயிருக்க வேண்டுமல்லவா?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அதுதான் முடிவு. உண்மையான முடிவாக இருந்தால் ஆன்மாக்கள் எப்பொழுதும் ஒன்ருக இருக்கவேண்டும். அவையொன்றும் அழியாவிடில் அவை எண்ணிக்கையில் குறையா. அவை அதிகரிக்கவும் செய்யா. ஏனெனில் அழியாத் தன்மையின் வளர்ச்சி அழியும் தன்மையினின்றும் வர வேண்டும். ஆகவே எல்லாப் பொருள்களும் அழியாத் தன்மையில் முடிவுபெறும்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆனல் நாம் இதை நம்பிவிட முடியாது. சிந்தனை நம்மை அனுமதிக்காது. ஆன்மாவின் உண்மையான இயல்பை வேற்றுமைகளும் பலவித மாறுபாடுகளும் ஒப்புமையின்மையும் கொண்டதாக நாம் எண்ண முடியாதது போன்று இதையும் நாம் நம்ப முடியாது.

கிளாக்கன் : நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

சாக்ரடீஸ் : இப்பொழுது நிரூபித்தபடி ஆன்மா அழியாதது. அதுவே மிகவும் அழகான இணைப்பு. அதன் பகுதிகள் பற்பல என நினைக்க முடியாது.

கிளாக்கன் : நிச்சயமாக முடியாது.

சாக்ரடீஸ் : இதற்கு முன்னே சொன்ன விவாதத்தால் அதனது அழியாத தன்மை விளக்கப்பட்டது. இன்னும் பல நிரூபணங்கள் உள்ளன. அதனது உண்மையான இயல்பைக் காண—நாம் இப்பொழுது அதனைக் காண்பது உடலுடனும்

துன்பங்களுடனும் இணைத்து அதனைச் சிதற அடித்துக் காணமல், சிந்தனைக் கண்ணுடன் அதில் ஈடுபட வேண்டும். அதன் உண்மையான தூய்மையில் ஈடுபடும்போது அதனது அழகு வெளிப்படும். நீதி, அநீதி, நாம் விவரித்துக் கூறிய மற்றும் பல செய்திகள் அப்பழுக்கில்லாமல் அங்கே தோற்றுவிக்கப்பெறும். இது வரையில் அதைப் பற்றிய—அதன் இப்பொழுது உள்ள நிலையைப் பற்றிய—உண்மையைப் பேசினேம். ஆனல் நாம் ஒன்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆத்மாவை ஒரு நிலையில் தான் கண்டோம். இவ்வுருவத்தைக் கடற்கடவுள் கிளாகஸ் ஸுடன் ஒப்பிடலாம். அக்கடவுளின் உண்மையான வடிவைக் காண்பது அரிது. ஏனெனில் அவரது இயற்கை அங்கங்கள் அலைகளால் பலவிதமாக உடைந்து சிதறிப் பாழாக்கப்பட்டுள்ளன. மேலும் அவற்றின்மீது கனமாகக் கடல்பாசிகளும், கிளிஞ்சல்களும் கற்களும் படிந்துள்ளன. ஆகவேஅவர் ஒரு அரக்கனைப் போன்று தோன்றுகின்றரே யன்றி இயல்பான உருவில் அவரைக் காண முடிவதில்லை. நமக்குப் புலப்படும் நமது ஆன்மாவும் இப்படியே பல்லாயிரக் கணக்கான நோய்களால் உருவழிக்கப்பட்டுள்ளது. ஆனல் நாம் பார்க்க வேண்டியது அதுவல்ல கிளாக்கன்!.

கிளாக்கன்: பிறகு எதைக் காண வேண்டும்?

சாக்ரடீஸ்: அறிவின்மீது அவ்வணங்கு கொண்ட காதலில் காண வேண்டும். அவள் யாரைப் போன்றுள்ளனள் என்பதைக் காணவேண்டும். அழியாமை, முடிவின்மை, தெய்வீகத்தன்மை ஆகியவற்றுடன் உள்ள தனது உறவின் காரணமாக எந்தச் சமுதாயத்தை, எந்த உரையாடலை அவள் நாடுகிருள் எனக் காண வேண்டும். மேலும், உயர்ந்த இக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் பொழுது அவள் எங்ஙனம் முற்றிலும் மாறுபடுகிருள் என்றும், எப்படி ஒரு தெய்வீக உணர்வுடன் இப்பொழுது அவளுள்ள கடலினின்றும் வெளித் தோன்றுகிருள் என்றும் கற்கள், கிளிஞ்சல் இன்னும் மற்றும் அவளைச் சுற்றியுள்ள காடாய்ப் பரவிய உலகப் பொருள்களிலிருந்தும் பாறைகளிலிருந்தும் விடுபட்டு இவ்வாழ்வின் நல்ல பொருள்கள் என்று அழைக்கப்படும் பொருள்களால் நன்கு சூழப்பட்டு எப்படி நிற்கிருள் என்றும் காண வேண்டும். அப்பொழுதுதான் அவளது

இயல்பான தன்மையைக் காணலாம். அவள் ஒரு வடிவுடன் உள்ளனளா அல்லது பலவித வடிவுடையவளா அன்றி அவளது தன்மை யாது என்பதைக் காணலாம். நிகழ்கால வாழ்வில் அவளது உணர்வுகளையும் அவள் ஏற்கும் வடிவங்களையும் பற்றிப்போதுமான அளவு நாம் சொல்லிவிட்டோம் என நினைக்கிறேன்.

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : இவ்வாறு இவ்விவாதத்தின் கட்டுப்பாடுகளை நாம் பூர்த்தி செய்து விட்டோம். நாம் இன்னும் நீதியின் பெருமையையும் வெகுமதிகளையும் கூறவில்லை. அது நீங்கள் சொல்லியது போல ஹோமரிடத்தும் ஹிசியோதிடத்தும் காணப்பட வேண்டும். ஆனால் இயல்பாகவே நீதியானது ஆன்மாவுக்கு மிகச் சிறப்பாகவே உள்ளதாக நிரூபித்து விட்டோம். எது நேர்மையோ அதை ஒரு மனிதன் செய்யட்டும் [1] ஜிகஸ்ஸின் மோதிரத்தை வைத்திருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி அல்லது அந்த ஜிகஸ்ஸின் மோதிரத்துடன் [2] ஹேடிஸின் தலை அணியைக் கொண்டிருப்பினும் சரி.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : ஆகவே கிளாக்கன்! வாழ்விலும் இறப்புக்குப் பிறகும் ஆன்மாவுக்குக் கடவுளிடத்திருந்தும் மனிதரிடத்திருந்தும் நீதியும் மற்ற நற்பேறுகளும் அளிக்கும் வெகுமதிகள் எவ்வளவு சிறப்பானவை! அவை எவ்வளவு என்பதைத் தொகுப்பதில் கேடேதும் இராது.

கிளாக்கன் : நிச்சயமாக இல்லை.

சாக்ரடீஸ் : இந்த விவாதத்தில் நீ இரவலாகப் பெற்றதைத் திரும்ப அளிப்பாயா ?

கிளாக்கன் : நான் எதைப் பெற்றேன் ?

சாக்ரடீஸ் : அதாவது நேர்மையானவன் நேர்மையற்றவனைப் போன்றும், நேர்மையற்றவன் நேர்மையாளனைப் போன்றும் தோன்ற வேண்டும் என்ற எண்ணம்தான். ஏனெனில் உனது கொள்கைப்படி உண்மையான நிலை கடவுளருடையவும் மனிதருடையவும் கண்களினின்றும் தப்ப முடியாது

1. Gyges, 2. Hades.

எனினும், மேற்சொன்ன தோற்றத்தை விவாதத்திற்காக வேண்டி ஏற்படுத்திக்கொள்ள வேண்டும், அப்பொழுது தான் முற்றிலும் நேர்மையானதை முற்றிலும் நேர்மை யின்மையுடன் எடைபோட முடியுமென்று நாம் ஒப்புக் கொண்டது உனக்கு நினைவிருக்கிறதா ?

கிளாக்கன் : நான் மறப்பேனாகில் பெரிய குற்றம் இழைத்தவ னாவேனன்றோ !

சாக்ரடீஸ் : இனி, காரணம் தெரிந்துவிட்டதால், நீதிக்காக வேண்டிக் கடவுளர்களாலும் மனிதர்களாலும் அவனைப் பற்றிக் கொள்ளப்படுகிற மதிப்பையும் மேலும் நம்மிடத்தி னின்றும் நீதிக்குச் சேரவேண்டியவைகளாக நம்மால் உறுதி செய்யப்பட்டவற்றையும் அதற்கு நாம் அளித்துவிட வேண்டும் என்று நான் வலியுறுத்துவேன். நீதியென்பது உண்மையை நிலைநிறுத்த வேண்டுமென்பதைக் கண்டு விட்டதால், அதனைப் பெற விழைபவர்களை அது ஏமாற்றாது என்பது தெரிந்துவிட்டதால் அதனினின்று எடுத்ததைத் திருப்பியளித்துவிட வேண்டும். அப்பொழுதுதான் தனது இயல்பான தோற்றத்தை நீதியானது பெற்று வெற்றிபெற முடியும். தனது நலங்களை அது மக்களுக்குக் கொடுக்க இயலும்.

கிளாக்கன் : நீங்கள் கேட்பது நியாயமானது.

சாக்ரடீஸ் : முதன் முதலாகக் கொடுக்கவேண்டிய முதற் பொருள் இதுதான். கடவுளர்க்கு உண்மையாகவே நீதியை யும் அநீதியையும் பற்றிய தன்மை நன்கு தெரியும்.

கிளாக்கன் : சரி.

சாக்ரடீஸ் : அவர்களுக்கு அவை தெரிந்திருந்தால் ஒன்று அவர்களுக்கு நண்பனாகவும் மற்றொன்று எதிரியாகவும் நாம் முன்னர் ஒத்துக்கொண்டதுபோல இருக்க வேண்டு மல்லவா ?

கிளாக்கன் : உண்மை.

சாக்ரடீஸ் : கடவுளரின் நண்பன் முன்னர்ச் செய்த பிழை களின் விளைவாக ஏற்படும் தீமைகளைத் தவிர மற்றைப்படிச் சிறப்பான எல்லாப் பொருள்களையும் அவர்களிடமிருந்து பெறுவான் என்று நம்பலாம் அல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அப்படியானால் நேர்மையான மனிதனைப் பற்றிய நமது எண்ணம் இதுதான். அவன் ஏழ்மையிலிருப்பினும் சரி அல்லது நோயுற்றிருப்பினும் சரி அல்லது வேறு எந்த துரதிருஷ்டத்திலிருப்பினும் சரி அனைத்தும் கடைசியில் ஒன்றாகச் சேர்ந்து வேலை செய்து அவனுக்கு வாழ்விலும் சாவிலும் நன்மை செய்யும். ஏனெனில், எவனுடைய ஆசை நீதியாளனாக வருதற்குத் துணை செய்கிறதோ, கடவுளைப் போன்றிருக்க விழைகிறதோ, அற எழுச்சியினால் மனிதனே தெய்வத்தன்மையின் ஒப்பான நிலையை அடைய முடியும் என நினைக்கிறதோ அவனைக் காப்பதில் கடவுளர்கள் கருத்துடையவர்களன்றோ!

கிளாக்கன் : ஆம், அவன் கடவுள் தன்மையுடனிருந்தால் கடவுள் அவனைப் புறக்கணிக்க மாட்டார்.

சாக்ரடீஸ் : நேர்மையற்றவனுக்கு இதற்கு எதிரான விளைவு நிகழுமல்லவா ?

கிளாக்கன் : நிச்சயமாக.

சாக்ரடீஸ் : அப்படியானால் சிறந்த வெற்றியை நேர்மையானவனுக்குத்தானே கடவுள் கொடுப்பார்.

கிளாக்கன் : அதுதான் எனது தீர்மானம்.

சாக்ரடீஸ் : அவர்கள் மனிதரிடத்திலிருந்து எதைப் பெறுகின்றனர் ? பொருள்களை உள்ளது போன்றே காண வேண்டும். புத்திசாலியான நேர்மையற்றவர்கள் பந்தய ஓட்டக்காரர்களின் ஓர்வகையினராக இருப்பதை நீ அறியலாம். அவர்கள் தொடக்கத்திலிருந்து குறிப்பிட்ட இடம்வரை நன்றாக ஓடுவர். ஆனால் அந்த இடத்திலிருந்து தொடங்கிய இடத்திற்கு வர வேண்டியபடி வருவதில்லை. அவர்கள் மிக வேகமாகக் கிளம்புவர். முடிவிலோ முட்டாள்தனத்துடனேயே காணப்படுவர். திணறிக்கொண்டு தங்கள் காதுகள் தோள்களில் தொங்க வருவர். வெற்றி அவர்களுடையதன்று. ஆனால் தேர்ந்த ஓட்டக்காரன் முடிவிடம் அடைந்து பரிசைப் பெற்று வெற்றி வாகை சூடுகிறான். இது நேர்மையின் வழி. எந்தச் செயலிலும் தனது வாழ்நாள் முழுதும் இறுதிவரை திடமாக இருப்பவன் நல்ல சிறந்த புகழைப் பெறுவதுடன் மற்ற மனிதர் நிறுவும் பரிசையும் தட்டிக் கொண்டு சென்றுவிடுகிறான்.

கிளாக்கன் : மிகவும் உண்மை.

சாக்ரடீஸ் : இப்பொழுது நீ என்னை அனுமதிக்க வேண்டும். அதிர்ஷ்டம் வாய்ந்த நேர்மையற்றவனுக்கு நீ கொடுத்த ஆசிகளை நேர்மையுள்ளவனுக்கு நான் அளிக்கப் போகிறேன். நீ மற்றவர்களுக்குச் சொன்னவைகளை நான் இவர்களுக்குக் கூறப் போகிறேன். வயது சென்றவுடன் விரும்பினால் அவர்கள் சொந்த நாட்டின் ஆட்சியாளர்களாக அமைவர். தங்களுக்கு விருப்பமானவர்களை மணம் செய்துகொள்வர்; தங்களுக்கு விருப்பமானவர்களுக்கே மணம் செய்து கொடுப்பர். ஆனால் மற்றொரு பக்கம் நேர்மையற்றவனைப் பற்றிச் சொல்லப் போனால் அவர்களில் பெரும்பகுதியானவர் இளமையில் தப்பிவிடினும் கடைசியில் கண்டுபிடிக்கப்பட்டுத் தங்கள் வாழ்வின் இறுதியில் முட்டாள்தனமாகவே காணப்படுகின்றனர். மூப்பு அடைந்தவுடன் அவர்கள் துன்பமடைந்து தம் நாட்டு மக்களாலும் புதியவர்களாலும் வெறுக்கப்படுகின்றனர். அவர்கள் அடிபடுகின்றனர். பிறகு நீ கூறியதுபோல நேர்மையுடையோர் காதால் கேட்கத்தகாதனவெல்லாம் கூறப்படுகின்றனர்; உண்மையில் அவர்கள் சித்திரவதை செய்யப்படுவர். கண்கள் கொள்ளியிடப்படும். நீ சொல்லிய பயங்கரக் கதையில் எஞ்சியதை நான் சொல்லிவிட்டதாக வைத்துக்கொள். ஆனால் இவையனைத்தும் உண்மையென்று நாம் எண்ணலாமா?

கிளாக்கன் : நிச்சயமாகத் தாங்கள் சொல்வது அனைத்தும் உண்மையே.

சாக்ரடீஸ் : ஆகவே, கடவுளராலும் மனிதராலும் நேர்மையானவனுக்கு இவ் வாழ்வில் அளிக்கப்பட்ட பரிசுகள் வெகுமதிகள் அன்பளிப்புக்கள் இவை. இவற்றுடன் நீதியானவன் தானாகவே அளிக்கும் நன்மைகளும் வேறு உள்ளன.

கிளாக்கன் : அவையனைத்தும் நேர்மையானவை? நீடித்தவை.

சாக்ரடீஸ் : இருந்தபோதிலும், எண்ணிக்கையிலோ, பெருமையிலோ, நேர்மையாளனுக்கும் நேர்மையற்றவனுக்கும் அவர்களது இறப்புக்குப் பின் காத்திருக்கும் பரிசுகளுடன் ஒப்பிடும்போது இவையொன்றும் ஒரு பொருளாகா. அவற்றையும் நீ கேட்கவேண்டும். அதன் பிறகுதான் நேர்மையாளனும் நேர்மையற்றவனும் நம்மிடமிருந்து நம்

விவாதத்திலுல் தங்கட்குச் சேர வேண்டியது முழுவதையும் திரும்பப்பெற்றுக் கொண்டவர்களாவார்கள்.

கிளாக்கன் : சொல்லுங்கள், உங்களிடமிருந்து நான் மகிழ்ச்சி யுடன் கேட்க வேண்டியவை சில உள்ளன.

சாக்ரடீஸ் : நல்லது. நான் ஒரு கதை சொல்லப்போகிறேன். வீரனுன அல்சினுசுக்கு ஓடிகஸ்யூஸ் சொல்லிய கதைகளுள் ஒன்று அல்ல. ஆனுல் இதுவும் ஒரு வீரனுடைய கதை தான். அர்மேனியஸ் என்பவனது மகன் 'எர்'. அவன் பாம்பிலியா நாட்டைச் சேர்ந்தவன். 'எர்' போரில் கொல் லப்பட்டான். பத்து நாட்கள் கழித்து இறந்தவர்களுடைய சடலங்கள் மிக மோசமான நிலையில் எடுக்கப்பட்டபோது அவனது உடல்மட்டும் அழியாமல் இருந்ததால் அதைப் புதைப்பதற்காக வீட்டிற்கு எடுத்துக்கொண்டு சென்றனர். பன்னிரண்டாம் நாள் அவனது இறுதிச் சடங்கின்போது அவன் உயிர்பெற்று எழுந்து, தான் வேறு உலகில் கண்ட வற்றை அவர்களுக்குச் சொன்னுன். தனது ஆன்மா உடலை விட்டுப் பிரிந்தவுடன் அவன் ஒரு பெருங்கூட்டத் துடன் யாத்திரைசெய்து பூமிக்குள் செல்லும் இரண்டு வாயில்களுள்ள ஒரு புதிய இடத்தை அடைந்தான். அவற் றுக்கு மேலே வானிலும் இரு வழிகள் இருந்தன. வானிற் கும் பூமிக்குமிடையே நீதிபதிகள் அமர்ந்திருந்தனர். நேர்மையானவர்களுக்குக் கட்டளை இட்டுக்கொண்டிருந்த னர். அவர்கள்மீது தம் தீர்ப்புக்களைக் கூறித் தம் முன் னிலையிலேயே அவற்றைச் செயல்படுத்தினர். வலப்புற முள்ள மேலுலக வழியாக அவர்களை மேலே செல்லச் செய் தனர். அதைப்போலவே நேர்மையற்றவர்களை இடதுபுறத் தில் உள்ள பூமிக்குள்ளே செல்லும் கீழ்வழியே செல்லும் படிச் செய்தனர். அவர்களது செயல்களுக்கான அடையா ளங்கள் அவர்களது முதுகில் கட்டப்பட்டன. 'எர்' முறை வந்தவுடன் அவனை அவர்கள் அந்த உலகினின்றும் மனித ருலகிற்குச் செய்தி கொண்டு போகும் தூதுவனுக இருக்க வேண்டுமென்று கூறி அங்கு நிகழ்ந்தவற்றைப் பார்க்கவும் கேட்கவும் கட்டளையிட்டனர். தீர்ப்புக்கள் கூறப்பட்ட பின் மேலுலக வாயில்கள் வழியே ஆன்மாக்கள் மேல்நோக்கிக் கிளம்புவதையும் சில பூமிக்குள் செல்வதையும் எர் கண் டான். மற்ற இரு வழிகளிலும், வேறு சில ஆன்மாக்கள்

பூமியினின்றும் அழுக்கடைந்து யாத்திரைக்களைப்புடன் மேலெழுவதையும், சில மேலுலகினின்றும் தூய்மையுடனும் பிரகாசத்துடனும் கீழிறங்குவதையும் கண்டான். தொடர்ந்து வரும் அவை நீண்ட தூரம் பிரயாணம் செய்தவர்களைப் போன்று காணப்பட்டன. மகிழ்ச்சியுடன் அருகிலுள்ள புல்வெளிக்குச் சென்று விழாக்கோலத்துடன் கூடின. முன்னறிந்தவர்களின் ஆன்மாக்கள் ஒன்றையொன்று தழுவிக்கொண்டும் பேசிக்கொண்டும் இருந்தன. பூமிக் குள்ளிருந்து வெளிவந்தவை மேலுலக நிகழ்ச்சிகளைப் பற்றிக் கேட்டன. அதைப்போன்றே மேலுலகினின்றும் வந்தவை கீழுலகைப் பற்றி வினவின. ஒன்று மற்றொன் றிற்குத் தமது அனுபவங்களைக் கூறின. கீழுலகினின்றும் வந்தவை தமது ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் கீழுலக யாத்திரையில் கண்டு அநுபவித்தவைகளின் நினைவை அழுது கொண்டும் வருத்தத்துடனும் கூறின. மேலுலகி னின்றும் வந்தவைகளோ, தாம் கண்ட தெய்வீக ஒளியை யும் ஆனந்தக் காட்சிகளையும் நினைவுக்கும் புறம்பான அழகினையும் கூறின.

கிளாக்கன் ! இந்தக் கதை சொல்லிக் கொண்டு போனால் மிக வும் நீளும். ஆனால் அதன் சாரம் இதுதான். ஒருவன் செய் யும் ஒவ்வொரு தவற்றிற்கும் பத்து மடங்கு அனுபவிக்கிறான். நூறு ஆண்டுகளாகக் கணக்கிடப்பட்ட ஒரு மனிதனுடைய வாழ்நாளில் ஒருமுறை தவறு செய்வானாகில் அவன் வாழ வேண் டிய ஆயிரமாண்டுகளில் பத்து முறை தண்டனை செலுத்துவான். உதாரணமாக எவனாவது பல கொலைகளுக்குக் காரணமாக இருந் திருந்தால், அல்லது நகரங்களையும் படைகளையும் காட்டிக் கொடுத்தோ, அடிமைப்படுத்தியோ இருந்தால் அல்லது வேறு ஏதாவது தீய செயல்புரிந்திருந்தால், அந்த ஒவ்வொரு குற்றத் திற்கும் பத்து மடங்கான தண்டனை பெற்றான். அதைப் போன்றே நல்ல நேர்மையான செயல்களுக்கும் புனிதச்செயல் களுக்கும் உள்ள பரிசும் சன்மானமும் பத்து மடங்குதான். பிறந்தவுடன் இறக்கும் குழந்தைகளைப் பற்றி 'எர்' சொன்ன வற்றை நான் இங்கே சொல்லப்போவதில்லை. கடவுளிடமும் பெற்றோரிடமும் காட்டும் பக்திக்கும், பக்தியின்மைக்கும், கொலை காரர்களுக்கும் வெவ்வேறு தக்க பலன்களும் பிறவற்றைவிடப் பெரிய தண்டனைகளும் இருந்தனவாக அவன் சொன்னான். ஒரு

ஆவி மற்ருெரு ஆவியிடம் 'புகழ்பெற்ற ஆர்டியஸ் எங்கே'? என்று கேட்டபோது எர் அங்கு இருந்ததாகச் சொன்ஞன்.

(ஆர்டியஸ் என்பவன் எர் வாழ்ந்ததற்கு ஆயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்தவன். பாம்பிலியா நாட்டில் உள்ள ஓர் நகரின் கொடுங்கோலஞயிருந்தான். தன் தகப்பனேயும் மூத்த சகோதரனேயும் கொன்றவன். இன்னும் பல கொடுமையான குற்றங்களேச் செய்தவன் என்று சொல்லப்படுகிறது). மற்ற ஆவி அதற்கு அளித்த பதிலாவது "அவன் இங்கு வரவில்லே. இங்கு வரவும் மாட்டான். நான் கண்டவற்றில் மிகக் கோரமான காட்சி அது. நாங்கள் எங்களது அனுபவங்கள் எல்லாம் முடிந்தபின் மேல்நோக்கி எழத் தயாராக அந்தப்பாதையின் வாயிலில் நிற்கும்போது திடீரென்று, பலரும் சூழ ஆர்டியஸ் தோன்றிஞன். அவனுடன் வந்தவர்களில் பெரும்பாலோர் கொடுங்கோலர்களே. அக்கொடுங்கோலர்களுடன் கூடப் பெரிய குற்றங்களேச் செய்த தனிப்பட்டவர்களும் இருந்தனர். அவர்கள் மேலுலகிற்குச் செல்லப் போவதாக எண்ணி முயன்றபோது அந்த வாயில் அவர்களே உள்ளே விடாமல் ஒரு பெரிய ஒலியை எழுப்பியது. அத்தகைய மாபாதகர்களோ அல்லது போதுமான அளவு தண்டனே அநுபவியாத எவரோ மேலேற முயன்றபோது அவ்வாயில் இப்படிச் சத்தமிட்டது. அங்கே நின்றிருக்கும் பயங் கரத்தோற்ற முடைய மனிதர்கள் அச்சத்தத்தைக் கேட்டவுடன் அவர்களேப் பிடித்துத் தூக்கிக்கொண்டு சென்றனர். அவர்கள் ஆர்டியஸ்ஸையும் மற்றவர்களேயும், கால், தலே, கைகள், இவற்றைக் கட்டிக் கீழே தள்ளினர். சவுக்கால் அடித்தனர். பாதையின் பக்கங்களின் வெளியே இழுத்துச் சென்றனர். முட்கள் மீது அவர்களேப் போட்டுக் கம்பளி போன்று இழுத் தனர். மேலும் அங்கு சென்ற வழிப்போக்கர்களிடம் அவர் களின் குற்றங்களே எடுத்துச் சொல்லி நரகத்துக்கு அவர்கள் இட்டுச் செல்லப்படுவதாகக் கூறினர். அதுவரை அவர்கள் அனுபவித்த தண்டனேகளில் அப்பொழுது அவ்வாயிலின் சத்தம் கேட்கக் கூடாதே என்ற மன வேதனேயைப் போன்று பயங்கரமான தொன்றுமே இல்லே. அங்கே அமைதி இருக்கும் போதே அந்த ஆவிகள் ஒவ்வொன்ருக மகிழ்ச்சியுடன் மேலெழுந்தன". இவைகளே தண்டனேகளும் அபராதங் களும் இவற்றைப் போன்றே சிறந்த ஆசிகளும் உள்ளன என்று கூறிஞன், எர்.

அந்த ஆவிகள் அத்தோட்டத்தில் ஒருவாரம் தங்கிய பிறகு எட்டாம்நாள் தம்யாத்திரையைத் தொடங்கின. அதன்பிறகு நான்கு நாட்கள் கழித்து அவர்கள் ஓரிடத்தை அடைந்தனர். அந்த இடத்தில் மேலிருந்து தூண் போன்று நிற்கும் ஒரு ஒளி காணப்பட்டது. அது மேலுலகம் பூராவும் நீண்டு பூமியினுள் ளும் சென்றது. நிறத்தில் வானவில்லேப்போன்றிருந்தது. ஆனால் வானவில்லேவிடச் சுத்தமாகவும் பிரகாசமாகவும் இருந்தது. அடுத்தநாள் யாத்திரைக்குப்பின் அந்த இடத்திற்கு வந்தனர். அவ்வொளியின் நடுவே சுவர்க்கத்தின் சங்கிலிகளின் மேலிருந்துதொங்கவிடப்பட்ட நுனிகளைக் கண்டனர். இவ் வொளிக் கற்றையே சுவர்க்கத்தின் இடைப்பட்டை. இதுவே அண்டத்தின் வட்டத்தை ஒருங்கு பிடித்துக் கொண்டிருக்கிறது. அந்த நுனிகளிலிருந்தே தேவை என்பதின் அச்சு நீட்டப்பட் டுள்ளது. அவ்வச்சின்மீதே எல்லாச் சுழற்சிகளும் ஏற்படு கின்றன. அதன் வளையமும் பட்டையும் இரும்பாலும் மற்றைப் பொருள்களாலும் செய்யப்பட்டவை. அந்த நீண்ட முனையுள்ள உருளையும் நம்முலகில் உள்ளதைப்போன்ற அமைப்புடையது. அதன் உருவத்தை நோக்கினால், ஒரு பெரிய உள்ளீடுள்ள உருளை வெளியிலும், அதனுள் சற்றுச் சிறிதான மற்றொன்று, அதனுள் ஒன்று, அதனுள் ஒன்று இன்னும் நான்கு ஆக மொத்தம் எட்டு, ஒன்றுக்குள் ஒன்று பொருந்தும்படி அமைந்த எட்டுப் பாத்திரங்களைப்போன்று இருக்கும். அந்த உருளை களின் முனைகள் மேல்நோக்கி உள்ளன. அவற்றின் கீழ்ப்புறம் எல்லாம் சேர்ந்து ஒரு முழுச் சக்கரமாக அமைகின்றன. இதனிடையேதான் அவ்வச்சு செலுத்தப்பட்டுள்ளது. அது அந்த எட்டாவதின் நடுவழியே வெளிவருகிறது. முதலாவதான வெளியிலுள்ள உருளை அகலமான முனைகளை உடையது. மற்றை ஏழு உள் உருளைகளின் முனைகளும் குறுகியவை. அவை கீழ்க் கண்ட அமைப்பில் இருக்கும். ஆறுவது உருளை முதலாவதற்கு அடுத்த அளவுடையதாக இருக்கும். நான்காவது, ஆறுவதற் கடுத்ததாகவும் அதன்பின் எட்டாவதும், ஏழாவது ஐந்தா வதாயும் ஐந்தாவது ஆறுவதாகவும், மூன்றுவது ஏழாவதாகவும் கடைசியாக எட்டாவதாக வருவது இரண்டாவது உருளையாகவும் அளவில் இருக்க்ரும். மிகப் பெரியது (நிலேயான நட்சத்திரங் களுள் பெரியது) பிரகாசமானது. ஏழாவதான சூரியன் மிகவும் பிரகாசமானது. எட்டாவதான சந்திரன் ஏழாவதின் ஒளியால் பிரதிபலிக்கப்பட்டு ஒளிவிடுகிறது. இரண்டாவதும் ஐந்தாவதும்

(சனியும், புதனும்) ஒன்றுபோன்றே மற்ருென்றும் வர்ண முடையன. ஆனால் முன்னுள்ளதைவிடப் பின்னுள்ளது சற்று மஞ்சளானது. மூன்ருவது (சுக்கிரன்) மிகவும் வெண்மையான ஒளியுடையது. நான்காவது (செவ்வாய்) சிவப்பானது. ஆருவது (வியாழன்) வெண்மையில் இரண்டாவது. இந்த முழு அச்சும் ஒரே அசைவை உடையது. ஆனால் அது ஒரு திசையில் சுழலும் பொழுது மற்ற ஏழு உள்வட்டங்களும் எதிர்த்திசையில் மெதுவாக நகருகின்றன. இவற்றில் மிகவும் துரிதமானது எட்டாவது உருளேயே; வேகத்தில் அடுத்துள்ள ஏழாவது ஆருவது ஐந்தாவது ஆகிய மூன்றும் ஒன்ருகச் சுழல்கின்றன. வேகத்தில் மூன்ருவதாகக் காணப்படுவது நான்காவதின் மாற்ருன இயக்க முறையைக் கொண்டது. மூன்ருவது நான்காவதாகவும், இரண்டாவது ஐந்தாவதாகவும் வருகின்றன. அந்த அச்சு, தேவையின் முழங்கால் நிலேயில் சுழலுகின்றது. ஒவ்வொரு சக்கரத்தின் மேல்பரப்பிலும் ஒரு சங்கு பொருத்தப்பட்டிருக்கிறது. அது சக்கரத்துடனேசுழன்று ஒரேசுரத்தில் நாதம் எழுப்புகிறது. அந்த எட்டுச் சங்குகளும் ஒரே இணேப்பாக ஒலிக்கின்றன. இவற்றிலிருந்து சமமான இடைவெளிகளுடன் மற்ருெரு குழு அமர்ந்துள்ளது. அவர்கள்தான் விதியெனும் தேவதைகள். தேவையின் பெண்கள் வெண்மை அங்கி அணிந்த அவர்கள் தலேயில் மணியிழைத்த அணிகளே அணிந்துள்ளனர். லாச்சஸில், க்ளோத்தோ, அட்ரோபோஸ் ஆகியவர்கள் தம் குரலால் அந்தச் சங்குகளுடனும் இணேந்து பாடுகின்றனர். லாச்சிஸிஸ் இறந்த காலத்தையும் க்ளோத்தோ நிகழ் காலத்தையும், அட்ரோபோஸ் எதிர்காலத்தையும் பாடுகின்றனர். அவ்வப்பொழுது க்ளோத்தோ வெளிப்புறமுள்ள சக்கரத்தைச் சுற்றுவதற்குத் தன்கையால் தொடுவதன் மூலம் உதவுகிருள். அட்ரோபோஸ் தனது இடதுகையால் தொடுவதன் மூலம் உட்சக்கரங்கள் சுழல உதவுகிருள். லாச்சஸில் அவற்றில் ஒன்றை மாற்றி மாற்றித் தொட்டு முதலில் ஒரு கையாலும் பிறகு அடுத்ததாலும் உதவுகிருள்.

எர், மற்ற ஆவிகள் அனேத்தும் வந்தபிறகு அவைகள் முதற் கடமையாக லாச்சஸிடம் செல்ல வேண்டும். அதற்குமுன் ஒரு தீர்க்கதரிசி வந்து அவைகளே ஒழுங்குபடுத்தினுன். பிறகு லாச்சஸின் தொடையினின்றும் நிறைய உயிர்களின் மாதிரிகளே அவன் எடுத்துக் கொண்டு ஒரு உயர்ந்த மேடையின்மீது நின்று

கொண்டு கீழ்க்கண்டவாறு பேசினன். "தேவையின் மகளான லாச்சஸ்ஸின் சொற்களைக் கேளுங்கள். அழியும் ஆன்மாக் களே! உங்களது புதிய வாழ்வுச் சக்கரத்தையும் அழியும் தன்மை யையும் பெற்றுக் கொள்ளுங்கள். உங்களது அறிவு உங் களுக்கு (எங்களால்) அளிக்கப்படமாட்டாது. வேண்டிய அறிவை நீங்களே பொறுக்கி எடுத்துக்கொள்ள வேண்டும். இந்தத் தேர்வில் முதலில் பெறுபவன் தான் முதலில் தேர்ந்தெடுப்பதைப் பெறட்டும். அவன் ஏற்கும் வாழ்வே அவனது தலைவிதியை நிர்ணயிக்கும். நன்மைகள் அனைத்தும் இலவசம். ஒருவன் அவற்றை எவ்வளவு மதிக்கிருனே அன்றி அவமதிக்கிருனே அதற்கேற்றபடி அதிகமாகவோ, குறைவாகவோ பெறுகிருன். பொறுப்பு பொறுக்கி எடுப்பவனுடையது, கடவுள் நேர்மை யானவர்".

அந்தத் துபாஷ் இவ்வாறு சொல்லியவுடன் நிறையப் பொறுக் குச் சீட்டுக்களைப் பலவிதமாக அவர்கள் முன்னிலையில் கொட்டி ஞன். ஒவ்வொருவனும் தன்னருகே விழுந்ததை எடுத்துக் கொண்டான். எர் மட்டும் அதை எடுத்துக்கொள்ள அனுமதிக் கப்படவில்லை. ஒவ்வொருவரும் தான் எடுத்துக் கொண்டவற்றி லுள்ள எண்ணைக் கவனித்தனர். பிறகு அந்தத்துபாஷ் வாழ்வின் மாதிரிகளை அவர்களிடையே கொட்டினர். அங்கிருந்த ஆன்மாக்களைக் காட்டிலும் வாழ்வுகள் மிகுதியாக இருந்தன. அவை பலவிதமாக இருந்தன. எல்லாவிதப் பிராணிகளின் வாழ்வும், எல்லாவித மனிதர்களின் வாழ்வும், அங்கே இருந்தன. அவற்றிடையே கொடுங்கோன்மைகளும் இருந்தன. சில கொடுங் கோலன் வாழ்வு முழுதும் நிகழ்ந்து வந்தவை; மற்றவை பாதி யில் சிதறி இறுதியில் வறுமையிலும் நாடு கடத்தப்படுதலிலும் பிச்சை எடுத்தலிலும் முடிந்தவை. புகழ்பெற்ற மனிதர் தம் வாழ்வுகளும் அங்கு இருந்தன. சிலர் தமது உருவத்திற்காகவும் அழகிற்காகவும், வலிமைக்காகவும் விளையாட்டுக்களில் வெற்றி பெற்றதற்காகவும், அல்லது அவர்களது உயர்ந்த பிறப்புக்காக வும், சிலர் தம் முன்னேர்களது குணங்களுக்காகவும் புகழ் பெற்றவர்கள். மேலும் இன்னும் சிலர், புகழுக்கு எதிரான எதிரிடைக் குணங்களுடன் இருந்தனர். பெண்களும் இவை போன்றே. ஆனல் அவ்வாழ்வுகளிடையே குறிப்பிட்ட தன்மை இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் ஒரு புது வாழ்வை எடுத்துக் கொண்டவுடன் ஆன்மா, தேவையின் காரணமாக

மாறுபடுகிறது. ஆனால் அங்கு மற்ற எல்லாக் குணங்களும் உள்ளன. மேலும் அவை ஒவ்வொன்றுடனும் சேர்ந்து செல்வத்துடனும் வறுமையுடனும், வியாதியுடனும், உடல் சுகத்துடனும் கலக்கும். இன்னும் கீழ்த்தரமான நிலைகளும் உண்டு. எனது அருமை கிளாக்கன்! இங்கேதான் நமது மனித நிலையின் பெரிய இன்னல்கள் உள்ளன. ஆகவே மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் மற்றெல்லா அறிவுகளையும் விட்டுவிட்டு ஏதாவது ஒன்றையே நாடிப் பின்பற்றுவோம். அதிர்ஷ்டவசமாக ஒருவன் உண்மை அறிந்து தனக்கு அறிவிக்கக் கூடிய ஒருவனை அடைந்து நல்லது, கெட்டது ஆகியவற்றின் வேறுபாடுகளைப் பிரித்தறியக் கற்று விட்டால் எப்பொழுதும் எவ்விடத்தும் சிறந்த வாழ்வையே—வாய்ப்பு இருப்பதற்கேற்பப் — பெற்றுக்கொள்ள முடியும். இதுவரை அவன் தனித்தனியாகவும் மொத்தமாகவும் நற்பேறுகளைப் பற்றிச் சொன்னவற்றை மனதில்கொண்டு தீர்மானிக்க வேண்டும். அழகின் தன்மை செல்வத்துடனோ வறுமையுடனோ கலந்தால் ஆன்மாவுக்கு என்ன நிகழும் என்பதைக் கவனிக்க வேண்டும். உயர் பிறப்பிலும் தாழ் பிறப்பிலும் நன்மை தீமையின் விளைவுகள் எப்படி என்பதையும், தனிப்பட்ட அல்லது பொது வாழ்வு நிலைகளையும், வலிமையையும், வலிமையின்மையையும், புத்திக் கூர்மையையும், மந்த நிலையையும், ஆன்மாவின் இயல்பான சிறப்புக்களையும், அடைந்த சிறப்புக்களையும் அவை இணையும் போது ஏற்படும் செயல்களையும் காண வேண்டும். அதன் பிறகு ஆன்மாவின் தன்மையைக் காணவேண்டும். இந்த எல்லாக் குணங்களையும் ஆராய்ந்தபின் எது சிறந்தது, எது மோசமானது என்பதைத் தீர்மானிக்க முடியும். ஆகவே ஒருவனது ஆன்மாவை நேர்மையற்றதாக்கும் வாழ்க்கையைத் தீயது என்றும், நேர்மையான வாழ்வைத் தருவதை நல்லது என்றும் தேர்ந்தெடுப்பான். மற்றவற்றை அவன் மதிக்கமாட்டான். ஏனெனில் இதுவே வாழ்வுக்கும், இறப்புக்குப் பின்னும் சிறந்த தேர்வு என்பதை நாம் கண்டோம். ஒரு மனிதன் உண்மையினிடத்தும் நேர்மையினிடத்தும் மாருத நம்பிக்கையை உடன் கொண்டு உலகிற்குச் செல்ல வேண்டும். ஆனால் அங்கும் அவன் பொருளாசையால் தடுமாற்றம் கொள்ளாது தீயவற்றுடன் சேராது இருக்க வேண்டும். இல்லாவிடில் கொடுங்கோன்மையும் இன்னும் அதுபோன்ற பெரும் வஞ்சகமும் கொண்டு அவன் மற்றவர்களுக்குத் தீராத துன்பங்களைத் தருவதால் இன்னும்

மோசமாக அங்கே துன்புறுவான். எப்படி நடுவழியில் செல்ல வேண்டும்? இரண்டு பக்கத்திலும் தீவிரமாகச் செல்வதைத் தவிர்த்தல் எப்படி? என்பதை முடிந்தவரை அவன் அறிந்து கொள்ள வேண்டும். ஏனெனில் இவ்வுலக வாழ்வில் மட்டு மல்லாது வரப்போகும் அனைத்திற்கும் இதுதான் சுகம் பெற வழி.

அந்த மேலுலகத் தூதனின் செய்திப்படி அந்தத் தீர்க்கதரிசி சொன்னதாவது, 'கடைசியாக வந்தவனுக்குங்கூட அவன் புத்திக்கூர்மையுடன் இருந்து நேர்மையுடன் வாழ்ந்தால் அங்கு ஒரு சுகமான விரும்பத்தக்க வாழ்க்கை ஏற்படும். முதலாவது பொறுக்கி எடுப்பவன் கவனமின்றி இருக்கவேண்டாம். கடைசி யில் வருபவன் வருந்த வேண்டாம்'. அவன் பேசி முடிந்தவுடன் முதல் வாய்ப்பு உடையவன் முன் வந்தான், அக்கணமே மிகச் சிறந்த கொடுங்கோன்மையை எடுத்தான். அவன் மனம் அறிவீனத்தாலும் புலனுகர்வாலும் இருட்டடிக்கப்பட்டுவிட்டதால் தேர்ந்தெடுக்கப்பதற்கு முன் அவன் முழுவதையும் சிந்திக்க வில்லை. தான் பிறதீமைகளுடன் தன் மக்களையே அழிக்கப் போவதை அவன் முதலிலேயே கவனிக்கவில்லை. ஆனால் சிந்தக் கப் பொழுது கிடைத்தவுடன் தன் தலைவிதியை உணர்ந்து, அந்தத் தீர்க்கதரிசியின் சொற்களை மறந்து அவன் மார்பில் அடித்துக் கொண்டு கதறத் தொடங்கினான். தனது தேர்வின் பிழையை உணராது, தனது துரதிர்ஷ்டத்திற்காகத் தன்னை நொந்துகொள்ளாது, வாய்ப்பையும் கடவுளரையும் குறை கூறினான். தன்னைத்தவிர மற்ற எல்லோரையும் குறைகூறினான். அவன் மேலுலகினின்றும் வந்தவர்களில் ஒருவன். அவனது முற்பிறப்பில் நல்ல ஒழுங்கான நாட்டில் வாழ்ந்தவன். ஆனால் அவனது நேர்மை பழக்கத்தால் ஏற்பட்டதொன்று. அதனால் அவனுக்கு எவ்விதத் தத்துவ ஞானமுமில்லை, கொள்கையு மில்லை. அதுபோன்று வழி இழந்தவர்களுக்கும் இது பொருந்தும். அவர்களில் பெரும்பான்மையோர் மேலுலகினின் றும் வந்தவர்களாதலால் அவர்கள் சோதனைகளில் பயிற்சி பெறவில்லை. ஆனால் பூமியினின்றும் வந்த யாத்திரிகர்களோ தாமே அதிகத் துன்புற்றும் பிறர் துன்புறுவதைக் கண்டும் இருந்ததால் தேர்ந்தெடுப்பதில் அவசரப்படவில்லை. அவர் களுடைய அனுபவமின்மையும் அந்தத் தேர்வும் அதிருஷ்டத் தைப் பொறுத்ததாகவும் நிகழ்வதால் பெரும்பாலான ஆன் மாக்கள் ஒரு தீமைக்கு, நல்ல அதிர்ஷ்டத்தையும், நல்லதற்காகத்

தீயவற்றையும் மாற்றிக்கொண்டு விட்டனர். ஒருவன் ஆரம்பத்திலிருந்தே தன்னை எப்பொழுதும் சீரிய கொள்கைக்கு அர்ப்பணித்துக் கொண்டிருப்பின்—மேலும் இந்த வாய்ப்பிலும் சுமாராக ஒரு நல்ல எண்ணைப் பெற்றிருந்தால் சொன்னதுபோல அவன் சுகமாயிருக்க முடியும். மேலும் மறு வாழ்வுக்குச் செல்லும் பாதையிலும் மீண்டும் அங்கு வரும்போதும் அவனது யாத்திரை ஏற்றத் தாழ்வுகளின்றி மென்மையுடனும் தெய்வீகத் தன்மையுடனும் இருக்கும். அங்குக் காணும் காட்சிகள் விசித்திரம் மிக்கவை. வருந்தக்கூடியவை, சிரிக்கக் கூடியவை—விநோதமானவை! ஏனெனில் ஆன்மாக்களின் தேர்வுகள் அனைத்தும் பெரும்பாலும் அவை தம் முந்தைய வாழ்வின் அடிப்படையில் அமைந்தன.

'எர்' கண்டான்—ஆர்பியஸ்ஸின் ஆன்மா பெண்ணினத்தின் மீது கொண்ட வெறுப்பால் அன்னத்தின் வாழ்வை எடுத்துக் கொண்டது. பெண்ணாகப் பிறப்பதை வெறுத்தது; காரணம், அவன் இறந்ததே அவர்களால்தான். தாமிரஸ்ஸின் ஆன்மா வானம்பாடியின் வாழ்வை எடுத்துக்கொண்டது. ஆனால் பாடும் பறவைகள் பல மனிதராக விழைந்தன. இருபதாவதாக வந்த ஆன்மா சிங்கத்தின் வாழ்வை எடுத்துக்கொண்டது. அது அஜாக்ஸினுடைய ஆன்மா. அஜாக்ஸ் தெலமானின் மகன். படைகளைப்பற்றிய தீர்ப்பில் அவனுக்கிழைத்த அநீதியை மனதில் கொண்டு அவன் மனிதனாக விரும்பவில்லை. அடுத்து வந்த அகமம்னன் ஒரு கழுகின் வாழ்வை எடுத்துக் கொண்டான். ஏனெனில், அஜாக்ஸைப் போன்றே அவனும் மனித இயல்பைத் தனது துன்பங்களால் உணர்ந்து வெறுத்தான். பாதியில் அட்லாண்டா வந்தாள். அவள் விளையாட்டுக்காரரின் பெரும்புகழைக் கண்டவளாதலின் அந்த உணர்வைக் கட்டுப்படுத்த அவளால் முடியவில்லை. அவளுக்குப் பிறகு பானோபியஸ்ஸின் மகனான ஈபியஸ்ஸின் ஆன்மா கலையில் வல்ல பெண்ணாக மாறியது. கடைசியில் வந்தவர்களில் விகடகவியான தெர்சிடஸ் ஒரு குரங்கு வடிவை எடுத்துக் கொண்டான். அங்கே ஓடிஸ்யூஸினது ஆன்மாவும் வந்தது. அவனது வாய்ப்புத்தான் கடைசியாக அமைந்தது. அவனது பழைய இன்னல்களின் நினைவு அவனுடைய பேராசை மனத்தை மாற்றியது. அவன் நெடுநேரம் ஆராய்ந்து கவலையற்ற தனி மனிதனின் வாழ்வைத் தேடினான். அதை அடைய அவன்

சிறிது கஷ்டப்பட்டான். அது எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டு அங்கே கிடந்தது. அதைக் கண்டவுடன் தனது வாய்ப்பும் கடைசியாக இல்லாது முதலாவதாக இருந்திருப்பினும் தான் அதையே எடுத்து இருக்கக் கூடும் என்று கூறி அதைப் பெறுவதில் மகிழ்ச்சியடைந்தான். மனிதர்கள் மட்டுமா விலங்கு களாக மாறினர்கள்; விலங்குகளும்கூடத்தான் பழக்கப் பட்டதும் கொடுமையுடையதும் மற்ற விலங்குகளாகவோ அல்லது அதற்குத் தக்க மனிதத்தன்மையுடனே மாறின. நல்லது மென்மையானதாயும், தீயது கொடுமையானதாயும் அடிமையானதாயும் இன்னும் எல்லாவிதச் சேர்க்கைகளும் கொண்டு இருந்தன.

எல்லா ஆன்மாக்களும் தம் வாழ்வை எடுத்துக்கொண்டு விட்டன. தங்கள் வரிசைப்படி லாச்சஸ்ஸிடம் சென்றனர். அவன் அவர்கள் எடுத்துக்கொண்டதற்கேற்ப அவர்தம் வாழ்வின் வழிகாட்டியாகவும் அந்த வாழ்வைத் திருப்தி செய்வதற்கு ஏற்றதுமான அறிவை அளித்தான். இந்த அறிவு அந்த ஆன்மாக்களை முதலில் குளோத்தோவிடம் கொண்டு சென்றது. அவள் தனது கையால் அவ்வச்சின் சுழற்சிக்குள் இழுத்துக் கொண்டாள். 'இவ்வாறு அவைகளின் தேர்வு அங்கீகரிக்கப் பட்டது. அவை அத்துடன் இணைந்த பிறகு அட்ரோபோஸை அடைந்தன. அவள் தனது நூலை நூற்று அவர்களை மாற்ற முடியாதவர்களாக்கிவிட்டாள். அங்கிருந்து திரும்பாது அவர்கள் தேவையின் அரியணையின் கீழ்ப்புறம் சென்றனர். அவர்கள் எல்லோரும் சென்று சுடுகின்ற வெப்பத்தின் வழியே மறதியாகிய சமவெளியை அடைந்தனர். அது மரங்களோ பசுமையோ இல்லாத வறண்ட நிலம். மாலை வேளை நெருங்கிய போது அவர்கள் அலட்சிய நதிக்கரையில் முகாமிட்டனர். அதன் நீரை எப்பாத்திரத்திலும் வைக்க முடியாது. அந்த நீரை ஓரளவு அவர்கள் குடிக்க வேண்டியிருந்தது. அறிவால் காப்பாற்றப் படாதவர்கள் அந்நீரை அதிகமாகவே குடித்துவிட்டனர். ஒவ்வொருவனும் அந்நீரைக் குடித்தவுடன் மறதியிலாழ்ந்தான். அவர்கள் ஓய்வுபெறச் சென்றனர். நடுநிசியில் இடிப்புயலும் பூகம்பமும் ஏற்பட்டன. உடனே அவர்களனைவரும் மேலே விரட்டப்பட்டுப் பலவிதமாகவும் அவரவர்தம் பிறப்புக்காக அனுப்பப் பட்டனர். நட்சத்திரங்கள் விழுவதைப்போன்று அக்காட்சி தோன்றியது.

ஆனுர் 'எர்' மட்டும் அந்த நீரைக் குடிப்பதினின்றும் தடுக்கப்பட்டான். அவன் எப்படி எவ்வாறு தன் உடலுக்குள் மீண்டும் வந்தான் என்பதை அவனலேயே சொல்ல முடியவில்லை. காலையில் திடீரென்று எழுந்தபோதுதான் தான் சிதையில் கிடப்பதை உணர்ந்தான்.

கிளாக்கன்! இவ்வாறு இக்கதை அழியாமல் காப்பாற்றப் பட்டுள்ளது. இதில் சொன்னவற்றிற்குக் கீழ்ப்படிந்தால் நாமும் பாதுகாக்கப்படுவோம். மறதி என்னும் ஆற்றினைக் கவனத்துடன் கடப்போம். நமது உயிர் கறைப்படுத்தப்பெருது. என்னுடைய ஆலோசனை என்னவெனில், நாம் எப்பொழுதும் மேலுலகை அடையக்கூடிய வழியை விடாது பற்றுதல் வேண்டும். உயிர் அழியாதது; அது எந்த விதமான நன்மையையும் தீமையையும் பொறுக்கவல்லது என்பதைச் சிந்தையிற்கொண்டு எப்பொழுதும் நீதி, அறம் ஆகியவைகளையே பின்பற்றிச் செல்ல வேண்டும். இவ்வாருக ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு கடவுளிடம் பக்தி கொண்டு இங்கு இருக்கும் போதும் விளையாட்டில் வெற்றி பெற்றவர் பரிசுபெற வருவது போல நாம் நமது வெகுமதிகளைப் பெறும்போதும் வாழ்வோம். இந்த எண்ணம் இந்த வாழ்விலும் நாம் இதுகாறும் சொல்லி வந்த ஆயிரம் ஆண்டு யாத்திரையிலும், நம்மிடத்தில் எப்பொழுதும் இருத்தல் நலம்.

முற்றும்